வெளியீடு எண் : 356

உ

சிவமயம்

திருமூலநாயனார் அருளிய

திருமந்திரம்

(பத்தாந் திருமுறை)



கயிலாய பரம்பரைத்

திருவாவடுதுறை ஆதீனம்

திருவாவடுதுறை - 609 803.

1987

உ

சிவமயம்

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்துப்

பிரதம பரமாசாரியர்

ஸ்ரீ நமசிவாய மூர்த்திகள்

மகரத் தலைநாட் குருபூஜை விழாமலர்

அட்சய — தை — அசுவதி

4 — 2 — 1987

விலை ரூ. 20-00.

ஆதீனத்திற்குச் சொந்தமான
மதுரை
தானகோனேரியப்ப முதலியார் கட்டளை
-: வெளியீடு :-

கிடைக்கும் இடம் :-

(1) மேலாளர்,
தானகோனேரியப்ப முதலியார் கட்டளை,
72, தானப்பமுதலித் தெரு,
மதுரை – 1.
625 001.

(2) மேலாளர்,
திருவாவடுதுறை ஆதீனம்,
திருவாவடுதுறை – 609 803.

ஸ்ரீ நமசிவாயமூர்த்தி அச்சகம்
— திருவாவடுதுறை

வெளியீடு எண் : 356.

உ

சிவமயம்

திருமூலநாயனார் அருளிய

திருமந்திரம்

(பத்தாந்திருமுறை)

இது
திருக்கயிலாயபரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
இருபத்துமூன்றாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சிவப்பிரகாசதேசிக பரமாசாரிய சுவாமிகள்
கட்டளையிட்டருளியபடி
வெளியிடப்பெற்றது.

திருக்கயிலாய பரம்பரைத்

திருவாவடுதுறை ஆதீனம்

திருவாவடுதுறை

1987

உ

சிவமயம்

திருமந்திரம் அநுபவ ஞானத் திருநூல். திருஞானசம்பந்த சுவாமிகளின் திருவுள்ளத்தையுங் கவர்ந்த பெருநூல். நம் செந்தமிழ் சிறக்க எழுந்த ஒரு நூல். மூவாயிரம் திருப்பாடல் கொண்டு மக்களை நல்வழிப்படுத்துகின்ற யோக நூல். தமிழ்மக்கள் அனைவருமே நன்குணர்ந்து ஒழுக உயர்வளிக்கும் ஒரு தனி நூல். இந்நூலை அன்புடன் ஓதி உணர்ந்து தெளிதல் நம் அனைவரதுகடமையாகும் என்பதனைத் திருவுளங் கொண்டருளிய ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களின் அருளாணையின் வண்ணம் இவ்வாதீனத்துப் பிரதம பரமாசாரியர் ஸ்ரீ நமசிவாய மூர்த்திகள் குருபூசை விழா மலராக இந்நூல் மலர்கின்றது.



திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனக் குருமுதல்வர்

ஸ்ரீ நமசிவாய மூர்த்திகள்


உள்ளுறை

உ

குருமரபு வாழ்த்து

கயிலாய பரம்பரையிற் சிவஞான
 போதநெறி காட்டும் வெண்ணெய்
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
 மெய்ஞ்ஞான பாநு வாகிக்
குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ்
 குருநமச்சி வாய தேவன்
சயிலாதி மரபுடையோன் திருமரபு
 நீடூழி தழைக மாதோ.

திராவிடமாபாடியகாரர்
ஸ்ரீ மாதவச் சிவஞானயோகிகள்.



திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
இருபத்துமூன்றுவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சிவப்பிரகாச தேசிகபரமாசாரிய சுவாமிகள்

உ
சிவமயம்

முகவுரை

திருமந்திரம் சாத்திர நூலா? தோத்திர நூலா? இரண்டுமா?

திருமந்திரம் பத்தாந் திருமுறையாக அமைத்திருக்கிருர் திருமுறை தொகுத்த நம்பியாண்டார் நம்பிகள். திருமுறைகளில் முதல் ஒன்பது திருமுறைகள் சிவபெருமானைப் பற்றிய தோத்திர நூல். பதினெராந் திருமுறை அடியார்மீதும், அரசன் மீதும் தலங்களில் எழுந்தருளியுள்ள பெருமான் மீதும் திருத்தொண்டத்தொகையிற் கூறப்பெருத சிவநேயச் செல்வர்கள் பாடியருளிய சிற்றிலக்கிய வகையைச் சார்ந்த திருநூல்கள். அவையும் தோத்திரங்களே. பன்னிரண்டாந் திருமுறை பெரியபுராணம். இது திருமுறைகளையருளிய சமயாச்சாரியப் பெருமக்களைப் பற்றிய விரிவான வரலாற்று நூல். இது கல்வெட்டு, தலவரலாறு, அக்கால இலக்கியங்கள் இவற்றின் பின்னணியைக் கொண்டு ஆக்கப்பெற்றமையின் சமய வரலாறு மட்டும் அன்று; நாட்டு வரலாறும் மன்னர், மற்ற சாதியார் வரலாற்று நூலும் ஆகும். இவற்றிடையேயுள்ள பத்தாந் திருமுறையாகிய திருமந்திரமோ சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற

நால்வகை நெறிமுறைகளில் யோக நெறிக்கும், அதன் வழியாக அடையத்தகும் ஞான நெறிக்கும் முதலிடம் தந்து, அவற்றிற்கு அடிப்படையான உபதேச மொழிகளையும் கடவுளியல்பு உயிரியல்புகளையும் உணர்த்தி இறைவழிபாட்டில் பொறியடக்கமும், மன ஒருமைப்பாடும் இன்றியமையாதன ஆதலின் பிராணயாம முதல் இருக்கை வகை, அட்டாங்க யோக வகை முதலியவைகளை விரித்துரைக்கின்றது. அவற்றுடன் சூனிய சம்பாஷணை: அதாவது நிஷ்களத் திருமேனி தாங்கிய சிவபரம்பொருளுடன் உரையாடலாகவும், மனம் அடங்கியதால் ஆம் பயன்களுள் பேச்சற்ற நிலையும், எல்லாம் எங்கும் இறைக்காட்சியும் இன்பமயமுமாய் இருத்தலே என்ற உண்மையும் ஆன அநுபூதி நிலையை அறிவிக்கிறது.

இதன் முழுமையான விளக்கமும், சுருக்கமும் திருமந்திரக் கருத்து என்னும் தலைப்பில் பதிப்பிக்கப் பெற்றுள்ளது.

சேக்கிழார் பெருமான் தம் நூலுக்கு 'எடுக்கு மாக்கதை' எனத்தாமே பெயரிட்டதுபோல, ஞான சம்பந்தர் 'திருநெறியதமிழ்' 'ஞானத்தமிழ்' எனப் பெயர் தந்தது போலத் திருமூலரும் 'மந்திரமாலை உறைப்பொடுங்கூடி நின்று ஓதலும் ஆமே' (86) "ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்" (85) என மந்திரம், மந்திரமாலை என்று இருபெயராலும்

அழைப்பர். இதனாலே ஞானாவரண விளக்கம், முத்தி நிச்சயப் பேருரை செய்த கமலை வெள்ளியம்பலவர்ணரும், திருமந்திரப் பாடலை மேற்கோளாக எடுத்தாளும் போது, 'என்றார் திருமந்திர மாலை யாரினும்' என்பர். இதனை ஆதாரமாகக்கொண்டு திருமந்திரம் விசுவநாதப் பிள்ளை பதிப்பின் முகவுரையிலே வேதாரண்யம் ரமண சாஸ்திரிகள் திருமந்திரத்தின் முதல் நூல் 'மந்த்ர மாலிகா' என்னும் ஆரிய நூல் என்பர். இப்பெயருள்ள ஒரு நூல் ஆரியமொழியில் இல்லாமை மட்டும் அன்று. திருமூலரே தம் குருமரபு கூறுமிடத்து "பெற்ற நல் ஆகமம்" என்னும் மந்திரத்துச் சீகண்ட சிவம் பெற்றது என்றும் அவற்றைத் தாம் பெற்றதாகவும் (63 - திருமந்திரம்) குறிப்பிடுவார். மேலும் "என்னை நன்றாக இறைவன் படைத்தனன், தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே" (81 திருமந்) என்பதாலும் இது ஆகமத்தைத் தமிழாற் செய்ததேயாம்.

மந்திரம் என்ற சொல் 'நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழிதானே மந்திரம் என்ப, ஆதலால், திருமந்திரமாகிய இது நிறைமொழி மாந்தராகிய சிவஞானியாகிய திருமூலர் அருளிச் செய்த வேதக்கருத்தாம் என்பது. காமிகம் போன்ற சில சிவாகமங்களில் தந்திராவதார படலம், மந்திராவதார படலம் என்ற இருபடலங்கள் அடுத்தடுத்து உள்ளன. அவை ஆகமந்தோன்றிய வரலாற்றையும், இறைவன்

அருளால் மேற்கொண்ட திருவுருவங்களை வழிபட்டு நாம் உய்தற்கு உபகாரப்படும் மந்திரங்களின் வகைகளையும் உணர்த்துவனவாக உள்ளன. ஆகமம் என்ற நூலின் உள்ளுறுப்பின் பெயர்கள் அவை. ஈண்டு மந்திரம் நூற்பெயர். தந்திரம் நூல் உறுப்பின் பெயராக ஒன்பது தந்திரங்களாக உள்ளன. ஆதலால் இப்பகுப்புக்கும் அதன் பெயர்க்கும் வேறு காரணம் இருத்தல் வேண்டும். யாஸ்கர் செய்த நிருக்தம் "மனனுத் மந்திரம்" என்கிறது. பின்வந்த வடநூல் ஆசிரியர்கள் "மந்தாரம் த்ராயதே இதி" எனச் சொற்சிதைவு செய்து "மனஞானே" என்ற வேர்ச் சொல்லிலிருந்து பிறந்து, காரணப் பெயராகக் கருதி இடைவிடாது நினைப்பவனைக் காப்பது எனப்பொருள் காண்பர். சிலர் 'மனத்தில் நிலைத்து நிற்பது' எனப் பொருள் காண்பர். நிலைத்து நிற்பது "ஸ்திரம்" என்ற சொல்லின் பொருளாமேயன்றித் 'த்ரம்' என்ற சொல்லின் பொருளாகாது. ஆன்றோர் வழிவரும் சிந்தனையும் ஆகாது.

"மூலன் உரை செய்த மூவாயிரந் தமிழ்
ஞாலம் அறியவே நந்தி யருளது
காலை எழுந்து கருத்தறிந்து ஓதிடின்
ஞாலத் தலைவனை நண்ணுவ ரன்றே" (99)

என்றருளுவதால், திருமந்திரம், ஒவ்வொரு நாளும் விடியற்காலையில் விரையாது வெருளாது ஒவ்வொரு தொடரின் கருத்தையும் உள்ளத்திருத்தி ஓதத்தக்கது

என்பதும் மூலன் உரையாகிய மூவாயிரந் தமிழும் 'நந்தியருளியது' என்பதால் இம்மந்திரத்தைக் கண்டு அடியேற்குக் காட்டியவர் (மந்த்ரத்ருஷ்டர்) நந்தியாகிய சிவபரம்பொருளேயாதலால் என்றும் பிதற்றுகின்றேன்; நெஞ்சத்து இரவும் பகலும் இயற்றுகின்றேன்; இங்ஙனம் இடைவிடாது மந்திரத்தையும் மந்திரப் பொருளாகிய நந்தியையும் நினைத்தலும், உள்ளக்கிழியின் உருவெழுதித் தியானித்தலும் செய்து அவரை வரச்செய்கிறேன் என்றும் கூறுவதால் திருமந்திரம் ஓதுதற்கு மட்டும் உரியது அன்று: இருந்து பலகாலும் எண்ணுதற்கு உரியது என்ற வழிவகுத்தபடியாம். இதனுற்போந்த பயன் மந்திரம் ஏனைய நூல்களைப் போலப் படித்துணர்தற்கு மட்டும் உரியதன்று. இருந்து பலகாலும் எண்ணி எண்ணிப் பயன்கோடற்குரியது என 'மந்திரம்' என்ற சொற்பொருள் விரித்தவாறும்.

'தந்திரம்' ஆகமம், என்பன ஒரு பொருட்சொற்கள். தந்திரம் என்பது 'தநு விஸ்தாரே' என்ற வேர்ச்சொல்லடியாகப் பிறந்து சிந்தனை முறைகளையும், அதாவது தியான மரபையும்', செயல்முறைகளையும் அதாவது கிரியைமுறைகளை விரித்துணர்த்துவது என்னும் பொருளது. திருமந்திரமாகிய இந்த ஞான நூலின் பகுதி ஒவ்வொன்றும் ஒவ்வொரு ஆகம சாரமாய், அனைத்தும் காரணம், காமிகம், வீரம், சிந்தியம், வாதுளம், யாமளம், காலோத்ரம், சுப்ரம், மகுடம்

என்ற ஒன்பதாகமங்களில் சாரமாதலின், இந்நூலின் உறுப்பாகிய ஒன்பதும் தந்திரம் என்றே பெயர் அமைந்தவாறும்.

வேதமொடாகமம் இறைவன் நூல்; மெய்யாம் ஆதலானும், அவை 'ஓதும் சிறப்பும் பொதுவும் என்றுன்னுக'' என்று அருள்வதால் வேதம் பொது. ஆகமஞ் சிறப்பு நூலும் ஆதலால். ஆகம சாரமாகிய ஒன்பதையும் ஆகமத்தை உணர்த்தும் தந்திரம் என்ற பெயரானும், வேதத்திற்கே மந்திரம் என்ற பெயருண்மையால் நூலுக்கு மந்திரம் என்ற பெயரையும் அமைத்தனர் எனலாம். ''வேதமும் ஆகமும் பெரியோர்க்கு அபேதமாகலின்'' இரண்டன் பெயரும் அங்க – அங்கியாக அமைந்தது எனல் இயைபுடைத்தாம். இந்த முறை வைப்பை ஒட்டியே அப்பர் சுவாமிகளும் புள்ளிருக்கு வேளூர்த் தாண்டகத்து ''மந்திரமும் தந்திரமும் மருந்துமாகி'' என்பார்கள்,

இத்தகைய திருமந்திரத்திற்கும், திருவாவடுதுறைக்கும் அம்பலவாணப்பெருமான் அருளால் விளைந்த தொடர்பு:

திருக்கயிலையினின்று பொதிகை மலையைக் கருத்தில் எண்ணித் தென்றிசை நோக்கிப்புறப்பட்ட திருமூலதேவ நாயனார் பல தலங்களையும் வழிபட்டு சிதம்பரம் வந்து ஸ்ரீ ஞானமா நடராசப் பெருமானை வழிபட்டபோது தம் உள்ளத்தே சிவானந்தாநுபவம் பொங்கித் ததும்பி வழிய, ஆராத பெருவேட்கை

யினுல் தில்லைப் பதியிலே சிலகாலம் தங்கினுர். பின்னர் சிவயோகியார் திருமூலராகித் திருவாவடுதுறைக்கு எழுந்தருளிப் படர் அரசின் கீழே மூவாயிரம் ஆண்டு சிவயோகத்திலிருந்து ஆண்டுக்கொரு பாட்டாகத் திருமந்திரம் மூவாயிரத்தையும் அருளிச் செய்தார். ஆதலால், சிவயோகியார் மனமலரிலிருந்து பாட லுருவில் வெளிப்பட்ட இடமே படரரசு படர்ந்துள்ள திருவாவடுதுறை. அடுத்து, சந்தான ஆசிரியப் பரம் பரையில் உமாபதி சிவத்தினிடம் உபதேசம் பெற்ற பரம்பரையில் வந்த ஸ்ரீ நமசிவாய மூர்த்திகள் அருளாட்சி செலுத்தியபோது உமாபதி சிவத்தின் பூசைப்பெட்டகத்தின் உள்ளிருந்த ஸ்ரீ ஞானமா நடராசப் பெருமான் எழுந்தருளிய இடம் திருவா வடுதுறை. ஆக ஞான நூல் வெளிப்பாடும், ஸ்ரீ ஞானமா நடராசப் பெருமான் திருவோலக்கமும் பெற்று விளங்குவது இத்தலமேயாதலால் திருமந் திரமும் ஸ்ரீ நடராசப்பெருமானும் இத்தலத்திற்கும் இம்மடாலயத்திற்கும் இயைபுடையன.

அன்றியும் 20-வது குருமூர்த்திகளாக விளங்கிய ஸ்ரீ அம்பலவாண தேசிகமூர்த்திகள் திருப்பெருந் துறையில் முனிவர் பெருமாஞக எழுந்தருளியிருந்த போது அங்கு ஓர் வைராகி (வடநாட்டுத் துறவி) சந்திப்பால் "கண், காணுந் தன்மைத்தாயினும் கதிரொளி கலந்தபோதுதான் காணும் அதுபோல" திருமூலர் திருமந்திரமும், திருவாவடுதுறையும்

என்றும் இருப்பினும் அவர்கள் அநுபவத்திற்கு வந்தது. அவர்கள் அருளாட்சிக் காலத்திற்குப் பின் அடுத்த பட்டத்தில் வந்த ஆசாரியர்கள் தமது குரு பக்தியை விளக்க ஆண்டுதோறும் இந்நூலை வெளியிட்டும், விளக்க மாநாடுகள் கூட்டியும் விளக்கந் தந்தனர். அது முதல் திருமந்திரம் இத்திருமடத்தின் எழுஞாயிறாக விளங்கி வருகிறது.

குருக்ஷேத்திர, சிவக்ஷேத்திர பரிபாலனமும், செந்தமிழ்ப் பரிபாலனமும் செய்து வருகின்ற இவ் வாதீனத்து 23-வது குருமகா சந்நிதானமாக எழுந் தருளி ஞான ஆட்சி புரியும் ஸ்ரீ-ல-ஸ்ரீ சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் ஆதீனக் குருமுதல்வர் ஸ்ரீ நமசிவாய மூர்த்திகள் மகரத் தலை நாட் குருபூசை (அட்சய-தை-அசுவதி) 4-2-1987 நன்னாளில் இத்திருமந்திர மூலநூலை விழா மலராக வெளிவரச்செய்து மரபுகாத்தருளுகின்றார்கள். அவ் வப்போது ஊக்கி அருட்பணிக்கு அடியேனை ஆளாக்கி வருகின்ற குருமகா சந்நிதானம் அவர்கள் திருவடி கமலங்களுக்கு என்றென்றும் கடப்பாடுடையேன்.


ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் அருட் செங்கோல் இறைவன் திருவருள் போல் என்றென் றும் நின்று நிலவுவதாக.

“ சயிலாதி மரபுடையோன் திருமரபு நீடு தழைக ”


இங்ஙனம்,

ஆதீன மகாவித்துவான்,

டாக்டர் ச. தண்டபாணிதேசிகர்.



நந்தி அருள்பெறு செந்தமிழ் யோகி



சிவயோகியார் தென்திசைக்கு ஏகுதல்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

திருமூலர் வரலாறு

குடிமன்னு சாத்தனூர்க் கோக்குல
 மேய்ப்போன் குரம்பைபுக்கு
முடிமன்னு கூனற் பிறையாளன்
 தன்னை முழுத்தமிழின்
படிமன்னு வேதத்தின் சொற்படி
 யேபர விட்டென்உச்சி
அடிமன்ன வைத்தபி ரான்மூல
 னாகின்ற அங்கணனே.

— நம்பியாண்டார்நம்பிகள்.


தமிழ் நாட்டின் பெருமைகளையும் சிறப்பினையும் அறியத் திருக்கயிலாய மலையில் இருந்த எண்வகைச் சித்தியும்பெற்ற முனிவர் ஒருவர் அகத்திய முனிவரைக் காண பொதியமலையை நோக்கிப் புறப்பட்டார். அம் முனிவரர் நந்தியெம்பெருமானின் நல்லருள் பெற்றவர். அவ்வாறு வருபவர் வழியிடையுள்ள திருக்கேதாரம், பசுபதிநாதம், நேபாளம், காசி, காளத்தி, காஞ்சி முதலாய தலங்களில் உள்ள இறைவனை வணங்கி வரலானார். வருங்கால் காஞ்சியில் யோகியர் சிலரைக் கண்டு உரையாடினார். பின்னர் தில்லையில் திருநடங் கண்டு சிலகாலம் அங்குத் தங்கிக் காவிரியைக்கடந்து திருவாவடுதுறையை அடைந்து இறைவனைத் தொழு தார். தொழுது மீள எண்ணியவர் மீட்டும் காவிரிக்

கரையை அடையலானார். அங்கு ஆனிரைகள் கூட்ட மாகக்கூடி அழுது நிற்றலைக் கண்டார்.

சாத்தனூர், அந்தணர்கள் நிறைந்த ஊர். அவ்வூரில் ஆயர் குலத்தில் தோன்றிய மூலன் என்பான் அவ்வூர்ப் பசுக்களை மேய்த்துவந்தான். வழக்கம் போல் பசுக்களை மேய்க்கும்போது அவன் வாழ்நாள் முடிவெய்த நிலத்திடை விழுந்து இறந்தான். மூலனால் மேய்க்கப்பட்ட பசுக்கள் அவன் பிரிவுக்கு ஆற்றாது அவனைச் சுற்றிச்சுற்றிக் கதறி அழுதன. பசுக்களின் அழுகையைச் சிவயோகியார் கண்டார். திருவருளாலே அப்பசுக்களின் துயரை நீக்கத் துணிந்தார். உடன் தம்முடைய உடம்புக்குத்தக்க பாதுகாப்பினைச் செய்தார்.

சித்தராதலின் தம்பால் உள்ள கூடுவிட்டுக் கூடு பாயும் சித்தியால் மூலன் உடம்பில் தமது உயிரைப் புகுத்தினார். புகுத்தியபின் திருமூலராய் எழுந்தார். பசுக்கள் எல்லாம் நாத்தழும்ப அவரை நக்கிமோந்தன. அணைந்தன, கனைத்தன, உடன் துள்ளிஎழுந்து களிப்பு மிகுதியால் மேயத் தொடங்கின. மாலைப் பொழுது வந்தவுடன் வழக்கம்போல் தத்தம் கன்றுகளை எண்ணிச் சாத்தனூருக்குத் திரும்பித் தத்தம் வீடுகளை அடைந்தன. திருமூலர் எவ்வீட்டிலும் நுழையாமல் வெளியே தனித்து நிற்கலானார்.

மூலன் மனைவி அவர் அவ்வாறு நிற்பதைக்கண்டாள். திருமூலரைத் தனது கணவரென்றே எண்ணித் தொட்டழைக்க நெருங்கி வந்தாள். ஆனால் மூலரோ அதற்கு இசையவில்லை. "இங்கு உனக்கு என்னுடன் அணைவொன்றில்லை" யென எதிர்மறுத்து அங்குள்ள ஒருபொது மடத்தையடைந்து சிவயோகத் தமர்ந்தார்.



பசு படுதுயர்கண்ட யோகியர் நிலை

மூலன் மனைவியோ அன்றிரவைத் தூங்காது துயருடன் கழித்தாள். பொழுது புலர்ந்ததும் நல்லார்பால் சென்று முறையிட்டாள். அவர்கள் அனைவரும் வந்து மூலர் நிட்டையில் இருப்பதைக் கண்டார்கள். கண்டவர்கள் "பித்துற்ற மயலன்று; பிறிதொரு சார்புளதன்று; சித்தவிகற்பம் களைந்து தெளிந்த சிவயோகமே" அவர் இருக்கும் நிலையென்பதை அறிந்தார்கள். "பெண்ணே! இனி அவர் இல்வாழ்க்கைக்கு ஏற்றவராகார், என்பதை அவளுக்கு எடுத்துக்கூறிச் சென்றார்கள். அவளது ஆற்றொணுத் துயரைக் கண்டசிலர் அவளை அப்பால்அழைத்துச்சென்றார்கள்.

ஊரவர் சென்றபின்னர் திருமூலர் நிட்டை விட்டெழுந்தார். பசுக்கள் வந்தவழியே சென்றார். தாம் அரண்செய்துவைத்ததாகிய தமது உடலைக் காணாது திகைத்தார். மெய்ஞ்ஞானத்தால் சிந்தித்தார். இறைவனால் அருளிச்செய்யப்பட்ட ஆகமப் பொருள்களை மண்ணின்மிசைத் தமது வாக்கினால் **தமிழ்வகுப்பவே** இறைவன் திருவுளங்கொண்டு தமது உடலைக் கரப்பித்தார் என்று தெளிந்தார். மூலனுடைய சுற்றத்தார் மீண்டும் தொடர்ந்தார்கள். அவர்கட்குத் தமது தொடர்பின்மையை மனங்கொள எடுத்துவிளக்கினார். பின் திருவாவடுதுறையை அடைந்தார்.

திருவாவடுதுறையை அடைந்தவர் மாசிலாமணி ஈசரைவணங்கி மேற்குப்புறமாகச்சென்று படரரசைக் கண்டார். அதன்கீழ் அமர்ந்து சிவயோகமிருந்தார். மூவாயிரம் ஆண்டு ஆங்கு யோகமிருந்து "ஒன்றவன் தானே" எனத் தொடங்கி ஆண்டுக்கொரு பாடலாக மூவாயிரம் திருமந்திரம் அருளினார். முடிவில் திருக்


கயிலையை அடைந்து ஒருகாலும் பிரியாமைத் தாளடைந்தார்.

ஊனுடம்பிற் பிறவிவிடந்
தீர்ந்துலகத் தோருய்ய
ஞானமுதல் நான்குமலர்
நல்திருமந் திரமாலை
பான்மைமுறை ஓராண்டுக்
கொன்றுகப் பரம்பொருளாம்
ஏனஎயி றணிந்தாரை
ஒன்றவன்று னெனஎடுத்து.

முன்னியஅப் பொருண்மாலைத்
தமிழ்மூவா யிரஞ்சாத்தி
மன்னியமூ வாயிரத்தாண்
டிப்புவிமேல் மகிழ்ந்திருந்து
சென்னிமதி யணிந்தார்தம்
திருவருளால் திருக்கயிலை
தன்னிலணைந் தொருகாலும்
பிரியாமைத் தாளடைந்தார்.

இவ்வரலாறு சேக்கிழார்பெருமான் திருவாக்கால் திருத்தொண்டர் புராணத்துள் கூறப்பட்டுள்ளதாகும். இவ்வரலாற்றுக்கு ஆதரவான குறிப்புகளும் இவ் வரலாற்றிற் காணப்பெறாத செய்திகளைத் தெரிவிக்கும் குறிப்புகளும் திருமந்திரத்தில் காணப்படுகின்றன.

திராவிட மாபாடிய ஆசிரியர் ஸ்ரீ சிவஞானசுவாமிகள் காலத்திருந்த சாத்திரம் சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகளாற் பாடப்பெற்றதும் திருவாவடுதுறை ஆதீனத்து 12-வது மகாசந்நிதானம் ஸ்ரீ திருச்சிற்றம்பல தேசிகசுவாமிகள் காலத்து அரங்கேறியதும், இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட செய்யுட்களையுடையதும் ஆகிய திருவாவடுதுறைப் புராணத்தில் " திருமூலரைத்



பசு படுதுயர்கண்ட யோகியர் நிலை





மூலன் உடலிற் சிவயோகியார்

தடுத்தாட் கொண்ட சருக்கம்'' ஒன்றுளது. அதில் சில மாறுபாடுகளோடு பெரிய புராண வரலாற்றை ஒட்டியே திருமூலர் வரலாறும் கூறப்படுகின்றது.

திருவாவடுதுறைப் புராணத்துள், மூலன் உடலிற் புகவேண்டுமென்ற பவவினை திருமூலருக்குண்மையின் அவர் அவ்வாறு புக நேர்ந்ததென்றும். திருமூலர் அரண்செய்து வைத்த தமது சொந்த உடலைப் போதியின்கீழ் மறையப் பொதிந்து இறைவனே வைத்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

மேலும் திருமந்திரம் வெளிப்பட்ட தன்மையினையும் அப்புராணம் பின்வருமாறு விளக்குகிறது.

நெறியா லுணர்ந்து களித்துலக
முழுதுமுணர நிரப்பினர்கள்
பிறியாச் சிவபோகம் புசிக்கு
மூலரின்றும் பிரானடியிற்
செறிவா மியோகுற் றிருந்தனர்நீ
டூழிபலவும் சென்றனவால்.

திருமூலர் தம்மை நந்தியருள் பெற்ற மாணவரில் ஒருவர் என்று குறிப்பிடுகிறுர். நந்தியருள் பெற்ற மாணவர் எண்மர் எனக்குறிப்பிடுகிறுர். அவராவார்.

நந்தி அருள்பெற்ற நாதரை நாடிடில்
நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி
மன்று தொழுத பதஞ்சலி வியாக்கிரமர்
என்றிவர் என்னேடு எண்மரு மாமே.

என்பது.

திருமூலர் காலத்தைப்பற்றி ஆராய்ச்சியாளர்கள் பல வேறுபட்ட கருத்துடையவர்களா யுள்ளனர். கி. பி. மூன்றும் நூற்றுண்டுக்குப் பின்னும், கி. பி.

ஏழாம் நூற்றாண்டுக்கு முன்னும் திருமூலர் காலமாக அமைதல் கூடுமென அறிஞர்கள் கருதுகின்றனர்.


திருமந்திரம் ஸ்ரீ மந்திரமாலிகா என்ற வடமொழி நூலின் மொழிபெயர்ப்பென்று சிலர் கூறுவர். ஸ்ரீமந்திர மாலிகா என்ற நூல் ஒன்று இருப்பதாகத் தெரியவில்லை. ஆதலின் திருமூலர் கூற்றுப்படி வடமொழி ஆகமப் பொருளை மனத்தில் நன்கு அறிந்து தமிழ் மொழியில் கூறிய முதல் நூலேயாம் என்க. மொழி பெயர்ப்பு என்பார் கூற்றுச் சிறிதும் பொருந்துவதும் அன்று.

திருமந்திரம் மூவாயிரம் பாடற்றொகை என்றே திருமூலர் குறிப்பிடுகிறார். அதிகாரப் பகுப்பு அனைத்தும் பின்வந்த திருமூலரது சீடர்களே செய்திருக்க வேண்டும். சில பாடல்கள் இருமுறை மும்முறை வந்திருப்பதைக் கொண்டு அவ்வாறு முடிவு செய்ய வேண்டி உளது. மேலும் திருமூலர் மூவாயிரந் தமிழ் மூந்நூறு மந்திரம், முப்பது உபதேசம் என்று சுட்டு வதையும் நோக்கினோமானால் மூவாயிரம் மந்திரம் என்றே உறுதி செய்ய வேண்டியுளது.

இந்நூல்முழுவதும் சைவசித்தாந்தச் செம் பொருள்களையும், சிறந்த யோகப்பயிற்சியின் நுட்பங் களையுமே விளக்குவதாக அமைந்துள்ளது எனலாம்.

திருமந்திரப் பொருள்களை விளக்கும் பழம்பாடல் :-

தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும் - கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்.



திருமூல தேவராய்ப் படரரசின்கீழ் சிவயோகத்திருத்தல்



உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

திருமந்திரக்கருத்து

பாயிரம்

விநாயகர் காப்பு

ஐந்து திருக்கரங்கள், ஆனைமுகம், ஒற்றைக் கொம்பு ஆகிய இவைகளை உடையவரும், சிவபிரான் மூத்த குமாரரும், ஞானத்தின் சிகரமாக விளங்கு பவரும் ஆகிய விநாயகப்பெருமானுடைய இரண்டு திருவடிகளையும் மனத்தில் வைத்து வணங்குகின்றேன்.

கடவுள் வாழ்த்து :

ஒன்று : இறைவன் ஒருவனே ; இரண்டு : இறை வனும் அவனது இன்னருளாகிய சத்தியும் : மூன்று : அயன் அரி அரன் என்னும் இம்மூவருள்ளும் நிற்கும் நிலை ; நான்கு : உலகாதீதன், உலககாரணன், உல கிற்கு அந்தர்யாமி (உயிராய் நிற்றல்), உலகரூபி ; ஐந்து : ஐம்பொறிகளை வென்றவன் ; ஆறு : ஆறு ஆதா ரங்களாகவும் அவ்வாதாரங்கட்குரிய தேவதைகளாகவும் ஆறு அத்துவாக்களாகவும் விரிந்தவன் ; ஏழு : ஏழாவ தான துவாதசாந்தத்தில் இருப்பவன் ; எட்டு: அட்ட மூர்த்தியாக உணரப்பெற்று அவற்றுள்ளே கலந்திருப் பவன் இறைவன்.

அடியார்களின் மனதில் குடிகொள்பவன் : திசை களுக்கும் உமாதேவிக்கும் தலைவன் ; இயமனை உதைத்

தவன் ; ஆன்மாக்களுடன் கலந்திருப்பவன் ; திருவருள் இல்லாதவரால் அறியப்படாதவன் : பரந்த உலகில் நிறைந்துள்ள மெய்ப்பொருளானவன் ; அண்டங்களுக் கெல்லாம் வித்தாக இருப்பவன் ; நம்மையெல்லாம் மோட்சத்தில் செல்லவிடுபவன் ; எல்லா உலகிற்கும் அப்பாற்பட்டவன் ; அன்பர்களின் இருதய கமலத்தில் குடிகொண்டவன் ; சிவனுக்குச் சமமான தெய்வம் எங்கும் இல்லை ; அவனுக்கு ஒப்பாவாரும் இல்லை; சிவனையல்லாமல் வேறு எந்தத் தேவரும் இல்லை ; அவனருள் இல்லாமல் எந்தத் தவமும், அயன், அரி, அரன் ஆகிய மூவரால் செய்யப்படும் செயல்களும் இல்லை; பேரின்ப வீடாகிய மோட்சநகருள் செல்வதற்கும் அவனருள்வேண்டும்.

மூவருக்கும் மூத்தவன் ; அப்பா ! என்று அழைப்பவர்களுக்கு மாத்திரம் தந்தையாக அவர்களது மனதில் நிலைபெற்றவன் ; நெருப்பைக்காட்டிலும் வெப்பம் உடையவன் ; தண்ணீரைவிடக் குளிர்ச்சியானவன் ; குழந்தையைவிட நல்லவன் ; அன்புடையாருக்குச் சமீபமாக உள்ளவன் ; தாயினும் இனியவன் ; அவன் பெயர் நந்தி என்பதாம்.

இறைவன் யாவராலும் தொழப்படுபவன் ; அவன் யாரையும் தொழமாட்டான். உலகைத்தாங்கி ஆகாய வடிவமாகவும், அக்கினி, சூரியன், சந்திரன் என்னும் முச்சுடர்களாகவும், மழையைப் பெய்விக்கும் திருவருட் சத்தியாகவும், மலையாகவும், கடலாகவும் இருப்பவன்.

எவ்விடத்தில் தரிசிக்கப்போனாலும் சிவனையன்றி வேறு தலைமைத்தெய்வம் இல்லை; நமது முயற்சியும் முயற்சியின் பயனும், மழையும், மேகமும், சிவனே யாவன். எப்படிப்பட்டவர்களும் இறைவனை மனத்தால் நினைப்பதில்லை ; ஆனால். அவனே ஆன்மாக்களுடன்

கலந்து அருள்செய்கின்றான். அயன் அரி அரன் இம் மூவரையும் கடந்துநிற்கும் இறைவன், பற்றற்ற ஞானிகளுக்கு மாத்திரம் வெளிப்பட்டு நிற்கின்றான். தோற்றமும் ஒடுக்கமும் செய்தருள்பவன் அப்பரமனே ஆவன்; அவன் சோதிமயமானவன்.

ஆன்மாக்களுக்கு இறைவனோடு உறவுகொள்ளுதலைக் காட்டிலும் சிறந்ததொரு இன்பம் இல்லை. சுடு காட்டையே தனது இருப்பிடமாகக்கொண்ட இறைவன், குபேரனை அளகாபுரிக்கும் நிதிக்கும் தலைவனாக்கியதைக் கண்டு, திருமாலும் தனக்கு நிதித்தலைமை வேண்டும் என வேண்ட, அவ்விறைவனும் திருமாலை இலக்குமி நாயகனாக ஆக்கினான். மேலும் பரமசிவன் சந்திரனுக்கு வாழ்வளித்து அவனைத் தன் தலையில் சூடினான்.

பலருடைய பிறவிகளை ஒழிக்கின்றவன்; தாருகவன ரிஷிகளின் வேள்வியில் தோன்றிய காட்டு யானையைக் கொன்றவன்; தன்னைத் தோத்தரிப்பவர்களுடன் இரண்டறக்கலந்து நிற்பவன்; தீக்கடவுளை, கடல்நீர் பொங்கி மேலே வராமலிருக்கும்படி, அந்தக் கடலின் நடுவில் நிறுத்திவைத்தவன்; அறநெறி உடையவன்; பிறப்பு இறப்பு இல்லாதவன்; அஞ்ஞானத்தை நீக்குபவன்; அழிவில்லாதவன்; வழிபடுவோரது அறிவினுள் கலந்திருப்பவன்; கயிலாயத்தில் இருப்பவன்; தன்னை வணங்குகின்றவர்கட்கு வழித்துணையாக இருப்பவன்; ஞானரூபியாய் உள்ளவன்; தேவாதிதேவன்; எங்கும் வியாபித்தும் எல்லாவற்றையும் கடந்தும் நிற்பவன்! ஆயிரம் திருநாமங்களை உடையவன்.

தனக்குத்தானே சமானமானவன்; ஆன்மாவுக்குள்ளிருந்து பிராணனாக இயங்குகின்றவன்; புண்ணிய மூர்த்தி! விஷத்தையுண்டவன்; உலகம் நடைபெறுவதற்கும் நாம் அடையும் இன்பத்திற்கும் அவனது

ஆணையே காரணம்; மெய்யடியார்களால் வணங்கித் துதிக்கப்படுபவன்; அருட்பெருஞ்சோதி; பசு பாச ஞானங்களைக் கடந்து பதிஞானத்தை அறிகின்றவர் களுக்கு, திருவடிப் பேருகிய இன்பத்தை அளிப்பவன்.

இப்படிப்பட்ட தன்மைவாய்ந்த இறைவனது திரு வடிமலரைத் தலையில் சூடிக்கொண்டும் மனதில் தியா னித்தும்-அர்ச்சித்தும் வணங்குவேன்; பாடி ஆடுவேன்; இதுவே நான் (திருமூலர்) அறிந்து பணி செய்வதாகும்.

வேதச் சிறப்பு:

அறங்களைக்கூறும் வேதநூல்களைத் தர்க்கவாதம் செய்யாமல் அறிஞர்கள் ஓதியே முத்தியடைந்தார்கள். மக்கள் ஒழுக்கநெறியில் நிற்கவும், வேதியர்கள் யாகங் களைச் செய்யவும், அனைவரும் உண்மைப்பொருளை அறியவும் இறைவன் வேதத்தை அருளிச்செய்தான். வேதத்தை ஓதுகின்றவன் வேதியனுகமாட்டான். வேதத்திற்குச் சிவபெருமானே மூலகுரு ஆவர்.

அறிவிக்க அறியும் சித்தும், அறிவித்தாலும் அறிய முடியாத அசித்தும் ஆகிய இரண்டும் அல்லாத பேரறி வுடைய சிவனை அறிவுறுத்துவது திருநெறி என்பதாகும்; இது ஆசாரியானுல் உணர்த்தப்படும் பெரு நெறியாம். இதனையே சிவநெறியென்றும் கூறுவர். வேத முடிபில் ஒன்றே என்று கூறுவதெல்லாம் திருநெறி - பெருநெறி- குருநெறி என்ற மூன்றினையே ஆகும்.

மேற்சொன்ன மூன்று நெறிகளையும் ஒரேநெறி யாக வேதமும் வேதமுடிபும் எடுத்துக் கூறினுலும் வேதத்தைத் தெளிவாக அறிந்து ஓதுவதற்காக ஆறு அங்கங்கள் அமைந்தன. இவ்வங்கங்களை - வேதத்தின் பாகுபாடுகளை அறிவிக்கும் கருவிகளாகக் கொண்டு ஒருநெறி இன்னதெனத் தெளிந்து சிவநெறியில் யாரும் பழகாமல் பல பேதங்களைப் பெருகச் செய்துவிட்டார்

கள்; இதனுல் பயனில்லே. ஒரு நெறிகொண்டு ஒரு பொருள்கொண்டு ஒரேபயனே அடைதலே சிறந்ததாகும்.

வேதாங்கங்களான ஆறனுள் சந்தோபசிதம், நிருத்தம் என்னும் இரண்டிலும் ஆடல் பாடல்களேப்பற்றிக் கூறப்பட்டிருக்கின்றன. அப்படிக்கூறப்பட்டது மக்களுக்குத் தெய்வ உணர்ச்சியை உண்டுபண்ணுவதற்காகவேயாம். உருத்திர கணிகையரும் தங்கள் ஆடல் பாடல்களால் அந்நெறியை விளக்கினர். ஆக, பாமரர்களும் மெய்ந்நெறியை உணர்தற்காகவே பாடலும் ஆடலும் வேதத்தில் இடம்பெற்றுள்ளன. எல்லாக்கிளே நெறிகளும் வேதம் கூறும் ஒரேநெறிக்குத் தக்க கொள்கைகளேக் கொண்டன ஆகும்.

ஆகமச் சிறப்பு:

சிவபெருமான் இருபத்தெட்டு ஆகமங்களேயும் தனது ஈசானமுகத்திலிருந்து அருளினுன். அவற்றை அறுபத்தாறுபேர்கள் கேட்டார்கள். தேவர்கள், இவ்வாகமங்களின் துணேகொண்டே இறைவனுடைய பெருமையினேக் கூறினுர்கள். ஆகமங்களின் பாடல் தொகை எழுபதுகோடியே நூருயிரம் ஆகும். ஞான சொரூபியான இறைவன் ஆகமவடிவமாகவே விளங்குகின்றவன். சிவபிரானிடமிருந்து சத்தியும், சத்தியிடமிருந்து சதாசிவமும், அவர்பால் உமாமகேசுரரும், அவரிடமிருந்து ஸ்ரீகண்ட உருத்திரரும், அவர்பால் திருமாலும், திருமாலிடமிருந்து பிரமனும், அவர்பால் உருத்திரரும் உபதேசம்பெற்றனர். இவர்கள் முறையே அடைந்த காரணம், காமிகம், வீரம், சிந்தியம், வாதுளம், வியாமளம், காலோத்தரம், சுப்பிரம், மகுடம் என்னும் ஒன்பது ஆகமங்களேயும் நந்திபெற்ருர்.

ஆகமங்கள் அனேத்தும் சிவ உணர்வு பெற்றவர்களே அறிந்துகொள்ளமுடியும். ஏரிகளெல்லாம் நீர்

வற்றியிருக்கும் சமயமான பனிக்காலத்தில் இறைவன், வடமொழி தென்மொழி என்னும் இரு மொழிகளையும் உமையம்மைக்கு அறிவித்துக் கருணைசெய்தான். பதி பசு பாசம் என்னும் முப்பொருள்களை அவ்விரு மொழியும் தெரிவிக்கும். இவற்றை நாம் உணர்ந்தால் இறைவனை உணரமுடியும்.

குருபாரம்பரியம்:

சனகாதி நால்வர். சிவயோகமுனி, தில்லையில் நடனம் கண்ட பதஞ்சலி, வியாக்கிரமர், திருமூலர் ஆகஎண்மரும் நந்திதேவரின் அருளைப்பெற்ற பரம்பரையினர் ஆவர். இறைவன் அருளாலே ''நாதன்'' என்ற பெயர் பெற்றேம்: மூலனது உடலைக்கண்டு அவ்வுடலுள் புகுந்து நிட்டைகூடியிருந்தேன் (என்றுதிருமூலர் கூறுகின்றார்).

மாலாங்கன், இந்திரன், சோமன், பிரமன், உருத் திரன், காலாங்கன், கஞ்சமலையன் என்னும் எழுவரும் திருமூலநாதரது பின்வழி வந்தவர்கள். இவ்வெழுவருள் நால்வர் நான்குதிசைகளில்தங்கி அங்குள்ள மக்களுக்கு உபதேசம் செய்து தலைவரானார்கள். இவ்வெழுவருக்கும் இறைவன் மேலாம்வழியை உபதேசித்ததல்லாமல் சனகாதி நால்வருக்கும் பெருமழையிலும் நியமங்களைத் தவறாமல் செய்யும்படிக்கும் ஆணையிட்டான்.

திருமூலர் வரலாறு:

குருநாதர், சிவபிரான் ஆக இருவருடைய திருவடி களைச் சிரசில் சூடியும் தியானித்தும் திருமந்திர நூலைச் சொல்லத்தொடங்குகிறேன் என்று திருமூலர் திருமந்திர நூலைத் தொடங்குகின்றார்: கோடியுகம் நான் சிவ யோகத்தில் இருந்தேன்: புவனேச்வரியை மிக்க பயபக்தியுடன் வழிபட்டுவந்ததால் நான் கோடியுகம் இருந்தேன்: வேதாகமஞானம் எனக்கு உண்டாக அந்த

உணர்விலேயேயிருந்து உடலையும் மறந்தேன்: இதனல் அனுபவிப்பவனையும் அனுபவிக்கப்படும் பொருளையும் வேருகக்கொள்ளும் விகற்பநிலைகெட்டு ஏகனுகி (அவனே தானேயாகி) நின்றேன்; அதன்பின் எல்லாப் பொருள்களும் உணரப்பட்டன; நான் பூமிக்கு வந்தகாரணம் என்னவென்ருல், எல்லாஆகமங்களுக்கும் ஐந்தொழிற்கும் அடிப்படையாவதும் ஆதாரமாவதுமான திருக்கூத்தின் இயல்பை விளக்கும் வேதத்தைத் தமிழ் வேதமாகச் சொல்லவே வந்தேன்.

மாசிலாமணிப்பெருமானும் ஒப்பிலாமுலையம்மையும் எழுந்தருளியிருக்கும் திருவாவடுதுறையில் சிவமயமான படர்அரசமரத்தின் நிழலிலே பெருமானது திருநாமங் களை உச்சரித்துக்கொண்டிருந்தேன். தமிழ் வேதத்தைச் செய்யும்பொருட்டே இறைவன் என்னைப்படைத் தருளினன். இறைவன் அருளிய வேதத்தில் விளங்கும் மந்திரம் ஸ்ரீ பஞ்சாக்கரமேயாகும். அம்மந்திரத்தையே பற்றுக்கோடாகக் கொண்டேன்; அதனல் சிவம் வெளிப்பட்டது. நான் இன்பம்பெற்றேன். அவ்வின்பத் தை உலகத்தவர்களும் பெறுவார்களாக.

இறைவன் ஆணையே உலகத்தை நடத்துகிறது. அறியப்படும்பொருள், அறிவு, அறிபவன், மாயைகள், பரை முதலிய சத்திகள், சிவம், பீஜங்கள் ஆகிய இவை களையெல்லாம் திருமந்திரத்துள் விளக்கினேன். இறைவன் ஆணையின்வண்ணம் திருக்கயிலை வழியே- பரம்பரையிலே வந்து மூலனுடைய உடலில் புகுந்து உண்மைஞான மடைந்து பல்லாண்டுகள் இருந்தேன்.

அவையடக்கம் :

இறைவனுடைய பெருமையினையும் அகலம் நீளம் முதலிய பரந்த எல்லைகளையும் எவராலும் அளந்து அறியமுடியாது. அவன், இணையில்லாதவனும் பெருஞ் சோதியும் ஆவன். மால் அயன்இவர்களால் அறியமுடி

யாதவனும் இன்னிசையாயுள்ளவனும் ஆகிய இறைவனை நான் எப்படிப் புகழ்ந்து கூறுவது!

திருமந்திரத் தொகைச் சிறப்பு:

திருமந்திரத்திலுள்ள மூவாயிரம் தமிழ் மந்திரங்களையும் மக்கள் காலையில் ஓதினால் இறைவனை அடைந்து இன்பம் பெறலாம். திருமந்திரம் பொதுவும் சிறப்பும் என இரண்டு பிரிவுகளை உடையது; முத்தியாகிய முடிவைக் கூறுவது.

குருமட வரலாறு:

தோன்றிய ஏழு மடங்களுள் சிறந்து முன்னே-முதலில் தோன்றியது திருமூலர் மடாலயமாகும். காலாங்கர், அகோரர், மாளிகைத்தேவர், நாதாந்தர், பரமானந்தர், போகதேவர், திருமூலர் என்ற எழுவரும் ஏழுமடத்தின் தலைவர்கள் ஆவார்கள்.

மும்மூர்த்திகளின் முறைமை:

இறைவன், இளமையையும் அழகையும் உடையவன்; காலங்கடந்தவன். உருத்திரன், திருமால், அயன் இம்மூவரும் ஒருவரே என்று கருதாமல் தொழில் வகையில் அவர்களை வேறுபடுத்தி மக்கள் பிணங்குகின்றார்கள். அவனே தெய்வம், இவனே தெய்வம் என்பவர்கள் உண்மைஞானம் இல்லாதவர்கள். உலகிற்கு வித்தாய் இருப்பவன் பரமசிவன். சிவபரம் பொருளே ஒன்றாகியும் பலவாகியும் விரிந்து ஐந்தொழிலையும் ஆற்றி அருள்செய்கின்றது.

அயனும் மாலும் இறைவனது அடியார்களே ஆவர். சிவனருள் ஒன்றினையே தேவர்களும் மக்களும் உணரவேண்டும். சிவம் ஒன்றே நம்மையெல்லாம் படைத்துக் காத்து அழிக்கின்றது; ஆதலால் மூவரும் ஒன்றே எனக் கொள்ளல்வேண்டும்.

முதல் தந்திரம்

உபதேசம் :

கடவுள் என் களிம்பை அறுத்தான். செம்பில் களிம்பு அநாதி; அதுபோல், உயிருக்கும் ஆணவம் அநாதி; அதைநீக்கி ஆட்கொள்ளத்தான் எனக்கு இறைவன் பிறப்பைக் கொடுத்தான்; ஞானக்கண்ணை விழிக்கச் செய்தான்; பளிங்கில் பவளம் வைத்தது போல், எனக்குள்ளே தன் ஒளியைக் காட்டினான்.

பதி, பசு, பாசம் மூன்றும் அநாதி. பதி கருணையினால் பசுவை அணுகினால், பாசம் பசுவை விட்டு அகலும். சிவன் ஒரு சூரியன். அவன், கருணை என்னும் கடலிலிருந்து, மும்மலம் என்ற இருட்டை ஓட்டிக் கொண்டு எழுகிறான்.

பஞ்சும், சூரியகாந்தமும் அடுத்தடுத்துஇருந்தாலும் சூரியகாந்தக் கண்ணாடி பஞ்சைச் சுடாது; சூரியனது கிரணங்கள் வேண்டும். உயிரும் மலமும் ஒன்று கூடி இருந்தாலும், உயிர் தானே மலத்தை ஒழித்துவிட முடியாது; அதற்கு இறைவன் கருணை வேண்டும்.

உடலெடுத்த உயிர்கள் பஞ்சேந்திரியங்களாகிய படுகுழியில் விழுந்து. வழியறியாமல் வருந்துகின்றன. வழியைக் காட்டுபவரே குரு. குருவைப் பார்ப்பதும், குருவின் பெயரைச் சொல்வதும். குருவின் சொற்களைக் கேட்பதும், அவர் உரைகளைச் சிந்திப்பதுமே உயர்ந்த நெறி. அந்த நெறியில் ஒழுகுபவர்கள் சிவயோகியாவர்,

சிவயோகிகளுக்கு இந்திரியம், உயிர், உடம்பு எல்லாம் ஒன்ருய் அவனிடத்திலே ஒன்றி அசைவில்லாமல் இருக்கும். அவர்களுக்குத்தான், இறைவன் எங்கும் எல்லாமாய் இருக்கும் தன்மை தெரியும். இறைவனின் ஆநந்தக் கூத்தை, சிதாகாசப் பெருவெளியில் காண்பவர்களும் அவர்களே. அவர்கள் சிவலோகத்தை இங்கேயே காண்பார்கள். அவர்களே நித்தியர்; முத்தர்; நிமலர். அவர்கள் முப்பத்தாறு தத்துவங்களாகிய ஏணியிலேறி தத்துவாதீதப் பழம் பொருளைக் கண்டவர்கள். அவர்கள் எல்லாவற்றையும் சிவன் செயலாகக் காண்பார்கள். அவர்களுக்கு ஒரு தொழிலும் இல்லை! அதனுல் அவர்களைச் சோம்பர்கள் என்றும் கூறலாம்!

அவர்கள் இருப்பதும் கிடப்பதும் ஞானவெளி. அவர்கள் தூங்கும் தூக்கமெல்லாம் ஞானத் தூக்கம். அவர்கள் தூங்கும்போதுங்கூட எல்லாவற்றையும் தன்னுள்ளே கண்டுகொண் டிருப்பார்கள். அவர்களுடைய இந்திரியங்கள் உலகப்பொருளைச் சென்று பற்ரு; ஆமை போல், அடங்கியிருக்கும். அப்பில் கரைந்த உப்பு அப்பாவதுபோல், சீவன் சிவத்துள் அடங்க, திருவடி நிழலில் அடங்கி நிற்பார்கள்.

யாக்கை நிலையாமை :

மண். அதிலிருந்து இருவகைப் பாத்திரங்கள் செய்யப்பட்டன. நன்ருகத்தான் இருந்தன. ஏதோ. கஷ்டகாலம்; மழை பெய்தது. பாத்திரங்கள் கரைந்து மண்ணோடு மண்ணுய்ப் போயின!

இரண்டு கால் நட்டு, ஒருவளைபோட்டு முப்பத்திரண்டு வாரை பாய்ச்சி, மேலே கூரை போட்டு இருந்தது. அக்கூரை பழைமையாகிப் பிரிந்து போயிற்று. ஆகையால், குடியிருந்தவன் போய் விட்டான்; திரும்பி

அவ்வீட்டிற்கு வரமாட்டான். ஆனால், அவன் மனைவி மக்கள் அவன்கூடப் போக வில்லை!

சீப்பிடித்தது; மூட்டெல்லாம் விட்டுப்போயின; கட்ட விழ்ந்தது; அலகெல்லாம் உளுத்துப்போயின. மூக்கில் விரலைவைத்துப் பார்த்தார்கள் ; மூடி, காக்காய் கழுகு கொத்தப் போட்டுவிட்டு வந்தனர்!

ஒரு பெரியவர், சமைக்கச்சொன்னார்; சாப்பிட்டார்; சிறிது நேரம் காதலியோடு பேசிக் கொண்டிருந்தார்; '' அப்பப்பா! இடப்பக்கம் வலிக்கிறதே'' என்றார். இறந்தே போனார்!

ஒரு இளைஞன்; அவனுக்குத் திருமணம் செய்வித் தனர். மணமக்கள் இருவர்க்கும் பிணைந்த காதல்; காதல் வெறுத்தது. அவன்செத்தான். பாடைமீது வைத் துக் கட்டி, சுடுகாட்டில் போட்டு, சுட்டெரித்தனர்!

நல்ல, அழகிய கட்டுக் கோட்டை, கோட்டையில் தொண்ணூற்றாறு பேர் குடியிருந்தனர்; கோட்டை இடிந்தது; குடியிருந்தவர் ஓடிவிட்டனர்!

ஊருக்குத் தலைவன். எப்பொழுதும் பல்லக்கில் செல்வான். ஆனால், முதலில் போனது நாட்டுச் சிவிகை; முடிவில் சென்றது காட்டுச் சிவிகை. ஊரார் பின்னே சென்றனர்; முன்னே கொட்டு முழக்கு; இப்படியாக யாத்திரை!

''கண்ணே! பொன்னே! '' என்ற காதலி, மாடு, மனை எல்லாம் ஊரிலிருக்க, பாடையிலே ஏற்றி, பலி யெல்லாம் போட்டு, வைத்துக் கொளுத்தி, நீராடி, நினைப்பும் ஒழிந்தார்கள்!

முந்நூறு நாளில் பிறந்த முட்டை. பன்னிரண்டு வயதுக்கு மேலே கல்யாணம் செய்துகொண்டது. எழு பது வயதில் உடைந்து போயிற்று. இது யாருக்குத் தெரியும்?

அகல் இருக்க விளக்கு அணைந்தது. அது எப்படிப் போயிற்று என்பதைத் தெரியாதபடி, இருளில் கிடந்து ஏங்குகிறது உலகம்!

மன்னுதி மன்னன். அவனது குடை, குதிரை, வாள் எல்லாம் வைத்த இடத்தில் இருக்கின்றன. அவன் பய ணம் போய்விட்டான்! போனபிறகு, அந்த உடம்பைக் காக்காய் குத்தினுல் என்ன! கண்டவர்கள் பழித்தால் என்ன! பால் தெளித்தால் என்ன! பலர் பாராட்டினுல் என்ன!

செல்வ நிலையாமை :

அரசனுயிருந்தாலும், அவனது ஆணையையும், தானை யையும் பகைவர் கொண்டு போகக்கூடும். ஆதலால், தெளிந்த, அறிவோடு, சிவனடியைச் சேரவேண்டும். நமது நிழல் நமக்கு உதவாது; நமது செல்வமும் அப் படியே. உயிர் போனுல் ஒன்றும் கூடவராது. வண்டு தேனைச் சேகரித்துவைக்கிறது. அதை வலியவர்கள் அடித்துக் கொண்டுபோய் விடுகிருர்கள். எமன் வந்தால் காசு பயன்படாது, செல்வம் கடல்மேல் செல்லும் கப்பல் போல. எந்தக் கணத்தில் கப்பல் கவிழுமெனக் கூறமுடி யாது, ஆகையால், செல்வத்தை உறுதியென்று எண்ணு மல், சிவன் திருவடியையே சிந்திக்க.

இளமை நிலையாமை :

கிழக்கே உதித்த சூரியன் மேற்கே மறைகிருன். கன்று கிழக்காளையாகிறது. இளமை தேய்ந்து போவ தற்குமுன் அருமையான புண்ணியங்களைச் செய்ய

வேண்டும்; இறைவனைத் தியானிக்கவேண்டும். இளமையில் பெண்களுக்குக் கரும்பாக இருந்தவர். கிழப்பருவத்தில் காஞ்சிரங்காயாகின்றார்! நேற்றுப் பாலனாய், இன்று காளையாய், நாளை கிழவனாய்க் கழிவதைப் பார்த்தும், உலகினர் உணர்ச்சி யற்றிருக்கின்றனர்! சூரியன் உலகை அளக்கிறான். அவனால் காலம் கணிக்கப் படுகிறது. இதனை உணராது இழிமக்கள், காலன் கருக்குழி வைத்தபின், அதில்போய் விழுகிறார்கள்! ஆதலால், இளமை கழிவதற்கு முன்பே இறைவனை ஏத்தவேண்டும்,

உடலுக்குள் உயிர் :

கொம்பில் தழைக்கின்ற தளிர். பூக்கின்ற பூ, எல்லாம் பழுத்து உதிர்ந்து போகின்றன. அதைப் பார்த்தும். நம்முடைய உயிர் இந்த உடலுக்குள்என்றும் நிற்காது என்பதை மக்கள் அறியவில்லை!

ஐந்து பேருக்கு ஒரு வயல். ஐவரும் அதைக் காத்து வருகின்றனர். ஐவர்களுக்கும் அவர்கள் தலைவனிட மிருந்து ஓலை வருகின்றது. அவ்வளவுதான்; காவலை விட்டு ஓடிப் போயினர்!

நம்முடைய கருமயிர் வெண்மையாகிறது. அது போலவே நமது பிறப்பும், இறப்பும். ஆதலால், இவ்வுயிர் உடலைவிட்டுப் போகும் முன்னே. விதிப்படி அறங்களைச் செய்யுங்கள்; புனிதனைப் போற்றுங்கள்; பிறருக்குக் கொடுத்து உண்ணுங்கள்.

கொல்லாமையும் புலாலுண்ணாமையும் :

''கொல்லு! குத்து!'' என்று சொன்னவர்களைக் கால தூதர்கள். பாசத்தால் கட்டி, நரகத்திலிட்டு, ''இங்கேயே நில்'' என நிறுத்தி விடுவார்கள். ஆகையால் கொல்லாமையே பூசைக்கேற்ற பூ.

கொலை, களவு, கள், காமம், பொய்கூறல், இவை பஞ்சமாபாதகங்கள். கொலையின் வழியாகிய புலால் உண்டல் இழிந்தவர் செயல். அவர்களுக்குத் துன்பம் பல விளையும்.

பிறர்மனை நயவாமை :

வீட்டுத் தோட்டத்தில் பழுத்த பலாப்பழம். அதனை உண்ணமுடியாமல் ஈச்சம்பழத்திற்கு ஏமாந்து நிற்கின்றதே கயவருலகம்! நாம் வளர்த்த மாவில் பழுத்த பழம். அதை அறையில் வைத்துப் புதைத்து விட்டு, புளிமாங் கொம்பேறி, புளித்தமாங்காயை விரும்பலாமா?

மருள் கொண்டவர்களே மாதர்மயலில் வருந்துவர். காம இன்பம் கனவு போன்றது. இதையே பெரிது என்று எண்ணி, சுவர்க்க இன்பம் எனத்தோத்திரிப்பாருமுண்டு! இவர்கள் நிலை, கருப்பஞ்சாறு வாங்குவதற்காகக் கிடைத்த பாத்திரத்தில் வேப்பஞ்சாறு வாங்கினது போல. இலை நன்றாக இருந்தாலும், எட்டிக்காயைச் சாப்பிட முடியுமா? அது போல், அவயவங்கள் அழகாக இருந்தாலும், அவர்களை விரும்புதல் கூடாது.

நல்குரவு :

நமது வாழ்க்கை கிழிந்த புடவைபோன்றது. பொருளில்லையானால், உலகில் நமக்கு நண்பர்கள் யார்? நமக்குக் கொண்டாட்டமுமில்லை; நாட்டில் நடப்புமில்லை. பொழுது விடிந்து பொழுது போனால். வயிற்றுக் குழியைத் தூர்க்க வருந்துகின்றவர்களே! கடவுளைப் பிரார்த்தியுங்கள், எல்லாக் குழிகளும் சுவடும் தெரியாதபடி அடைந்து விடும்; வளமாக வாழலாம்

அக்கினி காரியமும் அந்தணர் ஒழுக்கமும் :

அந்தணர்கள் அறுதொழில் செய்பவர்கள். அக்னி காரியம் செய்து, எப்பொழுதும் நல்ல காரியங்களைச் செய்பவர்கள். அவர்களுக்குரிய மந்திரம் காயத்திரியும், சாவித்திரியும். அதனைத் தியானிப்பவர்களே அந்தணர்கள். பிரணவத்தியானம்பண்ணி, குரு உபதேசப்படி கர்மாக்களைச்செய்து, கடவுள் சொரூபமாய் இருப்பவரே குற்றமற்ற பார்ப்பார். வேதாந்த ஆராய்ச்சி செய்பவர்களே அந்தணர்கள். இத்தகைய அந்தணர் இருக்கும் நாட்டில் எல்லாவளமும் என்றும் இருக்கும்.

இராச தோஷம் :

படிப்பில்லாத அரசனும், யமனும் சரி. சொல்லப்போனல், கல்லாத அரசனைக் காட்டிலும், காலனே நல்லவன்! காலன் நல்லவர்களை நணுகமாட்டான். கல்லாத அரசன் எல்லாரையும் 'கொல்' என்பான். அரசன் அநீதி இழைத்தால் நாடு கெடும்; மக்கள் அறிவற்றவர்களாவார்கள்; வளம் குன்றும். அவரவர்களை, அந்தந்த ஒழுக்கத்தில் நடக்கச் செய்பவன் அரசனே. போலிஞானிகளை அரசன்சோதித்து உண்மை ஞானிகளாக்க வேண்டும்; அறவழியில் அரசு செலுத்த வேண்டும். சிவயோக நெறியில் செல்லாத தீயர்களை அவன் தண்டிக்க வேண்டும். அவரவர்கள் சமயநெறியில் ஒழுகாதவரை, மறுமையில் கடவுள் தண்டிப்பார். இம்மையில் அரசன் தண்டிக்கக் கடமைப்பட்டவன்.

வான் சிறப்பு :

மழையாலே மரங்கள் பெருகுகின்றன; எட்டியுங்கூட அமுதமாகிறது. உலகில் மழைபெய்து, அருவி பெருகி ஆருவதுபோல, மனமாகிய மலையில், நுரையில்லாத - அழுக்கு இல்லாத - கரையில்லாத அமுத ஆறு பெருகுகிறது.

தானம் :

யாருக்கும் கொடுத்துச் சாப்பிடுங்கள். ஆசையோடு அகப்பட்டதை அப்படியே உண்டு விடாதீர்கள். காக்கைகூட, கரைந்து கரைந்து, பிற காகங்களையும் அழைத்துக் கொடுத்து உண்கிறது.

அறம் :

அறம் செய்கிறவர்களுக்கே கடவுள் கருணை செய்வார். ஒரு பத்திரத்தைக்கொண்டு கடவுளைப் பூசிப் பது எல்லோருக்கும் எளிது. பசுவுக்கு ஒரு பிடி புல்; பிச்சைகாரனுக்கு ஒரு பிடி சோறு; யாரிடத்திலும் இனிமையாகப் பேசுதல்; இவை எல்லோருக்கும் சுலபம் ஏழைகளுக்குக் கொடுத்தலே அறம். வாய்த்தபோது அறம் செய்யுங்கள். மரணம் வந்தால் விழிப்பீர்கள்! வினைக்கடலை நீந்த, தவமும் அறமுந்தான் தக்க தோணி. உங்களோடு கூடவேவருவது தானத்தின் பயன்ஒன்றே. ஈயாதான் செல்வம், எட்டிமரம் பழுத்ததுபோல, மண் ணோடு மண்ணாக வேண்டியதுதான்! ஆதலால், குளம் வெட்டுங்கள்; சோலைகள் வையுங்கள்; தர்மம் செய்யுங் கள்; ஏழைக்கு உதவுங்கள்; இறைவனை ஏத்துங்கள்.

அன்பு :

அன்பே சிவம்: இது யாருக்கும் தெரியாது. அறிந் தவர்கள், அன்பே சிவமாய் அமர்ந்திருப்பர். எலும்பை விறகாக்கி, இறைச்சியை அறுத்துப் பொசுக்கினாலும் கடவுள் வெளிப்படார்; அன்புடன் உருகி அகங் குளிர்ந்தால் போதும்; கடவுளைக்காணலாம். அன்புடன் ஒருமுறை வழிபட்டாலும் அவன் வழித்துணை யாவான். அன்பர்களுக்கு உள்ளும் புறமும் இருந்து, அவன் அருள் செய்கிறான்.

கல்வி :

இறைவன் திருவடியைப்பற்றிப் படிக்கின்ற படிப்பே படிப்பு. அவனைச் சொற்குற்றம் இன்றித் தொழுங்கள். அவனே, தூய கல்வியாக - அதனால் வரும் சொல்லாக -பொருளாக - எல்லாமாகவும் இருக்கிறான்.

கேள்வி :

கற்றலைக் காட்டிலும் கேட்டல் சிறந்தது. கேட்பதும் இறைவனைப் பற்றியதாக இருத்தல் மேலானது. என்ன தான், நாம் அனுபவங்களால் அறிவை அடையலாமா னாலும், சுட்டிக்காட்டாத வித்தை பயன் படாது. ஆகையால், சிவனடியைப்பற்றிக் கேட்கப்படுகின்ற கேள்வியே கேள்வி. அந்தக் கேள்வியை உடையவர்கள் இறைவன் திருவடியை அணுகி, எக்காலும் இன்புறு வார்கள்.

கல்லாமை :

கல்லாதவர்களுக்கு இறைவன் நம்முடன் கலந்துள்ள கலப்புத் தெரியாது. கல்லாதார் கயவர்; இன்பத்திற்கே உழைப்பவர்கள். அவர்களைப் பார்க்கவும் கூடாது; அவர்கள் சொல்லைக் கேட்கவுங் கூடாது; அவர்களுக்கு ஒன்றும் சொல்லவுங் கூடாது. சிலர் படித்தும் முட்டா ளாயிருப்பார்கள். அவர்களுக்குக் கடவுள்ஞானம் வராது. கற்று, கடவுள் அன்பில் நிற்பவர்களே கணக்கறிந்து கற்றவர்கள்.

நடுவு நிலைமை :

நடுவுநிலையுடையவர்களுக்கே ஞானம் உண்டாம். அவர்களே தேவராவார். நம் முன்னோர் நடுவு நிலைமை நின்றே நல்லவரானார்கள். இறைவன் திருவடியை நினைப்பவர்களே நடுவுநிலையில் நிற்பவர்கள்.

கள்ளுண்ணாமை :

பசு, கழுநீர் கிடைத்தால், குளந்தோறும் தண்ணீர் குடிக்காது. அந்தக் கழுநீரையே நினைத்து உடம்பு இளைத்துபோகும். அதுபோல், சிவானந்தத் தேனை உண்டவர்கள் கள்ளுண்ணார். சுத்த மதுவாகிய சுகானந்தத்தை உண்டால், என்றும் இருக்கலாம். கீழ்மக்களுக்கே உரியது மது. சத்தி உபாசனை செய்பவர்களும் கள்ளுண்டு மயங்குவர். ஞானிகளோ தமக்குள்ளே சிவானந்தத்தேனை உண்பவர்கள். கள்ளுண்பவர்களுக்குச் சிவலோகம், சிவஞானம் இல்லை. கள், கொலை பொய் இவற்றிற்குக் காரணமாக இருப்பது; அறிவை அழிப்பது. ஆதலால் அதனை விடுத்து, உள்ளே ஊறுகின்ற அமுதத்தை உண்டு, ஆசாரியன் திருவடியைப் பற்றி, சமாதியில் இருந்து, ஆருதார யோகத்தைச் செய்யுங்கள்; வழி தோன்றும்,

இரண்டாம் தந்திரம்

இத்தந்திரம் புராண வரலாறுகளேயும், அவற்றின் தத்துவங்களேயும் சுருக்கமாகக் கூறுகிறது. அவை வருமாறு:

பார்வதி கல்யாணம் கயிலேயில் நடந்தது. கூட்டத்தைத் தாங்கமுடியாமல், பூமி வடபக்கம் சரிந்தது; தென்பக்கம் உயர்ந்தது. அதைச் சமப்படுத்த சிவ பெருமான் அகத்தியரைத் தெற்கே அனுப்பினர். அகத்தியர் மூலாதாரத்திலிருந்து குண்டலினியை எழுப்பி பிரம்மரந்திரம், வரை கொண்டுபோனவர்! அவரைக் கொண்டு தெற்கிலும் சைவ சித்தாந்த ஒளியை விளங்கச் செய்வித்தார் என்பது கருத்து.

பூமியில் எட்டுத் தலங்களில் இறைவன் தனது வீரத்தைக் காட்டினர் என்பது புராணம்.

அந்தகாசுரன் உயிர்களே வருத்தி, தேவர்களேயும் துன்புறுத்தினன்; இறைவன் அவனேச் சூலத்தால் குத்திக் கொன்றர் என்பது வரலாறு. (அந்தகாசுரன்-ஒவ்வொருவர் மனத்திலும் உள்ள தீயசத்தி. அது தனக்காக, தன் நன்மைக்காக, எல்லோரையும் வாட்டுகிறது. இறைவன் அத்தீமையை அகற்றினர்)

எனக்கும் ஐந்து தலேகள் உண்டு; நானும் கடவுளே' என்று இறுமாப்பு அடைந்த பிரமனது தலேயைக்கிள்ளி, இறைவன் அக்கபாலத்தைக் கையில் ஏந்தினர் என்பது வரலாறு. (பொருள்; அகங்காரத்தை அடக்கி, உயிர்களே நல்வழியில் திருப்பினர் என்பதே.) அந்தக் கபாலத்திலேயே விஷ்ணுவின் புருவமத்தியிலிருந்து வடிந்த

இரத்தத்தை ஏந்தினர் என்பது வரலாறு. இது உயிர்களையும், அவர்களைப் பெரியவர்கள் என்றும் என்று எண்ணும் ஏனையோர்களையும், உண்மையைக் காட்டி உய்வித்தார் என்பதை விளக்கிறது.

சலந்தராசுரன். வரம் கொடுத்த இறைவனையே கொல்ல வந்தான். இறைவன் காலால் பூமியில் கீறிய வட்டத்தைக் கொண்டு, அவன் தலையை அறுத்தார். உயிர்கள், அறியாமையால் நன்றி செய்தவர்களுக்கே தீங்குசெய்ய முற்படுமென்பதும், அத்தீமை தன்னளவில் நில்லாது எல்லோரையும் பாதிக்குமாயின் வரங் கொடுத்தவரே அத்தீமையை அழிப்பது கடமையும் கருணையும் ஆகும் என்பதும் இதன் கருத்து.

கமலன், கமலாட்சன், வித்யுன் மாலி என்ற மூன்று அசுரர்கள், பொன் வெள்ளி இரும்பு இவற்றாலாகிய மூன்று கோட்டைகளைத் தங்களுக்கு இருப்பிடமாகக் கொண்டு, பறந்துசென்று. ஊர்களை அழித்து வந்தார்கள். இறைவன் அவர்களுடன் போரிட்டு, அவர்களுடைய கோட்டைகளை அழித்தார். அவர்களைத் திருத்தி, வாயில் காவலராவும் வைத்துக் கொண்டார் என்பது வரலாறு. முப்புரம் என்பது, ஆணவம் மாயை கன்மம் ஆகிய மும்மலன்களின் காரியம், அம்மலங்களை இடமாகக் கொண்டு அழிவுச் சத்தியைச் செய்தவர்கள் அசுரர்கள். அம்மலங்களை அழித்து, உயிர்களாகிய அவர்களை இறைவன் உய்யக்கொண்டான் என்பதே இவ்வரலாற்றின் தத்துவம்.

தாருகா வனத்திலுள்ள கர்மப் பிரம வாதி முனிவர்கள் ஏவிய யானையை உரித்து, அதன் தோலை இறைவன் போர்த்திக்கொண்டார். தீயும், தீயுள் எழு சோதியும், வேள்வியும், வேள்விப் பயனும் ஆகிய இவற்றை உரிமையாக உடையவன் சிவனேயாகலின்,

உரிமை உடையவனைக் கொல்லாது என்பதை மேற்படி உயிர்கள் அறிந்திலர்; அதனை அறிவித்து ஆட்கொண்டார் என்பதே இதன் கருத்து.

மார்க்கண்டேயருக்காகச் சிவன் யமனை உதைத்தார் என்பது வரலாறு. இது, மூலாதாரத்தில் குண்டலினியில் இருக்கும் பரம்பொருளைப் பிரம்ம ரந்திரம்வரை கொண்டுபோய்ச் சிவயோகத்தில் இருப்பவர்களுக்கு என்றைக்குமே மரணம் கிடையாது என்பதைக் காட்டுகிறது.

இறைவன், தமது நெற்றிக்கண்ணை விழித்து மன்மதனை எரித்தார் என்பது வரலாறு, காமன் ஒவ்வொரு உயிர்களின் உள்ளத்திலும், பருவகாலத்து உண்டாகும் ஆசையை அடிப்படையாகக் கொண்ட இந்திரிய சுகத்தை எதிர்நோக்கிய ஒரு சக்தி. அது அனைவருக்கும் இடையூறு செய்யும், அந்தச் சக்தியை மனம் நாடாதவாறு யோக நெறியால் அடக்கி ஆண்டு, சுழுமுனையில் யோகாக்கினியைக்கொண்டு நிறுத்தி, ஆசையை அகற்றவேண்டும் என்பதை உணர்த்துவதே இதன் பொதிபொருள்.

கடவுளை நிந்தித்து, தானே கடவுள் என்று எண்ணிய தக்கனை, அவன் யாகம் செய்யும்பொழுதே வீரபத்திரராகச் சென்று, அவன் தலையை வெட்டி, ஆட்டுத் தலையைப் பொருத்தினார் இறைவன் என்பது வரலாறு, உயிர்கள் என்ன தெளிவுடையோராயிருந்தாலும், அதிகாரமலம் தாக்க, அதனால் அறிவு மாறுவார்கள்; ‘‘நானே தலைவன்’’ எண்பார்கள்; தாம் செய்வதெல்லாம் உயர்ந்த காரியம் என்று எண்ணுவார்கள், அவரின் மமதையை அடக்கி அறிவைக் கொடுப்பதே ஆண்டவன் கருணை என்பதைத் தெரிவிப்பது இவ்வீரம்.

இன்னுஞ் சில புராண வரலாறுகள் வருமாறு பார்வதி, இமய அரசன் மகளாகி, இறைவனைப் பூசித்துக் காட்டினுள். (பொருள்: இறைவன் அருமை யானவர் என்று அயரவேண்டாம்; அன்பருக்கு எளிய வராய், பிரம்ம விஷ்ணுக்களுக்கு அருமையானவராய், அக்கினி மலையாய் விளங்கியவர்: பிரமனுக்கு அறிவையும், விஷ்ணுவுக்குச் சக்கரத்தையும் கொடுத்தார்.

இராவணன் கயிலை மலையைத் தூக்க முயற் சித்தான்; இறைவன் அவனை மலையின்கீழ் அழுத்தினர்; இராவணன் அன்பு செய்தான்; இறைவன் அவனுக்கு வாளையும் வரத்தையும் கொடுத்தார்.

சண்டேசுரர் தகப்பன் காலை வெட்டினுர். கடவுளைப் பூசித்தார். கடவுள் மகிழ்ந்து, அவருக்குத்தான் சூடிய மாலை, நிவேதனம் எல்லாம் தந்தார்.

தேவர்கள் வாடிய முகத்துடன் ஓடிவந்து, ''சிவாய நம'' என்று கும்பிட, அவர்களை ''எழுக'' என ஆசிர்வதித்து. அவர்கள் துன்பத்தை மாற்றினுர் இறைவன். எல்லாராலும் தொழப்படும் தகுதி இறைவன் ஒருவனுக்கே உண்டு என்பதையும், அவனே திருத்தி ஆட்கொள்ளும் ஆருள் வள்ளல் என்பதையும் இது விளக்குகிறது,

சக்கரம் பெற்றபொழுது, அதனைத் தாங்கும் ஆற்றல் திருமாலுக்கு இல்லை; அதற்காகச் சிவனைப் பூசித்தார்; சிவன் தனது ஆற்றலைக் கூறுபடுத்தி அளித்தார். அச்சக்கரத்தைத் திருமால் வீரபத்திரர்மீது ஏவினுர்; அது அக்கினியைக் கக்கியதுடன் நின்று விட்டது. இது வரம் தந்த கடவுளே வரத்தைத்தாங்கும், சக்தி தரவேண்டுமென்பதையும், வரத்தைப் பெற்ற

பிறகு உயிர்கள் செருக்குற்ருல் அவற்றை அடக்கி ஆட் கொள்வதும் அவனது கருணையின் நோக்கம் என்பதை யும் அறிவிக்கின்றது.

திருமால் அடிமுடி தேடியும் அறியப்படாமல் இருந் தது, உயிர்களுக்கு இயற்கையாயுள்ள "நானே தலைவன்" என்ற இறுமாப்பால். அந்த இறுமாப்பு அடங்கியபொழுது அவர்களுக்கே அருள் செய்வது இறைவன் வழக்கம். இத்தகைய இறைவன். சர்வ சங்கார காலத்து. எல்லாம் தன்னுள் ஒடுங்க, தான் ஒருவனேயாகி நிற்கிருன். அங்ஙனம் அழிப்பதற்கு; நீரையும் நெருப்பையும் உபயோகப் படுத்துகிருன். திரும்பவும் எல்லாவற்றையும் படைக்கத் தொடங் கிருன்; அதுவே சர்வசிருஷ்டி.

சர்வசிருஷ்டி :

சர்வசிருஷ்டியில், சிவம் தன்னில் இருந்து ஞான சத்தியைப் பிரித்துப் புணர்கிறது; அப்படிப் புணர்ந்த பின், சத்தியிலிருது நாதம் பிறக்கிறது; நாதத்தில் விந்து நாத-பிந்துக்களில், கிரியையும் ஞானமும் ஒத்திருக்க, சதாசிவம் தோன்றும். சதாசிவம் சத்தியுடன்கூடி, சக்தி மாருய், பிரம்மா விஷ்ணு ருத்திரர்களை அதிட்டித்து நின்று, படைத்தல் காத்தல் அழித்தல்களைச் செய்யும். அவர்கள், பிரமனைக் கொண்டு பார்முதற் பூதங்களையும் உயிர்களுடைய புண்ணிய பாவங்களுக்கேற்ப உடல் களையும், போகப் பொருள்களையும் படைத்துக் கொடுப்பார்.

திதி :

திதி என்பது படைக்கப்பட்ட உயிர்கள், தங்க ளுடைய புண்ணிய பாவங்களுக்கு ஈடாக, இன்பத் துன்பங்களை அனுபவிக்க இடையூறு வாராது காப்பது.

சம்ஹாரம் :

சம்ஹாரம் என்மது, ஒயாமல் பிறந்து இறந்து உழல்கின்ற ஆன்மாக்கள் ஒய்வடையும்பொருட்டு. எல்லாவற்றையும் தம்முள் அடக்கிக் கொள்ளுதல் ,அது நித்தியசம்ஹாரம், வைந்தசம்ஹாரம், சுத்தசம்ஹாரம் உய்தசம்ஹாரம் என நால்வகைப்படும்; நித்திய சம்ஹாரம், தூலசரீரத்தையும் சூக்குமசரீரத்தையும் விட்டு, உயிர் ஒன்றியிருக்கும் நிலே; சுருங்கச்சொன்னுல் உறக்கத்திலுண்டாகும் மூடநிலே எனலாம். வைத்தசம் ஹாரமாவது, மாயையும் ஒடுங்க நிற்பது; அது ஜாக்ரா தீத நிலே, சுத்தசம்ஹாரமாவது, மனங் கடந்த நிலேயில் அழுந்தியிருப்பது; அது தொழிலற்ற கேவல நிலே, உய்த்தசம்ஹாரம் என்பது, சிவனது அருளில் தான் அடங்கியிருத்தல்.

திரோபவம் :

திரோபவம் என்பது ஆன்மாவும், இறைவனும் ஒன்ருயிருந்தாலும், ஆன்மா அவனே அறியாத நிலே யாகும் மண் ஒன்றே, குடமும் சட்டியும் பானேயும் ஆகிறது, அதுபோல ஒருவனே எல்லாப் பிறவி களிலும் இருக்கிருன். ஊண் சுவையை நெஞ்சம் அறிந்தும், அது ஊணே மறந்து விடுகிறது; கண், காட்டிய ஒளியை மறந்து விடுகிறது; அதுபோல நமக்குக் காண்பிக்கிற இறைவனே நாம் அறிவதில்லே.

அனுக்கிரஹம் :

இறைவன் உயிர்களே உடல் என்னும் பைக்குள்ளே கட்டிக்கட்டி அவிழ்த்துவிடுகிருன். குயவன் சக்கரத்தில் வைத்த மண்ணேத் தன் மனப்போக்கின்படி செய்வது போல், இறைவன் உலகை அது, இது என ஆக்கு கின்ருன்; இறைவனுக்கு எட்டுக்குணங்கள் உண்டு; அவனே ஆன்மாக்களே அநுக் கிரஹிப்பதற்காக எல்லா

வற்றையும் படைத்தான். ஒன்ருயும், வேருயும், உடனுயும் நிற்கிருன்; கண்ணுள் கருமணியாயிருந்தும் காண்கிருன்.

கர்ப்பக்கிரியை :

குழந்தையைக் கொண்டாடுகிருேம், ஆனுல், அக்குழந்தையைக் கருவுள் ஆக்குபவன் இறைவன் என்பதை அறிவதில்லே, முன்பிறப்பில் நம்மைவிட்டுப் பிரிந்துபோன ஆன்ம தத்துவங்கள் இருபத்தைந்தையும் கூட்டி: இனிவரும் விளேவை எண்ணி, கருவுக் குள்ளேயே பல உதவிகளேச் செய்கிருன். புணர்ச்சிக் காலத்து, இருபாலாருடைய பாசத்தால், பெண் உதரத்தில் ஆன்மா நுழைகிருன்; அப்போதே, காலமும் வாழ்வும் கணிக்கப்படுகின்றன. அந்தக் கரு சுக்கில சோணிதங்களாக ஒடி விழுந்தனவே பூவில் தோய்ந்த வாயு பூமணத்தை உலகினருக்கு உதவுவது போல உயிரினிடமாகக் குவிந்து விரியும் தன்மையில் பிராண வாயு தங்குகிறது. ஆண்கரு மிகின் ருத்திரன்; பெண் கரு மிகின் திருமால்; சமமாகில் பிரமன்; பாய்ந்த கரு உருக்கொள்ளும்பொழுது மனேலயத்தையும் ஒருங்கே பெறுகிறது. விந்து பாய்ந்தபின் தந்தைக்குப் பிராணவாயு ஐந்துமுறை ஒடினுல் குழந்தைக்கு வயது நூறு. நான்கானுல் எண்பது. இவ்வாறு பகுத்தறிந்து பாய்ச்சக்கூடிய வல்லமை யோகிக்குத்தான் உண்டு. பாய்கின்றபோது பாயும் வேகம் குறைந்தால் குழந்தை குள்ளம்; தடைப்பட்டுப் பாய்ந்தால் முடம் நடுவிலேயே அற்றுப்போனுல் கூனம், பாய்கின்ற வேகம் ஆண்களுக் கேயன்றிப் பெண்களுக்கில்லே. விந்து பாய்கின்ற காலத்து. பெண்ணின் உதரத்தில் மலம் தங்கியிருந்தால் குழந்தை மண்டு; சிறுநீர் இருந்தால் ஊமை; இரண்டும் இருந்தால் குருடு. விந்து பாயுங்காலத்து, பிராணவாயு ஆடவனுக்கு வலது நாசி வழியாகச் சென்ருல் ஆண்; இடதானுல். பெண்; அபானவாயு

எதிர்த்துவந்தால், இரட்டைக்குழந்தை; இடது, வலது, இரு நாசிகளின்வழியே காற்றுவந்தால் அலி; இருவருக்கும் பிராணவாயு ஒத்து இயங்கிஞல் குழந்தை அழகாக இருக்கும். குழறுமாஞல் அழகா இராது. பத்துமாதம் கருவளர்ந்து, பருவமாகிப் பிறக்கும். விதை இட்டவனுக்கும் தெரியாது; ஏற்றவளும் அறியாள்; தட்டானுக்குத் தெரியும்; அவன் ஒருவனுக்கும் சொல்லமாட்டான். அந்தக் கருவினுள் உயிருக்கும் காவலாகப் பிரமன் இருக்கிருன். இந்த விசத்திரம் எப்படி!

மூவகை உயிர் :

சத்தியும், சிவமும் விளையாட்டாக உயிரை உடலோடு கூட்டி, மாயையில் பூட்டி சுத்தமாக்கி, சிவமயமாக்கினர். உயிர்கள் விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என மூவகைப்படும்.

விஞ்ஞானகலர், ஆணவ மலம் மட்டும் உடையவர்கள். அவர்களுள், இயற்கையிலேயே விஞ்ஞானகலரும் பரிபாகத்தால் விஞ்ஞானகலர் ஆனவர்களும் ஆக இருதிறத்தார். பின் கண்டவருள், ஆணவத்தில் கட்டுண்டு, மைபூசிய மணிபோல இருப்பவர்கள் விஞ்ஞான கேவலர்; உடலோடு கூடி அதற்குரிய புவனத்தில் வசிப்பவர்கள் விஞ்ஞான சகலர். உடலெடுத்து, இறைவன் கருணைசெய்ய, ஆணவமலத் தடிப்பு நீங்கப்பெற்றவர்கள் விஞ்ஞானசுத்தர்.

இரண்டாமவரான பிரளயாகலர், ஆணவம் மாயை ஆகிய இருமலமுடையோர். அவர்களுள் மூன்று வகையினர் உளர்; பிரளயகேவலர், பிரளயசகலர், பிரளய சுத்தர் என.

மூன்ருமவரான சகலர், ஆணவம் கன்மம் மாயை ஆகியமும்மலங்கள் கூடியவர்கள். அவருள்ளும் சகல கேவலர், சகலசகலர், சகலசுத்தர் என மூன்றுவகையுண்டு.

பாத்திரம்—அபாத்திரம் :

நாம் சிவஞானிகளுக்கே தர்மம் செய்யவேண்டும், எவ்வளவு கொடுத்தாலும், சிவஞானிகளுக்கே கொடுத்தல் நல்லது. நிலமளவு கொடுத்தாலும் நிர் மூடர்களுக்குக் கொடுத்தால், இம்மைக்கும் மறுமைக்கும் துன்பமே விளையும். சீலமும் நோன்பும் இல்லாதோருக் குக் கொடுப்பது, வரட்டுப் புல்லிட்டு, புண்ணுக்கிட்டு, பாலைக்கறந்து குடித்தால் ஒக்கும்! பருவம் கழிந்துசெய்த பயிருமாகும்! அஷ்டாங்கயோக தர்மங்களிலிருந்து ஞானத்தை அடைந்தவர்களுக்கேயல்லாது மற்றவர் களுக்குக் கொடுப்பது பெரும்பிழையாகும்,

தீர்த்தம் :

நமது மனத்திற்குள்ளேயே பல தீர்த்தங்கள் உள்ளன. அவற்றில் முழுகத்தெரியாமல் காடும் மேடும் சுற்றி அலைவர் கள்ளமனதுடையவர்கள்! இறைவனை இடைவிடாது தியானித்தால், கங்கை உள்ளத்துள்ளே பெருகும். கடலில் போட்டதைக் குளத்துக்குள் தேடு வதைப்போல் உடலில் உள்ள பொருளை ஊரூராகத் தேடுகிறார்கள்! அவனது அருள் துணைகொண்டு உடலுக் குள்ளே தேடுக. கருணையால் விளைந்த நீர் உடம்பில் கறுக்கும், சிவக்கும், வெளுக்கும்; நிலம், காற்று எல்லாமாயிருக்கும்!

திருக்கோயில் :

கோயில் அவசியம், கோயிலில் சிவலிங்கத்தைப் பெயர்த்தால் அரசு அழியும், கோயில் மதில்கற்களில் ஒன்றை இடித்துத் தள்ளினாலும், அரசரை வெட்டு விக்கும். முனிவராயினும் பிராமணராயினும் அவர்களை அழிக்கும். கோயில் பூஜை முட்டுப்பட்டால் உலகில் மழை இருக்காது, மன்னர் போர்வலி குன்றுவார்கள்; கன்னம், களவு மிகும். ஒழுக்கங்கெட்ட பிராமணன் கோயிலில் பூசித்தால், வேந்தனுக்கு வியாதி; அந்த

நாட்டுக்குப் பஞ்சம்; இது சத்தியம்! கடவுள் சொன்ன ஆணைமொழி!

அதோமுகதரிசனம் :

தேவர்கள் ஓடிவந்து, ''இறைவா! முறையோ!'' என்று சூரனது வலியைச் சொல்லிப் புலம்பினார்கள். இறைவன், ஐந்து திரு முகத்தோடு அதோமுகமும் கொண்டு ஆறுமுகமாய் ஆறுமுகக் கடவுளை நல்கி, அவரைப்பார்த்து ''சென்று சூரனைக் கொன்றுவா'' என ஆணையிட்டார், இவ்வாறு இறைவன் அதோமுகம் கொண்டதும், கண்டம் கருத்தது எதற்காக என்று உலகவர் அறியமாட்டார்கள்! 'நஞ்சுண்டான் கருத்தது' என்பார்கள். அசுர சக்தியை அழிப்பதற்காக, அவனது திருவுள்ளத்தெழுந்த கோபம் அல்லவா அது! பொய் யுரைக்கும் மனிதர் மெய்யுரைத்தால், தேவர்களையும் அவர்கள் காலில் வணங்கச் செய்வான் இறைவன் என்பதல்லவா இதன் உள்ளுறை!

சிவநிந்தை :

கடவுளை நிந்திப்பவர்கள் இருவகையர்: கடவுள் ஒருவருண்டு; அவர் நம்மிலும் எளியவர், என இலேசாக நினைத்து இகழுபவர் ஒருவர். மற்றவர். நாமே கடவுள் நம்மைவிடக் கடவுள் வேறிலர் என்றெண்ணி இகழுபவர் இவர்களில், அறியாமையால் இகழுபவர் பூனையின்வாய் அகப்பட்ட கிளியைப்போல், வாய்க்கு வந்ததைப் புலம் புவர், மற்றவர், அகம்பாவத்தால், 'கடவுளே நாம்' என எண்ணி, கடவுள் நினைப்பே இலலாதவர். கடவு ளிடம் பொய்ப் பகை கொண்டாலும், அது ஒன்று பத்தாய்ப் பெருகித் தீமைசெய்யும்! கடவுளைப் பகைத்த தேவர், அசுரர் எல்லோரும் அழிந்தனர்!

குருநிந்தை :

ஒரெழுத்தையும் -- அதன் உண்மைப் பெருமையும் சொல்லிக்கொடுத்தவர் குரு. அவரை நிந்தித்தவர்

பூமியில் ஊர் நாயகப் பிறந்தும், சாக்கடையில் கிருமியாகப் பிறந்தும், ஒருயுகம் வருந்துவர், குருமனம் நோகும்வண்ணம் தீமைகளைச் செய்தவர் கீழ்மக்களாகப் பிறந்து வருந்துவர். குரு நிந்தையிலே இந்திரபீடமும், ஆட்சிபீடமும் அசைந்தன. மஹேசுர வடிவமான ஞானிகளை நிந்திப்பவனும் அவ்வாறே வருந்துவான். சிவனடியார்களின் சிந்தை நோகப் பேசியவர், எஞ்ஞான்றும் துன்பம் அனுபவிப்பார்கள்.

பொறையுடைமை :

அடிக்கடி சலனப்படும் சிந்தைக்கு உறுதியளிப்பது பொறுமை: விட்டிலும், பொது இடங்களிலும் கொல்லையிலும், பலவகையிலும் பலரோடும் பழகுகின்ற உயிருக்கு, எல்லையற்ற லயஸ்தானம் பொறுமையே.

பெரியாரைத் துணைக்கோடல் :

எல்லா வகைகளிலும் பெரியார்களைத் துணைக்கொள்ளுதல் நல்லது. நெருப்பிற்பட்ட தளிர்போல மனம்வாடி வதங்கினாலும், பெரியவர்களைத் துணைக்கொண்டால் அது புதுமை அழகு பொருந்தும்; ஆகையால், பெரியோர்களுடன் கூடுவதே பேரின்பம்.

திருமூலர் ''அடியாரோடு கூடச் சிவலோகம் சென்றேன். வாயிற்காவலர் அறிவிக்க, இறைவன், வா! வா!'' என்றழைத்தான், அங்கிருந்த எல்லோரும் மகிழ்ச்சியால் ஒலம் என்று உரக்கக் கூவினர் ! இம்மை மறுமை ஆகிய இரண்டையும் உண்மையாக உணர்ந்த ஞானிகளுடன் உறவாடினேன்; பிறவிச் சுழியை நீந்தினேன்; பேரின்பம் உற்றேன்!'' என்று பெரியாரைத் துணைக்கொண்டதால் விளைந்த பெரும் பயனைப் பேசுகின்றார்கள்.

மூன்றும் தந்திரம்

மனிதன் மனத்தால் உயர்கின்றான். மனத்தை உயர்த்துவது மனிதன் கடமை. மனமும், அதனைக் கருவியாகக்கொண்டு உணர்ச்சிகளைச் சேகரித்துக் கொள்ளும் உயிரும், பெண்டு - பிள்ளை, மாடு - கன்று, சண்டை-சந்தோஷம் என்று பள்ளத்தை நோக்கிப் பாயவும் கூடும். மகிழ்ச்சி, கருணை, அன்பு என்கிற கனி மரங்கள் செறிந்திருக்கின்ற இறைவன் திருவடி என்கிற உச்சியில் ஏறவுங்கூடும். பள்ளத்தில் இறங்கினால், பாவமும் துன்பமும் விளைகின்றன; உச்சியில் ஏறினால், என்றும் அழியாத இன்பம் உண்டாகிறது, மனிதன் எதை விரும்புவான்?என்றும் அழியாத இன்பத்தைத் தானே !அதற்குரிய வழி இறைவனோடு உயிரை ஒன்றே வைக்கின்ற யோகம் ஒன்றே. இந்தயோகத்திற்கு எட்டு உறுப்புகள் உண்டு. அவை யாவன;- இயமம், நியமம் ஆசனம், பிராணயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி.

இயமம் :

இயமம் என்பது; கொல்லாமை, வாய்மை, கள்ளுண்ணாமை அடக்கமுடைமை, நடுவுநிலைமை,பகுத் துண்டல்: தூய்மை முதலிய கட்டுப்பாடுகளை மேற்கொள் ளுதலாம். எட்டுத் திசையும் மேகங்கள் கூடி மழையைக் கொட்டினாலும், இயமத்தில் தவறக்கூடாது. இயமத்தில் உறுதியாய் நின்றவர்கள் சிவபெருமானுடைய சாலோ கத்தை அடைவார்கள். அவர்களுக்கு எது விருப்பமோ அதனை அறிந்து செய்வான் இறைவன்.

நியமம் :

தவம், ஜபம், சந்தோஷம், ஆஸ்திகம், தானம், சிவவிரதம், சித்தாந்தக் கேள்வி, சிவபூஜை, மதி, நாணம் இப்பத்தினையும் தவருது மேற்கொள்ளுதல் நியமம். இவற்றை மேற்கொள்ளும்பொழுது, ஒளியான சிவத்தையும், அதன் ஆற்றலாகிய சத்தியையும் தியானித்தல் அவசியம். நியமத்தில் தவருதவர், முனிவர்கள் எதிர்கொண்டழைக்கச் சிவபதம் சேர்வர்.

ஆசனம் :

ஆசனம் என்ருல் ''இருப்பு'' எனக் கூறலாம். காற்றின் ஒழுங்குக்கும், உடல் நோயற்று நீடு வாழவும், உணர்வு ஒன்றவும் ஆசனங்கள் அவசியம். ஆசனங்கள் பத்மாசனம், பத்திராசனம், குக்குடாசனம், சிம்மாசனம் கோமுகம், சுவஸ்திகாசனம் வீராசனம், சுகாசனம் என எட்டுவகை. இவற்றுள் குக்குடாசனம் ஒழிந்த மற்ற ஏழும் சிறந்தன; உத்தமமாயின. இவையன்றி, ஆசனபேதங்கள் பல. ஆசனங்களில் வல்லவர்கள் வானவர் தலைவராய், முழவும் குழலும் ஒலிக்க, இங்கேயே இருந்து தன்னுள்ளே இன்பம் பெறுவர்.

பிராணுயாமம் :

பிராண- ஆயாமம்: மூச்சுக் காற்றைக் கட்டுதல், மூச்சை அடக்கினுல் மனமும் அடங்கும், அதனை மடை மாறிப் பாய்ச்சிப் பழகினுல், மன ஒருமைப்பாடு உண்டாகும்.

ஒரு ஊரில் ஒரு நாட்டாண்மைக்காரன். அவனுக்கு ஐந்து வேலையாட்கள்; அவனுக்கு ஒரு குதிரை; அது உண்மையானவருக்கு உதவும்; பொய்யானவரைக் கீழே விழச்செய்யும்.

சொந்தக்காரன் நல்லவன்; குதிரை இரண்டு. அவற்றை வீசிப் பிடிக்கும் தந்திரத்தை யாரும் அறியார் குருஉபதேசம் கிடைத்தால் பிடித்து விடலாம். அவை வசப்படும்,

பறவையைக்காட்டிலும் வேகமாய்ச் செல்லும் குதிரை ஒன்று. அதன்மீது ஏறிஞல் கள்ளுண்ணுமலேயே களிப்புறலாம்; துள்ளிநடக்கலாம்; சோம்பல் இல்லாமல் இருக்கலாம். உணர்ச்சியுள்ளோருக்கு உள்ளதைச் சொன்னேம்.

பிராணுயாமத்தியில் பூரகம், கும்பகம், ரேசகம் என மூன்று நிலைகள் உண்டு. பூரகம் : இடது நாசி வழியாக, 16 மாத்திரை காற்றை உள்ளுக்கு இழுத்தல். கும்பகம் இழுத்த காற்றை 64 மாத்திரை காலம் உள்ளுக்கு இருத்துதல். ரேசகம்; 32 மாத்திரை காலம் மிகமெது வாக வெளியேவிடுதல். இப்படி முச்சுக்காற்றை அடக்கி ஆண்டால், பழுத்த உடல் பிஞ்சாகும்; உறுப்பு சிவக்கும் நரை கருக்கும், சாக்காடு இல்லை. கடவுள் அருளைப் பெறலாம். பிராணுயாமம் செய்பவர்கள், தேவர் எதிர் கொள்ள, ''இவன் எங்கள் தலைவன்! தலைவன்!'' எனப் பாராட்ட, இன்பக் கலவியில் என்றும் இருப்பர்.

பிரத்தியாஹாரம் :

விஷயங்களை நோக்கி இந்திரியங்கள் வழியாக ஓடும் மனத்தைத் தடுத்து நிறுத்தல் பிரத்தியாஹாரம். மூலாதாரத்தில் இருக்கும் குண்டலினியில் செஞ்சுடராக இறைவன் எழுந்தருளியிருக்கின்ருன், அவரை நாசிக்குப் பன்னிரண்டங்குலம் கீழாகத் தியானித்துப் பழகினுல் தேகத்திற்கு அழிவில்லை; கடவுள் தானுகவந்து குடியிருப்பார் பிரத்தியாஹாரம் செய்பவருக்கு ரேகை போல் ஒளி தோன்றினுல், அதனைப் பரானந்தம் எனக் கொள்க கழுத்திடத்தில் நிலவொளி விசினுல்

அவனுடைய உடல் ஆநந்த மயமாகும். விழித்த கண் விழித்தபடியே இருக்க மூலாதாரத்திலுள்ள குண்டலினியை எழுப்பி மேற்கொண்டு சென்று பிம்மரந்திரத்தில் நிறுத்திஞல் காலத்தை வெல்லலாம் இவ்வாறு குண்டலினி நிலேயைப் பிரித்து உணரும்பொழுது உண்டாகும் நிலேமைகளேத் தியானித்தல், அதோடு ஒன்ருதல் உள் அதனே நோக்கல் இவை பிரத்தியாஹாரத்தின் பெருமைகளாகும். பிரத்தியாஹாரம் வல்லவர்களுக்கு உலகெல்லாம் உள்ளேயே தோன்றும் அறியாமை நீங்கி ஆண்டவனே அடையலாம் இவன் மோட்சம் அடையுங்காலத்து தேவரெல்லாரும்'' இவன் யார்? யார்?'' எனக் கேட்க சிவன் ''நாமே இவன்'' என்று சொல்ல, எல்லோரும் எதிர்கொள்ள, இறைவனே உண்மையாகக் காணுவர்.

தாரணை.

விஷயசுகத்திலிருந்து மனத்தைத் திருப்புவதோடு சைதன்ய வஸ்துவாகிய கடவுளிடத்து மனத்தை நிறுத்துதல் கோணல் மனத்தை ஒன்ருகக் கட்டி, முதுகந்தண்டோடு பிரம்மரந்திரம் வரை கொண்டுபோய் அதற்கு மேற்பட்ட பெருவெளியில் பார்க்கச் செய்து கண்ணிருந்தும் காணுமல் காதிருந்தும் கேளாமல் இருத்தல் தாரணேயாம் இதில் பழகுவது வாணுள் நீடிக்கும் வழி.

உச்சியில், எல்லாவற்றையும் பேதிக்கும் ஒரு பெண் பிள்ளே இருக்கிருள், மூலத்தில் ஒரு மூர்த்தி இருக்கிருர் அவரைக் கிளப்பி அவளுடன் சேர்த்தால் பாலனுவான்.

காற்றைத் தாரணேயில் அபானமாகக் கீழ்நோக்கிப் போகாமல் எழுப்பி இடை - பிங்கலேகளுக்கு இடையான சுழுமுனேயில் நிறுத்தி மடைவாயில் கொக்குப் போல் இருந்தால் ஓர் ஊழி உயிர் வாழலாம்.

வாயைத் திறவாதவரது மனத்தில் ஒரு மாடு நிற்கிறது வாயைத் திறப்பவர் காற்றை வெளியிலே பாய்ச்சுவார்கள். வாயைத் திறக்காதவர் சுழுமுனை வரையில் காற்றை ஏற்றுவார்கள். அதனால் நெடுங் காலம் வாழ்வார்கள். அப்படிக் காற்றை வெளிப் படுத் தாதவர்களுக்கு நவத்துவாரங்கள் இருப்பினும், அவர் களுக்கு உடல் பள்ளியறை போல. தாரணையாவது நல் வழிப்படுத்துவது; நமன்வரும் வழியை அடைப்பது.

தியானம் :

தியானமாவது இடைவிடாத நினைவு. அது. ஒரு காமி தன்னால் காதலிக்கப்பட்டவளை எப்பொழுதும் எண்ணியிருப்பதைப்போல, இறைவனை எண்ணிக் கொண்டிருப்பதே. காமுகன் அவளை ஆதாரமாகக் கொண்டு நினைவைச் செலுத்துவதைப்போல, இறை வன் திருவடியை ஆதாரமாகக் கொண்டு இவர் மனம் சென்று பற்றுதலால், ஆதாரயோகம் எனவும் கூறப் படும். அம்மனமே, தன் உயிருள் பரமசிவன் திருவடி யைப் பார்ப்பது நிராதாரயோகம் எனப்படும்.

ஞானேந்திரியங்கள் வாயிலாக அறிவூட்டி நம்மைப் பண்படுத்திய பழம்பொருள் ஒன்றுண்டு. அது நம்மை அகண்ட ஒளி காட்டி ஆட்கொண்டது. புருவமத்தியில் காணப்படுகின்ற ஒளியைக் கண்ணாரக் கண்டு கலந் திருந்தால், விண்ணூறு பாயும்; பரம்பொருளைப் பார்க் கலாம். மனவிளக்கை ஏற்றிச் சினவிளக்கை அவித்துத் திரியைத் தூண்டிவிட்டால், அவியாவிளக்கு ஒன்று தோன்றும். எண்ணாயிரம் ஆண்டு யோகமிருந்தாலும், கடவுளைக் கண்டவரில்லை. நமது உள்ளேதேடி நோக் கினால் அவன் கலந்திருப்பது கண்ணாடிபோலத் தெரியும். நிமிர்ந்திருந்து, நுனி மூக்கில் பார்வையை வைத்து, உணர்ச்சி ஒன்றியிருப்பதால், வாட்டமில்லை; உடலுக்கு

அழிவில்லே, சிவனே தனம்; அப்படியிருப்பவருக்குக் காயம் அழியாது; அவருக்கு மணியோசை, கடலோசை, யானேயோசை, குழலோசை, மேகத்தின் இடி, வண்டு ரீங்காரம், சங்கொலி, பேரிகை ஒலி, யாழொலி, தும்பி 'ஒலி இப்பத்துவகை நாதங்களும் கேட்கும். இந்த நாதங்களின் முடிவிலேதான் பராசக்தி விளங்குகிருள். நல்ல யோகமும் அதுவே. தத்துவம் முப்பத்தாறும் கடந்து, மாயையைச் சிதைத்துத் திரு வருளில் பதிந்த அன்பரே நிலேயறிந்தவர். இத் தியானம் செய்பவருக்கு ஏழுபுவனமும் ஏவல் செய்யும்; பராமுதம் திளேக்கும்; உலகெல்லாம் அவனது இடமாகும்.

சமாதி :

தியானத்தில் முதிர்ந்து, இந்திரியங்களும் அந்தக் கரணங்களும் அடங்கி நிற்பதே சமாதி.

சிவசக்திகள் ஒன்றுகூடித் தியானம் மிகுந்தால், அது சமாதியில் கொண்டுவிடும். மனம் ஒய்ந்த இடமே தியானம். மனம் விரிந்த இடமே தியான முதல் கீழ்நிலே யாகிய உலகானுபவம் வரையில். பராகாசத்தில், மேரு வின் தாழ்வரையில், குதிரையைச் சவுக்கால் அடித்து ஓட்டுபவரே ஆகாய கங்கையையும். விந்தியாடவியை யும் கண்டு, உணர்வு ஒன்ருகவே ஒன்றியிருப்பார்கள். இறைவனுேடு ஒன்றிவிட்டால், அதாவது தான் அவன் ஆனுல், சமாதியும் வேண்டாம்!

அட்டமாசித்திகள் :

சமாதியில் நிலேப்பவருக்கு அட்டமாசித்திகள் வந்து பொருந்தும். அவை: அணிமா, லகிமா, மகிமா, பிராப்தி, கரிமா, பிராஹாமியம், ஈசத்துவம், வசித்வம் என்பன. மந்திரமலேயில் (உடல்) ஏறுகின்ற மதியையும் (இடைகலே) பானுவையும் (பிங்கலே) மாற்றி, கட்டுத்

தறிபோலுள்ள சுழுமுனைக் குழியில் களங்கம் அற நிறுத்த வல்லவர்கள், நூலில்லாமல் ஆகாயத்தில் பறக்கலாம். ஓராண்டு சமாதியில் பழகினால் அணிமாதி சித்தி கைகூடும். இது கைவந்தவன் பஞ்சைக் காட்டிலும் இலேசானவனாய் இருப்பான்; அவனை வெல்லமுடியாது.

லகிமா என்பது மிகலேசான தன்மை. இந்தச் சித்தியை அடைந்தவன், பாலைப்போன்ற வெண்மை யான பொருளாய் எங்கும் பரவி, உண்மைப் பொருளை உணருவான். மகிமா என்பது பிரகிருதியைப் பூசித்தலால், ஆகாயம்போல் தேகம் விரிந்து பெரிதாதல். இது சித்தித்தவருக்கு ஞானம், உலகம். பொருள் எல்லாம் தன் வழியாகவே தழைத்திடும். பிராப்தி என்பது எல்லாவற்றையும் இருந்தநிலையிலிருந்து கொண்டே அடைதலாம். கரிமா என்பது போவதும் வருவதும் இன்றிப் பூதங்கள் எல்லாவற்றையும் தன்னுள்ளடக்கி திண்மையாதல். பிராகாமியம் என்பது விளக்கொளி எங்கும் ஊடுருவதுபோல்' பூமியில் முழுகி எழுதல் முதலிய இச்சித்த காரியங்களை முடித்தல், ஈசத்துவம் என்பது இறைவனைப்போல் சிலவற்றை ஐந்தொழில் செய்தல் வசித்வம் என்பது எல்லாவற்றையும் தன்வசப்படுத்தி அடுக்கும் தன்மை. அவர், எங்கும் தானாய்' மலருள் மணம்போல வாழ்வர். அவருக்கு நமன் இல்லை.

சரீரசுத்தி உபாயம் :

உடம்பழிந்தால் உயிரழியும்; ஞானம் சித்திக்காது ஆகலின், உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்து உடம்பை வளர்த்தேன். உடம்பை ஒரு குற்றமான பொருளாக எண்ணியிருந்தேன் உடம்புள் உயிரும் இறைவனும் இருக்கிறார்கள், ஆதலின் உடம்பை நன்கு பாதுகாக்க வேண்டியதாயிற்று. தண்ணீரை வயிற்றுள் நிறைத்துச் சுழற்றி மலத்தைக் கழிப்பவர்களுக்கு உடல்

அஞ்சனம்போலாகும். அந்தியில் சரீரசுத்தியானல் கபம் அற்றுப்போகும்; மத்தியானம் ஆகுமானல் வாதம் வரும்; காலையிலானல், பித்தம் நீங்கும்; நரை திரை வாராது. அண்டம் அணுவானல் அதற்கழிவில்லை;உடல் சுருங்கினல் உயிர் நிலைக்கும், அடிக்கடி பிராணயாமம் செய்தல் இதற்குரிய சிறந்த உபாயம்.

நான்காம் தந்திரம்

இது பதின்மூன்று அதிகாரங்களை உடையது. அவற்றுள் முதலதிகாரம் 'அசபை' என்பது. மந்திரங்களில் தானுகவே இயங்குவதான மூச்சுக்காற்றின் இயக்கத்தை 'ஸோ' என உள்ளுக்கிழுத்து 'ஹம். என்று வெளிவிடுக என விளக்கப் பெறுவதுஇம்மந்திரம்' மூச்சுக்காற்று எல்லாரானும் உள்ளுக்கிழுக்கப்பெற்று வெளியே தள்ளப்பட்டு இயங்கிக்கொண்டேதான் இருக்கிறது. அதில் உள்ளுக்கு இழுக்கும்போது 'அவன்' என இழு, வெளிவிடும் பொழுது 'நான்' என விடு என்று 'அவன் நான்' என்ற இறையுணர்ச்சியையும், தடை நீங்கிய காலத்து அவனே தானுகின்றேன் என்ற பேருணர்ச்சியையும் பிறப்பித்தலால் இந்த மந்திரம் பற்றிய அதிகாரம் முதற்கண் இடம்பெறுகிறது. இது மந்திரம் அல்லாத பெருமந்திரம். ஊமை மந்திரம் பேசாப்பெருவெழுத்து என்றெல்லாம் வழங்கப்பெறும். இதுவே சிவம் சத்தி ஆன்மா என்ற முப்பொருளையும், சிவம் சத்தி ஆன்மா திரோதானம் மலம் என்ற ஐந்து பொருளையும் உணர்த்துவனவாகிய சீபஞ்சாக்கரமாம் என்பதை விளக்குகிறது.

இரண்டாவது திருவம்பலச் சக்கரம். அம்பலம் - சிற்சபையான ஞானசபை; சிதம்பரம். அங்கே ஆனந்தக் கூத்தப்பெருமான் அருட்சத்தியோடு மந்திர வடிவாய் யந்திரத்துள் வீற்றிருக்கும் நிலையை உணர்த்துவது இது இவ்வியந்திரம் மந்தமான பக்குவ முடையவர்களுக்கும் சிவஞானத்தைத் தோற்றுவித்தற்குக் காரணமாயும்,

தீவிரமான பக்குவம் அடைந்தவர்களுக்கு அநுபவப் பொருளாயும், தீவிரதர பக்குவிகட்கு ஆனந்தத்தான மாயும் விளங்குவது. ஆகவே சமய வாழ்வையே பொருந்தாத மந்ததர பக்குவிகளை ஒழித்து ஏனைய மூவர்க்கும் பயன் தருவதாய் அமைந்தது இது.

மக்கள் விரும்புகின்ற இம்மை மறுமைப் பயன்களுக்கு ஏற்ப திருவைந்தெழுத்துக்களை மாறியும், யந்திர வடிவங்கள் வேருயும் அமைந்தமுறை இதனுள் விளக்கம் பெற்றுள்ளது. மனித உருவும், சிவலிங்க உருவும், பூமியும், விண்ணும், பிறவும் சீபஞ்சாக்கரவடிவே என்பதை விளக்குகிறது, பிரணவமும், வேதமும், சிவாலயங்களும் சீபஞ்சாக்கரம் அமைந்த திருவம்பலச் சக்கர வடிவமே என்பதை உணர்த்துகிறது, சிதம்பரத்தில் ஸ்ரீ நடராசப்பெருமானுக்கு வலதுபுறத்தில் பொற்றளங்களால் குறித்துக் காட்டப்பெறுகின்ற 'ரகசிய தரிசனம்' என வழங்கப்பெறும் யந்திரமே சிதம்பர சக்கரமாகிய திருவம்பலச் சக்கரம். அது திருமூலரால் பிரதிஷ்டை செய்யப்பெற்றது என்பதும், யந்திர ஆட்டமே நடராசர் ஆட்டத்திற்கு அடிப்படை என்பதும் உலகறிந்த உண்மை. அச்சக்கரத்தையமைக்கும் முறையும் அதனை உபாசிக்கும் முறையும் விளக்கமாக இதில் கூறப்பட்டுள்ளது.

மூன்ருவது அதிகாரம் அர்ச்சனை. யந்திரத்தில் மந்திரவடிவாக இறைவனை எழுந்தருளிவித்து தியானிக்கத் தொங்குமுன், தியானம் உறுதிப்பட பல வகையான பூக்களைக்கொண்டு, மந்திரங்களை உதடும் அசையாமல் உள்ளத்துள்ளேயே எண்ணி வழிபடும் முறையே அர்ச்சனை என்பது. இதில் அர்ச்சனைக்குரிய பூக்களும், அர்ச்சிக்குமுறையும், அர்ச்சித்தற்குரியார் இவரென்பதும், புறப்பூசையிலிருந்து அகப் பூசைக்குப்போம் உபாயமும், பயனும் உணர்த்தப் பெறுகின்றன.

புறத்தே செய்யும் பூசையெல்லாம் சிவோகம்பாவனை யாகிற அகப்பூசைக்கு வாயிலாமேயன்றிப் புறப்பூசை யால்மட்டும் பயனில்லை என்பதை வற்புறுத்துகிறது.

நான்காவது அதிகாரம் நவகுண்டம். மந்திர செபத் திற்கு அவசியமான ஜப, ஹோம, தர்ப்பணங்களுள் ஓமத்திற்கு இன்றியமையாத யாக குண்டங்களின் இலக் கணத்தையும், எவ்வெக்குண்டம் எவ்வெத்தேவதைகட் குரியது என்பதையும், அவ்வக்குண்டத்துளமைக்கப்படும் அக்கினிகள் எவை என்பதையும் இதுகூறுகிறது. இப்படி அக்கினியை வழிபடுவது மந்திரயந்திர வடிவாகத் தியா னித்த இறைவனை ஒளிப்பிழம்பாகத் தியானிக்கும் உபாயங்களைக் கூறுகின்றது. மற்றும், புறத்தே யாகசாலையில் இடப்படும் நவகுண்டங்களைப் போலவே அகமார்க்கத்தில் ஆறுதார குண்டங்கள் அமைகின்றன என்ற உண்மையையும் உணர்த்துகிறது,

இதுவரை சிவமூர்த்திக்குரிய மந்திரயந்திரங்களைக் கூறி, மேல் சத்திபேதங்களில், திரிபுரைக்கு உரியன வற்றை உணர்த்தும் திரிபுரைச்சக்கரம் என்ற ஐந்தாம் அதிகாரம் அமைந்துள்ளது. இந்த அதிகாரத்துள் முதற்கண் பத்து மந்திரம்வரை, சத்தியே எல்லாமா யிருத்தல் விளக்கப்பெறுகின்றது. அடுத்து இராஜ ராஜேஸ்வரி தியானமும், சண்டிகாதேவி தியானமும், கஜலட்சுமி தியானமும் கூறி, அதற்குமேல் ஞானிகள் எவ்வடிவில் எப்படித் தரிசிப்பார்கள் என்பதை விளக்கு கிறது. பின்பு ஸ்ரீ வித்யாசக்கரம், சோடசாட்சரிவித்யை இவற்றை விளக்குகிறது.

ஆறுவது அதிகாரம் வயிரவிமந்திரம். சக்தனுக் கும் சக்திக்கும் உள்ள இயைபு அநாதி நித்ய சம்பந்த மானபடியால் அவன்மேல் வைத்து அவன் ஆற்றலை- வழிபடுமுறையை உணர்த்துதல் மரபாகலின் வயிரவ

சக்தியான வயிரவியை வழிபடுமுறையைக் கூறி வயிர வரை வழிபடும் உண்மையையும் உணர்த்துகிறது.

ஏழாவது அதிகாரம் பூரணசக்தி. நிறைவிலிருந்து தான் நிறைவு தோன்றும். அங்ஙனம் தோன்றியதால் நிறைவு குறைவுடையது ஆகாது. நிறைவு என்றும் நிறைவே. எங்கும் நிறைவே. இந்த உண்மையை விளக்குவது 'பூரணத்பூர்ணமிதம்' என்று தொடங்கும் உபநிஷத் மந்திரம். அங்ஙனம் நிறைவான பூரண சக்தி காலதேச வேறுபாடின்றி, இயங்குவ நிற்பவான எல்லாப் பொருளிடத்தும் ஒருசேர வியாபித்திருக்கும் நிலையை உணர்த்துகின்றது.

எட்டாவது அதிகாரம் ஆதார ஆதேயம். ஆதாரம் நிலைக்களம். ஆதேயம் - அதில் இருப்பது. இந்த இரண்டற்கும் இயைபினை விளக்குவது இப்பகுதி. சத்தி சிவத்திற்கு ஆதாரம்; சிவம் ஆதேயம். சத்திக்குச் சிவம் ஆதாரம்; சத்தி ஆதேயம். 'உடையாள் உன்றன் நடுவிருக்கும் உடையாள் நடுவுள் நீயிருத்தி' என்ற உண்மையிது. அதனை விளக்கி, இவ்விருவருமே எல்லா வற்றிற்கும் ஆதாரமாக இருத்தலை அறியவைக்கின்றது. பிராசாத யோக நிலைகளையும், அவற்றின் அனுபவத் தையும் உணர்த்துகிறது.

ஒன்பதாவது ஏரொளிச் சக்கரம். இதுவரையில் செப்புத்தகடு முதலியவற்றில் சக்கரம் எழுதிப் புறத்தே வைத்து வழிபட்டு, அதன் வாயிலாக அகமார்க்கத்திற்கு வழிசெய்து கொள்க என்று கூறிவந்த திருமூலதேவ நாயனார், இவ்வதிகாரத்து மூலாதாரம் முதலிய ஆருதா ரங்களில் உள்ள சக்கரங்களையும், அவற்றில் இறைவன் எழுந்தருளியிருப்பதையும், அவரைத் தியானிக்கின்ற முறைகளையும் அறிவிக்கின்ருர்.

பத்தாவது வயிரவச்சக்கரம். வயிரவச்சக்கரத்துள் ஞானமார்க்கத்துக்கு உபகாரப்படுமுறையை உணர்த்திய திருமூலதேவர் ஈண்டு பகைவெல்லுதல் முதலிய இம்மை இன்பத்திற்குக் காரணமான காமியப்பயனையும் உணர்த்த வயிரவராகிய கோபமூர்த்திக்குரிய மந்திரயந்திரங்களை உணர்த்துகின்றார்கள்.

பதினொராவது சாம்பவிமண்டலச் சக்கரம். சிவம் சத்தியுடன் என்றும் பிரியாதே இருக்கும் நிலை சிவலிங்கத்திருமேனி என்பதையும், அது மந்திரவடிவாகவிளங்குவதையும் அறிவிப்பது இப்பகுதி.

பன்னிரண்டாவது புவனாபதிச் சக்கரம். ஸ்ரீவித்தியாமந்திரத்தின் காதிவித்யை இதில் அறிவிக்கப்படுகிறது. மேலும் சிவம் சத்தி சம்பந்தம், அங்காங்கியாயும், குணகுணியாயும் இருப்பது தெரிவிக்கப் பெறுகிறது. இவற்றின் விளக்கங்களில், குருவாயிலாகக் கேட்டால் அல்லாமல் சித்திபெற இயலாதவற்றை மறைத்தே கூறப்பெற்றுள்ளமை சிந்தித்தற்குரியது.

பதின்மூன்றாவது நவாக்கரி சக்கரம். நவாக்கரி மந்திர உத்தாரம் தரப்பெற்றுள்ளது. பஞ்சாட்சர நவாக்கரிமுறையே சுவானுபூதிச்செல்வர்க்கு உகந்தது என்பது உணர்த்தப்பெறுகின்றது. இந்த மந்திரமே காமியத்தையும் முத்தியையும் தரவல்லது என்பது வற்புறுத்தப்பெறுகின்றன.

ஐந்தாம் தந்திரம்

சைவம் :

சுத்த சைவம் அசுத்த சைவம். மார்க்க சைவம். கடுஞ்சுத்த சைவம் எனச் சைவத்துள் நான்கு நிலைகள் உண்டு சத்து, அசத்து, சதசத்து இவற்றைக் கண்டு, அறிவுப் பொருளும் அறிவில்லாப் பொருளுமாகிய இவற்றைச் சாராமல் சுத்தம் அசுத்தம் இவற்றில் தோயாமல் பரத்தை அனவரதமும் சேர்ந்திருப்பவர் சுத்த சைவர் படிக்க வேண்டியவற்றைப் படித்து யோக நெறியில் நின்று ஞானத்தை நண்ணியவர்கள் சைவசித்தாந்திகள். சரியை கிரியை ஆகிய இரண்டில் நிற்பவர் அசுத்த சைவர் மார்க்க சைவர் சிவசாதனங்களாகிய பூசை சாதனம் ஞான சாதனம் சன்மார்க்க சாதனம் இவற்றை முறையாகப் பயிலுபவர் சிவயோகம் பாவனை யிலிருந்து ஆனந்த சத்தியுள்ளே ஆழ்பவர்; இவர் தன்னையும் தலைவனையும் சதாசிவம் எனும் அரசையும் அறிந்து பாசத்தை அகற்றி வீட்டைத் தியானிப்பவர் கடுஞ்சுத்தசைவர் என்பவர், வேடத்தைக் கடந்து இறைவனிடத்திலேயே ஒன்றி நின்று, ஆடம்பரமற்று, ஆசா பாசங்களைச் செற்று, பசுத்துவம் அழிய, சிவ போதகர்களாக இருப்பவர்.

நால்வகை நெறிகள் :

சரியை : நாடு, நகரம், கோயில், குளம் எனச் சுற்றித்திரிந்து, தூய்மையடைந்து, உள்ளக் கோயிலில் இறைவனைக் காணுவதற்கு இது உபாயம். சரியர்கள் பக்தர்கள்; அவர்கள் பக்தி ஒன்றுலேயே ஈடேறுவர்.

இது தாசமார்க்கம் என அழைக்கப்பெறும். அதாவது தொண்டன், தன் எஜமான் கருத்து அறிந்து அவனது வேலையைச் செய்வதுபோன்றது. வேலைகளாவன: விளக்கேற்றுதல், பூக்கொய்தல், மெழுகுதல், பெருக்குதல் முதலியன, இத்தொழில்கள் பாசிக் குளத்தில் கல் எறிந்ததுபோல, சிறிது பாசம் விலகி, உண்மையை ஊரார்க்குக் காட்டும். இதனுல் அடையக் கூடிய முத்தி சாலோகம் எனப்படும்.

கிரியை :- கடவுள் ஒருவரே என்று எண்ணி. அவருடைய திருவடியே தனக்கு அடைக்கலமென்று உறுதிகொண்டு. வினைக்கடலில் சாராது, அவரையே காண்பது கிரியை. கிரியையாளன் அன்புடன் மனம் உருகி இறைவனுக்கான பணிகளை இடைவிடாது செய்து கொண்டு இருப்பான்.

இது சத்புத்ர மார்க்கம் எனப்படும், ஒரு தந்தையிடம் தனயன் பழகுவதுபோல், இறைவனை வந்தித்தும் பந்தித்ததும் போற்றுவது. இறைவனைப் பூசித்தலும், மந்திரங்களை ஜெபித்தலும், வாசித்தலுமாகிய இவை இந்நெறிக்குரிய செயல்கள். இதன் பயன், சாமீப முத்தி அடைதல், இம்முத்தி அடைவதற்கு அன்பு அருளாக நின்று உபகரிக்கும்.

யோகம் :- இது சகமார்க்கம் என்று சொல்லப்படும். இறைவனைத் தோழனுக எணணிச் சுகதுக்கங்களுக்குத் துணையாக்கிப் பழகுவது. இவர்களுக்கு யோகம் போகம் இரண்டும் சித்திக்கும். இதில் நின்றவர்கள் சாரூப முத்தி அடைவர். அதாவது இறைவனைப் போலவே உருவம் அமையப்பெறுவர்.

முன்பு சொல்லிய நெறிகளில் நின்று, நேர்மை தவருது, தடிபோலத் தன்னை இருத்திக்கொண்டு,

பிறர் அடித்தாலும் சொறிந்தாலுங்கூட அறியாமல் இறைவனையே கூடுதல் யோகம். இவ்வாறு ஊழிதோறூழி இருந்தாலல்லது இறைவனை அடையமுடியாது. பூவில் மணம் வந்து சேர்ந்ததுபோல, சீவனுள்ளே சிவ மணம் தோன்றுகிறது. அவர்கள் பதுமையைப்போல் இருந்து பார்க்கவேண்டும். யோகத்திலும் சமயயோகம், விசேஷயோகம், நிர்வாணயோகம், அபிஷேகயோகம் என நான்குவகை. சமயயோகம் பல யோகங்களை நினைத்துப் பார்த்தல் ; விசேஷயோகம் முன்கூறிய அஷ்டாங்கயோகங்கள்; நிர்வாண யோகம் என்பது பரோதயம்; அதாவது பராசத்தியின் உதயம். அபிஷேகயோகம் சித்தியை அடைதல்; சித்தியாவது ஞான சித்தி. இந்தயோகத்தை விரும்பிச் செய்பவர் மெய்த்தவராவர்.

ஞானம் :- இது சன்மார்க்கம் எனப்படும்; தான் அவனாகி மலங்கள் அற்றிருப்பது. சன்மார்க்கருக்கு ஞானமும் நேயமும் சாதனங்களாகும். சன்மார்க்கன் அறிவானும். அறியப்படும் பொருளும், அறிவும் அற்று அறியப்படும் பொருளாய் நிற்பான். இவன் அடையும் முத்தி சாயுஜ்ய முத்தி; இதுவே சைவம்; சிவானந்தம். இதுவே எவ்வகையிலும் சிறந்ததாம். ஞானம் உடையவரே மக்களுட் சிறந்தவர். சித்தம், சிந்திக்கும் செய்கை, இவற்றைச் சார்ந்தவர்களே ஞானிகள்; சன்மார்க்கர்கள்.

ஞானத்தில் ஞானம், ஞானத்தில் கிரியை, ஞானத்தில் சரியை, ஞானத்தில் யோகம் என நான்கு நிலைகள் உண்டு. ஞானச்சமயம், ஞானவிசேடம், ஞான நிர்வாணம், ஞான அபிஷேகம் என்ற நான்குவகை தீக்ஷைகள் இதிலும் உண்டு. ஞானச்சமயம் - தன்னை அறிதல்; ஞான விசேடம் - பரத்தை அறிதல் ; ஞான

நிர்வாணம் - அருள் அறிதல்; ஞானுபிஷேகம் - குருபாத சிந்தனே.

சத்திநி பாதும் :

மேற்கூறிய நால்வகை நெறிகளிலிருந்து ஈடேறிய ஆன்மாக்களுக்குத் திருவருட் சத்தி பதியும்; இதுதான், சத்திநிபாதம் எனப்படும், இதனையே. அவனருளேயே கண்ணுகக் காணல் என்பர். ஒரு குமரி இருட்டில் இருந்தாள்; குருட்டுக்கிழவனேக் கூடவிரும்பினுள்; குருட்டைப் போக்கினுள்; பலகுணங்களேக் காட்டினுள்; மணம் செய்து கெண்டாள். அந்நிலேயில், ஆன்மாவுக்கு அம்மையும் அப்பனுமாக எழுந்தருளி அருள் செய்வான் இறைவன்.

இது மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதரம் என நான்கு வகைப்படும். திருவருள், வினேகளேப்போக்கி, இன்பத்தோற்றத்தை உண்டாக்கி, ஞானவிளக்கத்தை நல்குதல் மந்ததரம். சத்தி அவனுடனேயே கூடியிருத்தல் மந்தம். சத்தி ஏழேழு பிறவியையும் உணரச் செய்து உலக பாசங்களே நீக்க, முதல்வனேக் காணுதல் தீவிரம். சத்தி குருவாக வந்து, குணங்களே நீக்கி, ஞானத்தால் தன்செயல் அறச்செய்து அருள, உயிர் இராப்பகல் அற்ற வெளியில் எல்லாம் ஒடுங்கி ஒருங்கி நிற்றல் தீவிர தரம்.

'உலகில் ஆருறு வகைகளாகப் பல்வேறு சமயங்கள் உள. அவற்றுள் சிவம் அல்லாது கடவுளில்லே; அதனே அடையத் தவமன்றி வேறுவழியில்லே' என்றிருக்கும் சமயமே சிறந்தது. சிவகதியே கதி; மற்றவையெல்லாம் பிறவிக்கு ஏதுவாகிய அவகதி. தேவர்கள் 'ஆறுசமயங் களேயும் அறிந்தோம், சாத்திரம் கற்ருேம்' என்பர். இறைவன் அவரிடத்துப் பொருந்துவதில்லே; பொறுமை உடையாரிடத்தே பொருந்துகின்ருன்; ஓங்காரத்து

உள்ளொளியாயிருக்கின்ருன்; அவனை அகங்காரமற்று, அநுபவநிலையிலிருந்து அறிந்தோரே சமயிகள். உலகிலுள்ள எல்லாச் சமயங்களாயும், சமயக்கடவுளராயும் இருப்பவன் அவனே என அறிய வல்லவரே சைவர்கள். அவன் நமக்கு உய்வைத்தர வகுத்த குருநெறி ஒன்றுண்டு; அதுவே சிவநெறி. இதுதான் தவம், அதுதான் தவம் என்று வாதாடுகிற வம்பர்களைக்கண்டால் அவன் சிரிக்கிருன். எத்தவமானுலும், யார் எங்கே பிறந்தாலும், சமபுத்தி பண்ணுகிறவர்கள் மோட்சத்தை அடையலாம்.

ஆறும் தந்திரம்

சிவகுரு தரிசனம் :

ஆன்மாக்களுடைய பரிபக்குவ நிலைகளுக்கேற்ப, சிவனே குருவாக வந்து அருள்செய்கின்றார். அது தெரியாமல், சில மூடர்கள் மயங்குகிறார்கள், குருவே சிவன் குருவே அரசன்; குருவேஎல்லாம். குரு நமது மனத்தைத் திருத்தி அதில் எழுந்தருளுவார்; குரு இருந்த இடத்தில் சிவனும் அமருகிறார். குரு உருக்கொண்டு இறைவன் வராவிடில் சித்தி- முத்தி இவற்றை ஒருவன் அடைய முடியாது. பக்தி ஞான வைராக்கியங்கள் பரசித்திக்கு வித்து. சிவோகம் பாவனை சேர்தலால் எல்லாம் உண்டாகும். சத்தியின் அருள் இருந்தால், ஞானம் விளைவது எளிது.

குரு காட்ட இறைவன் திருவருளைப் பெற்றேன்; அறிவற்றவர் வாழ்க்கையை மறந்தேன்; பிறவிக்கடலை நீந்தினேன்.

திருவடிப் பேறு :

குருநாதன் வந்து சென்னியில் கைவைத்தார். மனத்தில் அவர்திருவடி மலர்ந்தது. எனக்கு அவர் திருவடி தந்தபொழுதே தலைமையும் தந்துவிட்டார்; ஞான வாளைத் தந்து, அஞ்ஞான வலியை வாட்டினார்; வீட்டுலகத்தை ஆளுமாறு கட்டளையிட்டார்; என்நெஞ்சிலும் கண்ணிலும், தலையிலும் பாதம் பதித்த பரமன் அடியேனை ஆட்கொண்ட விதத்தைச் சொல்ல முடியாது! திருவடிதீக்ஷை செய்து, பெரிய வடிவை எனக்குத் தந்து

விட்டான்! அத்தகைய குரு நாதனை எனது கரு விழி வற்றக் கண்டுகொண்டேன். திருவடி ஞானம் சிவ மாக்கும்; சிவலோகம் சேர்க்கும்; நம்மைச் சிறைப்படுத்தி யிருக்கிற மலத்திலிருந்து மீட்கும்.

திரு மூலர் :

''நான் திருவடி நிழலைச் சேர்ந்தேன், பிரமனும், திருமாலும் அறியாத அழல் வடிவாகிய ஆண்டவன் என் உயிர்கூட்டைக் குலைத்தான். புலன்வழி போகாமல் மனத்தில் திருவடிகளைத் தியானித்தேன். என்னை எப் போதும் இளைக்கச் செய்யும் இருவினைகளை மாற்றினேன் வேதத்தின் அந்தத்தைஅறிந்தேன். மந்திரம், மருந்து, தந்திரம், தானம். அழகு, தூயநெறி எல்லாம் இறை வன் திருவடியே. நான் என்றும், அவன் என்றும், இரு உண்மைகள். அவற்றை முதலில் தனியாகக்கண்டேன். தான் என்ற பூவை அவனடியில் சாத்தினேன். இனி நான்வேறு, அவன் வேறு என்பது நன்று அன்று. என்னைத் தளைப்படுத்தியிருக்கின்ற முப்பத்தாறு தத்து வங்களையும் மாற்றி, அவனுடைய வியாபகத்தில் அடக்கி, சிவமாக்கி, அச்சமறுத்து ஆண்டனன் இறை வன். என்னையும், தன்னையறியாத உயர்ந்த நிலையில் செலுத்தி, சிவமாகிய வியாபகத்துக்குள் அடங்கிய பொருளாகக் காட்டினன். காணுத கண். கேளாத செவி, கோணுதபோகம், கூடாத கூட்டம், நாணுத நாணம், நாதாந்த ஞானம் எல்லாவற்றையும் 'பார்! பார்!' என்று எனக்குக் காட்டிவைத்தான். இப்படியே மவுனம் கைவந்தவர்கட்கு முத்தி, சித்தி, பிரணவோ பாசனை எல்லாம் கிடைக்கப்பெறும்.

இறப்பும், பிறப்பும் நீங்கி, துறந்து தவம் செய்வா ருக்கே' இறைவன் வெளிப்படுவான்; புண்ணிய லோகத்தைக் காட்டுவான். மலபரிபாகம் வந்து, சிவ

னருள் சேர்கின்றகாலத்து, துறவிகளுக்கு இறைவன் சுடரொளிபோலக் காட்சி கொடுப்பான். இறைவன் நல்ல வழிகளையும் படைத்தான்; பக்கத்தில் நெருஞ்சி முள்ளையும் முளைக்கவைத்தான். நெறி வழுவினுல்' நெருஞ்சிமுள் குத்தும்; வழியோடு நடப்பவரை அது என்னசெய்யும்!

உழவன் உழுதான்! வானம் மழை பெய்தது உழுத வயலில் குவளை பூத்தது; தன் மனைவியின் கண் என்று அவ்வயலை உழாமல் விட்டுவிட்டான் உழவன்.

தவம் :

ஒருங்கி, உறுதியான உத்தமருள்ளம் ஒருக்காலும் நடுங்காது. நமன் வாரான். இவர்களுக்கு இரவு பகல் இல்லை; துன்பம் இல்லை. இவர்களே பற்று விட்டவர்கள் உயிர்களும், உலகத் தோற்றமும், தவத்தின் பெருமை யையும்' திருவருளைப் பெற்றவர்களுக்கன்றி வேறு யாருக்கும் தெரியாது. தவம் செய்தவர்களே சிறப்பும், செல்வமும்' பெருமையும் பெற்றவர்கள்; பிறப்பை நீங்கியவர்கள் இத்தகைய தவத்தோரைத் தவருன வழியிலே இழுத்துச் செல்ல, இந்திரன் முதலிய தேவர்கள் வருவார்கள்; வந்தாலும் அவர்கள் மனம் சிவனிடத்திலேயே செறிந்திருக்கும். சண்டையில் யானையும், குதிரையும் அழிந்தன; அமைச்சரும் அரசருங்கூட அழிந்தனர் எப்போதும் யோகிகளே ஞானத்தையும், விருப்பத்தையும் நோக்கி அழியாதிருந் தார்கள். சாஸ்திரங்களை ஒலிக்கூட்டமாக ஒதுகின்ற சழக்கைவிட்டு, ஒரு மாத்திரைக் காலமாவது உள் நோக்குங்கள்; அந்நோக்கு பசுமரத்தாணி போல் பதிந்து உங்கள் பிறவியை நீக்கும். ஞானமார்க்கத்தில் சிறந்திருக்க விரும்பினுல் அவர்களுக்குத் தவம்

அவசியம். சமாதி கைகூடினுல் தவம் வேண்டாம். சகமார்க்கத்திலும், சன்மார்க்கத்திலும் நிற்போருக்குத் தவமே வேண்டாம்.

தவதூஷணம்

பொறிகளின் வழியே புலன்களைச் செலுத்தாதவர் கட்கு. அழிதலும் ஆதலும் இல்லை! கருத்தறிந்து அமைதியாயிருந்தால் அவர்கள் கத்தவேண்டியதில்லை! சமாதி கூடினுலும் அது வேண்டாம்! உலகபாசங்களை விலகிநின்ருல், சுத்தம் வேண்டியதில்லை! செயலற்றிருந் தால் மனமே வேண்டாம்!

தவமும் தவமுடையாராதற்கு ஆதலைப்போல, செய்தவமுடையாருக்கே சித்தம் சிவமாகும்; சிவானு பூதிச் செல்வருடைய உறவு உண்டாகும்; அவர்களே சித்தியும், முத்தியும் எய்துவர்.

சிவனருளிருந்தால் போதும்; செல்வம் பெருகும் ஞானம் மிகும்; பெருந்தன்மை உண்டாம்; இவனே பெரிய தெய்வமாக மாறிவிடுவான்! சிவன் அருளிருந் தால்' வினை நம்மைப் பந்தியாது. சூரியனைக்கண்டதும் சூரியகாந்தம் நெருப்பாம்; சந்திரனைக் கண்டதும் சந்திரகாந்தக்கல் தண்ணீராம்.

அவவேடம்:

ஞானமில்லாதவர் வேடம் பூண்டும் பயனில்லை. அவர்கள் ஈனத்தொழில் செய்து இரந்துண்டு வாழ்வ தால் அவர்கட்கு மானமழிகிறது. ஆகவே ஈனர்கள். வேடத்தை விட்டுவிடுதல் நல்லது. வேஷதாரிகள் உணவுக்காக அவ்வாறு வேஷம் போடுகிருர்கள். உண்மையான துறவிகளோ பிச்சைதான் வாங்கி உண் பார்கள், பொய்வேடம் மெய்வேடம் போலிருந்தாலும், உணர்ந்து நடப்பவருக்கு அதுதான் கதி அளிப்பது.

தவவேடம் :

தவம்மிக்கவர்களே தலையான துறவிகள். தவசிக்குக் குண்டலம், கண்டிகை, சங்கு, ஆறுகட்டி, கப்பரை, பாதுகை, ஆசனம், யோகபட்டம், தண்டம் இப்பத்தும் சாதனங்கள்.

திருநீறு :

நூல் வேதாந்தம்; குடுமி ஞானம்; பார்ப்பது பரம் பொருளை; ஓதுவது ஓங்காரம். திருநீற்றை நிறம் குன்ருதபடி பூசினல் வினைகள் தங்கா; சிவகதி சேரலாம்.

ஞானவேடம் :

ஞானமில்லாதவர் வேடம்பூண்டும் பயனில்லை. கழுமரத்து அடியிலுள்ள நாயைப்போல, சில போலிகள் கத்தித்திரிவார்கள். சிவஞானிகள், கண் முதலிய உறுப்புக்களும், உடம்பும் சாவாமல் செத்துத் திரி வார்கள்.

சிவவேடம் :

சிவனருளால் சிவனுக்கடிமையாய் இருளற்று செயலற்று, தெளிவுடன் இருப்பவரே சிவவேடத்தவர். உடலுக்குப் போட்ட வேடம் உயிருக்கு ஆகாது. உடல் போனல் வேஷம் கழலும். உடலிலே உயிர் உண்மை யென்று அறியாதவர், கடலிலகப்பட்ட கட்டைபோல அலைந்து திரிவர். ஓடும் குதிரைக்கு, சவுக்கைக் கையில் பிடியுங்கள். வேடம் போட்டு என்ன பயன்? வீண் வேடம் வேண்டாம்; சிவபெருமானை அடையுங்கள்; இன்பப்பொருளை எய்தலாம்.

அபக்குவர் :

குருட்டைப் போக்கும் குருவைத் தேடாது அபக்குவனை சீடனும் குருவும் கூடினல், குருடும்

குருடும் கூடிக் குருட்டாட்டம் ஆடினாற்போல், குருவும் சீடனும் குழியில் விழுவர். மனத்தில் மாயக்கண்ணாடி உண்டு. நினைத்தால், நிழலையும் காண முடியாது. அதில் படிந்துள்ள வினைப்பயனாகிய அழுக்கைப்போக்கிக் கொள்ளவும் தெரியாது. இப்படியே காலம்கழிகிறது! வாயொன்று சொல்ல, மனமொன்று சிந்திக்க, நீ ஒன்றும் செய்யாதே!

''உன்னை ஜோதி என்று தெரிந்துகொண்டேன். பிறர் என்னைப் பேய் என்று கூறுகின்றனர்.'' தவம் செய்யாதவர் பிறவியில் கிடந்து உழலுவர். விடிகிறது தெரியாது; வெளியும் தெரியாது; விடிந்த வெளியில் விழிக்கவும்தெரியாது; இவரே அபக்குவரான சீடர்கள்!

பக்குவர் :

வேதமாக, கண்ணாக, குற்றமில்லாத குருநாதரைத் தேடி வழிதெரிந்து கொள்பவர்களே உண்மையான சீடர்கள். தேடிக்கொண்டால், நல்ல குருவாகத் தேடிக்கொள்க; உடல், பொருள், ஆவி மூன்றையும் கொடுக்க எள்ளளவும் பிரியாது நின்று தியானிக்க. சிவபதம் சேரலாம். சத்து, அசத்து இவற்றை எண்ணிச் சிந்தை உருக்கிச் சிவன் அருளைக் குறித்துக்காட்ட, பக்தியுடன் ஞானத்தைப் பெற, பணிந்திருப்பவனே உண்மையான சீடன்.

ஏழாம் தந்திரம்

ஆறாதாரம்

மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்ற ஆறு நிலைகளும் தியான யோகத்திற்குரிய நிலைகள். அவை உடம்பி னுள்ளேயே இருப்பன. மூலாதாரம் என்பது மலங்கழி வாயிலுக்கும், கருக்கழி வாயிலுக்கும் இடையில் முக்கோண வடிவமாக இருப்பது. அம் முக்கோணத்தில் செந்நிறமான தாமரைமலர் ஒன்று உண்டு. இந்த ஆறு நிலைகளையும் அறிந்தவர் சகமார்க்கிகள். இந்த ஆறு ஆதாரங்களிலும் ஐம்பது அக்ஷரங்கள் அங்கங்கே இடம் பெறுகின்றன. ஐம்பத்தொன்ருவது அக்ஷரம் பிரணவம். இதனை உணர்ந்தவர்களே சிவானந்தம் அனுப விப்பவர்கள்.

அண்டலிங்கம் :

உலகம் ஒரு சிவலிங்கமயம். இது நுணுக்கமான கருத்து. சத்தியே பிரபஞ்சமாக விரிகிறது; அது சிவத் திற்கு வடிவமாகிறது. தேவர்களுங்கூட ஞானசொரூப மான நிர்க்குணப்பிரமத்தை அறியாமல், சகுண சிவத் தையே வழிபடுகிருர்கள். காணப்படுகிற ஒளிப் பொருள் களும், படைத்தல் காத்தல் முதலிய தொழில்களைச் செய் கின்றவர்களுமெல்லாம் சிவலிங்க மயமே. கோயிலுள் இருக்கும் சிவலிங்கம் சூட்சும ரூபம்; விமானம் ஸ்தூல வடிவம்; லிங்கமே சிவனது வடிவம். சிவலிங்கத்தை முத்து, பவழம், மாணிக்கம், மரம், கல், விபூதி, மரகதம் அரிசி, பூ, மணல், தயிர், நெய், பால், சாணிமெழுகு, செம்பு, நெருப்பு இவை முதலியவற்ருல் செய்யலாம்.

சிவலிங்கத்தில் அந்தந்த வருணுசிரமத்திற்குத் தக்க வாறு அமைத்துக்கொள்கின்ற முறையை ஆகமம் கூறுகிறது. இந்த உலகம் முழுவதையும் ஒரு லிங்கா காரமாகப் பாவிக்க. பூமி - பீடம்; கடல் - நீராடுமிடம்: மேகம் - அபிஷேககலசம்; நக்ஷத்திரங்கள் - மாலே; வஸ் திரம் - திக்குகள்.

பிண்டலிங்கம் :

நமது உடலே சிவலிங்கந்தான். இந்த லிங்கத்துள் பசு கன்றைத் தேடி வீட்டிற்குள் வருவதுபோல், கனிந்த உள்ளத்துடன் கடவுள் காட்சி அளிக்கிருர்.

சதாசிவலிங்கம் :

சத்தியைத் தன் உருவமாகக்கொண்டு, அதனிட மாக, உலகமே தாஞய் இறைவன் எழுந்தருளியிருக் கிருன். நவந்தரு பேதமான மூர்த்தி பேதங்கள் அனைத்தும் இச் சதாசிவலிங்கத்தினுள்ளேயே அடங் குவன. ''எனக்குள்ளேயே இதனைத் தியானித்துத் தெளிந்திருந்தேன்.'' இந்தலிங்கத்திற்கு இதயம் ஞான சத்தி; சிரசு - ஆதிசத்தி; சிகை - இச்சாசத்தி; கவசம்- கிரியாசத்தி. இந்த லிங்கமே ஓங்கார வடிவம்.

ஆன்மலிங்கம் :

அகார-உகார வடிவமான பிரணவக்கூறுகளே ஆன்ம லிங்கம். பீடம் பிந்து; பிந்துமேல் நாதம். இரண்டும் கலந்ததே ஆன்மலிங்கம். இதனையே சத்தி சிவக் கலப்பு என்பர்.

ஞானலிங்கம் :

மலரின்கண் உள்ள மணம் போல, இறைவன் ஞானமே வடிவமாக ஆன்மாக்களிடம் விளங்குகின்ருன். ஞானமே அவன் வடிவாகலின், அவனை ஞானலிங்கம் என்கிரேம். ஞானமார்க்கத்தில் நின்று. சத்தி சிவம்

இதனுள் எதை ஆதரித்தாலும், அது சிவ வணக்கமே யாம். சிவோகம் பாவனையில் இருப்பவர் இந்த ஞான லிங்கத்தைத் தரிசிப்பர்.

சிவலிங்கம் :

நிலம் முதல் பூதங்கள் எல்லாவற்றிலும் அவ்வ வற்றின் தன்மையாக அமைந்து நின்று, உணர்பவருக்கு அருள் வழங்கும் திருமேனி சிவலிங்கம். பிரம்மரந் திரத்தில் சிவாக்கினி சென்று தாக்கும் மட்டும் உணர்வு பெறுபவர் பரகதி செல்வர். திருமூலர்;- என் ஆசிரியர் எனக்கு உச்சிக்குக் கீழே உள்நாக்குக்கு மேலே வைத்து 'வாய் திறவாமல் நினைத்துக் கொண்டே இரு!' என்று உபதேசித்தார். நான் சந்தேகம் கொண்டலைந்தேன். அவர் சந்தேகத்திற்கு இடமான அழுக்குகளைப் போக்கி ஆட்கொண்டார், ஆதலால், எல்லா உயிர்களிலும் கருக் கொண்டுள்ள இறைவனை நான் தெரிந்துகொண்டேன் அதனுல் என்னை அடிமையாக ஏற்றுக்கொண்டான். எங்களுக்கே பழக்கம் முதிர்ந்தது. நான் நீ என்ற வேறு பாடு அகன்றது. இருவரும் ஒன்ருய்க் கூடியிருந்தோம். இரவு-பகல், உயிர்-உடல், மருள்-தெருள், பொருள்-போகம் என்பன இணைந்த இரண்டு வார்த்தைகள். இரண்டாக இருக்கும்வரை அவரை அறிய வொண்ணுது இரண்டும் ஒன்ருக, அவன் திருவருள் நம்மிடத்தே பதிப் பிக்கப்பட வேண்டும், அந்த அருளாலேயே பிறவாத நெறியைத் தந்தான்; உறவானுன். அருளாகிய கண் இல்லாதவர்க்கு ஒன்றும் தோன்ருது.

சிவபூஜை :

மனமே கர்ப்பக்கிரஹம்; உடம்பு கோயில்; வாய் கோபுரவாசல்; சீவன்சிவலிங்கம்; ஐம்புலன்கள் தூண்டா விளக்கு; தோத்திரப்பாடல் நைவேத்தியம். ஆகவே, சிவனை நமது ஆன்மாவிடமாக ஆவாகித்து, வழிபாடு

செய்ய, அவனே தானேயாகிய நெறி சித்திக்கும். அவனைத் தியானிப்பதும் தோத்திரிப்பதுமே அவனைக் காணும் வழிகள். வழிபட விரும்புகிறவர்களுக்குப் பூவும் நீரும் உண்டு. எளிதில் அவை கிடைத்தும் எத்தனையோ பேர் அது தெரியாமல் அழிகிறார்கள்!

குருபூஜை :

என்னதான் பூஜை செய்தாலும், உடற்பற்று நீங்கிய ஞானிகளுக்கல்லாது அவன் திருவடியைச் சேர முடியாது. திருவடியைச் சேருதலாவது செயலற்றிருத்தல். சூரியகலையும் சந்திரகலையும் இயங்காத சமாதியில் வழிபடுவதே பூஜை.

மகேசுரபூஜை :

இறைவனுக்குக் கொடுத்தது அடியார்களுக்குப் போய்ச் சேராது: அடியார்களுக்குக் கொடுத்தது கடவுளுக்குப் போய்ச்சேரும், ஒரு ஞானி உண்டது மூன்று உலகமும் உண்டதை ஒக்கும். ஆயிரம் வீடு கட்டி அந்தணருக்குக் கொடுப்பதும், ஆயிரம் கோயில் கட்டுவதும் ஒரு ஞானிக்கு உணவு இடுவதற்கு ஒப்பாகாது. அந்தணர் கோடிபேர் உண்பதைக் காட்டிலும், நெற்றியில் நீறிட்ட அடியார் ஒருவருக்கு ஒரு பிடி சோறு கொடுப்பது மேல். சிவனடியார்கட்கு அன்னமருத்தி அவர்கள் உண்ட மிச்சத்தை உண்பதே முத்திக்கு வழி என்று மூலன் மொழிகிறான்.

அடியார் பெருமை :

அடியார்களுக்குத் துன்பமில்லை; அழிவுமில்லை. அவர்களே சிவன்பால் அணுகுதற்குரியவர்கள். எல்லாரினும் மிக்கவர் அவர்களே. சிவனடியார்கட்கு அன்பு செய்து பழகியவரேசிவனுக்கு அன்புசெய்யஉரியவர்கள். அடியார்கள் உச்சிப்போதில் ஒருவேளை மட்டும் பிச்சை எடுத்து உண்டு, இச்சையைவிட்டு, ஏகாந்தத்தில் இருப்

பவர். பிச்சையுங்கூட உடலில் உயிர் தங்க வேண்டிய அளவிற்கே. இப்படி அடியார்கள் இரந்துண்டு தன் கழலே எட்ட வைத்திருக்கிருன் இறைவன். இதனுல், அடியார்கட்கு விருப்பு, வெறுப்பு, பசி இம் மூன்றும் இல்லே. பிச்சைக்கும் போகாமலிருந்த தவசிகளிடம் உலகமே ஒருங்கு வந்து சேரும், சிவ யோகி, உடல் விட்டால், முத்தராய் மீண்டு வராத பெரு நெறியை எய்துவர். சிவஞானிக்கு எங்கும் எதுவும் சிவமாகவே தோன்றும்.

உடல் விட்டபின், ஞானியை, குகையில் சமாதி தான் செய்யவேண்டும். எரித்தால் நாடு எரியும்; நாயும் நரியும் பிடுங்கித் தின்ருல், போர் மூளும். சிவஞானி உடலுக்குத் தீயிடுவது கோயிலுக்கு நெருப்பு வைப்பதை ஒக்கும். அதனுல் மழையற்று, பஞ்சம் உண்டாகும் அரசு அழியும்.

ஒன்பது சாண் ஆழமும், ஐந்துசாண் அகலமும் தோண்டி, அதற்குள் மூன்று சாண் அகலத்தில் மூக் கோணம் செய்து பத்மாசனத்தில் சமாதி செய்க. சமாதிக் குகைக்கு ஏற்ற இடங்கள் தன்மனே, சாலே, குளக்கரை, சோலே, நல்லபூமி, காடு, மலேச்சாரல் என்பன. அதில் முஞ்சிப்புல்லேப் பரப்பி. பஞ்சலோகங்கள் நவமணிகள் எல்லாம்போட்டு, விபூதிகொட்டி, அதன்மேல் வஸ்திரத் தால் சுற்றிச் சமாதி செய்யவேண்டும். பின்னர் பூசையும் சோடோபசாரமும் செய்க.

சூரியன் அண்டத்திலும் பிண்டத்திலும், மனத்திலும் உணர்விலும் உற்ற இடங்களால், அண்டாதித்தன், பிண்டாதித்தன், மனுதித்தன், ஞானுதித்தன் என்று நால் வகை நிலேயை அடைகின்ருன். அண்டாதித்தன் அண்டங்களில் காணப்படும் சூரியன்; அவனே எல்லோருக்கும் ஒளிதந்து ஏழுலகையும் வளர்க்கிருன். அவன் மேருவை வலம் வருகிருன் என்பது இறைவன்

திருவடியை அடைய அவன் செய்யும் தவமேயாம் பிண்டாதித்தன். இறைவன் எண்ணத்துள் எழுந்தருளி யிருப்பதால் மலங்கள் நீங்கி விளங்குகின்ற ஆன்மா. மனுதித்தன். அந்தப் பிண்டாதித்தனுள் விளங்கும் ஆவியாய், ஒளிவடிவாய், உணர்த்தும் கருவியாய் இருப்பது, ஞானதித்தன். பரம்-அபரம் என இரண்டாய் விரிந்த விந்து, பிரிவற்று குறையற்று, அருணோதயம் என உள்ளத்தே விளக்கம் தரும் பரநாதத்தின் செயல். இதனை உணர்ந்தவர்கள் மேலானவர்கள். இந்த ஆதித்தர்கள், எல்லோருக்கும் மேலாய், ஒளி ஊட்டுவதாய் இருக்கும் சிவப்பிரகாசமே சிவாதித்தன். இந்தச் சிவாதித்தனே உலகிலுள்ள எல்லாமாய், அல்லதுமாய் இருக்கும். இந்தச் சிவாதித்தனை அனுப விக்கும் ஆன்மா பல்வேறு நிலையில் புருஷன், சீவன், பசு, போதன் என்ற பல பெயர்களை அடைகிறுன்.

இந்திரியம் அடக்குதல் :

நம்மிடத்திலே ஐந்து மதம்பிடித்த யானைகள் உண்டு; அவற்றைக் கட்டுவது அரிது. பாகனும் இளைத்து, அந்த யானைகளும் இளைத்தால் ஒருவாறு கட்டுப்படும்.

ஐந்து வயல்களில் ஐந்து பறவைகள் மேய்கின்றன. மேய்ப்பவன் ஒருத்தன். பறவைகள் பறந்து செல்லவோ ஒன்பது வழிகள் உண்டு.

காட்டில் ஐந்து சிங்கங்கள் வாழ்கின்றன. அவை இஷ்டப்படி மேய்ந்து, ஐந்து குகைகளில் அடங்கிப் போகும். அந்தச் சிங்கங்களின் பற்களையும், நகங்களை யும் பறித்துவிட்டால் இறைவனை அடையலாம்.

ஒரு ராஜாவிற்கு ஐந்து பிள்ளைகள். ஐந்துபேரும் கோபத்துடன் ஆண்டால், எப்படிக் கப்பம் கட்டிப் பிழைப்பது? ஆதலால், ஐந்து பேரையும் அடக்கிவிட வேண்டும். ஐந்தையும் அடக்கியவரே ஞானிகள்.

அடக்கும் உபாயம் சிவனைத் தியானித்தல். சிவனைத் தியானித்தால் சிந்தை ஒடுங்கும். சிந்தை ஒடுங்க, இந்திரியங்கள் மடங்கும். அதற்கு, சிந்தையடக்கி, சிவத்தியானத்தில் நிலைபெற, சத்குருவை அடைய வேண்டும். சத்குரு தன் திருவடியைத் தந்து நமக்குள்ள தாகங்களைத் தணிப்பவர். அசத்குரு சாப்பாட்டிற்காகப் பொட்டையானவர்கள். வரும்வழி, போம்வழி, மாயா வழி, பெரும்வழி இவற்றைத் தெரிவிப்பவர் குரு. அவர் காட்டும் வழிகள் மலத்தை எரிக்கின்றன. அவர் உரைகள் இருளை எரிக்கின்றன. ஆதலால் குருவே துணை.

இங்ஙனம் குருத்துணையை நாடுபவர்கள் கூடா ஒழுக்கத்தோடு இருத்தல் கூடாது. வெறும் அபிலாஷைகளால் வரும் கேடுகளைக் கண்டு இரங்கி அதிலிருந்து நீங்க வழிதேடவேண்டும். அதற்குச் சில உபதேச மொழிகளை உள்ளத்தில் கொள்ளவேண்டும். அவை:

> மண்ணாசையை மற; உயிர்போனாலும் இறைவனை மறவாதே; முடிந்தவரையில் தியானி; உண்மையே பேசு; யார் இல்லையென்று சொன்னாலும், கடவுள் ஒருவர் உண்டு; ஒன்றே குலம்-ஒருவனே கடவுள்; நல்லதை நினை; உனக்கு யமபயமில்லை; இந்த உடம்பை உதவியாக வைத்துக்கொண்டு கடவுளைத் தோத்திரி; இன்னொரு உடம்பை எடுத்துப் பார்த்துக் கொள்ளுவோம் என்றிருக்காதே! வந்தவேலை இந்த உடம்போடு முடியட்டும்; மரணப் படுக்கையில் நினைக்கத்தக்கது கடவுள் நினைவே; எவன் இறக்குங்காலத்து, கடவுளை நினைக்கிறானோ, அவனுக்குப் பிறப்பு இல்லை; இவ்வுலக வாழ்வு நிலையற்றது; ஆதலால் அவனை எண்ணினால் ஆபத்தில்லை.

எட்டாம் தந்திரம்

ரசம், ரத்தம், இறைச்சி, தோல், மேதை, எலும்பு, வழும்பு, மச்சை, சுக்கிலம் இவை ஒன்று கூடிய உருவமே உடல். இந்த உடம்பு அன்னகோசம். இதனுள், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆநந்தமயம் ஆகிய பஞ்சபேதங்கள். ஞானநிலையில் விஞ்ஞானர், எஞ்ஞானர், அஞ்ஞானர், மெய்ஞ்ஞானர் என நான்கு பேதங்கள் உண்டாகையால், அவர்களுக்கு நான்கு உடல்கள் உண்டு. அவை விஞ்ஞானருக்கு ஆணவமே உடல்; எஞ்ஞானர்க்கு மாயை; அஞ்ஞான ருக்குக் கன்ம உடல்; மெய்ஞ்ஞானிக்குச் சிவமே உடல்.

இந்த உடலோடு கூடிய ஆன்மா ஜாக்கிரம், சுழுப்தி, துரியம்,துரியாதீதம் என்ற நிலை வேறுபாடுகளை எய்துகிறது. இந்த நிலைகளில் கீழாலவஸ்தை, மேலா லவஸ்தை, மத்தியாலவஸ்தை என மூன்று நிலைகள் உண்டு. அவற்றுள், மேலாலவஸ்தை சுத்த நனவாதி பர்வம் என்று அழைக்கப்படும். அதைக்கடந்த பராவஸ் தையும், அதற்கு அப்பாற்பட்ட நிர்மலாவஸ்தையும் உண்டு. நிர்மலாவஸ்தையில் இருப்பவர்களுக்கே ஞானோதயம் ஆகும். அவர்களே ஆறு அந்தங்களையும் கண்டவர். அவர்களுக்குப் பதி, பசு, பாசங்களின் வேறின்மை தோன்றும். அங்ஙனம் தோன்றியவர்களே முக்குற்றங்களும் நீங்கியவர். 'அது-நீ-ஆகிறாய்' என்ற மூன்று பத அனுபவங்கள் அவர்களுக்கு விளையும். சிவ பரம், சீவபரம், சகபரம் என்ற மூன்றின் மேன்மையை உணர்ந்து உய்வர். முத்துரியங்களான சிவ, சீவ, பர

துரியங்களில் நிற்பர். முத்திநிலை மூன்று; சிவமுத்தி, பரமுத்தி, சொரூபமுத்தி. இம்மூன்று நிலைகளை எய்துவர் இங்ஙனம் அனுபவம் முதிர்ந்தவர்கள். 'நீ-அது-ஆகிறாய்' என்ற மூன்று நிலையற்று, 'அது' என்ற ஒன்றில் அமைந்து நிற்கிறது, 'அது' என்ற உணர்ச்சியும் அடங்கிய நிலை ஒன்றுண்டு. அது உள்ளமே உரு என்றும், உருவமே உள்ளமென்றும் அறிதல். இவர்களுக்குப் பள்ளம், மேடு இல்லை; உள்ளமும் இல்லை; உருவமும் இல்லை. இவர்கள் அநுபவம் அலையடங்கிய ஆழ்கடல்போல் சொல்ல முடியாத இன்பநிலையாம்.

தத்துவ ஞானியர் தன்னை அறிந்தவர்கள்; முன் வினையின் முடிச்சை அவிழ்த்தவர்கள் பின்னை வினையைப் பிசைந்து ஒழித்தவர்கள். அவர்கள் செய்வதெல்லாம் அவனருளால்.

ஒன்பதாம் தந்திரம்

பூஜை, நிவேத்தியம், ஜபதபங்கள் எல்லாம் இறைவனுக்கே என்று, சிவந்த மனத்தோடு, குரு மடத்தைக் கண்டவர்களே சிவனைக்கண்டவர்கள். முப்பத்தாறு தத்துவங்களும் விலக, ஞானகுரு எதிர்ப்படுவார்; சிவானந்தம் அளிப்பார். அவருடைய நிலைமையைப் பற்றி நம்மால் பேசமுடியாது. அவர் சிவனே. ஞான குருவைத் தியானிப்பவர்களே இன்ப வீட்டுக்கு உரியவர்கள். மரகதமணியில் விழுந்த மாணிக்க ரேகை போல, அஞ்ஞானம் நிறைந்த உள்ளத்திலே சத்குருவின் சன்மார்க்க உபதேசம் ஒளிவிடும்.

பிரணவசமாதி :

பிரணவத்துள்ளேயே, உரு- அரு முதலிய பேதங்களோடு இறைவன் விளங்குகிருன். அத்தியானமே முத்தி, சித்தி எல்லாம் சேர்ப்பது. அறிவும், அறியப் படுபொருளும் கடந்து பிரணவ சமாதியில் இருக்க; அங்ஙனம் இருக்கின் ஒளிதோன்றும்; அவ்வொளியே ஈசன். அவனிடமிருந்தே எல்லா ஒளிகளும் தோன்றின; எல்லாம் ஒடுங்குகின்றன. பவளம்போலும் ஒளியுடைய பவளத் திருமேனிபடைத்த பரமன் என் இருளை நீக்கி என்னுள் நின்ருன்.

தூலபஞ்சாக்கரம் :

வேதாகமங்கள் அனைத்தும் ஐம்பது எழுத்தே. இந்த ஐம்பது எழுத்துக்களே ஐந்தெழுத்தாயிற்று; இந்த ஐம்பது எழுத்துக்களும். அகர- உகர- மகரங்களாகிய பிரண

வப்படைப்பே. நகர முதலாக யகர இறுதியாக உச்சரிப்பதே ஸ்தூல பஞ்சாக்கரம். இது காலை, மாலை இரு வேளையும் ஆராயத்தக்க மந்திரம். இதனை வாயால் சொல்லியும் தோத்திரிக்கலாம். கடல் சுழியில் அகப்பட்ட கலம்போல. ஐந்தெழுத்தைஎண்ணாதவர் அவதிப்படுவர். இது குரு வழியாகக் கேட்டுச் சிந்திக்கற்பாலது.

சூக்குமபஞ்சாக்கரம் :

'சிவாயநம, என்னும் குளிகையைப்போட்டால் உடல் பொன்னாகும், இந்த எழுத்துக்கள் ஐந்தும் முறையே, சிவன்- சத்தி - சீவன்- மலம்- மாயை இவற்றைக் குறிப்பனவாகும். இதில் இறுதியிலுள்ள மாயையும், மலமும் நீங்கி, சீவன் சிவசத்தியுடன் சேர்ந்தால் ஆன்மாவைப் பாசம் அணுகாது. மலமற்ற உண்மை மந்திரம் ,சிவாய' என்பதே. அதிலும் யகாரமாகிய ஆன்மா தனித்திருந்து தியானிக்கின்ற அந்த வினையும் நீங்க 'சிவ' என்னும் எழுத்தாம். 'சிவ - சிவ' என்று தியானிக்க வாயு உள்ளடங்கும். அதனால் ஒளி உண்டாகும்: திருவருள் விளையும். இதைத்தான் சொல்லமாட்டார் தீவினையாளர்கள் 'நம' என்பதை நாவில் ஒடுக்கி, 'சிவ' என்பதைமட்டும் சிந்தையில் ஏற்றினால், பிறவி அறும்.

அதிசூக்குமபஞ்சாக்கரம் :

சிவாயநம' என்று மன ஒருமைப்பட்டு,அபாய மற, சிவாய-சிவசிவ. என்று இருந்தால் ஆனந்தம் விளையும் வேதம், ஆகமம், எல்லாவற்றையும் ஓதினாலும் சிவ எழுத்தாகிய சிகாரம் ஒன்றினாலேயே அவை அனைத்தும் உள்ளன. ஆதலால் அதனைமட்டும் சந்தேகமற இருந்து சாதித்தால் கரைசேர்ந்த கலம் போல, ஆன்மா ஈடேறும்.

திருக்கூத்து தரிசனம் :

எங்கும் இறைவன் மேனி; எங்கும் சிவசத்தி; எங்கும் ஞானகாசம் எங்கும் சிவமாயிருத்தலால் எங்கும் காணப் படுவதும் அவன் நடனமே; இது அவன் விளையாட்டு. இத் திருக்கூத்து சிவானந்தக் கூத்து, சுந்தரக் கூத்து, பொற்பதிக்கூத்து, தில்லைக்கூத்து, அற்புதக்கூத்து என்று ஐந்து வகைப்படும். சிவானந்தக்கூத்து; முடிவில் லாச் சிவசத்தியோடு ஒன்றியிருந்து சிவம், ஞானம் கடந்து செய்யும் நடனம். இந்தக் கூத்தால் ஐந்து தொழில் ஆகிறது. இவன் கூத்தால் வேதம், ஆகமம், கீதம், அண்டம், பூதம், புவனம், நாதம் எல்லாம் ஆடுகின்றன.

சுந்தரக்கூத்து :

ஏழு அண்டங்களுக்கும் அப்பாற்பட்ட சதா சிவத்தின் உச்சியின் மேல் கருணையே உருவாக,உமை காண ஆடும் கூத்து. அக்கூத்து இங்கே தேவதாரு வனம், தில்லை, திருவாலங்காடு என்ற மூன்று இடங்களில், கொடுகொட்டி, பாண்டரங்கம், கபாலக் கூத்து, ஊழிநடனம், சம்ஹாரம் முதலிய ஐந்துவகைக் கூத்துகள். முனிதாண்டவம் அனவரத தாண்டவம், ஆனந்ததாண்டவம் எனும் எட்டோடு ஆடிக்கொண்டு அமர்ந்திருக்கிருன். சுந்தரக்கூத்து ஆடுமிடம் பரமா ண்டம்· ஆடுகின்ற காலத்து உண்டான உலகமெல்லாம் திரும்பவும் ஆட்டம் ஓய்ந்த காலத்து அவன் அடிக்கீழ் ஒடுங்கும்.

பொற்பதிக்கூத்து :

ஈசான முதலான ஐந்து முகத்தோடு, உரு அரு அரு உரு, என்ற மூன்று நிலையில் நின்று ஆடுவது. இக் கூத்தில் அன்பு வைப்பவர்களுக்கு விம்முதல் வெருமுதல் விழுதல் எழுதல், மெய்சோருதல் தன்னை மறத்தல் இப்

பாடுகள் சரீரத்தில் உண்டாகும். இக்கூத்தை இறைவன் ஐம்பூதங்களிலும் தனித்தனியே நின்று ஆடுகிருன். மேருவாகிய திருவம்பலம்-சுழுமுனை; பூதலம்-இடைநாடி இலங்கை-பிங்கல நாடி.

தில்லைக்கூத்து :

இது அண்டங்களையும், ஆகாசங்களையும் பதியாகக் கொண்டு, சத்தியைத் திருவம்பலமாக்கி, பரஞ்சோதி ஆடும் கூத்து. மிகுந்த குணத்தோடு, மேலான ஆனந்தத்தில் நிறைந்து தென்திசைநோக்கி, இருதயபுண்டரீகத்தில், ஆனந்த வடிவனாய், அம்மையும் தானும் ஆடுகின்ருன் - அவன் ஆட, கையில் உள்ள நெருப்பு, சடை, பாதிமதி,பார், அண்டங்கள் எல்லாம் ஆடுகின்றன. இந்தக் கூத்தை குரு உபதேசப்படி ஆன்மாவினிடமாகக் கண்டு, அவனுடைய ஆடுகின்ற கால், அதில் எழுகின்ற சிலம்போசை, பாட்டு, பலவகையான ஜதி பேதங்கள் இவைகளைத் தரிசித்துத் தீதற்றேன்.

அற்புதக்கூத்து :

உருவின்றி ஆடும் ஆட்டம். அதில் திரிபுரையாகி இமையவள் ஒன்றியிருக்கின்ருள். மாயை, மாமாயை கடந்துநின்ற மகான்கள் காணும்படியாக, எல்லாவற்றையும் கடந்து, அறிவிற்கும் அப்பாலாய் நாயகன் செய்யும் நடம் இது. இன்பமெல்லாம் உமையவள் உரு. அது வெளிப்பட்டு, பின்னர் இரண்டும் ஒன்றி, அற்புதக் கூத்து ஆடுகிறது. புளியைப் பார்த்தவர்களுக்கு வாயில் நீர் ஊறுவதுபோல இத் திருக்கூத்தைத் தரிசித்தவர்களுக்கு அருட்கண்ணீர் சுரக்கும், அறிவில் ஆனந்த அமுது ஊறும். நெருப்பு, உடுக்கை, அக்ஷமாலை, பாசம், அங்குசம், சூலம், கபாலம், இவற்ருேடு அம்மை காண மாநடம் ஆடுகிருரென்று, இக்கூத்தின்

உருவத் தியானம் உரைக்கப்படுகின்றது. இந்த நடனத் திருவுருவே திருவைந்தெழுத்தின் வடிவம்.

நடராஜரது திருவுருவ அமைப்பில், அவரது உடுக்கையிலிருந்து படைத்தலும், அபய ஹஸ்தத்தி லிருந்து காத்தலும், அக்கினிக் கரத்திலிருத்து அழித்த லும், ஊன்றிய பாதத்திலிருந்து மறைத்தலும், தூக்கிய திருவடியிலிருந்து அனுக்கிரஹமும் நடைபெறுகின்றன,

ஆகாசப்பேறு :

ஓம் என்று இறைவனைத் தியானிக்க, உடலே சிதாகாசமாம்; புறஆகாசம், புவனமும் உலகமும்; அக ஆகாசம், சிவஞானம்; சிவாகாசம், பேரொளி. இந்த ஆகாச தரிசனமே திருநடன தரிசனத்தின் முடிந்தபேறு. தத்துவ ஞானத்தின் தன்மை அறிந்த பிற்பாடு உண்மைப் பொருளாகிய கடவுள் வெளிப்படும்.

திருமூலர் : 'நான், தான், என்று பொருளை இரண் டாக எண்ணி எங்கும் அலைந்தேன். முடிவில் நான் - தான் என்ற இரண்டையும் கண்டேனில்லை. நான்-என்ற ஞானத்தையும் கடவுள்தான் கொடுத்தான். அந்த அனுபவம் முதிர. 'நான், என்றது நழுவிப் போயிற்று.

சத்தியஞானநந்தம் :

எல்லாம் பாழாய், இப்படி இருந்தது என்று சொல்லமுடியாத இன்பத்தில் ஈடுபடுவது சத்தியஞான நந்தம்! இந்த ஆநந்த அநுபவம், பாலுள் சுவையும், பழத்துள் ரசமும் அமுதுள் இனிமையும் போல மயிர்க் கால்தோறும் நிறைந்து இனிக்கும். சமயச்சுவடுகளும் அறியாதபடி, காமாதீகாரணங்களெல்லாம் சுழன்று, மூன்று வகையான ஆசைகள் அற்று, இருளற்ற நெறியில் நிற்பவர்களே சொரூப உதயம் பெற்றவர். இப்படிச் சொரூப உதயம் பெற்றவர், துன்பம் இன்பம்

எல்லாவற்றையும் ஒன்ருக எண்ணுவர். இறைவன் காட்டிய வழியிலன்றி, வேறெதிலும் மனத்தை ஈடுபடுத் தார்கள். அவர்களுக்கு, வானம் இடிந்தால் என்ன? கடல் பொங்கிஞல் என்ன? கனல் எரிந்தால் என்ன? அவர்கள், நாதனை நாடி அவன் திருவடியிலேயே ஒன்றி யிருப்பார்கள். சிவதரிசனம் கண்டவர்களுக்கு, போக்கு-வரவு, கேடு-ஆக்கம் ஒன்றுமில்லை, உணர்வு, உயிர், புணர்ச்சி, புலவி எல்லாம் அவனே. மலரில் மணம் போலப் பிரியாதிருக்கின்ற அனுபவம் தோன்றும்.

உயிரும் சிவமும் அபேதமாக ஒன்றியிருக்கும் துரியத்தில், இறைவன் சொரூபமாயிருக்கும் தன்மை முற்றி' அந்தப் பரமுத்தியை, கற்றலும் பற்றலும் ஆகிய தொழிலற்றவர்களே அடையமுடியும்.

சூனிய சம்பாஷணை :

ஆறு தெருக்கள். அவற்றின் முதல் சந்தி. அச் சந்தியில் நான்கு பனைமரங்கள் இருக்கின்றன. ஏற முடியாத ஏணியைச், சாத்தி, அப்பனைகளின்மீது ஏறி, கடல் ஏழையும் கண்டேன்.

கத்தரிவிதை போட்டேன்; பாகல் செடி முளைத்தது. புழுதியைத் தோண்டினேன் பூசனி முளைத்தது. தோட்டலிருத்திலிருந்த குடிகளெல்லாம், இதென்ன ஆச்சிரியமாக இருக்கிறதே என்று என்னைக் கும்பிட்டு ஓடிப்போயினர். ஆஞல், பழுத்தது வாழைப்பழம்.

ஐந்து விதையில் பசுவை விளையவைக்கிற ஒரு வயல் உண்டு. அந்த வயலுடைய தூய்மை யாருக்கும் தெரியாது சிவனருள் இருந்தால், அந்த வயலுக்குள் புகுவது எளிது.

பள்ளிவயல் ஒன்று. பாழ்வயல் இரண்டு; ஆக மூன்று வயல்கள் அந்த மூன்றுக்குள் திருட்டு வயலும்

கலந்து கிடக்கிறது. உள்ள வயலில் உழவு செய்தால். வெள்ளம்சூழ்ந்த வயலில் விளைச்சல் நன்ருக விளையும்.

மூவணை ஏர்; உழுவது மூன்று காணி. அணைகட்டி, தடிபொருந்தும்படி, நாவை அணைகோலி நடுவயலை உழமாட்டார்கள்! காலில் விலங்கிட்டு, களர் நிலத்தை உழுவார்கள்! என்ன அறியாமை!

ஏழு கிணறு; ஏற்றம் இரண்டு; மூத்தவன் இறைக்க இளையவன் பாய்ச்சுகின்ருன். பாத்தியில் பாயாமல், பாழுக்குப் பாய்ந்தால், கூத்தியாள் வளர்த்த கோழி போலாகும்.

பட்டிப்பசு இருபத்துநான்கு. குடிப்பசு பன்னிரண்டு (ஏழும், ஐந்தும்). குட்டிப்பசு குடம் பால் கறக்கும். ஆனல், பார்ப்பானுக்குக் கிடைத்தது பட்டிப்பசுதான்!

ஈற்றுப்பசு இருபத்துநான்கு. ஊற்றுப்பசு கறக்கிற ஒருகுடம் பால்போதும் காற்றுப் பசுவைக் கறந்து நாம் சாப்பிடும்பொழுது, மாற்றுப் பசு வந்தது தெரியாது.

தட்டான் வீட்டில் மச்சு; அதில் ஒரு செம்பாலான மொட்டு மலர்ந்திருக்கிறது; அதில் ஒரு வட்டம்; வட்டத்துள் அமுதம் ஊறிற்று, தட்டான் அதை விடாமல் தடுத்து வைத்திருக்கிருன்.

அரிப்போடுகிற நாத்தங்கால்; சேற்று வயல், அதற்கு ஒப்பந்தமாகக் கொடுப்பதைச் செட்டாகக்கட்டி, நல்ல பசுவைப்பூட்டி, வெள்ளரி விதையை விதைத்தால், அது மேலும் மேலும் விதைகளை உண்டாக்கும்.

உழுது, எருப்போட்டு, விதைத்து, அதைக் கிளறி விட்டு, முளையை வெளியில் வரும்படி செய்து, சோருகவே அறுத்து உண்ண மாட்டாதவர்கள், கஷ்டப்பட்டு நெல்லை அறுக்கிருர்கள்!

மக்கள் வீணைக் களர்நிலத்தை உழுகிறார்கள். அதில் முளைத்த கொடியும் பட்டுப்போம். இது அவர் களுக்குத் தெரிவதில்லையே!

கூப்பிட்டாலும் கொள்ளாத குள்ளநரிக் குகை யோடுள்ள ஒரு கொட்டாரம். அதில் பாசத்தை நெருப் பில்வைத்து எரித்துவிட்டு நெடுநாள் தவம் செய்தால், பெண் வந்து சேருவாள்: அவளுடைய அருளாலே அவள்வீட்டில் சுகமாக வாழலாம்.

ஒருநாள் மலையில் மழை பெய்தது; மான்கன்று துள்ளிற்று; குலைமேல் இருந்த பழம் விழுந்தது. அப் போது, கொல்லன் உலையில் வைத்த இரும்பைப்போல, சூடும் செம்மையும் ஏறவைத்து, அமுதம் பொழிய வைத்தான்!

ஒரு பார்ப்பான் வீட்டில் ஐந்து பால்பசுக்கள். அவற்றை மேய்ப்பவன் கிடையாது; எங்கும் வெறித்துத் திரியும். மேய்ப்பவனும் கிடைத்து, அவற்றின் வெறிப் பும் அடங்கினால், அது பாலாகச் சொரியும்.

காட்டுப்பசு ஐந்து; சிங்கம் பதின்மூன்று; தேமா இரண்டு; திப்பிலி ஒன்பது. இவை தாமாக வசப்படு மானால், மனத்திலுள்ள பகைவர்கள் வலுக்கமாட் டார்கள். அவைகளை வெல்லக்கூடிய உபாயங்கள் உண்டாகும்.

எழுதாத ஏட்டிலுள்ள விஷயத்தை, தெளியாத சிறுமி தெளிந்து சொல்ல, மலராத பூவிலுள்ள மண முள்ள தேனை, பிறவாத வண்டு உண்டது போல்வது நம் ஆனந்தநிலை.

போகின்றன பொய்; புகுகின்றன பொய் விதை: நாவல்பழத்தையும் மேலும் மேலும் வளர்கிற பயிரையும்

ஐந்து பேரும் உண்டு, எரிந்தொழிகின்ற கூறையி லிருந்து வளர்ந்தவர்கள், உய்ந்தார்கள்;

மூங்கிலில் ஒரு வேப்பமரம். வேம்பைச்சேர ஒரு பனைமரம். அப்பனையில் பாம்பு இருக்கிறது. பாம்பைத் துரத்தி விட்டு வேம்பைத் தின்பவர்இல்லை. அதனால் வேம்பு வீணாய் வெடித்துப்போகிறது.

ஒரு காட்டில் பெரும்புலி பத்து; யானை பதினைந்து; விளையாடுகிறவர்கள் பத்துப்பேர்; சாமர்த்தியசாலிகள் ஐந்துபேர்; இன்னும் மூவர், அறுவர், ஐவர்; இவர்களும் இங்கே கூட இருக்கிறார்கள். என்னே வியப்பு;

இந்த ஊரில் இரண்டு கடா இருக்கிறது. அவற் றிற்கு ஒரு இடையன். அந்த இரண்டு கடாவையும் இருத்திப் பிடித்தால் ஒரு கடாவாக மாறிவிடும்.

துணி, சோறு, எண்ணெய், ஆபரணம், அரை ஞாண்கயிறு, வளையல் இவற்றையே பெரிதென்று எண் ணுபவர்கள், பாறைமீது பறக்கும் ஆடையைப்போல் பாழுங்கிணற்றில் விழுவர்.

கொட்டியும் ஆம்பலும் பூத்த குளத்திடை எட்டி, வேம்பு, வாழை, தேன், கற்கண்டு இவையெல்லாம் கலந்து உண்ணமாட்டாதவர்கள், ஐயோ! பாவம்! ஏங்கி நிற்கின்றார்களே!

பொழுது விடிந்ததென்று பறவைகள் ஒலிக்கவும், பெண்விடாது கட்டித் தழுவ, போகத்தை அனுபவிக்கும் அவனுக்கு மயக்கம் நீங்காது. எவன் இந்நிலை மாறிச் சிவநிலை சேருகிறானோ, அவனுக்கு என்றும் நீங்காத இன்பம் உண்டாம்.

மோனசமாதி

மோனசமாதியில் இருப்பவருக்கு, இருந்த நிலேயிலேயே உலகம் முழுதும் தோன்றும்; அவருக்குத் துன்பம் இல்லே. இறைவன் இவரிடத்தில் என்றும் கலந்திருக்கிருன்.

ஆநந்தம் என்பது முகத்துக் கண்ணேக்கொண்டு பார்ப்பதல்ல, அகக் கண்ணேக்கொண்டு பார்ப்பதே எங்காவது மகள், 'அம்மா! அம்மா! அப்பாவோடு என்னவோ செய்தாயே! அந்தச் சுகத்தைச் சொல் என்று கேட்டால் சொல்லுவது எப்படி பார்ப்பவர்களுக்கு, காஞ்சிரம்பழம் அழகாய்த்தான் இருக்கிறது தின்றவரே அதன் சுவையை அறிவார்கள். ஒரு பெண்ணின் அழகையும் குணத்தையும் கொண்டவனே அறிவான். மற்றவர் எப்படி அறிவர்?'' ஆதலால் நான், கொஞ்சங்கூடச் சோராதபடி. தனித்திருந்து ஆராய்ந்து. பதருமல் கதருமல். கற்பனேகளெல்லாம் கடந்து. சுத்த சூனியத்திலே சிவத்தினுடைய திருவடியில் ஒதுங்குகிறேன் சிவகதியை உணர்ந்தேன். பலயுக முடிவைக் கண்டு கொண்டிருக்கிறேன்.''

அலேயில்லாத ஆழ்கடல்போல, சிந்தை தெளிந்தவருக்கே சிவன் வெளிப்படுவான், இறைவன் திருவடி அடைந்த சிவஞானியருக்கு மனம் என்ற கருவி இல்லே ஆதலால் குற்றமில்லே; நற்றமில்லே; மானம் இல்லே; அபிமானல்லே; குணமில்லே; குலமில்லே; நலமில்லே; எல்லாம் இறைவனே. ஆதலால் கடவுளும் நானும் ஒன்றினேன். எந்த மார்க்கங்களும் எனக்கு வேண்டாம் ஆதலால், என்னே யாரும் அமட்டமுடியாது. சீருடன் திரிந்துகொண்டே இருப்பேன்; நமசிவாய என்றபழத்தைத் தின்றுவிட்டேன்; மிகமிக இனித்துக்கொண்டே இருக்கிறது தாயுண்டு; தந்தை உண்டு; நானுண்டு; மூவரும் ஒரு

வரானேம். ஆதலால், எமன் வந்தால் ஞானவாளை எடுத்து வெட்டுவேன். சிவன் வந்தால் கூடவே போய் விடுவேன். சிவன் என்னுடைய பிணக்கைத் தீர்த்தான். அந்த நிலையில் அவனேடு அடைந்த அனுபவம். கரும்பும் தேனும் கலந்த ஒரு காயத்தில், அரும்பும் கந்தமும் போல், ஆநந்தம் உண்டாயது. அதனை விரும்பிக்கண்டேன். கண்ட பிறகு கரும்பு கைத்தது! தேன் புளித்தது! விரிந்த மனம் குவிந்தது! தவம் குவிந்தது! வாயு குவிந்தது! மனங்கடந்த முத்தி விளைந்தது! பேச்சற்ற நிலை பிறந்தது! எண் எழுத்து பண். திறன், கண், காட்சி எல்லாம் அவனே. அவனைச் சித்தத்துள்ளே சிந்தித்தால், நமக்கு ஒரு ஊதியப் பொருளாக நம்மை அவன் ஆட்கொள்வான்.

வாழ்கவே வாழ்கஎன் நந்தி திருவடி
வாழ்கவே வாழ்க மலமறுத் தான் பதம்
வாழ்கவே வாழ்கமெய்ஞ் ஞானத் தவன் தாள்
வாழ்கவே வாழ்க மலமிலான் பாதமே.

அதிகார அட்டவணை

[எண் பக்க எண்]

ஒன்பதாம் தந்திரம் 431

உ
சிவமயம்

திருமூலர் அருளிச்செய்த

திருமந்திரம் மூலம்

விநாயகர் காப்பு

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்து இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

சிறப்புப்பாயிரம்

கடவுள் வாழ்த்து

ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள்
நின்றனன் மூன்றினுள் நான்குணர்ந் தான்ஐந்து
வென்றனன் ஆறு விரிந்தனன் ஏழும்பர்ச்
சென்றனன் தானிருந் தானுணர்ந் தெட்டே. 1

போற்றிசைத் தின்னுயிர் மன்னும் புனிதனை
நாற்றிசைக் கும்நல்ல மாதுக்கு நாதனை
மேற்றிசைக் குள்தென் திசைக்கொரு வேந்தனுங்
கூற்றுதைத் தானையான் கூறுகின் றேனே. 2

ஒக்கநின் றானை உலப்பிலி தேவர்கள்
நக்கனென் றேத்திடு நாதனை நாடொறும்
பக்கநின் றார் அறி யாத பரமனைப்
புக்குநின் றுன்னியான் போற்றிசெய் வேனே. 3

2

அகலிடத் தார்மெய்யை அண்டத்து வித்தைப்
புகலிடத் தென்றனைப் போதவிட்டானைப்
பகலிடத் தும்இர வும்பணிந் தேத்தி
இகலிடத் தேஇருள் நீங்கிநின் றேனே. 4

சிவனொடொக் குந்தெய்வம் தேடினும் இல்லை
அவனொடொப் பார்இங்கு யாவரும் இல்லை
புவனம் கடந்தன்று பொன்னொளி மின்னுந்
தவனச் சடைமுடித் தாமரை யானே. 5

அவனை ஒழிய அமரரும் இல்லை
அவனன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை
அவனன்றி மூவரால் ஆவதொன் றில்லை
அவனன்றி ஊர்புகு மாறறி யேனே. 6

முன்னையொப் பாயுள்ள மூவர்க்கு மூத்தவன்
தன்னையொப் பாயொன்றும் இல்லாத் தலைமகன்
தன்னை அப் பாஎனில் அப்பனு மாய் உளன்
பொன்னையொப் பாகின்ற போதகத் தானே. 7

தீயினும் வெய்யன் புனலினும் தண்ணியன்
ஆயினும் ஈசன் அருள்அறி வார்இல்லை
சேயினும் நல்லன் அணியன்நல் லன்பர்க்குத்
தாயினும் நல்லன்பின் தாழ்சடை யோனே. 8

பொன்னால் புரிந்திட்ட பொற்சடை என்னப்
பின்னால் பிறங்க இருந்தவன் பேர்நந்தி
என்னால் தொழப்படும் எம்இறை மற்றவன்
தன்னால் தொழப்படு வார்இல்லை தானே. 9

தானே இருநிலந் தாங்கிவிண் ணாய்நிற்கும்
தானே சுடும்அங்கி ஞாயிறும் திங்களும்
தானே மழைபொழி தையலு மாய்நிற்குந்
தானே தடவரை தண்கடல் ஆமே. 10

அயலும் புடையும்எம் ஆதியை நோக்கில்
இயலும் பெருந்தெய்வம் யாதுமொன் றில்லை
முயலும் முயலில் முடிவுமற் றுங்கே
பெயலும் மழைமுகில் பேர்நந்தி தானே. 11

கண்ணுத லான்ஒரு காதலின் நிற்கவும்
எண்ணிலி தேவர் இறந்தார் எனப்பலர்
மண்ணுறு வார்களும் வானுறு வார்களும்
அண்ணல் இவன்என் றறியகி லார்களே. 12

மண்ணளந் தான்மல ரோன்முதல் தேவர்கள்
எண்ணளந் தின்னம் நினைக்கிலார் ஈசனை
விண்ணளந் தான்தன்னை மேலளந் தாரில்லை
கண்ணளந் தெங்கும் கடந்துநின் றானே. 13

கடந்துநின் றான்கம லம்மல ராதி
கடந்துநின் றான்கடல் வண்ணன்எம் மாயன்
கடந்துநின்றான் அவர்க் கப்புறம் ஈசன்
கடந்து நின்றான் எங்கும் கண்டுநின் றானே. 14

ஆதியு மாய்அர னாய்உட லுள்நின்ற
வேதியு மாய்விரிந் தார்ந்திருந் தான்அருட்
சோதியு மாய்ச்சுருங் காததோர் தன்மையுள்
நீதியு மாய்நித்த மாகிநின் றானே. 15

கோது குலாவிய கொன்றைக் குழற்சடை
மாது குலாவிய வாள்நுதல் பாகனை
யாது குலாவி அமரருந் தேவருங்
கோது குலாவிக் குணம்பயில் வாரே. 16

காயம் இரண்டுங் கலந்து கொதிக்கினும்
ஆயங் கத்தூரி அதுமிகும் அவ்வழி
தேசங் கலந்தொரு தேவனென்று எண்ணினும்
ஈசன் உறவுக்(கு) எதிரில்லை தானே. 17

அதிபதி செய்து அளகை வேந்தனை
நிதிபதி செய்த நிறைதவம் நோக்கி
யதுபதி யாதரித் தாக்கம தாக்கென
இதுபதி கொள்என்ற எம்பெரு மானே. 18

இதுபதி ஏலங் கமழ்பொழில் ஏழும்
முதுபதி செய்தவன் மூதறி வாளன்
விதுபதி செய்தவன் மெய்த்தவம் நோக்கி
அதுபதி யாக அமருகின் றானே, 19

முடிவும் பிறப்பையும் முன்னே படைத்த
அடிகள் உறையும் அறனெறி நாடில்
இடியும் முழக்கமும் ஈசர் உருவங்
கடிமலர்க் குன்றம் மலையது தானே. 20

வானப் பெருங்கொண்டல் மாலயன் வானவர்
ஊனப் பிறவி ஒழிக்கும் ஒருவனைக்
கானக் களிறு கதறப் பிளந்தஎம்
கோனைப் புகழுமின் கூடலு மாமே. 21

மனத்தில் எழுகின்ற மாயநன் னாடன்
நினைத்த தறிவன் எனில்தான் நினைக்கிலர்
எனக்கிறை அன்பிலன் என்பர் இறைவன்
பிழைக்கநின் றார்பக்கம் பேணிநின் றானே. 22

வல்லவன் வன்னிக் கிறைஇடை வாரணம்
நில்என நிற்பித்த நீதியுள் ஈசனை
இல்என வேண்டா இறையவர் தம்முதல்
அல்லும் பகலும் அருளுகின் றானே. 23

போற்றிசைத் தும்புகழ்ந் தும்புனி தன்னடி
தேற்றுமின் என்றும் சிவனடிக் கேசெல்வம்
ஆற்றிய தென்று மயலுற்ற சிந்தையை
மாற்றிநின் றார்வழி மன்னிநின் றானே. 24

பிறப்பிலி பிஞ்ஞகன் பேரரு ளாளன்
இறப்பிலி யாவர்க்கும் இன்பம் அருளும்
துறப்பிலி தன்னைத் தொழுமின் தொழுதால்
மறப்பிலி மாயா விருத்தமும் ஆமே. 25

தொடர்ந்துநின் ருனைத் தொழுமின் தொழுதால்
படர்ந்துநின் ருன்பரி பாரகம் முற்றுங்
கடந்துநின் ருன்கம லம்மலர் மேலே
உடந்திருந் தானடிப் புண்ணியம் ஆமே. 26

சந்தி எனத்தக்க தாமரை வாண்முகத்(து)
அந்தமில் ஈசன் அருள் நமக் கேயென்று
நந்தியை நாளும் வணங்கப் படும் அவர்
புந்தியின் உள்ளே புகுந்துநின் ருனே. 27

இணங்கிநின் ருன்எங்கு மாகிநின் ருனும்
பிணங்கிநின் ருன்பின்முன் ஞகிநின் ருனும்
உணங்கிநின் ருன்அம ராபதி நாதன்
வணங்கிநின் ருர்க்கே வழித்துணை யாமே. 28

காணநில் லாய்அடி யேற்குற வாருளர்
நாணநில் லேன்உன்னை நான்தழு விக்கொளக்
கோணநில் லாத குணத்தடி யார்மனத்(து)
ஆணியன் ஆகி அமர்ந்துநின் ருனே. 29

வானின் (று) அழைக்கும் மழைபோல் இறைவனுந்
தானின் (று) அழைக்குங்கொல் என்று தயங்குவார்
ஆனின்(று) அழைக்கும் அதுபோல்என் நந்தியை
நானின்(று) அழைப்பது ஞானம் கருதியே. 30

மண்ணகத் தான்ஒக்கும் வானகத் தான்ஒக்கும்
விண்ணகத் தான்ஒக்கும் வேதகத் தான்ஒக்கும்
பண்ணகத்(து) இன்னிசை பாடலுற் ருனுக்கே
கண்ணகத்தே நின்று காதலித் தேனே. 31

தேவர் பிரான்நம் பிரான்திசை பத்தையும்
மேவு பிரான்விரி நீர்உல கேழையுந்
தாவு பிரான்தன்மை தானறி வார்இல்லை
பாவு பிரான்அருள் பாடலும் ஆமே. 32

பதிபல ஆயது பண்டிவ் வுலகம்
விதிபல செய்தொன்று மெய்ம்மை உணரார்
துதிபல தோத்திரஞ் சொல்லவல் லாரும்
மதியிலர் நெஞ்சுள் வாடுகின் றாரே. 33

சாந்து கமழும் கவரியின் கந்தம்போல்
வேந்தன் அமரர்க் கருளிய மெய்ந்நெறி
ஆர்ந்த சுடரன்ன ஆயிர நாமமும்
போந்தும் இருந்தும் புகழ்கின் றேனே. 34

ஆற்றுகி லாவழி யாகும் இறைவனைப்
போற்றுமின் போற்றிப் புகழ்மின் புகழ்ந்திடில்
மேற்றிசைக் கும்கிழக் குத்திசை எட்டொடு
மாற்றுவன் அப்படி ஆட்டவும் ஆமே. 35

அப்பனை நந்தியை ஆரா அமுதினை
ஒப்பிலி வள்ளலை ஊழி முதல்வனை
எப்பரி சாயினும் ஏத்துமின் ஏத்தினல்
அப்பரி(சு) ஈசன் அருள்பெற லாமே. 36

நானும்நின்(று) ஏத்துவன் நாடொறும் நந்தியைத்
தானும்நின் றுன்தழல் தானெக்கும் மேனியன்
வானில்நின் றார்மதி போல்உடல் உள்உவந்(து)
ஊனில்நின் றங்கே உயிர்கின்ற வாறே. 37

பிதற்றொழி யேன்பெரி யான்அரி யானைப்
பிதற்றொழி யேன்பிற வாஉரு வானைப்
பிதற்றொழி யேன்எங்கள் பேர்நந்தி தன்னைப்
பிதற்றொழி யேன்பெரு மைத்தவன் நானே. 38

வாழ்த்தவல் லார்மனத் துள்ளுறு சோதியைத்
தீர்த்தனை அங்கே திளைக்கின்ற தேவனை
ஏத்தியும் எம்பெரு மான்என் றிறைஞ்சியும்
ஆத்தம்செய்(து) ஈசன் அருள்பெற லாமே. 39

குறைந்தடைந்(து) ஈசன் குரைகழல் நாடும்
நிறைந்தடை செம்பொனின் நேரொளி ஒக்கும்
மறைஞ்சடம் செய்யாது வாழ்த்தவல் லார்க்குப்
புறஞ்சடம் செய்வான் புகுந்துநின் றானே. 40

சினம்செய்த நஞ்சுண்ட தேவர் பிரானைப்
புனம்செய்த நெஞ்சிடைப் போற்றவல் லார்க்குக்
கனம்செய்த வாள் நுதல் பாகனும் அங்கே
இனம்செய்த மான்போல் இணங்கிநின் றானே. 41

போயரன் தன்னைப் புகழ்வார் பெறுவது
நாயகன் நான்முடி செய்தது வேநல்கு
மாயகம் சூழ்ந்து வரவல்ல ராகிலும்
வேயன தோளிக்கு வேந்தொன்றுந் தானே. 42

அரனடி சொல்லி அரற்றி அழுது
பரனடி நாடியே பாவிப்ப நாளும்
உரனடி செய்தங் கொதுங்கவல் லார்க்கு
நிரனடி செய்து நிறைந்துநின் றானே. 43

போற்றிஎன் பார்அம ரர்புனி தன்அடி
போற்றிஎன் பார்அசு ரர்புனி தன்அடி
போற்றிஎன் பார்மனி தர்புனி தன்அடி
போற்றிஎன் அன்புள் பொலியவைத் தேனே. 44

விதிவழி அல்ல(து)இவ் வேலை உலகம்
விதிவழி இன்பம் விருத்தமும் இல்லை
துதிவழி நிற்றலும் சோதிப் பிரானும்
பதிவழி காட்டும் பகலவன் ஆமே. 45

அந்திவண் ணாஅர னேசிவ னேஎன்று
சிந்தைசெய் வண்ணம் திருந்தடி யார்தொழ
முந்திவண் ணாமுதல் வாபர னேஎன்று
புந்தி வண்ணன்எம் மனம்புகுந் தானே. 46

மனையுள் இருந்தவர் மாதவர் ஒப்பர்
நினைவுள் இருந்தவர் நேசத்துள் நிற்பர்
பனையுள் இருந்த பருந்தது போல
நினையாத வர்க்கில்லை நின்இன்பம் தானே. 47

அடியார் பரவும் அமரர் பிரானை
முடியால் வணங்கி முதல்வனை முன்னிப்
படியார் அருளும் பரம்பன் எந்தை
விடியா விளக்கென்று மேவிநின் றேனே. 48

பரைபசு பாசத்து நாதனை உள்ளி
உரைபசு பாசத் தொருங்கவல் லார்க்குத்
திரைபசு பாவச் செழுங்கடல் நீந்திக்
கரைபசு பாசங் கடந்தெய்த லாமே. 49

சூடுவன் நெஞ்சிடை வைப்பன் பிரான்என்று
பாடுவன் பன்மலர் தூவிப் பணிந்துநின்(று)
ஆடுவன் ஆடி அமரர்பி ரான்என்று
நாடுவன் நான்இன்(று) அறிவது தானே. 50

வேதச்சிறப்பு

வேதத்தை விட்ட அறம்இல்லை வேதத்தின்
ஓதத் தகும்அறம் எல்லாம் உளதர்க்க
வாதத்தை விட்டு மதிஞர் வளமுற்ற
வேதத்தை ஓதியே வீடுபெற் றார்களே. 51

வேதம் உரைத்தானும் வேதியன் ஆகிலன்
வேதம் உரைத்தானும் வேதா விளங்கிட
வேதம் உரைத்தானும் வேதியர் வேள்விக்காய்
வேதம் உரைத்தானும் மெய்ப்பொருள் காட்டவே. 52

இருக்குரு வாம்எழில் வேதத்தின் உள்ளே
உருக்குணர் வாயுணர் வேதத்துள் ஒங்கி
வெருக்குரு வாகிய வேதியர் சொல்லுங்
கருக்குரு வாய்நின்ற கண்ணனும் ஆமே. 53

திருநெறி யாவது சித்தசித் தன்றிப்
பெருநெறி யாய பிரானை நினைந்து
குருநெறி யாம்சிவ மாநெறி கூடும்
ஒருநெறி ஒன்றாக வேதாந்தம் ஓதுமே. 54

ஆறங்க மாய்வரு மாமறை ஓதியைக்
கூறங்க மாகக் குணம்பயில் வார்இல்லை
வேறங்க மாக விளைவுசெய் தப்புறம்
பேறங்க மாகப் பெருக்குகின் றாரே. 55

பாட்டும் ஒலியும் பரக்கும் கணிகையர்
ஆட்டும் அறாத அவனியில் மாட்டாதார்
மேட்டு விருப்பார் விரதம்இல் லாதவர்
ஈட்டும் இடம்சென்(று) இகலலுற் றாரே. 56

ஆகமச்சிறப்பு

அஞ்சன மேனி அரிவையோர் பாகத்தன்
அஞ்சொ டிருபத்து மூன்றுள ஆகமம்
அஞ்சலி கூப்பி அறுபத் தறுவரும்
அஞ்சா முகத்தில் அரும்பொருள் கேட்டதே. 57

அண்ணல் அருளால் அருளும் சிவாகமம்
எண்ணில் இருபத்தெண் கோடிநூ றாயிரம்
விண்ணவர் ஈசன் விழுப்பம் உரைத்தனர்
எண்ணிநின் றப்பொருள் ஏத்துவன் நானே. 58

பண்டிதர் ஆவார் பதினெட்டுப் பாடையும்
கண்டவர் கூறும் கருத்தறிவார் என்க
பண்டிதர் தங்கள் பதினெட்டுப் பாடையும்
அண்ட முதலான் அறஞ்சொன்ன வாறே. 59

அண்ணல் அருளால் அருளுந்திவ் யாகமம்
விண்ணில் அமரர் தமக்கும் விளங்கரி(து)
எண்ணில் எழுபது கோடிநூ றாயிரம்
எண்ணிலும் நீர்மேல் எழுத்தது ஆகுமே. 60

பரனாய்ப் பராபரம் காட்டி உலகில்
தரனாய்ச் சிவதன்மம் தானேசொல் காலத்(து)
அரனாய் அமரர்கள் அர்ச்சிக்கு நந்தி
உரனாகி ஆகமம் ஓங்கிநின் றானே. 61

சிவமாம் பரத்தினில் சத்தி சதாசிவம்
உவமா மகேசர் உருத்திர தேவர்
தவமால் பிரமீசர் தம்மில்தாம் பெற்ற
நவஆ கமம்எங்கள் நந்திபெற் றானே. 62

பெற்றநல் ஆகமம் காரணம் காமிகம்
உற்றநல் வீரம் உயர்சிந்தம் வாதுளம்
மற்றவ் வியாமள மாகுங்கா லோத்தரம்
துற்றநற் சுப்பிரம் சொல்லும் மகுடமே. 63

அண்ணல் அருளால் அருளும் சிவாகமம்
எண்ணிலி கோடி தொகுத்திடு மாயினும்
அண்ணல் அறைந்த அறிவறி யாவிடின்
எண்ணிலி கோடியும் நீர்மேல் எழுத்தே. 64

மாரியும் கோடையும் வார்பனி தூங்கநின்(று)
ஏரியும் நின்றங் கிளேக்கின்ற காலத்து
ஆரிய மும்தமி ழும்உட னேசொலிக்
காரிகை யார்க்குக் கருணைசெய் தானே. 65

அவிழ்க்கின்ற வாறும் அதுகட்டு மாறும்
சிமிட்டலைப் பட்டுயிர் போகின்ற வாறும்
தமிழ்ச்சொல் வடசொல் எனும்இவ் விரண்டும்
உணர்த்தும் அவனை உணர்தலும் ஆமே. 66

குருபாரம்பரியம்

நந்தி அருள்பெற்ற நாதரை நாடிடின்
நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி
மன்று தொழுத பதஞ்சலி வியாக்ரமர்
என்றிவர் என்னோ டெண்மரும் ஆமே. 67

நந்தி அருளாலே நாதனாம் பேர்பெற்றோம்
நந்தி அருளாலே மூலனை நாடினோம்
நந்தி அருளாவ தென்செயும் நாட்டினில்
நந்தி வழிகாட்ட நானிருந்தேனே. 68

மந்திரம் பெற்ற வழிமுறை மாலாங்கன்
இந்திரன் சோமன் பிரமன் உருத்திரன்
கந்துரு காலாங்கி கஞ்ச மலையானோ(டு)
இந்த எழுவரும் என்வழி யாமே. 69

நால்வரும் நாலு திசைக்கொன்று நாதர்கள்
நால்வரும் நானா விதப்பொருள் கைக்கொண்டு
நால்வரும் நான்பெற்ற தெல்லாம் பெறுகென
நால்வரும் தேவராய் நாதரா னார்களே. 70

மொழிந்தது மூவர்க்கும் நால்வர்க்கும் ஈசன்
ஒழிந்த பெருமை இறப்பும் பிறப்பும்
செழுஞ்சுடர் முன்ஞெளி யாகிய தேவன்
கழிந்த பெருமையைக் காட்டகி லானே, 71

எழுந்துநீர் பெய்யினும் எட்டுத் திசையும்
செழுந்தண் நியமங்கள் செய்மினென் றண்ணல்
கொழுந்தண் பவளக் குளிர்சடை யோடே
அழுந்திய நால்வர்க் கருள்புரிந் தானே. 72

திருமூலர் வரலாறு

நந்தி இணையடி நான்தலை மேற்கொண்டு
புந்தியின் உள்ளே புகப்பெய்து போற்றிசெய்(து)
அந்தி மதிபுனை அரனடி நாள்தொறுஞ்
சிந்தைசெய் தாகமம் செப்பலுற் றேனே 73

செப்பும் சிவாகமம் என்னும்அப் பேர்பெற்றும்
அப்படி நல்கும் அருள்நந்தி தாள்பெற்றுத்
தப்பிலா மன்றில் தனிக் கூத்துக் கண்டபின்
ஒப்பிலி கோடி யுகம்இருந் தேனே 74

இருந்தவக் காரணம் கேளிந் திரனே
பொருந்திய செல்வப்புவன பதியாம்
அருந்தவச் செல்வியைச் சேவித் தடியேன்
பரிந்துடன் வந்தனன் பத்தியி னாலே. 75

சதாசிவம் தத்துவம் முத்தமிழ் வேதம்
மிதாசனி யாதிருந் தேனின்ற காலம்
இதாசனி யாதிருந் தேன்மனம் நீங்கி
உதாசனி யாதுட னேயுணர்ந் தோமால். 76

மாலாங்க னேஇங்கு யான்வந்த காரணம்
நீலாங்க மேனியள் நேரிழை யாளொடு
மூலாங்க மாக மொழிந்த திருக்கூத்தின்
சீலாங்க வேதத்தைச் செப்பவந் தேனே. 77

நேரிழை யாவாள் நிரதிச யானந்தப்
பேருடை யாளென் பிறப்பறுத் தாண்டவள்
சீருடை யாள்சிவன் ஆவடு தண்டுறை
சீருடை யாள்பதம் சேர்ந்திருந் தேனே. 78

சேர்ந்திருந் தேன்சிவ மங்கைதன் பங்கனைச்
சேர்ந்திருந் தேன்சிவன் ஆவடு தண்டுறை
சேர்ந்திருந் தேன்சிவ போதியின் நீழலில்
சேர்ந்திருந் தேன்சிவன் நாமங்கள் ஓதியே. 79

இருந்தேன் இக்காயத்தே எண்ணிலி கோடி
இருந்தேன் இராப்பகல் அற்ற இடத்தே
இருந்தேன் இமையவர் ஏத்தும் பதத்தே
இருந்தேன் என்நந்தி இணையடிக் கீழே. 80

பின்னைநின் றென்னே பிறவி பெறுவது
முன்னைநன் ருக முயல்தவம் செய்கிலர்
என்னைநன் ருக இறைவன் படைத்தனன்
தன்னைநன் ருகத் தமிழ்செய்யு மாறே. 81

ஞானத் தலைவிதன் நந்தி நகர்புக்கு
ஊனமில் ஒன்பது கோடி யுகந்தனுள்
ஞானப்பால் ஆட்டி நாதனை அர்ச்சித்து
நானும் இருந்தேன்நற் போதியின் கீழே. 82

செல்கின்ற வாறறி சிவமுனி சித்தசன்
வெல்கின்ற ஞானத்து மிக்கோர் முனிவராய்ப்
பல்கின்ற தேவர் அசுரர் நரர்தம்பால்
ஒல்கின்ற வான்வழி யூடுவந் தேனே. 83

சித்தத்தின் உள்ளே சிறக்கின்ற நூல்களில்
உத்தம மாகவே ஓதிய வேதத்தின்
ஒத்த உடலையும் உள்நின்ற உற்பத்தி
அத்தன் எனக்கிங் கருளால் அளித்ததே. 84

நான்பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்
வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்
ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்
தான்பற்றப் பற்றத் தலைப்படும் தானே. 85

பிறப்பிலி நாதனைப் பேர்நந்தி தன்னைச்
சிறப்பொடு வானவர் சென்றுகை கூப்பி
மறப்பிலர் நெஞ்சினுள் மந்திர மாலை
உறைப்பொடும் கூடிநின்(று) ஓதலும் ஆமே. 86

அங்கிமி காமைவைத் தானுல கேழையும்
எங்குமி காமைவத் தானுடல் வைத்தான்
தங்கிமி காமைவைத் தான் தமிழ்ச் சாத்திரம்
பொங்கிமி காமைவைத் தான்பொருள் தானுமே. 87

அடிமுடி காண்பார் அயன்மால் இருவர்
படிகண் டிலர்மீண்டும் பார்மிசைக் கூடி
அடிகண் டிலேன்என் றச்சுதன் சொல்ல
முடிகண்டடன் என்றயன் பொய்மொழிந் தானே. 88

பெற்றமும் மானும் மழுவும் பிறிவற்ற
தற்பரன் கற்பனை யாகும் சராசரத்(து)
அற்றமும் நல்கி அடியேன் சிரத்தினில்
நற்பத மும்அளித் தான்எங்கள் நந்தியே. 89

ஞேயத்தை ஞானத்தை ஞாதுரு வத்தினை
மாயத்தை மாமாயை தன்னில் வரும்பரை
ஆயத்தை அச்சிவன் தன்னை யகோசர
வீயத்தை முற்றும் விளக்கியிட் டேனே. 90

விளக்கிப் பரமாகும் மெய்ஞ்ஞானச் சோதி
அளப்பில் பெருமையன் ஆனந்த நந்தி
துளக்கறும் ஆனந்தக் கூத்தன்சொற் போந்து
வளப்பின் கயிலை வழியில்வந் தேனே. 91

நந்தி அருளாலே மூலனை நாடிப்பின்
நந்தி அருளாலே சதாசிவன் ஆயினேன்
நந்தி அருளால்மெய்ஞ் ஞானத்துள் நண்ணினேன்
நந்தி அருளாலே நான் இருந் தேனே. 92

இருக்கில் இருக்கும் எண்ணிலி கோடி
அருக்கின்ற மூலத்துள் அங்கே இருக்கும்
அருக்கனும் சோமனும் ஆரழல் வீச
உருக்கிய ரோமம் ஒளிவிடுந் தானே. 93

பிதற்றுகின் றேன்என்றும் பேர்நந்தி தன்னை
இயற்றுவன் நெஞ்சத் திரவும் பகலும்
முயற்றுவன் ஓங்கொளி வண்ணன்எம் மானை
இயற்றிகழ் சோதி இறைவனும் ஆமே. 94

அவையடக்கம்

ஆரறி வார்எங்கள் அண்ணல் பெருமையை
ஆரறி வார்இந்த அகலமும் நீளமும்
பேரறி யாத பெருஞ்சுடர் ஒன்(று) அதின்
வேரறி யாமை விளம்புகின் றேனே. 95

பாடவல் லார்நெறி பாட அறிகிலேன்
ஆடவல் லார்நெறி ஆட அறிகிலேன்
நாடவல் லார்நெறி நாட அறிகிலேன்
தேடவல் லார்நெறி தேடகில் லேனே. 96

மன்னிய வாய்மொழி யாலும் மதித்தவர்
இன்னிசை உள்ளே எழுகின்ற ஈசனைப்
பின்னை உலகம் படைத்த பிரமனும்
உன்னும் அவனை உணரலும் ஆமே. 97

தத்துவ ஞானம் உரைத்தது தாழ்வரை
முத்திக் கிருந்த முனிவரும் தேவரும்
ஒத்துடன் வேருய் இருந்து துதிசெயும்
பத்திமை யால்இப் பயன் அறியாரே. 98

திருமந்திரத் தொகைச் சிறப்பு

மூலன் உரைசெய்த மூவா யிரந்தமிழ்
ஞாலம் அறியவே நந்தி அருளது
காலை எழுந்து கருத்தறிந்(து) ஓதிடின்
ஞாலத் தலைவனை நண்ணுவர் அன்றே 99

வைத்த பரிசே வகைவகை நன்னூலின்
முத்தி முடிவிது மூவா யிரத்திலே
புத்திசெய் பூர்வத்து மூவா யிரம்பொது
வைத்த சிறப்புத் தரும்இவை தானே. 100

குருமட வரலாறு

வந்த மடமேழும் மன்னும்சன் மார்க்கத்தின்
முந்தி உதிக்கின்ற மூலன் மடவரை
தந்திரம் ஒன்பது சார்வுமூ வாயிரம்
சுந்தர ஆகமச் சொல்மொழிந் தானே. 101

கலந்தருள் காலாங்கர் தம்பால் அகோரர்
நலந்தரு மாளிகைத் தேவர்நா தாந்தர்
புலங்கொள் பரமானந் தர்போக தேவர்
நிலந்திகழ் மூலர் நிராமயத் தோரே. 102

மும்மூர்த்திகளின் முறைமை

அளவில் இளமையும் அந்தமும் ஈறும்
அளவியல் காலமும் நாலும் உணரில்
தளர்விலன் சங்கரன் தன்னடி யார்சொல்
அளவில் பெருமை அரிஅயற் காமே. 103

ஆதிப் பிரானும் அணிமணி வண்ணனும்
ஆதிக் கமலத்(து) அலர்மிசை யானும்
சோதிக்கில் மூன்றும் தொடர்ச்சியில் ஒன்றெனார்
பேதித் துலகம் பிணங்குகின் றார்களே 104

ஈசன் இருக்கும் இருவினைக்(கு) அப்புறம்
பீசம் உலகில் பெருந்தெய்வ மானது
ஈசன் அதுஇது என்பார் நினைப்பிலார்
தூசு பிடித்தவர் தூரறிந் தார்களே. 105

சிவன்முதல் மூவரோ(டு) ஐவர் சிறந்த
அவைமுதல் ஆறிரண் டொன்றொடொன் றாகும்
அவைமுதல் விந்துவும் நாதமும் ஓங்கச்
சவைமுதற் சங்கரன் தன்பெயர் தானே 106

பயன் அறிந்(து) அவ்வழி எண்ணும் அளவில்
அயனொடு மால்நமக்(கு) அன்னியம் இல்லை
நயனங்கள் மூன்றுடை நந்தி தமராம்
வயனம் பெறுவீர்அவ் வானவ ராலே. 107

ஓலக்கம் சூழ்ந்த உலப்பிலி தேவர்கள்
பாலொத்த மேனி பணிந்(து) அடி யேன்தொழ
மாலுக்கும் ஆதிப் பிரமற்கும் ஒப்புநீ
ஞாலத்து நம்மடி நல்கிடென் றானே. 108

வானவர் என்றும் மனிதர்இவர் என்றும்
தேனமர் கொன்றைச் சிவனருள் அல்லது
தானமர்ந் தோரும் தனித்தெய்வம் மற்றில்லை
ஊனமர்ந்தோரை உணர்வது தானே. 109

சோதித்த பேரொளி மூன்றைந் தெனநின்ற
ஆதிக்கண் ஆவ(து) அறிகிலர் ஆதர்கள்
நீதிக்கண் ஈசன் நெடுமால் அயன்என்று
பேதித் தவரைப் பிதற்றுகின் றாரே. 110

பரத்திலே ஒன்றாய்உள்ளாய்ப்புற மாகி
வரத்தினுள் மாயவ னாய்அயன் ஆகித்
தரத்தினுள் தான்பல தன்மையன் ஆகிக்
கரத்தினுள் நின்று கழிவுசெய் தானே. 111

தானொரு கூறு சதாசிவன் எம்இறை
வானொரு கூறு மருவியும் அங்குளன்
கோனொரு கூறுடல் உள்நின்(று) உயிர்க்கின்ற
தானொரு கூறு சலமயன் ஆமே. 112

பாயிரம் முற்றும்

முதல் தந்திரம்

உபதேசம்

விண்ணின் (று)இழிந்து வினைக்கீடாய் மெய்கொண்டு
தண்ணின்ற தாளைத் தலைக்காவல் முன்வைத்து
உண்ணின் (று)உருக்கியொர் ஒப்பிலா ஆனந்தக்
கண்ணின்று காட்டிக் களிம்பறுத் தானே. 113

களிம்பறுத் தான்எங்கள் கண்ணுதல் நந்தி
களிம்பறுத் தான்அருட் கண்விழிப் பித்துக்
களிம்பணு காத கதிரொளி காட்டிப்
பளிங்கிற் பவளம் பதித்தான் பதியே. 114

பதிபசு பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப் போல்பசு பாசம் அனாதி
பதியினைச் சென்றணு காப்பசு பாசம்
பதியணு கில்பசு பாசம் நிலாவே. 115

வேயின் எழுங்கனல் போலே இம் மெய்யெனும்
கோயி லிருந்து குடிகொண்ட கோன்நந்தி
தாயினும் மும்மலம் மாற்றித் தயாஎன்னும்
தோயம தாய்எழும் சூரிய னாமே. 116

சூரிய காந்தமும் சூழ்பஞ்சும் போலவே
சூரிய காந்தம் சூழ்பஞ்சைச் சுட்டிடா
சூரியன் சந்நிதி யிற்சுடு மாறுபோல்
ஆரியன் தோற்றமுன் அற்ற மலங்களே. 117

மலங்களைந் தாமென மாற்றி அருளித்
தலங்களைந் தானற் சதாசிவ மான
புலங்களைந் தானப் பொதுவினுள் நந்தி
நலன்களைந் தானுள் நயந்தான் அறிந்தே. 118

அறிவைம் புலனுட னேநான் றதாகி
நெறியறி யாதுற்ற நீராழம் போல
அறிவறி வுள்ளே அழிந்தது போல
குறியறி விப்பான் குருபர னுமே. 119

ஆமேவு பால்நீர் பிறிக்கின்ற அன்னம்போல்
தாமே தனிமன்றில் தன்னம் தனிநித்தம்
தீமேவு பல்கர ணங்களுள் உற்றன
தாமேழ் பிறப்பெரி சார்ந்தவித் தாமே. 120

வித்தைக் கெடுத்து வியாக்கிரத் தேமிகச்
சுத்தத் துரியம் பிறந்து துடக்கற
ஒத்துப் புலனுயிர் ஒன்ருய் உடம்பொடு
செத்திட் டிருப்பர் சிவயோகி யார்களே. 121

சிவயோக மாவது சித்தசித் தென்று
தவயோகத் துள்புக்குத் தன்னொளி தானுய்
அவயோகம் சாரா தவன்பதி போக
நவயோக நந்தி நமக்களித் தானே. 122

அளித்தான் உலகெங்கும் தானுன உண்மை
அளித்தான் அமரர் அறியா உலகம்
அளித்தான் திருமன்றுள் ஆடுந் திருத்தாள்
அளித்தான் பேரின்பத்(து) அருள்வெளி தானே. 123

வெளியில் வெளிபோய் விரவிய வாறும்
அளயில் அளிபோய் அடங்கிய வாறும்
ஒளியில் ஒளிபோய் ஒடுங்கிய வாறும்
தெளியும் அவரே சிவசித்தர் தாமே. 124

சித்தர் சிவலோகம் இங்கே தெரிசித்தோர்
சத்தமும் சத்த முடிவும்தம் முள்கொண்டோர்
நித்தர் நிமலர் நிராமயர் நீள்பர
முத்தர் தம் முத்தி முதல்முப்பத் தாறே. 125

முப்பதும் ஆறும் படிமுத்தி ஏணியாய்
ஒப்பில்லா ஆனந்தத்(து) உள்ளொளி புக்குச்
செப்ப அரிய சிவங்கண்டு தான்தெளிந்து
அப்பரி சாக அமர்ந்திருந் தாரே. 126

இருந்தார் சிவமாகி எங்குந்தா மாகி
இருந்தார் சிவன்செயல் யாவையும் நோக்கி
இருந்தார் முக்காலத் தியல்பைக் குறித்தங்கு
இருந்தார் இழவுவந் தெய்திய சோம்பே. 127

சோம்பர் இருப்பது சுத்த வெளியிலே
சோம்பர் கிடப்பது சுத்த வெளியிலே
சோம்பர் உணர்வு சுருதி முடிந்திடஞ்
சோம்பர்கண் டாரச் சுருதிக்கண் தூக்கமே. 128

தூங்கிக்கண் டார்சிவ லோகமும் தம்உள்ளே
தூங்கிக்கண் டார்சிவ யோகமும் தம்உள்ளே
தூங்கிக்கண் டார்சிவ போகமும் தம்உள்ளே
தூங்கிக்கண் டார்நிலை சொல்வதெவ் வாறே 129

எவ்வாறு காண்பான் அறிவு தனக்கெல்லை
அவ்வா றருட்செய்வன் ஆதி பரன்தானும்
ஒவ்வாத மன்றுள் உமைகாண ஆடிடும்
செவ்வானிற் செய்ய செழுஞ்சுடர் மாணிக்கமே. 130

மாணிக்கத் துள்ளே மரகதச் சோதியாய்
மாணிக்கத் துள்ளே மரகத மாடமாய்
ஆணிப்பொன் மன்றினில் ஆடுந் திருக்கூத்தைப்
பேணித் தொழுதென்ன பேறுபெற் றாரே. 131

பெற்றார் உலகிற் பிரியாப் பெருநெறி
பெற்றார் உலகிற் பிறவாப் பெரும்பயன்
பெற்றார்அம் மன்றிற் பிரியாப் பெரும்பேறு
பெற்றார் உலகுடன் பேசாப் பெருமையே. 132

பெருமை சிறுமை அறிந்தெம் பிரான்போல்
அருமை எளிமை அறிந்தறி வாரார்
ஒருமையுள் ஆமைபோல் உள்ளேந்(து) அடக்கி
இருமையுங் கேட்டிருந் தார்புரை அற்றே. 133

புரையற்ற பாலினுள் நெய்கலந் தாற்போல்
திரையற்ற சிந்தைநல் ஆரியன் செப்பும்
உரையற் றுணர் வோர் உடம்பிங் கொழிந்தால்
கரையற்ற சோதி கலந்தசத் தாமே. 134

சத்த முதல்ஐந்துந் தன்வழித் தான்சாரில்
சித்துக்குச் சித்தன்றிச் சேர்விடம் வேறுண்டோ
சுத்த வெளியில் சுடரில் சுடர்சேரும்
அத்தம் இதுகுறித் தாண்டுகொள் அப்பிலே. 135

அப்பினிற் கூர்மை ஆதித்தன் வெம்மையால்
உப்பெனப் பேர்பெற் றுருச்செய்த அவ்வுரு
அப்பினிற் கூடிய தொன்றாகு மாறுபோல்
செப்பினிற் சீவன் சிவத்துள் அடங்குமே. 136

அடங்குபே ரண்டத்(து) அணுஅண்டம் சென்றங்(கு)
இடங்கொண்ட தில்லை இதுவன்றி வேறுண்டோ
கடந்தொறும் நின்ற உயிர்கரை காணில்
திடம்பெற நின்றான் திருவடி தானே. 137

திருவடி யேசிவ மாவது தேரில்
திருவடி யேசிவ லோகம்சிந் திக்கில்
திருவடி யேசெல் கதியது செப்பில்
திருவடி யேதஞ்சம் உள்தெளி வார்க்கே. 138

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே. 139

தானே புலன்ஐந்தும் தன்வச மாயிடும்
தானே புலன்ஐந்தும் தன்வசம் போயிடும்
தானே புலன்ஐந்தும் தன்னில் மடைமாறும்
தானே தனித்தெம் பிரான்தனைச் சந்தித்தே. 140

சந்திப் பதுநந்தி தன்திருத் தாளிணை
சிந்திப் பதுநந்தி செய்ய திருமேனி
வந்திப் பதுநந்தி நாமம்என் வாய்மையால்
புந்திக்குள் நிற்பது நந்திபொற் போதமே. 141

போதந் தரும்எங்கள் புண்ணிய நந்தியைப்
போதந் தனில்வைத்துப் புண்ணிய ராயினர்
நாதன் நடத்தால் நயனம் களிகூர
வேதம் துதித்திடப் போயடைந்தார் விண்ணே. 142

யாக்கைநிலையாமை

மண்ணொன்று கண்டீர் இருவகைப் பாத்திரம்
திண்ணென்(று) இருந்தது தீவினை சேர்ந்தது
விண்ணின்று நீர்விழின் மீண்டுமண் ணானாற்போல்
எண்ணின்றி மாந்தர் இறக்கின்ற வாறே. 143

பண்டம்பெய் கூரை பழகி விழுந்தக்கால்
உண்டஅப் பெண்டிரும் மக்களும் பின்செலார்
கொண்ட விரதமும் ஞானமும் அல்லது
மண்டி அவருடன் வழிநட வாதே. 144

ஊரெலாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்
சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பொழிந் தார்களே. 145

காலும் இரண்டு முகட்டல கொன்றுள
பாலுள் பருங்கழி முப்பத் திரண்டுள
மேலுள கூரை பிரியும் பிரிந்தால்முன்
போலுயிர் மீளப் புகஅறி யாதே. 146

சீக்கை விளைந்தது செய்வினை மூட்டற்ற
ஆக்கை பிரிந்த தலகு பழுத்தது
மூக்கினிற் கைவைத்து மூடிட்டுக் கொண்டுபோய்க்
காக்கைக் குப்பலி காட்டிய வாறே. 147

அடப்பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்
மடக்கொடி யாரொடு மந்தணங் கொண்டார்
இடப்பக்க மேஇறை நொந்தது என்றார்
கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந் தாரே. 148

மன்றத்தே நம்பி மாடம் எடுத்தது
மன்றத்தே நம்பி சிவிகைபெற் றேறினன்
மன்றத்தே நம்பி முக்கோடி வழங்கினன்
சென்றத்தா வென்னத் திரிந்திலன் தானே. 149

வாசந்தி பேசி மணம்புணர்ந் தப்பதி
நேசம் தெவிட்டி நினைப்பொழி வார்பின்னை
ஆசந்தி மேல்வைத் தமைய அழுதிட்டுப்
பாசந்தீச் சுட்டுப் பலியட்டி னார்களே. 150

கைவிட்டு நாடிக் கருத்தழிந் தச்சற
நெய்யட்டிச் சோறுண்ணும் ஐவரும் போயினர்
மையிட்ட கண்ணளும் மாடும் இருக்கவே
மெய்விட்டுப் போக விடைகொள்ளு மாறே. 151

பந்தல் பிரிந்தது பண்டாரங் கட்டற்ற
ஒன்பது வாசலும் ஒக்க அடைத்தன
துன்புறு காலந் துரிசுவர மேன்மேல்
அன்புடை யார்கள் அழுதகன் றார்களே. 152

நாட்டுக்கு நாயகன் நம்மூர்த் தலைமகன்
காட்டுச் சிவிகையொன்(று) ஏறிக் கடைமுறை
நாட்டார்கள் பின்செல்ல முன்னே பறை கொட்ட
நாட்டுக்கு நம்பி நடக்கின்ற வாறே. 153

முப்பதும் முப்பதும் முப்பத் தறுவரும்
செப்ப மதிளுடைக் கோயிலுள் வாழ்பவர்
செப்ப மதிளுடைக் கோயில் சிதைந்தபின்
ஒப்ப அனைவரும் ஓட்டெடுத் தார்களே. 154

மதுவூர் குழலியும் மாடும் மனையும்
இதுவூர் ஒழிய இதணம தேறிப்
பொதுவூர் புறஞ்சுடு காடது நோக்கி
மதுவூர வாங்கியே வைத்தகன் றார்களே. 155

வைச்சகல் வுற்றது கண்டு மனிதர்கள்
அச்சக லாதென நாடும் அரும்பொருள்
பிச்சது வாய்ப்பின் தொடர்வுறு மற்றவர்
எச்சக லாநின் றிளைக்கின்ற வாறே. 156

ஆர்த்தெழு சுற்றமும் பெண்டிரும் மக்களும்
ஊர்த்துறைக் காலே ஒழிவர் ஒழிந்தபின்
வேர்த்தலை போக்கி விறகிட் டெரிமூட்டி
நீர்த்தலை மூழ்குவர் நீதியில் லோரே. 157

வளத்திடை முற்றத்தோர் மாநிலம் முற்றும்
குளத்தின் மண்கொண்டு குயவன் வனைந்தான்
குடமுடைந் தால்அவை ஓடென்று வைப்பர்
உடலுடைந் தால்இறைப் போதும் வையாரே, 158

ஐந்து தலைப்பறி யாறு சடையுள
சந்தவை முப்பது சார்வு பதினெட்டுப்
பந்தலும் ஒன்பது பந்தி பதினைந்து
வெந்து கிடந்தது மேலறி யோமே. 159

அத்திப் பழமும் அரைக்கீரை நல்வித்தும்
கொத்தி உலைப்பெய்து கூழட்டு வைத்தனர்
அத்திப் பழத்தை அரைக்கீரை வித்துண்ணக்
கத்தி எடுத்தவர் காடுபுக் காரே. 160

மேலும் முகடில்லை கீழும் வடிம்பில்லை
காலும் இரண்டு முகட்டலக் கொன்றுண்டு
ஓலையான் மேய்ந்தவ ருடு வரியாமை
வேலையான் மேய்ந்ததோர் வெள்ளித் தளிகையே. 161

கூடம் கிடந்தது கோலங்கள் இங்கில்லை
ஆடும் இலையமும் அற்ற தறுதலும்
பாடுகின் றூர்சிலர் பண்ணில் அழுதிட்டுத்
தேடிய தீயினில் தீயவைத் தார்களே. 162

முட்டை பிறந்தது முந்நூறு நாளினில்
இட்டது தானிலை ஏதேனும் ஏழைகாள்
பட்டது பார்மணம் பன்னிரண்(டு) ஆண்டினில்
கெட்ட தெழுபதிற் கேடறி யீரே. 163

இடிஞ்சில் இருக்க விளக்கெரி கொண்டான்
முடிஞ்ச தறியார் முழங்குவர் மூடர்
விடிஞ்சிரு ளாவ(து) அறியா உலகம்
படிஞ்சு கிடந்து பதைக்கின்ற வாறே. 164

மடல்விரி கொன்றையன் மாயன் படைத்த
உடலும் உயிரும் உருவந் தொழாமல்
இடர்படர்ந் தேழா நரகிற் கிடப்பர்
குடர்பட வெந்தமர் கூப்பிடு மாறே. 165

குடையும் குதிரையுங் கொற்றவா ளும்கொண்டு
இடையுமக் காலம் இருந்து நடுவே
புடையு மனிதனார் போகும்அப் போதே
அடையும் இடம்வலம் ஆருயி ராமே. 166

காக்கை கவரிலென் கண்டார் பழக்கிலென்
பாற்றுளிப் பெய்யிலென் பல்லோர் பழிச்சிலென்
தோற்பையுள் நின்று தொழிலறச் செய்தீட்டுங்
கூத்தன் புறப்பட்டுப் போனஇக் கூட்டையே. 167

செல்வநிலையாமை

அருளும் அரசனும் ஆனையும் தேரும்
பொருளும் பிறர்கொள்ளப் போவதன் முன்னம்
தெருளும் உயிரொடும் செல்வனைச் சேரின்
மருளும் பினையவன் மாதவ மன்றே. 168

இயக்குறு திங்கள் இருட்பிழம் பொக்கும்
துயக்குறு செல்வத்தைச் சொல்லவும் வேண்டா
மயக்கற நாடுமின் வானவர் கோனைப்
பெயற்கொண்டல் போலப் பெருஞ்செல்வ மாமே. 169

தன்னது சாயை தனக்குத வாதுகண்(டு)
என்னது மாடென்(று) இருப்பர்கள் ஏழைகள்
உன்னுயிர் போம்உடல் ஒக்கப் பிறந்தது
கண்ணது காணொளி கண்டுகொ ளீரே. 170

ஈட்டிய தேன்பூ மணங்கண் டிரதமும்
கூட்டிக் கொணர்ந்தொரு கொம்பிடை வைத்திடும்
ஓட்டித் துரத்திட் டதுவலி யார்கொளக்
காட்டிக் கொடுத்தது கைவிட்ட வாறே. 171

தேற்றத் தெளிமின் தெளிந்தீர் கலங்கன்மின்
ஆற்றுப் பெருக்கிற் கலக்கி மலக்காதே
மாற்றிக் களைவீர் மறித்துங்கள் செல்வத்தைக்
கூற்றன் வருங்கால் குதிக்கலு மாமே. 172

மகிழ்கின்ற செல்வமும் மாடும் உடனே
கவிழ்கின்ற நீர்மிசைச் செல்லுங் கலம்போல்
அவிழ்கின்ற ஆக்கைக்கோர் வீடுபே றுகச்
சிமிழொன்று வைத்தமை தேர்ந்தறி யாரே. 173

வாழ்வு மனைவியும் மக்கள் உடன்பிறந்
தாரு மளவே (து) எமக்கென்பர் ஒண்பொ நள்
மேவு மதனை விரிவுசெய் வார்கட்குக்
கூவுந் துணையொன்று கூடலு மாமே. 174

வேட்கை மிகுத்தது மெய்கொள்வார் இங்கிலை
பூட்டுந் தறியொன்று போம்வழி ஒன்பது
நாட்டிய தாய்தமர் வந்து வணங்கிப்பின்
காட்டிக் கொடுத்தவர் கைவிட்ட வாறே. 175

உடம்பொ(டு) உயிரிடை விட்டோடும் போது
அடும்பரி சொன்றில்லை அண்ணலை எண்ணும்
விடும்பரி சாய்நின்ற மெய்நமன் தூதர்
சுடும்பரி சத்தையும் சூழகி லாரே. 176

இளமைநிலையாமை

கிழக்கெழுந் தோடிய ஞாயிறு மேற்கே
விழக்கண்டும் தேருர் விழியிலா மாந்தர்
குழக்கன்று மூத்தெ ந தாய்ச்சில நாளில்
விழக்கண்டும் தேருர் வியனுல கோரே. 177

ஆண்டு பலவும் கழிந்தன அப்பனைப்
பூண்டுகொண் டாரும் புகுந்தறிவா ரில்லை
நீண்டன காலங்கள் நீண்டு கொடுக்கினும்
தூண்டு விளக்கின் சுடரறி யாரே. 178

தேய்ந்தற் றொழிந்த இளமை கடைமுறை
ஆய்ந்தற்ற பின்னை அரிய கருமங்கள்
பாய்ந்தற்ற கங்கைப் படர்சடை நந்தியை
ஓர்ந்துற்றுக் கொள்ளும் உயிருள்ள போதே. 179

விரும்புவர் முன்னென்னை மெல்லியன் மாதர்
கரும்பு தகர்த்துக் கடைக்கொண்ட நீர்போல்
அரும்பொத்த மென்முலை ஆயிழை யார்க்குக்
கரும்பொத்துக் காஞ்சிரங் காயும் ஒத்தேனே. 180

பாலன் இளையன் விருத்தன் எனநின்ற
காலம் கழிவன கண்டும் அறிகிலார்
ஞாலம் கடந்தண்டம் ஊடறுத் தானடி
மேலும் கிடந்து விரும்புவன் நானே. 181

காலை எழுந்தவர் நித்தலும் நித்தலும்
மாலை படுவதும் வாணாள் கழிவதும்
சாலுமவ் வீசன் சலவிய னாகிலும்
ஏல நினைப்பவர்க் கின்பஞ்செய் தானே. 182

பருவூசி ஐந்துமோர் பையினுள் வாழும்
பருவூசி ஐந்து பறக்கும் விருகம்
பருவூசி ஐந்தும் பனித்தலைப் பட்டால்
பருவூசிப் பையும் பறக்கின்ற வாறே. 183

கண்ணது காய்கதி ரோனும் உலகினை
உண்ணின்(று) அளக்கின்ற(து) ஒன்றும் அறிகிலார்
விண்ணுறு வாரையும் வினையுறு வாரையும்
எண்ணுறும் முப்பதில் ஈர்ந்தொழிந் தாரே. 184

ஒன்றிய ஈரெண் கலையும் உடன்றன
நின்றது கண்டு நினைக்கிலர் நீதர்கள்
கன்றிய காலன் கருக்குழி வைத்தபின்
சென்றதில் வீழ்வர் திகைப்பொழி யாரே. 185

எய்திய நாளில் இளமை கழியாமை
எய்திய நாளில் இசையினால் ஏத்துமின்
எய்திய நாளில் எறிவ தறியாமல்
எய்திய நாளில் இருந்துகண் டேனே. 186

உயிர் நிலையாமை

தழைக்கின்ற செந்தளிர்த் தண்மலர்க் கொம்பில்
இழைக்கின்ற வெல்லாம் இறக்கின்ற கண்டும்
பிழைப்பின்றி எம்பெரு மானடி யேத்தார்
அழைக்கின்ற போதறி யாரவர் தாமே. 187

ஐவர்க்(கு) ஒருசெய் விளைந்து கிடந்தது
ஐவரும் அச்செய்யைக் காத்து வருவார்கள்
ஐவர்க்கு நாயகன் ஓலை வருதலால்
ஐவரும் அச்செய்யைக் காவல்விட் டாரே. 188

மத்தளி ஒன்றுள தாளம் இரண்டுள
அத்துள்ளே வாழும் அரசரும் அஞ்சுள்ள
அத்துள்ளே வாழும் அரசனும் அங்குளன்
மத்தளி மண்ணாய் மயங்கிய வாறே. 189

வேங்கட நாதனை வேதாந்தக் கூத்தனை
வேங்கடத் துள்ளே விளையாடு நந்தியை
வேங்கடம் என்றே விரகறி யாதவர்
தாங்கவல் லாருயிர் தாமறி யாரே. 190

சென்றுணர் வான்திசை பத்தும் திவாகரன்
அன்றுணர் வாலளக் கின்ற தறிகிலர்
நின்றுண ரார்இந் நிலத்தின் மனிதர்கள்
பொன்றுணர் வாரிற் புணர்க்கின்ற மாயமே. 191

மாறு திருத்தி வரம்பிட்ட பட்டிகை
பீறு மதனைப் பெரிதுணர்ந் தாரில்லை
கூறுங் கருமயிர் வெண்மயி ராவதும்
ஈறும் பிறப்புமொ ராண்டெனும் நீரே. 192

துடுப்பிடு பானைக்கும் ஒன்றே அரிசி
அடுப்பிடு மூன்றிற்கும் அஞ்செரி கொள்ளி
அடுத்தெரி யாமற் கொடுமின் அரிசி
விடுத்தன நாள்களும் மேற்சென் றனவே. 193

இன்புறு வண்டங்(கு) இனமலர் மேற்போய்
உண்பது வாசம் அதுபோல் உயிர்நிலை
இன்புற நாடி நினைக்கிலும் மூன்றுளி
கண்புற நின்ற கருத்துள்நில் லானே. 194

ஆம்விதி நாடி அறஞ்செய்மின் அந்நிலம்
போம்விதி நாடிப் புனிதனைப் போற்றுமின்
நாம்விதி வேண்டும தென்சொலின் மானிடர்
ஆம்விதி பெற்ற அருமைவல் லாக்கே. 195

அவ்வியம் பேசி அறங்கெட நில்லன்மின்
வெவ்விய னாகிப் பிறர்பொருள் வவ்வன்மின்
செவ்விய னாகிச் சிறந்துண்ணும் போதொரு
தவ்விக்கொ டுண்மின் தலைப்பட்ட போதே. 196

கொல்லாமை

பற்றாய நற்குரு பூசைக்கும் பன்மலர்
மற்றோர் அணுக்களைக் கொல்லாமை ஒண்மலர்
நற்றார் நடுக்கற்ற தீபமும் சித்தமும்
உற்றாரும் ஆவி அமர்ந்திடம் உச்சியே. 197

கொல்லிடு குத்தென்று கூறிய மாக்களை
வல்லடிக் காரர் வலிக்கயிற்ருற் கட்டிச்
செல்லிடு நில்லென்று தீவாய் நரகிடை
நில்லிடும் என்று நிறுத்துவர் தாமே. 193

புலான் மறுத்தல்

பொல்லாப் புலாலை நுகரும் புலையரை
எல்லாரும் காண இயமன்றன் தூதுவர்
செல்லாகப் பற்றித் தீவாய் நரகத்தின்
மல்லாக்கத் தள்ளி மறித்துவைப் பாரே. 199

கொலையே களவுகள் காமம் பொய்கூறல்
மலைவான பாதக மாம்அவை நீக்கித்
தலையாஞ் சிவனடி சார்ந்தின்பஞ் சார்ந்தோர்க்
கிலையாம் இவைஞாஞு னந்தத் திருத்தலே. 200

பிறர்மனை நயவாமை

ஆத்த மனையாள் அகத்தில் இருக்கவே
காத்த மனையாளைக் காமுறும் காளையர்
காய்ச்ச பலாவின் கனியுண்ண மாட்டாமல்
ஈச்சம் பழத்துக்(கு) இடருற்ற வாறே. 201

திருத்தி வளர்த்ததோர் தேமாங் கனியை
அருத்தெமன் றெண்ணி அறையில் புதைத்துப்
பொருத்த மிலாத புளிமாங்கொம் பேறிக்
கருத்தறி யாதவர் காலற்ற வாறே. 202

பொருள்கொண்ட கண்டனும் போதத்தை யாளும்
இருள்கொண்ட மின்வெளி கொண்டுநின் ருேரும்
மருள்கொண்ட மாதர் மயலுறு வார்கள்
மருள்கொண்ட சிந்தையை மாற்றகில் லாரே. 203

மகளிரிழிவு

இலைநல வாயினும் எட்டி பழுத்தால்
குலைநல வாங்கனி கொண்டுண லாகா
முலைநலங் கொண்டு முறுவல்செய் வார்மேல்
விலகுறு நெஞ்சினை வெய்துகொள் ளீரே. 204

மனைபுகு வார்கள் மனைவியை நாடில்
சுனைபுகு நீர்போல் சுழித்துடன் வாங்கும்
கனவது போலக் கசிந்தெழும் அன்பை
நனவது போலவும் நாடவொண் ணாதே. 205

இயலுறும் வாழ்க்கை இளம்பிடி மாதர்
புயலுறும் புல்லின் புணர்ந்தவ ரேயினும்
மயலுறும் வானவர் சாரவி நும் என்பார்
அயலுறப் பேசி அகன்றொழிந் தாரே. 206

வையகத் தேமட வாரொடும் கூடியென்
மெய்யகத் தோருளம் வைத்த விதியது
கையகத் தேகரும் பாலையின் சாறுகொள்
மெய்யகத் தேபெறு வேம்பது வாமே. 207

கோழை ஒழுக்கம் குளமுடு பாசியில்
ஆழ நடுவார் அளப்புறு வார்களைத்
தாழத் துடக்கித் தடுக்ககில் லாவிடில்
பூழை நுழைந்தவர் போகின்ற வாறே. 208

நல்குரவு

புடவை கிழிந்தது போயிற்று வாழ்க்கை
அடையப்பட் டார்களும் அன்பில ரானார்
கொடையில்லை கோளில்லை கொண்டாட்ட மில்லை
நடையில்லை நாட்டில் இயங்குகின் றார்கட்கே. 209

பொய்க்குழி தூர்ப்பான் புலரி புலருதென்(று)
அக்குழி தூர்க்கும் அரும்பண்டந் தேடுவீர்
எக்குழி தூர்த்தும் இறைவனை ஏத்துமின்
அக்குழி தூரும் அழுக்கற்ற போதே. 210

கற்குழி தூரக் கனகமுந் தேடுவார்
அக்குழி தூர்க்கை யாவர்க்கும் அரியது
அக்குழி தூர்க்கும் அறிவை அறிந்தபின்
அக்குழி தூரும் அழுக்கற்ற வாறே. 211

தொடர்ந்தெழும் சுற்றம் வினையினும் தீய
கடந்ததோர் ஆவி கழிவதன் முன்னே
உடந்தொரு காலத் துணர்விளக் கேற்றித்
தொடர்ந்துநின் றவ்வழி தூர்க்கலு மாமே. 212

அறுத்தன ஆறினும் ஆனினம் மேவி
அறுத்தனர் ஐவரும் எண்ணிலி துன்பம்
ஒறுத்தன வல்வினை ஒன்றல்ல வாழ்வை
வெறுத்தனன் ஈசனை வேண்டிநின் றேனே. 213

அக்கினி காரியம்

வசையில் விழுப்பொருள் வானும் நிலனும்
திசையும் திசைபெறு தேவர் குழாமும்
விசையம் பெருகிய வேத முதலாம்
அசைவிலா அந்தணர் ஆகுதி வேட்கிலே. 214

ஆகுதி வேட்கும் அருமறை அந்தணர்
போகதி நாடிப் புறங்கொடுத் துண்ணுவர்
தாம்விதி வேண்டித் தலைப்படு மெய்ந்நெறி
தாமறி வாலே தலைப்பட்ட வாறே. 215

அணைதுணை அந்தணர் அங்கியுள் அங்கி
அணைதுணை வைத்ததின் உட்பொருளான
இணைதுணை யாமத்(து) இயங்கும் பொழுது
துணையணை யாயதோர் தூய்நெறி யாமே. 216

போதிரண் டோதிப் புரிந்தருள் செய்திட்டு
மாதிரண் டாகி மகிழ்ந்துட னேநிற்கும்
தாதிரண் டாகிய தண்ணம் பறவைகள்
வேதிரண் டாகி வெறிக்கின்ற வாறே. 217

நெய்நின் றெரியும் நெடுஞ்சுட ரேசென்று
மைநின் றெரியும் வகையறி வார்கட்கு
மைநின் றவிழ்தரும் அத்தினம் ஆமென்றும்
செய்நின்ற செல்வம தியது வாமே. 218

பாழி அகலும் எரியும் திரிபோலிட்(டு)
ஊழி அகலும் உறுவினை நோய்பல
ஆழிசெய் தங்கி உதிக்க அவைவிழும்
வீழிசெய் தங்கி வினைசுடு மாமே. 219

பெருஞ்செல்வங் கேடென்று முன்னே படைத்த
அருஞ்செல்வந் தந்த தலைவனை நாடும்
வருஞ்செல்வத் தின்பம் வரவிருந் தெண்ணிப்
பெருஞ்செல்வத் தாகுதி வேட்கநின்றரே, 220

ஒண்சுட ரானை உலப்பிலி நாதனை
ஒண்சுட ராகிஎன் னுள்ளத் திருக்கின்ற
கண்சுட ரோன்உல கேழுங் கடந்தஅத்
தண்சுட ரோமத் தலைவனும் ஆமே. 221

ஓமத்துள் அங்கியின் உள்ளுளன் எம்இறை
ஈமத்துள் அங்கி இரதங்கொள் வானுளன்
வேமத்துள் அங்கி விளைவு வினைக்கடற்
கோமத்துள் அங்கி குரைகடல் தானே. 222

அங்கி நிறுத்தும் அருந்தவர் ஆரணத்
தங்கி இருக்கும் வகையருள் செய்தவர்
எங்கும் நிறுத்தி இளைப்பப் பெரும்பதி
பொங்கி நிறுத்தும் புகழது வாமே. 223

அந்தணர் ஒழுக்கம்

அந்தண ராவோர் அறுதொழில் பூண்டுளோர்
செந்தழல் ஓம்பிமுப் போதும் நியமஞ்செய்
தந்தவ நற்கரு மத்துநின் ருங்கிட்டுச்
சந்தியும் ஓதிச் சடங்கறுப் போர்களே. 224

வேதாந்தங் கேட்க விருப்பொடு முப்பதப்
போதாந்த மான பிரணவத் துள்புக்கு
நாதாந்த வேதாந்த போதாந்த நாதனை
ஈதாம் எனுதுகண் டின்புறு வோர்களே. 225

காயத் திரியே கருதுசா வித்திரி
ஆய்தற் குவப்பர் மந்திரமாங் குன்னி
நேயத் தேரேறி நினைவுற்று நேயத்தாய்
மாயத்துள் தோயா மறையோர்கள் தாமே. 226

பெருநெறி யான பிரணவம் ஒர்ந்து
குருநெறி யாலுரை கூடினல் வேதத்
திருநெறி யான திருகை இருந்திச்
சொருபம தானோர் துகளில்பார்ப் பாரே. 227

சத்திய முந்தவம் தான்அவன் ஆதலும்
மெய்த்தகும் இந்தியம் ஈட்டியே வாட்டலும்
ஒத்த உயிருடல் உண்டாய் உணர்வுற்றுப்
பெத்தம் அறுத்தலும் ஆகும் பிரமமே. 228

வேதாந்தங் கேட்க விரும்பிய வேதியர்
வேதாந்தங் கேட்டுத்தம் வேட்கை ஒழிந்திலர்
வேதாந்த மாவது வேட்கை ஒழிந்திடம்
வேதாந்தங் கேட்டவர் வேட்கைவிட் டாரே. 229

நூலும் சிகையும் நுவலின் பிரமமோ
நூலது கார்ப்பாசம் நுண்சிகை கேசமாம்
நூலது வேதாந்தம் நுண்சிகை ஞானமாம்
நூலுடை அந்தணர் காண நுவலிலே. 230

சத்தியம் இன்றித் தனிஞானந் தானின்றி
ஒத்த விடையம்விட் டோரும் உணர்வின்றிப்
பத்தியும் இன்றிப் பரன்உண்மை இன்றிஊண்
பித்தேறும் மூடர் பிராமணர் தாம்அன்றே. 231

திருநெறி யாகிய சித்தசித் தின்றிக்
குருநெறி யாலே குருபதஞ் சேர்ந்து
கரும் நியமாதி கைவிட்டுக் காணுந்
துரிய சமாதியாந் தூய்மறை யோர்க்கே. 232

மறையோ ரவரே மறையவ ரானால்
மறையோர்தம் வேதாந்தம் வாய்மையில் தூய்மை
குறையோர்தல் மற்றுள்ள கோரலா கலமென்(று)
அறிவோர் மறைதெரிந்(து) அந்தணர் ஆமே 233

அந்தண்மை பூண்ட அருமறை அந்தத்துச்
சிந்தைசெய் அந்தணர் சேருஞ் செழும்புவி
நந்துதல் இல்லை நரபதி நன்றாகும்
அந்தியுஞ் சந்தியும் ஆகுதி பண்ணுமே. 234

வேதாந்த ஞானம் விளங்கும் விதியிலோர்
நாதாந்த போதம் நணுகிய போக்கது
போதாந்த மாம்பரன் பாற்புகப் புக்கதால்
நாதாந்த முத்தியுஞ் சித்தியும் நண்ணுமே. 235

ஒன்றும் இரண்டும் ஒடுங்கிய காலத்து
நன்றும் இருந்தும் நலம்பல பேசினும்
வென்று விளங்கும் விகிர்தனை நாடுவர்
சென்று வணங்குந் திருவுடை யோரே. 236

தானே விடும்பற்(று) இரண்டும் தரித்திட
நானே விடப்படும் ஏதொன்றை நாடாது
பூமேவு நான்முகன் புண்ணிய போகனுய்
ஓமேவும் ஓரா குதிஅவி உண்ணவே. 237

இராசதோடம்

கல்லா அரசனும் காலனும் நேரொப்பர்
கல்லா அரசனின் காலன் மிகநல்லன்
கல்லா அரசன் அறம்ஓரான் கொல்என்பான்
நல்லாரைக் காலன் நணுகநில் லானே. 238

நாள்தொறும் மன்னவன் நாட்டில் தவநெறி
நாள்தொறும் நாடி அவன்நெறி நாடானேல்
நாள்தொறும் நாடு கெடுமுட னண்ணுமால்
நாள்தொறும் செல்வம் நரபதி குன்றுமே. 239

வேட நெறிநில்லார் வேடம்பூண் டென்பயன்
வேட நெறிநிற்போர் வேடம் மெய்வேடமே
வேட நெறிநில்லார் தம்மை விறல்வேந்தன்
வேட நெறிசெய்தால் வீடது வாகுமே. 240

மூடங் கெடாதோர் சிகைநூல் முதற்கொள்ளில்
வாடும் புவியும் பெருவாழ்வு மன்னனும்
பீடொன் றிலனுகும் ஆதலால் பேர்த்துணர்ந்(து)
ஆடம் பரநூற் சிகையறுத் தானன்றே. 241

ஞானமி லாதார் சடைசிகை நூல்நண்ணி
ஞானிகள் போல நடிக்கின் றவர்தம்மை
ஞானிக ளாலே நரபதி சோதித்து
ஞானமுண் டாக்குதல் நலமாகும் நாட்டிற்கே. 242

ஆவையும் பாவையும் மற்றற வோரையுந்
தேவர்கள் போற்றும் திருவேடத் தாரையுங்
காவலன் காப்பவன் காவா தொழிவனேல்
பேவும் மறுமைக்கு மீளா நரகமே. 243

திறந்தரு முத்தியுஞ் செல்வமும் வேண்டின்
மறந்தும் அறநெறி யேஆற்றல் வேண்டும்
சிறந்தநீர் ஞாலஞ் செய்தொழில் யாவையும்
அறைந்திடில் வேந்தனுக்கு ஆறிலொன் ருமே, 244

வேந்தன் உலகை மிகநன்று காப்பது
வாய்ந்த மனிதர்கள் அவ்வழி யாநிற்பர்
பேர்ந்திவ் வுலகைப் பிறர்கொள்ளத் தாங்கொள்ளப்
பாய்ந்த புலியன்ன பாவகத் தானே. 245

கால்கொண்டு கட்டிக் கனல்கொண்டு மேலேற்றிப்
பால்கொண்டு சோமன் முகம்பற்றி உண்ணுதோர்
மால்கொண்டு தேறலே உண்ணும் மருளரை
மேல்கொண்டு தண்டஞ்செய் வேந்தன் கடனே. 246

தத்தஞ் சமயத் தகுதிநில் லாதாரை
அத்தன் சிவன்சொன்ன ஆகம நூல்நெறி
எத்தண் டமும்செயும் அம்மையில் இம்மைக்கே
மெய்த்தண்டம் செய்வதவ் வேந்தன் கடனே. 247

வானச்சிறப்பு

அமுதூறு மாமழை நீரத னாலே
அமுதூறும் பன்மரம் பார்மிசை தோற்றுங்
கமுகூறு தெங்கு கரும்பொடு வாழை
அமுதூறும் காஞ்சிரை ஆங்கது வாகுமே 248

வரையிடை நின்றிழி வான் நீர் அருவி
உரையில்லை உள்ளத் தகத்துநின் றூறும்
நுரையில்லை மாசில்லை நுண்ணிய தெண்ணீர்க்
கரையில்லை எந்தை கழுமணி யாறே. 249

தானச்சிறப்பு

ஆர்க்கும் இடுமின் அவரிவர் என்னன்மின்
பார்த்திருந் துண்மின் பழம்பொருள் போற்றன்மின்
வேட்கை யுடையீர் விரைந்தொல்லை உண்ணன்மின்
காக்கை கரைந்துண்ணும் காலம் அறிமினே. 250

அறஞ்செய்வான் திறம்

தாமறி வாரண்ணல் தாள்பணி வாரவர்
தாமறி வாரறந் தாங்கிநின் றாரவர்
தாமறி வார்சிவ தத்துவ ராவர்கள்
தாமறி வார்க்குத் தமர்பர னாமே. 251

யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே. 252

அற்றுநின் றாருண்ணும் ஊணே அறனென்னுங்
கற்றன போதங் கமழ்பவர் மானிடர்
உற்றுநின் றாங்கொரு கூவற் குளத்தினிற்
பற்றிவந் துண்ணும் பயன்அறி யாரே. 253

அழுக்கினை ஓட்டி அறிவை நிறையீர்
தழுக்கிய நாளில் தருமமுஞ் செய்யீர்
விழித்திருந் தென்செய்வீர் வெம்மை பரந்து
இழிக்கவன் றென்செய்வீர் ஏழைநெஞ் சீரே. 254

தன்னை அறியாது தான்நல்லன் என்னாதிங்(கு)
இன்மை யறியா(து) இளையரென் றோராது
வன்மையில் வந்திடுங் கூற்றம் வருமுன்னந்
தன்மையும் நல்ல தவஞ்செய்யும் நீரே. 255

துறந்தான் வழிமுதற் சுற்றமும் இல்லை
இறந்தான் வழிமுதல் இன்பமும் இல்லை
மறந்தான் வழிமுதல் வந்திலன் ஈசன்
அறந்தான் அறியும் அளவறி வாரே. 256

தான்தவம் செய்வதாம் செய்தவத் தவ்வழி
மான்தெய்வ மாக மதிக்கும் மனிதர்காள்
ஊன்தெய்வ மாக உயிர்க்கின்ற பல்லுயிர்
நான்தெய்வம் என்று நமன்வரு வானே. 257

திளைக்கும் வினைக்கடல் தீர்வுறு தோணி
இளைப்பினை நீக்கும் இருவழி உண்டு
கிளைக்கும் தனக்கும்அக் கேடில் புகழோன்
விளைக்குந் தவம் அறம் மேற்றுணை யாமே. 358

பற்றது வாய்நின்ற பற்றினைப் பார்மிசை
அற்றம் உரையான் அறநெறிக் கல்லது
உற்றுங் களால்ஒன்றும் ஈந்தது வேதுணை
மற்றண்ணல் வைத்த வழிகொள்ளு மாறே. 259

அறஞ் செய்யான் திறம்

எட்டி பழுத்த இருங்கனி வீழ்ந்தன
ஒட்டிய நல்லறஞ் செய்யா தவர்செல்வம்
வட்டிகொண் டீட்டியே மண்ணின் முகந்திடும்
பட்டிப் பதகர் பயன்அறி யாரே. 260

ஒழிந்தன காலங்கள் ஊழியும் போயின
கழிந்தன கற்பனை நாளுங் குறுகிப்
பிழிந்தன போலத்தம் பேரிடர் ஆக்கை
அழிந்தன கண்டும் அறம்அறி யாரே. 261

அறம்அறி யார் அண்ணல் பாதம் நினையுந்
திறம்அறி யார்சிவ லோக நகர்க்குப்
புறம்அறி யார்பலர் பொய்ம்மொழி கேட்டு
மறம்அறி வார்பகை மன்னிநின் றாரே. 262

இருமலுஞ் சோகையும் ஈளையும் வெப்புந்
தருமஞ்செய் யாதவர் தம்பால தாகும்
உருமிடி நாக(ம்) உரோணி கழலை
தருமஞ்செய் வார்பக்கல் தாழகி லாவே. 263

பரவப் படுவார் பரமனை ஏத்தார்
இரவலர்க்(கு) ஈதலை யாயினும் ஈயார்
கரகத்தால் நீரட்டிக் காவை வளர்க்கார்
நகரத்தில் நிற்றிரோ நன்னெஞ்சி னீரே. 264

வழிநடப் பாரின்றி வானோர் உலகங்
கழிநடப் பார்நடந் தார்கரும் பாரும்
மழிநடக் கும்வினை மாசற வோட்டிட்(டு)
ஒழிநடப் பார்வினை ஓங்கிநின் றாரே. 265

கனிந்தவர் ஈசன் கழலடி காண்பர்
துணிந்தவர் ஈசன் துறக்கம(து) ஆள்வர்
மலிந்தவர் மாலுந் துணையுமொன்(று) இன்றி
மெலிந்த சினத்தினுள் வீழ்ந்தொழிந் தாரே. 266

இன்பம் இடரென்(று) இரண்டுற வைத்தது
முன்பவர் செய்கையினாலே முடிந்தது
இன்பம் அதுகண்டும் ஈகிலாப் பேதைகள்
அன்பிலார் சிந்தை அறம்அறி யாரே. 267

கெடுவது(ம்) ஆவதுங் கேடில் புகழோன்
நடுவல்ல செய்தின்பம் நாடவும் ஒட்டான்
இடுவதும் ஈவதும் எண்ணுமின் இன்பம்
படுவது செய்யிற் பசுவது வாமே. 268

செல்வங் கருதிச் சிலர்பலர் வாழ்வெனும்
புல்லரி வாளரைப் போற்றிப் புலராமல்
இல்லங் கருதி இறைவனை ஏத்துமின்
வில்லி இலக்கெய்த விற்குறி யாமே. 269

அன்புடைமை

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ(து) ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவ(து) ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே. 270

பொன்னைக் கடந்திலங் கும்புலித் தோலினன்
மின்னிக் கிடந்து மிளிரும் இளம்பிறை
துன்னிக் கிடந்த சுடுபொடி யாடிக்குப்
பின்னிக் கிடந்ததென் பேரன்பு தானே. 271

என்பே விறகா இறைச்சி அறுத்திட்டுப்
பொன்போற் கனலிற் பொரிய வறுப்பினும்
அன்போ(டு) உருகி அகங்குழை வார்க்கன்றி
என்போன் மணியினை எய்தவொண் ணாதே. 272

ஆர்வம் உடையவர் காண்பர் அரன்தன்னை
ஈரம் உடையவர் காண்பர் இணையடி
பாரம் உடையவர் காண்பார் பவந்தன்னைக்
கோர நெறிகொடு கொங்குபுக் காரே. 273

என்னன்(பு) உருக்கி இறைவனை ஏத்துமின்
முன்னன்(பு) உருக்கி முதல்வனை நாடுமின்
பின்னன்(பு) உருக்கிப் பெருந்தகை நந்தியுந்
தன்னன்(பு) எனக்கே தலைநின்ற வாறே. 274

தானொரு காலஞ் சயம்புவென் றேத்தினும்
வானொரு காலம் வழித்துணை யாய்நிற்குந்
தேனொரு பால்திகழ் கொன்றை அணிசிவன்
தானொரு வண்ணம்என் அன்பில்நின் றானே 275

முன்படைத்(து) இன்பம் படைத்த முதலிடை
அன்படைத்(து) எம்பெரு மானை அறிகிலார்
வன்படைத்(து) இந்த அகலிடம் வாழ்வினில்
அன்படைத் தான்றனர் அகலிடந் தானே. 276

கருத்துறு செம்பொன்செய் காய்கதிர்ச் சோதி
இருத்தியும் வைத்தும் இறைவஎன்(று) ஏத்தியும்
அருத்தியுள் ஈசனை யாரருள் வேண்டில்
விருத்தி கொடுத்திடும் விண்ணவர் கோனே. 277

நித்தலுந் துஞ்சும் பிறப்பையுஞ் செய்தவன்
வைத்த பரிசறிந்(து) ஏயு மனிதர்கள்
இச்சையு ளேவைப்பர் எந்தை பிரான் என்று
நச்சியே அண்ணலை நாடுகி லாரே. 278

அன்பினுள் ளான்புறத் தானுட லாயுளான்
முன்பினுள் ளான்முனி வர்க்கும் பிரானவன்
அன்பினுள் ளாகி அமரும் அரும்பொருள்
அன்பினுள் ளார்க்கே அணைதுணை யாமே 279

அன்புசெய்வாரை அறிவன் சிவன்

இகழ்ந்ததும் பெற்றதும் ஈசன் அறியும்
உகந்தருள் செய்திடும் உத்தம நாதன்
கொழுந்தன்பு செய்தருள் கூரவல் லார்க்கு
மகிழ்ந்தன்பு செய்யு மருளது வாமே 280

இன்பப் பிறவிக்(கு) இயல்வது செய்தவன்
துன்பப் பிறவித் தொழில்பல எண்ணினும்
அன்பிற் கலவிசெய்(து) ஆதிப் பிரான்வைத்த
முன்பிப் பிறவி முடிவது தானே. 281

அன்புறு சிந்தையின் மேலெழும் அவ்வொளி
இன்புறு கண்ணியொ(டு) ஏற்க இசைந்தன
துன்புறு கண்ணியைந் தொடும் துடக்கற்று
நண்புறு சிந்தையை நாடுமின் நீரே. 282

புணர்ச்சியுள் ஆயிழை மேலன்பு போல
உணர்ச்சியுள் ஆங்கே ஒடுங்கவல் லார்க்கு
உணர்ச்சியில் லாது குலாவி உலாவி
அணைத்தலும் இன்பம் அதுஇது வாமே 283

உற்றுநின் றாரொடும் அத்தகு சோதியைச்
சித்தர்கள் என்றும் தெரிந்தறி வாரில்லை
பத்திமை யாலே பணிந்தடி யார்தொழ
முத்தி கொடுத்தவர் முன்புநின் றானே. 284

கண்டேன் கமழ்தரு கொன்றையி னான்அடி
கண்டேன் கரியுரி யான்றன் கழல்இணை
கண்டேன் கமல மலருறை வானடி
கண்டேன் கழலதென் அன்பினுள் யானே 285

நம்பனை நாளு விதப்பொரு ளாகுமென்(று)
உம்பரில் வானவர் ஓதுந் தலைவனை
இன்பனை இன்பத் திடைநின்(று) இரதிக்கும்
அன்பனை யாரும் அறியகி லாரே. 286

முன்பு பிறப்பும் இறப்பும் அறியாதார்
அன்பில் இறைவனை யாம்அறி வோமென்பர்
இன்பப் பிறப்பும் இறப்பும் இலான்நந்தி
அன்பி லவனை அறியகி லாரே. 287

ஈசன் அறியும் இராப்பக லுந்தன்னைப்
பாசத்துள் வைத்துப் பரிவுசெய் வார்களைத்
தேசுற் றறிந்து செயலற் றிருந்திடில்
ஈசன்வந் தெம்மிடை ஈண்டிநின் றானே. 288

விட்டுப் பிடிப்பதென் மேதகு சோதியைத்
தொட்டுத் தொடர்வன் தொலையாப் பெருமையை
எட்டுமென் னுருயி ராய்நின்ற ஈசனை
மட்டுக் கலப்பது மஞ்சன மாமே. 289

கல்வி

குறிப்பறிந் தேனுடல் உயிரது கூடிச்
செறிப்பறிந் தேன்மிகு தேவர் பிரானை
மறிப்பறி யாதுவந் துள்ளம் புகுந்தான்
கறிப்பறி யாமிகும் கல்விகற் றேனே. 290

கற்றறி வாளர் கருதிய காலத்துக்
கற்றறி வாளர் கருத்திலோர் கண்ணுண்டு
கற்றறி வாளர் கருதி உரைசெய்யும்
கற்றறி காட்டக் கயலுள வாக்குமே. 291

நிற்கின்ற போதே நிலையுடை யான்கழல்
கற்கின்ற செய்மின் கழிந்தறும் பாவங்கள்
சொற்குன்றல் இன்றித் தொழுமின் தொழுதபின்
மற்ருென் றிலாத மணிவிளக்(கு) ஆமே. 292

கல்வி யுடையார் கழிந்தோடிப் போகின்ருர்
பல்லி யுடையார் பாம்பரிந்(து) உண்கின்ருர்
எல்லியும் காலையும் ஏத்தும் இறைவனை
வல்லியுள் வாதித்த காயமு மாமே. 293

துணையது வாய்வரும் தூயநற் சோதி
துணையது வாய்வரும் தூயநற் சொல்லாம்
துணையது வாய்வரும் தூயநற் கந்தம்
துணையது வாய்வரும் தூயநற் கல்வியே. 294

நூலொன்று பற்றி நுனியேற மாட்டாதார்
பாலொன்று பற்றினல் பண்பின் பயன்கெடும்
கோலொன்று பற்றினல் கூடா பறவைகள்
மாலொன்று பற்றி மயங்குகின் ருர்களே. 295

ஆய்ந்துகொள் வார்க்கரன் அங்கே வெளிப்படும்
தோய்ந்த நெருப்பது தூய்மணி சிந்திடும்
ஏய்ந்த இளமதி எட்டவல் லார்கட்கு
வாய்ந்த மனமல்கு நூலேணி யாமே. 296

வழித்துணை யாய்மருந் தாயிருந் தார்முன்
கழித்துணை யாங்கற் றிலாதவர் சிந்தை
ஒழித்துணை யாமும்ப ராமுல கேழும்
வழித்துணை யாம்பெருந் தன்மைவல் லானே. 297

பற்றது பற்றின் பரமனைப் பற்றுமின்
முற்றது எல்லா முதல்வன் அருள்பெறில்
கிற்ற விரகின் கிளரொளி வானவர்
கற்றவர் பேரின்பம் உற்றுநின் றரே. 298

கடலுடை யான்மலை யானைந்து பூதத்(து)
உடலுடை யான்பல ஊழிதொ றூழி
அடல்விடை ஏறும் அமரர்கள் நாதன்
இடமுடை யார்நெஞ்சத்(து) இல்லிருந்தானே. 299

கேள்விகேட்டமைதல்

அறங்கேட்டும் அந்தணர் வாய்மொழி கேட்டும்
மறங்கேட்டும் வானவர் மந்திரங் கேட்டும்
புறங்கேட்டும் பொன்னுரை மேனியெம் ஈசன்
திறங்கேட்டும் பெற்ற சிவகதி தானே. 300

தேவர் பிரான்றனைத் திவ்விய மூர்த்தியை
யாவர் ஒருவர் அறிவார் அறிந்தபின்
ஓதுமின் கேள்மின் உணர்மின் உணர்ந்தபின்
ஓதி உணர்ந்தவர் ஓங்கிநின் றரே. 301

மயன்பணி கேட்பது மாநந்தி கேட்பின்
அயன்பணி கேட்பது அரன்பணி யாலே
சிவன்பணி கேட்பவர் தேவரு மாவர்
பயன்பணி கேட்பது பற்றது வாமே. 302

பெருமான் இவனென்று பேசி யிருக்குந்
திருமா னிடர்பின்னைத் தேவரு மாவர்
வருமா தவர்க்கு மகிழ்ந்தருள் செய்யும்
அருமா தவத்தெங்கள் ஆதிப் பிரானே. 303

ஈசன் அருளும் இறப்பும் பிறப்பையும்
பேசி யிருந்து பிதற்றி மகிழ்வெய்தின்
நேசமும் ஆகும் நிகழொளி யாய்நின்று
வாச மலர்க்கந்த மன்னிநின் றானே. 304

விழுப்பமுங் கேள்வியும் மெய்நின்ற ஞானத்(து)
ஒழுக்கமுஞ் சிந்தை உணர்கின்ற போது
வழுக்கி விழாவிடில் வானவர் கோனும்
இழுக்கின்றி எண்ணிலி காலம தாமே 305

சிறியார் மணற்சோற்றில் தேக்கிடு மாபோல்
செறிவால் அனுபோகஞ் சித்திக்கும் என்னில்
குறியாத தொன்றைக் குறியாதார் தம்மை
அறியா திருந்தார் அவராவர் அன்றே, 306

உறுதுணை யாவ(து) உயிரும் உடம்பும்
உறுதுணை யாவ(து) உலகுறு கேள்வி
செறிதுணை யாவது சிவனடிச் சிந்தை
பெறுதுணை கேட்கிற் பிறப்பில்லை தானே. 307

புகழநின் றார்க்கும் புராணன்எம் ஈசன்
இகழநின் றார்க்கும் இடும்பைக் கிடமா
மகிழநின் றதியை ஓதி உணராக்
கழியநின் றார்க்கொரு கற்பசு வாமே. 308

வைத்துணர்ந் தான்மனத் தோடும்வாய் பேசி
ஒத்துணர்ந் தானொரு ஒன்றொடொன்(று) ஒவ்வாது
அச்சுழன்(று) ஆணி கலங்கினும் ஆதியை
நச்சுணர்ந் தார்க்கே நணுகலு மாமே. 309

கல்லாமை

கல்லா தவருங் கருத்தறி காட்சியை
வல்லா ரெனில்அருட் கண்ணுன் மதித்துளோர்
கல்லாதார் உண்மைபற் ருநிற்பர் கற்ருேருங்
கல்லாதார் இன்பங் காணுகி லாரே. 310

வல்லார்கள் என்றும் வழியொன்றி வாழ்கின்ருர்
அல்லா தவர்கள் அறிவு பலஎன்பார்
எல்லா இடத்தும் உளன்எங்கள் தம்இறை
கல்லா தவர்கள் கலப்பறி யாரே. 311

நில்லா நிலையை நிலையாக நெஞ்சத்து
நில்லாக் குரம்பை நிலையென்(று) உணர்வீர்காள்
எல்லா வுயிர்க்கும் இறைவனே யாயினுங்
கல்லாதார் நெஞ்சத்துக் காணவொண் ணுதே. 312

கில்லேன் வினைத்துய ராக்கு மயலானேன்
கல்லேன் அரனெறி அறியாத் தகைமையின்
வல்லேன் வழங்கும் பொருளே மனத்தினுட்
கல்லேன் கழியநின் ருடவல் லேனே. 313

நில்லாது சீவன் நிலையன்றென் றெண்ணி
வல்லார் அறத்துந் தவத்துளும் ஆயினுர்
கல்லா மனித்தர் கயவர் உலகினில்
பொல்லா வினைத்துயர் போகஞ்செய் வாரே. 314

விண்ணினின் உள்ளே விளைந்த விளங்கனி
கண்ணினின் உள்ளே கலந்தங் கிருந்தது
மண்ணினின் உள்ளே மதித்து மதித்துநின்(று)
எண்ணி எழுதி இளைத்துவிட் டாரே. 315

கணக்கறிந் தார்க்கன்றிக் காணவொண் ணாது
கணக்கறிந் தார்க்கன்றிக் கைகூடாக் காட்சி
கணக்கறிந் துண்மையைக் கண்டண்ட நிற்குங்
கணக்கறிந் தார்கல்வி கற்றறிந் தாரே. 316

கல்லாத மூடரைக் காணவும் ஆகாது
கல்லாத முடர்சொல் கேட்கக் கடன்அன்று
கல்லாத மூடர்க்குக் கல்லாதார் நல்லராம்
கல்லாத மூடர் கருத்தறி யாரே. 317

கற்றுஞ் சிவஞானம் இல்லாக் கலதிகள்
சுற்றமும் வீடார் துரிசறார் மூடர்கள்
மற்றும் பலதிசை காணார் மதியிலோர்
கற்றன்பில் நிற்போர் கணக்கறிந் தார்களே. 318

ஆதிப் பிரான்அம ரர்க்கும் பரஞ்சுடர்
சோதி அடியார் தொடரும் பெருந்தெய்வம்
ஓதி உணரவல் லோம்என்பர் உள்நின்ற
சோதி நடத்துந் தொடர்வறி யாரே. 319

நடுவு நிலைமை

நடுவுநின் றார்க்கன்றி ஞானமும் இல்லை
நடுவுநின் றார்க்கு நரகமும் இல்லை
நடுவுநின் றார்நல்ல தேவரும் ஆவர்
நடுவுநின் றார்வழி நானும்நின் றேனே. 320

நடுவுநின் றான்நல்ல கார்முகில் வண்ணன்
நடுவுநின் றான்நல்ல நான்மறை ஓதி
நடுவுநின் றார்சிலர் ஞானிக ளாவோர்
நடுவுநின் றார்நல்ல நம்பனும் ஆமே. 321

நடுவுநின் ரூர்சிலர் ஞானிக ளாவர்
நடுவுநின் ரூர்சிலர் தேவரு மாவர்
நடுவுநின் ரூர்சிலர் நம்பனு மாவர்
நடுவுநின் ருரொடு நானும்நின் றேனே. 322

தோன்றிய எல்லாம் துடைப்பன் அவனன்றி
ஏன்றுநின் ருரென்றும் ஈசன் இணையடி
மூன்றுநின் ரூர்முதல் வன்திரு நாமத்தை
நான்றுநின் ரூர்நடு வாகிநின் ருரே. 323

கள்ளுண்ணாமை

கழுநீர்ப் பசுப்பெறின் கயந்தொறும் தேரா
கழுநீர் விடாய்த்துத்தங் காயம் சுருக்கும்
முழுநீர்க் கள்ளுண்போர் முறைமை அகன்ரூர்
செழுநீர்ச் சிவன்றன் சிவானந்தத் தேறலே. 324

சித்தம் உருக்கிச் சிவமாம் சமாதியில்
ஒத்த சிவானந்தம் ஓவாத தேறலைச்
சுத்த மதுவுண்ணச் சுவானந்தம் விட்டிடா
நித்தல் இருத்தல் கிடத்தல்கீழ்க் காலே. 325

காமமும் கள்ளும் கலதிகட் கேயாகும்
மாமல முஞ்சம யத்துள் மயலுறும்
போமதி யாகும் புனிதன் இணையடி
ஓமய ஆனந்தத் தேறல் உணர்வுண்டே. 326

வாமத்தோர் தாமும் மதுவுண்டு மாள்பவர்
காமத்தோர் காமக்கள் ளுண்டே மயங்குவர்
ஓமத்தோர் உள்ளொளிக் குள்ளே உணர்வர்கள்
நாமத்தோர் அன்றே நணுகுவர் தாமே. 327

உள்ளுண்மை ஓரார் உணரார் பசுபாசம்
வள்ளன்மை நாதன் அருளினின் வாழ்வுறார்
தெள்ளுண்மை ஞானச் சிவயோகம் சேர்வுறார்
கள்ளுண்ணும் மாந்தர் கருத்தறி யாரே. 328

மயக்குஞ் சமய மலமன்னு மூடர்
மயக்கு மதுவுண்ணு மாமூடர் தேரார்
மயக்குறு மாயையின் மாமாயை வீடு
மயக்கில் தெளியின் மயக்குறும் அன்றே. 329

மயங்கும் தியங்குங்கள் வாய்மை அழிக்கும்
இயங்கும் மடவார்தம் இன்பமே எய்தி
முயங்கும் நயங்கொண்ட ஞானத்து முந்த
இயங்கும் இடையறா ஆனந்தம் எய்துமே. 330

இராப்பகல் அற்ற இடத்தே இருந்து
பராக்கற ஆனந்தத் தேறல் பருகார்
இராப்பகல் அற்ற இறையடி இன்பத்து
இராப்பகல் மாயை இரண்டிடத் தேனே. 331

சத்தியை வேண்டிச் சமயத்தோர் கள்ளுண்பர்
சத்தி அழிந்தது தம்மை மறத்தலால்
சத்தி சிவஞானம் தன்னில் தலைப்பட்டுச்
சத்திய ஞானவா னந்தத்திற் சார்தலே. 332

சத்தன் அருள்தரின் சத்தி அருளுண்டாம்
சத்தி அருள்தரின் சத்தன் அருளுண்டாம்
சத்தி சிவமாம் இரண்டுந்தன் னுள்வைக்கச்
சத்தியம் எண்சித்தித் தன்மையு மாமே, 333

தத்துவம் நீக்கி மருள் நீக்கித் தானாகிப்
பொய்த்தவம் நீக்கிமெய்ப் போகத்துட் போகியே
மெய்த்த சகமுண்டு விட்டுப் பரானந்தச்
சித்திய தாக்கும் சிவானந்தத் தேறலே. 334

யோகிகள் கால்கட்டி ஒண்மதி ஆனந்தப்
போத அமுதைப் பொசித்தவர் எண்சித்தி
மோகியர் கள்ளுண்டு மூடராய் மோகமுற்று
ஆகும் மதத்தால் அறிவழிந் தாரே. 335

உண்ணீர் அமுதம் உறுமூ றலைத்திறந்(து)
எண்ணீர் குரவன் இணையடித் தாமரை
நண்ணீர் சமாதியி னுடிநீ ரானலங்
கண்ணு ருடேசென்று கால்வழி காணுமே. 336

முதல் தந்திரம் முற்றிற்று.

இரண்டாம் தந்திரம்

அகத்தியம்

நடுவுநில் லாதிவ் வுலகம் சரிந்து
கெடுகின்ற தெம்பெரு மானென்ன ஈசன்
நடுவுள அங்கி அகத்திய நீபோய்
முடுகிய வையத்து முன்னிரென் றானே. 337

அங்கி உதயம் வளர்க்கும் அகத்தியன்
அங்கி உதயஞ்செய் மேல்பா லவனொடும்
அங்கி உதயஞ்செய் வடபால் தவமுனி
எங்கும் வளங்கொள் இலங்கொளி தானே. 338

பதிவலியில் வீரட்டம்

கருத்துறை அந்தகன் தன்போல் அசுரன்
வரத்தின் உலகத் துயிர்களை எல்லாம்
வருத்தஞ்செய் தானென்று வானவர் வேண்டக்
குருத்துயர் சூலங்கைக் கொண்டுகொன் றானே. 339

கொலையிற் பிழைத்த பிரசா பதியைத்
தலையைத் தடிந்திட்டுத் தானங்கி யிட்டு
நிலையுல குக்கிவன் வேண்டுமென் றெண்ணித்
தலையைப் பரிந்திட்டுச் சந்திசெய் தானே. 340

எங்கும் பரந்தும் இருநிலந் தாங்கியுந்
தங்கும் படித்தவன் தாளுணர் தேவர்கள்
பொங்கும் சினத்துள் அயன்தலை முன்னற
அங்(கு) அச் சுதனை உதிரங்கொண் டானே. 341

எங்கும் கலந்துமென் உள்ளத்(து) எழுகின்ற
அங்க முதல்வன் அருமறை யோதிபால்
பொங்குஞ் சலந்தரன் போர்செய்ய நீர்மையின்
அங்கு விரற்குறித்(து) ஆழிசெய் தானே. 342

அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்
முப்புரஞ் செற்றனன் என்பர்கள் மூடர்கள்
முப்புர மாவது மும்மல காரியம்
அப்புரம் எய்தமை யாரறி வாரே. 343

முத்தீக் கொளுவி முழங்கெரி வேள்வியுள்
அத்தி யுரியர(ன்) ஆவ(து) அறிகிலர்
சத்தி கருதிய தாம்பல தேவரும்
அத்தீயின் உள்ளெழுந்(து) அன்று கொலையே. 344

மூலத் துவாரத்து மூளும் ஒருவனை
மேலைத் துவாரத்து மேலுற நோக்கிமுற்
காலுற்றுக் காலனைக் காய்ந்தங்கி யோகமாய்
ஞாலக் கடவூர் நலமாய் இருந்தே. 345

இருந்த மனத்தை இசைய இருத்திப்
பொருந்தி இலிங்க வழியது போக்கித்
திருந்திய காமன் செயலழித் தங்கண்
அருந்தவ யோகங் கொறுக்கை அமர்ந்ததே. 346

இலிங்கபுராணம்

அடிசேர்வன் என்னளம் ஆதியை நோக்கி
முடிசேர் மலைமக னார்மக ளாகித்
திடமாத வஞ்செய்து தேவர் அறியப்
படியார அர்ச்சித்துப் பத்திசெய் தாளே. 347

திரிகின்ற முப்புரஞ் செற்ற பிரானை
அரியனென்(று) எண்ணி அயர்வுற வேண்டா
புரிவுடை யாளர்க்குப் பொய்யலன் ஈசன்
பரிவொடு நின்று பரிசறி வானே. 348

ஆழி வலங்கொண்(டு) அயன்மால் இருவரும்
ஊழி வலஞ்செய்ய ஒண்சுட ராதியும்
ஆழி கொடுத்தனன் அச்சுதற் கவ்வழி
வாழிப் பிரமற்கும் வாள்கொடுத் தானே. 349

தாங்கி இருபது தோளுந் தடவரை
ஓங்க எடுத்தவன் ஒப்பில் பெருவலி
ஆங்கு நெரித்தம ராவென் றழைத்தபின்
நீங்கா அருள் செய்தான் நின்மலன் தானே. 350

உறுவ(து) அறிதண்டி ஒண்மணற் கூட்டி
அறுவகை ஆன்ஐந்தும் ஆட்டத்தன் தாதை
செறுவகை செய்து சிதைப்ப முனிந்து
மறுமழு வால்வெட்டி மாலைபெற் றானே. 351

ஓடிவந் தெல்லாம் ஒருங்கிய தேவர்கள்
வாடி முகமும் வருத்தத்துத் தாஞ்சென்று
நாடி இறைவா நமஎன்று கும்பிட
ஈடில் புகழோன் எழுகவென் றானே. 352

தக்கன் வேள்வி

தந்தை பிரான்வெகுண் டான் தக்கன் வேள்வியை
வெந்தழல் ஊடே புறப்பட விண்ணவர்
முந்திய பூசை முடியார் முறைகெட்டுச்
சிந்தினர் அண்ணல் சினஞ்செய்த போதே. 353

சந்தி செயக்கண்(டு) எழுகின்(று) அரிதானும்
எந்தை யிவனல்ல யாமே உலகினிற்
பந்தஞ்செய் பாசத்து வீழ்ந்து தவஞ்செய்ய
அந்தமி லானும் அருள்புரிந் தானே. 354

அப்பரி சேயய ஞர்பதி வேள்வியுள்
அப்பரி சேயங்கி அதிசய மாகிலும்
அப்பரி சேயது நீர்மையை யுள்கலந்(து)
அப்பரி சேசிவன் ஆவிக்கின் ருனே. 355

அப்பரி சேஅயன் மால்முதல் தேவர்கள்
அப்பரி சேயவ ராகிய காரணம்
அப்பரி சங்கி யுளநாளும் உள்ளிட்(டு)
அப்பரி சாகி அலர்ந்திருந்தானே. 356

அலர்ந்திருந் தானென்(று) அமரர் துதிப்பக்
குலந்தருங் கீழங்கி கோளுற நோக்கிச்
சிவந்த பரமிது சென்று கதுவ
உவந்த பெருவழி யோடிவந் தானே. 357

அரிபிர மன்தக்கன் அருக்க னுடனே
வருமதி வாலே வன்னிநல் இந்திரன்
சிரமுக நாசி சிறந்தகை தோள்தான்
அரனருள் இன்றி அழிந்தநல் லோரை. 358

செவிமந் திரஞ்சொல்லுஞ் செய்தவத் தேவர்
அவிமந் திரத்தின் அடுக்களை கோலிச்
செவிமந் திரஞ்செய்து தாமுற நோக்குங்
குவிமந் திரங்கொல் கொடியது வாமே. 359

நல்லார் நவகுண்டம் ஒன்பதும் இன்புறப்
பல்லார் அமரர் பரிந்தருள் செய்கென
வில்லாற் புரத்தை விளங்கெரி கோத்தவன்
பொல்லா அசுரர்கள் பொன்றும் படிக்கே. 360

தெளிந்தார் கலங்கினும் நீகலங் காதே
அளிந்தாங் கடைவதெம் ஆதிப் பிரானை
விளிந்தா னதுதக்கன் வேள்வியை வீயச்
சுளிந்தாங் கருள்செய்த தூய்மொழி யானே. 361

பிரளயம்

கருவரை மூடிக் கலந்தெழும் வெள்ளத்(து)
இருவருங் கோவென்(று) இகல இறைவன்
ஒருவனும் நீருற ஓங்கொளி யாகி
அருவரை யாய்நின்(று) அருள்புரிந் தானே. 362

அலைகடல் ஊடறுத்(து) அண்டத்து வானோர்
தலைவன் எனும்பெயர் தான்றலை மேற்கொண்(டு)
உறகார் அழற்கண்டு உள்வீழா(து) ஓடி
அலைவாயில் வீழாமல் அஞ்சலென் றானே. 363

தண்கடல் விட்ட தமரருந் தேவரும்
எண்கடல் சூழெம் பிரானென்(று) இறைஞ்சுவர்
விண்கடல் செய்தவர் மேலெழுந்து அப்புறங்
கண்கடல் செய்யுங் கருத்தறி யாரே. 364

சமைக்கவல் லானைச் சயம்புவென் றேத்தி
அமைக்கவல் லாரிவ் வுலகத்து ளாரே
திமைத்ததெண் ணீரிற் கடலொலி ஓசை
மிகைக்கொள அங்கி மிகாமை வைத் தானே. 365

பண்பழி செய்வழி பாடுசென் றப்புறங்
கண்பழி யாத கமலத் திருக்கின்ற
நண்பழி யாளனை நாடிச்சென் றச்சிரம்
விண்பழி யாத விருத்திகொண் டானே. 366

சக்கரப்பேறு

மால்போ தகனென்னும் வண்மைக்கிங் காங்காரம்
கால்போதங் கையினோ(டு) அந்தரச் சக்கரம்
மேல்போக வெள்ளி மலைஅம ராபதி
பார்போக மேழும் படைத்துடை யானே. 367

சக்கரம் பெற்றுநல் தாமோ தரன்தானும்
சக்கரந் தன்னைத் தரிக்கவொண் ணுமையால்
மிக்கரன் தன்னை விருப்புடன் அர்ச்சிக்கத்
தக்கநற் சத்தியைத் தான்கூறு செய்ததே. 368

கூறது வாகக் குறித்துநற் சக்கரங்
கூறது செய்து கொடுத்தனன் மாலுக்குக்
கூறது செய்து கொடுத்தனன் சத்திக்குக்
கூறது செய்து தரித்தனன் கோலமே. 369

தக்கன்றன் வேள்வி தகர்த்தநல் வீரர்பால்
தக்கன்றன் வேள்வியில் தாமோ தரன்தானுஞ்
சக்கரந் தன்னைச் சசிமுடி மேல்விட
வக்கி உமிழ்ந்தது வாயுக் கரத்திலே 370

எலும்புங் கபாலமும்

ஏலும்புங் கபாலமும் ஏந்தி எழுந்த
வலம்பன் மணிமுடி வானவ ராதி
எலும்புங் கபாலமும் ஏந்தில ணுகில்
எலும்புங் கபாலமும் இற்றுமண் ணுமே. 371

அடிமுடிதேடல்

பிரமனும் மாலும் பிரானேநான் என்னப்
பிரமன்மால் தங்கள்தம் பேதைமை யாலே
பரமன் அனலாய்ப் பரந்துமுன் நிற்க
அரனடி தேடி அரற்றுகின் ருரே. 372

ஆமே முலகுற நின்றஎம் அண்ணலும்
தாமே முலகில் தழற்பிழம் பாய்நிற்கும்
வானே முலகுறும் மாமணி கண்டனே
நானே அறிந்தேன் அவன் ஆண்மை யாலே. 373

ஊனாய் உயிராய் உணர்வங்கி யாய்முன்னம்
சேணாய்வா னோங்கித் திருவுரு வாய்அண்டத்
தாணுவும் ஞாயிறும் தண்மதி யுங்கடந்
தாண்முழு(து) அண்டமு(ம்) ஆகிநின் றானே. 374

நின்றான் நிலமுழு(து) அண்டத்துள் நீளியன்
அன்றே யவன்வடி வஞ்சின ராய்ந்தது
சென்றார் இருவர் திருமுடி மேற்செல
நன்றாங் கழலடி நாடஒண் ணாதே. 375

சேவடி ஏத்துஞ் செறிவுடை வானவர்
மூவடி தாவென் றானும் முனிவநும்
பாவடி யாலே பதஞ்செய் பிரமனும்
தாவடி யிட்டுத் தலைப்பெய்து மாறே. 376

தானக் கமலத் திருந்த சதுமுகன்
தானக் கருங்கடல் ஊழித் தலைவனும்
ஊனத்தின் உள்ளே உயிர்போல் உணர்கின்ற
தானப் பெரும்பொருள் தன்மைய தாமே. 377

ஆலிங் கனஞ்செய் தெழுந்த பரஞ்சுடர்
மேலிங்ஙன் வைத்ததோர் மெய்ந்நெறி முன்கண்(டு)
ஆலிங் கனஞ்செய்(து) உலகம் வலம்வரும்
கோலிங் கமைஞ்சருள் கூடலு மாமே. 378

வாள்கொடுத் தானை வழிபட்ட தேவர்கள்
ஆள்கொடுத் தெம்போல் அரனை அறிகிலர்
ஆள்கொடுத் தின்பங் கொடுத்துக் கோளாகத்
தாள்கொடுத் தானடி சாரகி லாரே. 379

ஊழி வலஞ்செய்தங்(கு) ஒரும் ஒருவற்கு
வாழி சதுமுகன் வந்து வெளிப்படும்
வீழித் தலைநீர் விதித்திது தாவென
ஊழிக் கதிரோன் ஒளியைவென் றானே. 380

சரீரசிருஷ்டி

ஆதியோ டந்தம் இலாத பராபரம்
போதம தாகப் புணரும் பராபரை
சோதி யதனிற் பரந்தோன்றத் தோன்றுமாந்
தீதில் பரையதன் பால்திகழ் நாதமே. 381

நாதத்தில் விந்துவும் நாதவிந் துக்களில்
தீதற் றகம்வந்த சிவன்சத்தி என்னவே
பேதித்து ஞானங் கிரியை பிறத்தலால்
வாதித்த விச்சையில் வந்தெழும் விந்துவே. 382

இல்லது சத்தி இடந்தனில் உண்டாகிக்
கல்லொளி போலக் கலந்துள் இருந்திடும்
வல்லது ஆக வழிசெய்த அப்பொருள்
சொல்லது சொல்லிடில் தூராதி தூரமே. 383

தூரத்திற் சோதி தொடர்ந்தொரு சத்தியாய்
ஆர்வத்து நாதம் அணைந்தொரு விந்துவாய்
பாரச் சதாசிவம் பார்முதல் ஐந்துக்கும்
சார்வத்துச் சத்திஒர் சாத்துமான் ஆமே. 384

மானின்கண் வானாகி வாயு வளர்ந்திடும்
கானின்கண் நீரும் கலந்து கடினமாய்த்
தேனின்கண் ஐந்துஞ் செறிந்தைந்து பூதமாய்ப்
பூவின்கண் நின்று பொருந்தும் புவனமே. 385

புவனம் படைப்பான் ஒருவன் ஒருத்தி
புவனம் படைப்பார்க்குப் புத்திரர் ஐவர்
புவனம் படைப்பானும் பூமிசை யானாய்
புவனம் படைப்பானப் புண்ணியன் தானே. 386

புண்ணியன் நந்தி பொருந்தி உலகெங்கும்
தண்ணிய மானை வளர்த்திடுஞ் சத்தியும்
கண்ணியல் பாகக் கலவி முழுதுமாய்
மண்ணியல் பாக மலர்ந்தெழு பூவிலே. 387

நீரகத் தின்பம் பிறக்கும் நெருப்பிடை
காயத்திற் சோதி பிறக்கும்அக் காற்றிடை
ஓர்வுடை நல்லுயிர்ப் பாதம் ஒலிசத்தி
நீரிடை மண்ணின் நிலைப்பிறப் பாமே. 388

உண்டுல கேழும் உமிழ்ந்தான் உடனாகி
அண்டத் தமரர் தலைவனும் ஆதியும்
கண்டச் சதுமுகக் காரணன் தன்னொடும்
பண்டிவ் வுலகம் படைக்கும் பொருளே. 389

ஓங்கு பெருங்கடல் உள்ளுறு வானொடும்
பாங்கார் கயிலைப் பராபரன் தானும்
வீங்குங் கமல மலர்மிசை மேலயன்
ஆங்குயிர் வைக்கும் அதுவுணர்ந் தானே. 390

காரணன் அன்பிற் கலந்தெங்கும் நின்றவன்
நாரணன் நின்ற நடுவுட லாய்நிற்கும்
பாரணன் அன்பிற் பதஞ்செய்யும் நான்முகன்
ஆரண மாய்உல காயமர்ந் தானே. 391

பயன்எளி தாம்பரு மாமணி செய்ய
நயன்எளி தாகிய நம்பன்ஒன் றுண்டு
அயன்ஒளி யாயிருந் தங்கே படைக்கும்
பயனெளி தாம்வய ணந்தெளிந் தேனே. 392

போக்கும் வரவும் புனிதன் அருள்புரிந்(து)
ஆக்கமுஞ் சிந்தைய(து) ஆகின்ற காலத்து
மேக்கு மிகநின்ற எட்டுத் திசையொடுந்
தாக்குங் கலக்குந் தயாபரன் தானே. 393

நின்றுயி ராக்கு நிமலன்என் றுயிர்
ஒன்றுயி ராக்கும் அளவை உடலுற
முன்துய ராக்கும் உடற்குந் துணையதா
நன்றுயிர்ப் பானே நடுவுநின் ருனே. 394

ஆகின்ற தன்மையில் அக்கணி கொன்றையன்
வேகின்ற செம்பொனின் மேலணி மேனியன்
போகின்ற சீவன் புகுந்துட லாய்உளன்
ஆகின்ற தன்மைசெய் ஆண்டகை யானே. 395

ஒருவன் ஒருத்தி விளையாடல் உற்ருர்
இருவர் விளையாட்டும் எல்லாம் விளக்கும்
பருவங்கள் தோறும் பயன்பல வான
திருவொன்றிற் செய்கை செகமுற்று மாமே. 396

புகுந்தறி வான்புவ ளுபதி அண்ணல்
புகுந்தறி வான்புரி சக்கரத் தண்ணல்
புகுந்தறி வான்மலர் மேலுறை புத்தேள்
புகுந்தறி யும்முழக் காகிநின் ருரே. 397

ஆணவச் சத்தியும் ஆம்அதில் ஐவ நங்
காரிய காரண ஈசர் கடைமுறை
பேணிய ஐந்தொழி லால்விந்து விற்பிறந்(து)
ஆணவம் நீங்கா(து) அவரென(ல்) ஆகுமே. 398

உற்றமுப் பாலொன்று மாயாள் உதயமாம்
மற்றைய மூன்று மாயோ தயம்விந்து
பெற்றவள் நாதம் பரையிற் பிறத்தலால்
துற்ற பரசிவன் தொல்விளை யாட்டிதே. 399

ஆகாய மாதி சதாசிவ ராதியென்
போகாத சத்தியுட் போந்துடன் போந்தனர்
மாகாய ஈசன் அரன்மால் பிரமனும்
ஆகாயம் பூமி காண அளித்தலே. 400

அளியார் முக்கோணம் வயிந்தவந் தன்னில்
அளியார் திரிபுரை யாம்அவள் தானே
அளியார் சதாசிவ மாகி அமைவாள்
அளியார் கருமங்கள் ஐந்துசெய் வாளே. 401

வாரணி கொங்கை மனோன்மணி மங்கலி
காரண காரிய மாகக் கலந்தவள்
வாரணி ஆரணி யானவம் மோகினி
பூரணி போதாதி போதமு மாமே. 402

நின்றது தானாய் நிறைந்த மகேசுரன்
சென்றங் கியங்கி அரன்திரு மாலவன்
மன்றது செய்யும் மலர்மிசை மேலயன்
என்றிவ ராக இசைந்திருந் தானே. 403

ஒருவனு மேஉல கேழும் படைத்தான்
ஒருவனு மேஉல கேழும் அளந்தான்
ஒருவனு மேஉல கேழும் கடந்தான்
ஒருவனு மேஉட லோடுயிர் தானே. 404

செந்தா மரைவண்ணன் தீவண்ணன் எம்இறை
மஞ்சார் முகில்வண்ணன் மாயஞ்செய் பாசத்துக்
கொந்தார் குழலியர் கூடிய கூட்டத்து
மைந்தார் பிறவி அமைத்துநின் றானே. 405

தேடுந் திசையெட்டுஞ் சீவன் உடல்உயிர்
கூடும் பிறவிக் குணஞ்செய்த மாநந்தி
ஊடு மவர்தம துள்ளத்தி னுள்நின்று
நாடும் வழக்கமும் நான் அறிந் தேனே. 406

ஓராய மேஉல கேழும் படைப்பதும்
ஓராய மேஉல கேழும் அளிப்பதும்
ஓராய மேஉல கேழும் துடைப்பதும்
ஓராய மேஉட லோடுயிர் தானே. 407

நாதன் ஒருவனும் நல்ல இருவருங்
கோது குலத்தொடுங் கூட்டிக் குழைத்தனர்
ஏது பணியென் றிசையும் இருவருக்(கு)
ஆதி இவனே அருளுகின் றானே. 408

அப்பரி சௌ்பத்து நான்குநூ றாயிரம்
மெய்ப்பரி செய்தி விரிந்துயி ராய்நிற்கும்
அப்பரிசே தென்று புகலும் மனிதர்கள்
அப்பரி சேஇருள் மூடிநின் றாரே. 409

ஆதித்தன் சந்திரன் அங்கிஎனப் பலர்
போதித்த வானொலி பொங்கெரி நீர்புவி
வாதித்த சத்தாதி வாக்கு மனாதிகள்
ஓதுற்ற மாயையின் விந்துவின் உற்றதே 410

திதி

புகுந்துநின் றான்வெளி யாய்இரு ளாகிப்
புகுந்துநின் றான்புகழ் வாய்இகழ் வாகிப்
புகுந்துநின் றான்உட லாய்உயி ராகிப்
புகுந்துநின் றான்புந்தி மன்னிநின் றானே. 411

தானே திசையொடு தேவரு மாய்நிற்கும்
தானே உடலுயிர் தத்துவ மாய்நிற்கும்
தானே கடல்மலை யாதியு மாய்நிற்கும்
தானே உலகில் தலைவனு மாமே. 412

உடலாய் உயிராய் உலகம தாகிக்
கடலாய்க் கார்முகில் நீர்பொழி வானாய்
இடையாய் உலப்பிலி எங்குந்தா னாகி
அடையார் பெருவழி அண்ணல்நின் றானே. 413

தேடுந் திசைஎட்டுஞ் சீவன் உடலுயிர்
கூடுமரபிற் குணஞ்செய்து மாநந்தி
ஊடும் அவர்தம(து) உள்ளத்து ளேநின்று
நாடும் வழக்கமும் நான்அறிந் தேனே. 414

தானொரு காலந் தனிச்சுட ராய்நிற்கும்
தானொரு கால்சண்ட மாருத மாய்நிற்கும்
தானொரு காலந் தண்மழை யாய்நிற்கும்
தானொரு காலந்தண் மாயனு மாமே. 415

அன்பும் அறிவும் அடக்கமு மாய்நிற்கும்
இன்பமும் இன்பக் கலவியு மாய்நிற்கும்
முன்புறு காலமும் ஊழியு மாய்நிற்கும்
அன்புற ஐந்தில் அமர்ந்துநின் றானே. 416

உற்று வனைவான் அவனே உலகினைப்
பெற்று வனைவான் அவனே பிறவியைச்
சுற்றிய சாலும் குடமுஞ் சிறுதூதை
மற்றும் அவனே வனையவல் லானே. 417

உள்ளுயிர்ப் பாயுட லாகிநின் றான்நந்தி
வெள்ளுயி ராகும் வெளியான் இலங்கொளி
உள்ளுயிர்க் கும்உணர் வேயுட லுட்பரந்து
தள்ளுயி ராவண்ணந் தாங்கிநின் றானே. 418

தாங்கருந் தன்மையுந் தானவை பல்லுயிர்
வாங்கிய காலத்து மற்றோர் பிறிதில்லை
ஓங்கி எழுமைக்கும் யோகாந்த மவ்வழி
தாங்கிநின் றானும் அத் தாரணி தானே. 419

அணுகினுஞ் சேயவன் அங்கியிற் கூடி
நணுகினும் ஞானக் கொழுந்தொன்று நல்கும்
பணியினும் பார்மிசைப் பல்லுயி ராகித்
தணியினும் மண்ணுடல் அண்ணல்செய் வானே. 420

சங்காரம்

அங்கிசெய் தீசன் அகலிடஞ் சுட்டது
அங்கிசெய் தீசன் அலைகடற் சுட்டது
அங்கிசெய் தீசன் அசுரரைச் சுட்டது
அங்கியவ் வீசற்குக் கைஅம்பு தானே. 421

இலயங்கள் மூன்றினும் ஒன்றுகற் பாந்த
நிலையன்(று) இழிந்தமை நின்றுணர்ந் தேனல்
உலைதந்த மெல்லரி போலும் உலகம்
மலைதந்த மாநிலம் தான்வெந் ததுவே. 422

பதஞ்செய்யும் பாரும் பனிவரை எட்டும்
உதஞ் செய்யும் ஏழ்கடல் ஓதம் முதலாம்
குதஞ்செய்யும் அங்கி கொளுவியா காச
விதஞ்செய்யும் நெஞ்சில் வியப்பில்லை தானே. 423

கொண்டல் வரைநின்(று) இழிந்த குலக்கொடி
அண்டத்துள் ஊறி யிருந்தெண் டிசையாதி
ஒன்றின் பதஞ்செய்த ஓம்என்ற அப்புறக்
குண்டத்தின் மேல்அங்கி கோலிக்கொண் டானே. 424

நித்தசங் காரம் உறக்கத்து நீள்மூடம்
வைத்தசங் காரமுஞ் சாக்கிரா தீதமாம்
சுத்தசங் காரந் தொழிலற்ற கேவலம்
உய்த்தசங் காரம் பரன் அருள் உண்மையே. 425

நித்தசங் காரம் இரண்டுடல் நீவுதல்
வைத்தசங் காரமும் மாயாள்சங் காரமாம்
சுத்தசங் காரம் மனாதீதம் தோய்வித்தல்
உய்த்தசங் காரஞ் சிவன்அருள் உண்மையே. 426

நித்தசங் காரங் கருவிடர் நீக்கினல்
ஒத்தசங் காரம் உடலுயிர் நீவுதல்
வைத்தசங் காரம் கேவலம் ஆன்மாவுக்(கு)
உய்த்தசங் காரம் சிவமாகும் உண்மையே. 427

நித்தசங் காரமும் நீடிளேப் பாற்றுதல்
வைத்தசங் காரமும் மன்னும் அனுதியிற்
சுத்தசங் காரமும் தோயாப் பரன்அருள்
வைத்தசங் காரமும் நாலாம் மதிக்கிலே. 428

பாழே முதலா எழும்பயிர் அவ்விடம்
பாழே அடங்கினும் பண்டைப்பாழ் ஆகாவாம்
வாழாச்சங் காரத்தின் மாலயன் செய்தியாம்
பாழாம் பயிராய் அடங்கும்அப் பாழிலே. 429

தீயவைத் தார்மின்கள் சேரும் வினைதனை
மாயம்வைத் தான்வைத்த வன்பதி ஒன்றுண்டு
காயம்வைத் தான்கலந் தெங்கும் நினைப்பதோர்
ஆயம்வைத் தாயுணர் வாரவைத் தானே, 430

திரோபவம்

உள்ளத் தொருவனை உள்ளுறு சோதியை
உள்ளம்விட் டோரடி நீங்கா ஒருவனை
உள்ளமுந் தானும் உடனே இருக்கினும்
உள்ளம் அவனை உருவறி யாதே. 431

இன்பப் பிறவி படைத்த இறைவனும்
துன்பஞ்செய் பாசத் துயருள் அடைத்தனன்
என்பிற் கொளுவி இசைந்துறு தோல்தசை
முன்பிற் கொளுவி முடிகுவ தாக்குமே. 432

இறையவன் மாதவன் இன்பம் படைத்த
மறையவன் மூவரும் வந்துடன் கூடி
இறையவன் செய்த இரும்பொறி யாக்கை
மறையவன் வைத்த பரிசறி யாரே. 433

காண்கின்ற கண்ணொளி காதல்செய் யீசனை
ஆண்பெண் அலியுரு வாய்நின்ற ஆதியைப்
பூண்படு நாவுடை நெஞ்சம் உணர்ந்திட்டுச்
சேண்படு பொய்கைச் செயலணை யாரே. 434

தெருளும் உலகிற்கும் தேவர்க்கும் இன்பம்
அருளும் வகைசெய்யும் ஆதிப் பிரானும்
சுருளுஞ் சுடருறு தூவெஞ் சுடரும்
இருளும் அறநின்(று) இருட்டறை யாமே. 435

அரைக்கின் றருள்தரும் அங்கங்கள் ஓசை
உரைக்கின்ற ஆசையும் ஒன்றொடொன் றெவ்வாப்
பரக்கும் உருவமும் பாரகந் தானாய்க்
கரக்கின் றவைசெய்த காண்டகை யானே. 436

ஒளித்துவைத் தென்னுள் ளுறவுணர்ந் தீசனை
வெளிப்பட்டு நின்றருள் செய்திடும் ஈண்டே
களிப்பொடுங் காதன்மை என்னும் பெருமை
வெளிப்பட்(டு) இறைஞ்சினும் வேட்சியு மாமே. 437

நின்றது தானாய் நிறைந்த மகேசுரன்
சென்றங் கியங்கும் அயன்திரு மாலவன்
நன்றது செய்யும் மலர்மிசை மேலயன்
என்றிவ ராகி இசைந்திருந் தானே. 438

ஒருங்கிய பாசத்துள் உத்தம சித்தன்
இருங்கரை மேலிருந்(து) இன்புற நாடி
வருங்கரை ஓரா வகையினிற் கங்கை
அருங்கரை பேணு தழுக்கது வாமே. 439

மண்ணொன்று தான்பல நற்கல மாயிடும்
உண்ணின்ற யோனிகள் எல்லாம் ஒருவனே
கண்ணொன்று தான்பல காணும் தனைக்காணா
அண்ணலும் அவ்வண்ணம் ஆகிநின் றானே. 440

அநுக்கிரகம்

எட்டுத் திசையும் அடிக்கின்ற காற்றவன்
வட்டத் திரையனல் மாநிலம் ஆகாசம்
ஒட்டி உயிர்நிலை என்னும்இக் காயப்பை
கட்டி அவிழ்க்கின்ற கண்ணுதல் காணுமே. 441

உச்சியில் ஓங்கி ஒளிதிகழ் நாதத்தை
நச்சியே இன்பங்கொள் வார்க்கு நமனில்லை
விச்சும் விரிசுடர் மூன்றும் உலகுக்கும்
தச்சு மவனே சமைக்கவல் லானே. 442

குசவன் திரிகையில் ஏற்றிய மண்ணைக்
குசவன் மனத்துற்ற தெல்லாம் வனைவன்
குசவனைப் போல்எங்கள் கோன்நந்தி வேண்டில்
அசைவில் உலகம் அதுஇது வாமே. 443

விடையுடை யான்விகிர் தன்மிகு பூதப்
படையுடை யான்பரி சேஉல காக்குங்
கொடையுடை யான்குண மேகுண மாகுஞ்
சடையுடை யான்சிந்தை சார்ந்துநின் றானே. 444

உகந்துநின் றேபடைத் தான்உல கேழும்
உகந்துநின் றேபடைத் தான்பல ஊழி
உகந்துநின் றேபடைத் தான்ஐந்து பூதம்
உகந்துநின் றேஉயிர் ஊன்படைத் தானே. 445

படைத்துடை யான்பண் டுலகங்கள் ஏழும்
படைத்துடை யான்பல தேவரை முன்னே
படைத்துடை யான்பல சீவரை மூன்னே
படைத்துடை யான்பர மாகிநின் ருனே. 446

ஆதி படைத்தனன் ஐம்பெரும் பூதங்கள்
ஆதி படைத்தனன் ஆயபல் ஊழிகள்
ஆதி படைத்தனன் எண்ணிலி தேவரை
ஆதி படைத்தவை தாங்கிநின் ருனே. 447

அகன்ருன் அகலிடம் ஏழுமொன் ருகி
இவன்ரு னெனநின்று எளியனும் அல்லன்
சிவன்ருன் பலபல சீவனும் ஆகி
நவின்ருன் உலகுறு நம்பனு மாமே. 448

உண்ணின்ற சோதி உறநின்ற ஒருடல்
விண்ணின் றமரர் விரும்பும் விழுப்பொருள்
மண்ணின்ற வானேர் புகழ்திரு மேனியன்
கண்ணின்ற மாமணி மாபோ தகமே. 449

ஆரும் அறியாதவ் வண்டத் திருவுருப்
பார்முத லாகப் பயிலுங் கடத்திலே
நீரினிற் பால்போல நிற்கின்ற நேர்மையைச்
சோராமற் காணுஞ் சுகம்அறிந் தேனே. 450

கர்ப்பக்கிரியை

ஆக்குகின் ருன்முன் பிரிந்த இருபத்தஞ்
சாக்குகின் ருனவ ஞதிஎம் ஆருயிர்
ஆக்குகின் ருன்கர்ப்பக் கோளகை யுள்ளிருந்(து)
ஆக்குகின் ருன்அவன் ஆவ(து) அறிந்தே. 451

அறிகின்ற மூலத்தின் மேல்அங்கி அப்புச்
செறிகின்ற ஞானத்துச் செந்தாள் கொளுவிப்
பொறைநின்ற இன்னுயிர் போந்துறை நாடப்
பறிகின்ற பத்தெனும் பாரஞ்செய் தானே. 452

இன்புறு காலத்து இருவர்முன்(பு) ஊறிய
துன்புறு பாசத் துயர்மனே வானுளன்
பண்புறு காலமும் பார்மிசை வாழ்க்கையும்
அன்புறு காலத்(து) அமைத்தொழிந் தானே. 453

கருவை ஒழிந்தவர் கண்டநால் மூவேழ்
புருடன் உடலில் பொருந்துமற் றோரார்
திருவின் கருக்குழி தேடிப் புகுந்த
துருவம் இரண்டாக ஓடி விழுந்ததே. 454

விழுந்தது லிங்கம் விரிந்தது யோனி
ஒழிந்த முதலைந்து யிரோ டேறிப்
பொழிந்து புனல்பூதம் போற்றுங் கரணம்
ஒழிந்த நுதல்உச்சி உள்ளே ஒளித்ததே. 455

பூவின் மணத்தைப் பொருந்திய வாயுவும்
தாவி உலகில் தரிப்பித்த வாறுபோல்
மேவிய சீவனில் மெல்லநீள் வாயுவுங்
கூவி அவிழுங் குறிக்கொண்ட போதே. 456

போகின்ற எட்டும் புகுகின்ற பத்தெட்டும்
மூழ்கின்ற முத்தனும் ஒன்பது வாய்தலும்
நாகமும் எட்டுடன் நாலு புரவியும்
பாகன் விடானெனிற் பன்றியு மாமே. 457

ஏற எதிர்க்கில் இறையவன் ருளுகும்
மாற எதிர்க்கில் அரியவன் ருளுகும்
நேரொக்க வைக்கின் நிகர்போதத் தானுகும்
பேரொத்த மைந்தனும் பேரர சாளுமே. 458

ஏயங் கலந்த இருவர்தஞ் சாயத்துப்
பாயுங் கருவும் உருவா மெனப்பல
காயங் கலந்தது காணப் பதிந்தபின்
மாயங் கலந்த மனோலய மானதே. 459

கர்ப்பத்துக் கேவல மாயாள் கிளைகூட்ட
நிற்குந் துரியமும் பேதித்து நினைவெழ
அற்புறு காமியம் எட்டாதல் மாயேயஞ்
சொற்புறு தூய்மறை வாக்கினுஞ் சொல்லே. 460

என்பால் மிடைந்து நரம்பு வரிகட்டிச்
செம்பால் இறைச்சி திருந்த மனைசெய்து
இன்பால் உயிர்நிலை செய்த இறையோங்கும்
நண்பால் ஒருவனை நாடுகின் றேனே. 461

பதஞ்செய்யும் பால்வண்ணன் மேனிப் பகலோன்
இதஞ்செய்யு மொத்துடல் எங்கும் புகுந்து
குதஞ்செய்யும் அங்கியின் கோபந் தணிப்பான்
விதஞ்செய்யு மாறே விதித்தொழிந் தானே. 462

ஒழிபல செய்யும் வினையுற்ற நாளே
வழிபல நீராட்டி வைத்தெழு வாங்கிப்
பழிபல செய்கின்ற பாசக் கருவைச்
சுழிபல வாங்கிச் சுடாமல்வைத் தானே. 463

சுக்கில நாடியில் தோன்றிய வெள்ளியும்
அக்கிர மத்தே தோன்றுமவ் வியோனியும்
புக்கிடும் எண்விரல் புறப்பட்டு நால்விரல்
அக்கரம் எட்டும்எண் சாணது வாகுமே. 464

போகத்துள் ஆங்கே புகுந்த புனிதனும்
கோசத்துள் ஆகம் கொணர்ந்த கொடைத்தொழில்
ஓகத்துள் ஆங்கே இரண்டெட்டு மூன்றைந்து
மோகத்துள் ஆங்கொரு மூட்டைசெய் தானே. 465

பிண்டத்தில் உள்ளுறு பேதைப் புலனைந்தும்
பிண்டத்தி னூடே பிறந்து மரித்தது
அண்டத்தின் உள்ளுறு சீவனும் அவ்வகை
அண்டத்து நாதத் தமர்ந்திடுந் தானே. 466

இலைப்பொறி ஏற்றி எனதுடல் ஈசன்
துலைப்பொறி யிற்கரு ஐந்துட னட்டி
நிலைப்பொறி முப்பது நீர்மை கொளுவி
உலைப்பொறி ஒன்பதில் ஒன்றுசெய் தானே. 467

இன்புற் றிருவர் இசைவித்து வைத்தமண்
துன்பக் கலசம் அணைவான் ஒருவனே
ஒன்பது நீர்ச்சால் கலசம் பதினெட்டு
வெந்தது சூளை விளைந்தது தானே. 468

அறியீர் உடம்பினில் ஆகிய வாறும்
பிறியீர் அதனிற் பெருகுங் குணங்கள்
செறியீர் அவற்றினுட் சித்திகள் இட்ட(து)
அறிவீர் ஐந்தினுள் ஆனது பிண்டமே. 469

உடல் வைத்த வாறும் உயிர்வைத்த வாறும்
மடைவைத்த ஒன்பது வாய்தலும் வைத்துத்
திடம்வைத்த தாமரைச் சென்னியுள் அங்கிக்
கடைவைத்த ஈசனைக் கைகலந் தேனே. 470

கேட்டு நின் றேன் எங்குங் கேடில் பெருஞ்சுடர்
மூட்டுகின் றுன்முதல் யோனி மயமவன்
கூட்டுகின் றுன்குழம் பின்கரு வையுரு
நீட்டி நின்ருகத்து நேர்பட்ட வாறே. 471

பூவுடன் மொட்டுப் பொருந்த அலர்ந்தபின்
காவுடைத் தீபங் கலந்து பிறந்திடும்
நீரிடை நின்ற குமிழி நிழலதாய்ப்
பாருடல் எங்கும் பரந்தெட்டும் பற்றுமே. 472

எட்டினுள் ஐந்தாகும் இந்திரி யங்களுங்
கட்டிய மூன்று கரணமு மாய்விடும்
ஒட்டிய பாச உணர்வென்னுங் காயப்பை
கட்டி அவிழ்திடுங் கண்ணுதல் காணுமே. 473

கண்ணுதல் நாமங் கலந்துடம் பாயிடப்
பண்ணுதல் செய்து பசுபாசம் நீக்கிட
எண்ணிய வேதம் இசைத்த பரப்பினை
மண்முத லாக வகுத்துவைத் தானே. 474

அருளல்ல தில்லை அரனவன் அன்றி
அருளில்லை யாதலி னாலோர் உயிர்க்குத்
தருகின்ற போதிரு கைத்தாயர் தம்பால்
வருகின்ற நண்பு வகுத்திடுந் தானே. 475

வகுத்த பிறவியின் மாதுநல் லாளுந்
தொகுத்திருள் நீக்கிய சோதி யவனும்
பகுத்துணர் வாகிய பல்வகை எங்கும்
வகுத்துள்ளும் நின்றதோர் மாண்பது வாமே. 476

மாண்பது வாக வளர்கின்ற வன்னியை
காண்பது ஆண் பெண் அலியெனுங் கற்பனை
பூண்பது மாதா பிதாவழி போலவே
ஆம்பதி செய்தானச் சோதிதன் ஆண்மையே. 477

ஆண்மிகில் ஆணாகும் பெண்மிகிற் பெண்ணாகும்
பூணிரண் டொத்துப் பொருந்தில் அலியாகுந்
தாண்மிகு மாகில் தரணி முழுதாளும்
ஆண்வச மிக்கிடில் பாய்ந்ததும் இல்லையே. 478

பாய்ந்தபின் அஞ்சோடில் ஆயுளும் நூறாகும்
பாய்ந்தபின் னாலோடில் பாரினில் எண்பதாம்
பாய்ந்திடும் வாயுப் பகுத்தறிந் தவ்வகை
பாய்ந்திடும் யோகிக்குப் பாய்ச்சலு மாமே. 479

பாய்கின்ற வாயுக் குறையிற் குறளாகும்
பாய்கின்ற வாயு இளைக்கின் முடமாகும்
பாய்கின்ற வாயு நடுப்படிற் கூனாகும்
பாய்கின்ற வாயுமா தர்க்கில்லைப் பார்க்கிலே. 480

மாதா உதரம் மலமிகில் மந்தனும்
மாதா உதரம் சலமிகில் மூங்கையாம்
மாதா உதரம் இரண்டொக்கில் கண்ணில்லை
மாதா உதரத்தில் வந்த குழவிக்கே. 481

குழவியும் ஆணும் வலத்தது வாகில்
குழவியும் பெண்ணும் இடத்தது வாகில்
குழவியும் இரண்டாம் அபானன் எதிர்க்கில்
குழவி அலியாகுங் கொண்டகால் ஒக்கிலே. 482

கொண்டநல் வாயு இருவர்க்கும் ஒத்தெழில்
கொண்ட குழவியுங் கோமள மாயிடுங்
கொண்டநல் வாயு இருவர்க்குங் குழறிடில்
கொண்டதும் இல்லையாங் கோல்வளை யாட்கே. 483

கோல்வளை உந்தியிற் கொண்ட குழவியுந்
தால்வளை யுள்ளே தயங்கிய சோதியாம்
பால்வளர்ந் துள்ளே பகலவன் பொன்னுருப்
போல்வளர்ந் துள்ளே பொருந்துரு வாமே 484

உருவம் வளர்ந்திடும் ஒண்டிங்கள் பத்திற்
பருவம தாகவே பாரினில் வந்து
மருவி வளர்ந்திடு மாயையி னாலே
அருவம தாவதிங் காரறி வாரே. 485

இட்டார் அறிந்திலர் ஏற்றவர் கண்டிலர்
தட்டான் அறிந்தும் ஒருவர்க் குரைத்திலன்
பட்டாங்கு சொல்லும் பரமனும் அங்குளன்
கெட்டேன்இம் மாயையின் கீழ்மையெவ் வாறே. 486

இன்புறு நாடி இருவருஞ் சந்தித்துத்
துன்புறு பாசத்தில் தோன்றி வளர்ந்தபின்
முன்புற நாடி நிலத்தின்முன் தோன்றிய
தொன்புற நாடிநின் ருதலு மாமே. 487

குயிற்குஞ்சு முட்டையைக் காக்கைதன் கூட்டிட்டால்
அயிர்ப்பின்றிக் காக்கை வளர்க்கின் றதுபோல்
இயக்கில்லைப் போக்கில்லை யேனென்ப தில்லை
மயக்கத்தால் காக்கை வளர்க்கின்ற வாறே. 488

முதற்கிழங் காய முளையாய் முளைப்பின்
அதற்புத லாய்ப்பல மாய்நின் றளிக்கும்
அதற்கது வாம்இன்ப மாவது போல
அதற்கது வாய்நிற்கும் ஆதிப் பிரானே, 489

ஏனோர் பெருமைய னாகிலும் எம்மிறை
ஊனே சிறுமையுள் உட்கலந் தாங்குளன்
வானோர் அறியும் அளவல்ல மாதேவன்
தானே யறியுந் தவத்தினி னுள்ளே. 490

பரத்திற் பதிந்து பதிந்தநற் காயம்
உருத்தரித் திவ்வுடல் ஓங்கிட வேண்டில்
திரைக்கடல் உப்புத் திரண்டது போலத்
திரித்தும் பிறக்குந் திருவரு ளாலே. 491

மூவகைச் சிவவர்க்கம்

சத்தி சிவன்விளை யாட்டால் உயராக்கி
ஒத்த இருமாயா கூட்டத்(து) இடைபூட்டிச்
சுத்தம தாகுந் துரியம் பிரிவித்துச்
சித்தம் புகுந்து சிவமய மாக்குமே 492

விஞ்ஞானர் நால்வரு மெய்ப்பிரள யாகலத்(து)
அஞ்ஞானர் மூவருந் தாங்கு சகலத்தின்
அஞ்ஞானர் மூவரு மாகும் பதின்மராம்
விஞ்ஞான ராதிகள் வேற்றுமை தானே. 493

விஞ்ஞானர் கேவலத் தாரது விட்டவர்
அஞ்ஞானர் அட்டவித் தேசுசரஞ் சார்ந்துளோர்
எஞ்ஞானம் ஏழ்கோடி மந்திர நாயகர்
மெய்ஞ்ஞானர் ஆணவம் விட்டுநின் ருரே. 494

இரண்டா வதில்முத்தி எய்துவர் அத்தனே
இரண்டாவ துள்ளே இருமல பெத்தர்
இரண்டாகு நூற்றெட்டு ருத்திரர் என்பர்
முரண்சேர் சகலத்தர் மும்மலத் தாரே. 495

பெத்தத்தர் சித்தொடு பேண்முத்திச் சித்தது
ஒத்திட் டிரண்டிடை யூடுற்ருர் சித்துமாய்
மத்தத்து மும்மலம் வாட்டுகை மாட்டாதார்
சத்தத் தமிழ்ந்து சகலத்து ளாரே. 496

சிவமாகி ஐவகைத் திண்மலஞ் செற்ருேர்
அவமாகாச் சித்தர்முத் தாந்தத்து வாழ்வர்
பவமான தீர்வோர் பசுபாசம் அற்ருேர்
நவமான தத்துவம் நாடிக்கண் டாரே. 497

விஞ்ஞானர் ஆணவங் கேவல மேவுவோர்
விஞ்ஞானர் மாயையில் தங்கும் இருமலர்
அஞ்ஞானர் அச்சக லத்தர் சகலராம்
விஞ்ஞான ராதிகள் ஒன்பான்வே றுயிர்களே. 498

விஞ்ஞான கன்மத்தால் மெய்யகங் கூடிய
அஞ்ஞான கன்மத்தி னல்சுவர் யோனிபுக்(கு)
எஞ்ஞான மெய்தீண்டி யேயிடை யிட்டுப்போய்
மெய்ஞ்ஞான ராகிச் சிவமேவல் உண்மையே. 499

ஆணவந் துற்ற வவித்தா நன்வற்றோர்
காணிய விந்துவர் நாத சகலாதி
ஆணவ மாதி அடைந்த்தோ ரவரன்றே
சேணுயர் சத்தி சிவதத் துவமாமே. 500

பாத்திரம்

திலமத் தனைபொன் சிவஞானிக் கீந்தால்
பலமுத்தி சித்தி பரபோக முந்தரும்
நிலமத் தனைபொன்னை நின்மூடர்க் கீந்தால்
பலமற் றேபர போகமுங் குன்றுமே. 501

கண்டிருந் தாருயிர் உண்டிடுங் காலனைக்
கொண்டிருந் தாருயுர் கொள்ளுங் குணத்தனை
நன்றுணர்ந் தார்க்கருள் செய்திடு நாதனைச்
சென்றுணர்ந் தார்சிலர் தேவரு மாமே. 502

கைவிட்டி லேன் கரு வாகிய காலத்தும்
மெய்விட்டி லேன் விகிர் தன்னடி தேடுவன்
பொய்விட்டு நானே புரிசடை யானடி
நெய்விட் டிலாத இடிஞ்சிலு மாமே. 503

ஆவன ஆவ அழிவ அழிவன
போவன போவ புகுவ புகுவன
காவலன் பேர்நந்தி காட்டித்துக் கண்டவன்
ஏவன செய்யும் இளங்கிளை யோனே. 504

அபாத்திரம்

கோல வறட்டைக் குனிந்து குளகிட்டுப்
பாலைக் கறந்து பருகுவ தேயொக்கும்
சீலமும் நோன்பும் இலாதவர்க் கீந்தது
காலங் கழிந்த பயிரது ஆகுமே. 505

ஈவது யோக இயம நியமங்கள்
சார்வ தறிந்தன்பு தங்கு மவர்க்கன்றி
ஆவ தறிந்தன்பு தங்கா தவர்களுக் (கு)
ஈவ பெரும்பிழை யென்றுகொள் ளீரே. 506

ஆமா றறியான் அதிபஞ்ச பாதகத்
தோமாறும் ஈசற்குந் தூய குரவற்குங்
காமாதி விட்டோர்க்குந் தரல்தந்து கற்பிப்போன்
போமா நரகிற் புகான்போதங் கற்கவே. 507

மண்மலை யத்தனை மாதனம் ஈயினும்
அண்ணல் இவனென் றஞ்சலி யத்தனாய்
எண்ணி யிறைஞ்சாதார்க் கீந்த இருவரும்
நண்ணுவர் ஏழா நரகக் குழியிலே. 508

தீர்த்தம்

உள்ளத்தின் உள்ளே உளபல தீர்த்தங்கள்
மெள்ளக் குடைந்துநின் றாடார் வினைகெடப்
பள்ளமும் மேடும் பரந்து திரிவரே
கள்ள மனமுடைக் கல்வியி லோரே. 509

தளியறி வாளர்க்குத் தண்ணிதாய்ந் தோன்றுங்
குளியறி வாளர்க்குக் கூடவும் ஒண்ணான்
வளியறி வாளர்க்கு வாய்க்கிலும் வாய்க்கும்
தெளியறி வாளர்தஞ் சிந்தையு ளானே. 510

உள்ளத்தின் உள்ளே உணரும் ஒருவனைக்
கள்ளத்தி னாலுங் கலந்தறி வார்இல்லை
வெள்ளத்தை நாடி விடுமவர் தீவினைப்
பள்ளத்தி லிட்டதோர் பத்தலுள் ளாமே. 511

அறிவார் அமரர்கள் ஆதிப் பிரானைச்
செறிவா னுறைபதஞ் சென்று வலங்கொள்
மறியார் வளைக்கை வருபுனற் கங்கைப்
பொறியார் புனல்மூழ்கப் புண்ணிய ராமே. 512

கடலிற் கெடுத்துக் குளத்தினிற் காண்டல்
உடலுறத் தேடுவார் தம்மையொப் பாரிலர்
திடமுற்ற நந்தி திருவரு ளாற்சென்(று)
உடலிற் புகுந்தமை ஒன்றறி யாரே. 513

கலந்தது நீர துடம்பிற் கறுக்குங்
கலந்தது நீர துடம்பிற் சிவக்குங்
கலந்தது நீர துடம்பில் வெளுக்குங்
கலந்தது நீர்நிலங் காற்றது வாமே. 514

திருக்கோயிலிழிவு

தாவர லிங்கம் பறித்தொன்றில் தாபித்தால்
ஆவதன் முன்னே அரசு நிலைகெடுஞ்
சாவதன் முன்னே பெருநோய் அடுத்திடுங்
காவலன் பேர்நந்தி கட்டுரைத் தானே. 515

கட்டுவித் தார்மதிற் கல்லொன்று வாங்கிடில்
வெட்டுவிக் கும்அபி டேகத் தரசரை
முட்டுவிக் கும்முனி வேதிய ராயினும்
வெட்டுவித் தேவிடும் விண்ணவன் ஆணையே 516

ஆற்றரு நோய்மிக் கவனி மழையின்றிப்
போற்றரு மன்னரும் போர்வலி குன்றுவர்
கூற்றுதைத் தான்திருக் கோயில்க ளெல்லாம்
சாற்றிய பூசைகள் தப்பிடில் தானே. 517

முன்னவ ஞர்கோயில் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாரி வளங்குன்றும்
கன்னங் களவு மிகுத்திடுங் காசினி
என்னருள் நந்தி எடுத்துரைத் தானே. 518

பேர்கொண்ட பார்ப்பான் பிரான்தன்னை அர்ச்சித்தால்
போர்கொண்ட வேந்தர்க்குப் பொல்லா வியாதியாம்
பார்கொண்ட நாட்டுக்குப் பஞ்சமு மாம்என்றே
சீர்கொண்ட நந்தி தெரிந்துரைத் தானே. 519

அதோமுக தெரிசனம்

எம்பெரு மான் இறை வாமுறை யோஎன்று
வம்பவிழ் வானோர் அசுரன் வலிசொல்ல
அம்பவள மேனி அறுமுகன் போயவர்
தம்பகை கொல்என்ற தற்பரன் தானே. 520

அண்டமொ(டு) எண்டிசை தாங்கும் அதோமுகம்
கண்டங் கறுத்த கருத்தறி வாரில்லை
உண்டது நஞ்சென் றுரைப்பர் உணர்விலோர்
வெண்டலை மாலை விரிசடை யோற்கே. 521

செய்தான் அறிவன் செழுங்கடல் வட்டத்துப்
பொய்யே உரைத்துப் புகழும் மனிதர்காள்
மெய்யே உரைக்கில் விண்ணோர் தொழச்செய்வன்
மைதாழ்ந் திலங்கு மணிமிடற் றோனே, 522

நந்தி எழுந்து நடுவுற ஓங்கிய
செந்தீ கலந்துட் சிவனென நிற்கும்
முந்திக் கலந்தங் குலகம் வலம்வரும்
அந்தி இறைவன் அதோமுக மாமே. 523

அதோமுகங் கீழண்ட மான புராணன்
அதோமுகந் தன்னொடும் எங்கு முயலுஞ்
சதோமுகத் தொண்மலர்க் கண்ணிப் பிரானும்
அதோமுகன் ஊழித் தலைவனு மாமே. 524

அதோமுக மாமல ராயது கேண்மின்
அதோமுகத் தாலொரு நூருய் விரிந்து
அதோமுக மாகிய அந்தமில் சத்தி
அதோமுக மாகி அமர்ந்திருந் தானே. 525

சிவநிந்தை

தெளிவுறு ஞானத்துச் சிந்தையின் உள்ளே
அளிவுறு வாரம ராபதி நாடி
எளியனென் றீசனை நீசர் இகழில்
கிளியொன்று பூனையாற் கீழது வாகுமே. 526

முளிந்தவர் வானவர் தானவர் எல்லாம்
விளிந்தவர் மெய்ந்நின்ற ஞானம் உணரார்
அளிந்தமு தூறிய ஆதிப் பிரானைத்
தளிந்தவர்க் கல்லது தாங்கஒண் ணாதே. 527

அப்பகை யாலே அசுரருந் தேவரும்
நற்பகை செய்து நடுவே முடிந்தனர்
எப்பகை யாகிலும் எய்தார் இறைவனைப்
பொய்ப்பகை செய்யினும் ஒன்றுபத் தாமே. 528

போகமும் மாதர் புலவி யதுநினைந்(து)
ஆகமும் உள்கலந் தங்குள ராதலில்
வேதிய ராயும் விகிர்தனும் என்கின்ற
நீதியுள் ஈசன் நினைப்பொழி வாரே. 529

குருநிந்தை

பெற்றிருந் தாரையும் பேணுர் கயவர்கள்
உற்றிருந் தாரை உளேவன சொல்லுவர்
கற்றிருந் தார்வழி உற்றிருந் தாரவர்
பெற்றிருந் தாரன்றி யார்பெறும் பேறே. 530

ஓரெழுத் தொருபொருள் உணரக் கூறிய
சீரெழுத் தாளரைச் சிதையச் செப்பினேர்
ஊரிடைச் சுணங்கனுய்ப் பிறந்தங் கோருகம்
வாரிடைக் கிருமியாய்ப் படிவர் மண்ணிலே. 531

பத்தினி பத்தர்கள் தத்துவ ஞானிகள்
சித்தங் கலங்கச் சிதைவுகள் செய்தவர்
அத்தமும் ஆவியும் ஆண்டொன்றில் மாண்டிடும்
சத்தியம் ஈது சதாநந்தி ஆணையே. 532

மந்திரம் ஓரெழுத் துரைத்த மாதவர்
சிந்தையில் நொந்திடத் தீமைகள் செய்தவர்
நுந்திய சுணங்கனுய்ப் பிறந்து நூறுரு
வந்திடும் புலேயராய் மாய்வர் மண்ணிலே. 533

ஈச னடியார் இதயங் கலங்கிடத்
தேசமும் நாடுஞ் சிறப்பும் அழிந்திடும்
வாசவன் பீடமும் மாமன்னர் பீடமும்
நாசம தாகுமே நம்நந்தி யாணையே. 534

சன்மார்க்க சற்குரு சந்நிதி பொய்வரின்
நன்மார்க்க முங்குன்றும் ஞானமுந் தங்காது
தொன்மார்க்க மாய துறையும் மறந்திட்டுப்
பன்மார்க்க முங்கெட்டுப் பஞ்சமு மாமே. 535

கைப்பட்ட மாமணி தானிடை கைவிட்டு
எய்ப்பட்ட கல்லைச் சுமப்போன் விதிபோன்றும்
கைப்பட்ட நெய்பால் தயிர்நிற்கத் தானறக்
கைப்பிட்டுண் பான்போன்றும் கன்மிஞா னிக்கொப்பே

மகேச்சுர நிந்தை

ஆண்டான் அடியவ ரார்க்கும் விரோதிகள்
ஆண்டான் அடியவர் ஐயமேற் றுண்பவர்
ஆண்டான் அடியாரை வேண்டாது பேசினர்
தாந்தாம் விழுவது தாழ்வா நரகமே. 537

ஞானியை நிந்திப் பவனும் நலனென்றே
ஞானியை வந்திப் பவனுமே நல்வினை
யான கொடுவினை தீர்வார் அவன்வயம்
போன பொழுதே புகுஞ்சிவ போகமே. 538

பொறையுடைமை

பற்றிநின் ரூர்நெஞ்சிற் பல்லிதான் ஒன்றுண்டு
முற்றிக் கிடந்தது மூக்கையும் நாவையும்
தெற்றிக் கிடந்து சிதைக்கின்ற சிந்தையுள்
வற்ரு தொழிவது மாகமை யாமே. 539

ஓலக்கஞ் சூழ்ந்த உலப்பிலி தேவர்கள்
பாலொத்த மேனியன் பாதம் பணிந்துய்ய
மாலுக்கும் ஆதிப் பிரமற்கும் மன்னவன்
ஞாலத் திவர்மிக நல்லரென் ருனே. 540

ஞானம் விளைந்தவர் நம்மிட மன்னவர்
சேனை வளைந்து திசைதொறுங் கைதொழ
ஊனை விளைத்திடும் உம்பர்தம் ஆதியை
ஏனை விளைந்தருள் எட்டலு மாமே. 541

வல்வகை யாலும் மனையிலும் மன்றிலும்
பல்வகை யாலும் பயிற்றிப் பதஞ்செய்யும்
கொல்லையி னின்று குதிகொள்ளுங் கூத்தனுக்(கு)
எல்லையி லாத இலயமுண் டாமே. 542

பெரியாரைத் துணைக்கோடல்

ஓடவல் லார்தம ரோடு நடாவுவன்
பாடவல் லாரொலி பார்மிசை வாழ்குவன்
தேடவல் லார்க்கருள் தேவர் பிரானொடுங்
கூடவல் லாரடி கூடுவன் யானே. 543

தாமிடர்ப் பட்டுத் தளிர்போல் தயங்கினும்
மாமனத் தங்கன்பு வைத்த திலையாகும்
நீயிடர்ப் பட்டிருந் தென்செய்வாய் நெஞ்சமே
போமிடத் தென்னொடும் போதுகண் டாயே. 544

அறிவார் அமரர் தலைவனை நாடிச்
செறிவார் பெறுவர் சிவதத் துவத்தை
நெறிதான் மிகமிக நின்றருள் செய்யும்
பெரியா ருடன்கூடல் பேரின்ப மாமே. 545

தார்சடை யான்றன் தமராய் உலகினில்
போர்புக ழாலெந்தை பொன்னடி சேருவர்
வாயடை யாவுள்ளந் தேர்வார்க் கருள்செய்யுங்
கோவடைந் தந்நெறி கூடலு மாமே. 546

உடையான் அடியார் அடியா ருடன்போய்ப்
படையா ரழன்மேனிப் பதிசென்று புக்கேன்
கடையார நின்றவர் கண்டறி விப்ப
உடையான் வருகென ஓலமென் றுரே. 547

அருமைவல் லான்கலை ஞானத்துள் தோன்றும்
பெருமைவல் லோன்பிற விச்சுழி நீந்தும்
உரிமை வல்லோன்உணர்ந் தூழி யிருக்குந்
திருமைவல் லாரொடு சேர்ந்தனன் யானே. 548

இரண்டாந்தந்திரம் முற்றிற்று.

மூன்றும் தந்திரம்

அட்டாங்கயோகம்

உரைத்தன வற்கரி ஒன்று மூடிய
நிரைத்த இராசி நிரைமுறை எண்ணிப்
பிரைச்சதம் எட்டும் பேசிய நந்தி
நிரைத்த இயமம் நியமஞ்செய் தானே. 549

செய்த இயம நியமஞ் சமாதிசென்று
உய்யப் பராசத்தி உத்தர பூருவ
மெய்த கவச நியாசங்கள் முத்திரை
எய்த வுரைசெய்வன் இந்நிலை தானே. 550

அந்நெறி இந்நெறி என்னுதட் டாங்கத்
தந்நெறி சென்று சமாதியி லேநின்மின்
நன்னெறி செல்வார்க்கு ஞானத்தி லேகலாம்
புன்னெறி யாகத்திற் போக்கில்லை யாகுமே. 551

இயம நியமமே எண்ணிலா ஆதனம்
நயமுறு பிராணயா மம்பிரத்தி யாகாரஞ்
சயமிகு தாரணை தியானஞ் சமாதி
அயமுறும் அட்டாங்க மாவது மாமே. 552

இயமம்

எழுந்துநீர் பெய்யினும் எட்டுத் திசையுஞ்
செழுந்த ணியமங்கள் செய்மினென் றண்ணல்
கொழுந்தண் பவளக் குளிர்சடை யோடே
அழுந்திய நால்வர்க் கருள்புரிந் தானே. 553

கொல்லான்பொய் கூருன் களவிலான் எண்குணன்
நல்லான் அடக்க முடையான் நடுச்செய்ய
வல்லான் பகுந்துண்பான் மாசிலான் கட்காமம்
இல்லான் இயமத் திடையில்நின் ருனே. 554

நியமம்

ஆதியை வேதத்தின் அப்பொரு ளானைச்
சோதியை அங்கே சுடுகின்ற அங்கியைப்
பாதியுள் மன்னும் பராசத்தி யோடுடன்
நீதி யுணர்ந்த நியமத்த ஞமே. 555

தூய்மை அருளூண் சுருக்கம் பொறை செம்மை
வாய்மை நிலைமை வரைதலே மற்றிவை
காமங் களவு கொலையெனக் காண்பவை
நேமியீ ரைந்து நியமத்த ஞமே. 556

தவஞ்செபஞ் சந்தோடம் ஆத்திகந் தானஞ்
சிவன்றன் விரதமே சித்தாந்தக் கேள்வி
மகஞ்சிவ பூசையொண் மதிசொல்லீர் ஐந்து
நிவம்பல செய்யின் நியமத்தன் ஆமே. 557

ஆதனம்

பங்கய மாதி பரந்தபல் ஆதனம்
அங்குள வாம்இரு நாலும் அவற்றினுள்
சொங்கில்லை யாகச் சுவத்திக மெனமிகத்
தங்க இருப்பத் தலைவனு மாமே. 558

ஓரணை யப்பத முருவின் மேலேறிட்(டு)
ஆர வலித்ததன் மேல்வைத்(து) அழகுறச்
சீர்திகழ் கைகள் அதனைத்தன் மேல்வைக்கப்
பார்திகழ் பத்மா சனமென லாகுமே. 559

துரிசில் வலக்காலைத் தோன்றவே மேல்வைத்து
அரிய முழந்தாளி(ல்) அங்கைகளை நீட்டி
உருகி யிடுமுடல் செவ்வே யிருத்திப்
பரிசு பெறுமது பத்திரா சனமே. 560

ஒக்க அடியிணை யூருவில் ஏறிட்டு
முக்கி யுடலை முழங்கை தனில்ஏற்றித்
தொக்க அறிந்து துளங்கா(து) இருந்திடிற்
குக்குட ஆசனங் கொள்ளலு மாமே. 561

பாத முழந்தாளிற் பாணி களைநீட்டி
ஆதர வோடும்வாய் அங்காந் தழகுறக்
கோதில் நயனங் கொடிமூக்கி லேயுறச்
சீர்திகழ் சிங்கா தனமெனச் செப்புமே. 562

பத்திரங் கோமுகம் பங்கயங் கேசரி
சொத்திரம் வீரஞ் சுகாதனம் ஓரேழும்
உத்தம மாமுது ஆசனம் எட்டெட்டுப்
பத்தொடு நூறு பலஆ சனமே. 563

பிராணாயாமம்

ஐவர்க்கு நாயகன் அவ்வூர்த் தலைமகன்
உய்யக்கொண் டேறுங் குதிரைமற் றொன்றுண்டு
மெய்யர்க்குப் பற்றுக் கொடுக்குங் கொடாதுபோய்ப்
பொய்யரைத் துள்ளி விழுத்திடுந் தானே. 564

ஆரியன் நல்லன் குதிரை இரண்டுள
வீசிப் பிடிக்கும் விரகறி வாரில்லை
கூரிய நாதன் குருவின் அருள்பெற்றால்
வாரிப் பிடிக்க வசப்படுந் தானே. 565

புள்ளினும் மிக்க புரவியை மேற்கொண்டால்
கள்ளுண்ண வேண்டாந் தானே களிதரும்
துள்ளி நடப்பிக்கும் சோம்பு தவிர்ப்பிக்கும்
உள்ளது சொன்னேம் உணர்வுடை யோருக்கே. 566

பிராணன் மனத்தொடும் பேரா தடங்கிப்
பிராண னிருக்கிற் பிறப்பிறப் பில்லை
பிராணன் மடைமாறிப் பேச்சறி வித்துப்
பிராண னடைபேறு பெற்றுண்டீர் நீரே. 567

ஏறுதல் பூரகம் ஈரெட்டு வாமத்தால்
ஆறுதல் கும்பகம் அறுபத்து நாலதில்
ஊறுதல் முப்பத் திரண்டதி ரேசகம்
மாறுதல் ஒன்றின்கண் வஞ்சக மாமே. 568

வளியினை வாங்கி வயத்தில் அடக்கில்
பளிங்கொத்துக் காயம் பழுக்கினும் பிஞ்சாம்
தெளியக் குருவின் திருவருள் பெற்றால்
வளியினும் வேட்டு வளியனு மாமே. 569

எங்கே இருக்கினும் பூரி இடத்திலே
அங்கே யதுசெய்ய ஆக்கைக் கழிவில்லை
அங்கே பிடித்தது விட்டள வுஞ்செல்லச்
சங்கே குறிக்கத் தலைவனு மாமே. 570

ஏற்றி இறக்கி இருகாலும் பூரிக்குங்
காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாரில்லை
காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாளர்க்குக்
கூற்றை யுதைக்குங் குறியது வாமே. 571

மேல்கீழ் நடுப்பக்க மிக்குறப் பூரித்துப்
பாலாம் இரேசகத் தாலுட் பதிவித்து
மாலாகி உந்தியுட் கும்பித்து வாங்கவே
ஆலாலம் உண்டான் அருள்பெற லாமே. 572

வாமத்தில் ஈரெட்டு மாத்திரை பூரித்தே
ஏமுற்ற முப்பத் திரண்டும் இரேசித்துக்
காமுற்ற பிங்கலைக் கண்ணாக இவ்விரண்(டு)
ஓமத்தால் எட்டெட்டுக் கும்பிக்க உண்மையே. 573

இட்டதவ்வீ(டு) இளகா (து) இரேசித்துப்
புட்டிப் படத்தச நாடியும் பூரித்துக்
கொட்டிப் பிராணன் அபானனுங் கும்பித்து
நட்டம் இருக்க நமனில்லை தானே. 574

புறப்பட்டுப் புக்குத் திரிகின்ற வாயுவை
நெறிப்பட வுள்ளே நின்மல மாக்கில்
உறுப்புச் சிவக்கும் உரோமங் கறுக்கும்
புறப்பட்டுப் போகான் புரிசடை யோனே, 575

கூடம் எடுத்துக் குடிபுக்க மங்கையர்
ஓடுவர் மீளுவர் பன்னிரண்(டு) அங்குலம்
நீடுவர் எண்விரல் கண்டிப்பர் நால்விரல்
கூடிக் கொளிற்கோல அஞ்செழுத் தாமே. 576

பன்னிரண் டானைக்குப் பகல்இர வுள்ளது
பன்னிரண் டானையைப் பாகன் அறிகிலன்
பன்னிரண் டானையைப் பாகன் அறிந்தபின்
பன்னிரண் டானைக்குப் பகல்இர வில்லையே. 577

பிரத்தியாகாரம்

கண்டுகண்(டு) உள்ளே கருத்துற வாங்கிடிற்
கொண்டுகொண்(டு) உள்ளே குணம்பல காணலாம்
பண்டுகந் தெங்கும் பழமறை தேடியை
இன்றுகண் டிங்கே இருக்கலு மாமே. 578

நாபிக்குக் கீழே பன்னிரண்(டு) அங்குலந்
தாபிக்கு மந்திரந் தன்னை அறிகிலர்
தாபிக்கு மந்திரந் தன்னை அறிந்தபின்
கூவிக்கொண் டீசன் குடிபுகுந் தானே. 579

மூலத் திருவிரல் மேலுக்கு முன்னின்ற
பாலித்த யோனிக்கு இருவிரற் கீழ்நின்ற
கோலித்த குண்டலி யுள்ளே செழுஞ்சுடர்
ஞாலத்து நாபிக்கு நால்விரற் கீழே. 580

நாசிக் கதோமுகம் பன்னிரண்(டு) அங்குலம்
நீசித்தம் வைத்து நினையவும் வல்லையேல்
மாசித்தி மாயோகம் வந்து தலைப்பெய்தும்
தேகத்துக் கென்றுஞ் சிதைவில்லை யாகுமே. 581

சோதி இரேகைச் சுடரொளி தோன்றிடிற்
கோதில் பரானந்தம் என்றே குறிக்கொண்மின்
நேர்திகழ் கண்டத்தே நிலவொளி எய்தினல்
ஓதுவ துன்னுடல் உன்மத்த மாமே. 582

மூலத் துவாரத்தை முக்கார மிட்டிரு
மேலைத் துவாரத்தின் மேல்மனம் வைத்திரு
வேலொத்த கண்ணை வெளியில் விழித்திரு
காலத்தை வெல்லுங் கருத்திது தானே. 583

எருவிடும் வாசற்(கு) இருவிரன் மேலே
கருவிடும் வாசற்(கு) இருவிரற் கீழே
உருவிடுஞ் சோதியை உள்கவல் லார்க்குக்
கருவிடுஞ் சோதி கலந்துநின் றானே. 584

ஒருக்கால் உபாதியை ஒண்சோதி தன்னைப்
பிரித்துணர் வந்த உபாதிப் பிரிவைக்
கரைத்துணர் வுன்னல் கரைதல்உள் நோக்கல்
பிரத்தியா காரப் பெருமைய தாமே. 585

புறப்பட்ட வாயுப் புகவிடா வண்ணந்
திறப்பட்ட நிச்சயஞ் சேர்ந்துடன் நின்ருல்
உறப்பட்டு நின்றது உள்ளமும் அங்கே
புறப்பட்டுப் போகான் பெருந்தகை யானே. 586

குறிப்பினின் உள்ளே குவலயந் தோன்றும்
வெறுப்பிருள் நீங்கி விகிர்தனை நாடும்
சிறப்புறு சிந்தையைச் சிக்கென் றுணரில்
அறிப்புறு காட்சி அமரரு மாமே. 587

தாரணை

கோணு மனத்தைக் குறிக்கொண்டு கீழ்க்கட்டி
வீணுத்தண் டூடே வெளியுறத் தாணுேக்கிக்
காணுக்கண் கேளாச் செவியென் றிருப்பார்க்கு
வாணுள் அடைக்கும் வழியது வாமே. 588

மலையார் சிரத்திடை வானீர் அருவி
நிலையாரப் பாயும் நெடுநாடி யூடுபோய்ச்
சிலையார் பொதுவில் திருநட மாடுந்
தொலையாத ஆனந்தச் சோதிகண் டேனே. 589

மேலை நிலத்தினுள் வேதகப் பெண்பிள்ளை
மூல நிலத்தில் எழுகின்ற மூர்த்தியை
ஏல எழுப்பி இவளுடன் சந்திக்கப்
பாலனும் ஆவான் பார்நந்தி ஆணையே. 590

கடைவாச லைக்கட்டிக் காலை எழுப்பி
இடைவாசல் நோக்கி இனிதுள் இருத்தி
மடைவாயிற் கொக்குப்போல் வந்தித் திருப்பார்
உடையாமல் ஊழி இருக்கலு மாமே. 591

கலந்த உயிருடன் காலம் அறியில்
கலந்தவை யாது காலின் நெருக்கங்
கலந்த உயிரது காலது கட்டிக்
கலந்த உயிருடன் காலமும் நிற்குமே. 592

வாய்திற வாதார் மனத்திலோர் மாடுண்டு
வாய்திறப் பாரே வளியிட்டுப் பாய்ச்சுவர்
வாய்திற வாதார் மதியிட்டு முட்டுவர்
கோய்திற வாவிடிற் கோழையு மாமே. 593

வாழலு மாம்பல காலும் மனத்திடைப்
போழ்கின்ற வாயு புறம்படாப் பாய்ச்சுறின்
ஏழுசா லேகம் இரண்டு பெருவாய்தல்
பாழி பெரியதோர் பள்ளி அறையிலே. 594

நிரம்பிய ஈரைந்தில் ஐந்திவை போனால்
இரங்கி விழித்திருந்(து) என்செய்வை பேதாய்
வரம்பினுட் கோலி வழிசெய்கு வார்க்குக்
குரங்கினைக் கோட்டைப் பொதியலு மாமே. 595

முன்னம் வந்தனர் எல்லாம் முடிந்தனர்
பின்னை வந்தவர்க் கென்ன பிரமாணம்
முன்னுறு கோடி உறுகதி பேசிடில்
என்னமாயம் இடிகரை நிற்குமே. 596

அரித்த வுடலைஐம் பூதத்தில் வைத்துப்
பொருத்தஐம் பூதஞ்சித் தாதியிற் போந்து
தெரித்த மனாதிசத் தாதியிற் செல்லத்
தரித்தது தாரணை தற்பரத் தோடே. 597

தியானம்

வருமாதி யீரெட்டுள் வந்த தியானம்
பொருவாத புந்தி புலன்போக மேவல்
உருவாய சத்தி பரத்தியான முன்னுங்
குருவார் சிவத்தியானம் யோகத்தின் கூறே. 598

கண்ணுக்கு மூக்குச் செவிஞானக் கூட்டத்துட்
பண்ணுக்கி நின்ற பழம்பொருள் ஒன்றுண்(டு)
அண்ணுக்கின் உள்ளே அகண்ட ஒளிகாட்டிப்
புண்ணுக்கி நம்மைப் பிழைப்பித்த வாறே. 599

ஒண்ணு நயனத்தில் உற்ற ஒளிதன்னைக்
கண்ணுரப் பார்த்துக் கலந்தங் கிருந்திடில்
விண்ணுறு வந்து வெளிகண் டிடவோடிப்
பண்ணுமல் நின்றது பார்க்கலு மாமே. 600

ஒருபொழு துன்னுர் உடலோ டுயிரை
ஒருபொழு துன்னுர் உயிருட் சிவனை
ஒருபொழு துன்னுர் சிவனுறை சிந்தையை
ஒருபொழு துன்னுர் சந்திரப் பூவையே. 601

மனத்து விளக்கினை மாண்பட ஏற்றிச்
சினத்து விளக்கினைச் செல்ல நெருக்கி
அனைத்து விளக்கும் திரியொக்கத் தூண்ட
மனத்து விளக்கது மாயா விளக்கே. 602

எண்ணு யிரத்தாண்டு யோகம் இருக்கினும்
கண்ணுர் அமுதினைக் கண்டறி வாரில்லை
உண்ணுடி யுள்ளே ஒளிபெற நோக்கினுல்
கண்ணுடி போலக் கலந்திருந் தானே. 603

நாட்டம் இரண்டும் நடுமூக்கில் வைத்திடில்
வாட்டமும் இல்லை மனைக்கும் அழிவில்லை
ஓட்டமும் இல்லை உணர்வில்லைத் தானில்லை
தேட்டமும் இல்லைச் சிவனவ னாமே. 604

நயனம் இரண்டு நாசிமேல் வைத்திட்(டு)
உயர்வெழா வாயுவை உள்ளே அடக்கித்
துயரற நாடியே தூங்கவல் லார்க்குப்
பயனிது காயம் பயமில்லை தானே. 605

மணிகடல் யானை வார்குழல் மேகம்
அணிவண்டு தும்பி வளைபேரி கையாழ்
தணிந்தெழு நாதங்கள் தாமிவை பத்தும்
பணிந்தவர்க் கல்லது பார்க்கவொண் ணாதே. 606

கடலொடு வேகக் களிறொடும் ஓசை
அடலொடு மவ்வினை அண்டரண் டத்து
சுடர்மனு வேணுச் சுரிசங்கின் ஓசை
திடமறி யோகிக்கல் லாற்றெரி யாதே. 607

ஈசன் இயல்பும் இமையவர் ஈட்டமும்
பாசம் இரங்கப் பரந்துபி ராய்நிற்கும்
ஓசை யதன்மணம் போல விடுவதோர்
ஓசையும் ஈசன் உணரவல் லார்க்கே. 608

நாத முடிவிலே நல்லாள் இருப்பது
நாத முடிவிலே நல்யோகம் இருப்பது
நாத முடிவிலே நாட்டம் இருப்பது
நாத முடிவிலே நஞ்சுண்ட கண்டனே. 609

உதிக்கின்ற ஆறினும் உள்ளங்கி ஐந்துந்
துதிக்கின்ற தேசுடைத் தூங்கிருள் நீங்கி
அதிக்கின்ற ஐவருள் நாதம் ஒடுங்கக்
கதிக்கொன்றை ஈசன் கழல்சேர லாமே. 610

பள்ளி அறையிற் பகலே இருளில்லை
கொள்ளி அறையிற் கொளுந்தாமற் காக்கலாம்
ஒள்ளிது அறியிலோர் ஓசனை நீளிது
வெள்ளி அறையில் விடிவில்லை தானே 611

கொண்ட விரதம் குறையாமல் தான்ஒன்றித்
தண்டுடன் ஓடித் தலைப்பட்ட யோகிக்கு
மண்டலம் மூன்றினும் ஒக்க வளர்ந்தபின்
பிண்டமும் ஊழி பிரியா திருக்குமே. 612

அவ்வவர் மண்டலம் ஆம்பரிசு ஒன்றுண்டு
அவ்வவர் மண்டலத்து அவ்வவர் தேவராம்
அவ்வவர் மண்டலம் அவ்வவர்க் கேவரில்
அவ்வவர் மண்டலம் ஆயமற் றோர்க்கே. 613

இளைக்கின்ற நெஞ்சத்(து) இருட்டறை உள்ளே
முளைக்கின்ற மண்டலம் மூன்றினும் ஒன்றித்
துளைப்பெரும் பாசத் துருவிடும் ஆகில்
இளைப்பின்றி மார்கழி ஏற்றம(து) ஆமே. 614

முக்குண மூடற வாயுவை மூலத்தே
சிக்கென மூடித் திரித்துப் பிடித்திட்டுத்
தக்க வலம்இடம் நாழிகை சாதிக்க
வைக்கும் உயிர்நிலை வானவர் கோனே. 615

நடலித்த நாபிக்கு நால்விரல் மேலே
மடலித்த வாணிக்(கு) இருவிரல் உள்ளே
கடலித்(து) இருந்து கருதவல் லார்கள்
சடலத் தலைவனைத் தாமறிந் தாரே. 616

அறிவா யசத்தென்னு மாறு றகன்று
செறிவான மாயை சிதைத்தரு ளாலே
பிறியாத பேரரு ளாயிடும் பெற்றி
நெறியான அன்பர் நிலைஅறிந் தாரே. 617

சமாதி

சமாதி யமாதியில் தான்செல்லக் கேட்கின்
சமாதி யமாதியில் தான்எட்டுஞ் சித்தி
சமாதி யமாதியில் தங்கினேர்க்கு அன்றே
சமாதி யமாதி தலைப்படும் தானே. 618

விந்துவும் நாதமும் மேருவில் ஓங்கிடின்
சந்தியி லான சமாதியில் கூடிடும்
அந்தம் இலாத அறிவின் அரும்பொருள்
சுந்தரச் சோதியும் தோன்றிடுந் தானே. 619

மன்மனம் எங்குண்டு வாயுவும் அங்குண்டு
மன்மனம் எங்கில்லை வாயுவும் அங்கில்லை
மன்மனத் துள்ளே மகிழ்ந்திருப் பார்க்கு
மன்மனத் துள்ளே மனேலய மாமே. 620

விண்டலர் கூபமும் விஞ்சத் தடவியுங்
கண்டுணர் வாகக் கருதி யிருப்பார்கள்
செண்டு வெளியிற் செழுங்கிரி யத்திடை
கொண்டு குதிரை குசைசெறுத் தாரே. 621

மூல நாடிமுக் கட்டல குச்சியுள்
நாலுவாசல் நடுவுள் இருப்பர்காள்
மேலை வாசல் வெள்ளியுறக் கண்டபின்
காலன் வார்த்தை கனவிலும் இல்லையே. 622

மண்டலம் ஐந்து வரைகளும் ஈராறு
கொண்டிட நிற்குங் குடிகளும் ஆறெண்மர்
கண்டிட நிற்குங் கருத்து நடுவாக
உண்டு நிலாவிடும் ஓடும் பதத்தையே. 923

பூட்டொத்து மெய்யிற் பொறிப்பட்ட வாயுவைத்
தேட்டற்ற வந்நிலஞ் சேரும் படிவைத்து
நாட்டத்தை மீட்டு நயனத் திருப்பார்க்குத்
தோட்டத்து மாம்பழந் தூங்கலு மாமே. 624

உருவறி யும்பரி சொன்றுண்டு வானோர்
கருவரை பற்றிக் கடைந்தமு துண்டார்
அருவரை யேறி அமுதுண்ண மாட்டார்
திருவரை யாமனந் தீர்ந்தற்ற வாறே, 625

நம்பனை யாதியை நான்மறை ஓதியைச்
செம்பொனின் உள்ளே திகழ்கின்ற சோதியை
அன்பினை யாக்கி யருத்தி ஒடுக்கிப்போய்க்
கொம்பேறிக் கும்பிட்டுக் கூட்டமிட் டாரே. 626

மூலத்து மேலது முச்சது ரத்தது
காலத் திசையிற் கலக்கின்ற சந்தினில்
மேலைப் பிறையினுள் நெற்றிநேர் நின்ற
கோலத்தின் கோலங்கள் வெவ்வேறு கொண்டதே. 627

கற்பனை யற்றுக் கனல்வழி யேசென்று
சிற்பனை எல்லாஞ் சிருட்டித்த பேரொளிப்
பொற்பினை நாடிப் புணர்மதி யோடுற்றுத்
தற்பர மாகத் தகுந்தண் சமாதியே, 628

தலைப்பட் டிருந்திடத் தத்துவங் கூடும்
வலைப்பட் டிருந்திடும் மாதுநல் லாளும்
குலைப்பட் டிருந்திடுங் கோபம் அகலுந்
துலைப்பட் டிருந் திடுந் தூங்கவல் லார்க்கே. 629

சோதித் தனிச்சுட ராய்நின்ற தேவனும்
ஆதியும் உள்நின்ற சீவனு மாகுமால்
ஆதிப் பிரமன் பெருங்கடல் வண்ணனும்
ஆதி அடிபணிந் தன்புறு வாரே. 630

சமாதிசெய் வார்க்குத் தகும்பல யோகஞ்
சமாதிகள் வேண்டாம் இறையுட னேகின்
சமாதிதா னில்லைத் தானவ னாகிற்
சமாதியில் எட்டெட்டுச் சித்தியும் எய்துமே. 631

அட்டாங்கயோகப்பேறு

இயமம்

போதுகந் தேறும் புரிசடை யானடி
யாதுகந் தாரம ராபதிக் கேசெல்வர்
ஏதுகந் தானிவன் என்றருள் செய்திடு
மாதுகந் தாடிடு மால்விடை யோனே. 632

நியமம்

பற்றிப் பதத்தன்பு வைத்துப் பரன்புகழ்
கற்றிருந் தாங்கே கருது மவர்கட்கு
முற்றெழுந் தாங்கே முனிவர் எதிர்வரத்
தெற்றுஞ் சிவபதஞ் சேர்தலு மாமே. 633

ஆதனம்

வருந்தித் தவஞ்செய்து வானவர் கோவாய்த்
திருந்தம ராபதிச் செல்வன் இவனெனத்
தருந்தண் முழவங் குழலும் இயம்ப
இருந்தின்பம் எய்துவர் ஈசன் அருளே. 634

பிராணாயாமம்

செம்பொற் சிவகதி சென்றெய்துங் காலத்துக்
கும்பத் தமரர் குழாம்வந் தெதிர்கொள்ள
எம்பொற் றலைவன் இவனா மெனச்சொல்ல
இன்பக் கலவி இருக்கலு மாமே. 635

பிரத்தியாகாரம்

சேருறு காலந் திசைநின்ற தேவர்கள்
ஆரிவன் என்ன அரனும் இவனென்ன
எருறு தேவர்கள் எல்லாம் எதிர்கொள்ளக்
காருறு கண்டனை மெய்கண்ட வாறே, 636

தாரணை

நல்வழி நாடி நமன்வழி மாற்றிடுஞ்
சொல்வழி யாளர் சுருங்காப் பெருங்கொடை
இல்வழி யாளர் இமையவர் எண்டிசைப்
பல்வழி எய்தினும் பார்வழி யாகுமே. 637

தியானம்

தூங்கவல் லார்க்குந் துணையேழ் புவனமும்
வாங்கவல் லார்க்கும் வலிசெய்து நின்றிட்டுத்
தேங்கவல் லார்க்குத் திளைக்கும் அமுதமுந்
தாங்கவல் லார்க்குந் தானிட மாமே. 638

சமாதி

காரிய மான உபாதியைத் தான்கடந்
தாரிய காரணம் ஏழுந்தன் பாலுற
வாரிய காரண மாயத் தவத்திடைத்
தாரியல் தற்பரஞ் சேர்தல் சமாதியே. 639

அட்டமாசித்தி

பரகாயப்பிரவேசம்

பணிந்தெண் திசையும் பரமனை நாடித்
துணிந்தெண் திசையுந் தொழுதெம் பிரானை
அணிந்தெண் திசையினும் அட்டமா சித்தி
தணிந்தெண் திசைசென்று தாபித்த வாறே. 640

பரிசறி வானவர் பண்பன் அடியெனத்
துரிசற நாடியே தூவெளி கண்டேன்
அரிய தெனக்கில்லை அட்டமா சித்தி
பெரிதருள் செய்து பிறப்பறுத் தானே. 641

குரவன் அருளிற் குறிவழி மூலம்
பரையின் மணமிகு சங்கட்டம் பார்த்துத்
தெரிதரு சாம்பவி கேசரி சேரப்
பெரிய சிவகதி பேறெட்டாஞ் சித்தியே. 642

காயாதி பூதங் கலைகால மாயையில்
ஆயா தகல வறிவொன்ற ஞாதியே
ஓயாப் பதியதன் உண்மையைக் கூடினல்
வீயாப் பரகாயம் மேவலு மாமே. 643

இருபதி ஞயிரத் தெண்ணூறு பேதம்
மருவிய கன்ம மாமந்த யோகந்
தருமிவை காய உழைப்பாகுந் தானே
அருமிகு நான்காய் அடங்குமா சித்திக்கே. 645

மதிதனில் ஈராருய் மன்னுங் கலையின்
உதய மதுநா லொழியவோ ரெட்டுப்
பதியும்ஈ ராருண்டு பற்றறப் பார்க்கில்
திதமான ஈராறு சித்திக ளாமே. 645

நாடும் பிணியாம் நஞ்சனஞ் சூழ்ந்தக்கால்
நீடுங் கலைகல்வி நீள்மேதை கூர்ஞானம்
பீடொன்றி ஞல்வாயாச் சித்திபே தத்தின்
நீடுந் துரங்கேட்டல் நீண்முடி வீராறே, 646

ஏழா னதிற்சண்ட வாயுவின் வேகியாந்
தாழா நடைபல யோசனை சார்ந்திடுஞ்
சூழான ஓரெட்டில் தோன்ரு நரைதிரை
தாழான ஒன்பதிற் ருன்பர காயமே, 647

ஈரைந்திற் பூரித்துத் தியான உருத்திரன்
நேரொன்று பன்னொன்றில் ஈராரும் எண்சித்தி
சீரொன்று மேலேழ் கீழேழ் புவிச்சென்று
ஓரொன்று வியாபியாய் நிற்றலீ ராறே. 648

தானே அணுவுஞ் சகத்துந்தன் நோன்மையும்
மானுக் ககனமும் பரகாயத் தேகமும்
தானுவ தும்பர காயஞ்சேர் தன்மையும்
ஆனுத வுண்மையும் வியாபியு மாம் எட்டே. 549

தாங்கிய தன்மையுந் தானனுப் பல்லுயிர்
வாங்கிய காலத்து மற்றோர் குறையில்லை
யாங்கே எழுந்தோம் அவற்றுள் எழுந்துமிக்
கோங்கி வர்முத்தி முந்திய வாறே. 650

முந்திய முந்நூற் றறுபது காலமும்
வந்தது நாழிகை வான்முத லாயிடச்
சிந்தைசெய் மண்முதல் தேர்ந்தறி வார்வலம்
உந்தியுள் நின்று வுதித்தெழு மாறே. 651

சித்தந் திரிந்து சிவமய மாகியே
முத்தந் தெரிந்துற்ற மோனர் சிவமுத்தர்
சுத்தம் பெறலாக ஐந்தில் தொடக்கற்றோர்
சித்தம் பரத்தில் திருநடத் தோரே. 652

ஒத்தஇவ் வொன்பது வாயுவும் ஒத்தன
ஒத்தஇவ் ஒன்பதின் மிக்க தனஞ்செயன்
ஒத்தஇவ் வொன்பதில் ஒக்க இருந்திட
ஒத்த உடலும் உயிரும் இருந்ததே. 653

இருக்குந் தனஞ்செயன் ஒனபது காலின்
இருக்கும் இருநூற் றிருபத்து நான்காய்
இருக்கு முடலில் இருந்தில வாகில்
இருக்கும் உடலது வீங்கி வெடித்ததே. 654

வீங்குங் கழலை சிரங்கொடு குட்டமும்
வீங்கும் வியாதிகள் சோகை பலவதாய்
வீங்கிய வாதமுங் கூனு முடமதாம்
வீங்குவியாதிகள் கண்ணின் மருவியே. 655

கண்ணில் வியாதி யுரோகந் தனஞ்செயன்
கண்ணிலிவ் வாணிகள் காச மவனல்லன்
கண்ணினிற் கூர்மன் கலந்தில னுதலாற்
கண்ணினிற் சோதி கலந்ததும் இல்லையே 656

நாடியின் ஓசை நயனம் இருதயந்
தூடி யளவுஞ் சுடர்விடு சோதியைத்
தேவருள் ஈசன் திருமால் பிரமனும்
ஓவற நின்றங் குணர்ந்திருந் தாரே. 667

ஒன்பது வாசல் உடையதோர் பிண்டத்துள்
ஒன்பது நாடி யுடையதோ ரிடம்
ஒன்பது நாடி ஒடுங்கவல் லார்கட்கு
ஒன்பது வாசல் உலைநல வாமே. 658

ஓங்கிய அங்கிக்கீழ் ஒண்சுழு னைச்செல்ல
வாங்கி இரவி மதிவழி ஓடிடத்
தாங்கி உலகங்கள் ஏழுந் தரித்திட
ஆங்கது சொன்னோம் அறிவுடை யோர்க்கே. 659

தலைப்பட்ட வாறண்ணல் தையலை நாடி
வலைப்பட்ட பாசத்து வன்பிணை மான்போல்
துலைப்பட்ட நாடியைத் தூவழி செய்தால்
விலைக்குண்ண வைத்ததோர் வித்தது வாமே. 660

ஓடிச்சென் றங்கே ஒருபொருள் கண்டவர்
நாடியி னுள்ளாக நாதம் எழுப்புவர்
தேடிச்சென் றங்கே தேனை முகந்துண்டு
பாடியுள் நின்ற பகைவரைக் கட்டுமே. 661

கட்டிட்ட தாமரை நாளத்தில் ஒன்பது
மட்டிட்ட கன்னியர் மாதுடன் சேர்ந்தனர்
தட்டிட்டு நின்று தளங்களி னூடுபோய்ப்
பொட்டிட்டு நின்று பூரண மானதே. 662

பூரண சத்தி எழுமூன் றறையாக
ஏரணி கன்னிகள் எழுநூற்றஞ் சாயினர்
நாரணன் நான்முகன் ஆதிய ஐவர்க்குங்
காரண னாகிக் கலந்து விரிந்ததே. 663

விரிந்து குவிந்து விளைந்தஇம் மங்கை
கரந்துள் எழுந்து கரந்தங் கிருக்கிற்
பரந்து குவிந்தது பார்முதற் பூதம்
இரைந்தெழு வாயு விடத்தில் ஒடுங்கே. 664

இடையொடு பிங்கலை என்னும் இரண்டு
மடைபடு வாயுவு மாறியே நிற்குந்
தடையவை யாறேழுந் தண்சுட ருள்ளே
மிடைவளர் மின்கொடி தன்னில் ஒடுங்கே. 665

ஒடுங்கி ஒருங்கி உணர்ந்தங் கிருக்கின்
மடங்கி மடங்கிடும் வாயு வதனுள்
மடங்கி மடங்கிடு மன்னுயி ருள்ளே
நடங்கொண்ட கூத்தனை நாடுகின் றேனே. 666

நாடியின் உள்ளே நாதத் தொலியுடன்
தேடி யுடன்சென்றத் திருவினைக் கைக்கொண்டு
பாடியுள் நின்ற பகைவரைக் கட்டிட்டு
மாடில் ஒருகை மணிவிளக் கானதே. 667

அணிமாதி சித்திக ளானவை கூறில்
அணுவில் அணுவின் பெருமையின் நேர்மை
இணுகாத வேகார் பரகாய மேவல்
அணுவத் தனையெங்குந் தானாத லென்றெட்டே. 668

எட்டா கியசித்தி யோரெட்டி யோகத்தாற்
கிட்டாப் பிராணன் செய்தாற் கிடைத்திடும்
ஒட்டா நடுநாடி மூலத்த னல்பானு
விட்டான் மதியுண்ண வும்வரு மேலதே. 669

சித்திக ளெட்டன்றிச் சேரெட்டி யோகந்தாற்
புத்திக ளானவை எல்லாம் புலப்படுஞ்
சித்திகள் எண்சித்தி தானுந் திரிபுரைச்
சத்தி அருள்தரத் தானுள வாகுமே. 670

அணிமா

எட்டிவை தன்னே டெழிற்பரங் கைகூடப்
பட்டவர் சித்தர் பரலோகஞ் சேர்தலால்
இட்டம துள்ளே இருக்கல் பரகாட்சி
எட்டு வரப்பு மிடந்தானின் றெட்டுமே. 671

மந்தர மேறு மதிபானு வைமாற்றக்
கந்தாய்க் குழியிற் கசடற வல்லார்க்குத்
தந்தின்றி நற்கா மியலோகஞ் சார்வாகும்
அந்த வுலகம் அணிமாதி யாமே. 672

முடிந்திட்டு வைத்து முயங்கிலோ ராண்டில்
அணிந்த அணிமாகை தானும் இவனுந்
தணிந்தவப் பஞ்சினுந் தானொய்ய தாகி
மெலிந்தங் கிருந்திடும் வெல்லவொண் ணாதே. 673

லகிமா

ஆகின்ற வத்தனி நாயகி தன்னுடன்
போகின்ற தத்துவம் எங்கும் புகலதாய்ச்
சாய்கின்ற காலங்கள் தன்வழி நின்றிடின்
மாய்கின்ற வையாண்டின மாலகு வாகுமே. 674

மாலகு வாகிய மாயனைக் கண்டபின்
தானொளி யாகித் தழைத்தங் கிருந்திடும்
பாலொளி யாகிப் பரந்தெங்கு நின்றது
மேலொளி யாகிய மெய்ப்பொருள் காணுமே. 675

மகிமா

மெய்ப்பொருள் சொல்லிய மெல்லிய லாளுடன்
தற்பொரு ளாகிய தத்துவங் கூடிடக்
கைப்பொரு ளாகக் கலந்திடு மோராண்டின்
மைப்பொரு ளாகு மகிமாவ தாகுமே. 676

ஆகின்ற காலொளி யாவது கண்டபின்
போகின்ற காலங்கள் போவது மில்லையாம்
மேனின்ற காலம் வெளியுற நின்றபின்
தானின்ற காலங்கள் தன்வழி யாகுமே. 677

தன்வழி யாகத் தழைத்திடு ஞானமுந்
தன்வழி யாகத் தழைத்திடும் வையகந்
தன்வழி யாகத் தழைத்த பொருளெல்லாம்
தன்வழி தன்னரு ளாகிநின் றானே. 678

பிராத்தி

நின்றன தத்துவ நாயகி தன்னுடன்
கண்டன பூதப் படையானவை யெலாங்
கொண்டவை யோராண்டு கூட இருந்திடில்
விண்டது வேநல்ல பிராத்திய தாகுமே. 679

கரிமா

ஆகின்ற மின்னொளி யாவது கண்டபின்
பாகின்ற பூவிற் பரப்பவை காணலாம்
மேகின்ற காலம் வெளியுற நின்றது
போகின்ற காலங்கள் போவது மில்லையே. 680

போவதொன் றில்லை வருவது தானில்லை
சாவதொன் றில்லை தழைப்பது தானில்லை
தாமத மில்லை தமரகத் தின்னொளி
யாவது மில்லை யறிந்துகொள் வார்க்கே. 681

அறிந்த பராசத்தி யுள்ளே அமரில்
பறிந்தது பூதப் படையவை யெல்லாங்
குறிந்தவை யோராண்டு கூடஇருக்கில்
விரிந்தது பரகாய மேவலு மாமே. 682

பிராகாமியம்

ஆன விளக்கொளி யாவ தறிகிலர்
மூல விளக்கொளி முன்னே யுடையவர்
கான விளக்கொளி கண்டுகொள் வார்கட்கு
மேலை விளக்கொளி வீடெளி தாநின்றே. 683

ஈசத்துவம்

நின்ற சதாசிவ நாயகி தன்னுடன்
கண்டன பூதப் படையவை எல்லாங்
கொண்டவை யோராண்டு கூடி யிருந்திடிற்
பண்டையவ் வீசன் தத்துவ மாகுமே. 684

ஆகின்ற சந்திரன் தண்ணொளி யாயவன்
ஆகின்ற சந்திரன் தட்பமு மாயிடும்
ஆகின்ற சந்திரன் தன்கலை கூடிடில்
ஆகின்ற சந்திரன் தானவ னாமே. 685

தானே படைத்திட வல்லவ னாயிடும்
தானே யளித்திட வல்லவ னாயிடும்
தானே சங்காரத் தலைவனு மாயிடுந்
தானே யிவனெனுந் தன்மைய னாமே. 686

தண்மைய தாகத் தழைத்த கலையினுள்
பண்மைய தாகப் பரந்தஜம் பூதத்தை
வண்மைய தாக மறித்திடில் ஓராண்டின்
மென்மைய தாகிய மெய்ப்பொருள் காணுமே. 687

வசித்துவம்

மெய்ப்பொரு ளாக விளைந்தது வேதெனின்
நற்பொரு ளாகிய நல்ல வசித்துவங்
கைப்பொரு ளாகக் கலந்த உயிர்க்கெல்லாந்
தற்பொரு ளாகிய தன்மைய னாகுமே. 688

தன்மைய தாகத் தழைத்த பகலவன்
மென்மைய தாகிய மெய்ப்பொருள் கண்டிடின்
பொன்மைய தாகப் புலன்களும் போயிட
நன்மைய தாகிய நற்கொடி காணுமே. 689

நற்கொடி யாகிய நாயகி தன்னுடன்
அக்கொடி யாகம் அறிந்திடின் ஓராண்டு
பொற்கொடி யாகிய புவனங்கள் போய்வருங்
கற்கொடி யாகிய காமுக னாமே. 690

காமரு தத்துவ மானது வந்தபின்
பூமரு கந்தம் புவனம தாயிடும்
மாமரு வுன்னிட மெய்திடு மானனாய்
நாமரு வும்ஒளி நாயக மானதே. 691

நாயக மாகிய நல்லொளி கண்டபின்
தாயக மாகத் தழைத்தங் கிருந்திடும்
போயக மான புவனங்கள் கண்டபின்
பேயக மாகிய பேரொளி காணுமே. 692

பேரொளி யாகிய பெரியஅவ் வெட்டையும்
பாரொளி யாகப் பதைப்பறக் கண்டவன்
தாரொளி யாகத் தரணி முழுதுமாம்
ஒரொளி யாகிய காலொளி காணுமே. 693

காலொ டுயிருங் கலக்கும் வகைசொல்லிற்
காலது அக்கொடி நாயகி தன்னுடன்
காலது ஐஞ்னூற் றொருபத்து மூன்றையுங்
காலது பெண்மண்டிக் கொண்டஇவ் வாறே. 694

ஆறது வாகும் அமிர்தத் தலையினுள்
ஆறது ஆயிர முந்நூற் றொருடைஞ்சுள
ஆறது வாயிர மாகு மருவழி
ஆறது வாக வளர்ப்ப திரண்டே. 695

இரண்டினின் மேலே சதாசிவ நாயகி
இரண்டது கால்கொண் டெழுவகை சொல்லில்
இரண்டது ஆயிரம் ஐம்பதோ டொன்றாய்த்
திரண்டது காலம் எடுத்ததும் அஞ்சே. 696

அஞ்சுடன் அஞ்சு முகமுள நாயகி
அஞ்சுடன் அஞ்சது வாயுத மாவது
அஞ்சது வின்றி இரண்டது வாயிரம்
அஞ்சது காலம் எடுத்துளும் ஒன்றே. 697

ஒன்றது வாகிய தத்துவ நாயகி
ஒன்றது கால்கொண் டூர்வகை சொல்லிடில்
ஒன்றது வென்றிகொள் ஆயிரம் ஆயிரம்
ஒன்றது காலம் எடுத்துளும் முன்னே. 698

முன்னெழும் அக்கலை நாயகி தன்னுடன்
முன்னுறு வாயு முடிவகை சொல்லிடின்
முன்னுறும் ஐம்பத் தொன்றுடன் அஞ்சுமாய்
முன்னுறு வாயு முடிவகை யாமே. 699

ஆய்வரும் அத்தனி நாயகி தன்னுடன்
ஆய்வரு வாயு அளப்பது சொல்லிடில்
ஆய்வரும் ஐஞ்னூற்று முப்பதொ டொன்பது
வாய்வரு வாயு வளப்புள் ளிருந்ததே. 700

இருநிதி யாகிய எந்தை யிடத்து
இருநிதி வாயு இயங்கு நெறியில்
இருநூற்று முப்பத்து மூன்றுடன் அஞ்சாய்
இருநிதி வாயு இயங்கும் எழுத்தே. 701

எழுகின்ற சோதியுள் நாயகி தன்பால்
எழுகின்ற வாயு இடமது சொல்லில்
எழுநூற் றிருபத் தொன்பா னதுநாலாய்
எழுந்துடன் அங்கி இருந்ததிவ் வாறே. 702

ஆறது கால்கொண் டிரதம் விளைத்திடும்
ஏழது கால்கொண் டிரட்டி இறக்கிட
எட்டது கால்கொண் டிடவகை யேற்றபின்
ஒன்பது மாநிலம் ஒத்தது வாயுவே. 703

சந்திரன் சூரியன் தற்பரன் தாணுவிற்
சந்திரன் தானுந் தலைப்படுந் தன்மையைச்
சந்தியி லேகண்டு தானஞ் சகமுகத்
துந்திச் சமாதி யுடையொளி யோகியே. 704

அணங்கற்ற மாதல் அருஞ்சன நீவல்
வணங்குற்ற கல்விமா ஞான மிகுத்தல்
சிணுங்குற்ற வாயர் சித்திதாங் கேட்டல்
நுணங்கற் றிருத்தல்கால் வேகத்து நுந்தலே. 705

மரணஞ் சரைவிடல் வண்பர காயம்
இரணஞ் சேர்பூமி இறந்தோர்க் களித்தல்
அரணன் திருவுரு வாதன்மூ வேழாங்
கரனுறு கேள்வி கணக்கறிந் தோனே. 706

ஓதம் ஒலிக்கும் உலகை வலம்வந்து
பாதங்கள் நோவ நடந்தும் பயனில்லை
காதலில் அண்ணலைக் காண இனியவர்
நாதன் இருந்த நகரறி வோரே. 707

மூல முதல்வேதா மாலரன் முன்னிற்கக்
கோலிய ஐம்முகன் கூறப் பரவிந்து
சாலப் பரநாதம் விந்துத் தனிநாதம்
பாலித்த சத்தி பரைபரன் பாதமே. 708

ஆதார யோகத் ததிதே வொடுஞ்சென்று
மீதான தற்பரை மேவும் பரனொடு
மேதாதி யீரெண் கலைசெல்ல மீதொளி
ஓதா அசிந்தமீ தானந்த யோகமே. 709

மதியமும் ஞாயிறும் வந்துடன் கூடித்
துதிசெய் பவரவர் தொல்வா னவர்கள்
விதியது செய்கின்ற மெய்யடி யார்க்குப்
பதியது காட்டும் பரமன்நின் றனே. 710

கட்டவல் லார்கள் கரந்தெங்குந் தானவர்
மட்டவிழ் தாமரை யுள்ளே மனஞ்செய்து
பொட்டெழக் குத்திப் பொறியெழத் தண்டிட்டு
நட்டிடு வார்க்கு நமனில்லை தானே. 711

கலைநிலை

காதல் வழிசெய்த கண்ணுதல் அண்ணலைக்
காதல் வழிசெய்து கண்ணுற நோக்கிடிற்
காதல் வழிசெய்து கங்கை வழிதருங்
காதல் வழிசெய்து காக்கலு மாமே. 712

காக்கலு மாகுங் கரணங்கள் நான்கையும்
காக்கலு மாகுங் கலைபதி றுறையும்
காக்கலு மாகுங் கலந்தநல் வாயுவும்
காக்கலு மாகுங் கருத்துற நில்லே, 713

நிலைபெற நின்றது நேர்தரு வாயு
சிலைபெற நின்றது தீபமும் ஒத்துக்
கலைவழி நின்ற கலப்பை அறியில்
மலைவறி வாகும் வழியது வாமே, 714

புடையொன்றி நின்றிடும் பூதப் பிரானை
மடையொன்றி நின்றிட வாய்த்த வழியிற்
சடையொன்றி நின்றஅச் சங்கர நாதன்
விடையொன்றி லேறியே வீற்றிருந் தானே. 715

இருக்கின்ற காலங்கள் ஏதும் அறியார்
பெருக்கின்ற காலப் பெருமையை நோக்கி
ஒருக்கின்ற வாயு வெளிபெற நிற்கத்
தருக்கொன்றி நின்றிடுஞ் சாதக னமே. 716

சாதக மானஅத் தன்மையை நோக்கியே
மாதவ மான வழிபாடு செய்திடும்
போதக மாகப் புகலுறப் பாய்ச்சினல்
வேதக மாக விளைந்து கிடக்குமே. 717

கிடந்தது தானே கிளர்பயன் மூன்று
நடந்தது தானேஉள் நாடியுள் நோக்கி
படர்ந்து தானே பங்கய மாகத்
தொடர்ந்தது தானேஅச் சோதியுள் நின்றே. 718

தானே எழுந்தஅத் தத்துவ நாயகி
ஊனே வழிசெய்தெம் உள்ளே யிருந்திடும்
வானோர் உலகீன்ற அம்மை மதித்திடத்
தேனே பருகிச் சிவாலய மாகுமே. 719

திகழும் படியே செறிதரு வாயு
அழியும் படியை அறிகில ராரும்
அழியும் படியை அறிந்தபின் நந்தி
திகழ்கின்ற வாயுவைச் சேர்தலு மாமே. 720

சோதனை தன்னில் துரிசறக் காணலாம்
நாதனும் நாயகி தன்னிற் பிரியுநாள்
சாதக மாகுங் குருவை வழிபட்டு
மாதன மாக மதித்துக்கொள் ளீரே. 721

ஈராறு கால்கொண் டெழுந்த புரவியைப்
பேராமற் கட்டிப் பெரிதுண்ண வல்லீரேல்
நீரா யிரமுங் நிலமாயிரத் தாண்டும்
பேராது காயம் பிரான்நந்தி ஆணையே. 722

ஓசையில் ஏழும் ஒளியின்கண் ஐந்தும்
நாசியின் மூன்றும் நாவில் இரண்டும்
தேசியும் தேசனுந் தன்னிற் பிரியுநாள்
மாசறு சோதி வகுத்துவைத் தானே. 723

சரீரசித்தி உபாயம்

உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தேன்
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே. 724

உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே யுறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண் டானென்று
உடம்பினை யானிருந் தோம்புகின் றேனே. 725

சுழற்றிக் கொடுக்கவே சுத்திக் கழியுங்
கழற்றி மலத்தைக் கமலத்தைப் பூரித்து
உழற்றிக் கொடுக்கும் உபாயம் அறிவார்க்கு
அழற்றித் தவிர்ந்துடல் அஞ்சன மாமே. 726

அஞ்சனம் போன்றுட லையறு மந்தியில்
வஞ்சக வாத மறுமந்தி யானத்திற்
செஞ்சிறு காலையிற் செய்திடிற் பித்தறும்
நஞ்சறச் சொன்னோம் நரைதிரை நாசமே. 727

மூன்று மடக்குடைப் பாம்பிரண் டெட்டுள
ஏன்ற வியந்திரம் பன்னிரண் டங்குலம்
நான்றவிழ் முட்டை யிரண்டையுங் கட்டியிட்டு
ஊன்றி யிருக்க உடலழி யாதே. 728

நூறும் அறுபதும் ஆறும் வலம்வர
நூறும் அறுபதும் ஆறும் இடம்வர
நூறும் அறுபதும் ஆறும் எதிரிட
நூறும் அறுபது மாறும் புகுவரே. 729

சத்தியார் கோயி லிடம்வலஞ் சாதித்தான்
மத்தியா னத்திலே வாக்கியங் கேட்கலாந்
தித்தித்த கூத்துஞ் சிவனும் வெளிப்படுஞ்
சத்தியஞ் சொன்னோஞ் சதாநந்தி ஆணையே. 730

திறத்திறம் விந்து திகழு மகாரம்
உறப்பெற வேதினைந் தோதுஞ் சகாரம்
மறிப்பது மந்திர மன்னிய நாத
மறப்பற யோகிக் கறநெறி யாமே. 731

உந்திச் சுழியின் உடனே பிராணனைச்
சிந்தித் தெழுப்பிச் சிவமந் திரத்தினால்
முந்தி முகட்டின் நிறுத்தி யபானனைச்
சிந்தித் தெழுப்பச் சிவனவ னாமே. 732

மாரு மலக்குதந் தன்மே லிருவிரற்
கூரு இலிங்கத்தின் கீழே குறிக்கொண்மின்
ஆரு உடம்பிடை அண்ணலும் அங்குளன
கூரு உபதேசங் கொண்டது காணுமே. 733

நீல நிறனுடை நேரிழை யாளொடுஞ்
சாலவும் புல்லிச் சதமென் றிருப்பார்க்கு
ஞாலம் அறிய நரைதிரை மாறிடும்
பாலனு மாவர் பராநந்தி ஆணையே. 734

அண்டஞ் சுருங்கில் அதற்கோ ரழிவில்லை
பிண்டஞ் சுருங்கிற் பிராணன் நிலைபெறும்
உண்டி சுருங்கில் உபாயம் பலவுள
கண்டங் கறுத்த கபாலியு மாமே. 735

பிண்டத்துள் உற்ற பிழைக்கடை வாசலை
அண்டத்துள் உற்று அடுத்தடுத் தேகிடில்
வண்டிச் சிக்கு மலர்க்குழல் மாதரார்
கண்டிச் சிக்குநற் காயமு மாமே. 736

சுழலும் பெருங்கூற்றுத் தொல்லைமுன் சீறி
அழலும் இரத்தத்துள் அங்கியுள் ஈசன்
கழல்கொள் திருவடி காண்குறில் ஆங்கே
நிழலுளுந் தெற்றுளும் நிற்றலு மாமே; 737

நான்கண்ட வன்னியும் நாலு கலையேழுந்
தான்கண்ட வாயுவுஞ் சரீர முழுதொடும்
ஊன்கண்டு கொண்ட வுணர்வு மருந்தாக
மான்கன்று நின்று வளர்கின்ற வாறே. 738

ஆகுஞ் சனவேத சத்தியை அன்புற
நீகொள்ளின் நெல்லின் வளர்கின்ற நேர்மையைப்
பாகு படுத்திப் பல்கோடி களத்தினல்
ஊழ்கொண்ட மந்திரந் தன்னால் ஒடுங்கே, 739

காலசக்கரம்

மதிவட்ட மாக வரையைந்து நாடி
இதுவிட்டிங் கீரா றமர்ந்த அதனுற்
பதிவட்டத் துள்நின்று பாலிக்கு மாறு
மதுவிட்டுப் போமாறு மாயலுற் றேனே. 740

உற்றறி வைந்தும் உணர்ந்தறி வாறேழுங்
கற்றறி வெட்டுங் கலந்தறி வொன்பதும்
பற்றிய பத்தும் பலவழி நாழிகை
அற்றதறி யாதழிகின்ற வாறே. 741

அழிகின்ற ஆண்டவை ஐயைஞ்சு மூன்று
மொழிகின்ற முப்பத்து மூன்றென்ப தாகுங்
கழிகின்ற காலறு பத்திரண் டென்ப
தெழுகின்ற ஈரைம்ப தெண்ணற் றிருந்தே. 742

திருந்து தினமத் தினத்தி னெடுநின்(று)
றிருந்தறி நாளொன்(று) இரண்டெட்டு மூன்று
பொருந்திய நாளொடு புக்கறிந் தோங்கி
வருந்துத லின்றி மனைபுக லாமே. 743

மனைபுகு வீரும் மனத்திடை நாடி
எனவிரு பத்தஞ்சும் ஈரா றதனுல்
தனையறிந் தேரட்டுத் தற்குறி யாறு
வினையறி யாது விளங்கிய நாலே. 744

நாலுங் கடந்தது நால்வரும் நாலைந்து
பாலங் கடந்தது பத்துப் பதினைந்து
கோலங் கடந்த குணத்தாண்டு மூவிரண்(டு)
ஆலங் கடந்ததொன் ருரறி வாரே. 745

ஆறும் இருபது கையுஞ்சு மூன்றுக்குந்
தேறு மிரண்டு மிருபத்தொ டாறிவை
கூறு மதியொன் றினுக்கிரு பத்தேழு
வேறு பதியங்க ளுள்விதித் தானே. 746

விதித்த இருபத்தெட் டொடுமூன் றறையாகத்
தொகுத்தறி முப்பத்து மூன்று தொகுமின்
பதித்தறி பத்தெட்டும் பாரா திகனுல்
உதித்தறி மூன்றிரண் டொன்றின் முறையே. 747

முறைமுறை யாய்ந்து முயன்றில ராகில்
இறையிறை யார்க்கும் இருக்க அரிது
மறையது காரண மற்றென்று மில்லை
பறையறை யாது பணிந்து முடியே. 748

முடிந்த தறியார் முயல்கின்ற மூர்க்கர்
இடிஞ்சில் இருக்க விளக்கெரி கொண்டு
கடிந்தனல் மூளக் கதுவவல் லார்க்கு
நடந்திடும் பாரினில் நண்ணலு மாமே. 749

நண்ணுஞ் சிறுவிர ஞணுக மூன்றுக்கும்
பின்னிய மார்பிடைப் பேராமல் ஒத்திடும்
சென்னியின் மூன்றுக்குஞ் சேரவே நின்றிடில்
உன்னி யணைந்திடும் ஓவியந் தானே. 750

ஓவிய மான வுணர்வை அறிமின்கள்
பாவிக ளித்தின் பயனறி வாரில்லை
தீவினை யாமுடல் மண்டல மூன்றுக்கும்
பூவில் இருந்திடும் புண்ணியத் தண்டே. 751

தண்டுடன் ஓடித் தலைபெய்த யோகிக்கு
மண்டல மூன்று மகிழ்ந்துடல் ஒத்திடுங்
கண்டவர் கண்டனர் காணுர் வினைப்பயன்
பிண்டம் பிரியப் பிணங்குகின் ருரே. 752

பிணங்கி அழிந்திடும் பேறது கேள் நீ
அணங்குட ஞதித்த ஞறு விரியின்
வணங்குட னேவந்த வாழ்வு குலேந்து
சுணங்கனுக் காகச் சுழல்கின்ற வாறே. 753

சுழல்கின்ற் வாறின் துணேமலர் காணுன்
தழலிடைப் புக்கிடுந் தன்னு ளிலாமற்
கழல்கண்டு போம்வழி காணவல் லாற்குக்
குழல்வழி நின்றிடுங் கூத்தனு மாமே. 754

கூத்தன் குறியிற் குணம்பல கண்டவர்
சாத்திரந் தன்னேத் தலேப்பெய்து நிற்பர்கள்
பார்த்திருந் துள்ளே அனுபோக நோக்கிடில்
ஆத்தனுமாகி யலர்ந்திரு மொன்றே. 755

ஒன்றில் வளர்ச்சி உலப்பிலி கேளினி
நன்றென்று மூன்றுக்கு நாளது சென்றிடுஞ்
சென்றிடு மூப்பதுஞ் சேர இருந்திடிற்
குன்றிடைப் பொன்திகழ் கூத்தனு மாமே. 756

கூத்தவன் ஒன்றிடுங் கூர்மை அறிந்தங்கே
ஏத்துவர் பத்தினில் எண்டிசை தோன்றிடப்
பார்த்து மகிழ்ந்து பதுமரை நோக்கிடிற்
சாத்திடு நூறு தலேப்பெய்ய லாமே. 757

சாத்திடு நூறு தலேப்பெய்து நின்றவர்
காத்துடல் ஆயிரங் கட்டுறக் காண்பர்கள்
சேர்த்துடல் ஆயிரஞ் சேர இருந்தவர்
மூத்துடன் கோடி யுகமது வாமே. 758

உகங்கோடி கண்டும் ஒசிவற நின்று
அகங்கோடி கண்டு ளயலறக் காண்பர்கள்
சிவங்கோடி விட்டுச் செறிய இருந்தங்கு
உகங்கோடி கண்டங்(கு) உயருறு வாரே. 759

உயருறு வாருல கத்தொடுங் கூடிப்
பயனுறு வார்பலர் தாமறி யாமற்
செயலுறு வார்சிலர் சிந்தையி லாமற்
கயலுறு கண்ணியைக் காணகி லாரே. 760

காணகி லாதார் கழிந்தோடிப் போவர்கள்
நாணகி லாதார் நயம்பேசி விடுவர்கள்
காணகி லாதார் கழிந்த பொருளெலாங்
காணகி லாமற் கழிகின்ற வாறே, 761

கழிகின்ற அப்பொருள் காணகி லாதார்
கழிகின்ற அப்பொருள் காணலு மாகுங்
கழிகின்ற வுள்ளே கருத்துற நோக்கிற்
கழியாத அப்பொருள் காணலு மாமே. 762

கண்ணன் பிறப்பிலி காணந்தி யாயுள்ளே
எண்ணுந் திசையுடன் ஏகாந்த ஞயிடுந்
திண்ணென் றிருக்குஞ் சிவகதி யாநிற்கும்
நண்ணும் பதமிது நாடவல் லார்கட்கே. 763

நாடவல் லரர்க்கு நமனில்லை கேடில்லை
நாடவல் லார்கள் நரபதி யாய்நிற்பர்
தேடவல் லார்கள் தெரிந்த பொருளிது
கூடவல் லார்கட்குக் கூறலு மாமே, 764

கூறும் பொருளி தகார வுகாரங்கள்
தேறும் பொருளிது சிந்தையுள் நின்றிடக்
கூறுமகாரங் குழல்வழி யோடிட
ஆறும் அமர்ந்திடும் அண்ணலு மாமே. 765

அண்ணல் இருப்பிட மாரும் அறிகிலர்
அண்ணல் இருப்பிடம் ஆய்ந்துகொள் வார்களுக்(கு)
அண்ணல் அழிவின்றி உள்ளே அமர்ந்திடும்
அண்ணலைக் காணில் அவனிவ ஞகுமே. 766

அவனிவ னுகும் பரிசறி வாரில்லை
அவனிவ னுகும் பரிசது கேள்நீ
அவனிவ ஞேசை ஒளியினுள் ஒன்றிடும்
அவனிவன் வட்டம தாகிநின் ருனே, 767

வட்டங்க ளேழு மலர்ந்திடும் உம்முளே
சிட்டன் இருப்பிடஞ் சேர அறிகிலீர்
ஒட்டி யிருந்துள் உபாயம் உணர்ந்திடக்
கட்டி இருப்பிடங் காணலு மாகுமே. 768

காணலு மாகும் பிரமன் அரியென்று
காணலு மாகுங் கறைக்கண்டன் ஈசனைக்
காணலு மாகுஞ் சதாசிவ சத்தியுங்
காணலு மாகுங் கலந்துடன் வைத்தே. 769

ஆயுள் பரீட்சை

வைத்தகை சென்னியில் நேரிதாய்த் தோன்றிடில்
உத்தம மிக்கிடில் ஓராறு திங்களா(ம்)
அத்த மிகுத்திட் டிரட்டிய தாயிடில்
நித்தல் உயிர்க்கொரு திங்களில் ஓசையே 770

ஓசையும் ஈசனும் ஒக்கும் உணர்வின்கண்
ஓசை யிறந்தவர் ஈசனை உள்குவர்
ஓசை யிறந்தவர் நெஞ்சினுள் ஈசனும்
ஓசை யுணர்ந்த வுணர்விது வாமே. 771

ஆமே அழிகின்ற வாயுவை நோக்கிடில்
நாமேல் றரைகின்ற நன்மை யளித்திடும்
பூமேல் உறைகின்ற போதகம் வந்திடுந்
தாமே யுலகில் தலைவனு மாமே. 772

தலைவ னிடம்வலஞ் சாதிப்பார் இல்லை
தலைவ னிடம்வல மாயிடில் தையல்
தலைவ னிடம்வலந் தன்வழி யஞ்சில்
தலைவ னிடம்வலந் தன்வழி நூறே. 773

ஏறியி வாறினில் எண்பது சென்றிடுந்
தேறிய ஏழிற் சிறக்கும் வகையெண்ணில்
ஆறொரு பத்தாய் அமர்ந்த இரண்டையுந்
தேறியே நின்று தெளியிவ் வகையே, 774

இவ்வகை எட்டும் இடம்பெற ஓடில்
அவ்வகை ஐம்பதே யென்ன அறியலாஞ்
செவ்வகை ஒன்பதுஞ் சேரவே நின்றிடின்
முவ்வகை யாமது முப்பத்து மூன்றே. 775

மும்மூன்றும் ஒன்றும் முடிவுற நின்றிடில்
எண்மூன்றும் நாலும் இடவகை யாய்நிற்கும்
ஐம்மூன்றும் ஓடி அகலவே நின்றிடிற்
பன்மூன்றொ டீராறு பார்க்கலு மாமே. 776

பார்க்கலு மாகும் பகல்முப் பதுமாகில்
ஆக்கலு மாகுமவ் வாறிரண் டுள்ளிட்டுப்
போக்கலு மாகும் புகலற ஒன்றினில்
தேக்கலு மாகுந் திருந்திய பத்தே. 777

ஏயிரு நாளும் இயல்புற ஓடிடிற்
பாயிரு நாலும் பகையற நின்றிடும்
தேய்வுற மூன்றுந் திகழவே நின்றிடில்
ஆயுரு வாறென்(று) அளக்கலு மாமே. 778

அளக்கும் வகைநாலும் அவ்வழி ஓடில்
விளக்கும் ஒருநாலு மெய்ப்பட நிற்கும்
துளக்கும் வகையைந்துந் தூய்நெறி ஓடில்
களக்க மறமூன்றிற் காணலு மாமே. 779

காணலு மாகுங் கருதிய பத்தோடிற்
காணலு மாகுங் கலந்த இரண்டையும்
காணலு மாகுங் கலப்பற மூவைந்தேற்
காணலு மாகுங் கருத்துற ஒன்றே. 780

கருதும் இருபதிற் காணஆ றுகும்
கருதிய ஐயைந்திற் காண்பது மூன்றும்
கருதும் இருப துடனாறு காணிற்
கருதும் இரண்டெனக் காட்டலு மாமே. 781

காட்டலு மாகுங் கலந்திரு பத்தெழில்
காட்டலு மாகுங் கலதெழும் ஒன்றெனக்
காட்டலு மாகுங் கலந்திரு பத்தெட்டிற்
காட்டலு மாகுங் கலந்தஈ ரைந்தே. 782

ஈரந்தும் ஐந்தும் இருமூன்றும் எட்டுக்கும்
பாரஞ்சி நின்ற பகைபத்து நாளாகும்
வாரஞ்செய் கின்ற வகையாறஞ் சாமாகில்
ஓரஞ்சொ டொன்றுரன் றெனவொன்று நாளே. 783

ஒன்றிய நாள்கள் ஒருமுப்பத் தொன்றுகிற்
கன்றிய நாளுங் கருத்துற மூன்றுகுஞ்
சென்றுயிற் நாலெட்டுஞ் சேரவே நின்றிடின்
மன்றியல் பாகு மனையில் இரண்டே. 784

மனையில்ஒன் றுகும் மாதமு மூன்றுஞ்
சுனையில்ஒன் றுகத் தொனித்தனன் நந்தி
வினையற வோங்கி வெளிசெய்து நின்றால்
தனையுற நின்ற தலைவனு மாமே. 785

ஆரு மறியார் அளக்கின்ற வன்னியை
ஆரு மறியார் அளக்கின்ற வாயுவை
ஆரு மறியார் அழிகின்ற அப்பொருள்
ஆரு மறியா அறிவறிந் தேனே. 786

அறிவது வாயுவொ டைந்தறி வாய
அறிவா வதுதான் உலகுயி ரத்தின்
பிறிவுசெய் யாவகை பேணியுள் நாடிற்
செறிவது நின்று திகழு மதுவே. 787

அதுவருளும் மருளான துலகம்
பொதுவரு ளும்புக ழாளர்க்கு நாளு
மதுவரு ளும்மலர் மங்மையர் செல்வி
இதுவருள் செய்யும் இறையவ னுமே. 788

பிறப்பது சூழ்ந்த பெருந்தகை நந்தி
குறிப்பது கூடிய கோலக் குரம்பைப்
பழப்பதி யாவது பற்றறும் பாசம்
அழப்படி செய்வார்க் ககலு மதியே. 789

வாரசரம்

வெள்ளிவெண் திங்கள் விளங்கும் புதனிடம்
ஒள்ளிய மந்தன் இரவிசெவ் வாய்வலம்
வள்ளிய பொன்னே வளரும் பிறையிடந்
தெள்ளிய தேய்பிறை தான்வல மாமே. 790

வெள்ளிவெண் திங்கள் விளங்கும் புதன்மூன்றுந்
தள்ளி இடத்தே தயங்குமே யாமாகில்
ஒள்ளியே காயத்துக் கூன மிலையென்று
வள்ளல் நமக்கு மகிழ்ந்துரைத் தானே. 791

செவ்வாய் வியாழஞ் சனிஞாயி றேஎன்னும்
இவ்வா றறிகின்ற யோகி இறைவனே
ஒவ்வாத வாயு வளத்துப் புரியவிட்(டு)
அவ்வா றறிவார்க்கவ் வானந்த மாமே. 792

மாறி வருமிரு பான்மதி வெய்யவன்
ஏறி இழியும் இடைபிங் கலையிடை
ஊறும் உயிர்நடு வேயுயி ருக்கிரந்
தேறி அறிமின் தெரிந்து தெளிந்தே. 793

உதித்து வலத்திடம் போகின்ற போது
அதிர்த்தஞ்சி யோடுத லாமகன் றாரும்
உதித்தது வேமிக வோடிடு மாகில்
உதித்த விராசி யுணர்ந்துகொ ளுற்றே. 794

நடுவுநில் லாமல் இடம்வலம் ஒடி
அடுகின்ற வாயுவை அந்தணன் கூடி
இடுகின்ற வாறுசென் றின்பணி சேர
முடிகின்ற தீபத்தின் முன்னுண்டென் றானே. 795

ஆயும் பொருளும் அணிமலர் மேலது
வாயு விதமும் பதினா றுளவலி
போய மனத்தைப் பொருகின்ற வாதாரம்
ஆயுவு நாளு முகுர்த்தமு மாமே 796

வாரசூலம்

வாரத்திற் சூலம் வரும்வழி கூறுங்கால்
நேரொத்த திங்கள் சனிகிழக் கேயாகும்
பாரொத்த சேய்புதன் உத்தரம் பானுநாள்
நேரொத்த வெள்ளி குடக்காக நிற்குமே. 797

தெக்கண மாகும் வியாழத்துச் சேர்திசை
அக்கணி சூலமு மாமிடம் பின்னாகில்
துக்கமும் இல்லை வலமுன்னே தோன்றிடின்
மிக்கது மேல்வினை மேன்மேல் விளையுமே. 798

கேசரீயோகம்

கட்டக் கழன்று கீழ்நான்று வீழாமல்
அட்டத்தைக் கட்டி அடுப்பை அணைகோலி
விட்டத்தைப் பூட்டி மேற்பையைத் தாட்கோத்து
நட்ட மிருக்க நமனில்லை தானே. 799

வண்ணான் ஒலிக்குஞ் சதுரப் பலகைமேற்
கண்ணாறு மோழை படாமற் கரைகட்டி
விண்ணாறு பாய்ச்சிக் குளத்தை நிரப்பினால்
அண்ணாந்து பார்க்க அழுக்கற்ற வாறே. 800

இடக்கை வலக்கை இரண்டையும் மாற்றித்
துதிக்கையால் உண்பார்க்குச் சோரவும் வேண்டாம்
உறக்கத்தை நீக்கி உணரவல் லார்கட்(கு)
இறக்கவும் வேண்டாம் இருக்கலு மாமே. 801

ஆய்ந்துரை செய்யில் அமுதநின் றூறிடும்
வாய்ந்துரை செய்யும் வருகின்ற காலத்து
நீந்துரை செய்யில் நிலாமண் டலமதாய்ப்
பாய்ந்துறை செய்தது பாலிக்கு மாறே. 802

நாவின் நுனியை நடுவே விசிறிடிற்
சீவனும் அங்கே சிவனும் உறைவிடம்
மூவரு முப்பத்து மூவருந் தோன்றுவர்
சாவதும் இல்லைச் சதகோடி யூனே. 803

ஊனூறல் பாயும் உயர்வரை உச்சிமேல்
வானூறல் பாயும் வகையறி வாரில்லை
வானூறல் பாயும் வகையறி வாளர்க்குத்
தேனூறல் உண்டு தெளியலு மாமே. 804

மேலையண் ணுவில் விரைந்திரு காலிடிற்
காலனும் இல்லைக் கதவுந் திறந்திடும்
ஞாலம் அறிய நரைதிரைமாறிடும்
பாலனு மாவன் பராநந்தி ஆணையே. 805

நந்தி முதலாக நாமேலே யேறிட்டுச்
சந்தித் திருக்கில் தரணி முழுதாளும்
பந்தித் திருக்கும் பகலோன் வெளியாகச்
சிந்தித் திருப்பவர் தீவினை யாளரே. 806

தீவினை யாடத் திகைதங் கிருந்தவர்
நாவினை நாடின் நமனுக் கிடமில்லை
பாவினை நாடிப் பயனறக் கண்டவர்
தேவினை யாடிய தீங்கரும் பாமே. 807

தீங்கரும் பாகவே செய்தொழி லுள்ளவர்
ஆங்கரும் பாக அடையநா வேறிட்டுக்
கோங்கரும் பாகிய கோணை நிமிர்த்திட
ஊன்கரும் பாகியே ஊனீர் வருமே. 808

ஊனீர் வழியாக வுண்ணுவை யேறிட்டுத்
தேனீர் பருகிச் சிவாய நமவென்று
கானீர் வரும்வழி கங்கை தருவிக்கும்
வானீர் வரும்வழி வாய்ந்தறி வீரே. 809

வாய்ந்தறிந் துள்ளே வழிபாடு செய்தவர்
காய்ந்தறி வாகக் கருணை பொழிந்திடும்
பாய்ந்தறிந் துள்ளே படிக்கத வொன்றிட்டுக்
கோய்ந்தறிந் துள்ளுறை கோயிலு மாமே. 810

கோயிலின் உள்ளே குடிசெய்து வாழ்பவர்
தாயினும் நல்லார் தரணி முழுதுக்குங்
காயினும் நல்லவர் காய்ந்தவர் தம்முளுந்
தீயினுந் தீயரத் தீவினை யாளர்க்கே. 811

தீவினை யாளர்தஞ் சென்னியி லுள்ளவன்
பூவினை யாளர்தம் பொற்பதி யானவன்
பாவினை யாளர்தம் பாவகத் துள்ளவன்
மாவினை யாளர்தம் மதியிலுள் ளானே. 812

மதியி னெழுங்கதிர் போலப் பதினாுய்ப்
பதிமனை நுறுநுற் றிருபத்து நாலாய்க்
கதிமனை யுள்ளே கணைகள் பரப்பி
எதிர்மலை யாமல் இருந்தனன் தானே. 813

இருந்தனள் சத்தியு மக்கலை சூழ
இருந்தனள் கன் னியு மந்நடுவாக
இருந்தனள் மானேர் முகநில வார
இருந்தனள் தானும் அமுதம் பொழிந்தே 814

பொழிந்த இருவெள்ளி பொன்மண் ணடையில்
வழிந்துள் ளிருந்தது வான்முத லங்குக்
கழிந்தது போகாமற் காக்கவல் லார்க்குக்
கொழுந்தது வாகுங் குணமது தானே. 815

குணமது வாகிய கோமள வல்லி
மணமது வாக மகிழ்ந்தங் கிருக்கில்
தனமது வாகிய தத்துவ ஞானம்
இனமது வாக இருந்தனன் தானே. 816

இருந்த பிராணனும் உள்ளே எழுமாம்
பரிந்தஇத் தண்டுடன் அண்டம் பரிய
விரிந்தஅப் பூவுடன் மேலெழ வைக்கின்
மலர்ந்தது மண்டலம் வாழலு மாமே. 817

மண்டலத் துள்ளே மனவொட்டி யாணத்தைக்
கண்டகத் தங்கே கருதியே கீழ்க்கட்டிற்
பண்டகத் துள்ளே பகலே ஒளியாகக்
குண்டலக் காதனுங் கூத்தொழிந் தானே. 818

ஒழிகின்ற வாயுவும் உள்ளே அமருங்
கழிகின்ற வாயுவும் காக்கலு மாகும்
வழிகின்ற காலத்து வட்டக் கழலைப்
பழிகின்ற காலத்துப் பையகற் றீரே. 819

பையினி னுள்ளே படிக்கத வொன்றிடின்
மெய்யினி னுள்ளே விளங்கும் ஒளியதாங்
கையினுள் வாயுக் கதித்தங் கெழுந்திடின்
மையணி கோயில் மணிவிளக் காமே. 820

விளங்கிடும் வாயுவை மேலெழ உன்னி
நலங்கிடுங் கண்டத்து நாபியி னுள்ளே
வணங்கிடு மண்டலம் வாய்த்திடக் கும்பிச்
சுணங்கிட நின்றவை சொல்லலு மாமே. 821

சொல்லலு மாயிடு மாகத்து வாயுவுஞ்
சொல்லலு மாகு மண்ணீர்க் கடினமுஞ்
சொல்லலு மாகும் இவையஞ்சுங் கூடிடிற்
சொல்லலு மாந்தூர தெரிசனந் தானே. 822

தூர தரிசனஞ் சொல்லுவன் காணலாங்
காராருங் கண்ணி கடைஞான முட்பெய்தி
ஏராருந் தீபத் தெழிற்சிந்தை வைத்திடிற்
பாரா ருலகம் பகன்முன்ன தாமே. 823

முன்னெழு நாபிக்கு முந்நால் விரற்கீழே
பன்னெழு வேதப் பகலொளி யுண்டென்னும்
நன்னெழு நாதத்து நற்றீபம் வைத்திடத்
தன்னெழு கோயில் தலைவனு மாமே. 824

பரியங்கியோகம்

பூசு வனவெல்லாம் பூசிப் புலர்த்திய
வாச நறுங்குழல் மாலையுஞ் சாத்திக்
காயக் குழலி கலவி யொடுங்கலந்
தூசித் துளையுறத் தூங்காது போகமே. 825

போகத்தை யுன்னவே போகாது வாயுவு
மோகத்தை வெள்ளியு மீளும் வியாழத்தில்
சூதொத்த மென்முலை யாளுநற் சூதனுந்
தாதிற் குழைந்து தலைகண்ட வாறே. 826

கண்டனுங் கண்டியுங் காதல்செய் யோகத்து
மண்டலங் கொண்டிரு பாலும் வெளிநிற்கும்
வண்டியை மேற்கொண்டு வானீர் உருட்டிடத்
தண்டொரு காலுந் தளராது அங்கமே. 827

அங்கப் புணர்ச்சியு மாகின்ற தத்துவ
மங்கத்தில் விந்து வருகின்ற போகத்துப்
பங்கப் படாமற் பரிகரித் துத்தம்மைத்
தங்கிக் கொடுக்கத் தலைவனு மாமே. 828

தலைவனு மாயிடுந் தன்வழி ஞானந்
தலைவனு மாயிடுந் தன்வழி போகந்
தலைவனு மாயிடுந் தன்வழி யுள்ளே
தலைவனு மாயிடுந் தன்வழி அஞ்சே. 829

அஞ்சு கடிகைமேல் ஆறுங் கடிகையில்
துஞ்சுவ தொன்றத் துணைவி துணைவன்பால்
நெஞ்சு நிறைந்தது வாய்கொளா தென்றது
பஞ்ச கடிகை பரியங்க யோகமே. 830

பரியங்கி யோகத்துப் பஞ்ச கடிகை
அரியஇவ் வியோகம் அடைந்தவர்க் கல்லது
சரிவளை முன்கைச்சி சந்தனக் கொங்கை
உருவித் தழுவ ஒருவற்கொண் ணாதே. 831

ஒண்ணாத யோகத்தை உற்றவ ராரென்னில்
விண்ணார்ந்த கங்கை விரிசடை வைத்தவன்
பண்ணார் அமுதினைப் பஞ்ச கடிகையில்
எண்ணா மெனஎண்ணி இருந்தான் இருந்தே 832

ஏய்ந்த பிராயம் இருபது முப்பதும்
வாய்ந்த குழலிக்கு மன்னர்க்கு மானந்தம்
வாய்ந்த குழலியோ டைந்து மலர்ந்திடச்
சோர்ந்தன சித்தமுஞ் சோர்வில்லை வெள்ளிக்கே. 833

வெள்ளி யுருகிப் பொன்வழி ஓடாமே
கள்ளத்தட் டானார் கரியிட்டு மூடினார்
கொள்ளி பறியக் குழல்வழி யேசென்று
வள்ளியுண் ணாவில் அடக்கிவைத் தாரே. 834

வைத்த இருவருந் தம்மின் மகிழ்ந்துடன்
சித்தங் கலங்காது செய்கின்ற ஆனந்தம்
பத்து வகைக்கும் பதினெண் கணத்துக்கும்
வித்தக னாய்நிற்கும் வெங்கதி ரோனே. 835

வெங்கதி ருக்குஞ் சனிக்கும் இடைநின்ற
நங்கையைப் புல்லிய நம்பிக்கோ ரானந்தந்
தங்களிற் பொன்னிடை வெள்ளிதா ழாமுனந்
திங்களிற் செவ்வாய் புதைத்திருந் தாரே. 836

திருத்திப் புதனைத் திருத்தல் செய்வார்க்குக்
கருத்தழ காலே கலந்தங்கு இருக்கில்
வருத்தமு மில்லையா மங்கை பங்கற்குந்
துருத்தியில் வெள்ளியுஞ் சோரா தெழுமே. 837

எழுகின்ற தீயைமுன் னேகொண்டு சென்றிட்டால்
மெழுகுரு கும்பரி செய்திடும் மெய்யை
உழுகின்ற தில்லை ஒளியை அறிந்தபின்
விழுகின்ற தில்லை வெளியறி வார்க்கே. 838

வெளியை அறிந்து வெளியி னடுவே
ஒளியை அறியி னுளிமுறி யாமே
தெளிவை அறிந்து செழுநந்தி யாலே
வெளியை அறிந்தனன் மேலறி யேனே. 839

மேலாந் தலத்தில் விரிந்தவ ராரெனின்
மாலாந் திசைமுகன் மாநந்தி யாயவர்
நாலா நிலத்தி னடுவான வப்பொருள்
மேலா யுரைத்தனர் மின்னிடை யாளுக்கே. 840

மின்னிடை யாளுமின் னாளனுங் கூட்டத்துப்
பொன்னிடை வட்டத்தின் உள்ளே புகப்பெய்து
தன்னொடு தன்னைத் தலைப்பெய்ய வல்லாரேன்
மண்ணிடைப் பல்லூழி வாழலு மாமே. 841

வாங்க லிறுதலை வாங்கலில் வாங்கிய
வீங்க வலிக்கும் விரகறி வாரில்லை
வீங்க வலிக்கும் விரகறி வாளரும்
ஓங்கிய தன்னை உதம்பண்ணி னாரே. 842

உதமறிந்(து) அங்கே ஒருசுழிப் பட்டாற்
கதமறிந் தங்கே கபாலங் கறுக்கும்
இதமறிந் தென்றும் இருப்பாள் ஒருத்தி
பதமறிந்(து) உம்முளே பார்கடிந் தாளே 843

பாரில்லை நீரில்லைப் பங்கயம் ஒன்றுண்டு
தாரில்லை வேரில்லை தாமரை பூத்தது
ஊரில்லை காணும் ஒளியது ஒன்றுண்டு
கீழில்லை மேலில்லை கேள்வியிற் பூவே. 844

அமுரிதாரணை

உடலிற் கிடந்த உறுதிக் குடிநீர்க்
கடலிற் சிறுகிணற் றேற்றமி டாலொக்கும்
உடலில் ஒருவழி ஒன்றுக் கிறைக்கில்
நடலைப் படாதுயிர் நாடலு மாமே. 845

தெளிதரும் இந்தச் சிவநீர் பருகில்
ஒளிதரும் ஓராண்டில் ஊனமொன் றில்லை
வளியுறும் எட்டின் மனமும் ஒடுங்கும்
களிதருங் காயங் கனகம தாமே. 846

நூறு மிளகு நுகருஞ் சிவத்தினீர்
மாறும் இதற்கு மருந்தில்லை மாந்தர்கள்
தேறில் இதனைத் தெளியுச்சி கப்பிடின்
மாறும் இதற்கு மறுமயி ராமே. 847

கரையரு கேநின்ற கானல் உவரி
வரைவரை என்பர் மதியிலா மாந்தர்
நுரைதிரை நீக்கி நுகரவல் லார்க்கு
நரைதிரை மாறு நமனுமங் கில்லையே. 848

அளக நன்னுத லாயோ ரதிசயங்
களவு காயங் கலந்தஇந் நீரிலே
மிளகு நெல்லியும் மஞ்சளும் வேம்பிடில்
இளகும் மேனி இருளுங் கபாலமே. 849

வீர மருந்தென்றும் விண்ணோர் மருந்தென்றும்
நாரி மருந்தென்றும் நந்தி அருள்செய்தான்
ஆதி மருந்தென் றறிவார் அகலிடஞ்
சோதி மருந்திது சொல்லவொண் ணாதே, 850

சந்திரயோகம்

எய்து மதிக்கலை சூக்கத்தி லேறியே
எய்துவ தூலம் இருவகைப் பக்கத்துள்
எய்துங் கலைபோல ஏறி இறங்குமாந்
துய்யது சூக்கத்துத் காலத்த காயமே. 851

ஆகின்ற சந்திரன் சூரியன் அங்கியுள்
ஆகின்ற ஈரெட்டொ டாறிரண் டீரைந்துள்
ஏகின்ற வக்கலை யெல்லாம் இடைவழி
ஆகின்ற யோகி அறிந்த அறிவே. 852

ஆருற தாங்கலை ஆதித்தன் சந்திரன்
ஆரு நலங்கினுர் ஞாலங் கவர்கொளப்
பேருங் கலைமுற்றும் பெருங்கால் ஈரெட்டு
மாருக் கதிர்கொள்ளு மற்றங்கி கூடவே. 853

பத்தும் இரண்டும் பகலோன் உயர்கலை
பத்தினேடு ஆறும் உயர்கலை பான்மதி
ஒத்தநல் அங்கிய தெட்டெட்(டு) உயர்கலை
அத்திறன் நின்றமை ஆய்ந்துகொள் வீரே 854

எட்டெட்(டு) அனலின் கலையாகும் ஈராறுட்
சுட்டப் படுங்கதி ரோனுக்குஞ் சூழ்கலை
கட்டப் படுமீ ரெட்டாகு மதிக்கலை
ஒட்டப் படாஇவை ஒன்ருேடொன் ருகவே. 855

எட்டெட்டும் ஈராறும் ஈரெட்டுந் தீக்கதிர்
சுட்டிட்ட சோமனில் தோன்றுங் கலையெனக்
கட்டப் படுந்தார கைகதிர் நாலுள
கட்டிட்ட தொண்ணூற்ரு டாறுங் கலாதியே. 856

எல்லாக் கலையும் இடைபிங் கலைநடுச்
சொல்லா நடுநாடி யூடே தொடர்மூலஞ்
செல்லா எழுப்பிச் சிரத்துடன் சேர்தலால்
நல்லோர் திருவடி நண்ணிநிற் போரே. 857

அங்கியிற் சின்னக் கதிரிரண் டாட்டத்துத்
தங்கிய தாரகை யாகும் சசிபானு
வங்கிய தாரகை யாகும் பரையொளி
தங்கு நவசக்ர மாகுந் தரணிக்கே. 858

தரணி சலங்கனல் கால்தக்க வானம்
அரணிய பானு அருந்திங்கள் அங்கி
முரணிய தாரகை முன்னிய ஒன்பான்
பிரணவ மாகும் பெருநெறி தானே. 859

தாரகை மின்னுஞ் சசிதேயும் பக்கத்துத்
தாரகை மின்னு சசிவளர் பக்கத்துத்
தாரகை பூவிற் சகலத்தி யோனிகள்
தாரகைத் தாரகை தானுஞ் சொரூபமே. 860

முற்பதி னைஞ்சின் முளைத்துப் பெருத்திடும்
பிற்பதி னைஞ்சிற் பெருத்துச் சிறுத்திடும்
அப்பதி னைஞ்சும் அறியவல் லார்கட்குச்
செப்பரி யான்கழல் சேர்தலு மாமே. 361

அங்கி எழுப்பி யருங்கதிர் ஊட்டத்துத்
தங்குஞ் சசியால் தாமம்ஐந் தைந்தாகிப்
பொங்கிய தாரகை யாம்புலன் போக்கறத்
திங்கள் கதிரங்கி சேர்கின்ற யோகமே. 862

ஒன்றிய ஈரெண் கலையும் உடலுற
நின்றது கண்டு நினைக்கிலர் நீதர்கள்
கன்றிய காலன் கருத்துழி வைத்தபின்
சென்றதில் வீழ்வர் திகைப்பொழி யாரே. 863

அங்கி மதிகூட வாகும் கதிரொளி
அங்கி கதிர்கூட வாகும் மதியொளி
அங்கி சிவத்தினிற் கூடவத் தாரகை
தங்கி யதுவே சகலமு மாமே. 864

ஈராறு பெண்கலை எண்ணிரண் டாண்கலை
பேராமற் புக்குப் பிடித்துக் கொடுவந்து
நேராகத் தோன்றும் நெருப்புற வேபெய்யில்
ஆராத ஆனந்தம் ஆனந்த மானதே. 865

காணும் பரிதியின் காலை இடத்திட்டு
மாணும் மதியதன் காலை வலத்திட்டுப்
பேணியே யிவ்வாறு பிழையாமற் செய்வீரேல்
ஆணி கலங்காதவ் வாயிரத் தாண்டே. 866

பாலிக்கும் நெஞ்சம் பறையோசை ஒன்பதில்
ஆலிக்கும் அங்கே அமரர் பராபரன்
மேலைக்கு முன்னே விளக்கொளி யாய்நிற்குங்
காலைக்குச் சங்கு கதிரவன் தானே, 867

கதிரவன் சந்திரன் காலம் அளக்கும்
பொதிரவ னுள்ளே பொழிமழை நிற்கும்
அதிரவ னண்டப் புறஞ்சென் றடர்ப்ப
எதிரவ னீச னிடமது தானே. 868

உந்திக் கமலத்(து) உதித்தெழுஞ் சோதியை
அந்திக்கு மந்திர மாரும் அறிகிலார்
அந்திக்கு மந்திர மாரும் அறிந்தபின்
தந்தைக்கு முன்னே மகன்பிறந் தானே. 869

ஊதியம் ஏதும் அறியார் உரைப்பினும்
ஓதியும் ஏதும் அறியாத ஊமர்கள்
ஆதியும் அந்தமும் அந்திக்க வல்லீரேல்
வேதியன் அங்கே வெளிப்படுந் தானே. 870

பாம்பு மதியைத் தினலுறும் பாம்பினைத்
தீங்கு கதிரையுஞ் சோதித் தன்லுறும்
பாம்பு மதியும் பகைதீர்த்(து) உடன்கொளீஇ
நீங்கல் கொடானே நெடுந்தகை யானே. 871

அயின்றது வீழ்வள வுந்துயில் இன்றிப்
பயின்ற சசிவீழ் பொழுதில் துயின்று
நயந்தரு பூரணை உள்ள நடத்தி
வியந்தரு பூரணை மேவுஞ் சசியே. 872

சசியுதிக் கும்அள வுந்துயி லின்றிச்
சசியுதித் தானேல் தனதூண் அநந்திச்
சசிசரிக் கின்றள வுந்துயி லாமற்
சசிசரிப் பின்கட்டன் கண்டுயில் கொண்டதே. 873

ஊழி தரியா திருக்கின்ற யோகிகள்
நாழிகை யாக நமனை அளப்பர்கள்
ஊழி முதலாய் உயர்வார் உலகினில்
தாழவல் லார்இச் சசிவன்ன ராமே. 874

தண்மதி பானுச் சரிபூமி யேசென்று
மண்மதி காலங்கள் மூன்றும் வழிகண்டு
வெண்மதி தோன்றிய நாளில் விளைந்தபின்
தண்மதி வீழ்வள விற்கண மின்றே. 875

வளர்கின்ற ஆதித்தன் தன்கலை யாறும்
தளர்கின்ற சந்திரன் தன்கலை யாறும்
மலர்ந்தெழு பன்னிரண் டங்குலம் ஓடி
அலர்ந்து விழுந்தமை யாரறி வாரே. 876

ஆமுயிர்த் தேய்மதி நாளே யெனல்விந்து
போம்வழி எக்கணும் போகாது யோகிக்குக்
காமுற இன்மையிற் கட்டுண்ணு மூலத்தில்
ஓமதி யத்துள்விட் டுரையுணர் வாலே. 877

வேறுறச் செங்கதிர் மெய்க்கலை யாருெடுஞ்
சூறுற நான்குந் தொடர்ந்துற வேநிற்கும்
ஈறிலி னன்கலை யீரைந்தொ டேமதித்
தாறுட் கலையுள் அகலுவா வாமே. 878

உணர்விந்து சோணி உறவினன் வீசும்
புணர்விந்து வீசுங் கதிரிற் குறையில்
உணர்வும் உடம்பும் உவையொக்க நிற்கில்
உணர்வும் உடம்பும் ஒருகால் விடாவே. 879

விடாத மனபவ னத்தொடு மேவி
நடாவு சிவசங்கின் நாதங் கொளுவின்
கடாவிடா ஐம்புலன் கட்டுண்ணும் வீடு
படாதன இன்பம் பருகார் அமுதமே 880

அமுதப் புனல்வரு மாற்றங் கரைமேற்
குமிழிக்கத் தற்சுட ரைந்தையுங் கூட்டிச்
சமையத்தண் டோட்டித் தரிக்கவல் லார்க்கு
நமன் இல்லை நற்கலை நாள்இல்லை தானே. 881

உண்ணீ ரமுத முறுமூ றலைத்திறந்
தெண்ணீர் இணையடித் தாமரைக் கேசெலத்
தெண்ணீர்ச் சமாதி யமர்ந்துதீ ராநலக்
கண்ணுற் றெடேசென்று கால்வழி மாறுமே 882

மாறு மதியு மாதித்தனு மாறின்றிச்
தாறு படாமல் தண்டோடே தலைப்படில்
ஊறு படாதுடல் வேண்டும் உபாயமும்
பாறு படாஇன்பம் பார்மிசை பொங்குமே, 883

மூன்றும் தந்திரம் முற்றிற்று.

நான்காம் தந்திரம்

அசபை

போற்றுகின் றேன்புகழ்ந் தும்புகல் ஞானத்தைத்
தேற்றுகின் றேன்சிந்தை நாயகன் சேவடி
சாற்றுகின் றேன்அறை யோசிவ யோகத்தை
ஏற்றுகின் றேன்எம் பிரான்ஓர் எழுத்தே. 884

ஓரெழுத் தாலே உலகெங்குந் தானாகி
ஈரெழுத் தாலே இசைந்தங் கிருவராய்
மூவெழுத் தாலே முளைக்கின்ற சோதியை
மாவெழுத் தாலே மயக்கமே உற்றதே. 885

தேவ ருறைகின்ற சிற்றம் பலம்என்றுந்
தேவ ருறைகின்ற சிதம்பரமே யென்றுந்
தேவர் உறைகின்ற திருஅம் பலமென்றுந்
தேவர் உறைகின்ற தென்பொது வாமே. 886

ஆமேபொன் னம்பலம் அற்புதம் ஆனந்தம்
ஆமே திருகூத் தனவரத தாண்டவம்
ஆமே பிரளய மாகும்அத் தாண்டவம்
ஆமேசங் காரத் தருந்தாண் டவங்களே. 887

தாண்டவ மான தனியெழுத் தோரெழுத்
தாண்டவ மான தனுக்கிர கத்தொழில்
தாண்டவக் கூத்துத் தனிநின்ற தற்பரந்
தாண்டவக் கூத்துத் தமனியந் தானே. 888

தானே பரஞ்சுடர் தத்துவ மாய்நிற்குந்
தானே அகார உகாரம தாய்நிற்குந்
தானே பரஞ்சுடர் தத்துவக் கூத்துக்குத்
தானே தனக்குத் தராதலந் தானே. 889

தராதல மூலைக்குத் தற்பர மாபரன்
தராதலம் வெப்பு நமவா சியவாந்
தராதலஞ் சொல்லிற் றூனவா சியவாகுந்
தராதல யோகந் தயாவாசி யாமே. 890

ஆமே சிவங்கள் அகார உகாரங்கள்
ஆமே பரங்கள் அறியா விடம்என்ப
ஆமே திருகூத் தடங்கிய சிற்பரம்
ஆமே சிவகதி ஆனந்த மாமே. 891

ஆனந்த மூன்றும் அறிவிரண்டு ஒன்ருகும்
ஆனந்தஞ் சிவாய அறிவார் பலரில்லை
ஆனந்த மோடும் அறியவல் லார்கட்கு
ஆனத்தக் கூத்தாய் அகப்படுந் தானே. 892

படுவ திரண்டும் பலகலை வல்லார்
படுவ தோங்காரம் பஞ்சாக் கரங்கள்
படுவது சங்காரத் தாண்டவப் பத்தி
படுவது கோணம் பரந்திடும் வாறே. 893

வாறே சதாசிவ மாறிலா ஆகமம்
வாறே சிவகதி வண்டுறை புன்னையும்
வாறே திருகூத்து ஆகம வசனங்கள்
வாறே பொதுவாகு மன்றின் அமலமே. 894

அமலம் பதிபசு பாசங்கள் ஆகமம்
அமலந் திரோதாயி யாகுமா னந்தமாம்
அமலஞ்சொல் ஆணவ மாயை காமியம்
அமலந் திருகூத்தங் காடு மிடந்தானே. 895

தானே தனக்குத் தலைவனு மாய்நிற்குந்
தானே தனக்குத் தனமலை யாய்நிற்குந்
தானே தனக்குத் தன்மய மாய்நிற்குந்
தானே தனக்குத் தலைவனு மாமே. 896

தலைவனு மாய்நின்ற தற்பரக் கூத்தனைத்
தலைவனு மாய்நின்ற சற்பாத் திரத்தைத்
தலைவனு மாய்நின்ற தாதவிழ் ஞானத்
தலைவனு மாய்நின்ற தாளிணை தானே. 897

இணையார் திருவடி எட்டெழுத் தாகும்
இணையார் கழலிணை யீரைஞ்ச தாகும்
இணையார் கழலிணை ஐம்பத்தொன் றாகும்
இணையார் கழலிணை ஏழா யிரமே. 898

ஏழா யிரமாய் இருபதாய் முப்பதாய்
ஏழா யிரத்தும் எழுகோடி தானாகி
ஏழா யிரத்துயிர் எண்ணிலா மந்திரம்
ஏழா யிரண்டாய் இருக்கின்ற வாறே. 899

இருக்கின்ற மந்திரம் ஏழா யிரமாம்
இருக்கின்ற மந்திரம் இத்திறம் இல்லை
இருக்கின்ற மந்திரஞ் சிவன்திரு மேனி
இருக்கின்ற மந்திரம் இவ்வண்ணந் தானே. 900

தானே தனக்குத் தகுநட்டந் தானாகுந்
தானே அகார உகாரம தாய்நிற்குந்
தானே ரீங்காரத் தத்துவக் கூத்துக்குத்
தானே உலகில் தனிநடந் தானே. 901

நடமிரண்டு ஒன்றே நளினம தாகும்
நடமிரண்டு ஒன்றே நமன்செய்யுங் கூத்து
நடமிரண்டு ஒன்றே நகைசெயும் மந்திரம்
நடஞ்சிவ லிங்கம் நலஞ்செம்பு பொன்னே 902

செம்புபொன் னாகுஞ் சிவாய நமவென்னிற்
செம்புபொன் னாகத் திரண்டது சிற்பரஞ்
செம்புபொன் னாகும் ஸ்ரீயுங் கிரீயுமெனச்
செம்புபொன் னான திருவம் பலமே. 903

திருவம் பலமாகச் சீர்ச்சக் கரத்தைத்
திருவம் பலமாக ஈராறு கீறித்
திருவம் பலமாக விருபத்தைஞ் சாக்கித்
திருவம் பலமாகச் செபிக்கின்ற வாறே. 904

வாறே சிவாய நமச்சி வாயநம
வாறே செபிக்கில் வரும்பேர் பிறப்பில்லை
வாறே யருளால் வளர்கூத்துக் காணலாம்
வாறே செபிக்கில் வருஞ்செம்பு பொன்னே. 905

பொன்னான மந்திரம் புகலவும் ஒண்ணாது
பொன்னான மந்திரம் பொறிகிஞ்சு கத்தாகும்
பொன்னான மந்திரம் புகையுண்டு பூரிக்கிற்
பொன்னாகும் வல்லார்க் குடம்புபொற் பாதமே 906

பொற்பாதங் காணலாம் புத்திரர் உண்டாகும்
பொற்பாதத் தாணையே செம்புபொன் னாயிடும்
பொற்பாதங் காணத் திருமேனி யாயிடும்
பொற்பாத நன்னடஞ் சிந்தனை சொல்லுமே. 907

சொல்லு மொருகூட்டிற் புக்குச் சுசிக்கலாம்
நல்ல மடவர் நயந்துட னேவருஞ்
சொல்லினும் பாசச் சுடர்ப்பாம்பு நீங்கிடுஞ்
சொல்லுந் திருக்கூத்தின் சூக்குமந் தானே. 908

சூக்குமம் எண்ணா யிரஞ்செபித் தாலுமேற்
சூக்கும மான வழியிடைக் காணலாஞ்
சூக்கும மான வினையைக் கெடுக்கலாஞ்
சூக்கும மான சிவனதா னந்தமே. 909

ந	உ	ஶி	வ	ய	ஶி	உ	வ	ய	ந	ஶி
ய	ந	வ	ஶி	உ	வ	ஶி	ய	ந	உ	வ
உ	வ	ய	ந	ஶி	ய	வ	ஶி	உ	ய	ந
ஶி	ய	ந	உ	வ	ந	ந	உ	ஶி	வ	ய
வ	ஶி	உ	ய	ந	உ	ய	ந	வ	ஶி	உ
ஹ	ர	ஹ	ர	ஓம்	ஹாம் ம்	ஓம்	ஹ	ர	ஹ	ர
வ	உ	ந	ய	ஶி	ஓம்	ஶி	ந	ய	வ	உ
ஶி	ந	ய	வ	உ	ஹ	உ	ஶி	வ	ந	ய
உ	ஶி	வ	ந	ய	ர	ய	வ	ஶி	உ	ந
ய	வ	ஶி	உ	ந	ஹ	ந	ய	உ	ஶி	வ
ந	ய	உ	ஶி	வ	ர	வ	உ	ந	ய	ஶி

914-வது திருமந்திர விளக்கம்

சி	வ	ய	ந	ம	சி	வ	ய	ந	ம	சி
ம	ம	ம	ம	ம	ம	ம	ம	ம	ம	வ
ந	ம	ந	ந	ந	ந	ந	ந	ந	ம	ய
ய	ம	ந	ய	ய	ய	ய	ய	ந	ம	ந
வ	ம	ந	ய	வ	வ	வ	ய	ந	ம	ம
சி	ம	ந	ய	வ	சி	வ	ய	ந	ம	சி
ம	ம	ந	ய	வ	வ	வ	ய	ந	ம	வ
ந	ம	ந	ய	ய	ய	ய	ய	ந	ம	ய
ய	ம	ந	ந	ந	ந	ந	ந	ந	ம	ந
வ	ம	ம	ம	ம	ம	ம	ம	ம	ம	ம
சி	ம	ந	ய	வ	சி	ம	ந	ய	வ	சி

915-வது திருமந்திர விளக்கம்

ஆனந்த மொன்றென் றறைந்திட வானந்தம்
ஆனந்தம் ஆ-ஈ-ஊ.ஏ- ஒமொன் றைந்திடம்
ஆனந்த மானந்தம் அஞ்சும தாயிடும்
ஆனந்தம் அம்-ஹ்ரீம்-அம்-க்ஷம் ஆம் -ஆகுமே 910

மேனி யிரண்டும் விலங்காமல் மேல்கொள்ள
மேனி யிரண்டு மிக்கார விகாரியா
மேனி யிரண்டும் ஊ-ஆ-ஈ-ஏ-ஓ-என்னும்
மேனி யிரண்டும் ஈ-ஓ-ஊ-ஆ-ஏ கூத்துவே. 911

கூத்தே சிவாய நமசி வாயிடுங்
கூத்தே ஈ-ஊ-ஆ-ஏ-ஓம்-சிவாயநம வாயிடுங்
கூத்தே ஈ-ஊ.ஆ.ஏ-ஓம் சிவாயநம வாயிடுங்
கூத்தே இ-ஊ-ஆ-ஏ-ஓம் நமசிவாய கோளொன்று
மாறே. 912

ஒன்றிரண் டாடவோ ரொன்று முடனுட
ஒன்றினின் மூன்ருட ஓரேழும் ஒத்தாட
ஒன்றினல் ஆடவோர் ஒன்டதும் உடனுட
மன்றினி லாடினன் மாணிக்கக் கூத்தே. 913

திருவம்பலச் சக்கரம்

இருந்தஇவ் வட்டங்கள் ஈராறி ரேகை
இருந்த விரேகைமேல் ஈரா றிநத்தி
இருந்த மனேகளும் ஈராறு பத்தொன்
றிருந்த மனேயொன்றி லெய்துவன் ருனே, 914

தானென்றி வாழிடந் தன்னெழுத் தேயாகுந்
தானென்று மந்நான்குந் தன்பே ரெழுத்தாகுந்
தானென்று நாற்கோணந் தன்னேந் தெழுத்தாகுந்
தானென்றி லேயொன்று மவ்வரன் தானே, 915

அரகர என்ன அரியதொன் றில்லை
அரகர என்ன அறிகிலர் மாந்தர்
அரகர என்ன அமரரும் ஆவர்
அரகர என்ன அறும்பிறப் பன்றே 916

எட்டு நிலையுள எங்கோன் இருப்பிடம்
எட்டினில் ஒன்றும் இருமூன்றும் ஈரேழும்
ஒட்டிய விந்துவும் நாதமும் ஓங்கிடப்
பட்டது மந்திரம் பான்மொழி பாலே. 917

மட்டவிழ் தாமரை மாதுநல் லாளுடன்
ஒட்டி இருந்த உபாயம் அறிகிலர்
விட்ட எழுத்தை விடாத எழுத்துடன்
கட்டவல் லாருயிர் காக்கவல் லாரே. 918

ஆலய மாக அமர்ந்தபஞ் சாக்கரம்
ஆலய மாக அமர்ந்தவித் தூலம்பேர்
ஆலய மாக வருகின்ற சூக்குமம்
ஆலய மாக அமர்ந்திருந் தானே. 919

இருந்தஇவ் வட்ட விருமூன்றி ரேகை
இருந்த வதனு ளிரேகை யைந்தாக
இருந்த வறைகள் ளிருபத்தைஞ் சாக
இருந்த அறையொன்றி லெய்து மகாரமே. 920

மகார நடுவே வளைந்திடுஞ் சத்தியை
ஓகாரம் வளைத்திட் டும்பிளந் தேற்றி
யகாரந் தலையாய் இருகண் சிகாரமாய்
நகார வகாரநற் காலது நாடுமே. 921

நாடும் பிரணவ நடுவிரு பக்கமும்
ஆடு மவர்வாய் யமர்ந்தங்கு நின்றது
நாடு நடுவுண் முகநம சிவாய
வாடுஞ் சிவாயநம புறவட்டத் தாயதே. 922

ஆயுஞ் சிவாய நமமசி வாயந
வாயு நமசிவா யயநம சிவாயந
வாயுமே வாய நமசியெனு மந்திர
மாயுஞ் சிகாரந் தொட்டந்தத் தடைவிலே. 923

அடைவினில் ஐம்பதும் ஐயைந் தறையின்
அடையும் அறையொன்றுக் கீரெழுத் தாக்கி
அடையு மகாரத்தில் அந்தமாம் க்ஷவ்வும்
அடைவின் எழுத்தைம் பத்தொன்றும் அமர்ந்ததே. 924

அமர்ந்த அரகர வாம்புற வட்டம்
அமர்ந்த அரிகரி யாமத னுள்வட்டம்
அமர்ந்த அசபை யாமத னுள்வட்டம்
அமர்ந்தவி ரேகையும் ஆகின்ற சூலமே. 925

சூலத் தலையினில் தோற்றிடுஞ் சத்தியுஞ்
சூலத் தலையினிற் சூழும்ஓங் காரத்தால்
சூலத் திடைவெளி தோற்றிடும் அஞ்செழுத்
தாலப் பதிக்கும் அடைவது வாமே. 926

அதுவாம் அகார இகார உகாரம்
அதுவாம் எகாரம் ஒகார மதஞ்சாம்
அதுவாகுஞ் சக்கர வட்டமேல் வட்டம்
பொதுவாம் இடைவெளி பொங்குநம் பேரே. 927

பேர்பேற் றதுமூல மந்திரம் பின்னது
சோர்வுற்ற சக்கர வட்டதுட் சந்தியின்
நேர்பெற் றிருந்திட நின்றது சக்கரம்
ஏர்பெற் றிருந்த இயல்பிது வாமே. 928

இயலுமிம் மந்திரம் எய்தும் வழியின்
செயலும் அறியத் தெளிவிக்கு நாதன்
புயலும் புனலும் பொருந்தங்கி மண்விண்
முயலும் எழுத்துக்கு முன்னு இருந்ததே. 929

ஆறெட் டெழுத்தின்மே லாறும் பதினலும்
ஏறிட் டதன்மேலே விந்துவும் நாதமுஞ்
சீறிட்டு நின்று சிவாய நமவென்னக்
கூறிட்டு மும்மலங் கூப்பிட்டுப் போமே. 930

அண்ணல் இருப்ப தவளக் கரத்துளே
பெண்ணினல் லாளும் பிரானக் கரத்துளே
எண்ணி இருவர் இசைந்தங் கிருந்திடப்
புண்ணிய வாளர் பொருளறி வார்களே. 931

அவ்விட்டு வைத்தங் கரவிட்டு மேல்வைத்து
இவ்விட்டுப் பார்க்கில் இலிங்கம தாய்நிற்கும்
அவ்விட்டு மேலே வளியுறக் கண்டபின்
தொம்மிட்டு நின்ற சுடர்க்கொழுந் தாமே. 932

அவ்வுண்டு சவ்வுண் டனைத்துமங் குள்ளது
கவ்வுண்டு நிற்குங் கருத்தறி வாரில்லை
கவ்வுண்டு நிற்குங் கருத்தறி வாளர்க்குச்
சவ்வுண்டு சத்தி சதாசிவன் தானே. 933


அஞ்செழுத் தாலே அமர்ந்தனன் நந்தியும்
அஞ்செழுத் தாலே அமர்ந்தபஞ் சாக்கரம்
அஞ்செழுத் தாகிய வக்கர சக்கரம்
அஞ்செழுத் துள்ளே அமர்ந்திருந் தானே. 934

கூத்தனைக் காணுங் குறிபல பேசிடிற்
கூத்த னெழுத்தின் முதலெழுத் தோதினர்
கூத்தனெ டொன்றிய கொள்கைய ராய்நிற்பர்
கூத்தனைக் காணுங் குறியது வாமே. 935

அத்திசைக் குள்நின்ற அனலை எழுப்பியே
அத்திசைக் குள்நின்ற நவ்வெழுத் தோதினல்
அத்திசைக் குள்நின்ற அந்த மறையனை
அத்திசைக் குள்ளுற வாக்கினன் தானே. 936




921-வது திருமந்திர விளக்கம்




922-வது திருமந்திர விளக்கம்

சி	வா	ய	ந	ம
ம	சி	வா	ய	ந
ந	ம	சி	வா	ய
ய	ந	ம	சி	வா
வா	ய	ந	ம	சி


923-வது திருமந்திர விளக்கம்




923 — 926 திருமந்திர விளக்கம்



924—927 திருமந்திரங்களின் விளக்கம்



946—950 திருமந்திரங்களின் விளக்கம்



946-வது திருமந்திர விளக்கம்

18	19	20	21	22	23	24
17	சி	வ	ய	ந	ம	1
16	ம	சி	வ	ய	ந	2
15	ந	ம	சி	வ	ய	3
14	ய	ந	ம	சி	வ	4
13	வ	சி	ய	ந	ம	5
12	11	10	9	8	7	6

987, 988 - திருமந்திர விளக்கம்

தானே யளித்திடுந் தையலை நோக்கிறல்
தானே யளித்திட்டு மேலுற வைத்திடுந்
தானே யளித்த மகாரத்தை ஓதிடத்
தானே யளித்ததோர் கல்லொளி யாகுமே. 937

கல்லொளி யேயென நின்ற வடதிசை
கல்லொளி யேயென நின்றனன் இந்திரன்
கல்லொளி யேயென நின்ற சிகாரத்தைக்
கல்லொளி யேயெனக் காட்டிநின் ருனே. 938

தானே யெழுகுணந் தண்சுட ராய்நிற்குந்
தானே யெழுகுணம் வேதமு மாய்நிற்குந்
தானே யெழுகுண மாவதும் ஓதிடில்
தானே யெழுந்த மறையவ னுமே. 939

மறையவ ஞக மதித்த பிறவி
மறையவ ஞக மதித்திடக் காண்பர்
மறையவன் அஞ்செழுந் துண்ணிற்கப் பெற்ற
மறையவன் அஞ்செழுந் தாமது வாகுமே 940

ஆகின்ற பாதமு மந்நவாய் நின்றிடும்
ஆகின்ற நாபியுள் அங்கே மகாரமாம்
ஆகின்ற சீயிந தோள்வவ்வாய்க் கண்டபின்
ஆகின்ற வச்சுட ரவ்வியல் பாமே. 941

அவ்வியல் பாய இருமூன் றெழுத்தையுஞ்
செவ்வியல் பாகச் சிறந்தனன் நந்தியும்
ஒவ்வியில் பாக ஒளியுற நோக்கிடிற்
பவ்வியல் பாகப் பரந்துநின் ருனே. 942

பரந்தது மந்திரம் பல்லுயிர்க் கெல்லாம்
வரந்தரு மந்திரம் வாய்த்திட வாங்கித்
துரந்திடு மந்திரஞ் சூழ்பகை போக
உரந்தரு மந்திரம் ஓமென் றெழுப்பே. 943

ஓமென் றெழுப்பித்தன் உத்தம நந்தியை
நாமென் றெழுப்பி நடுவெழு தீபத்தை
ஆமென் றெழுப்பியவ் வாறறி வார்கள்
மாமன்று கண்டு மகிழ்ந்திருந் தாரே. 944

ஆகின்ற சக்கரத் துள்ளே எழுத்தைந்தும்
பாகொன்றி நின்ற பதங்களில் வர்த்திக்கும்
ஆகின்ற ஐம்பத் தோரெழுத் துள்நிற்கப்
பாகொன்றி நிற்கும் பராபரன் தானே. 945

பரமாய அஞ்செழுத் துள்நடு வாகப்
பரமாய நவசிம பார்க்கில் மவயநசி
பரமாய சியநம வாம்பரத் தோதிற்
பரமாய வாசி மயநமாய் நின்றே. 946

நின்ற எழுத்துக்கள் நேர்தரு பூதமும்
நின்ற எழுத்துக்கள் நேர்தரு வண்ணமும்
நின்ற எழுத்துக்கள் நேர்தர நின்றிடில்
நின்ற எழுத்துள்ளும் நின்றனன் தானே. 947

நின்றது சக்கரம் நீளும் புவியெல்லாம்
மன்றது வாய்நின்ற மாயநன் னாடனைக்
கன்றது வாகக் கறந்தனன் நந்தியுங்
குன்றிடை நின்றிடுங் கொள்கைய னாமே. 948

கொண்டஇச் சக்கரத் துள்ளே குணம்பல
கொண்டஇச் சக்கரத் துள்ளே குறியைந்து
கொண்டஇச் சக்கரங் கூத்தன் எழுத்தைந்துங்
கொண்டஇச் சக்கரத் துள்நின்ற கூத்தே. 949

வெளியி லிரேகை யிரேகையி லத்தலை
சுளியில் உகாரமாஞ் சுற்றிய வன்னி
நெளிதரு கால்கொம்பு நேர்விந்து நாதந்
தெளியும் பிரகாரஞ் சிவமந் திரமே. 950

அகார வுகார சிகார நடுவாய்
வகாரமோ டாறும் வளியுடன் கூடிச்
சிகார முடனே சிவன்சிந்தை செய்ய
ஒகார முதல்வன் உவந்துநின் றானே. 951

அற்ற விடத்தே அகாரம தாவது
உற்ற விடத்தே யுறுபொருள் கண்டிடச்
செற்றம் அறுத்த செழுஞ்சுடர் மெய்ப்பொருள்
குற்றம் அறுத்த பொன்போலுங் குளிகையே. 952

அவ்வென்ற போதினில் உவ்வெழுத் தாலித்தால்
உவ்வென்ற முத்தி யுருகிக் கலந்திடும்
மவ்வென்றென் னுள்ளே வழிப்பட்ட நந்தியை
எவ்வணஞ் சொல்லுகேன் எந்தை இயற்கையே. 953

நீரில் எழுத்திவ் வுலகார் அறிவது
வானில் எழுத்தொன்று கண்டறி வாரில்லை
யாரிவ் வெழுத்தை அறிவா ரவர்கள்
ஊனில் எழுத்தை உணர்கிலர் தாமே. 954

காலை நடுவுறக் காயத்தில் அக்கரம்
மாலை நடுவுற ஐம்பது மாவன
மேலை நடுவுற வேதம் விளம்பிய
மூலம் நடுவுற முத்திதந் தானே. 955

நாவியின் கீழது நல்ல எழுத்தொன்று
பாவிக ளத்தின் பயனறி வாரில்லை
ஓவிய ராலும் அறியவொண் ணாதது
தேவியுந் தானுந் திகழ்ந்திருந் தானே. 956

அவ்வொடு சவ்வென்ற தரனுற்ற மந்திரம்
அவ்வொடு சவ்வென்ற தாரும் அறிகிலர்
அவ்வொடு சவ்வென்ற தாரும் அறிந்தபின்
அவ்வொடு சவ்வும் அனாதியு மாமே. 957

மந்திரம் ஒன்றுள் மலரால் உதிப்பது
உந்தியி னுள்ளே உதயம்பண் ணுநிற்குஞ்
சந்திசெய் யாநிற்பர் தாம தறிகிலர்
சந்தி தொழுதுபோ யார்த்தகன் ருர்களே. 958

சேவிக்கு மந்திரஞ் செல்லுந் திசைபெற
ஆவிக்குள் மந்திரம் ஆதார மாவன
பூவுக்குள் மந்திரம் போக்கற நோக்கிடில்
ஆவிக்குள் மந்திரம் அங்குச மாமே. 959

அருவினில் அம்பரம் அங்கெழு நாதம்
பெருகு துடியிடை பேணிய விந்து
மருவி யகார சிகார நடுவாய்
உருவிட ஆறு முறுமந் திரமே. 960

விந்துவும் நாதமும் மேவி யுடன்கூடிச்
சந்திர னோடே தலைப்படு மாயிடில்
அந்தர வானத் தமுதம்வந் தூறிடும்
அங்குதி மந்திரம் ஆகுதி யாமே. 961

ஆறெழுத் தோதும் அறிவார் அறிகிலார்
ஆறெழுத் தொன்ருக ஓதி உணரார்கள்
வேறெழுத் தின்றி விளம்பவல் லார்கட்கு
ஓரெழுத் தாலே உயிர்பெற லாமே, 962

ஓதும் எழுத்தோ டுயிர்க்கலை மூவைஞ்சும்
ஆதி எழுத்தவை ஐம்பதோடு ஒன்றென்பர்
சோதி எழுத்தினில் ஐயிரு மூன்றுள
நாத எழுத்திட்டு நாடிக்கொள் ளீரே. 963

விந்துவி லுஞ்சுழி நாதம் எழுந்திடப்
பந்தத் தலையிற் பதினறு கலையதாய்க்
கந்தர வாகரங் காலுடம் பாயினுள்
அந்தமும் இன்றியே ஐம்பத்தொன் ருயதே. 964

ஐம்ப தெழுத்தே அனைத்தும்வே தங்களும்
ஐம்ப தெழுத்தே அனைத்தாக மங்களும்
ஐம்ப தெழுத்தேயு மாவ தறிந்தபின்
ஐம்ப தெழுத்தும்போய் அஞ்செழுத் தாமே 965

அஞ்செழுத் தாலைந்து பூதம் படைத்தனன்
அஞ்செழுத் தாற்பல யோனி படைத்தனன்
அஞ்செழுத் தாலிவ் வகலிடந் தாங்கினன்
அஞ்செழுத் தாலே அமர்ந்துநின் றானே. 966

வீழ்ந்தெழ லாம்விகிர் தன்திரு நாமத்தைச்
சோர்ந்தொழி யாமல் தொடங்கும் ஒருவற்குச்
சார்ந்த வினைத்துயர் போகத் தலைவனும்
போந்திடும் என்னும் புரிசடை யோனே. 967

உண்ணும் மருந்தும் உலப்பிலி காலமும்
பண்ணுறு கேள்வியும் பாடலு மாய்நிற்கும்
விண்ணின் றமரர் விரும்பி அடிதொழ
எண்ணின் றெழுத்தஞ்சு மாகிநின் றானே. 968

ஐந்தின் பெருமையே அகலிட மாவதும்
ஐந்தின் பெருமையே ஆலய மாவதும்
ஐந்தின் பெருமையே யறவோன் வழக்கமும்
ஐந்தின் வகைசெய்யப் பாலனு மாமே, 969

வேரெழுத் தாய்விண்ணாய் அப்புற மாய்நிற்கும்
நீரெழுத் தாய்நிலந் தாங்கியும் அங்குள்ள
சீரெழுத் தாய்அங்கி யாயுயி ராமெழுத்
தோரெழுத் தீசனும் ஒண்சுட ராமே. 970

நாலாம் எழுத்தோசை ஞாலம் உருவது
நாலாம் எழுத்தினுள் ஞாலம் அடங்கிற்று
நாலாம் எழுத்தே நவிலவல் லார்கட்கு
நாலாம் எழுத்தது நன்னெறி தானே 971

இயைந்தனள் ஏந்திழை என்னுள மேவி
நயந்தன ளங்கே நமசிவ என்னும்
பயந்தனை யோரும் பதமது பற்றும்
பெயர்ந்தனன் மற்றும் பிதற்றறுத் தேனே. 972

ஆமத் தினிதிருந் தன்ன மயத்தினை
ஓமத்தி லேயுதம் பண்ணும் ஒருத்திதன்
நாம நமசிவ என்றிருப் பாருக்கு
நேமத் தலைவி நிலவிநின் றாளே. 973

பட்டம் பரிசே பரமஞ் செழுத்ததின்
இட்ட மறிந்திட்(டு) இரவு பகல்வர
நட்டம தாடு நடுவே நிலயங்கொண்(டு)
அட்டதே சப்பொரு(ள்) ஆகிநின் றாளே. 974

அகாரம் உயிரே உகாரம் பரமே
மகார மலமாய் வருமுப்ப தாறிற்
சிகாரஞ் சிவமாய் வகாரம் வடிவமாய்
அகாரம் உயிரென் றறையலு மாமே. 975

நகார மகார சிகார நடுவாய்
வகாரம் இரண்டு வளியுடன் கூடி
ஒகார முதற்கொண் டொருக்கால் உறைக்க
மகார முதல்வன் மனத்தகத் தானே. 976

அஞ்சுள வானை அடவியுள் வாழ்வன
அஞ்சுக்கும் அஞ்செழுத்(து) அங்குச மாவன
அஞ்சையுங் கூடத் தடுக்கவல் லார்கட்கே
அஞ்சாதி யாதி அகம்புக லாமே. 977

ஐந்து கலையில் அகாராதி தன்னிலே
வந்த நகாராதி மாற்றி மகாராதி
நந்தியை மூலத்தே நாடிப் பரையொடுஞ்
சந்திசெய் வார்க்குச் சடங்கில்லை தானே. 978

மருவுஞ் சிவாயமே மன்னும் உயிரும்
அருமந்த யோகமும் ஞானமு மாகுந்
தெருள்வந்த சீவனார் சென்றிவற் றாலே
அருள்தங்கி யச்சிவ மாவது வீடே. 979

அஞ்சுக அஞ்செழுத் துண்மை அறிந்தபின்
நெஞ்சகத் துள்ளே நிறையும் பராபரம்
வஞ்சக மில்லை மனைக்கும் அழிவில்லை
தஞ்ச மிதுவென்று சாற்றுகின் றேனே. 980

சிவாயவொ டவ்வே தெளிந்துளத் தோதச்
சிவாயவொ டவ்வே சிவனுரு வாகுஞ்
சிவாயவொ டவ்வுந் தெளியவல் லார்கள்
சிவாயவொ டவ்வே தெளிந்திருந் தாரே. 981

சிகார வகார யகார முடனே
நகார மகார நடுவுற நாடி
ஒகார முடனே ஒருகா லுரைக்கு
மகார முதல்வன் மதித்துநின் றானே 982

நம்முதல் ஓரைந்தின் நாடுங் கருமங்கள்
அம்முதல் ஐந்தில் அடங்கிய வல்வினை
சிம்முத லுள்ளே தெளியவல் லார்கட்குத்
தம்முத லாகுஞ் சதாசிவந் தானே. 983

நவமுஞ் சிவமும் உயிர்பர மாகுந்
தவமொன் றிலாதன தத்துவ மாகுஞ்
சிவமொன்றி யாய்பவ ராதர வால்அச்
சிவமென்ப தானும் எனுந்தெளி வுற்றதே. 984

கூடிய எட்டும் இரண்டுங் குவிந்தறி
நாடிய நந்தியை ஞானத்து ளேவைத்து
ஆடிய ஐவரும் அங்குற வாவர்கள்
தேடி அதனைத் தெளிந்தறி யீரே. 985

எட்டும் இரண்டும் இனிதறி கின்றிலர்
எட்டும் இரண்டும் அறியாத ஏழையர்
எட்டும் இரண்டும் இருமூன்று நான்கெனப்
பட்டது சித்தாந்த சன்மார்க்க பாதமே. 986

எட்டு வரையின் மேலெட்டு வரைகீறி
இட்ட நடுவுள் இறைவன் எழுத்தொன்றில்
வட்டத்தி லேயறை நாற்பத்தெட் டுமிட்டுச்
சிட்டஞ் செழுத்துஞ் செபிசீக் கிரமே. 987

தானவர் சட்டர் சதிரர் இருவர்கள்
ஆனவிம் மூவரோ டாற்றவ ராதிகள்
ஏனைப் பதினைந்தும் விந்துவும் நாதமுஞ்
சேனையுஞ் செய்சிவ சக்கரந் தானே. 988

பட்டன மாதவ மாற்றும் பராபரம்
விட்டனர் தம்மை விகிர்தா நமவென்பர்
எட்டனை யாயினும் ஈசன் திறத்திறம்
ஒட்டுவன் பேசுவன் ஒன்றறி யேனே. 989

சிவன்முதல் மூவரோ டைவர் சிறந்து
அவைமுதல் ஆறிரண் டொன்றெடொன் றுன
அவைமுதல் விந்துவும் நாதமும் ஓங்கச்
சவைமுதல் சங்கரன் தன்பெயர் தானே. 990

வித்தாஞ் செகமய மாக வரைகீறி
நத்தார் கலைகள் பதினாறு நாட்டிப்பின்
உத்தாரம் பன்னிரண் டாதி கலைதொகும்
பத்தாம் பிரம சடங்குபார்த் தோதிடே. 991

கண்டெழுந் தேன்கம லம்மல ருள்ளிடை
கொண்டொழிந் தேனுடன் கூடிய காலத்துப்
பண்பழி யாத பதிவழி யேசென்று
நண்பழி யாமே நமவென லாமே. 992

	யு	வ	ய	
	வ்	சி	வ	
	ய	வ்	ய்	

996-வது திருமந்திர விளக்கம்

ம	சி	வ	ய	ந
ந	ம	சி	வ	ய
ய	ந	ம	சி	வ
வ	ய	ந	ம	சி
சி	வ	ய	ந	ம

997-வது திருமந்திர விளக்கம்


வடக்கு

மேற்கு | கிழக்கு

சி	வ	ய	ம	ந
வ	ய	ம	ந	சி
ய	ம	ந	சி	வ
ம	ந	சி	வ	ய
ந	சி	வ	ய	ம

தெற்கு

998-வது திருமந்திர விளக்கம்



1001 - வது திருமந்திர விளக்கம்

புண்ணிய வானவர் பூமழை தூவுநின்று
எண்ணுவர் அண்ணல் இணையடி மந்திரம்
நண்ணுவர் நண்ணி நமஎன்னு நாமத்தைக்
கண்ணென உன்னிக் கலந்துநின் றாரே. 993

ஆறெழுத் தாலவ் வாறு சமயங்கள்
ஆறுக்கு நாலே இருபத்து நாலென்பர்
சாவித் திரியில் தலையெழுத்(து) ஒன்றுள
பேதிக்க வல்லார் பிறவியற் றார்களே. 994

எட்டினில் எட்டறை யிட்டோர் அறையிலே
கட்டிய ஒன்றெட்டாய்க் காண நிறையிட்டுச்
சுட்டி இவற்றைப் பிரணவஞ் சூழ்ந்திட்டு
மட்டும் உயிர்கட் குமாபதி யானுண்டே. 995

நம்முதல் அவ்வொடு நாவின ராகியே
யம்முத லாகிய எட்டிடை யுற்றிட்டு
உம்முத லாகவே உணர்பவர் உச்சிமேல்
உம்முத லாயவன் உற்றுநின் றானே. 996

நின்ற அரசம் பலகைமேல் நேராக
ஒன்றிட மவ்விட்டு ஓலையிற் சாதகந்
துன்று மெழுகையுள் பூசிச் சுடரிடைத்
தன்ற வெதுப்பிடத் தம்பனங் காணுமே. 997

கரண விறளிப் பலகை யமன்றிசை
மரணமிட் டேட்டின் மகார வெழுத்திட்டு
வரணமி லிங்காயம் பூசி யடுப்பிடை
முரணிற் புதைத்திட மோகன மாகுமே. 998

ஆங்கு வடமேற்கில் ஐயனார் கோட்டத்திற்
பாங்கு படவே பலாசப் பலகையில்
காங்கரு மேட்டிற் கடுப்பூசி விந்துவிட்(டு)
ஓங்காரம் வைத்திடு உச்சாட னத்துக்கே. 999

உச்சியம் போதில் ஒளிவன்னி மூலையிற்
பச்சோலை யிற்பஞ்ச காயத்தைப் பாரித்து
முச்சது ரத்தின் முதுகாட்டில் வைத்திடு
வைச்சபின் மேலோர் மாரணம் வேண்டிலே. 1000

ஏய்ந்த வரிதார மேட்டின்மே லேபூசி
ஏய்ந்த வகாரம் உகாரம் எழுத்திட்டு
வாய்ந்ததோர் வில்வப் பலகை வசியத்துக்
கேய்ந்தவைத் தெண்பதி னாயிரம் வேண்டிலே. 1001

எண்ணாக் கருடனை ஏட்டின் யகாரமிட்(டு)
எண்ணாப் பொன்னாளில் எழுவெள்ளி பூசிடா
வெண்ணாவற் பலகையி லிட்டுமேற் கேநோக்கி
எண்ணா வெழுத்தொடெண் ணாயிரம் வேண்டிலே. 1002

அருச்சனை


அம்புய நீலங் கழுநீ ரணிநெய்தல்
வம்பவிழ் பூகமும் மாதவி மந்தாரம்
தும்பை வகுளஞ் சுரபுன்னை மல்லிகை
செண்பகம் பாதிரி செவ்வந்தி சாத்திடே. 1003

சாங்கம தாகவே சந்தொடு சந்தனந்
தேங்கமழ் குங்குமங் கர்ப்பூரங் காரகில்
பாங்கு படப்பனி நீராற் குழைத்துவைத்து
ஆங்கே அணிந்துநீர் அர்ச்சியும் அன்பொடே. 1004

அன்புட னேநின்று அமுதமும் ஏற்றியே
பொன்செய் விளக்கும் புகைதீபந் திசைதொறுந்
துன்பம் அகற்றித் தொழுவோர் நினையுங்கால்
இன்புட னேவந்து எய்திடும் முத்தியே. 1005

ய	ந	ம	சி	வ
வ	சி	ய	ந	ம
சி	வ	ய	ந	ம
ம	சி	வ	ய	ந
ந	ம	சி	வ	ய

1002 - வது திருமந்திர விளக்கம



1030-வது திருமந்திர விளக்கம்

எய்தி வழிப்படில் எய்தா தனவில்லை
எய்தி வழிப்படில் இந்திரன் செல்வமும்
எய்தி வழிப்படில் எண்சித்தி உண்டாகும்
எய்தி வழிப்படில் எய்திடும் முத்தியே. 1006

நண்ணும் பிறதார நீத்தார் அவித்தார்
மண்ணிய நைவேத் தியமனு சந்தான
நண்ணிய பஞ்சாங்க நண்ணுஞ் செபமென்னு
மன்னு மனபவ னத்தொடு வைகுமே. 1007

வேண்டார்கள் கன்மம் விமலனுக் காட்பட்டோர்
வேண்டார்கள் கன்ம மதிலிச்சை யற்றபேர்
வேண்டார்கள் கன்மம் மிகுசிவ யோகிகள்
வேண்டார்கள் கன்மம் மிகுதியோ ராய்ந்தன்பே. 1008

அறிவரு ஞானத் தெவரும் அறியார்
பொறிவழி தேடிப் புலம்புகின் ருர்கள்
நெறிமனை யுள்ளே நிலைபெற நோக்கில்
எறிமணி யுள்ளே இருக்கலு மாமே. 1009

இருளும் வெளியும்போல் இரண்டாம் இதயம்
அருளறி யாமையும் மன்னு மறிவு
மருளிவை விட்டெறி யாமை மயங்கு
மருளுஞ் சிதைத்தோ ரவர்களா மன்றே. 1010

தானவ ளுக அவனேதா ளுயிட
ஆன இரண்டில் அறிவன் சிவமாகப்
போனவ னன்பிது நாலாம் மரபுறத்
தானவ ளுகுமோ ராதித்த தேவரே. 1011

ஓங்கார முந்திக்கீழ் உற்றிடும் எந்நாளும்
நீங்கா வகாரமும் நீள்கண்டத் தாயிடும்
பாங்கார் நகாரம் பயில்நெற்றி யுற்றிடும்
வீங்காகும் விந்துவும் நாதமே லாகுமே. 1012

நமவது வாசன மான பசுவே
சிவமது சித்திச் சிவமாம் பதியே
நமவற வாதி நாடுவ தன்ருஞ்
சிவமாகு மாமோனஞ் சேர்தல்மெய் வீடே. 1013

தெளிவரு நாளிற் சிவஅமு தூறும்
ஒளிவரு நாளில் ஓரெட்டில் உகளும்
ஒளிவரும் அப்பதத்(து) ஓிரண் டாகில்
வெளிதரு நாதன் வெளியாய் இருந்தே. 1014

நவகுண்டம்

நவகுண்ட மானவை நானுரை செய்யின்
நவகுண்டத் துள்ளெழு நற்றீபந் தானும்
நவகுண்டத் துள்ளெழு நன்மைகள் எல்லாம்
நவகுண்ட மானவை நானுரைப் பேனே. 1015

உரைத்திடுங் குண்டத்தின் உள்ளேமுக் காலும்
நகைத்தெழு நாற்கோண நன்மைகள் ஐந்தும்
பகைத்திடு முப்புரம் பாரங்கி யோடே
மிகைத்திடு குண்டங்கள் மேலறி யோமே. 1016

மேலறிந் துள்ளே வெளிசெய்த வப்பொருள்
காலறிந் துள்ளே கருத்துற்ற செஞ்சுடர்
பாரறிந் தண்டஞ் சிறகற நின்றது
நானறிந் துள்ளே நாடிக்கொண் டேனே. 1017

கொண்டஇக் குண்டத்தின் உள்ளெழு சோதியால்
அண்டங்கள் ஈரேழு மாக்கி அழிக்கலாம்
பண்டையுள் வேதம் பரந்த பரப்பெலாம்
இன்றுசொல் நூலாய் எடுத்துரைத் தேனே. 1018

எடுத்தவக் குண்டத் திடம்பதி ஞறிற்
பதித்த கலேகளும் பாலித்து நிற்கும்
கதித்தனல் உள்ளெழக் கண்டுகொள் வார்க்கே
கொதித்தெழும் வல்வினே கூடகி லாவே. 1019

கூடமுக் கூடத்தின் உள்ளெழு குண்டத்துள்
ஆடிய ஐந்தும் அகம்புறம் பாய்நிற்கும்
பாடிய பன்னீ ரிராசியும் அங்கெழ
நாடிக்கொள் வார்கட்கு நற்சுடர் தானே. 1020

நற்சுட ராகுஞ் சிரமுக வட்டமாங்
கைச்சுட ராகுங் கருத்துற்ற கைகளிற்
பைச்சுடர் மேனி பதைப்புற் றிலிங்கமும்
நற்சுட ராயெழு நல்லதென் ருளே. 1021

நல்லதென் ருளே நமக்குற்ற நாயகஞ்
சொல்லதென் ருளே சுடர்முடி பாதமா
மெல்லநின் ருளே வினவகில் லாதவர்
கல்லதன் ருளேயுங் கற்றும்வின் ஞளே. 1022

வின்ஞ விளம்பிறை மேவிய குண்டத்துச்
சொன்ஞல் இரண்டுஞ் சுடர்நாகந் திக்கெங்கும்
பன்ஞலு நாகம் பரந்த பரஞ்சுடர்
என்ஞகத் துள்ளே இடங்கொண்ட வாறே. 1023

இடங்கொண்ட பாதம் எழிற்சுட ரேக
நடங்கொண்ட பாதங்கள் நண்ணீ ரதற்குச்
சகங்கொண்ட கையிரண் டாறுந் தழைப்ப
முகங்கொண்ட செஞ்சுடர் முக்கண ஞர்க்கே 1024

முக்கணன் ருனே முச்சுட ராயவன்
அக்கணன் ருனே அகிலமும் உண்டவன்
திக்கண ஞகித் திகையெட்டுங் கண்டவன்
எக்கணன் ருனுக்கும் எந்தை பிரானே. 1025

எந்தை பிரானுக் கிருமூன்று வட்டமாய்த்
தந்தைதன் முன்னே சண்முகந் தோன்றலால்
கந்தன் சுவாமி கலந்தங் கிருத்தலான்
மைந்தன் இவனென்று மாட்டிக்கொள் ளீரே. 1026

மாட்டிய குண்டத்தின் உள்ளெழு வேதத்துள்
ஆட்டிய காலொன்றும் இரண்டாய் அலர்ந்திடும்
வாட்டிய கையிரண் டொன்று பதைத்தெழ
நாட்டுஞ் சுரரிவர் நல்லொளி தானே. 1027

நல்லொளி யாக நடந்த வுலகெங்குங்
கல்லொளி யாகக் கலந்துள் இருந்திடுஞ்
சொல்லொளி யாகத் தொடர்ந்த உயிர்க்கெலாங்
கல்லொளி கண்ணுளு மாகிநின் றாளே. 1028

நின்றஇக் குண்டம் நிலையாறு கோணமாய்ப்
பண்டையில் வட்டம் பதைத்தெழு மாருறுங்
கொண்டஇத் தத்துவம் உள்ளே கலந்தெழ
விண்ணுளும் என்ன எடுக்கலு மாமே. 1029

எடுக்கின்ற பாதங்கண் மூன்ற தெழுகை
கடுத்த முகம் இரண் டாறுகண் ணாகப்
படித்தெண்ணு நாவெழு கொம்பொரு நாலும்
அடுத்தெழு கண்ணான தந்தமி லாற்கே. 1030

அந்தமில் லானுக் ககலிடந் தானில்லை
அந்தமில் லானை அளப்பவர் தாமில்லை
அந்தமில் லானுக் கடுத்தசொற் றானில்லை
அந்தமில் லானை அறிந்துகொள் பத்தே. 1031

பத்திட்டங் கெட்டிட்டாறிட்டு நாலிட்டு
மட்டிட்ட குண்டம் மலர்ந்தெழு தாமரை
கட்டிட்டு நின்று கலந்தமெய் யாகமும்
பட்டிட்டு நின்றது பார்ப்பதி பாலே. 1032

பார்ப்பதி பாகன் பரந்தகை நாலேஞ்சு
காற்பதி பத்து முகம்பத்துக் கண்களும்
பூப்பதி பாதம் இரண்டு சுடர்முடி
நாற்பது சோத்திரம் நல்லிரு பத்தஞ்சே. 1033

அஞ்சிட்ட கோலம் அளப்பன ஐயைந்தும்
அஞ்சிட்ட குண்ட மலர்ந்தங் கிருத்தலால்
பஞ்சிட்ட சோதி பரந்த பரஞ்சுடர்
கொஞ்சிட்ட வன்னியைக் கூடுதன் முத்தியே. 1034

முத்தநற் சோதி முழுச்சுட ராயவன்
கற்றற்று நின்றார் கருத்துள் இருந்திடும்
பற்றற நாடிப் பரந்தொளி யூடுபோய்
செற்றற் றிருந்தவர் சேர்ந்திருந் தாரே. 1035

சேர்ந்த கலையஞ்சுஞ் சேருமிக் குண்டமும்
ஆர்ந்த திசைகளும் அங்கே அமர்ந்திடும்
பாய்ந்தஐம் பூதமும் பார்க்கின்ற வன்னியைக்
காய்ந்தவர் என்றுங் கலந்தவர் தாமே. 1036

மெய்கண்ட மாம்விரி நீறல கேழையும்
உய்கண்டஞ் செய்த ஒருவனைச் சேருமின்
செய்கண்ட ஞானந் திருந்திய தேவர்கள்
பொய்கண்டம் இல்லாப் பொருள்கலந் தாரே. 1037

கலந்திரு பாதம் இருகர மாகும்
மலர்ந்திரு குண்ட மகாரத்தோர் மூக்கு
மலர்ந்தெழு செம்முக மற்றைக்கண் நெற்றி
உணர்ந்திரு குஞ்சியங் குத்தம னார்க்கே. 1038

உத்தமன் சோதி உளனொரு பாலனாய்
மத்திம னாகி மலர்ந்தங் கிருந்திடும்
பச்சிம திக்கும் பரந்து குழிந்தன
சத்திமா னாகத் தழைத்த கொடியே. 1039

கொடியாறு சென்று குலாவிய குண்டம்
அடியிரு கோணமாய் அந்தமும் ஒக்கும்
படியே மூலகும் பரந்த சுடரை
மடியாது கண்டவர் மாதன மாமே. 1040

மாதன மாக வளர்கின்ற வன்னியைச்
சாதன மாகச் சமைந்த குருவென்றும்
போதன மாகப் பொருந்த உலகாளும்
பாதன மாகப் பரிந்தது பார்த்தே. 1041

பார்த்திடம் எங்கும் பரந்தெழு சோதியை
ஆத்தம தாகவே யாய்ந்தறி வாரில்லை
காத்துட லுள்ளே கருதி இருந்தவர்
மூத்துடல் கோடி யுகங்கண்ட வாறே. 1042

உகங்கண்ட ஒன்பது குண்டமும் ஒக்க
அகங்கண்ட யோகியுள் நாடி எழுப்பும்
பயங்கண்டு கொண்டஇப் பாய்கரு வொப்பச்
சகங்கண்டு கொண்டது சாதன மாமே. 1043

சாதனை நாலு தழல்மூன்று வில்வயம்
வேதனை வட்டம் விளையாறு பூநிலை
போதனை போதைஞ்சு பொற்கய வாரண
நாதனை நாடு நவகோடி தானே, 1044

சத்திபேதம் - திரிபுரைச் சக்கரம்

மாமாயை மாயை வயிந்தவம் வைகரி
ஓமாயை உள்ளொளி ஓராறு கோடியில்
தாமான மந்திரஞ் சத்திதன் மூர்த்திகள்
ஆமா யலவாந் திரிபுரை யாங்கே. 1045

திரிபுரை சுந்தரி அந்தரி சிந்துரப்
பரிபுரை நாரணி யாம்பால வன்னத்தி
இருள்புரை ஈசி மனோன்மணி என்ன
வருபல வாய்நிற்கு மாமாது தானே. 1046

தானா அமைந்தவம் முப்புரந் தன்னிடைத்
தானான மூவுரு வோருருத் தன்மையள்
தானான பொன்செம்மை வெண்ணிறத் தாள்கல்வி
தானான போகமும் முத்தியும் நல்குமே. 1047

நல்குந் திரிபுரை நாதநா தாந்தங்கள்
பல்கும் பரவிந்து பாரண்ட மானவை
நல்கும் பரையபி ராமி அகோசரி
புல்கு மருளுமப் போதந்தந் தாளுமே. 1048

தாளணி நூபுரஞ் செம்பட்டுத் தானுடை
வாரணி கொங்கை மலர்க்கன்னல் வாளிவில்
ஏரணி அங்குச பாசம் எழில்முடி
காரணி மாமணிக் குண்டலக் காதிக்கே, 1049

குண்டலக் காதி கொலைவிற் புருவத்தள்
கொண்ட வரத்தி னின்மன்னு கோலத்தள்
கண்டிகை யாரங் கதிர்முடி மாமதிச்
சண்டிகை நாற்றிசை தாங்கிநின் றாளே. 1050

நின்ற திரிபுரை நீளும் புராதனி
குன்றலில் மோகினி மாதிருக் குஞ்சிகை
நன்றறி கண்டிகை நாற்காற் கரீடணி
துன்றிய நற்சுத்த தாமரைச் சுத்தையே. 1051

சுத்தவம் பாரத் தனத்தி சுகோதயள்
வத்துவ மாயா ளுமாசத்தி மாபரை
அத்தகை யான மனோரணி தானுமாய்
வைத்தவக் கோல மதியவ ளாகுமே. 1052

அவளை அறியா அமரரும் இல்லை
அவளன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை
அவளன்றி ஐவரால் ஆவதொன் றில்லை
அவளன்றி யூர்புகு மாறறி யேனே. 1053

அறிவார் பராசத்தி ஆனந்தம் என்பார்
அறிவார் அறிவுரு வாமவள் என்பார்
அறிவார் கரும மவளிச்சை என்பார்
அறிவார் பரனு மவளிடத் தானே. 1054

தானெங் குளதங் குளதையன் மாதேவி
ஊனெங் குளஅங் குள்ளுயிர்க் காவலன்
வானெங் குளஅங் குளேவந்து மப்பாலாம்
கோனெங்கும் நின்ற குறிபல பாரே. 1055

பராசத்தி மாசத்தி பல்வகை யாலுந்
தராசத்தி யாய்நின்ற தன்மை யுணரா
உராசத்தி ஊழிகள் தோறும் உடனே
பராசத்தி புண்ணிய மாகிய போகமே, 1056

போகஞ்செய் சத்தி புரிகுழ லாளொடும்
பாகஞ்செய் தாங்கே பராசத்தி யாய்நிற்கும்
ஆகஞ்செய் தாங்கே அடியவர் நாள்தோறும்
பாகஞ்செய் ஞானம் படர்கின்ற கொம்பே, 1057

கொம்பனை யாளைக் குவிமுலை மங்கையை
வம்பவிழ் கோதையை வானவர் நாடியைச்
செம்பவ ளத்திரு மேனிச் சிறுமியை
நம்பிஎன் உள்ளே நயந்துவைத் தேனே, 1058

வைத்த பொருளும் மருவுயிர்ப் பன்மையும்
பத்து முகமும் பரையும் பராபரைச்
சித்தக் கரணச் செயல்களுஞ் செய்திடுஞ்
சத்தியும் வித்தைத் தலையவ ளாமே. 1059

தலைவி தடமுலை மேல்நின்ற தையல்
தொலைவில் தவஞ்செயுந் தூய்நெறித் தோகை
கலைபல வென்றிடுங் கன்னியென் உள்ளம்
நிலைபெற இங்கே நிறைந்து நின்றாளே. 1060

நின்றவள் நேரிழை நீள்கலை யோடுற
என்றன் அகம்படிந் தேழுல குந்தொழ
மன்றது வொன்றி மனோன்மணி மங்கலி
ஒன்றென்ன ஒன்றநின் றொத்தடைந் தாளே, 1061

ஒத்தடங் குங்கம லத்திடை யாயிழை
அத்தகை செய்கின்ற வாய பெரும்பதி
மத்தடை கின்ற மனோன்மணி மங்கலி
சித்தடைக் கும்வழி தேர்ந்துண ரார்களே. 1062

உணர்ந்துட னேநிற்கும் உள்ளொளி யாகி
மணங்கமழ் பூங்குழல் மங்கையுந் தானும்
புணர்ந்துட னேநிற்கும் போதருங் காலைக்
கணிந்தெழு வார்க்குக் கதியளிப் பாளே. 1063

அளியொத்த பெண்பிள்ளை ஆனந்த சுந்தரி
புளியுறு புன்பழம் போலுள்ள நோக்கித்
தெளியுறு சித்துச் சிவகதி காட்டி
ஒளியுற வைத்தென்னை உய்ய வுண் டாளே. 1064

உண்டில்லை என்ற துருச்செயது நின்றது
வண்டில்லை மன்றினுள் மன்னி நிறைந்தது
கண்டிலர் காரண காரணி தம்மொடு
மண்டல மூன்றுற மன்னிநின் றாளே. 1065

நின்றாள் அவன்தன் உடலும் உயிருமாய்ச்
சென்றாள் சிவகதி சேரும் பராசத்தி
ஒன்றாக என்னுட் புகுந்துணர் வாகியே
நின்றாள் பரஞ்சுடர் ஏடங்கை யாளே. 1066

ஏடங்கை நங்கை இறைஎங்கள் முக்கண்ணி
வேடம் படிகம் விரும்புவெண் தாமரை
பாடுந் திருமுறை பார்ப்பனி பாதங்கள்
சூடுமென் சென்னிவாய்த் தோத்திரஞ் சொல்லுமே.
1067

தோத்திரஞ் செய்து தொழுது துணையடி
வாய்த்திட ஏத்தி வழிபடு மாறிரும்
பார்த்திடு மங்குச பாசம் பசுங்கரும்
பார்த்திடும் பூம்பிள்ளை யாகுமாம் ஆதிக்கே. 1068

ஆதி விதமிகுத் தண்டந்த மால்தங்கை
நீதி மலரின்மேல் நேரிழை நாமத்தைப்
பாதியில் வைத்துப் பல்காற் பயில்விரேல்
சோதி மிகுத்துமுக் காலமுந் தோன்றுமே. 1069

மேதாதி ஈரெட்டு மாகிய மெல்லியல்
வேதாதி நூலின் விளங்கும் பராபரை
ஆதார மாகியே ஆய்ந்த பரப்பினள்
நாதாதி நாதத்து நல்லரு ளாளே. 1070

அருள்பெற் றவர்சொல்ல வாரீர் மனிதர்
பொருள்பெற்ற சிந்தைப் புவனா பதியார்
மருளுற்ற சிந்தையை மாற்றி யருமைப்
பொருளுற்ற சேவடி போற்றுவன் நானே. 1071

ஆன வராக முகத்தி பதத்தினள்
ஈன வராகம் இடிக்கும் முசலத்தோ(டு)
ஏனை யுழுபடை ஏந்திய வெண்ணகை
ஊன மறவுணர்ந் தாருளத் தோங்குமே. 1072

ஓங்காரி என்பாள் அவளொரு பெண்பிள்ளை
நீங்காத பச்சை நிறத்தை யுடையவள்
ஆங்காரி யாகியே ஐவரைப் பெற்றிட்டு
ரீங்காரத் துள்ளே யினிதிருந் தாளே, 1073

தானே தலைவி யெனநின்ற தற்பரை
தானே யுயிர்வித்துத் தந்த பதினறும்
வானோர் தலமும் மனமும்நற் புத்தியுந்
தானே சிவகதி தன்மையு மாமே. 1074

வயிரவி மந்திரம்

பன்னிரண் டாங்கலை யாதி பயிரவி
தன்னில் அகாரமு மாயையுங் கற்பித்துப்
பன்னிரண் டாதியோ டந்தப் பதினலுந்
சொன்னிலை சோடச மந்தமென் றேதிடே. 1075

அந்தப் பதினலும் அதுவே வயிரவி
முந்து நடுவும் முடிவும் முதலாகச்
சிந்தைக் கலசத் தெழுகின்ற மாசத்தி
அந்தமும் ஆதியு மாகிநின் ருளே. 1076

ஆகின்ற மூவரும் அங்கே அடங்குவர்
போகின்ற பூதம் பொருந்து புராதரர்
சார்கின்ற சார்வுழிச் சாரரார் சதிர்பெறப்
போகுந் திரிபுரை புண்ணியத் தோரே. 1077

புண்ணிய நந்தி புனிதன் திருவாகும்
எண்ணிய நாட்கள் இருபத்தேழ் சூழ்மதி
பண்ணிய வன்னி பகலோன் மதியீறு
திண்ணிய சிந்தையன் தென்னனு மாமே. 1078

தென்னன் திருநந்தி சேவகன் தன்னெடும்
பொன்னங் கிரியிற் பூதலம் போற்றிடும்
பன்னும் பரிபிடி யந்தம் பகவனேடு
உன்னுந் திரிபுரை ஓதிநின் ருனுக்கே. 1079

ஓதிய நந்தி உணருந் திருவருள்
நீதியில் வேத நெறிவந் துரைசெய்யும்
போதம் இருபத் தெழுநாள் புணர்மதி
சோதி வயிரவி சூலம்வந் தாளுமே. 1080

சூலங் கபாலங்கை ஏந்திய சூலிக்கு
நாலாங் கரமுள நாகபா சாங்குச
மாலங் கயனறி யாத வடிவுக்கு
மேலங்க மாய்நின்ற மெல்லிய லாளே. 1081

மெல்லியல் வஞ்சி விடமி கலைஞானி
சொல்லிய கிஞ்சுக நிறமன்னு சேயிழை
கல்லியல் ஒப்பது காணுந் திருமேனி
பல்லிய லாடையும் பன்மணி தானே. 1082

பன்மணி சந்திர கோடி திருமுடி
சொன்மணி குண்டலக் காதி யுழைக்கண்ணி
நன்மணி சூரிய சோம நயனத்தள்
பொன்மணி வன்னியும் பூரிக்கின் றாளே. 1083

பூரித்த பூவிதழ் எட்டினுக் குள்ளேயோர்
ஆரியத் தாளுண்டங் கெண்மர் கன்னியர்
பாரித்த பெண்கள் அறுபத்து நால்வருஞ்
சாரித்துச் சத்தியைத் தாங்கள்கண் டாரே. 1084

கண்ட சிலம்பு வளைசங்கு சக்கரம்
எண்டிசை யோகி இறைவி பராசத்தி
அண்டமோடு எண்டிசை தாங்கும் அருட்செல்வி
புண்டரி கத்தினுட் பூசனை யாளே. 1085

பூசனை கந்தம் புனைமலர் மா கோடி
யோசனை பஞ்சத் தொலிவந் துரைசெய்யும்
வாசமி லாத மணிமந் திரயோகம்.
தேசந் திகழுந் திரிபுரை காணே. 1086

காணும் பலபல தெய்வங்கள் வெவ்வேறு
பூணும் பலபல பொன்போலத் தோற்றிடும்
பேணுஞ் சிவனும் பிரமனும் மாயனுங்
காணுந் தலைவிநற் காரணி காணே. 1087

காரண மந்திரம் ஓதுங் கமலத்துப்
பூரண கும்ப விரேசம் பொருந்திய
நாரணி நந்தி நடுவங் குரைசெய்த
ஆரண வேதநூல் அந்தமு மாமே 1088

அந்த நடுவிரல் ஆதி சிறுவிரல்
வந்த வழிமுறை மாறி யுரைசெய்யுஞ்
செந்தமி ழாதி தெளிந்து வழிபடு
நந்தி இதனை நவமுரைத் தானே, 1089

உரைத்த நவசத்தி ஒன்று முடிய
நிரைத்த விராசி நெடுமுறை எண்ணிப்
பிரைச்சதம் எட்டுமுன் பேசிய நந்தி
நிரைத்து நியதி நியமஞ்செய் தானே. 1090

தாமக் குழலி தயைக்கண்ணி உள்நின்ற
வேமத் திருளற வீசும் இளங்கொடி
ஓமப் பெருஞ்சுடர் உள்ளெழு நுண்புகை
மேவித் தழுதொடு மீண்டது காணே. 1091

காணும் இருதய மந்திர முங்கண்டு
பேணு நமவென்று பேசுந் தலைமேலே
வேணு நடுவு மிகநின்ற வாகுதி
பூணு நடுவென்ற வந்தஞ் சிகையே. 1092

சிகைநின்ற வந்தக் கவசங்கொண் டாதிப்
பகைநின்ற வங்கத்தைப் பாரென்று மாறித்
தொகைநின்ற நேத்திர முத்திரை சூலம்
வகைநின்ற யோனி வருத்தலு மாமே. 1093

வருத்த மிரண்டுஞ் சிறுவிரன் மாறிப்
பொருத்தி அணிவிரற் சுட்டிப் பிடித்து
நெறித்தொன்ற வைத்து நெடிது நடுவே
பெருத்த விரலிரண்டு உள்புக்குப் பேசே. 1094

பேசிய மந்திரம் இகாரம் பிரித்துரை
கூசமி லாத சகாரத்தை முன்கொண்டு
வாசிப் பிராணன் உபதேச மாகைக்குக்
கூசிய விந்து வுடன்கொண்டு கூவே. 1095

கூவிய சீவன் பிராணன் முதலாகப்
பாவிய சவ்வுடன் பண்ணும் யகாரத்தை
மேவிய மாயை விரிசங்கு முத்திரை
தேவி நடுவுள் திகழ்ந்துநின் றளே. 1096

நின்ற வயிரவி நீலி நிசாசரி
ஒன்றும் இரண்டும் ஒருங்கிய உள்ளத்துச்
சென்றருள் நாயகி தேவர் பிரானுக்கே
நன்றருள் ஞாலத்து நாடிடுஞ் சாற்றியே. 1097

சாற்றிய வேதஞ் சராசரம் ஐம்பூதம்
நாற்றிசை முக்கண்ணி நாடும் இருள்வெளி
தோற்றும் உயிர்ப்பன்மை சோதி பராபரை
ஆற்றலொ டாய்நிற்கும் ஆதி முதல்வியே. 1098

ஆதி வயிரவி கன்னித் துறைமன்னி
ஓதி யுணரில் உடலுயிர் ஈசனும்
பேதை உலகிற் பிறவிகள் நாசமாம்
ஓத வுலவாத கோலமொன் றகுமே. 1099

கோலக் குழலி குலாய புருவத்தள்
நீலக் குவளை மலரன்ன கண்ணினள்
ஆலிக்கும் இன்னமு(து) ஆனந்த சுந்தரி
மேவிச் சிவத்தை வெளிப்படுத் தாளே. 1100

வெளிப்படு வித்து விளைவறி வித்துத்
தெளிப்படு வித்தென் சிந்தையி னுள்ளே
களிப்படு வித்துக் கதிர்ப்படு சோதியை
ஒளிப்படு வித்தென்னை உய்யக்கொண் டாளே. 1101

கொண்டனள் கோலங் கோடி அநேகங்கள்
கண்டனள் எண்ணெண் கலையின்கண் மாலைகள்
விண்டனள் மேலை விரிகதிர் மூன்றையுந்
தண்டலை மேல்நின்ற தையல்நல் லாளே. 1102

தையல்நல் லாளைத் தலத்தின் தலைவியை
மையலை நோக்கும் மனோன்மணி மங்கையைப்
பையநின் றேத்திப் பணிமின் பணிந்தபின்
வெய்ய பவமினி மேவகி லாவே. 1103

வேயன தோளி விரையுறு மென்மலர்
ஏய குழலி இளம்பிறை ஏந்திழை
தூய சடைமுடிச் சூலினி சுந்தரி
ஏயென துள்ளத் தினிதிருந் தாளே. 1104

இனியதென் மூலை இருக்குங் குமரி
தனியொரு நாயகி தானே தலைவி
தனிப்படு வித்தனள் சார்வு படுத்து
நனிப்படு வித்துள்ளம் நாடிநின் றாளே. 1105

நாடியகண் மூன்று நடுவெழு ஞானத்துக்
கூடி இருந்த குமரி குலக்கன்னி
ஆடகச் சீறடிப் பைம்பொற் சிலம்பொலி
ஊடக மேவி உறங்குகின் றாளே. 1106

உறங்கு மளவின் மனோன்மணி வந்து
கறங்கு வலைக்கைக் கழுத்தாரப் புல்லிப்
பிறங்கொளித் தம்பலம் வாயில் உமிழ்ந்திட்
டுறங்கலை யாவென்று பாயஞ்செய் தாளே. 1107

உபாயம் அளிக்கும் ஒருத்தியென் உள்ளத்
தபாயம் அறக்கெடுத் தன்பு விளைத்துச்
சுவாவை விளக்குஞ் சுழியகத் துள்ளே
அவாவை அடக்கிவைத் தஞ்சலென் றாளே. 1108

அஞ்சொல் மொழியாள் அருந்தவப் பெண்பிள்ளை
செஞ்சொல் மடமொழி சீருடைச் சேயிழை
தஞ்சமென் றெண்ணித்தன் சேவடி போற்றுவார்க்
கிஞ்சொல் அளிக்கும் இறைவியென் றாரே. 1109

ஆருயி ராயும் அருந்தவப் பெண்பிள்ளை
காரியல் கோதையள் காரணி நாரணி
ஊரும் உயிரும் உலகும் ஒடுக்கிடுங்
கோரியென் உள்ளங் குலாவிநின் றாளே. 1110

குலாவிய கோலக் குமரியென் னுள்ளம்
நிலாவி இருந்து நெடுநாள் அணைந்தும்
உலாவி யிருந்துணர்ந் துச்சியி னுள்ளே
கலாவி யிருந்த கலைத்தலை யாளே. 1111

கலைத்தலை நெற்றியோர் கண்ணுடைக் கண்ணுள்
முலைத்தலை மங்கை முயங்கி இருக்குஞ்
சிலைத்தலை யாய தெரிவினை நோக்கி
அலைத்தபூங் கொம்பினள் அங்கிருந் தாளே. 1112

இருந்தனள் ஏந்திழை என்னுள்ள மேவிப்
பொருந்திரு நால்விரல் புக்கனள் புல்கித்
திருந்திய தாணுவிற் சேர்ந்துடன் ஒன்றி
அருந்தவ மெய்தினள் ஆதியி னாளே. 1113

ஆதி யனாதி யகாரண காரணி
சோதிய சோதி சுகபர சுந்தரி
மாது சமாதி மனோன்மணி மங்கலி
ஓதியென் னுள்ளத் துடனியைந் தாளே. 1114

இயைந்தனள் ஏந்திழை என்னுள்ள மேவி
நயந்தனள் அங்கே நமசிவ என்னும்
அயன்தனை யோரும் பதமது பற்றும்
பெயர்ந்தனள் மற்றும் பிதற்றறுத் தாளே. 1115

பிதற்றிக் கழிந்தனர் பேதை மனிதர்
முயற்றியின் முத்தி அருளும் முதல்வி
கயற்றிகழ் முக்கண்ணுங் கம்பலைச் செவ்வாய்
முகத்தருள் நோக்கமும் முன்னுள்ள தாமே. 1116

உள்ளத் திதயத்து நெஞ்சத் தொருமூன்றுள்
பிள்ளைத் தடமுள்ளே பேசப் பிறந்தது
வள்ளற் றிருவினை வயிற்றினுள் மாமாயைக்
கள்ள ஒளியின் கருத்தாகுங் கன்னியே. 1117

கன்னியுங் கன்னி அழிந்திலள் காதலி
துன்னியங் கைவரைப் பெற்றனள் தூய்மொழி
பன்னிய நன்னூற் பகைவரும் அங்குள
என்னேஇம் மாயை இருளது தானே. 1118

இருளது சத்தி வெளியதெம் அண்ணல்
பொருளது புண்ணியர் போகத்துள் இன்பம்
தெருளது சிந்தையைத் தெய்வமென் றெண்ணி
அருளது செய்யும்எம் ஆதிப் பிரானே. 1119

ஆதி அனாதியும் ஆய பராசத்தி
பாதி பராபரை மேலுறை பைந்தொடி
மாது சமாதி மனோன்மணி மங்கலி
ஓதுமென் னுள்ளத் துடன்முகிழ்த் தாளே. 1120

ஓதிய வெண்ணெண் கலையின் உயர்கலை
ஆதியில் வேதமே யாமென் றறிகிலார்
சாதியும் பேதமும் தத்துவ மாய்நிற்பள்
ஆதியென் றோதினள் ஆவின் கிழத்தியே. 1121

ஆவின் கிழத்திநல் லாவது தண்டுறை
நாவின் கிழத்தி நலம்புகழ்ந் தேத்திடும்
தேவின் கிழத்தி திருவாஞ் சிவமங்கை
மேவுங் கிழத்தி வினைகடிந் தாளே; 1122

வினைகடிந் தாருள்ளத் துள்ளொளி மேவித்
தனையடைந் தோர்க்கெல்லாந் தத்துவ மாய்நிற்பள்
எனையடி மைக்கொண்ட ஏந்திழை ஈசன்
கணவனைக் காண அனுதியு மாமே. 1123

ஆதி அனுதி அகாரண காரணி
வேதம தாய்ந்தனள் வேதியர்க் காய்நின்ற
சோதி தனிச்சுடர் சொரூப மாய்நிற்கும்
பாதி பராபரை பன்னிரண் டாதியே. 1124

பூரணசத்தி.

அளந்தேன் அகலிடத் தந்தமும் ஈறும்
அளந்தேன் அகலிடத் தாதிப் பிரானை
அளந்தேன் அகலிடத் தாணொடு பெண்ணும்
அளந்தேன் அவளருள் ஆய்ந்துணர்ந் தேனே. 1125

உணர்ந்திலர் ஈசனை ஊழிசெய் சத்தி
புணர்ந்தது பூரணம் புண்ணியர் தங்கள்
கணங்களைத் தன்னருள் செய்கின்ற கன்னி
கொணர்ந்த வழிகொண்டு கும்பக மாமே, 1126

கும்பக் களிறைந்துங் கோலொடு பாகனும்
வம்பில் திகழும் மணிமுடி யண்ணலும்
இன்பக் கலவி இனிதுறை தையலும்
அன்பிற் கலவியு ளாயொழிந் தாரே. 1127

இன்பக் கலவியல் இட்டெழு கின்றதோர்
அன்பிற் புகவல்ல னும்எங்கள் அப்பனும்
துன்பக் குழம்பில் துயருறும் பாசத்துள்
என்பிற் பராசத்தி என்னம்மை தானே. 1128

என்னம்மை என்னப்பன் என்னுஞ் செருக்கற்று
உன்னம்மை ஊழித் தலைவனும் அங்குளன்
மன்னம்மை யாகி மருவி யுரைசெய்யும்
பின்னம்மை யாய்நின்ற பேர் நந்தி தானே. 1129

தார்மேல் உறைகின்ற தண்மலர் நான்முகன்
பார்மேல் இருப்ப தொருநூறு தானுள
பூமேல் உறைகின்ற போதகம் வந்தனள்
நாமேல் உறைகின்ற நாயகி ஆணையே. 1130

ஆணைய மாய்வருந் தாதுளி நந்தவர்
மானைய மாய மனத்தை ஒருக்கிப்பின்
பாணைய மாய பரத்தை அறிந்தபின்
தாணைய மாய தனுதனன் தானே. 1131

தானே எழுந்தஇத் தத்துவ நாயகி
வானோர் எழுந்து மதியை விளக்கினள்
தேனேர் எழுகின்ற தீபத் தொளியுடன்
மானே நடமுடை மன்றறி யீரே. 1132

அறிவான மாயையும் ஐம்புலக் கூட்டத்
தறிவான மங்கை அருளது சேரிற்
பிறியா அறிவறி வாருள்ளம் பேணும்
நெறியாய சித்த நினைந்திருந் தாளே. 1133

இரவும் பகலும் இலாத விடத்தே
குரவஞ்செய் கின்ற குழவியை நாடி
அரவஞ்செய் யாமல் அருளுடன் தூங்கப்
பரவஞ்செய் யாததோர் பாலனு மாமே. 1134

பாலனு மாகும் பராசத்தி தன்னெடு
மேலணு காவிந்து நாதங்கள் விட்டிட
மூலம தாமெனும் முத்திக்கு நேர்படச்
சாலவு மாய்நின்ற தற்பரத் தாளே. 1135

நின்ற பராசத்தி நீள்பரன் தன்னெடு
நின்றறி ஞானமும் இச்சையு மாய்நிற்கும்
நின்றறி யுங்கிரி யாசத்தி நண்ணவே
மன்றன வற்றுள் மருவிடுந் தானே. 1136

மருவொத்த மங்கையுந் தானும் உடனே
உருவொத்து நின்றமை ஒன்றும் உணரார்
கருவொத்து நின்று கலக்கின் றபோது
திருவொத்த சிந்தைவைத் தெந்தைநின் ருனே. 1137

சிந்தையி னுள்ளே திரியுஞ் சிவசத்தி
விந்துவும் நாதமு மாயே விரிந்தனள்
சந்திர பூமி சடாதரி சாத்தவி
அந்தமொ டாதிய தாம்வண்ணத் தாளே. 1138

ஆறி யிருந்த அமுத பயோதரி
மாறி யிருந்த வழியறி வாரில்லைத்
தேறி யிருந்துநல் தீபத் தொளியுடன்
ஊறி யிருத்தனள் உள்ளுடை யார்க்கே. 1139

உடையவன் அங்கி உருத்திர சோதி
விடையவன் ஏறி விளங்கி யிருக்குங்
கடையவர் போயிடுங் கண்டவர் நெஞ்சத்
தடையது வாகிய சாதகர் தாமே. 1140

தாமேல் உறைவிடம் ஆறித முானது
பார்மேல் இதழ்பதி னெட்டிரு நூறுள
பூமேல் உறைகின்ற புண்ணியம் வந்தனள்
பார்மேல் உறைகின்ற பைந்தொடி யாளே, 1141

பைந்தொடி யாளும் பரம னிருந்திடத்
திண்கொடி யாகத் திகழ்தரு சோதியாம்
விண்கொடி யாகி விளங்கி வருதலாற்
பெண்கொடி யாக நடந்த துலகே. 1142

நடந்தது வம்மலர் நாலுடன் அஞ்சாய்
இருந்தனர் கன்னிகள் எட்டுடன் ஒன்ருய்ப்
படர்ந்தது தன்வழிப் பங்கயத் துள்ளே
தொடர்ந்தது உள்வழி சோதி யடுத்தே. 1143

அடுக்குந் தாமரை ஆதி இருப்பிடம்
எடுக்குந் தாமரை இலக்கத் துள்ளது
மடுக்குந் தாமரை மத்தகத் தேசெல
முடுக்குந் தாமரை முச்சது ரத்தே 1144

முச்சது ரத்தே எழுந்த முளைச்சுடர்
எச்சது ரத்தும் இடம்பெற ஓடிடக்
கைச்சது ரத்துக் கடந்துள் ஒளிபெற
எச்சது ரத்தும் இருந்தனள் தானே. 1145

இருந்தனள் தன்முகம் ஆறிரெண்டு நாலாய்ப்
பரந்தன வாயு திசைதிசை தோறுங்
குவிந்தன முத்தின் முகவொளி நோக்கின்
நடந்தது தேறல் அதோமுகம் அம்பே. 1146

அம்பன்ன கண்ணி அரிவை மனோன்மணி
கொம்பன்ன நுண்ணிடைக் கோதை குலாவிய
செம்பொன்செய் யாக்கை செறிகமழ் நாடொறும்
நம்பனை நோக்கி நவிலுகின் ருளே. 1147

நவிலும் பெருந்தெய்வம் நான்மறைச் சத்தி
துகிலுழை யாடை நிலம்பொதி பாதம்
அகிலமும் அண்ட முழுதுஞ்செம் மாந்து
புகலுமுச் சோதி புனையநிற் பாளே. 1148

புனையவல் லாள்புவ னந்திறை எங்கள்
வனையவல் லாள்அண்ட கோடிகள் உள்ளே
புனையவல் லாள்மண் டலத்தொளி தன்னைப்
புனையவல் லாளையும் போற்றியென் பேனே. 1149

போற்றியென் பேன்புவ னாபதி அம்மையென்
ஆற்றலுள் நிற்கும் அருந்தவப் பெண்பிள்ளை
சீற்றங் கடிந்த திருநுதற் சேயிழை
கூற்றந் துரக்கின்ற கோள்பைந் தொடியே. 1150

தொடியார் தடக்கைச் சுகோதய சுந்தரி
வடிவார் திரிபுரை யாமங்கை கங்கைப்
செடியார் வினைகெடச் சேர்வரை என்றென்
றடியார் வினைகெடுத் தாதியு மாமே. 1151

மெல்லிசைப் பாவை வியோமத்தின் மென்கொடி
பல்லிசைப் பாவை பயன்தரு பைங்கொடி
புல்லிசைப் பாவையைப் போகந் துரந்திட்டு
வல்லிசைப் பாவை மனம்புகுந் தாளே. 1152

தாவித் தவப்பொருள் தானவன் எம்மிறை
பாவித் துலகம் படைக்கின்ற காலத்து
மேவிப் பராசத்தி மேலொடு கீழ்தொடர்ந்
தாவிக்கு மப்பொருள் தானது தானே. 1153

அதுவிது என்பார் அவனை அறியார்
கதிவர நின்றதோர் காரணங் காணார்
மதுவிரி பூங்குழல் மாமங்கை நங்கை
திதமது உன்னார்கள் தேர்ந்தறி யாரே. 1154

|8|

ஆதார ஆதேயம்

நாலிதழ் ஆறில் அவிர்ந்தது தொண்ணூறு
தானித மானவை நாற்பத்து நாலுள
பாலித மானவள் பங்கய மூலமாய்த்
தானித மாகித் தரித்திருந் தாளே. 1155

தரித்திருந் தாளவள் தன்னொளி நோக்கி
விரித்திருந் தாளவள் வேதப் பொருளைக்
குறித்திருந் தாளவள் கூறிய ஐந்து
மறித்திருந் தாளவள் மாதுநல் லாளே. 1156

மாதுநல் லாளும் மணாளன் இருந்திடப்
பாதிநல் லாளும் பகவனு மானது
சோதிநல் லாளைத் துணைப்பெய்ய வல்லிரேல்
வேதனை தீர்தரும் வெள்ளடை யாமே. 1157

வெள்ளடை யானிரு மாமிகு மாமலர்க்
கள்ளடை யாரக் கமழ்குழ லார்மனம்
அள்ளடை யானும் வகைத்திற மாய்நின்ற
பெண்ணொரு பாகம் பிறவிபெண் ணாமே. 1158

பெண்ணொரு பெண்ணைப் புணர்ந்திடும் பேதமை
பெண்ணிடை ஆணும் பிறந்து கிடந்தது
பெண்ணிடை ஆணென் பிறப்பறிந் தீர்க்கின்ற
பெண்ணுடை ஆணிடைப் பேச்சற்ற வாறே. 1159

பேச்சற்ற நற்பொருள் காணும் பெருந்தகை
மாச்சற்ற சோதி மனோன்மணி மங்கையாங்
காச்சற்ற சோதி கடவு ளுடன்புணர்ந்
தாச்சென்ற னுட்புகுந் தாலிக்குந் தானே. 1160

ஆலிக்குங் கன்னி அரிவை மனோன்மணி
பாலித் துலகிற் பரந்துபெண் ணாகும்
வேலைத் தலைவியை வேத முதல்வியைப்
பாலித் தொருவன் உகந்துநின் றானே. 1161

உகந்துநின் றான்நம்பி ஒண்ணுதற் கண்ணோ
டுகந்துநின் றான்நம் முழைபுக நோக்கி
உகந்துநின் றான்இவ் உலகங்கள் எல்லாம்
உகந்துநின் றான்அவ டன்றே டொகுத்தே. 1162


குத்து முலைச்சி குழைந்த மருங்கினள்
துத்தி விரிந்த சுணங்கினள் தூமொழி
புத்தகச் சீறடிப் பாவை யுணர்வினைத்
தொத்த கருத்துச் சொல்லகி லேனே. 1163

சொல்லவொண் ணாத அழற்பொதி மண்டலஞ்
சொல்லவொண் ணாது திகைத்தங் கிருப்பர்கள்
வெல்லவொண் ணாத வினைத்தனி நாயகி
மல்லவொண் ணாத மனோன்மணி தானே. 1164


தானே இருநிலந் தாங்கிவிண் ணாய்நிற்குந்
தானே சுடுமங்கி ஞாயிறுந் திங்களுந்
தானே மழைபொழி தையலு மாய்நிற்குந்
தானே வடவரைத் தண்கடற் கண்ணே. 1165

கண்ணுடை யானைக் கலந்தங் கிருந்தவர்
மண்ணுடை யாரை மனித்தரிற் கூட்டொணாப்
பண்ணுடைப் யார்கள் பதைப்பற் றிருந்தவர்
விண்ணுடை யார்களை மேலுறக் கண்டே. 1166


கண்டெண் டிசையுங் கலந்து வருங்கன்னி
பண்டெண் டிசையும் பராசத்தி யாய்நிற்கும்
விண்டெண் டிசையும் விரைமலர் கைக்கொண்டு
தொண்டெண் டிசையுந் தொழநின்ற கன்னியே. 1167



1069 - திருமந்திர விளக்கம்



1084-வது திருமந்திர விளக்கம்



1187-வது திருமந்திர விளக்கம்

கன்னி ஒளியென நின்றவிச் சந்திரன்
மன்னி யிருக்கின்ற மாளிகை செந்நிறஞ்
சென்னி யிருப்பிடஞ் சேர்பதி ஞானுடன்
பன்னி யிருப்பப் பராசத்தி யாமே. 1168

பராசத்தி யென்றென்றும் பல்வகை யாலுந்
தராசத்தி யான தலைப்பிர மாணி
இராசத்தி யாமள வாகமத் தாளாகுங்
குராசத்தி கோலம் பலவுணர்ந் தேனே. 1169

உணர்ந்துல கேழையும் யோகினி சத்தி
உணர்ந்துயி ராநிற்கு முன்னதன் ஈசன்
புணர்ந்தொரு காலத்துப் போகம தாகி
இணைந்து பரமென் றிசைந்தது தானே. 1170

இதுவப் பெருந்தகை எம்பெரு மானும்
பொதுவக் கலவியும் போகமு மாகி
மதுவக் குழலி மனோன்மணி மங்கை
அதுவக் கலவியுள் ஆயுழி யோகமே. 1171

யோகநற் சத்தி ஒளிபீடந் தானாகும்
யோகநற் சத்தி ஒளிமுகந் தெற்காகும்
யோகநற் சத்தி உதர நடுவாகும்
யோகநற் சத்திதாள் உத்தரந் தேரே. 1172

தேர்ந்தெழு மேலாஞ் சிவனங்கி யோடுற
வார்ந்தெழு மாயையு மந்தம தாய்நிற்கும்
ஓர்ந்தெழு விந்துவும் நாதமும் ஓங்கிடக்
கூர்ந்தெழு கின்றனள் கோல்வளை தானே. 1173

தானான வாறெட்ட தாம்பரைக் குண்மிசை
தானான வாறுமீ ரேழுஞ் சமைகலை
தானான விந்து சகமே பரமெனுந்
தானும் பரவா தனையெனத் தக்கதே. 1174

தக்க பராவித்தை தானிரு பானேழிற்
றக்கெழு மோருத் திரஞ்சொல்லச் சொல்லவே
மிக்கிடும் எண்சத்தி வெண்ணிற முக்கண்ணி
தொக்க கதையோடு தொன்முத் திரையாளே. 1175

முத்திரை மூன்றின் முடிந்தமெய்ஞ் ஞானத்தால்
அத்துவ மாயல்ல வாய சகலத்தள்
வைத்த பராபர னுய பராபரை
சத்தியு மானந்த சத்தியுங் கொங்கே. 1176

கொங்கீன்ற கொம்பின் குரும்பைக் குலாங்கன்னி
பொங்கிய குங்குமத் தொளிபொ ருந்தினள்
அங்குச பாச மெனுமகி லங்கனி
தங்கு மவள்மனே தானறி வாயே. 1177

வாயு மனமுங் கடந்த மனேன்மணி
பேயுங் கணமும் பெரிதுடைப் பெண்பிள்ளை
ஆயும் அறிவுங் கடந்த அரனுக்குத்
தாயும் மகளுநல் தாரமு மாமே. 1178

தாரமு மாகுவள் தத்துவ மாய்நிற்பள்
காரண காரிய மாகுங் கலப்பினள்
பூரண விந்து பொதிந்த புராதனி
பாரள வாந்திசை பத்துடை யாளே. 1179

பத்து முகமுடை யாள்நம் பராசத்தி
வைத்தனள் ஆறங்க நாலுடன் முன்வேதம்
ஒத்தனள் ஆதாரம் ஒன்றுடன் ஓங்கியே
நித்தமாய் நின்றுளெம் நேரிழை கூறே. 1180

கூறிய கண்ணி குலாய புருவத்தள்
சீறிய ளாயுல கேழுந் திகழ்ந்தவள்
ஆரிய நங்கை யமுத பயோதரி
பேருயி ராளி பிறிவறுத் தாளே. 1181

பிறவின்றி நின்ற பெருந்தகைப் பேதை
குறியொன்றி நின்றிடுங் கோமளக் கொம்பு
பொறியொன்றி நின்று புணர்ச்சிசெய் தாங்கே
அறிவொன்ற நின்றனள் ஆருயி ருள்ளே. 1182

உள்ளத்தி னுள்ளே யுடனிருந் தைவர்தங்
கள்ளத்தை நீக்கிக் கலந்துட னேபுல்கிக்
கொள்ளத் தவநெறி கூடிய இன்பத்து
வள்ளற் றலைவி மருட்டிப் புரிந்தே. 1183

புரிந்தருள் செய்கின்ற போகமா சத்தி
இருந்தருள் செய்கின்ற இன்பம் அறியார்
பொருந்தி யிருந்த புதல்விபூ வண்ணத்
திருந்த விலக்கில் இனிதிருந் தாளே. 1184

இருந்தனள் ஏந்திழை என்னுள மேவித்
திருந்து புணர்ச்சியில் தேர்ந்துணர்ந் துன்னி
நிரந்தர மாகிய நிரதி சயமொடு
பொருந்த விலக்கிற் புணர்ச்சி அதுவே. 1185

அதுஇது என்னும் அவாவினை நீக்கித்
துதியது செய்து சுழியுற நோக்கில்
விதியது தன்னையும் வென்றிட லாகும்
மதிமல ராள்சொன்ன மண்டல மூன்றே. 1186

மூன்றுள மண்டல மோகினி சேர்விடம்
ஏன்றுள ஈரா றெழுகலை உச்சியில்
தோன்று மிலக்குற வாகுதல் மாமாயை
ஏன்றனள் ஏழிரண் டிந்துவொ டேறே. 1187

இந்துவி னின்றெழு நாதம் இரவிபோல்
வந்துபின் நாக்கின் மதித்தெழுங் கண்டத்தில்
உந்திய சோதி இதயத் தெழும்ஒலி
இந்துவின் மேலுற்ற ஈறது தானே- 1188

ஈறது தான்முதல் எண்ணிரண் டாயிர
மாறுதல் இன்றி மனேவச மாயெழில்
தூறது செய்யுஞ் சுகந்தச் சுழியது
பேறது செய்து பிறந்திருந் தாளே. 1189

இருந்தனள் ஏந்திழை ஈறதி லாகத்
திருந்திய ஆனந்தஞ் செந்நெறி நண்ணிப்
பொருந்து புவனங்கள் போற்றிசெய் தேத்தி
வருந்த இருந்தனள் மங்கைநல் லாளே. 1190

மங்கையும் மாரனுந் தம்மொடு கூடிநின்
றங்குலி கூடி அகம்புறம் பார்த்தனர்
கொங்கைநல் லாளுங் குமாரர்கள் ஐவரும்
தங்களின் மேவிச் சடங்குசெய் தாரே. 1191

சடங்கது செய்து தவம்புரி வார்கள்
கடந்தனி னுள்ளே கருதுவ ராகில்
தொடர்ந்தெழு சோதி துணேவழி ஏறி
அடங்கிடும் அன்பின தாயிழை பாலே. 1192

பாலித் திருக்கும் பனிமல ராறினும்
ஆலித் திருக்கும் அவற்றின் அகம்படி
சீலத்தை நீக்கத் திகழ்ந்தெழு மந்திர
மூலத்து மேலது முத்தது வாமே. 1193

முத்து வதனத்தி முகந்தொறு முக்கண்ணி
சத்தி சதிரி சகளி சடாதரி
பத்துக் கரத்தி பராபரன் பைந்தொடி
வித்தகி என்னுள்ள மேவிநின் ருளே. 1194

மேவிய மண்டலம் மூன்றுடன் கீழெரி
தாவிய நற்பதத் தண்மதி யங்கதிர்
மூவருங் கூடிமுதல்வியா முன்னிற்பார்
ஓவினு மேவிடும் உள்ளொளி யாமே. 1195

உள்ளொளி மூவிரண் டோங்கிய அங்கங்கள்
வெள்ளொளி அங்கியின் மேவி அவரொடுங்
கள்ளவிழ் கோலைக் கலந்துட னேநிற்குங்
கொள்ள விசுத்திக் கொடியமு தாமே. 1196

கொடிய திரேகை குருவுள் இருப்பப்
படியது வாருணைப் பைங்கழ லீசன்
வடிவது வானந்தம் வந்து முறையே
இடுமுதல் ஆறங்கம் ஏந்திழை யாளே. 1197

ஏந்திழை யாளும் இறைவர்கள் மூவருங்
காந்தார மாறுங் கலைமுதல் ஈரெட்டும்
ஆந்த குளத்தியு மந்திர ராயுவுஞ்
சார்ந்தனர் ஏத்த இருந்தனள் சத்தியே. 1198

சத்தியென் பாளொரு சாதகப் பெண்பிள்ளை
முத்திக்கும் நாயகி என்ப தறிகிலர்
பத்தியைப் பாழில் உகுத்தஅப் பாவிகள்
கத்திய நாய்போற் கதறுகின் றாரே. 1199

ஆரே திருவின் திருவடி காண்பார்கள்
நேரே நின் றோதி நினையவல் லார்க்குக்
காரேய் குழலி கமல மலரன்ன
சீரேயுஞ் சேவடி சிந்தைவைத் தாளே. 1200

சிந்தையில் வைத்துச் சிராதியி லேவைத்து
முந்தையில் வைத்துத்தம் மூலத்தி லேவைத்து
நிந்தையில் வையா நினைவதி லேவைத்துச்
சந்தையில் வைத்துச் சமாதிசெய் வீரே. 1201

சமாதிசெய் வார்கட்குத் தான்முத லாகிச்
சிவாதியி லாருஞ் சிலைநுத லாளை
நவாதியி லாத நயந்தது ஓதில்
உவாதி அவளுக் குறைவில தாமே. 1202

உறைபதி தோறும் முறைமுறை மேவி
நறைகமழ் கோதையை நாடொறு நண்ணின்
மறையுட னேநிற்கு மற்றுள்ள நான்கும்
இறைதிளைப் போதினில் எய்திட லாமே. 1203

எய்திட லாகும் இருவினை யின்பயன்
கொய்தளிர் மேனிக் குமரி குலாங்கன்னி
மைதவழ் கண்ணிநன் மாரிதுர்க் கையொடு
கைதவம் இன்றிக் கருத்துறும் வாறே. 1204

கருத்துறுங் காலங் கருது மனமுந்
திருத்தி யிருந்தவை சேரு நிலத்து
ஒருத்தியை உன்னி உணர்ந்திடு மண்மேல்
இருத்திடும் எண்குணம் எய்தலும் ஆமே. 1205

ஆமையொன் றேறி அகம்படி யானென
ஓமஎன் ருேதிஎம் உள்ளொளி யாய்நிற்கும்
நாம நறுங்குழல் தையலைக் கண்டபின
சோம நறுமலர் சூடிநின் ருளே. 1206

சூடிடும் அங்குச பாசந் துணைவழி
கூடும் இருவளைக் கோலக்கைக் குண்டிகை
நாடும் இருபத நன்னெடு ருத்திரம்
ஆடிடுஞ் சீர்புனை ஆடக மாமே. 1207

ஆமயன் மாலரன் ஈசன் சதாசிவன்
தாமடி சூடிநின் றெய்தினர் தம்பதங்
காமனுஞ் சாமன இரவி கனலுடன்
சோமனும் வந்தடி சூடநின் ருளே. 1208

சூடும் இளம்பிறை சூலி கபாலினி
நீடுங் இலங்கொடி நின்மலி நேரிழை
நாடி நடுவிடை ஞான முருவநின்
ருடு மதன்வழி அண்ட முதல்வியே. 1209

அண்ட முதலாய் அவனி பரியந்தங்
கண்டதொன் றில்லைக் கனங்குழை யல்லது
கண்டனுங் கண்டியு மாகிய காரணங்
குண்டிகை கோளிகை கண்டத னாலே. 1210

ஆலமுண் டானமு தாங்கவர் தம்பதஞ்
சால்வந் தெய்துந் தவத்தின்பந் தான்வருங்
கோலிவந் தெய்துங் குவிந்த பதவையோ
டேலவந் தீண்டி இருந்தனள் மேலே. 1211

மேலாம் அருந்தவம் மேன்மேலும் வந்தெய்தக்
காலால் வருந்திக் கழிவர் கணத்திடை
நாலா நளினநின் றேத்திநட் டுச்சிதன்
மேலா மெழுந்தின ளாமத்தி னாலே. 1212

ஆமத் தினிதிருந் தன்ன மயத்தினள்
ஓமத்தி லேயும் ஒருத்தி பொருந்தினள்
நாம நமசிவ என்றிருப் பார்க்கு
நேமத் துணைவி நிலாவிநின் றாளே. 1213

நிலாமய மாகிய நீள்படி கத்தின்
சிலாமய மாகுஞ் செழுந்தர ளத்தின்
சுலாமய மாகுஞ் சுரிகுழற் கோதை
கலாமய மாகக் கலந்துநின் றாளே. 1214

கலந்துநின் றாள்கன்னி காதல னோடுங்
கலந்துநின் றாளுயிர் கற்பனை எல்லாங்
கலந்துநின் றாள்கலை ஞானங்கள் எல்லாங்
கலந்துநின் றாள்கன்னி காலமு மாயே. 1215

காலவி எங்குங் கருத்தும் அருத்தியுங்
கூலவி ஒன்றுகுங் கூடல் இழைத்தனள்
மாலினி மாகுலி மந்திர சண்டிகை
பாலினி பாலவன் பாகம தாமே. 1216

பாகம் பராசத்தி பைம்பொன் சடைமுடி
ஏகம் இருதயம் ஈரைந்து திண்புயம்
மோக முகமைந்து முக்கண் முகந்தொறும்
நாகம் உரித்து நடஞ்செய்யும் நாதர்க்கே. 1217

நாதனு நாலொன் பதின்மூநங் கூடிநின்
றேதிடுங் கூட்டங்கள் ஓரைந் துளஅவை
வேதனும் ஈரொன் பதின்மரும் மேவிநின்
றுதியும் அந்தமு மாகிநின் றுளே. 1218

ஆகின்ற நாள்கலை ஐம்பத் தொருவர்கள்
ஆகிநின் றூர்களில் ஆறுயி ராமவள்
ஆகிநின் றுளுட னாகிய சக்கரத்
தாகிநின் றுனவன் ஆயிழை பாடே. 1219

ஆயிழை யாளொடு மாதிப் பரமிடம்
ஆயதொ ரண்டவை யாறும் இரண்டுள
வாய மனந்தொ றறுமுக மவைதனில்
ஏயவார் குழலி இனிதுநின் றுளே. 1220

நின்றனள் நேரிழை யோடுடல் நேர்பட
இன்றெ னகம்படி ஏழும் உயிர்ப்பெய்தும்
துன்றிய வோரொன் பதின்மருஞ் சூழலுள்
ஒன்றுயர் வோதி யுணர்ந்துநின் றுளே. 1221

உணர்ந்தெழு மந்திரம் ஓமெனும் உள்ளே
மணந்தெழு மாங்கதி யாகிய தாகுங்
குணர்ந்தெழு சூதனுஞ் சூதியுங் கூடிக்
கணந்தெழுங் காணுமக் காமுகை யாமே. 1222

ஆமது வங்கியும் ஆதியும் ஈசனும்
ஆமது மண்டல மாருத மாதியும்
ஏமது சீவன் சிகைபங் கிருண்டிடக்
கோமலர்க் கோதையுங் கோதண்ட மாகுமே. 1223

ஆகிய கோதண்டத் தாகு மனோன்மணி
ஆகிய ஐம்ப துடனே அடங்கிடும்
ஆகும் பராபரை யோடப் பரையவள்
ஆகு மவளேங் கருமத்தள் தானே. 1224

தானிகழ் மோகினி சார்வான யோகினி
போன மயமுடை யாரடி போற்றுவர்
ஆனவ ராவியி ளுகிய வச்சிவந்
தானும் பரசிவ மேலது தானே. 1225

தானந்த மேலே தருஞ்சிகை தன்னுடன்
ஆனந்த மோகினி யாம்பொற் றிருவொடு
மோனேயில் வைத்து மொழிதரு கூறது
வானவை யோமெனும் அவ்வுயிர் மார்க்கமே. 1226

மார்க்கங்கள் ஈன்ற மனோன்மணி மங்கலி
யார்க்கும் அறிய வரியா ளவளாகும்
வாக்கு மனமும் மருவியொன் ருய்விட்ட
நோக்கும் பெருமைக்கு நுண்ணறி வாமே. 1227

நுண்ணறி வாகும் நுழைபுலன் மாந்தர்க்குப்
பின்னறி வாகும் பிரானறி வத்தடஞ்
சென்னெறி யாகுஞ் சிவகதி சேர்வார்க்குத்
தன்னெறி யாவது சன்மார்க்க மாமே, 1228

சன்மார்க்க மாகச் சமைதரு மார்க்கமுந்
துன்மார்க்க மானவை எல்லாந் துரந்திடும்
நன்மார்க்கத் தேவரும் நன்னெறி யாவதுஞ்
சன்மார்க்கத் தேவியுஞ் சத்தியென் பாளே. 1229

சத்தியுஞ் நானுஞ் சயம்புவும் அல்லது
முத்தியை யாரும் முதலறி வாரில்லை
அத்திமேல் வித்திடில் அத்தி பழுத்தக்கால்
மத்தியி லேற வழியது வாமே. 1230

அதுவிது வென்றவ மேகழி யாதே
மதுவிரி பூங்குழல் மங்கைநல் லாளைப்
பதிமது மேவிப் பணியவல் லார்க்கு
விதிவழி தன்னையும் வென்றிட லாமே. 1231

வென்றிட லாகும் விதிவழி தன்னையும்
வென்றிட லாகும் வினைப்பெரும் பாசத்தை
வென்றிட லாகும் விழைபுலன் தன்னையும்
வென்றிடு மங்கைதன் மெய்யுணர் வோர்க்கே. 1232

ஓரைம் பதின்மருள் ஒன்றியே நின்றது
பாரம் பரியத்து வந்த பரமிது
மாரங் குழலாளும் அப்பதி தானுமுன்
சாரும் பதமிது சத்திய மாமே. 1233

சத்தியி னோடு சயம்புவும் நேர்படில்
வித்தது வின்றியே எல்லாம் விளைந்தன
அத்தகை யாகிய ஐம்பத் தொருவருஞ்
சித்தது மேவித் திருந்திடு வாரே. 1234

திருந்து சிவனுஞ் சிலைநுத லாளும்
பொருந்திய வானவர் போற்றிசெய் தேத்த
அருந்திட அவ்விடம் ஆரமு தாக
இருந்தனள் தானங் கிளம்பிறை என்றே. 1235

என்றும் எழுகின்ற வேரினை எய்தினர்
அன்றது வாகுவர் தார்குழ லாளொடு
மன்றரு கங்கை மதியொடு மாதவர்
துன்றிய தாரகை சோதிநின் றுளே. 1236

நின்றனள் நேரிழை யாளொடு நேர்பட
ஒன்றிய வுள்ளொளி யாலே யுணர்ந்தது
சென்ற பிராணிகள் சிந்தையில் வேண்டிய
துன்றிடு ஞானங்கள் தோன்றிடுந் தானே. 1237

தோன்றிடும் வேண்டுரு வாகிய தூய்நெறி
ஈன்றிடு மாங்கவள் எய்திய பல்கலை
மான்றரு கண்ணியும் மாரனும் வந்தெதிர்
சான்றது வாகுவர் தாமவ ளாயுமே. 1238

ஆயும் அறிவுங் கடந்தணு வாரணி
மாயம தாகி மதோமதி யாயிடுஞ்
சேய அரிவை சிவானந்த சுந்தரி
நேயம தாநெறி யாகிநின் ருளே. 1239

நெறியது வாய்நின்ற நேரிழை யாளைப்
பிறிவது செய்யாது பிஞ்ஞக னேடுங்
குறியது கூடிக் குறிக்கொண்டு நோக்கும்
அறிவொடு ஆங்கே அடங்கிட லாமே. 1240

ஆமயன் மாலரன் ஈசன்மா லாங்கதி
ஓமய மாகிய ஒன்பதும் ஒன்றிடத்
தேமய ஞளுந் தெனுதென என்றிடும்
மாமய மானது வந்தெய்த லாமே. 1241

வந்தடி போற்றுவர் வானவர் தானவர்
இந்து முதலாக எண்டிசை யோர்களுங்
கொந்தணி யுங்கழ லாளொடு கோனையும்
வந்தனை செய்யும் வழிநவில் வீரே. 1242

நவிற்றுநன் மந்திரம் நன்மலர் தூபங்
கவற்றிய கந்தங் கவர்ந்தெரி தீபம்
பயிற்றும் உலகினில் பார்ப்பதி பூசை
அவிக்கொண்ட சோதிக்கோர் அர்ச்சனை தானே. 1243

தாங்கி உலகில் தரித்த பராபரன்
ஓங்கிய காலத் தொருவன் உலப்பிலி
பூங்கிளி தங்கும் புரிகுழ லாளன்று
பாங்குடன் ஏற்பப் பராசத்தி போற்றே. 1244

பொற்கொடி மாதர் புனைகழல் ஏத்துவர்
அற்கொடி மாதுமை யார்வத் தலைமகள்
நற்கொடி மாதை நயன்ங்கள் மூன்றுடை
விற்கொடி மாதை விரும்பி விளங்கே. 1245

விளங்கொளி யாய விரிசுடர் மாலை
துளங்கு பராசத்தி தூங்கிருள் நீங்கக்
களங்கொள் மணியுடன் காம விநோதம்
உளங்கொ ளிலம்பியம் ஒன்று தொடரே, 1246

தொடங்கி உலகினிற் சோதி மணாளன்
அடங்கி இருப்பதென் அன்பின் பெருமை
விடங்கொள் பெருஞ்சடை மேல்வரு கங்கை
ஒடுங்கி யுமையொடும் ஓருரு வாமே. 1247

உருவம் பலவுயி ராய்வல்ல நந்தி
தெருவம் புகுந்தமை தேர்வுற நாடிற்
புரிவளைக் கைச்சியெம் பொன்னணி மாதை
மருவி இறைவன் மகிழ்வன மாயமே. 1248

மாயம் புணர்க்கும் வளர்சடை யானடி
தாயம் புணர்க்குஞ் சலந்தி அமலனைக்
காயம் புணர்க்குங் கலவியுள் மாசத்தி
ஆயம் புணர்க்குமவ் வியோனியு மாமே. 1249

உணர்ந்தொழிந் தேனவ னுமங்கள் ஈசனைப்
புணர்ந்தொழிந் தேன்புவ னாபதி யாரை
அணைந்தொழிந் தேனெங்கள் ஆதிதன் பாதம்
பிணைந்தொழிந் தேன்றன் அருள்பெற்ற வாறே. 1250

பெற்றாள் பெருமை பெரிய மனோன்மணி
நற்றாள் இறைவனே நற்பயன் எனபர்
கற்றான் அறியுங் கருத்தறி வார்கட்குப்
பொற்றாள் உலகம் புகல்தனி யாமே. 1251

தனிநா யகன்றனோ டென்னெஞ்சம் நாடி
இனியார் இருப்பிடம் ஏழுல கென்பர்
பனியான் மலர்ந்தபைம் போதுகை ஏந்திக்
கனியாய் நினைவதென் காரணம் அம்மையே. 1252

அம்மனை அம்மை அரிவை மனோன்மணி
செம்மனை செய்து திருமங்கை யாய்நிற்கும்
இம்மனை செய்த இருநில மங்கையும்
அம்மனை யாகி அமர்ந்துநின் றாளே. 1253

அம்மையும் அத்தனும் அன்புற்ற தல்லது
அம்மையும் அத்தனு மாரறி வாரென்னை
அம்மையொ டத்தனும் யானும் உடனிருந்
தம்மையொ டத்தனை யான்புரிந் தேனே. 1254

ஏரொளிச் சக்கரம்

ஏரொளி யுள்ளெழு தாமரை நாலிதழ்
ஏரொளி விந்துவி னாலெழு நாதமாம்
ஏரொளி யக்கலை எங்கும் நிறைந்தபின்
ஏரொளிச் சக்கர மந்நடு வன்னியே. 1255

வன்னி யெழுத்தவை மாபலம் உள்ளன
வன்னி யெழுத்தவை வானுற ஓங்கின
வன்னி யெழுத்தவை மாபெருஞ் சக்கரம்
வன்னி யெழுத்திடு வாறது சொல்லுமே. 1256

சொல்லிய விந்துவும் ஈராறு நாதமாஞ்
சொல்லிடு மப்பதி யவ்வெழுத் தாவன
சொல்லிடு நூறொடு நாற்பத்து நாலுரு
சொல்லிடு சக்கர மாய்வரு மேலதே. 1257

மேல்வரும் விந்துவு மவ்வெழுத் தாய்விடும்
மேல்வரு நாதமும் ஓங்கும் எழுத்துடன்
மேல்வரு மப்பதி யவ்வெழுத் தேவரின்
மேல்வரு சக்கர மாய்வ ந ஞாலமே. 1258

ஞாலம தாக விரிந்தது சக்கரம்
ஞாலம தாயிடும் விந்துவும் நாதமும்
ஞாலம தாயிடு மப்பதி யோசனை
ஞாலம தாக விரிந்த தெழுந்தே, 1259

விரிந்த எழுத்தது விந்துவும் நாதமும்
விரிந்த எழுத்தது சக்கர மாக
விரிந்த எழுத்தது மேல்வரும் பூமி
விரிந்த எழுத்தினில் அப்புறம் அப்பே. 1260

அப்பது வாக விரிந்தது சக்கரம்
அப்பினில் அப்புறம் அவ்வன லாயிடும்
அப்பினில் அப்புறம் மாருத மாயெழ
அப்பினில் அப்புறம் ஆகாச மாமே. 1261


ஆகாச அக்கர மாவது சொல்லிடில்
ஆகாச அக்கரத் துள்ளே எழுந்தவை
ஆகாச அவ்வெழுத் தாகிச் சிவானந்தம்
ஆகாச அக்கர மாவ தறிமினே. 1262

அறிந்திடுஞ் சக்கரம் ஐயஞ்சு விந்து
அறிந்திடுஞ் சக்கர நாத முதலா
அறிந்திடும் அவ்வெழுத் தப்பதி யோர்க்கும்
அறிந்திடும் அப்பக லோனிலை யாமே. 1263


அம்முதல் ஆறுமவ் வாதி எழுத்தாகும்
அம்முதல் ஆறுமவ் வம்மை எழுத்தாகும்
அம்முதல் நாலும் இருநடு வன்னியே
இம்முத லாகும் எழுத்தவை எல்லாம். 1264




1269-வது திருமந்திர விளக்கம்



1291-வது திருமந்திர விளக்கம்





(சத்யோ சாதாதி முகங்களுக்கு ஏற்ப இம்முறை)
1299-வது திருமந்திர விளக்கம்

எழுத்தவை நூறொடு நாற்பத்து நாலும்
எழுத்தவை யாறது வந்தடு வன்னி
எழுத்தவை யந்தடு வச்சுட ராகி
எழுத்தவை தான்முதல் அந்தமு மாமே. 1265

அந்தமும் ஈறு முதலா னவையற
அந்தமும் அப்பதி னெட்டுடன் ஆதலால்
அந்தமும் அப்பதின் மூன்றில் அமர்ந்தபின்
அந்தமும் இந்துகை யாருட மானதே. 1266

ஆவின மானவை முந்நூற் றறுபது
மாவின மப்பதி னைந்தின மாயுறு
மாவின மப்பதி னெட்டட ஞயுரு
மாவின மக்கதி ரோன்வர வந்ததே. 1267

வந்திடும் ஆகாசம் ஆறது நாழிகை
வந்திடும் அக்கரம் முப்பதி ராசியும்
வந்திடு நாளது முந்நூற் றறுபதும்
வந்திடு ஆண்டு வகுத்துரை யவ்வியே. 1268

அவ்வின மூன்றுமவ் வாடது வாய்வருங்
செவ்வின மூன்றுங் கிளர்தரு வேரதாஞ்
எவ்வின மூன்றுந் தழைத்திடும் தண்டதாம்
இவ்வின மூன்றும் இராசிக ளெல்லாம் 1269

இராசியுட் சக்கரம் எங்கும் நிறைந்தபின்
இராசியுட் சக்கர மென்றறி விந்துவாம்
இராசியுட் சக்கர நாதமும் ஒத்தபின்
இராசியுட் சக்கரம் நின்றிடு மாறே. 1270

நின்றிடு விந்துவென் றுள்ள எழுத்தெலாம்
நின்றிடு நாதம் ஓங்கும் எழுத்துடன்
நின்றிடு மப்பதி யவ்வெழுத் தேவரில்
நின்றிடு மப்புறந் தாரகை யானதே. 1271

தாரகை யாகச் சமைந்தது சக்கரந்
தாரகை மேலோர் தழைத்தது பேரொளி
தாரகை சந்திரன் நற்பக லோன்வரத்
தாரகை தாரகை தாரகை கண்டதே. 1272

கண்டிடு சக்கரம் விந்து வளர்வதாங்
கண்டிடு நாதமுந் தன்மேல் எழுந்திடக்
கண்டிடு வன்னிக் கொழுந்தன வொத்தபின்
கண்டிடு மப்புறங் காரொளி யானதே. 1273

காரொளி அண்டம் பொதிந்துல கெங்கும்
பாரொளி நீரொளி சாரொளி காலொளி
வானொளி ஒக்க வளர்ந்து கிடந்துபின்
நேரொளி ஒன்றாய் நிறைந்தங்கு நின்றதே. 1274

நின்றது அண்டமும் நீளும் புவியெலாம்
நின்றவிவ் வண்டம் நிலைபெறக் கண்டிட
நின்றவிவ் வண்டமு மூல மலமொக்கும்
நின்றவிவ் வண்டம் பலமது விந்துவே. 1275

விந்துவும் நாதமும் ஒக்க விழுந்திடில்
விந்துவும் நாதமும் ஒக்க விரையதாம்
விந்திற் குறைந்திடு நாதம் எழுந்திடில்
விந்துவை எண்மடி கொண்டது வீசமே. 1276

வீசம் இரண்டுள நாதத் தெழுவன
வீசமும் ஒன்று விரைந்திடு மேலுற
வீசமும் நாதமும் எழுந்துடன் ஒத்தபின்
வீசமும் விந்து விரிந்தது காணுமே, 1277

விரிந்தது விந்துவுங் கெட்டது வீசம்
விரிந்தது விந்துவும் நாதத் தளவினில்
விரிந்தது வுட்கட்ட எட்டெட்டு மாகில்
விரிந்தது விந்து விரையது வாமே. 1278

விரையது விந்து விளைந்தன எல்லாம்
விரையது விந்து விளைந்த உயிரும்
விரையது விந்து விளைந்தவிஞ் ஞானம்
விரையது விந்து விளைந்தவன் தாளே. 1279

விளைந்த எழுத்தது விந்துவும் நாதமும்
விளைந்த எழுத்தது சக்கர மாக
விளைந்த எழுத்தவை மெய்யினுள் நிற்கும்
விளைந்த எழுத்தவை மந்திர மாமே. 1280

மந்திரஞ் சக்கர மானவை சொல்லிடில்
தந்திரத் துள்ளெழு தோன்றெரி வட்டமாங்
கந்திரத் துள்ளுமி ரேகையில் ஒன்றில்லை
பந்தம தாகும் பிரணவம் உன்னிடே. 1281

உன்னிட்ட் வட்டத்தில் ஒத்தெழு மந்திரம்
பின்னிட்ட ரேகை பிழைப்பது தானில்லை
தன்னிட் டெழுந்த தகைப்பறப் பின்னிற்கப்
பன்னிட்ட மந்திரம் பார்க்கலு மாமே. 1282

பார்க்கலு மாகும் பகையறு சக்கரங்
காக்கலு மாகுங் கருத்தில் தடமெங்கும்
நோக்கலு மாகும் நுணுக்கற்ற நுண்பொருள்
ஆக்கலு மாகும் அறிந்துகொள் வார்க்கே, 1283

அறிந்திடுஞ் சக்கர மாதி யெழுத்து
விரிந்திடுஞ் சக்கர மேலெழுத் தம்மை
பரிந்திடுஞ் சக்கரம் பாரங்கி நாலும்
குவிந்திடுஞ் சக்கரம் கூறலு மாமே. 1284

கூறிய சக்கரத் துள்ளெழு மந்திரம்
மாறியல் பாக அமைந்து விரிந்திடுந்
தேறிய அஞ்சுடன் சேர்ந்தெழு மாரண
மாறியல் பாக மதித்துக்கொள் வார்க்கே 1285

மதித்திடும் அம்மையும் மாமாது மாகும்
மதித்திடும் அம்மையு மங்கனல் ஒக்கும்
மதித்தங் கெழுந்தவை காரண மாகில்
கொதித்தங் கெழுந்தவை கூடகி லாவே. 1286

கூடிய தம்பனம் மாரணம் வசியம்
மாடியல் பாக அமைந்து செறிந்திடும்
பாடியுள் ளாகப் பகைவரும் வந்துரூர்
தேடியுள் ளாகத் தெளிந்துகொள் வார்க்கே, 1237

தெளிந்திடுஞ் சக்கர மூலத்தி னுள்ளே
அளிந்த வகாரத்தை யந்நடு வாக்கிக்
குளிந்த வரவினைக் கூடியுள் வைத்து
வளிந்தவை யங்கெழு நாடிய காலே' 1288

காலரை முக்கால் முழுதெனும் மந்திரம்
ஆலித் தெழுந்தமைந் தூறி எழுந்ததாய்ப்
பாலித் தெழுந்து பகையற நின்றபின்
மாலுற்ற மந்திர மாறிக்கொள் வார்க்கே. 1289

கொண்டவிம் மந்திரங் கூத்தன் எழுத்ததாய்ப்
பண்டையுள் நாவிற் பகையற விண்டபின்
மன்றுள் நிறைந்த மணிவிளக் காயிடும்
இன்றும் இதயத் தெழுந்து நமவெனே. 1290

வயிரவச் சக்கரம்

அறிந்த பிரதமையோ டாறு மறிஞ்சு
அறிந்தவச் சத்தமி மேலிவை குற்றம்
அறிந்தவை யொன்றுவிட் டொன்றுபத் தாக
அறிந்து வலமது வாக நடவே. 1291

நடந்த வயிரவன் சூல கபாலி
கடந்து பகைவனைக் கண்ணது போக்கித்
தொடர்ந்த வுயிரது வுண்ணும் பொழுது
படர்ந்த உடல்கொடு பந்தாட லாமே. 1292

ஆமேவப் பூண்டரு ளாதி வயிரவன்
ஆமே கபாலமுஞ் சூலமுங் கைக்கொண்டங்
காமே தமருக பாசமுங் கையது
வாமே சிரத்தொடு வாளது கையே. 1293

கையது வாறுங் கருத்துற நோக்கிடு
மெய்யது செம்மை விளங்கு வயிரவன்
துய்யரு ளத்தில் துளங்குமெய் யுற்றதாய்ப்
பொய்வகை விட்டுநீ பூசனை செய்யே. 1294

பூசனை செய்யப் பொருந்தியோ ராயிரம்
பூசனை செய்ய மதுவுட னுடுமால்
பூசனை சாந்து சவாது புழுகுநெய்
பூசனை செய்துநீர் பூசலை வேண்டுமே. 1295

வேண்டிய வாறு கலகமு மாயிடும்
வேண்டிய வாறினுண் மெய்யது பெற்றபின்
வேண்டிய வாறு வரும்வழி நீநட
வேண்டிய வாறது வாகுங் கருத்தே. 1296

சாம்பவிமண்டலச் சக்கரம்

சாம்பவி மண்டலச் சக்கரஞ் சொல்லிடில்
ஆம்பதம் எட்டாக விட்டிடின் மேலதாம்
காண்பதந் தத்துவ நாலுள் நயனமும்
நாம்பதங் கண்டபின் நாடறிந் தோமே. 1297

நாடரி மண்டலம் நல்லவிக் குண்டத்துக்
கோடற வீதியுங் கொணர்ந்துள் இரண்டழி
பாடறி பத்துடன் ஆறு நடுவீதி
ஏடற நாலைந் திடவகை யாமே. 1298

நாலைந் திடவகை யுள்ளதோர் மண்டலம்
நாலுநல் வீதியுள் நல்ல இலிங்கமாய்
நாலுநற் கோணமும் நந்நாலி லிங்கமாய்
நாலுநற் பூநடு நண்ணலவ் வாறே. 1299


ஆறிரு பத்துநா லஞ்செழுத் தஞ்சையும்
வேறுரு வாக விளைந்து கிடந்தது
தேறு நிருமல சிவாய நமவென்று
கூறுமின் கூறிற் குறைகளும் இல்லையே. 1300

குறைவதும் இல்லை குரைகழற் கூடும்
அறைவது மாரண மவ்வெழுத் தாகித்
திறமது வாகத் தெளியவல் லார்க்கு
இறவில்லை என்றென் றியம்பினர் காணே. 1301


காணும் பொருளும் கருதிய தெய்வமும்
பேணும் பதியும் பெருகிய தீர்த்தமும்
ஊணும் உணர்வும் உறக்கமுந் தானாகக்
காணும் கனகமும் காரிகை யாமே. 1302

ஆமே எழுத்தஞ்சு மாம்வழி யேயாகப்
போமே யதுதானும் போம்வழி யேபோனல்
நாமே நினைத்தன செய்யலு மாகும்
பார்மேல் ஒருவர் பகையில்லை தானே. 1303

பகையில்லை என்றும் பணிந்தவர் தம்பால்
நகையில்லை நாளும் நன்மைக ளாகும்
வினையில்லை என்றும் விருத்தமும் இல்லை
தகைவில்லை தானுஞ் சலமது வாமே. 1304



1298–1300 திருமந்திரங்களின் விளக்கம்



1311—1314 திருமந்திரங்களின் விளக்கம்

ஆரும் உரைசெய்ய லாமஞ் செழுத்தாலே
யாரும் அறியாத ஆனந்த ரூபமாம்
பாரும் விசும்பும் பகலும் மதியதி
ஊனும் உயிரும் உணர்வது வாமே. 1305

உணர்ந்தெழு மந்திரம் ஓமெனும் உள்ளே
அணைந்தெழு மாங்கத ளுதிய தாகுங்
குணர்ந்தெழு சூதனுஞ் சூதியுங் கூடிக்
கணந்தெழுங் காணுமக் காமுகை யாலே, 1306

புவனாபதி சக்கரம்

ககராதி யோரைந்துங் காணிய பொன்மை
அகராதி யோரா றரத்தமே போலும்
சகராதி யோர்நான்குந் தான்சுத்த வெண்மை
ககராதி மூவித்தை காமிய முத்தியே. 1307

ஓரில் இதுவே உரையும்இத் தெய்வத்தைத்
தேறிற் பிறிதில்லை யாளென்று செப்பக்கேள்
வாரித் திரிகோண மனமின்ப முத்தியுந்
தேரில் அறியுஞ் சிவகாயந் தானே. 1308

ஏக பராசத்தி ஈசற்காம் அங்கமே
ஆகம் பராவித்தை யாமுத்தி சித்தியே
ஏகம் பராசத்தி யாகச் சிவகுரு
யோகம் பராசத்தி உண்மைஎட் டாமே. 1309

எட்டா கியசத்தி எட்டாகும் யோகத்துக்
கட்டாகு நாதாந்தத் தெட்டுங் கலப்பித்த
தொட்டாத விந்துவுந் தானற் றெழுந்தது
கிட்டா தொழிந்தது கீழான மூடர்க்கே. 1310

ஏதும் பலமா மியந்திரா சன்னடி
ஓதிக் குருவின் உபதேசம் உட்கொண்டு
நீதங்கும் அங்க நியாசந் தனைப்பண்ணிச்
சாதங்கெடச் செம்பிற் சட்கோணந் தானிடே. 1311

சட்கோணந் தன்னில் ஸ்ரீம்ஹ்றீம் தானிட்டு
அக்கோண மாறின் தலையில்ரீங் காரமிட்டு
எக்கோண முஞ்சூழ எழில்வட்டம் இட்டுப்பின்
மிக்கீரெட் டக்கர மம்முதன் மேலிடே. 1312

இட்ட இதழ்கள் இடையந் தரத்திலே
அட்டஹவ் விட்டதின் மேலே உவ்விட்டுக்
கிட்ட இதழ்களின் மேலே கிரோம்சிரோம்
இட்டுவா மந்தாங் கிரோங்கென்று மேவிடே. 1313

மேவிய சக்கரமீது வலத்திலே
கோவை யடைவே குரோங்சிரோங் கென்றிட்டுத்
தாவில்ரீங் காரத்தாற் சக்கரஞ் சூழ்ந்து
பூவைப் புவன பதியைப்பின் பூசியே. 1314

பூசிக்கும் போது புவன பதிதன்னை
ஆசற் றகத்தினில் ஆவா கனம்பண்ணிப்
பேசிய பிராணப் பிரதிட்டை யதுசெய்து
தேசுற் றிடவே தியான மதுசெய்யே 1315

செய்ய திருமேனி செம்பட் டுடைதானுங்
கையில் படையங் குசபாசத் தோடபயம்
மெய்யில் அணிகலன் இரத்தின மாமேனி
துய்ய முடியும் அவயவத்தில் தோற்றமே, 1316

தோற்போர்வை நீக்கித் துதித்தடைவிற் பூசித்துப்
பாற்போ னகமந் திரத்தாற் பயின்றேத்தி
நாற்பால நாரதா யாசுவா காஎன்று
சீர்ப்பாகச் சேடத்தை மாற்றிப்பின் சீவியே. 1317

சீவிப் பதன்முன்னே தேவியையுத் வாகனத்தாற்
பாவித் திதய கமலம் பதவித்தங்
கியாவர்க்கும் எட்டா இயந்திர ராசனை
நீவைத்துச் சேமி நினைந்தது தருமே. 1318

நவாக்கரி சக்கரம்

நவாக்கரி சக்கர நானுரை செய்யின்
நவாக்கரி ஒன்று நவாக்கரி யாக
நவாக்கரி எண்பத் தொருவகை யாக
நவாக்கரி யக்கிலீ சௌமுத லீறே. 1319

சௌமுதல் அவ்வொடு ஹௌவுட ஞங்கிரீம்
கௌவு ளுமையுளுங் கலந்திரீம் சிரீமென்று
ஒவ்வில் எழுங்கிலி மந்திர பாதமாச்
செவ்வுள் எழுந்து சிவாய நமவெனே. 1320

நவாக்கரி யாவது நானறி வித்தை
நவாக்கரி புள்ளெழும் நன்மைகள் எல்லாம்
நவாக்கரி மந்திர நாவுளே ஓத
நவாக்கரி சத்தி நலந்தருந் தானே. 1321

நலந்தரு ஞானமுங் கல்வியும் எல்லாம்
உரந்தரு வல்வினை யும்மைவிட் டோடும்
சிரந்தரு தீவினை செய்வ தகற்றி
வரந்தரு சோதியும் வாய்த்திடுங் காணே. 1322

கண்டிடுஞ் சக்கரம் வெள்ளிபொன் செம்பிடை
கொண்டிடும் உள்ளே குறித்த வினைகளை
வென்றிடு மண்டலம் வெற்றி தருவிக்கும்
நின்றிடுஞ் சக்கரம் நினைக்கு மளவே. 1323

நினைத்திடு மச்சிரீ மக்கிலீ மீரு
நினைத்திடுஞ் சக்கர மாதியு மீறு
நினைத்திடு நெல்லொடு புல்லினை யுள்ளே
நினைத்திடும் அருச்சனை நேர்தரு வாளே. 1324

நேர்தரு மத்திரு நாயகி யானவள்
யாதொரு வண்ணம் அறிந்திடும் பொற்பூவை
கார்தரு வண்ணங் கருதின கைவரும்
நார்தரு வண்ணம் நடந்திடு நீயே. 1325

நடத்திடும் பாரினில் நன்மைகள் எல்லாங்
கடந்திடுங் காலனும் எண்ணிய நாளும்
படர்ந்திடு நாமமுந் பாய்கதிர் போல
அடைந்திடு வண்ணம் அடைந்திடு நீயே. 1326

அடைந்திடும் பொன்வெள்ளி கல்லுடன் எல்லாம்
அடைந்திடு மாதி யருளுந் திருவும்
அடைந்திடும் அண்டத் தமரர்கள் வாழ்வும்
அடைந்திடும் வண்ணம் அறிந்திடு நீயே. 1327

அறிந்திடு வார்கள் அமரர்க ளாகத்
தெரிந்திடு வானோர் தேவர்கள் தேவன்
பரிந்திடும் வானவன் பாய்புனல் சூடி
முரிந்திடு வானை முயன்றிடு நீரே. 1328

நீர்பணி சக்கரம் நேர்தந வண்ணங்கள்
பாரணி யும்ஹிரீ முன்ஸ்ரீ மீருந்
தாரணி யும்புகழ்த் தையல்நல் லாள்தனைக்
காரணி யும்பொழிற் கண்டுகொள் ளீரே. 1329

கண்டுகொள் ளுந்தனி நாயகி தன்னையும்
மொண்டுகொ ளும்முக வசியம தாயிடும்
பண்டுகொ ளும்பர மாய பரஞ்சுடர்
நின்றுகொ ளும்நிலை பேறுடை யாளையே. 1330

பேறுடை யாள்தன் பெருமையை எண்ணிடில்
நாடுடை யார்களும் நம்வச மாகுவர்
மாறுடை யார்களும் வாழ்வது தானிலை
கூறுடை யாளையுங் கூறுமின் நீரே. 1331

கூறுமின் எட்டுத் திசைக்குந் தலைவியை
யாறுமின் அண்டத் தமரர்கள் வாழ்வென
மாறுமின் வையம் வரும்வழி தன்னையுந்
தேறுமின் நாயகி சேவடி சேர்ந்தே. 1332

சேவடி சேரச் செறிய இருந்தவர்
நாவடி யுள்ளே நவின்றுநின் றேத்துவர்
பூவடி யிட்டுப் பொலிய இருந்தவர்
மாவடி காணும் வகையறி வாரே. 1333

ஐம்முத லாக வளர்ந்தெழு சக்கரம்
ஐம்முத லாக அமர்ந்திரீ மீருகும்
அம்முத லாகி யவர்க்குடை யாடனை
ஐம்முத லாக வழுத்திடு நீயே. 1334

வழுத்திடு நாவுக் கரசிவள் தன்னைப்
பகுத்திடும் வேதமெய் யாகம மெல்லாந்
தொகுத்தொரு நாவிடை சொல்லவல் லானை
முகத்துளும் முன்னெழக் கண்டுகொ ளீரே. 1335

கண்டஇச் சக்கரம் நாவில் எழுதிடிற்
கொண்டஇம் மந்திரங் கூத்தன் குறியதாம்
மன்றினுள் வித்தையு மானுடர் கையதாய்
வென்றிடும் வையக மெல்லியல் மேவியே 1336

மெல்லிய லாகிய மெய்ப்பொரு ளாடனைச்
சொல்லிய லாலே தொடர்ந்தங் கிருந்திடும்
பல்லியல் பாகப் பரந்தெழு நாட்பல
நல்லியல் பாலே நடந்திடுந் தானே. 1337

நடந்திடு தாவினுள் நன்மைகள் எல்லாந்
தொடர்ந்திடுஞ் சொல்லொடு சொற்பொருள் தானும்
கடந்திடுங் கல்விக் கரசிவ ளாகப்
படர்ந்திடும் பாரிற் பகையில்லை தானே. 1338

பகையில்லை கௌமுத லையது வீரு
நகையில்லை சக்கர நன்றறி வார்க்கு
மிகையில்லை சொல்லிய பல்லுரு வெல்லாம்
வகையில்லை யாக வணங்கிடுந் தானே. 1339

வணங்கிடுந் தத்துவ நாயகி தன்னை
நலங்கிடு நல்லுயி ரானவை யெல்லாங்
கலங்கிடுங் காம வெகுளி மயக்கந்
தொடங்கிடுஞ் சொல்லிய சூழ்வினை தானே. 1340

தானே கழறித் தணியவும் வல்லனுய்த்
தானே நினைத்தவை சொல்லவும் வல்லனுய்த்
தானே தனிநடங் கண்டவள் தன்னையுந்
தானே வணங்கித் தலைவனு மாமே. 1341

ஆமே யனைத்துயி ராகிய அம்மையுந்
தாமே சகலமும் ஈன்றஅத் தையலும்
ஆமே யவளடி போற்றி வணங்கிடிற்
போமே வினைகளும் புண்ணிய னுகுமே. 1342

புண்ணிய னுகிப் பொருந்தி உலகெங்கும்
கண்ணிய னுகிக் கலந்தங் கிருந்திடுந்
தண்ணிய னுகித் தரணி முழுதுக்கும்
அண்ணிய னுகி அமர்ந்திருந் தானே. 1343

தானது கிரீம் கௌவது ஈரும்
நானது சக்கர நன்றறி வார்க்கெலாம்
கானது கன்னி கலந்த பராசத்தி
கேளது வையங் கிளரொளி யானதே. 1344

ஒளிக்கும் பராசத்தி உள்ளே அமரிற்
களிக்கும்இச் சிந்தையிற் காரணங் காட்டித்
தெளிக்கு மழையுடன் செல்வமுண் டாக்கும்
அளிக்கும் இவளை அறிந்துகொள் வார்க்கே. 1345

அறிந்திடுஞ் சக்கரம் அருச்சனை யோடே
எறிந்திடும் வையத் திடரவை காணல்
மறிந்திடு மன்னனும் வந்தனை செய்யும்
பொறிந்திடுஞ் சிந்தை புகையில்லை தானே. 1346

புகையில்லை சொல்லிய பொன்னொளி யுண்டாங்
குகையில்லை கொல்வ திலாமையி னாலே
வகையில்லை வாழ்கின்ற மன்னுயிர்க் கெல்லாஞ்
சிகையில்லை சக்கரஞ் சேர்ந்தவர் தாமே. 1347

சேர்ந்தவர் என்றுந் திசையொளி யானவர்
காய்ந்தெழு மேல்வினை காணகி லாதவர்
பாய்ந்தெழும் உள்ளொளி பாரிற் பரந்தது
மாய்ந்தது காரிருள் மாறொளி தானே. 1348

ஒளியது ஹௌமுன் கிரீமது ஈருங்
களியது சக்கரங் கண்டறி வார்க்குத்
தெளிவது ஞானமுஞ் சிந்தையுந் தேறப்
பணிவது பஞ்சாக் கரமது வாமே. 1349

ஆமே சதாசிவ நாயகி யானவள்
ஆமே அதோமுகத் துள்ளறி வானவள்
ஆமே சுவையொளி யூறேசை கண்டவள்
ஆமே யனைத்துயிர் தன்னுளு மாமே. 1350

தன்னுளு மாகித் தரணி முழுதுங்கொண்(டு)
என்னுளு மாகி இடம்பெற நின்றவள்
மண்ணுளும் நீரனல் காலுளும் வானுளுங்
கண்ணுளும் மெய்யுளுங் காணலு மாமே. 1351

காணலு மாகுங் கலந்துயிர் செய்வன
காணலு மாகுங் கருத்துள் இருந்திடிற்
காணலு மாகுங் கலந்து வழிசெயக்
காணலு மாகுங் கருத்துற நில்லே. 1352

நின்றிடும் ஏழு புவனமும் ஒன்ருகக்
கண்டிடும் உள்ளங் கலந்தெங்குந் தாளுகக்
கொண்டிடும் வையங் குணம்பல தன்னையும்
விண்டிடும் வல்வினை மெய்ப்பொரு ளாகுமே. 1353

மெய்ப்பொரு ளௌமுதல் ஹௌவது ஈருக்
கைப்பொரு ளாகக் கலந்தெழு சக்கரம்
தற்பொரு ளாகச் சமைந்தமு தேஸ்வரி
நற்பொரு ளாக நடுவிருந் தாளே 1354

தாளதி னுள்ளே சமைந்தமு தேஸ்வரி
காலது கொண்டு கலந்துற வீசிடில்
நாளது நாளும் புதுமைகள் கண்டபின்
கேளது காயமுங் கேடில்லை காணுமே. 1355

கேடில்லை காணுங் கிளரொளி கண்டபின்
நாடில்லை காணும் நாண்முத லற்றபின்
மாடில்லை காணும் வரும்வழி கண்டபின்
காடில்லை காணுங் கருத்துற் றிடத்துக்கே. 1356

உற்றிட மெல்லாம் உலப்பில்பா ழாக்கிக்
கற்றிட மெல்லாங் கடுவெளி யானது
மற்றிட மில்லை வழியில்லை தானில்லை
சற்றிட மில்லை சலிப்பற நின்றிடே. 1357

நின்றிடும் ஏழ்கடல் ஏழ்புவி எல்லாம்
நின்றிடும் உள்ளம் நினைத்தவை தானெக்கும்
நின்றிடுஞ் சத்தி நிலைபெறக் கண்டிட
நின்றிடும் மேலை விளக்கொளி தானே. 1358

விளக்கொளி யௌமுத லௌவது ஈரு
விளக்கொளி சக்கரம் மெய்ப்பொரு ளாகும்
விளக்கொளி யாகிய மின்கொடி யாளை
விளக்கொளி யாக விளங்கிடு நீயே. 1359

விளங்கிடு மேல்வரு மெய்ப்பொருள் சொல்லின்
விளங்கிடு மெல்லிய லானது வாகும்
விளங்கிடு மெய்ந்நின்ற ஞானப் பொருளை
விளங்கிடு வார்கள் விளங்கினர் தானே. 1360

தானே வெளியென எங்கும் நிறைந்தவள்
தானே பரம வெளியது வானவள்
தானே சகலமு மாகி அழித்தவள்
தானே யனைத்துள அண்ட சகலமே. 1361

அண்டத்தி னுள்ளே அளப்பரி தானவள்
பிண்டத்தி னுள்ளே பெருவெளி கண்டவள்
குண்டத்தி னுள்ளே குணம்பல காணினுங்
கண்டத்தில் நின்ற கலப்பறி யார்களே. 1362

கலப்பறி யார்கடல் சூழுல கெல்லாம்
உலப்பறி யாருட லோடுயிர் தன்னைச்
சிலப்பறி யார்சில தேவரை நாடித்
தலைப்பறி யாகச் சமைந்தவர் தானே. 1363

தானே எழுந்தஅச் சக்கரஞ் சொல்லிடின்
மானே மதிவரை பத்திட்டு வைத்தபின்
தேனே யிரேகை திகைப்பற ஒன்பதில்
தானே கலந்த வரையெண்பத் தொன்றுமே. 1364

ஒன்றிய சக்கரம் ஓதிடும் வேளையில்
வென்றிகொள் மேனி மதிவட்டம் பொன்மையாம்
கன்றிய ரேகை கலந்திடுஞ் செம்மையில்
என்றிய லம்மை எழுத்தவை பச்சையே. 1365

ஏய்ந்த மரவுரி தன்னில் எழுதிய
வாய்ந்தஇப் பெண்ணெண்பத் தொன்றில் நிரைத்தபின்
காய்ந்தவி நெய்யுட் கலந்துடன் ஓமமும்
ஆய்ந்தலத் தாமுயிர் ஆகுதி பண்ணுமே. 1366

பண்ணிய பொன்னைப் பரப்பற நீபிடி
எண்ணிய நாட்களில் இன்பமும் எய்திடும்
நண்ணிய நாமமும் நான்முகன் ஒத்தபின்
துண்ணென நேயநற் சேர்க்கலு மாமே 1367


ஆகின்ற சந்தனங் குங்குமங் கத்தூரி
போகின்ற சாந்து சவாது புழுகுநெய்
ஆகின்ற கற்பூர மாகோ சனநீருஞ்
சேர்கின்ற ஒன்பதுஞ் சேரநீ வைத்திடே. 1368

வைத்திடும் பொன்னுடன் மாதவ நோக்கிடிற்
கைச்சிறு கொங்கை கலந்தெழு கன்னியைத்
தச்சிது வாகச் சமைந்தஇம் மந்திரம்
அர்ச்சனை யாயிரம் ஆயிரஞ் சிந்தியே, 1369

சிந்தையி னுள்ளே திகழ்தரு சோதியாய்
எந்தை கரங்கள் இருமூன்றும் உள்ளது
பந்தமா சூலம் படைபாசம் வில்லம்பு
முந்த கிலீமெழ முன்னிருந் தாளே. 1370


இருந்தனர் சத்திகள் அறுபத்து நால்வர்
இருந்தனர் கன்னிகள் எண்வகை எண்மர்
இருந்தனர் சூழ எதிர்ச்சக் கரத்தே
இருந்த கரமிரு வில்லம்பு கொண்டே. 1371

கொண்ட கனகங் குழைமுடி யாடையாய்க்
கண்டஇம் முத்தங் கனல்திரு மேனியாய்ப்
பண்டமர் சோதிப் படரித ழானவள்
உண்டங் கொருத்தி உணரவல் லாருக்கே. 1372



க்லீம்	ஸௌம்	ஔம்	ஹௌம்	ஹ்ரீம்	ஜௌம்	வௌம்	ரீம்	ஸ்ரீம்
ஸௌம்	ஔம்	ஹௌம்	ஹ்ரீம்	ஜௌம்	வௌம்	ரீம்	ஸ்ரீம்	க்லீம்
ஔம்	ஹௌம்	ஹ்ரீம்	ஜௌம்	வௌம்	ரீம்	ஸ்ரீம்	க்லீம்	ஜௌம்
ஹௌம்	ஹ்ரீம்	ஜௌம்	வௌம்	ரீம்	ஸ்ரீம்	க்லீம்	ஜௌம்	ஔம்
ஹ்ரீம்	ஜௌம்	வௌம்	ரீம்	ஸ்ரீம்	க்லீம்	ஜௌம்	ஔம்	ஹௌம்
ஜௌம்	வௌம்	ரீம்	ஸ்ரீம்	க்லீம்	ஜௌம்	ஔம்	ஹௌம்	ஹ்ரீம்
வௌம்	ரீம்	ஸ்ரீம்	க்லீம்	ஜௌம்	ஓம்	ஹௌம்	ஹ்ரீம்	ஜௌம்
ரீம்	ஸ்ரீம்	க்லீம்	ஜௌம்	ஔம்	ஹௌம்	ஹ்ரீம்	ஜௌம்	வௌம்
ஸ்ரீம்	க்லீம்	ஜௌம்	ஔம்	ஹௌம்	ஹ்ரீம்	ஜௌம்	வௌம்	ரீம்

1364-வது திருமந்திர விளக்கம்



உணர்ந்திருந் துள்ளே ஒருத்தியை நோக்கிற்
கலந்திருந் தெங்குங் கருணை பொழியும்
மணந்தெழும் ஓசை யொளியது காணுந்
தணந்தெழு சக்கரந் தான்தரு வாளே. 1373

தருவழி யாகிய தத்துவ ஞானங்
குருவழி யாகுங் குணங்களுள் நின்று
கருவழி யாகுங் கணக்கை யறுத்துப்
பெருவழி யாக்கும் பேரொளி தானே. 1374

பேரொளி யாய பெரிய பெருஞ்சுடர்
சீரொளி யாகித் திகழ்தரு நாயகி
காரொளி யாகிய கன்னிகை பொன்னிறம்
பாரொளி யாகிப் பரந்துநின் றாளே. 1375

பரந்த கரம்இரு பங்கயம் ஏந்திக்
குவிந்த கரமிரு கொய்தளிர்ப் பாணி
பரிந்தருள் கொங்கைகள் முத்தார் பவளம்
இருந்தநல் லாடைமணிபொதிந் தன்றே. 1376

மணிமுடி பாதஞ் சிலம்பணி மங்கை
அணிபவ ளன்றி யிருளில்லை யாகுந்
தணிபவர் நெஞ்சினுள் தன்னரு ளாகிப்
பணிவர்க் கன்றே பரகதி யாமே. 1377

பரந்திருந் துள்ளே அறுபது சத்தி
கரந்தன கன்னிகள் அப்படிசூழ
மலர்ந்திரு கையின் மலரவை ஏந்தச்
சிறந்தவர் ஏத்துஞ் சிரீம்தன மாமே. 1378

தனமது வாகிய தையலை நோக்கி
மனமது வோடி மரிக்கிலோ ராண்டிற்
கனமவை யற்றுக் கருதிய நெஞ்சந்
தினகர னிட செய்திய தாமே. 1379

ஆகின்ற மூலத் தெழுந்த முழுமலர்
போகின்ற பேரொளி யாய மலரதாய்ப்
போகின்ற பூரண மாக நிறைந்தபின்
சேர்கின்ற செந்தழல் மண்டல மானதே. 1380

ஆகின்ற மண்டலத் துள்ளே அமர்ந்தவள்
ஆகின்ற ஐம்பத் தறுவகை யானவள்
ஆகின்ற ஐம்பத் தறுசத்தி நேர்தரு
ஆகின்ற ஐம்பத் தறுவகை சூழவே. 1381

சூழ்ந்தெழு சோதி சுடர்முடி பாதமாய்
ஆங்கணி முத்தம் அழகிய மேனியா
தாங்கிய கையவை தார்கிளி ஞானமாய்
ஏந்து கரங்கள் எடுத்தமா பாசமே. 1382

பாசம தாகிய வேரை யறுத்திட்டு
நேசம தாக நினைந்திரு மும்முளே
நாசம தெல்லாம் நடந்திடும் ஐயாண்டிற்
காசினி மேலமர் கண்ணுத லாகுமே. 1383

கண்ணுடை நாயகி தன்னரு ளாம்வழி
பண்ணுறு நாதம் பகையற நின்றிடில்
விண்ணமர் சோதி விளங்க ஹ்ரீங்கார
மண்ணுடை நாயகி மண்டல மாகுமே. 1384

மண்டலத் துள்ளே மலர்ந்தெழு தீபத்தைக்
கண்டகத் துள்ளே கருதி யிருந்திடும்
விண்டகத் துள்ளே விளங்கி வருதலால்
தண்டகத் துள்ளவை தாங்கலு மாமே. 1385

தாங்கிய நாபித் தடமலர் மண்டலத்
தோங்கி எழுங்கலைக் குள்ளுணர் வானவள்
ஏங்க வரும்பிறப் பெண்ணி யறுத்திட
வாங்கிய நாதம் வலியுட னாகுமே. 1386

நாவுக்கு நாயகி நன்மணி பூணாரம்
பூவுக்கு நாயகி பொன்முடி யாடையாம்
பாவுக்கு நாயகி பாலொத்த வண்ணத்தாள்
ஆவுக்கு நாயகி அங்கமர்ந் தாளே. 1387

அன்றிரு கையில் அளந்த பொருள்முறை
இன்றிரு கையில் எடுத்தவெண் குண்டிகை
மன்றது காணும் வழியது வாகவே
கண்டங் கிருந்தவர் காரணி காணுமே, 1388

காரணி சத்திகள் ஐம்பத் திரண்டெனக்
காரணி கன்னிகள் ஐம்பத் திருவராய்க்
காரணி சக்கரத் துள்ளே கரந்தெங்குங்
காரணி தன்னரு ளாகிநின் றாளே. 1389

நின்றஇச் சத்தி நிலைபெற நின்றிடிற்
கண்டஇவ் வன்னி கலந்திடும் ஓராண்டிற்
கொண்ட விரதநீர் குன்றாமல் நின்றிடின்
மன்றினி லாடு மணியது காணுமே. 1390

கண்டஇச் சத்தி இருதய பங்கயங்
கொண்டஇத் தத்துவ நாயகி யானவள்
பண்டையவ் வாயுப் பகையை யறுத்திட
இன்றென் மனத்துள் இனிதிருந் தாளே. 1391

இருந்தவிச் சத்தி இருநாலு கையிற்
பரந்தஇப் பூங்கிளி பாச மழுவாள்
கரந்திடு கேடகம் வில்லம்பு கொண்டங்
குரந்தங் கிருந்தவள் கூத்துகந் தாளே. 1392

உகந்தனள் பொன்முடி முத்தார மாகப்
பரந்த பவளமும் பட்டாடை சாத்தி
மலர்ந்தெழு கொங்கை மணிக்கச் சணிந்து
தழைந்தங் கிருந்தவள் தான்பச்சை யாமே. 1393

பச்சை இவளுக்குப் பாங்கிமார் ஆறெட்டு
கொச்சையார் எண்மர்கள் கூடி வருதலாற்
கச்சணி கொங்கைகள் கையிரு காப்பதாய்
எச்ச விடைச்சி இனிதிருந் தாளே. 1394

தாளதி னுள்ளே தாங்கிய சோதியைக்
காலது வாகக் கலந்துகொள் என்று
மாலது வாக வழிபாடு செய்துநீ
பாலது போலப் பரந்தெழு விண்ணிலே. 1395

விண்ணமர் நாபி இருதய மாங்கிடைக்
கண்ணமர் கூபங்கலந்து வருதலாற்
பண்ணமர்ந் தாதித்த மண்டல மானது
தண்ணமர் கூபந் தழைத்தது காணுமே. 1396

கூபத்துச் சத்தி குளிர்முகம் பத்துள
தாபத்துச் சத்தி தயங்கி வருதலால்
ஆபத்துக் கைகள் அடைந்தன நாலைந்து
பாசம் அறுக்கப் பரந்தன சூலமே. 1397

சூலந்தண் டொள்வாள் சுடர்பறை ஞானமாய்
வேலம்பு தமருக மாகிளி விற்கொண்டு
காலம்பூப் பாசம் மழுகத்தி கைக்கொண்டு
கோலஞ்சேர் சங்கு குவிந்தகை எண்ணதே. 1398

எண்ணமர் சத்திகள் நாற்பத்து நாலுடன்
எண்ணமர் சத்திகள் நாற்பத்து நால்வராம்
எண்ணிய பூவித முள்ளே யிருந்தவள்
எண்ணிய எண்ணங் கடந்துநின் றாளே. 1399

கடந்தவள் பொன்முடி மாணிக்கத் தோடு
தொடர்ந்தணி முத்து பவளங்கச் சாகப்
படர்ந்தல்குற் பட்டாடை பாதச் சிலம்பு
மடந்தை சிறியவள் வந்துநின் றாளே. 1400

நின்றஇச் சத்தி நிரந்தர மாகவே
கண்டிடு மேரு வணிமாதி தானுகிப்
பண்டைய வானின் பகட்டை யறுத்திட
ஒன்றிய தீபம் உணர்ந்தார்க் குண்டாமே. 1401

உண்டோர் அதோமுகம் உத்தம மானது
கண்டஇச் சத்தி சதாசிவ நாயகி
கொண்ட முகமைந்து கூறுங் கரங்களும்
ஒன்றிரண் டாகவே மூன்றுநா லானதே. 1402

நன்மணி சூலங் கபாலங் கிளியுடன்
பன்மணி நாகம் மழுகத்தி பந்தாகுங்
கண்மணி தாமரைக் கையில் தமருகம்
பொன்மணி பூணூரம் பூசனை யானதே. 1403

பூசனைச் சத்திகள் எண்ணைவர் சூழவே
நேசவள் கன்னிகள் நாற்பத்து நேரதாய்க்
காசினிச் சக்கரத் துள்ளே கலந்தவள்
மாசடை யாமல் மகிழ்ந்திருந் தார்களே. 1404

தாரத்தி னுள்ளே தங்கிய சோதியைப்
பாரத்தி னுள்ளே பரந்துள் எழுந்திட
வேரது வொன்றிநின் றெண்ணு மனுேமயங்
காரது போலக் கலந்தெழு மண்ணிலே. 1405

மண்ணில் எழுந்த அகார உகாரங்கள்
விண்ணில் எழுந்து சிவாய நமவென்று
கண்ணில் எழுந்தது காண்பரி தன்றுகொல்
கண்ணில் எழுந்தது காட்சி தரஎன்றே. 1406

என்றங் கிருந்த அமுத கலையிடைச்
சென்றங் கிருந்த அமுத பயோதரி
கண்டங் கரமிரு வெள்ளிபொன் மண்ணடை
கொண்டங் கிருந்தது வண்ணம் அமுதே. 1407

அமுதம தாக அழகிய மேனி
படிகம தாகப் பரந்தெழு முள்ளே
குமுதம தாகக் குளிர்ந்தெழு முத்துக்
கெமுதம தாகிய் கேடிலி தானே. 1408

கேடிலி சத்திகள் முப்பத் தறுவரும்
நாடிலி கன்னிகள் நாலொன பதின்மரும்
பூவிலி பூவிதழ் உள்ளே யிருந்தவர்
நாளிலி தன்னை நணுகிநின் ரூர்களே. 1409

நின்றது புந்தி நிறைந்திடும் வன்னியுங்
கண்டது சோதி கருத்துள் இருந்திடக்
கொண்டது வோராண்டு கூடி வருகைக்கு
விண்ட வெளகாரம் விளங்கின அன்றே. 1410

விளங்கிடு வானிடை நின்றவை யெல்லாம்
வணங்கிடு மண்டலம் மன்னுயி ராக
நலங்கிளர் நன்மைகள் நாரண னொத்துச்
சுணங்கிடை நின்றிவை சொல்லலு மாமே. 1411

ஆமே அதோமுக மேலே அமுதமாய்த்
தாமே யுகாரந் தழைத்தெழுஞ் சோமனும்
காமேல் வருகின்ற கற்பக மானது
பூமேல் வருகின்ற பொற்கொடி யானதே. 1412

பொற்கொடி யாளுடைப் பூசனை செய்திட
அக்கனி யாகிய ஆங்காரம் போயிடும்
மற்கட மாகிய மண்டலந் தன்னுளே
பிற்கொடி யாகிய பேதையைக் காணுமே. 1413

பேதை யவளுக்குப் பெண்மை அழகாகும்
தாதை யிவளுக்குத் தாணுவு மாய்நிற்கும்
மாதை யவளுக்கு மண்ணுந் திலகமாய்க்
கோதையர் சூழக் குவிந்திடங் காணுமே. 1414

குவிந்தனர் சத்திகள் முப்பத் திருவர்
நடந்தனர் கன்னிகள் நாலெண்மர் சூழப்
பரந்தித மாகிய பங்கயத் துள்ளே
இருந்தனள் காணும் இடம்பல கொண்டே. 1415

கொண்டங் கிருந்தனர் கூத்தன் ஒளியினைக்
கண்டங் கிருந்தனர் காரணத் துள்ளது
பண்டை மறைகள் பரந்தெங்குந் தேடுமால்
இன்றென் மனத்துளே இல்லடைந் தாளுமே. 1416

இல்லடைந் தானுக்கும் இல்லாத தொன்றில்லை
இல்லடைந் தானுக் கிரப்பது தானில்லை
இல்லடைந் தானுக் கிமையவர் தாமொவ்வார்
இல்லடைந் தானுக்கு இல்லாதில் லானையே. 1417

ஆனை மயக்கும் அறுபத்து நாற்றறி
ஆனை யிருக்கும் அறுபத்து நாலொளி
ஆனை யிருக்கும் அறுபத்து நாலறை
ஆனையுங் கோடும் அறுபத்து நாலிலே. 1418

நான்காம் தந்திரம் முற்றிற்று

ஐந்தாம் தந்திரம்

சுத்த சைவம்

ஊரும் உலகமும் ஒக்கப் படைக்கின்ற
பேரறி வாளன் பெருமை குறித்திடின்
மேருவும் மூவுல காளி யிலங்கெழுந்
தாரணி நால்வகைச் சைவமு மாமே. 1419

சச்சும் மசத்துஞ் சதசத்துந் தான் கண்டு
சித்தும் அசித்துஞ் சேர்வுரு மேநீத்த
சுத்தம் அசுத்தமுந் தோய்வுரு மேநின்ற
நித்தம் பரஞ்சுத்த சைவர்க்கு நேயமே. 1420

கற்பன கற்றுக் கலைமன்னு மெய்யோகம்
முற்பத ஞான முறைமுறை நண்ணியே
தொற்பத மேவித் துரிசற்று மேலான
தற்பரங் கண்டுளோர் சைவசித் தாந்தரே. 1421

வேதாந்தஞ் சுத்தம் விளங்கிய சித்தாந்த
நாதாந்தங் கண்டோர் நடுக்கற்ற காட்சியர்
பூதாந்தம் போதாந்த மாகப் புனஞ்செய்ய
நாதாந்த பூரணர் ஞானநே யத்தரே. 1422

அசுத்த சைவம்

இணையார் திருவடி ஏத்துஞ் சீரங்கத்
திணையார் இணைக்குழை யீரணை முத்திரை
குணமார் இணைக்கண்ட மாலையுங் குன்று
தனைவாஞ் சரியை கிரியையி னார்க்கே. 1432

காதுப்பொ னூர்ந்த கடுக்கன் இரண்டுசேர்த்
தோதுந் திருமேனி யுட்கட் டிரண்டுஞ் சேர்
சோதனை செய்து வுபதேச மார்க்கராய்
ஓதி யிருப்பார் ஒருசைவ ராகுமே. 1424

கண்டங்கள் ஒன்பதுங் கண்டவர் கண்டனர்
கண்டங்கள் ஒன்பதுங் கண்டா யரும்பொருள்
கண்டங்கள் ஒன்பதுங் கண்டவர் கண்டமாங்
கண்டங்கள் கண்டோர் கடுஞ்சுத்த சைவரே. 1425

ஞானி புவியெழு நன்னூ லனைத்துடன்
மோன திசையும் முழுஎண்ணெண் சித்தியும்
ஏனை நிலமும் எழுதா மறையீறுங்
கோனொடு தன்னையுங் காணும் குணத்தரே. 1426

மார்க்க சைவம்

பொன்னுற் சிவசாத னம்பூதி சாதனம்
நன்மார்க்க சாதனம் மாஞான சாதனம்
துன்மார்க்க சாதனம் தோன்றாத சாதனம்
சன்மார்க்க சாதன மாஞ்சுத்த சைவர்க்கே. 1427

கேடறு ஞானி கிளர்ஞான பூபதி
பாடறு வேதாந்த சித்தாந்த பாகத்தின்
ஊடுறு ஞானோ தயனுண்மை முத்தியோன்
பாடுறு சுத்தசை வப்பத்த நித்தனே. 1428

ஆகமம் ஒன்பான் அதிலான நாலேழு
மோகமில் நாலேழு முப்பேத முற்றுடன்
வேகமில் வேதாந்த சித்தாந்த மெய்மையொன்
றாக முடிந்த அருஞ்சுத்த சைவமே. 1429

சுத்தம் அசுத்தந் துரியங்க ளோரேழும்
சத்தும் அசத்துந் தணந்த பராபரை
உத்த பராபரை யுள்ளாம் பராபரை
அத்தன் அருட்சத்தி யாயெங்கு மாமே. 1430

சத்தும் அசத்துந் தணந்தவர் தானுகிச்
சித்தும் அசித்துந் தெரியாச் சிவோகமாய்
முத்தியுள் ஆனந்த சத்தியுள் மூழ்கினுர்
சித்தியும் அங்கே சிறந்துளர் தானே. 1431

தன்னைப் பரனைச் சதாசிவன் என்கின்ற
மன்னைப் பதிபசு பாசத்தை மாசற்ற
முன்னைப் பழமல முன்கட்டை வீட்டினை
உன்னத் தகுஞ்சுத்த சைவர் உபாயமே. 1432

பூரணந் தன்னிலே வைத்தற்ற வப்போத
மாரண மந்த மதித்தானந் தத்தோடு
நேரென ஈராறு நீதி நெடும்போகம்
காரண மாஞ்சுத்த சைவர்க்குக் காட்சியே. 1433

மாருத ஞான மதிப்பற மாயோகம்
தேருது சிந்தையைத் தேற்றிச் சிவமாக்கிப்
பேருன பாவனை பேணி நெறிநிற்றல்
கூருகு ஞானி சரிதை குறிக்கிலே. 1434

வேதாந்தங் கண்டோர் பிரமவித் தியாதரர்
நாதாந்தங் கண்டோர் நடுக்கற்ற யோகிகள்
வேதாந்த மில்லாத சித்தாந்தங் கண்டுளோர்
சாதா ரணமன்ன சைவர் உபாயமே. 1435

விண்ணினைச் சென்றணு காவியன் மேகங்கள்
கண்ணினைச் சென்றணு காப்பல காட்சிகள்
எண்ணினைச் சென்றணு காம னெனப்படும்
அண்ணலைச் சென்றணு காபசு பாசமே. 1436

ஒன்றும் இரண்டும் இலதுமாய் ஒன்ருக
நின்று சமய நிராகார நீங்கியே
நின்று பராபரை நேயத்தைப் பாதத்தால்
சென்று சிவமாதல் சித்தாந்த சித்தியே. 1437

கடுஞ்சுத்த சைவம்

வேடங் கடந்து விகிர்தன்றன் பான்மேவி
ஆடம் பரமின்றி ஆசாபா சஞ்செற்றுப்
பாடொன்று பாசம் பசுத்துவம் பாழ்படச்
சாடுஞ் சிவபோ தகர்சுத்த சைவரே. 1438

உடலான ஐந்தையும் ஓராறும் ஐந்தும்
மடலான மாமாயை மற்றுள்ள நீவப்
படலான கேவல பாசந் துடைத்துத்
திடமாய்த் தனையுறல் சித்தாந்த மார்க்கமே. 1439

சுத்தச் சிவனுரை தானதில் தோயாமல்
முத்தர் பதப்பொருள் முத்திவித் தாமூலம்
அத்தகை யான்மா அரனை அடைந்தத்தால்
சுத்த சிவமாவ ரேசுத்த சைவரே. 1440

நானென்றுந் தானென்றும் நாடிநான் சாரவே
தானென்று நானென் றிரண்டிலாத் தற்பதம்
தானென்று நானென்ற தத்துவம் நல்கலால்
தானென்று நானென்றுஞ் சாற்றகில் லேனே. 1441

சாற்றரி தாகிய தத்துவஞ் சித்தித்தால்
ஆற்றரி தாகிய ஐந்தும் அடங்கிடும்
மேற்றிகழ் ஞானம் விளக்கொளி யாய்நிற்கும்
பாற்பர சாயுச்சிய மாகும் பதியே. 1442

சரியை

நேர்ந்திடு மூல சரியை நெறியிதென்
றுய்ந்திடுங் காலங்கி கஞ்ச மலையமான்
ஓர்ந்திடுங் கந்துரு கேண்மின்கள் பூதலத்
தோர்ந்திடுஞ் சுத்த சைவத் துயிரதே. 1443

உயிர்க்குயி ராய்நிற்றல் ஒண்ஞான பூசை
உயிர்க்கொளி நோக்கல் மகாயோக பூசை
உயிர்ப்பெறு மாவா கனம்புறப் பூசை
செயிற்கடை நேசஞ் சிவபூசை யாமே. 1444

நாடும் நகரமும் நற்றிருக் கோயிலும்
தேடித் திரிந்து சிவபெரு மானென்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாய்க் கொள்வனே. 1445

பத்தர் சரிதை படுவோர் கிரியையோர்
அத்தகு தொண்ட ருள்வேடத் தாகுவோர்
சுத்த இயமாதி சாதகர் தூயோகர்
சித்தர் சிவஞானஞ் சென்றெய்து வோர்களே. 1446

சார்ந்தமெய்ஞ் ஞானத்தோர் தானவ னுயினோர்
சேர்ந்தவெண் யோகத்தர் சித்தர் சமாதியோர்
ஆய்ந்த கிரியையோர் அருச்சனை தப்பாதோர்
நேர்ந்த சரியையோர் நீள்நிலத் தோரே. 1447

கிரியை யோகங்கள் கிளர்ஞான பூசை
அரிய சிவனுரு அமரும் அரூபம்
தெரியும் பருவத்துத் தேர்ந்திடும் பூசை
உரியன நேயத் துயர்பூசை யாமே. 1448

சரியாதி நான்குந் தருஞானம் நான்கும்
விரிவான வேதாந்த சித்தாந்தம் ஆறும்
பொருளா னதுநந்தி பொன்னகர் போந்து
மருளாகு மாந்தர் வணங்கவைத் தானே. 1449

சமையம் பலசுத்தித் தன்செயல் அற்றிடும்
அமையும் விசேடமும் அரன்மந் திரசுத்தி
சமைய நிருவாணங் கலாசுத்தி யாகும்
அமைமன்னு ஞானமார்க் கம்அபி டேகமே. 1450

கிரியை

பத்துத் திசையும் பரமொரு தெய்வமுண்
டெத்திக்கி லவரில்லை என்ப தின்மலர்க்
கொத்துத் திருவடி நீழல் சரணெனத்
தத்தும் வினைக்கடல் சாராது காணுமே. 1451

கானுறு கோடி கடிகமழ் சந்தனம்
வானுறு மரமல ரிட்டு வணங்கினும்
ஊனினை நீக்கி உணர்பவர்க் கல்லது
தேனமர் பூங்கழல் சேரவொண் ணாதே. 1452

கோனக்கன் றாயே குரைகழல் ஏத்துமின்
ஞானக்கன் றாகிய நடுவே யுழிதரும்
வானக்கன் றாகிய வானவர் கைதொழும்
மானக்கன் றீசன் அருள்வள்ள மாமே. 1453

இதுபணிந் தெண்டிசை மண்டல மெல்லாம்
அதுபணி செய்கின் றவளொரு கூறன்
இதுபணி மானுடர் செய்பணி யீசன்
பதிபணி செய்வது பத்திமை காணே. 1454

பத்தன் கிரியை சரியை பயில்வுற்றுச்
சுத்த அருளால் துரிசற்ற யோகத்தில்
உய்த்த நெறியுற் றுணர்கின்ற ஞானத்தால்
சித்தங் குருவரு ளாற்சிவ மாகுமே. 1455

அன்பின் உருகுவன் நாளும் பணிசெய்வன்
செம்பொன்செய் மேனி கமலத் திருவடி
முன்புநின் றங்கே மொழிவ தெனக்கருள்
என்பினுட் சோதி இலங்குகின் றனே. 1456

யோகம்

நெறிவழி யேசென்று நேர்மையுள் ஒன்றித்
தறியிருந் தாற்போல் தம்மை யிருத்திச்
சொறியினுந் தாக்கினுந் துண்ணென் றுணராக்
குறியறி வாளர்க்குக் கூடலு மாமே. 1457

ஊழிதோ றூழி உணர்ந்தவர்க் கல்லது
ஊழிதோ றூழி உணரவுந் தானொட்டான்
ஆழி அமரும் அரியயன் என்றுளார்
ஊழி முயன்றும் ஒருச்சியு ளானே. 1458

பூவினிற் கந்தம் பொருந்திய வாறுபோற்
சீவனுக் குள்ளே சிவமணம் பூத்தது
ஓவியம் போல உணர்ந்தறி வாளர்க்கு
நாவி யணைந்த நடுதறி யாமே. 1459

உய்ந்தனம் என்பீர் உறுபொருள் காண்கிலீர்
கந்த மலரிற் கலக்கின்ற நந்தியைச்
சிந்தை யுறவே தெளிந்திருள் நீங்கினல்
முந்தைப் பிறவிக்கு மூலவித் தாமே. 1460

எழுத்தொடு பாடலும் எண்ணெண் கலையும்
பழித்தலைப் பாசப் பிறவியும் நீங்கா
வழித்தலைச் சோமனொ டங்கி யருக்கன்
வழித்தலைச் செய்யும் வகையுணர்ந் தேனே. 1461

விரும்பிநின் றேசெய்யில் மெய்த்தவ ராகும்
விரும்பிநின் றேசெய்யின் மெய்யுரை யாகும்
விரும்பிநின் றேசெய்யின் மெய்த்தவ மாகும்
விரும்பிநின் றேசெய்யில் விண்ணவ னாகுமே. 1462

பேணிற் பிறவா உலகருள் செய்திடுங்
காணில் தனது கலவியு ளேநிற்கும்
நாணில் நரக நெறிக்கே வழிசெய்யும்
ஊனில் சுடுமங்கி உத்தமன் தானே. 1463

ஒத்தசெங் கோலார் உலப்பிலி மாதவர்
எத்தனை யாயிரம் வீழ்ந்தனர் எண்ணிலி
சித்தர்கள் தேவர்கள் மூவர் பெருமையாம்
அத்தனை இவனென்றே அன்புறு வார்களே. 1464

யோகிக்கு யோகாதி மூன்றுள தொண்டுற்றோர்
ஆகத் தகுகிரி யாதி சரியையாம்
தாகத்தை விட்ட சரியையொன் றுமொன்றுள்
ஆதித்தன் பத்தியுள் அன்புவைத் தேனே. 1465

யோகச் சமயமே யோகம் பலவுன்னல்
யோக விசேடமே அட்டாங்க யோகமாம்
யோகநிர் வாணமே யுற்ற பரோதயம்
யோக அபிடேகமே ஒண்சித்தி யுற்றலே. 1466

ஞானம்

ஞானத்தின் மிக்க அறநெறி நாட்டில்லை
ஞானத்தின் மிக்க சமயமும் நன்றன்று
ஞானத்தின் மிக்கவை நன்முத்தி நல்காவாம்
ஞானத்தின் மிக்கார் நரரின்மிக் காரே. 1467

சத்தமுஞ் சத்த மனனுந் தகுமனம்
உய்த்த வுணர்வு உணர்த்தும் அகந்தையும்
சித்தமென் றிம்முன்றுஞ் சிந்திக்குஞ் செய்கையும்
சத்தங் கடந்தவர் பெற்றசன் மார்க்கமே. 1468

தன்பால் உலகுந் தனக்கரு காவதும்
அன்பா லெனக்கரு ளாவது மாவன
என்பார்கள் ஞானமும் எய்துஞ் சிவோகமும்
பின்பாலின் நேயமும் பெற்றிடுந் தானே. 1469

இருக்குஞ் சேம இடம்பிரம மாகும்
வருக்கஞ் சராசர மாகும் உலகம்
தருக்கிய ஆசார மெல்லாந் தருமே
திருக்கிலா ஞானத்தைத் தேர்ந்துணர்ந்
தோர்க்கே. 1470

அறிவும் அடக்கமும் அன்பும் உடனே
பிறியா நகர்மன்னும் பேரரு ளாளன்
குறியுங் குணமுங் குரைகழல் நீங்கா
நெறியறி வார்க்கிது நீர்த்தொனி யாமே. 1471

ஞானம் விளைந்தெழு கின்றதோர் சிந்தையுள்
ஏனம் விளைந்தெதி ரேகாண் வழிதொறுங்
கூனல் மதிமண் டலத்தெதிர் நீர்கண்டு
ஊனம் அறுத்துநின் றொண்சுட ராகுமே. 1472

ஞானிக் குடன்குண ஞானத்தில் நான்குமாம்
மோனிக் கிவையொன்றுங் கூடாமு ன மோகிந்து
மேனிற்ற லாஞ்சத்தி வித்தை விளைத்திடுந்
தானிக் குலத்தோர் சரியை கிரியையே. 1473

ஞானத்தின் ஞானதி நான்குமா ஞானிக்த
ஞானத்தின் ஞானமே நானென தென்றுமல்
ஞானத்தில் யோகமே நாதாந்த நல்லொளி
ஞானக் கிரியையே நன்முத்தி நாடலே. 1474

நண்ணிய ஞானத்தின் ஞானதி நண்ணுவோன்
புண்ணிய பாவங் கடந்த பிணக்கற்றோன்
கண்ணிய ஞானங் கரைஞானங் கண்டுளோன்
திண்ணிய சுத்தன் சிவமுத்தன் சித்தனே. 1475

ஞானச் சமயமே நாடுந் தனைக்காண்டல்
ஞான விசேடமே நாடு பரோதயம்
ஞானநிர் வாணமே நன்றறி வான நள்
ஞானபி டேகமே நற்குரு பாதமே. 1476

சன்மார்க்கம்

சாற்றுஞ்சன் மார்க்கமாந் தற்சிவ தத்துவத்
தோற்றங்க ளான சுருதிச் சுடர்கண்டு
சீற்றம் ஒழிந்து சிவயோக சித்தராய்க்
கூற்றத்தை வென்றார் குறிப்பறிந் தார்களே. 1477

சைவப் பெருமைத் தனிநா யகன்நந்தி
உய்ய வகுத்த குருநெறி ஒன்றுண்டு
தெய்வச் சிவநெறி சன்மார்க்கஞ் சேர்ந்துய்ய
வையத்து ளார்க்கு வகுத்துரைத் தானே. 1478

தெரிசிக்கப் பூசிக்கச் சிந்தனை செய்யப்
பரிசிக்கக் கீர்த்திக்கப் பாதுகஞ் சூடக்
குருபத்தி செய்யுங் குவலயத் தோர்க்குத்
தருமுத்திச் சார்பூட்டுஞ் சன்மார்க்கந் தானே. 1479

தெளிவறி யாதார் சிவனை யறியார்
தெளிவறி யாதார் சீவனு மாகார்
தெளிவறி யாதார் சிவமாக மாட்டார்
தெளிவறி யாதவர் தீரார் பிறப்பே. 1480

தானவ னாகித் தானைந்தா மலஞ்செற்று
மோனம தாமொழிப் பான்முத்த ராவதும்
ஈனமில் ஞானனு பூதியில் இன்பமுந்
தானவ னுயுற லானசன் மார்க்கமே. 1481

சன்மார்க்கத் தார்க்கு முகத்தொடு பீடமுஞ்
சன்மார்க்கத் தார்க்கும் இடத்தொடு தெய்வமுஞ்
சன்மார்க்கத் தார்க்கு வருக்கந் தரிசனம்
எம்மார்க்கத் தார்க்கும் இயம்புவன் கேண்மினே. 1482

சன்மார்க்க சாதனந் தான்ஞான ஞேயமாம்
பின்மார்க்க சாதனம் பேதையர்க் காய்நிற்கும்
துன்மார்க்கம் விட்ட துரியத் துரிசற்றோர்
சன்மார்க்கந் தானவ னாகுஞ்சன் மார்க்கமே. 1483

சன்மார்க்க மெய்த வருமருஞ் சீடர்க்குப்
பின்மார்க்க மூன்றும் பெறவியல் பாமென்றால்
நன்மார்க்கந் தானே சிவனொடு நாடலே
சொன்மார்க்க மென்னச் சுருதிகைக் கொள்ளுமே. 1484

அன்னிய பாசமும் ஆகுங் கருமமும்
முன்னும் அவத்தையும் மூலப் பகுதியும்
பின்னிய ஞானமும் பேதாதி பேதமுந்
தன்னொடுங் கண்டவர் சன்மார்க்கத் தோரே. 1485

பசுபாச நீக்கிப் பதியுடன் கூட்டிக்
கசியாத நெஞ்சங் கசியக் கசிவித்
தொசியாத வுண்மைச் சொரூபோ தயத்துற்
றசைவான தில்லாமை யானசன் மார்க்கமே. 1486

மார்க்கஞ்சன் மார்க்கிகள் கிட்ட வருப்பது
மார்க்கஞ்சன் மார்க்கமே யன்றிமற் ரொன்றில்லை
மார்க்கஞ்சன் மார்க்க மெனுநெறி வைகாதோர்
மார்க்கஞ்சன் மார்க்க மாஞ்சித்த யோகமே. 1487

சகமார்க்கம்

சன்மார்க்கந் தானே சகமார்க்க மானது
மன்மார்க்க மாமுத்தி சித்திக்குள் வைப்பதாம்
பின்மார்க்க மானது பேராப் பிறந்திறந்
துன்மார்க்க ஞானத்து உறுதியும் ஆமே. 1488

மருவுந் துவாதச மார்க்கமில் லாதார்
குருவுஞ் சிவனுஞ் சமயமுங் கூடார்
வெருவுந் திருமகள் வீட்டில்லை யாகும்
உருவுங் கிளையும் ஒருங்கிழப் பாரே. 1489

யோகச் சமாதியின் உள்ளே யகலிடம்
யோகச் சமாதியின் உள்ளே யுளரொளி
யோகச் சமாதியின் உள்ளே யுளசத்தி
யோகச் சமாதி யுகந்தவர் சித்தரே. 1490

யோகமும் போகமும் யோகியர்க் காகுமால்
யோகஞ் சிவரூபம் உற்றிடும் உள்ளத்தோர்
போகம் புவியிற் புருடார்த்த சித்திய
தாகும் இரண்டும் அழியாத யோகிக்கே. 1491

ஆதார சோதனை யாறுடி சுத்திகள்
மேதாதி யீரெண் கலந்தது விண்ணொளி
போதா லயத்துப் புலன்கர ணம்புந்தி
சாதா ரணங்கெட லாஞ்சக மார்க்கமே. 1492

பிணங்கிநிற் கின்றவை ஐந்தையும் பின்னை
அணங்கி யெறிவ னயிர்மன வாளாற்
கணம்பதி னெட்டுங் கருதும் ஒருவன்
வணங்கவல் லான்சிந்தை வந்துநின் றானே. 1493

வளங்கனி யொக்கும் வளநிறத் தார்க்கும்
வளங்கனி யொப்பதோர் வாய்மைய னாகும்
உளங்கனிந் துள்ள முகந்திருப் பார்க்குப்
பழங்கனிந் துள்ளே பகுந்துநின் றானே. 1494

சற்புத்திர மார்க்கம்

மேவிய சற்புத்திர மார்க்க மெய்த்தொழில்
தாவிப்ப தாஞ்சக மார்க்கஞ் சகத்தொழில்
ஆவ திரண்டும் அகன்று சகமார்க்கத்
தேவியோ டொன்றல் சன்மார்க்கத் தெளிவதே. 1495

பூசித்தல் வாசித்தல் போற்றல் செபித்திடல்
ஆசற்ற நற்றவம் வாய்மை அழுக்கின்மை
நேசித்திட் டன்னமும் நீசுத்தி செய்தன்மற்
றாசற்ற சற்புத் திரமார்க்க மாகுமே. 1496

அறுகாற் பறவை அலர்தேர்ந் துழலும்
மறுகா நரையன்னந் தாமரை நீலம்
குறுகா நறுமலர் கொய்வன கண்டுஞ்
சிறுகால் அறநெறி சேரகி லாரே. 1497

அருங்கரை யாவது அவ்வடி நீழற்
பெருங்கரை யாவது பிஞ்ஞக னாணை
வருங்கரை யேகின்ற மன்னுயிர்க் கெல்லாம்
ஒருங்கரை யாயுல கேழினொத் தானே. 1498

உயர்ந்தும் பணிந்தும் முகந்துந் தழுவி
வியந்தும் அரனடிக் கேமுறை செய்மின்
புயந்தும் பிறவிப் பயனது வாகும்
பயந்து பரிக்கிலப் பான்மைய னாமே. 1499

நின்று தொழுவன் கிடந்தெம் பிரான்தன்னை
என்றுந் தொழுவன் எழிற்பரஞ் சோதியைத்
துன்று மலர்தூவித் தொழுமின் தொழுந்தொறுஞ்
சென்று வெளிப்படுந் தேவர் பிரானே. 1500

திருமன்னுஞ் சற்புத்திர மார்க்கச் சரியை
உருமன்னி வாழும் உலகத்தீர் கேண்மின்
கருமன்னு பாசங் கைகூம்பத் தொழுது
இருமன்னு நாடோறும் இன்புற் றிருந்தே. 1501

தாசமார்க்கம்

எளியனல் தீப மிடல்மலர் கொய்தல்
அளிதின் மெழுகல் அதுதூர்த்தல் வாழ்த்தல்
பளிமணி பற்றல் பன்மஞ் சனமாதி
தளிதொழில் செய்வது தான்தாச மார்க்கமே. 1502

அதுவிது வாதிப் பரமென் றகல்வர்
இதுவழி யென்றங் கிறைஞ்சின ரில்லை
விதிவழி யேசென்று வேந்தனை நாடும்
அதுவிது நெஞ்சில் தணிக்கின்ற வாறே. 1503

அந்திப்பன் திங்கள் அதன்பின்பு ஞாயிறு
சிந்திப்பன் என்றும் ஒருவனை செறிகழல்
வந்திப்பன் வானவர் தேவனை நாடோறும்
வந்திப்ப தெல்லாம் வகையின் முடிந்ததே. 1504

அண்ணலை வானவர் ஆயிரம் பேர்சொல்லி
உன்னுவர் உள்மகிழ்ந் துண்ணின் றடிதொழக்
கண்ணவ னென்று கருது மவர்கட்குப்
பண்ணவன் பேரன்பு பற்றிநின் றானே. 1505

வாசித்தும் பூசித்தும் மாமலர் கொய்திட்டும்
பாசிக் குளத்தில்வீழ் கல்லா மனம்பார்க்கின்
மாசற்ற சோதி மணிமிடற் றண்ணலை
நேசத் திருந்த நினைவறி யாரே. 1506

சாலோகம்

சாலோக மாதி சரியாதி யிற்பெறுஞ்
சாலோகஞ் சாமீபந் தங்குஞ் சரியையாம்
மாலோகஞ் சேரில் வழியாகுஞ் சாரூபம்
பாலோகம் இல்லாப் பரனுரு வாமே. 1507

சமயங் கிரியையிற் றன்மனங் கோயில்
சமய மனுமுறை தானே விசேடஞ்
சமயத்து மூலந் தனைத்தேறன் மூன்றுஞ்
சமயாபி டேகந் தானுஞ் சமாதியே. 1508

சாமீபம்

பாசம் பசுவான தாகும்இச் சாலோகம்
பாச மருளான தாகும்இச் சாமீபம்
பாசஞ் சிவமான தாகும்இச் சாரூபம்
பாசங் கரைபதி சாயுச் சியமே. 1509

சாரூபம்

தங்கிய சாரூபந் தானெட்டாம் யோகமாந்
தங்குஞ் சன்மார்க்கந் தனிலன்றிக் கைகூடா
அங்கத் துடல்சித்தி சாதன ராகுவர்
இங்கிவ ராக விழிவற்ற யோகமே 1510

சயிலலோ கத்தினைச் சார்ந்த பொழுதே
சயிலம தாகுஞ் சராசரம் போலப்
பயிலுங் குருவின் பதிபுக்க போதே
கயிலை இறைவன் கதிர்வடி வாமே. 1511

சாயுச்சியம்

சைவஞ் சிவனுடன் சம்பந்த மாகுதல்
சைவந் தனையறிந் தேசிவஞ் சாருதல்
சைவஞ் சிவந்தன்னைச் சாராமல் நீங்குதற்
சைவஞ் சிவானந்தஞ் சாயுச் சியமே. 1512

சாயுச் சியஞ்சாக் கிராதீதஞ் சாருதல்
சாயுச் சியமுப சாந்தத்துத் தங்குதற்
சாயுச் சியஞ்சிவ மாதல் முடிவிலாச்
சாயுச் சியமனத் தானந்த சத்தியே. 1513

சத்திநிபாதம்-மந்தம்

இருட்டறை மூலை யிருந்த குமரி
குருட்டுக் கிழவனைக் கூடல் குறித்துக்
குருட்டினை நீக்கிக் குணம்பல காட்டி
மருட்டி யவனை மணம்புரிந் தாளே. 1514

தீம்புல னான திசையது சிந்திக்கில்
ஆம்புல னாயறி வார்க்கமு தாய்நிற்குந்
தேம்புல னான தெளிவறி வார்கட்குக்
கோம்புல னாடிய கொல்லையு மாமே. 1515

இருள்நீக்கி யெண்ணில் பிறவி கடத்தி
அருள்நீங்கா வண்ணமே யாதி யருளும்
மருள் நீங்கா வானவர் கோனொடுங் கூடிப்
பொருள்நீங்கா இன்பப் புலம்பயின் றானே. 1516

இருள்சூ ழறையில் இருந்தது நாடில்
பொருள்சூழ் விளக்கது புக்கெரிந் தாற்போல்
மருள்சூழ் மயக்கத்து மாமலர் நந்தி
அருள்சூழ் இறைவனும் அம்மையு மாமே, 1517

மறைந்துறரம்

மருட்டிப் புணர்ந்து மயக்கமும் நீக்கி
வெருட்டி வினையறுத் தின்பம் விளைத்துக்
குருட்டினை நீக்கிக் குணம்பல காட்டி
அருட்டிகழ் ஞான மதுபுரிந் தானே. 1518

கன்னித் துறைபடிந் தாடிய வாடவர்
கன்னித் துறைபடிந் தாடுங் கருத்திலர்
கன்னித் துறைபடிந் தாடுங் கருத்துண்டேற்
பின்னைப் பிறவி பிறிதில்லை தானே. 1519

செய்யன் கரியன் வெளியன்நற் பச்சையன்
எய்த வுணர்ந்தவர் எய்யலர் இறைவனை
மைவென் றகன்ற பகடுரி போர்த்தவெங்
கைய னிவனென்று காதல்செய் வீரே. 1520

எய்திய காலங்கள் எத்தனை யாயினுந்
தையலுந் தானுந் தனிநா யகமென்பர்
வைகலுந் தன்னை வணங்கு மவர்கட்குக்
கைமிற் கருமஞ்செய் காட்டது வாமே. 1521

கண்டுகொண் டோமிரண் டுந்தொடர்ந் தாங்கொளி
பண்டுபண் டோயும் பரமன் பரஞ்சுடர்
வண்டுகொண் டாடு மலர்வார் சடையண்ணல்
நின்றுகண் டார்க்கிருள் நீக்கிநின் றானே. 1522

தீவிரம்

அண்ணிக்கும் பெண்பிள்ளை அப்பனார்தோட்டத்தில்
எண்ணிக்கும் ஏழேழ் பிறவி யுணர்விக்கும்
உண்ணிற்ப தெல்லாம் ஒழிய முதல்வனைக்
கண்ணுற்று நின்றக் கனியது வாகுமே. 1523

பிறப்பை யறுக்கும் பெருந்தவம் நல்கும்
மறப்பை யறுக்கும் வழிபட வைக்கும்
குறப்பெண் குவிமுலை கோமள வல்லி
சிறப்பொடு பூசனை செய்யநின் றார்க்கே. 1524

தாங்குமின் எட்டுத் திசைக்குந் தலைமகன்
பூங்கமழ் கோதைப் புரிகுழ லாளொடும்
ஆங்கது சேரும் அறிவுடை யார்கட்குத்
தூங்கொளி நீலந் தொடர்தலு மாமே. 1525

நணுகினு ஞானக் கொழுந்தொன்று நல்கும்
பணிகினும் பன்மலர் தூவிப் பணிவன்
அணுகிய தொன்றறி யாத வொருவன்
அணுகும் உலகெங்கு மாவியு மாமே. 1226

தீவிரதரம்

இருவினை நேரொப்பில் இன்னருட் சத்தி
குருவென வந்து குணம்பல நீக்கித்
தருமென ஞானத்தால் தன்செய லற்றால்
திரிமலந் தீர்ந்து சிவனவ னாமே. 1527

இரவும் பகலும் இலாத இடத்தே
குரவஞ் செய்கின்ற குழலியை உன்னி
அரவஞ்செய் யாமல் அவளுடன் சேரப்
பரிவொன்றி வாழும் பராபரை தானே. 1528

மாலை விளக்கும் மதியமும் ஞாயிறும்
சால விளக்குந் தனிச்சுடர் அண்ணலுள்
ஞானம் விளக்கிய நாதன்என் உள்புகுந்
தூனை விளக்கி யுடனிருந் தானே. 1529

புறச்சமய தூஷணம்

ஆயத்துள் நின்ற அறுசம யங்களுங்
காயத்துள் நின்ற கடவுளைக் காண்கிலா
மாயக் குழியில் விழுவர் மனைமக்கள்
பாசத்தில் உற்றுப் பதைக்கின்ற வாறே. 1530

உள்ளத்து ளேதான் கரந்தெங்கும் நின்றவன்
வள்ளல் தலைமகன் மலருறை மாதவன்
பொள்ளற் குரம்பைப் புகுந்து புறப்படுங்
கள்ளத் தலைவன் கருத்தறி யார்களே. 1531

உள்ளத்தும் உள்ளன் புறத்துள்ளன் என்பவர்க்
குள்ளத்தும் உள்ளன் புறத்துள்ளன் எம்மிறை
உள்ளத்தும் இல்லை புறத்தில்லை என்பவர்க்
குள்ளத்தும் இல்லை புறத்தில்லை தானே. 1532

ஆறு சமயமுங் கண்டவர் கண்டிலர்
ஆறு சமயப் பொருளும் அவனலன்
தேறுமின் தேறித் தெளிமின் தெளிந்தபின்
மாறுதல் இன்றி மனைபுக லாமே. 1533

சிவமல்ல தில்லை யறையே சிவமாந்
தவமல்ல தில்லை தலைப்படு வார்க்கிங்
கவமல்ல தில்லை அறுசம யங்கள்
தவம்வல்ல நந்திதாள் சார்ந்துய்யு நீரே. 1534

அண்ணலை நாடிய ஆறு சமயமும்
விண்ணவ ராக மிகவும் விரும்பியே
முண்ணின் றழியு முயன்றில ராதலான்
மண்ணின் றொழியும் வகையறி யார்களே. 1535

சிவகதி யேகதி மற்றுள்ள எல்லாம்
பவகதி பாசப் பிறவியொன் றுண்டு
தவகதி தன்னொடு நேரொன்று தோன்றில்
அவகதி மூவரும் அவ்வகை யாமே. 1536

நூறு சமயம் உளவா நுவலுங்கால்
ஆறு சமயமவ் வாறுட் படுவன
கூறு சமயங்கள் கொண்ட நெறிநில்லா
வீறு பரநெறி யில்லா நெறியன்றே, 1537

கத்துங் கழுதைகள் போலுங் கலதிகள்
சுத்த சிவனெங்குந் தோய்வுற்று நிற்கின்றான்
குத்தந் தெரியார் குணங்கொண்டு கோதாட்டிப்
பித்தேறி நாளும் பிறந்திறப் பாரே. 1538

மயங்குகின் றாரு மதிதெளிந் தாரும்
முயங்கி யிருவினை முழைமுகப் பாய்ச்சி
இயங்கிப் பெறுவரே லீறது காட்டில்
பயங்கெட் டவர்க்கோர் பரநெறி யாமே. 1539

சேயன் அணியன் பிணியிலன் பேர்நந்தி
தூயன் துளக்கற நோக்கவல் லார்கட்கு
மாயன் மயங்கிய மானுட ராமவர்
காயம் விளக்குங் கருத்தறி யார்களே. 1540

வழியிரண் டுக்குமோர் வித்தது வான
பழியது பார்மிசை வாழ்தல் உறுதல்
சுழியறி வாளன்றன் சொல்வழி முன்னின்
றழிவறி வார்நெறி நாடநில் லாரே. 1541

மாதவர் எல்லாம் மாதேவன் பிரான்என்பர்
நாதம தாக அறியப் படுநந்தி
பேதஞ்செய் யாதே பிரானைஎன் றுகைதொழில்
ஆதியும் அந்நெறி யாகிநின் றானே, 1542

அரனெறி யப்பனை யாதிப் பிரானை
உரநெறி யாகி யுளம்புகுந் தானைப்
பரநெறி தேடிய பத்தர்கள் சித்தம்
பரனறி யாவிடிற் பல்வகைத் தூரமே. 1543

பரிசற வானவன் பண்பன் பகலோன்
பெரிசறி வானவர் பேற்றில் திகழுந்
துரிசற நீநினை தூய்மணி வண்ணன்
அரிதவன் வைத்த அறநெறி தானே. 1544

ஆன சமயம் அதுஇது நன்றெனும்
மாய மனிதர் மயக்க மதுபொழி
கானங் கடந்த கடவுளை நாடுமின்
ஊனங் கடந்த வுருவது வாமே. 1545

அந்நெறி நாடி அமரர் முனிவருஞ்
சென்னெறி கண்டார் சிவனெனப் பெற்றார்பின்
முன்னெறி நாடி முதல்வன் அருளிலார்
சென்னெறி செல்லார் திகைக்கின்ற வாறே. 1546

உறுமா றறிவதும் உள்நின்ற சோதி
பெறுமா றறியிற் பிணக்கொன்றும் இல்லை
அறுமா றதுவான வங்கியு ளாங்கே
இறுமா றறிகிலர் ஏழைகள் தாமே. 1547

வழிநடக் கும்பரி சொன்றுண்டு வையங்
கழிநடக் குண்டவர் கற்பனை கேட்பர்
சுழிநடக் குந்துய ரம்மது நீக்கிப்
பழிநடப் பார்க்குப் பரவலு மாமே. 1548

வழிசென்ற மாதவம் வைகின்ற போது
பழிசெல்லும் வல்வினைப் பற்றறுத் தாங்கே
வழிசெல்லும் வல்வினை யார்திறம் விட்டிட்
டுழிசெல்லில் உம்பர் தலைவன்முன் னாமே. 1549

நிராகாரம்

இமையங்க ளாய்நின்ற தேவர்கள் ஆறு
சமையங்கள் பெற்றனர் சாத்திரம் ஓதி
அமையறிந் தோமென்ப ராதிப் பிரானுங்
கமையறிந் தாருட் கலந்துநின் றானே. 1550

பாங்கமர் கொன்றைப் படர்சடை யானடி
தாங்கு மனிதர் தரணியில் நேரொப்பர்
நீங்கிய வண்ணம் நினைவுசெய் யாதவர்
ஏங்கி உலகில் இருந்தழு வாரே. 1551

இருந்தழு வாரும் இயல்புகெட் டாரும்
அருந்தவ மேற்கொண்டங் கண்ணலை எண்ணரில்
வருந்தா வகைசெய்து வானவர் கோனும்
பெருந்தன்மை நல்கும் பிறப்பில்லை தானே. 1552

தூரறி வாளர் துணைவர் நினைப்பிலர்
பாரறி வாளர் படுபயன் றுண்பர்
காரறி வாளர் கலந்து பிறப்பர்கள்
நீரறி வார்நெடு மாமுகி லாமே. 1553

அறிவுடன் கூடி அழைத்ததோர் தோணி
பறியுடன் பாரம் பழம்பதி சிந்துங்
குறியது கண்டுங் கொடுவினை யாளர்
செறிய நினைக்கிலர் சேவடி தானே. 1554

மன்னும் ஒருவன் மருவு மனோமயன்
என்னின் மனிதர் இகழ்வரிவ் வேழைகள்
துன்னி மனமே தொழுமின் துணையிலி
தன்னையும் அங்கே தலைப்பட லாமே, 1555

ஓங்காரத் துள்ளொளி உள்ளே உதயமுற்
றுங்கார மற்ற அனுபவங் கைகூடார்
சாங்கால முன்னூர் பிறவாமை சார்வுறூர்
நீங்காச் சமயத்துள் நின்றொழிந் தார்களே. 1556

உட்சமயம்

இமையவர் தம்மையும் எம்மையும் முன்னம்
அமைய வகுத்தவன் ஆதி புராணன்
சமையங்க ளாறுந்தன் தாளிணை நாட
அமையங் குழல்கின்ற ஆதிப் பிரானே. 1557

ஒன்றது பேரூர் வழியா றதற்குள
என்றது போல இருமுச் சமயமும்
நன்றிது தீதிது என்றுரை யாளர்கள்
குன்று குரைத்தெழு நாயையொத் தார்களே. 1558

சைவப் பெருமைத் தனிநா யகன்தன்னை
உய்ய வுயிர்க்கின்ற ஒண்சுடர் நந்தியை
மெய்ய பெருமையர்க் கன்பனை இன்பஞ்செய்
வையத் தலைவனை வந்தடைந் துய்மினே. 1559

சிவனவன் வைத்ததோர் தெய்வ நெறியிற்
பவனவன் வைத்த பழவழி நாடி
இவனவன் என்ப தறியவல் லார்கட்
கவனவ னங்குள தாங்கட னாமே. 1560

ஆமா றுரைக்கும் அறுசம யாதிக்குப்
போமாறு தானில்லை புண்ணிய மல்லதங்
காமாம் வழியாக்கும் அவ்வே றுயிர்கட்கும்
போமாறவ் வாதாரப் பூங்கொடி யாளே. 1561

அரனெறி யாவ தறிந்தேனும் நானுஞ்
சிரநெறி தேடித் திரிந்தஅந் நாளும்
உரநெறி யுள்ளக் கடல்கடந் தேறுந்
தரநெறி நின்ற தனிச்சுடர் தானே. 1562

தேர்ந்த அரனை அடைந்த சிவநெறி
பேர்ந்தவர் உன்னிப் பெயர்ந்த பெருவழி
ஆர்ந்தவர் அண்டத்துப் புக்க அருள்நெறி
போந்து புனைந்து புணர்நெறி யாமே. 1563

ஈரு மனத்தை யிரண்டற வீசுமின்
ஊருஞ் சகாரத்தை ஓதுமின் ஓதியே
வாரு மரனெறி மன்னியே முன்னியத்
தூருஞ் சுடரொளி தோன்றலு மாமே. 1564

மினற்குறி யாளனை வேதியர் வேதத்
தனற்குறி யாளனை ஆதிப் பிரான்தன்னை
நினைக்குறி யாளனை ஞானக் கொழுந்தின்
நயக்குறி காணில் அரனெறி யாமே. 1565

ஆய்ந்துண ரார்களின் ஆன்மாச் சதுர்பல
வாய்ந்துண ராவகை நின்ற அரனெறி
பாய்ந்துணர் வார்அரன் சேவடி கைதொழு
தேர்ந்துணர் செய்யவோர் இன்பமு மாமே. 1566

சைவ சமயத் தனிநா யகன்நந்தி
உய்ய வகுத்த குருநெறி ஒன்றுண்டு
தெய்வச் சிவநெறி சன்மார்க்கஞ் சேர்ந்துய்ய
வையத்து ளார்க்கு வகுத்துவைத் தானே. 1567

இத்தவம் அத்தவம் என்றிரு பேரிடும்
பித்தரைக் காணின் நகுமெங்கள் பேர்நந்தி
எத்தவ மாகிலென் எங்குப் பிறக்கிலென்
ஒத்துணர் வார்க்கொல்லை யூர்புக லாமே. 1568

ஆமே பிரான்முகம் ஐந்தொடு மாருயிர்
ஆமே பிரானுக் கதோமுக மாறுள
தாமே பிரானுக்குந் தன்சிர மாலைக்கும்
நாமே பிரானுக்கு நரரியல் பாமே. 1569

ஆதிப் பிரானுல கேழும் அளந்தவன்
ஓதக் கடலும் உயிர்களு மாய்நிற்கும்
பேதிப் பிலாமையின் நின்ற பராசத்தி
ஆதிக்கட் டெய்வமும் அந்தமு மாமே. 1570

ஆய்ந்தறி வார்கள் அமரர்வித் தியாதரர்
ஆய்ந்தறி யாவண்ணம் நின்ற அரனெறி
ஆய்ந்தறிந் தேனவன் சேவடி கைதொழ
ஆய்ந்தறிந் தேனிம்மை அம்மைகண் டேனே. 1571

அறியவொண் ணாதவ் வுடம்பின் பயனை
அறியவொண் ணாத அறுவகை யாக்கி
அறியவொண் ணாத அறுவகைக் கோசத்
தறியவொண் ணாததோர் அண்டம் பதிந்ததே. 1572

ஐந்தாம் தந்திரம் முற்றும்

ஆறும் தந்திரம்

சிவகுரு தரிசனம்

பத்திப் பணித்துப் பரவும் அடிநல்கிச்
சுத்த வுரையால் துரிசறச் சோதித்துச்
சத்தும் அசத்தும் சதசத்தும் காட்டலால்
சித்தம் இறையே சிவகுரு வாமே. 1573

பாசத்தைக் கூட்டியே கட்டுப் பறித்திட்டு
நேசித்த காயம் விடுவித்து நேர்நேரே
கூசற்ற முத்தியில் கூட்டலா நாட்டத்த
தாசற்ற சற்குரு அம்பல மாமே. 1574

சித்திகள் எட்டொடும் திண்சிவ மாக்கிய
சுத்தியும் எண்சத்தித் தூய்மையும் யோகத்துச்
சத்தியும் மந்திர சாதக போதமும்
பத்தியும் நாதன் அருளிற் பயிலுமே. 1575

எல்லா உலகிற்கும் அப்பாலோன் இப்பாலாய்
நல்லார் உள்ளத்து மிக்கருள் நல்கலால்
எல்லாரும் உய்யக்கொண் டிங்கே அளித்தலால்
சொல்லார்ந்த நற்குருச் சுத்த சிவமே 1576

தேவனும் சுத்த குருவும் உபாயத்துள்
யாவையும் மூன்று யுனக்கண் டுரையாலே
மூவாப் பசுபாச மாற்றியே முத்திப்பால்
யாவையும் நல்கும் குருபரன் அன்புற்றே. 1577

சுத்த சிவன்குரு வாய்வந்து தூய்மைசெய்
தத்தனை நல்கருள் காணு அதிமூடர்
பொய்த்தகு கண்ணுன் நமரென்பர் புண்ணியர்
அத்தன் இவனென் றடிபணி வாரே. 1578

உண்மையிற் பொய்மை ஒழித்தலும் உண்மைப்பார்
திண்மையும் ஒண்மைச் சிவமாய அவ்வரன்
வண்மையும் எட்டெட்டுச் சித்தி மயக்கமும்
அண்ணல் அருளன்றி யாரறி வாரே 1579

சிவனே சிவஞானி ஆதலால் சுத்த
சிவனே யெனஅடி சேரவல் லார்க்கு
நவமான தத்துவ நன்முத்தி நண்ணும்
பவமான தின்றிப் பரலோக மாமே. 1580

குருவே சிவமெனக் கூறினன் நந்தி
குருவே சிவமென் பதுகுறித் தோரார்
குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்
குருவே உரையுணர் வற்றதோர் கோவே. 1581

சித்தம் யாவையும் சிந்தித் திருந்திடும்
அத்தன் உணர்த்துவ தாகும் அருளாலே
சித்தம் யாவையும் திண்சிவ மானக்கால்
அத்தனும் அவ்விடத் தேயமர்ந் தானே. 1582

தானந்தி சீர்மையுட் சந்தித்த சீர்வைந்த
கோனந்தி எந்தை குறிப்பறி வாரில்லை
வானந்தி யென்று மகிழும் ஒருவற்குத்
தானந்தி யங்கித் தனிச்சு டராமே. 1583

திருவாய சித்தியும் முத்தியும் சீர்மை
மருளா தருளும் மயக்கறும் வாய்மைப்
பொருளாய வேதாந்த போதமும் நாதன்
உருவாய் அருளா விடிலோர வொண்ணாதே. 1584

பத்தியும் ஞானவை ராக்கிய மும்பர
சித்திக்கு வித்தாம் சிவோகமே சேர்தலால்
முத்தியின் ஞான முளைத்தலால் அம்முளை
சத்தி அருள்தரில் தானெளி தாமே. 1585

இன்னெய்த வைத்ததோர் இன்பப் பிறப்பினை
முன்னெய்த வைத்த முதல்வனை எம்இறை
தன்னெய்துங் காலத்துத் தானே வெளிப்படும்
மன்னெய்த வைத்த மனமது தானே. 1586

சிவமான ஞானம் தெளியவொண் சித்தி
சிவமான ஞானம் தெளியவொண் முத்தி
சிவமான ஞானம் சிவபரத்தே ஏகச்
சிவமான ஞானம் சிவானந்தம் நல்குமே. 1587

அறிந்துணர்ந் தேனிவ் வகலிட முற்றும்
செறிந்துணர்ந் தோதித் திருவருள் பெற்றேன்
மறந்தொழிந் தேன்மதி மாண்டவர் வாழ்க்கை
பிறிந்தொழிந் தேன்இப் பிறவியை நானே. 1588

தரிக்கின்ற பல்லுயிர்க் கெல்லாந் தலைவன்
இருக்கின்ற தன்மையை ஏதும் உணரார்
பிரிக்கின்ற இந்தப் பிணக்கறுத் தெல்லாம்
கருக்கொண்ட ஈசனைக் கண்டுகொண் டேனே, 1589

திருவடிப்பேறு

இசைந்தெழும் அன்பில் எழுந்த படியே
பசைந்தெழும் ஈசரைப் பாசத்துள் ஏகச்
சிவந்த குருவந்து சென்னிகை வைக்க
உவந்த குருபதம் உள்ளத்து வந்ததே. 1590

தாடந்த போதே தலைதந்த எம்இறை
வாடந்த ஞான வலியையுந் தந்திட்டு
வீடந்த மின்றியே யாள்கென விட்டருட்
பாடின முடிவைத்துப் பார்வந்து தந்ததே. 1591

தானவ ஞகிச் சொரூபத் துவந்திட்டு
ஆன சொரூபங்கள் நான்கும் அகற்றின
ஏனைய முத்திரை யீந்தாண்ட னன்நந்தி
தானடி முற்சூட்டிந் தாபித்த துண்மையே. 1592

உரையற் றுணர்வற் றுயிர்பர மற்றுத்
திரையற்ற நீர்போல் சிவமாதல் தீர்த்துக்
கரையற்ற சத்தாதி நான்குங் கடந்த
சொரூபத் திருத்தினன் சொல்லிறந் தோமே. 1593

குரவன் உயிர்முச் சொரூபமுங் கைக்கொண்
டரிய பொருள்முத் திரையாகக் கொண்டு
பெரிய பிரானடி நந்தி பேச்சற்
றுருகிட என்னையங் குய்யக்கொண் டானே. 1594

பேச்சற்ற இன்பத்துப் பேரானந் தத்திலே
மாச்சற்ற என்னைச் சிவமாக்கி மாள்வித்துக்
காச்சற்ற சோதி கடன்மூன்றும் கைக்கொண்டு
வாச்ச புகழ்மாளத் தாள்தந்து மன்னுமே. 1595

இதயத்தும் நாட்டத்தும் என்றன் சிரத்தும்
பதிவித்த பாதப் பராபரன் நந்தி
கதிவைத்த வாறும்மெய் காட்டிய வாறும்
விதிவைத்த வாறும் விளம்பவொண் ணாதே. 1596

திருவடி வைத்தென் சிரத்தருள் நோக்கிப்
பெருவடி வைத்தந்த பேர்நந்தி தன்னைக்
குருவடி விற்கண்ட கோனையெங் கோவைக்
கருவழி வற்றிடக் கண்டுகொண் டேனே, 1597

திருவடி ஞானம் சிவமாக்கு விக்கும்
திருவடி ஞானம் சிவலோகம் சேர்க்கும்
திருவடி ஞானம் சிறைமலம் மீட்கும்
திருவடி ஞானம் திண்சித்தி முத்தியே. 1598

மேல்வைத்த வாறுசெய் யாவிடின் மேல்வினை
மால்வைத்த சிந்தையை மாயம தாக்கிடும்
பால்வைத்த சென்னி படரொளி வானவன்
தாள்வைத்த வாறு தரிப்பித்த வாறே. 1599

கழலார் கமலத் திருவடி என்னும்
நிழல்சேரப் பெற்றேன் நெடுமால் அறியா
அழல்சேரும் அங்கியுள் ஆதிப் பிரானும்
குழல்சேரும் என்னுயிர்க் கூடுங் குலைத்ததே. 1600

முடிமன்ன ராகின்மூ வுலகம தாள்வர்
அடிமன்னர் இன்பத் தளவில்லை கேட்கின்
முடிமன்ன ராய்நின்ற தேவர்கள் ஈசன்
குடிமன்ன ராய்க்குற்ற மற்றுநின் றாரே 1601

வைத்தேன் அடிகள் மனத்தினுள் ளேநான்
பொய்த்தே எரியும் புலன்வழி போகாமல்
எய்த்தேன் உழலும் இருவினை மாற்றிட்டு
மெய்த்தேன் அறிந்தேனவ் வேதத்தின் அந்தமே. 1602

அடிசார லாம்அண்ணல் பாதம் இரண்டும்
முடிசார வைத்தனர் முன்னை முனிவர்
படிசார்ந்த இன்பம் பழவடி வெள்ளக்
குடிசார் நெறிகூடி நிற்பவர் கொள்கையே. 1603

மந்திர மாவதும் மாமருந் தாவதும்
தந்திர மாவதும் தானங்க ளாவதும்
சுந்தர மாவதும் தூய்நெறி யாவதும்
எந்தை பிரான்றன் இணையடி தானே. 1604

ஞாதுரு ஞானஞேயம்

நீங்காச் சிவானந்த ஞேயத்தே நின்றிடப்
பாங்கான பாசம் படரா படரினும்
ஆங்கார நீங்கி யதனிலே நிற்கவே
நீங்கா அமுத நிலைபெற லாமே 1605

ஞேயத்தே நின்றோர்க்கு ஞானாதி நிற்றிடும்
ஞேயத்தின் ஞாதுரு ஞேயத்தில் வீடாகும்
ஞேயத்தின் ஞேயத்தை ஞேயத்தை யுற்றவர்
ஆயத்தில் நின்ற அறிவறி வாரே. 1606

தானென் றவனென் றிரண்டாகுந் தத்துவந்
தானென் றவனென் றிரண்டுந் தனிற்கண்டு
தானென்ற பூவை யவனடி சாத்தினால்
நானென் றவனென்கை நல்லதொன் றன்றே. 1607

வைச்சன வாறாறு மாற்றி யெனைவைத்து
மெச்சப் பரன்றன் வியாத்துவ மேலிட்டு
நிச்சய மாக்கிச் சிவமாக்கி ஞேயத்தால்
அச்சங் கெடுத்தென்னை யாண்டனன் நந்தியே. 1608

முன்னை யறிவறி யாதஅம் மூடர்போல்
பின்னை யறிவறி யாமையைப் பேதித்தான்
தன்னை யறியப் பரனாக்கித் தற்சிவத்
தென்னை யறிவித் திருந்தனன் நந்தியே 1609

காணாத கண்ணுடன் கேளாத கேள்வியும்
கோணாத போகமுங் கூடாத கூட்டமும்
நாணாத நாணமும் நாதாந்த போதமுங்
காணா யெனவந்து காட்டினன் நந்தியே. 1610

மோனங்கை வந்தோர்க்கு முத்தியுங் கைகூடும்
மோனங்கை வந்தோர்க்குச் சித்தியும் முன்நிற்கும்
மோனங்கை வந்தூமை யாமொழி முற்றுங்காண்
மோனங்கை வந்தைங் கருமமும் முன்னுமே. 1611

முத்திரை மூன்றின் முடிந்தது மூன்றின்பால்
வைத்த கலைகால் நான்மடங் கால்மாற்றி
உய்த்தவத் தானந்தத் தொண்குரு பாதத்தே
பெத்த மறுத்தோர் பிறந்திற வாரே. 1612

மேலைச் சொரூபங்கள் மூன்று மிகுசத்தி
பாலித்த முத்திரை பற்றும் பரஞானி
ஆலித்த நட்டமே ஞேயம் புகுந்தற்ற
மூலச் சொரூபன் மொழிஞா துருவனே. 1613

துறவு

இறப்பும் பிறப்பும் இருமையும் நீங்கித்
துறக்குந் தவங்கண்ட சோதிப் பிரானை
மறப்பில ராய்நித்தம் வாய்மொழி வார்கட்
கறப்பதி காட்டும் அமரர் பிரானே. 1614

பிறந்தும் இறந்தும்பல் பேதைமை யாலே
மறந்து மலவிருள் நீங்க மறைந்து
சிறந்த சிவனருள் சேர்பரு வத்துத்
துறந்த வுயிர்க்குச் சுடரொளி யாமே. 1615

அறவன் பிறப்பிலி யாரும் இலாதான்
உறைவது காட்டகம் உண்பது பிச்சை
துறவனுங் கண்டீர் துறந்தவர் தம்மைப்
பிறவி யறுத்திடும் பித்தன்கண் டீரே. 1616

நெறியைப் படைத்தான் நெருஞ்சில் படைத்தான்
நெறியில் வழுவின நெருஞ்சில் முட்பாயும்
நெறியில் வழுவா தியங்க வல்லார்க்கு
நெறியின் நெருஞ்சில்முட் பாயகி லாவே. 1617

கேடுங் கடமையுங் கேட்டுவந் தைவரும்
நாடி வளைந்தது நான்கட வேனலேன்
ஆடல் விடையுடை அண்ணல் திருவடி
கூடுந் தவஞ்செய்த கொள்கையன் றுனே. 1618

உழவன் உழவுழ வானம் வழங்க
உழவன் உழவினிற் பூத்த குவளை
உழவன் உழத்தியர் கண்ணொக்கும் என்றிட்
டுழவன் அதனை யுழவொழிந் தானே. 1619

மேல்துறந் தண்ணல் விளங்கொளி கூற்றுவன்
நாள் துறந் தார்க்கவன் நண்ப னவாவிலி
கார்துறந் தார்க்கவன் கண்ணுத லாய்நிற்கும்
பார்துறந் தார்க்கே பதஞ்செய லாமே. 1620

நாகமும் ஒன்று படம்ஐந்து நாலது
போகமுட் புற்றிற் பொருந்தி நிறைந்தது
ஆக மிரண்டும் படம்விரித் தாட்டொழிந்
தேகப் படஞ்செய் துடம்பிட மாமே. 1621

அகன்றூர் வழிமுதல் ஆதிப் பிரானும்
இவன்ரு னெனநின் றெளியனும் அல்லன்
சிவன்றுன் பலபல சீவனு மாகும்
நயன்றுன் வநம்வழி நாமறி யோமே. 1622

தூம்பு திறந்தன ஒன்பது வாய்தலும்
ஆம்பற் குழலியின் அஞ்சுழிப் பட்டது
வேம்பேறி நோக்கினன் மீகாமன் கூரையிற்
கூம்பேறிக் கோயிலிற் பூக்கின்ற வாறே. 1623

ஞானம்

ஒடுங்கி நிலைபெற்ற வுத்தமர் உள்ளம்
நடுங்குவ தில்லை நமனுமங் கில்லை
இடும்பையும் இல்லை இராப்பகல் இல்லை
படும்பயன் இல்லை பற்றுவிட் டோர்க்கே. 1624

எம்மா ருயிரும் இருநிலத் தோற்றமுஞ்
செம்மா தவத்தின் செயலின் பெருமையும்
அம்மான திருவருட் பெற்றவர்க் கல்லா(ல்)
இம்மா தவத்தின் இயல்பறி யாரே. 1625

பிறப்பறி யார்பல பிச்சைசெய் மாந்தர்
சிறப்பொடு வேண்டிய செல்வம் பெறுவர்
மறப்பில ராகிய மாதவஞ் செய்வார்
பிறப்பினை நீக்கும் பெருமைபெற் றுரே. 1626

இருந்து வருந்தி எழிற்றவஞ் செய்யும்
பெருந்தன்மை யாளரைப் பேதிக்க வென்றே
இருந்திந் திரனே யெவரே வரினுந்
திருந்துந்தஞ் சிந்தை சிவனவன் பாலே. 1627

கரந்துங் கரந்திலன் கண்ணுக்குந் தோன்றுன்
பரந்த சடையன் பசும்பொன் நிறத்தன்
அருந்தவர்க் கல்லால் அணுகலு மாகான்
விரைந்து தொழப்படும் வெண்மதி யானே. 1628

பின்னெய்த வைத்ததோர் இன்பப் பிறப்பினை
முன்னெய்த வைத்த முதல்வனை எம்மிறை
தன்னெய்துங் காலத்துத் தானே வெளிப்படும்
மன்னெய்த வைத்த மனமது தானே. 1629

அமைச்சரும் ஆனைக் குழாமும் அரசும்
பகைத்தெழும் பூசலுட் பட்டார் நடுவே
அமைத்ததோர் ஞானமும் ஆத்தமும் நோக்கி
இமைத்தழி யாதிருந் தார்தவத் தாரே. 1630

சாத்திரம் ஓதுஞ் சதுர்களை விட்டுநீர்
மாத்திரைப் போது மறித்துள்ளே நோக்குமின்
பார்த்தவப் பார்வை பசுமரத் தாணிபோல்
ஆர்த்த பிறவி அகலவிட் டோடுமே. 1631

தவம்வேண்டு ஞானந் தலைப்பட வேண்டில்
தவம்வேண்டா ஞான சமாதிகை கூடில்
தவம்வேண்டா மச்ச கசன்மார்க்கத் தோர்க்குத்
தவம்வேண்டா மாற்றந் தனையறி யாரே. 1632

தவநிந்தை

ஓதலும் வேண்டாம் உயிர்க்குயி ருள்ளுற்றாற்
காதலும் வேண்டாமெய்க் காய மிடங்கண்டாற்
சாதலும் வேண்டாஞ் சமாதிகை கூடினல்
போதலும் வேண்டாம் புலன்வழி போகார்க்கே. 1633

கத்தவும் வேண்டாங் கருத்தறிந் தாறினற்
சத்தமும் வேண்டாஞ் சமாதிகை கூடினற்
சுத்தமும் வேண்டாந் துடக்கற்று நிற்றலாற்
சித்தமும் வேண்டாஞ் செயலற் றிருக்கிலே. 4634

விளைவறி வார்பண்டை மெய்த்தவஞ் செய்வார்
விளைவறி வார்பண்டை மெய்யுரை செய்வார்
விளைவறி வார்பண்டை மெய்யறஞ் செய்வார்
விளைவறி வார்விண்ணின் மண்ணின்மிக் காரே. 1635

கூடித் தவஞ்செய்து கண்டேன் குரைகழல்
தேடித் தவஞ்செய்து கண்டேன் சிவகதி
வாடித் தவஞ்செய்வ தேதவம் இவைகளைந்
தூடிற் பலவுல கோரெத் தவரே. 1636

மனத்துறை மாகடல் ஏழுங் கைநீந்தித்
தவத்திடை யாளர்தஞ் சார்வத்து வந்தார்
பவத்திடை யாளர் அவர்பணி கேட்கின்
முகத்திடை நந்தியை முந்தலு மாமே. 1637

மனத்திடை நின்ற மதிவாள் உருவி
இனத்திடை நீக்கி இரண்டற வீர்த்துப்
புனத்திடை அஞ்சும் போகாமல் மறித்தால்
தவத்திடை யாரொளி தன்னொளி யாமே. 1638

ஒத்து மிகவு நின்றானை யுரைப்பது
பத்தி கொடுக்கும் பணிந்தடி யார்தொழ
முத்தி கொடுக்கும் முனிவ னெனும்பதஞ்
சத்தான செய்வது தான்தவந் தானே. 1639

இலைதொட்டுப் பூப்பறித் தெந்தைக்கென் றெண்ணி
மலர்தொட்டுக் கொண்டேன் வரும்புனல் காணேன
தலைதொட்ட நூல்கண்டு தாழ்ந்ததென் உள்ளந்
தலைதொட்டுக் கண்டேன் தவங்கண்ட வாறே. 1640

படர்சடை மாதவம் பற்றிய பத்தர்க்
கிடரடை யாவண்ணம் ஈசன் அருளும்
இடரடை செய்தவர் மெய்த்தவ நோக்கில்
உடரடை செய்வ தொருமனத் தாமே. 1641

ஆற்றிற் கிடந்த முதலைகண் டஞ்சிப்போய்
ஈற்றுக் கரடிக் கெதிர்ப்பட்ட தனைெக்கும்
நோற்றுத் தவஞ்செய்யார் நூலறி யாதவர்
சோற்றுக்கு நின்று சுழல்கின்ற வாறே. 1642

பழுக்கின்ற வாறும் பழமுண்ணு மாறுங்
குழக்கன்று துள்ளியக் கோணியைப் புல்காக்
குழக்கன்று கொட்டிலிற் கட்டவல் லார்க்குள்
இழுக்காது நெஞ்சத் திடமொன்று மாமே. 1643

சித்தஞ் சிவமாகச் செய்தவம் வேண்டாவால்
சித்தஞ் சிவானந்தஞ் சேர்ந்தோர் உறவுண்டால்
சித்தஞ் சிவமாக வேசித்தி முத்தியாஞ்
சித்தஞ் சிவமாதல் செய்தவப் பேறே. 1644

அருளுடைமையின் ஞானம் வருதல்

பிரானருள் உண்டெனில் உண்டுநற் செல்வம்
பிரானருள் உண்டெனில் உண்டுநன் ஞானம்
பிரானரு ளிற்பெருந் தன்மையும் உண்டு
பிரானரு ளிற்பெருந் தெய்வமு மாமே. 1645

தமிழ்மண் டலம்ஐந்துந் தாவிய ஞானம்
உமிழ்வது போல உலகந் திரிவார்
அவிழு மனமும்எம் ஆதி யறிவுந்
தமிழ்மண் டலம்ஐந்துந் தத்துவ மாமே. 1646

புண்ணிய பாவம் இரண்டுள பூமியில்
நண்ணும் பொழுதறி வார்சில ஞானிகள்
எண்ணி இரண்டையும் வேரறுத் தப்புறத்(து)
அண்ணல் இருப்பிடம் ஆய்ந்துகொள் வீரே. 1647

முன்னின் றருளு முடிகின்ற காலத்து
நன்னின் றுலகில் நடுவுயி ராய்நிற்கும்
பின்னின் றருளும் பிறவியை நீக்கிடும்
முன்னின்(று) எனக்கொரு முத்திநந் தானே. 1648

சிவனரு ளாற்சிலர் தேவரு மாவர்
சிவனரு ளாற்சிலர் தெய்வத்தோ டொப்பர்
சிவனரு ளால்வினை சேரகி லாமை
சிவனருள் கூறில்அச் சிவலோக மாமே. 1649

புண்ணியன் எந்தை புனிதன் இணையடி
நண்ணி விளக்கென ஞானம் விளைந்தது
மண்ணவ ராவதும் வானவ ராவதும்
அண்ணல் இறைவன் அருள்பெற்ற போதே. 1650

காயத்தே ரேறி மனப்பாகன் கைகூட்ட
மாயத்தே ரேறி மயங்கு மவையுணர்
நேயத்தே ரேறி நிமலன் அருள்பெற்ருல்
ஆயத்தே ரேறி யவனிவ னுமே. 1651

அவ்வுல கத்தே பிறக்கில் உடலொடும்
அவ்வுல கத்தே யருந்தவர் நாடுவர்
அவ்வுல கத்தே யரனடி கூடுவர்
அவ்வுல கத்தே யருள்பெறு வாரே. 1652

கதிர்கண்ட காந்தங் கனலின் வடிவாம்
மதிகண்ட காந்தம் மணிநீர் வடிவாம்
சதிகொண்ட சாக்கி யெரியின் வடிவாம்
எரிகொண்ட ஈசன் எழிலிவடி வாமே. 1653

நாடும் உறவுங் கலந்தெங்கள் நந்தியைத்
தேடுவன் தேடிச் சிவபெரு மான்என்று
கூடுவன் கூடிக் குரைகழற் கேசெல்ல
வீடுமளவும் விடுகின் றிலேனே. 1654

அவவேடம்

ஆடம் பரங்கொண்(டு) அடிசிலுண் பான்பயன்
வேடங்கள் கொண்டு வெருட்டிடும் பேதைகாள்
ஆடியும் பாடியும் அழுதும் அரற்றியுந்
தேடியுங் காணீர் சிவனவன் தாள்களே. 1655

ஞானமில் லார்வேடம் பூண்டிந்த நாட்டிடை
ஈனம தேசெய் திரந்துண் டிருப்பினும்
மான நலங்கெடும் அப்புவி யாதலால்
ஈனவர் வேடங் கழிப்பித்தல் இன்பமே. 1656

இன்பமுந் துன்பமும் நாட்டா ரிடத்துள்ள
நன்செயல் புன்செய லாலந்த நாட்டிற்காம்
என்ப இறைநாடி நாடோறும் நாட்டினின்
மன்பதை செப்பஞ் செயின்வையம் வாழுமே. 1657

இழிகுலத் தோர்வேடம் பூண்பர் மேலெய்த
வழிகுலத் தோர்வேடம் பூண்பர் தேவாகப்
பழிகுலத் தாகிய பாழ்சண்ட ரானூர்
கழிகுலத் தோர்கள் களையப்பட் டோரே. 1658

பொய்த்தவஞ் செய்வார் புகுவர் நரகத்துப்
பொய்த்தவஞ் செய்தவர் புண்ணிய ராகார்
பொய்த்தவம் மெய்த்தவம் போகத்துட் போக்கியஞ்
சத்திய ஞானத்தால் தங்குந் தவங்களே. 1659

பொய்வேடம் பூண்பர் பொசித்தல் பயனாக
மெய்வேடம் பூண்போர் மிகுபிச்சை கைக்கொள்வர்
பொய்வேடம் மெய்வேடம் போலவே பூணினும்
உய்வேட மாகும் உணர்ந்தறிந் தோர்க்கே. 1660

தவவேடம்

தவமிக் கவரே தலையான வேடர்
அவமிக் கவரே யதிகொலை வேடர்
அவமிக் கவர்வேடத் தாகாரவ் வேடந்
தவமிக் கவர்க்கன்றித் தாங்கவொண் ணாதே. 1661

பூதியணிவது சாதன மாதியிற்
காதணி தாமிர குண்டலங் கண்டிகை
ஓதி யவர்க்கும் உருத்திர சாதனந்
தீதில் சிவயோகி சாதனந் தேரிலே. 1662

யோகிக் கிடுமது வுட்கட்டுக் கஞ்சுளி
தோகைக்குப் பாசத்துச் சுற்றுஞ் சடையதொன்று
ஆகத்து நீறணி யங்கக் கபாலஞ்
சீகத்த மாத்திரை திண்பிரம் பாகுமே. 1663

காதணி குண்டலங் கண்டிகை நாதமும்
ஊதுநற் சங்கும் உயர்கட்டி கப்பரை
ஏதமில் பாதுகம் யோகாந்த மாதனம்
ஏதமில் யோகபட் டந்தண்டம் ஈரைந்தே. 1664

திருநீறு

நூலுஞ் சிகையும் உணரார்நின் மூடர்கள்
நூலது வேதாந்தம் நுண்சிகை ஞானமாம்
பாலொன்றும் அந்தணர் பார்ப்பார் பரமுயிர்
ஓரொன் றிரண்டெனில் ஓங்காரம் ஓதிலே. 1665

கங்காளன் பூசுங் கவசத் திருநீற்றை
மங்காமற் பூசி மகிழ்வீரே யாமாகில்
தங்கா வினைகளுஞ் சாருஞ் சிவகதி
சிங்கார மான திருவடி சேர்விரே. 1666

அரசுட னுலத்தி யாகும்அக் காரம்
விரவு கனலில் வியனுரு மாறி
நிரவயன் நின்மலன் தான்பெற்ற நீதர்
உருவம் பிரமம் உயர்குல மாகுமே. 1667

ஞானவேடம்

ஞானமி லார்வேடம் பூண்டும் நரகத்தர்
ஞானமுள் ளார்வேடம் இன்றெனில் நன்முத்தர்
ஞான முளதாக வேண்டுவோர் நக்கன்பால்
ஞானமுள வேட நண்ணிநிற் பாரே. 1668

புன்ஞானத் தோர்வேடம் பூண்டும் பயனில்லை
நன்ஞானத் தோர்வேடம் பூணர் அருள்நண்ணித்
துன்ஞானத் தோர்சம யத்துரி சுள்ளோர்
பின்ஞானத் தோரொன்றும் பேசகில் லாரே. 1669

சிவஞானி கட்குஞ் சிவயோகி கட்கும்
அவமான சாதனம் ஆகாது தேரின்
நவமா மவர்க்கது சாதன நான்கும்
உவமான மில்பொருள் உள்ளுற லாமே. 1670

கத்தித் திரிவர் கழுவடி நாய்போற்
கொத்தித் திரிவர் குரக்களி ஞானிகள்
ஒத்துப் பொறியும் உடலும் இருக்கவே
செத்துத் திரிவர் சிவஞானி யோர்களே. 1671

அடியா ரவரே யடியா ரலாதார்
அடியாரு மாகாரவ் வேடமு மாகா
அடியார் சிவஞான மானது பெற்றோர்
அடியா ரலாதார் அடியார்கள் அன்றே. 1672

ஞானிக்குச் சுந்தர வேடமும் நல்லவாந்
தானுற்ற வேடமுந் தற்சிவ யோகமே
ஆனவவ் வேடம் அருநஞ்ஞான சாதனம்
ஆனது மாமொன்றும் ஆகா தவனுக்கே. 1673

ஞானத்தி னுற்பத நண்ணுஞ் சிவஞானி
தானத்தில் வைத்த தனியால யத்தனும்
மோனத்த னாதலின் முத்தனுஞ் சித்தனும்
ஏனைத் தவசி இவனென லாகுமே. 1674

தானற்ற தன்மையுந் தானவ னாதலும்
ஏனைய வச்சிவ மான இயற்கையுந்
தானுறு சாதக முத்திரை சாத்தலும்
ஏனவும் நந்தி பதமுத்தி பெற்றதே. 1675

சிவவேடம்

அருளால் அரனுக்(கு) அடிமைய தாகிப்
பொருளாந் தனதுடற் பொற்பதி நாடி
இருளான தின்றி யிருஞ்செயல் அற்றோர்
தெருளாம் அடிமைச் சிவவேடத் தோரே. 1676

உடலில் துவக்கிய வேடம் உயிர்க்காகா
உடல்கழன் றால்வேடம் உடனே கழலும்
உடலுயிர் உண்மையென் றோர்ந்துகொள் ளாதார்
கடலில் அகப்பட்ட கட்டையொத் தாரே. 1677

மயலற்(று) இருளற்று மாமன மற்றுக்
கயலுற்ற கண்ணியர் கையிணக் கற்றுத்
தயலற் றவரோடுந் தாமே தாமாகிச்
செயலற் றிருப்பார் சிவவேடத் தாரே. 1678

ஓடுங் குதிரைக் குசைதிண்ணம் பற்றுமின்
வேடங்கொண் டென்செய்வீர் வேண்டா மனிதரே
நாடுமின் நந்தியை நம்பெரு மான்தன்னைத்
தேடும்இன் பப்பொருள் சென்றெய்த லாமே. 1679

அபக்குவன்

குருட்டினை நீக்குங் குருவினைக் கொள்ளார்
குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வார்
குருடுங் குருடுங் குருடாட்டம் ஆடிக்
குருடுங் குருடுங் குழிவிழு மாறே. 1680

மனத்தில் எழுந்ததோர் மாயக்கண் ணாடி
நினைப்பின் அதனின் நிழலையுங் காணார்
வினைப்பயன் போக விளக்கியுங் கொள்ளார்
புறக்கடை இச்சித்துப் போகின்ற வாறே. 1681

ஏயெனில் என்னென மாட்டார் பிரசைகள்
வாய்முலை பெய்ய மதுரநின் றூறிடுந்
தாய்முலை யாவ தறியார் தமருளோர்
ஊனிலை செய்யும் உருவிலி தானே. 1682

வாயொன்று சொல்லி மனமொன்று சிந்தித்து
நீயொன்று செய்யல் உறுதி நெடுந்தகாய்
தீயென்றிங் குன்னைத் தெளிவன் தெளிந்தபின்
பேயென்றிங் கென்னைப் பிறர்தெளி யாரே. 1683

பஞ்சத் துரோகத்துப் பாதகர் தம்மை
அஞ்சச் சமயத்தோர் வேந்தன் அருந்தண்டம்
விஞ்சச்செய் திப்புவி வேறே விடாவிடின்
புஞ்சத்து ளாய்ப்புவி முற்றும்பா ழாகுமே. 1684

தவத்திடை நின்றவர் தாமுண்ணுங் கன்மஞ்
சிவத்திடை நின்றது தேவர் அறியார்
தவத்திடை நின்றறி யாதவர் எல்லாம்
பவத்திடை நின்றதோர் பாடது வாமே. 1685

கன்றலுங் கருதலுங் கருமஞ் செய்தலும்
தின்றலுஞ் சுவைத்தலுந் தீமை செய்தலும்
பின்றலும் பிறங்கலும் பெருமை கூறலும்
என்றிவை இறைபால் இயற்கை அல்லவே. 1686

விடிவ தறியார் வெளிகாண மாட்டார்
விடியில் வெளியில் விழிக்கவு மாட்டார்
கடியதோ ருண்ணிமை கட்டுமின் காண்மின
விடியாமை காக்கும் விளக்கது வாமே. 1687

வைத்த பசுபாச மாற்று நெறிவைகிப்
பெத்த மறமுத்த னாகிப் பிறழ்வுற்றுத்
தத்துவ முன்னித் தலைப்படா தவ்வாறு
பித்தான சீடனுக் கீயப் பெருதானே. 1688

மன்னும் மலம்ஐந்தும் மாற்றும் வகையோரான்
துன்னிய காமாதி தோயுந் தொழில்நீங்கான்
பின்னிய பொய்யன் பிறப்பிறப் பஞ்சாதான்
அன்னிய னாவன் அசற்சீட னாமே. 1689

பக்குவன்

தொழிலறி வாளர் சுருதிகண் ணாகப்
பழுதறி யாத பரம குருவை
வழியறி வார்நல் வழியறி வாளர்
அழிவறி வார்மற்றை யல்லா தவரே. 1690

பதைத்தொழிந் தேன்பர மாவுனை நாடி
அதைத்தொழிந் தேனஇனி யாரொடுங் கூடேன்
சிதைத்தடி யேன்வினை சிந்தனை தீர
உதைத்துடை யாயுகந் தாண்டரு ளாயே. 1691

பதைக்கின்ற போதே பரமென்னும் வித்தை
விதைக்கின்ற வித்தினை மேல்நின்று நோக்கிச்
சிதைக்கின்ற சிந்தையைச் செவ்வே நிறுத்தி
இசைக்கின்ற அன்பருக் கீயலு மாமே. 1692

கொள்ளினும் நல்ல குருவினைக் கொள்ளுக
உள்ள பொருளுடல் ஆவி யுடன்ஈக
எள்ளத் தனையும் இடைவிடா தேநின்று
தெள்ளி யறியச் சிவபதந் தானே. 1693

சோதி விசாகந் தொடர்ந்திரு தேள்நண்டு
ஓதிய நாளே உணர்வது தானென்று
நீதியுள் நேர்மை நினைந்தவர்க் கல்லது
ஆதியும் ஏதும் அறியகில் லானே. 1694

தொழிலார மாமணித் தூய்தான சிந்தை
எழிலால் இறைவன் இடங்கொண்ட போதே
விழலார் விறலாம் வினையது போகக்
கழலார் திருவடி கண்டரு ளாமே. 1695

சாத்திக ஞய்ப்பர தத்துவந் தானுன்னி
ஆத்திக பேத நெறிதோற்ற மாகியே
ஆர்த்த பிறவியின் அஞ்சி அறநெறி
சாத்தவல் லானவன் சற்சீட ஞமே, 1696

சத்தும் அசத்துமெவ் வாறெனத் தானுன்னிச்
சித்தை யுருக்கிச் சிவனருள் கைகாட்டப்
பத்தியின் ஞானம் பெறப்பணிந் தானந்தச்
சத்தியில் இச்சைத் தருவோன்சற் சீடனே. 1697

அடிவைத் தருளுதி யாசானின் றுன்னு
வடிவைத்த மாமுடி மாயப் பிறவி
அடிவைத்த காய அருட்சத்தி யாலே
அடிபெற்ற ஞானத்த னுசற்று ளோனே. 1698

சீராரு ஞானத்தின் இச்சை செலச்செல்ல
வாராத காதல் குருபரன் பாலாகச்
சாராத சாதக நான்குந்தன் பாலுற்ருேன்
ஆராயும் ஞானத்த னுமடி வைக்கவே. 1699

உணர்த்து மதிபக் குவர்க்கே யுணர்த்தி
இணக்கிற் பராபரத் தெல்லையுள் இட்டுக்
குணக்கொடு தெற்குத் தாபச்சி மங்கொண்
டுணர்த்துமி னுவுடை யான்தன்னை யுன்னியே. 1700

இறையடி தாழ்ந்தை வணக்கமும் எய்திக்
குறையது கூறிக் குணங்கொண்டு போற்றச்
சிறையுடல் நீயறக் காட்டிச் சிவத்தோ(டு)
அறிவுக் கறிவிப்போன் சன்மார்க்கி யாமே. 1701

வேட்கை விடுநெறி வேதாந்த மாதலால்
வாழ்க்கைப் புலன்வழி மாற்றிச்சித் தாந்தத்து
வேட்கை விடுமிக்க வேதாந்தி பாதமே
தாழ்க்குந் தலையினேன் சற்சீட னுமே. 1702

சற்குணம் வாய்மை தயாவிவே கந்தண்மை
சற்குரு பாதமே சாயைபோல் நீங்காமே
சிற்பர ஞானந் தெளியத் தெளிவோர்தல்
அற்புத மேதோன்ற லாகுஞ்சற் சீடனே. 1703

ஆரும் தந்திரம் முற்றும்

ஏழாம் தந்திரம்

ஆறாதாரம்

நாலும் இருமூன்றும் ஈரைந்தும் ஈராறுங்
கோலிமேல் நின்ற குறிகள் பதினாறும்
மூலங்கண் டாங்கே முடிந்து முதலிரண் டுங்
காலங்கண் டானடி காண்ட லு மாமே. 1704

ஈராறு நாதத்தில் ஈரெட்டாம் அந்தத்தின்
மேதாதி நாதாந்த மீதாம் பராசத்தி
போதா லயத்த விகாரந் தனிற்போத
மேதாதி யாதார மீதான உண்மையே. 1705

மேலென்று கீழென்(று) இரண்டறக் காணுங்கால்
தானென்னும் நானென்றுந் தன்மைகள் ஓராறும்
பாரெங்கு மாகிப் பரந்த பராபரங்
காரொன்று கற்பக மாகிநின் றானே. 1706

ஆதார சோதனை யானடி சுத்திகள்
மேதாதி யீரெண் கலாந்தத்து விண்ணொளி
போதா லயத்துப் புலன்கர ணம்புந்தி
சாதா ரணங்கெட்டான் றன்சக மார்க்கமே. 1707

மேதாதி யாலே விடாதோ மெனத்தூண் டி
ஆதார சோதனை அத்துவ சோதனை
தாதார மாகவே தானெழச் சாதித்தால்
ஆதாரஞ் செய்போக மாவது காயமே. 1708

ஆறந்த முங்கூடி யாகும் உடம்பினிற்
கூறிய வாதார மற்றுங் குறிக்கொண்மின்
ஆறிய வக்கர மைம்பதின் மேலாக
ஊறிய வாதாரத் தோரெழுந் தாமே. 1709

ஆகும் உடம்பும் அழிகின்ற அவ்வுடல்
போகும் உடம்பும் பொருந்திய வாறுதான்
ஆகிய வக்கரம் ஐம்பது தத்துவம்
ஆகும் உடம்புக்கும் ஆறந்த மாமே. 1710

ஆயு மலரின் அணிமலர் மேலது
வாய இதழும் பதினாறும் அங்குள
தூய அறிவு சிவானந்த மாகிப்போய்
மேய அறிவாய் விளைந்தது தானே. 1711

அண்டலிங்கம்

இலிங்கம தாவ(து) யாரும் அறியார்
இலிங்கம தாவ(து) எண்டிசை யெல்லாம்
இலிங்கம தாவ(து) எண்ணெண் கலையும்
இலிங்கம தாக எடுத்த துலகே. 1712

உலகில் எடுத்தது சத்தி முதலா
உலகில் எடுத்தது சத்தி வடிவாய்
உலகில் எடுத்தது சத்தி குணமாய்
உலகம் எடுத்த சதாசிவன் தானே. 1713

போகமும் முத்தியும் புத்தியுஞ் சித்தியும்
ஆகமும் ஆறாறு தத்துவத்(து) அப்பாலாம்
ஏகமும் நல்கி யிருக்குஞ் சதாசிவம்
ஆகம வத்துவா வாறுஞ் சிவமே. 1714

ஏத்தினர் எண்ணிலி தேவரெம் ஈசனை
வாழ்த்தினர் வாசப் பசுந்தென்றல் வள்ளலென்
றார்த்தனர் அண்டங் கடந்தப் புறநின்று
காத்தனன் என்னுங் கருத்தறி யாரே. 1715

ஒண்சுட ரோன்அயன் மால்பிர சாபதி
ஒண்சுட ரான இரவியோ(டு) இந்திரன்
கண்சுட ராகிக் கலந்தெங்குந் தேவர்கள்
தண்சுட ராயெங்கும் தற்பர மாமே. 1716

தாபரத் துண்ணின்(று) அருளவல் லான்சிவன்
மாபரத் துண்மை வழிபடு வாரில்லை
மாபரத் துண்மை வழிபடு வாளர்க்கு
பூவகத் துள்நின்ற பொற்கொடி யாகுமே. 1717

தூய விமானமுந் தூலம தாகுமால்
ஆய சதாசிவ மாகுநற் சூக்குமம்
பாய பலிபீடம் பத்திர லிங்கமாம்
ஆய அரனிலை ஆய்ந்துகொள் வார்கட்கே. 1718

முத்துடன் மாணிக்கம் மொய்த்த பவளமும்
கொத்துமக் கொம்பு சிலைநீறு கோமதம்
அத்தன்றன் னுகம மன்ன மரிசியாம்
உய்த்ததின் சாதனம் பூமண லிங்கமே. 1719

துன்றுந் தயிர்நெய் பால்துய்ய மெழுகுடன்
கன்றிய செம்பு கனலிர தஞ்சலம்
வன்திறல் செங்கல் வடிவுடை வில்லம்பொன்
றென்றியங் கொன்றை தெளிசிவ லிங்கமே. 1720

மறையவர் அர்ச்சனை வண்படி கந்தான்
இறையவர் அர்ச்சனை யேயபொன் னுகுங்
குறைவிலா வசியர்க்குக் கோமள மாகுந்
துறையுடைச் சூத்திரர் தொல்வாண லிங்கமே. 1721

அதுவுணர்ந் தோனொரு தன்மையை நாடி
எதுவுண ராவகை நின்றனன் ஈசன்
புதுவுணர் வான புவனங்கள் எட்டும்
இதுவுணர்ந் தென்னுடல் கோயில்கொண் டானே. 1722

அகலிட மாயறி யாமல் அடங்கும்
உகலிட மாய்நின்ற வூனத னுள்ளே
பகலிட மாமுனம் பாவ விநாசன்
புகலிட மாய்நின்ற புண்ணியன் ருனே. 1723

போது புனைகழல் பூமிய தாவது
மாது புனைமுடி வானக மாவது
நீதியுள் ஈசன் உடல்விசும் பாய்நிற்கும்
ஆதி யுறநின்ற தப்பரி சாமே. 1724

தரையுற்ற சத்தி தனிலிங்கம் விண்ணாந்
திரைபொரு நீரது மஞ்சனச் சாலே
வரை தவழ் மஞ்சு நீர் வானுடு மாலே
கரையற்ற நந்திக் கலையுந்திக் காமே. 1725

பிண்டலிங்கம்

மானுட ராக்கை வடிவு சிவலிங்கம்
மானுட ராக்கை வடிவு சிதம்பரம்
மானுட ராக்கை வடிவு சதாசிவம்
மானுட ராக்கை வடிவு திருக்கூத்தே. 1726

உலந்திலர் பின்னும் உளரென நிற்பீர்
நிலந்தரு நீர்தெளி யூனவை செய்யப்
புலந்தரு பூதங்கள் ஐந்தும்ஒன் ருக
வலந்தரு தேவரை வந்திசெய் யீரே. 1727

கோயில்கொண் டன்றே குடிகொண்ட ஐவரும்
வாயில்கொண் டாங்கே வழிநின் றருளுவர்
தாயில்கொண் டாற்போல் தலைவனென் னுட்புக
வாயில்கொண் டீசனு மாளவந் தானே. 1728

கோயில்கொண் டானடி கொல்லைப் பெருமறை
வாயில்கொண் டானடி நாடிகள் பத்துள
பூசைகொண் டான்புல னைந்தும் பிறகிட்டு
வாயில்கொண் டானெங்கள் மாநந்தி தானே. 1729

சதாசிவ லிங்கம்

கூடிய பாதம் இரண்டும் படிமிசை
பாடிய கையிரண் டெட்டும் பரந்தெழுந்
தேடு முகம்ஐந்து செங்கணின் மூவைந்து
நாடுஞ் சதாசிவ நல்லொளி முத்தே. 1730

வேதா நெடுமால் உருத்திரன் மேலீசன்
மீதான ஐம்முகன் விந்துவும் நாதமும்
ஆதார சத்தியு மந்தச் சிவனொடுஞ்
சாதா ரணமாஞ் சதாசிவந் தானே. 1731

ஆகின்ற சத்தியின் உள்ளே கலைநிலை
ஆகின்ற சத்தியின் உள்ளே கதிரெழ
ஆகின்ற சத்தியின் உள்ளே அமர்ந்தபின்
ஆகின்ற சத்தியுள் அத்திசை பத்தே. 1732

அத்திசைக் குள்ளே அமர்ந்தன ஆறங்கம்
அத்திசைக் குள்ளே அமர்ந்தன நால்வேதம்
அத்திசைக் குள்ளே அமர்ந்த சரியையோ(டு)
அத்திசைக் குள்ளே அமர்ந்த சமயமே. 1733

சமயத் தெழுந்த அவத்தையீ ரைந்துள
சமயத் தெழுந்த இராசி ஈராறுள
சமயத் தெழுந்த சரீரமா றெட்டுள
சமயத் தெழுந்த சதாசிவந் தானே. 1734

நடுவு கிழக்குத் தெற்குத் தரமேற்கு
நடுவு படிகநற் குங்கம வன்னம்
அடைவுள வஞ்சனஞ் செவ்வரத் தம்பால்
அடியேற் கருளிய முகமிவை அஞ்சே. 1735

அஞ்சு முகமுள ஐம்மூன்று கண்ணுள
அஞ்சினொ டஞ்சு கரதலந் தானுள
அஞ்சுடன் அஞ்சா யுதமுள நம்பியென்
நெஞ்சு புகுந்து நிறைந்துநின் றானே. 1736

சத்தி தராதல மண்டஞ் சதாசிவ
சத்தி சிவமிக்க தாபர சங்கமஞ்
சத்தி யுருவம் அருவஞ் சதாசிவஞ்
சத்தி சிவதத்துவ முப்பத் தாறே. 1737

தத்துவ மாவ தருவஞ் சராசரந்
தத்துவ மாவ துருவஞ் சுகோதயந்
தத்துவம் எல்லாஞ் சகலமு மாய்நிற்குந்
தத்துவ மாகுஞ் சதாசிவன் தானே. 1738

கூறுமி னூறு சதாசிவன் எம்மிறை
வேறோர் உரைசெய்து மிகைப்பொரு ளாய்நிற்கும்
ஏறுரை செய்தொழில் வானவர் தம்மொடு
மாறுசெய் வானென் மனம்புகுந் தானே. 1739

இருளார்ந்த கண்டமும் ஏந்து மழுவுஞ்
சுருளார்ந்த செஞ்சடைச் சோதிப் பிறையும்
அருளார்ந்த சிந்தையெம் ஆதிப் பிரானைத்
தெருளார்ந்தென் உள்ளே தெளிந்திருந் தேனே. 1740

சத்திதான் நிற்கின்ற ஐம்முகஞ் சாற்றிடில்
உத்தரம் வாமம் உரைத்திடும் சத்தி
பச்சிமம் பூருவந் தற்புரு டன்னுரை
தெற்கி லகோரம் வடகிழக் கீசனே. 1741

நாணுநல் லீசான நடுவுச்சி தாளுகுந்
தாணுவின் றன்முகந் தற்புருட மாகுங்
காணும் அகோரம் இருதயங் குய்யமாம்
மாணுற வாமமாஞ் சத்திநற் பாதமே. 1742

நெஞ்சு சிரஞ்சிகை நீள்கவசங் கண்ணம்பு
வஞ்சமில் விந்து வளர்நிறம் பச்சையாஞ்
செஞ்சுறு செஞ்சுடர் சேகரி மின்னுகுஞ்
செஞ்சுடர் போலுந் தெசாயுதந் தானே. 1743

எண்ணில் இதயம் இறைஞான சத்தியாம்
விண்ணிற் பரைசிர மிக்க சிகையாதி
வண்ணக் கவசம் வனப்புடை இச்சையாம்
பண்ணுங் கிரியை பரநேத் திரத்திலே. 1744

சத்திநாற் கோணஞ் சலமுற்று நின்றிடுஞ்
சத்தி அறுகோணஞ் சயனத்தை யுற்றிடுஞ்
சத்திநல் வட்டஞ் சலமுற் றிருந்திடுஞ்
சத்தி யுருவாஞ் சதாசிவன் தானே. 1745

மானந்தி எத்தனை காலம் அழைக்கினுந்
தானந்தி யஞ்சின் தனிச்சுட ராய்நிற்குங்
கானந்தி யுந்தி கடந்து கமலத்தின்
மேனந்தி ஒன்பதின் மேவிநின் றானே. 1746

ஒன்றிய வாறும் உடலி னுடன்கிடந்
தென்றுமெம் மீச னடக்கும் இயல்பது
தென்றலைக் கேறத் திருந்து சிவனடி
நின்று தொழுதேனென் னெஞ்சத்தி னுள்ளே. 1747

உணர்ந்தேன் உலகினில் ஒண்பொரு ளானைக்
கொணர்ந்தேன் குவலயங் கோயிலென் னெஞ்சம்
புணர்ந்தேன் புனிதனும் பொய்யல்ல மெய்யே
பணிந்தேன் பகலவன் பாட்டு மொலியே. 1748

ஆங்கிவை மூன்றினும் ஆரழல் வீசிடத்
தாங்கிடும் ஈரேழு தானடு வானதில்
ஓங்கிய ஆதியும் அந்தமு மாமென
ஈங்கிவை தம்முடல் இந்துவு மாமே. 1749

தன்மேனி தற்சிவ லிங்கமாய் நின்றிடுந்
தன்மேனி தானுஞ் சதாசிவ மாய்நிற்குந்
தன்மேனி தற்சிவன் தற்சிவா னந்தமாந்
தன்மேனி தானுகுந் தற்பரந் தானே. 1750

ஆரும் அறியார் அகார மவனென்று
பாரு முகாரம் பரந்திட்ட நாயகி
தாரம் இரண்டுந் தரணி முழுதுமாய்
மாறி யெழுந்திடும் ஓசைய தாமே. 1751

இலிங்கநற் பீடம் இசையும் ஓங்காரம்
இலிங்கநற் கண்ட நிறையு மகாரம்
இலிங்கத்துள் வட்ட நிறையும் உகாரம்
இலிங்க மகார நிறைவிந்து நாதமே. 1752

ஆத்மலிங்கம்

அகார முதலா யனைத்துமாய் நிற்கும்
உகார முதலா யுயிர்ப்பெய்து நிற்கும்
அகார வுகாரம் இரண்டு மறியில்
அகார வுகாரம் இலிங்கம தாமே. 1753

ஆதார மாதேய மாகின்ற விந்துவும்
மேதாதி நாதமு மீதே விரிந்தன
ஆதார விந்து அதிபீட நாதமே
போதாவி லிங்கப் புணர்ச்சிய தாமே. 1754

சத்தி சிவமாம் இலிங்கமே தாபரஞ்
சத்தி சிவமாம் இலிங்கமே சங்கமஞ்
சத்தி சிவமாம் இலிங்கஞ் சதாசிவஞ்
சத்தி சிவமாகுந் தாபரந் தானே. 1755

தானே ரெழுகின்ற சோதியைக் காணலாம்
வானே ரெழுகின்ற ஐம்ப தமர்ந்திடம்
பூநே ரெழுகின்ற பொற்கொடி தன்னுடன்
தானே ரெழுகின்ற வகாரம தாமே. 1756

விந்துவும் நாதமும் மேவு மிலிங்கமாம்
விந்துவ தேபீட நாதமி லிங்கமாம்
அந்த இரண்டையும் ஆதார தெய்வமாய்
வந்த கருவைந்துஞ் செய்யு மவையைந்தே. 1757

சத்திநற் பீடந் தகுநல்ல ஆன்மா
சத்திநற் கண்டந் தகுவித்தை தானுகுஞ்
சத்திநல் லிங்கந் தகுஞ்சிவ தத்துவஞ்
சத்திநல் லான்மாச் சதாசிவந் தானே. 1758

மனம்புகுந் தென்னுயிர் மன்னிய வாழ்க்கை
மனம்புகுந் தின்பம் பொழிகின்ற போது
நலம்புகுந் தென்னொடு நாதனை நாடும்
இலம்புகுந் தாதியு மேற்கொண்ட வாறே. 1759

பராபரன் எந்தை பனிமதி சூடி
தராபரன் றன்னடி யார்மனக் கோயிற்
சிராபரன் தேவர்கள் சென்னியின் மன்னும்
அராமரன் மன்னி மனத்துறைந் தானே. 1760

பிரானல்ல நாமெனிற் பேதை யுலகங்
குராலென்னு மென்மனங் கோயில்கொள் ஈசன்
அராநின்ற செஞ்சடை அங்கியும் நீரும்
பொராநின றவர்செய்யப் புண்ணியன் தானே. 1761

அன்றுநின் ருன்கிடந் தானவன் என்று
சென்றுநின் றெண்டிசை ஏத்துவர் தேவர்கள்
என்றுநின் றேத்துவன் எம்பெரு மான்தன்னை
ஒன்றியென் உள்ளத்தின் உள்ளிருந் தானே. 1762

ஞானலிங்கம்

உருவும் அருவும் உருவோ டருவும்
மருவு பரசிவன் மன்பல் லுயிர்க்குங்
குருவு மெனநிற்குங் கொள்கைய னுகுந்
தருவென நல்குஞ் சதாசிவன் தானே. 1763

நாலான கீழ துருவ நடுநிற்க
மேலான நான்கு மருவு மிகநாப்பண்
நாலான ஒன்று மருவுரு நண்ணலால்
பாலா மிவையாம் பரசிவன் தானே. 1764

தேவர் பிரானைத் திசைமுக நாதனை
நால்வர் பிரானை நடுவுற்ற நந்தியை
ஏவர் பிரானென் றிறைஞ்சுவ ரவ்வழி
ஆவர் பிரானடி அண்ணலு மாமே. 1765

வேண்டிநின் றேதொழு தேன்வினை போயற
ஆண்டொரு திங்களும் நாளும் அளக்கின்ற
காண்டகை யானெடுங் கன்னி யுணரினும்
மூண்டகை மாறினும் ஒன்றது வாமே. 1766

ஆதி பரந்தெய்வம் அண்டத்து நற்றெய்வஞ்
சோதி யடியார் தொடரும் பெருந்தெய்வம்
நீதியுள் மாதெய்வம் நின்மலன் எம்மிறை
பாதியுள் மன்னும் பராசத்தி யாமே. 1767

சத்திக்கு மேலே பராசத்தி தன்னுள்ளே
சுத்த சிவபதந் தோயாத தூவொளி
அத்தன் திருவடிக் கப்பாலைக் கப்பாலாம்
ஒத்தவு மாமீசன் தானான வுண்மையே. 1768

கொழுந்தினைக் காணிற் குவலயந் தோன்றும்
எழுந்திடங் காணில் இருக்கலு மாகும்
பரந்திடங் காணிற் பார்ப்பதி மேலே
திரண்டெழக் கண்டவன் சிந்தையு ளானே. 1769

எந்தை பரமனும் என்னம்மை கூட்டமும்
முந்த வுரைத்து முறைசொல்லின் ஞானமாஞ்
சந்தித் திருந்த விடம்பெருங் கண்ணியை
உந்தியின் மேல்வைத்(து) உகந்திருந் தானே. 1770

சத்தி சிவன்விளை யாட்டாம் உயிராகி
ஒத்த இருமாயா கூட்டத் திடையூட்டிச்
சுத்தம தாகுந் துரியம் பிறிவித்துச்
சித்தம் புகுந்து சிவமக மாக்குமே. 1771

சத்தி சிவன்றன் விளையாட்டுத் தாரணி
சத்தி சிவமுமாஞ் சிவன்சத் தியுமாகுஞ்
சத்தி சிவமன்றித் தாபரம் வேறில்லை
சத்திதான் என்றுஞ் சமைந்துரு வாகுமே. 1772

சிவலிங்கம்

குரைக்கின்ற வாரிக் குவலய நீரும்
பரக்கின்ற காற்றுப் பயில்கின்ற தீயும்
நிறைக்கின்ற வாறிவை நீண்டகன் றானை
வரைத்து வலஞ்செயு மாறறி யேனே. 1773

வரைத்து வலஞ்செய்யு மாறிங்கொன் றுண்டு
திரைத்து வருகங்கை நீர்மல ரேந்தி
உரைத்தவன் நாமம் உணரவல் லார்க்குப்
புரைத்தெங்கும் போகான் புரிசடை யோனே. 1774

ஒன்றெனக் கண்டேனெம் ஈசன் ஒருவனை
நன்றென் றடியிணை நானவ னைத்தொழ
வென்றைம் புலனு மிகக்கிடந் தின்புற
அன்றென் றருள்செய்யும் ஆதிப் பிரானே. 1775

மலர்ந்த அயன்மால் உருத்திரன் மகேசன்
பலந்தரும் ஐம்முகன் பரவிந்து நாதம்
நலந்தரு சத்தி சிவன்வடி வாகிப்
பலந்தரு லிங்கம் பராநந்தி யாமே. 1776

மேவி யெழுகின்ற செஞ்சுட ரூடுசென்
ருவி எழுமன வன்றே உடலுற
மேவப் படுவதும் விட்டு நிகழ்வதும்
பாவித் தடக்கிற் பரகதி தானே. 1777

சம்பிரதாயம்

உடல்பொருள் ஆவி உதகத்தாற் கொண்டு
படர்வினை பற்றறப் பார்த்துக்கை வைத்து
நொடியின் அடிவைத்து நுண்ணுணர் வாக்கிக்
கடியப் பிறப்பறக் காட்டினன் நந்தியே. 1778

உயிருஞ் சரீரமும் ஒண்பொரு ளான
வியவார் பரமும்பின் மேவும் பிராணன்
செயலார் சிவமுஞ் சிற்சத்தி யாதிக்கே
உயலார் குருபரன் உய்யக்கொண் டானே. 1779

பச்சிம திக்கிலே வைத்த ஆசாரியன்
நிச்சலும் என்னை நினையென்ற வப்பொருள்
உச்சிக்குங் கீழது வுண்ணாக்கு மேலது
வைச்ச பதமிது வாய்திற வாதே. 1780

பெட்டடித் தெங்கும் பிதற்றித் திரிவேனை
யொட்டடித் துள்ளமர் மாசெலாம் வாங்கித்
தட்டொக்க மாறினன் தன்னையும் என்னையும்
வட்டம தொத்தது வாணிபம் வாய்த்ததே. 1781

தரிக்கின்ற பல்லுயிர்க் கெல்லாந் தலைவன்
இருக்கின்ற தன்மையை யேதும் உணரார்
பிரிக்கின்ற விந்து பிணக்கறுத் தெல்லாங்
கருக்கொண்ட ஈசனைக் கண்டுகொண் டேனே. 1782

கூடும் உடல்பொருள் ஆவி குறிக்கொண்டு
நாடி யடிவைத் தருண்ஞான சத்தியால்
பாடல் உடலினிற் பற்றற நீக்கியே
கூடிய தானவ னுங்குளிக் கொண்டே. 1783

கொண்டா னடியேன் அடிமை குறிக்கொள்ளக்
கொண்டான் உயிர்பொருள் காயக் குழாத்தினைக்
கொண்டான் பலமுற்றுந் தந்தவன் கோடலாற்
கொண்டா னெனவொன்றுங் கூறுகி லேனே. 1784

குறிக்கின்ற தேகமுந் தேகியுங் கூடி
நெறிக்கும் பிராணன் நிலைபெற்ற சீவன்
பறிக்கின்ற காயத்தைப் பற்றிய நேர்மை
பிறக்க அறியாதார் பேயுடன் ஒப்பரே. 1785

உணர்வுடை யார்கட் குலகமுந் தோன்றும்
உணர்வுடை யார்கட் குறுதுய ரில்லை
உணர்வுடை யார்கள் உணர்ந்தவக் காலம்
உணர்வுடை யார்கள் உணர்ந்துகண் டாரே. 1786

காயப் பரப்பில் அலைந்து துரியத்துச்
சால விரிந்து குவிந்து சகலத்தில்
ஆயவவ் வாறு றடைந்து திரிந்தோர்க்குத்
தூய அருள்தந்த நந்திக்கென் சொல்வதே. 1787

நானென நீயென வேறில்லை நண்ணுதல்
ஊனென வூனுயிர் என்ன வுடனின்று
வானென வானவர் நின்று மனிதர்கள்
தேனென இன்பந் திளைக்கின்ற வாறே. 1788

அவனும் அவனும் அவனை யறியார்
அவனை யறியில் அறிவானும் இல்லை
அவனும் அவனும் அவனை யறியில்
அவனும் அவனும் அவனிவ னாமே. 1789

நானிது தானென நின்றவ னாடொறும்
ஊனிது தானுயிர் போலுணர் வானுளன்
வானிரு மாமுகில் போற்பொழி வானுளன்
நானிது வம்பர நாதனு மாமே. 1790

பெருந்தன்மை தானென யானென வேறாய்
இருந்தது மில்லைய தீசன் அறியும்
பொருந்தும் உடலுயிர் போலுமை மெய்யே
திருந்தமுன் செய்கின்ற தேவர் பிரானே. 1791

திருவருள் வைப்பு

இருபத மாவ திரவும் பகலும்
உருவது வாவ துயிரும் உடலும்
அருளது வாவ தறமுந் தவமும்
பொருளது வுள்நின்ற போகம தாமே. 1792

காண்டற் கரியன் கருத்திலன் நந்தியுந்
தீண்டற்குஞ் சார்தற்குஞ் சேயனுந் தோன்றிடும்
வேண்டிக் கிடந்து விளக்கொளி யானெஞ்சம்
ஈண்டுக் கிடந்தங் கிருளறு மாமே. 1793

குறிப்பினின் உள்ளே குவலயந் தோன்றும்
வெறுப்பிருள் நீங்கில் விகிர்தனும் நிற்குஞ்
செறிப்புறு சிந்தையைச் சிக்கென நாடில்
அறிப்புறு காட்சி அமரரு மாமே. 1794

தேர்ந்தறி யாமையின் சென்றன காலங்கள்
பேர்ந்தறி வானெங்கள் பிஞ்ஞகன் எம்மிறை
ஆர்ந்தறி வாரறி வேதுணை யாமெனச்
சார்ந்தறி வான்பெருந் தன்மைவல் லானே. 1795

தானே யறியும் வினைகள் அழிந்தபின்
நானே யறிகிலன் நந்தி யறியுங்கொல்
ஊனே யுருகி யுணர்வை யுணர்ந்தபின்
தேனே யனையனந் தேவர் பிரானே. 1796

யானறிந் தன்றே யிருக்கின்ற தீசனை
வானறிந் தாரறி யாது மயங்கினர்
ஊனறிந் துள்ளே யுயிர்க்கின்ற ஒண்சுடர்
தானறி யான்பின்னை யாரறி வாரே. 1797

அருளெங்கு மான அளவை யறியார்
அருளை நுகரமு தானதுந் தேரார்
அருளைங் கருமத் ததிசூக்க முன்னூர்
அருளெங்குங் கண்ணான தாரறி வாரே 1798

அறிவில் அணுக அறிவது நல்கிப்
பொறிவழி யாசை புகுத்திப் புணர்ந்திட்(டு)
அறிவது வாக்கி அடியருள் நல்குஞ்
செறிவொடு நின்றார் சிவமாயி னாரே. 1799

அருளிற் பிறந்திட்(டு) அருளில் வளர்ந்திட்(டு)
அருளிற் அழிந்திளேப் பாறி மறைந்திட்(டு)
அருளான ஆனந்தத்(து) ஆரமு தூட்டி
அருளால் என்நந்தி யகம்புகுந் தானே. 1800

அருளால் அமுதப் பெருங்கடல் ஆட்டி
அருளால் அடிபுனேந் தார்வமுந் தந்திட்(டு)
அருளான ஆனந்தத் தாரமு தூட்டி
அருளால் என்நந்தி யகம்புகுந் தானே. 1801

பாசத்தி லிட்ட தருளந்தப் பாசத்தின்
நேசத்தை விட்ட தருளந்த நேசத்திற்
கூசற்ற முத்தி யருளந்தக் கூட்டத்தின்
நேசத்துத் தோன்ரு நிலேயரு ளாமே. 1802

பிறவா நெறிதந்த பேரரு ளாளன்
மறவா அருள்தந்த மாதவன் நந்தி
அறவாழி அந்தணன் ஆதிப் பராபரன்
உறவாகி வந்தென் உளம்புகுந் தானே. 1803

அகம்புகுந் தானடி யேற்கரு ளாலே
அகம்புகுந் துந்தெரி யானரு ளில்லோர்க்
ககம்புகுந் தானந்த மாக்கிச் சிவமாய்
அகம்புகுந் தானந்தி யானந்தி யாமே. 1804

ஆயும் அறிவோ(டு) அறியாத மாமாயை
ஆய கரணம் படைக்கும்ஐம் பூதமு
மாய பலவிந் திரிய மவற்றுடன்
ஆய வருளைந்து மாமருட் செய்கையே. 1805

அருளே சகலமு மாய பவுதிகம்
அருளே சராசர மாய வகிலமே
இருளே வெளியே யெனுமெங்கும் ஈசன்
அருளே சகளத்த னன்றியின் ருமே. 1806

சிவமொடு சத்தி திகழ்நாதம் விந்து
தவமான ஐம்முகன் ஈசன் அரனும்
பவமுறு மாலும் பதுமத்தோன் ஈரு
நவமவை யாகி நடிப்பவன் தானே: 1807

அருட்கண் ணிலாதர்க் கரும்பொருள் தோன்று
அருட்கண் ணுளோர்க்கெதிர் தோன்றும் அரனே
இருட்கண்ணி னேர்க்கங் கிரவியுந் தோன்ருத்
தெருட்கண்ணி னேர்க்கெங்குஞ் சீரொளி யாமே. 1808

தானே படைத்திடுந் தானே அளித்திடுந்
தானே துடைத்திடுந் தானே மறைத்திடுந்
தானே யிவைசெய்து தான்முத்தி தந்திடுந்
தானே வியாபித் தலைவனு மாமே. 1809

தலையான நான்குந் தனதரு வாகும்
மலையா வருவுரு வாகுஞ் சதாசிவம்
நிலையான கீழ்நான்கு நீடுரு வாகுந்
துலையா இவைமுற்று மாயல்ல தொன்றே. 1810

ஒன்றது வாலே உலப்பிலி தானுகி
நின்றது தான்போல் உயிர்க்குயி ராய்நிலை
துன்றி யவையல்ல வாகுந் துணையென்ன
நின்றது தான்விளை யாட்டென்னுள் நேயமே, 1811

நேயத்தே நின்றிடும் நின்மலன் சத்தியோ
டாயக் குடிலையுள் நாதம் அடைந்திட்டுப்
போயக் கலைபல வாகப் புணர்ந்திட்டு
வீயத் தகாவிந்து வாக விளையுமே, 1812

விளையும் பரவிந்து தானே வியாபி
விளையுந் தனிமாயை மிக்கமா மாயை
கிளையொன்று தேவர் கிளர்மனு வேதம்
அளவொன் றிலாவண்ட கோடிக ளாமே. 1813

அருளொளி

அருளிற் றலைநின் றறிந்தழுந் தாதார்
அருளிற் றலைநில்லார் ஐம்பாச நீங்கார்
அருளிற் பெருமை யறியார் செறியார்
அருளிற் பிறந்திட்(டு) அறிந்தறி வாரே. 1814

வாரா வழிதந்த மாநந்தி பேர்நந்தி
ஆரா அமுதளித் தானந்தி பேர்நந்தி
பேரா யிரமுடைப் பெம்மான்பே ரொன்றினில்
ஆரா அருட்கடல் ஆடுகென் றானே. 1815

ஆடியும் பாடியும் அழுதும் அரற்றியுந்
தேடியுங் கண்டேன் சிவன்பெருந் தன்மையைக்
கூடிய வாறே குறியாக் குறிதந்தென்
ஊடுநின் றானவன் தன்னரு ளுற்றே. 1816

உற்ற பிறப்பும் உறுமல மானதும்
பற்றிய மாயாப் படல மெனப்பண்ணி
அத்தனை நீயென் றடிவைத்தான் பேர்நந்தி
கற்றன விட்டேன் கழல்பணிந் தேனே. 1817

விளக்கினை யேற்றி வெளியை அறிமின்
விளக்கினின் முன்னே வேதனை மாறும்
விளக்கை விளக்கும் விளக்குடை யார்கள்
விளக்கில் விளங்கும் விளக்கவர் தாமே. 1818

ஒளியும் இருளும் ஒருகாலுந் தீர
ஒளியுளோர்க் கன்றே ஒழியா தொளியும்
ஒளியிருள் கண்டகண் போலவே றாயுள்
ஒளியிருள் நீங்க வுயிர்சிவ மாமே. 1819

புறமே திரிந்தேனைப் பொற்கழல் சூட்டி
நிறமே புகுந்தென்னை நின்மல னாக்கி
அறமே புகுந்தெனக் காரமு தீந்த
திறமேதென் றெண்ணித் திகைத்திருந் தேனே. 1820

அருளது வென்ற அகலிடம் ஒன்றும்
பொருளது வென்ற புகலிடம் ஒன்றும்
மருளது வென்ற மனம்புகுந் தானைத்
தெருளுறும் பின்னைச் சிவகதி யாமே. 1821

கூறுமின் னீர்முன் பிறந்திங் கிறந்தமை
வேறொரு தெய்வத்தின் மெய்ப்பொருள் நீங்கிடும்
பாறணி யும்முடல் வீழவிட் டாருயிர்
தேறணி யோமிது செப்பவல் லீரே. 1822

சிவபூசை

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்(பு) ஆலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிவார்க்குச் சீவன் சிவலிங்கங்
கள்ளப் புலனைந்துங் காளா மணிவிளக்கே. 1823

வேட்டவி யுண்ணும் விரிசடை நந்திக்குக்
காட்டவும் நாமிலங் காலையும் மாலையும்
ஊட்டவி யாவன வுள்ளங் குளிர்விக்கும்
பாட்டவி காட்டுதும் பாலவி யாமே. 1824

பான்மொழி பாகன் பராபரன் தானாகு
மான சதாசிவன் தன்னையா வாகித்து
மேன்முகம் ஈசான மாகவே கைக்கொண்டு
சீன்முகஞ் செய்யச் சிவனவ னாகுமே. 1825

நினைவதும் வாய்மை மொழிவது மல்லாற்
கனைகழல் ஈசனைக் காண வரிதாங்
கனைகழல் ஈசனைக் காண்குற வல்லார்
புனைமலர் நீர்கொண்டு போற்றவல் லாரே. 1826

மஞ்சன மாலை நிலாவிய வானவர்
நெஞ்சினுள் ஈசன் நிலைபெறு காரணம்
அஞ்சமு தாம்உப சாரம்எட் டெட்டொடும்
அஞ்சலி யோடுங் கலந்தர்ச்சித் தார்களே. 1827

புண்ணியஞ் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு
அண்ணல் அதுகண்(டு) அருள்புரி யாநிற்கும்
எண்ணிலி பாவிகள் எம்மிறை யீசனை
நண்ணறி யாமல் நழுவுகின் றாரே. 1828

அத்த னவதீர்த்த மாடும் பரிசுகேள்
ஒத்தமெய்ஞ் ஞானத் துயர்ந்தார் பதத்தைச்
சுத்தம தாக விளக்கித் தெளிக்கவே
முத்தியா மென்றுநம் மூலன் மொழிந்ததே, 1829

மறுப்புற்று விவ்வழி மன்னிநின் றானுஞ்
சிறப்பொடு பூநீர் திருந்தமுன் ஏந்தி
மறப்பின்றி யுன்னை வழிபடும் வண்ணம்
அறப்பெற வேண்டும் அமரர் பிரானே. 1830

ஆரா தனையும் அமரர் குழாங்களுந்
தீராக் கடலும் நிலத்தும தாய்நிற்கும்
பேரா யிரமும் பிரான்திரு நாமமும்
ஆரா வழியெங்கள் ஆதிப் பிரானே. 1831

ஆனைந்தும் ஆட்டி அமரர் கணந்தொழத்
தானந்த மில்லாத் தலைவன் அருளது
தேனுந்து மாமலர் உள்ளே தெளிந்ததோர்
பாரைங் குணமும் படைத்துநின் றானே. 1832

உழைக்கொண்ட பூநீர் ஒருங்குடன் ஏந்தி
மழைக்கெண்ட மாமுகின் மேற்சென்று வானோர்
தழைக்கொண்ட பாசந் தயங்கிநின் றேத்தப்
பிழைப்பின்றி எம்பெரு மானரு ளாமே. 1833

வெள்ளக் கடலுள் விரிசடை நந்திக்கு
உள்ளக் கடற்புக்கு வார்சுமை பூக்கொண்டு
கள்ளக் கடல்விட்டுக் கைதொழ மாட்டாதார்
அள்ளற் கடலுள் அழுந்துகின் றாரே. 1834

கழிப்படுந் தண்கடற் கௌவை யுடைத்து
வழிப்படு வார்மலர் மொட்டறி யார்கள்
பழிப்படு வார்பல ரும்பழி வீழ
வெளிப்படு வோருச்சி மேவிநின் றானே. 1835

பயனறி வொன்றுண்டு பன்மலர் தூவிப்
பயனறி வார்க்கரன் தானே பயிலும்
நயனங்கள் மூன்றுடை யானடி சேர
வயனங்க ளாலென்றும் வந்துநின் றானே. 1836

ஏத்துவர் மாமலர் தூவித் தொழுதுநின்(று)
ஆர்த்தெம தீசன் அருச்சே வடியென்றன்
மூர்த்தியை 'மூவா முதலுரு வாய்நின்ற
தீர்த்தனை யாருந் துதித்துண ராரே. 1837

தேவர்க ளோடிசை வந்துமண் ணேடுறும்
பூவொடு நீர்சுமந் தேத்திப் புனிதனை
மூவரிற் பன்மை முதல்வனாய் நின்றருள்
நீர்மையை யாவர் நினைக்கவல் லாரே. 1838

உழைக்கவல் லோர்நடு நீர்மல ரேந்திப்
பிழைப்பின்றி யீசன் பெருந்தவம் பேணி
இழைக்கொண்ட பாதத் தினமலர் தூவி
மழைக்கொண்டல் போலவே மன்னிநில் லீரே. 1839

வென்று விரைந்து விரைப்பணி யென்றனர்
நின்று பொருந்த இறைபணி நேர்படத்
துன்று சலமலர் தூவித் தொழுதிடிற்
கொண்டிடு நித்தலுங் கூறிய வன்றே. 1840

சாத்தியும் வைத்துஞ் சயம்புவென் றேத்தியும்
ஏத்திய நாளு மிறையை யறிகிலார்
ஆத்தி மலக்கிட் டகத்தழுக் கற்றக்கான்
மாத்திக்கே செல்லும் வழியது வாமே. 1841

ஆவிக் கமலத்தின் அப்புறத் தின்புற
மேவித் திரியும் விரிசடை நந்தியைக்
கூவிக் கருதிக் கொடுபோய்ச் சிவத்திடைத்
தாவிக்கு மந்திரந் தாமறி யாரே. 1842

சாணகத் துள்ளே அழுந்திய மாணிக்கம்
காணு மளவுங் கருத்தறி வாரில்லை
பேணிப் பெருக்கிப் பெருக்கி நினைவோர்க்கு
மாணிக்க மாலை மனம்புகுந் தானே. 1843

பெருந்தன்மை நந்தி பிணங்கிருள் நேமி
இருந்தன்மை யாலுமென் நெஞ்சிடங் கொள்ள
வருந்தன்மை யாளனை வானவர் தேவர்
தருந்தன்மை யாளனைத் தாங்கிநின் றாரே. 1844

சமைய மலசுத்தி தன்செயல் அற்றிடும்
அமையும் விசேடமு மானமந் திரசுத்தி
சமையநிர் வாணங் கலாசுத்தி யாகும்
அமைமன்னு ஞான மாணூர்க் கபிடேகமே. 1845

ஊழிதோ றூழி யுணர்ந்தவர்க் கல்லது
ஊழில் உயிரை யுணரவுந் தானொட்டா
ஆழி யமரும் அரியயன் என்றுளோர்
ஊழி கடந்துமோ ருச்சியு ளானே. 1846

குருபூசை

ஆகின்ற நந்தி யடித்தா மரைபற்றிப்
போகின்ற வுபதேசம் பூசிக்கும் பூசையும்
ஆகின்ற ஆதார மாரு றதன்மேற்
போகின்ற பொற்பையும் போற்றுவன் யானே. 1847

காணுறு கோடி கடிகமழ் சந்தனம்
வானுற மாமல ரிட்டு வணங்கினும்
ஊனினை நீக்கி யுணர்பவர்க் கல்லது
தேனமர் பூங்கழல் சேரவொண் ணாதே. 1848

மேவிய ஞானத்தின் மிக்கிடின் மெய்ப்பரன்
ஆவியின் ஞான நெறி நிற்றல் அர்ச்சனை
ஓவற வுட்பூ சனைசெய்யில் உத்தமஞ்
சேவடி சேரல் செயலறல் தானே. 1849

உச்சியுங் காலையும் மாலையும் ஈசனை
நச்சுமின் நச்சி நமவென்று நாமத்தை
விச்சுமின் விச்சி விரிசுடர் மூன்றினும்
நச்சுமின் பேர்நந்தி நாயக னாகுமே. 1850

புண்ணிய மண்டலம் பூசைநா ருகுமாம்
பண்ணிய மேனியும் பத்துநூ ருகுமாம்
எண்ணிலிக் கைய மிடிற்கோடி யாகுமால்
பண்ணிடில் ஞானியூண் பார்க்கில் விசேடமே. 1851

இந்துவும் பானுவும் இலங்குந் தலத்திடை
வந்தித்த தெல்லாம் அசுரர்க்கு வாரியாம்
இந்துவும் பானுவும் இலங்காத் தலத்திடை
வந்தித்தல் நந்திக்கு மாபூசையாமே. 1852

இந்துவும் பானுவு மென்றெழு கின்றதோர்
விந்துவும் நாதமு மாகிமீ தானத்தே
சிந்தனை சாக்கிரா தீதத்தே சென்றிட்டு
நந்தியைப் பூசிக்க நற்பூசை யாமே. 1853

மனபவ னங்களை மூலத்தான் மாற்றி
அனித வுடற்பூத மாக்கி யகற்றிப்
புனிதன் அருள்தனிற் புக்கிருந் தின்பத்
தனியுறு பூசை சதாசிவற் காமே. 1854

பகலும் இரவும் பயில்கின்ற பூசை
இயல்புடை யீசர்க் கிணைமல ராகப்
பகலும் இரவும் பயிலாத பூசை
சகலமுந் தான்கொள்வன் தாழ்சடை யோனே. 1855

இராப்பகல் அற்ற இடத்தே யிருந்து
பராக்கற ஆனந்தத் தேறல் பருகி
இராப்பக லற்ற இறையடி யின்பத்
திராப்பகல் மாயை இரண்டிடத் தேனே. 1856

மாகேசுவர பூசை

படமாடக் கோயிற் பகவர்க்கொன்(று) ஈயில்
நடமாடக் கோயில் நம்பர்க்கங் காகா
நடமாடக் கோயில் நம்பர்க்கொன்(று) ஈயில்
படமாடக் கோயிற் பகவற்க தாமே. 1857

தண்டறு சிந்தை தபோதனர் தாமகிழ்ந்(து)
உண்டது மூன்று புவனமும் உண்டது
கொண்டது மூன்று புவனமுங் கொண்டதென்(று)
எண்டிசை நந்தி எடுத்துரைத் தானே. 1858

மாத்திரை யொன்றினின் மன்னி யமர்ந்துறை
யாத்தனுக் கீந்த அரும்பொரு ளானது
மூர்த்திகள் மூவர்க்கு மூவெழு குரவர்க்குந்
தீர்த்தம தாமது தேர்ந்துகொள் வீரே. 1859

அகரம் ஆயிரம் அந்தணர்க் கீயிலென்
சிகரம் ஆயிரஞ் செய்து முடிக்கிலென்
பகரு ஞானி பகலூண் பலத்துக்கு
நிகரில்லை என்பது நிச்சயந் தானே. 1860

ஆறிடும் வேள்வி அருமறை நூலவர்
கூறிடும் அந்தணர் கோடிபே ருண்பதில்
நீறிடுந் தொண்டர் நினைவின் பயனில்லை
பேறெனில் ஓர்பிடி பேறது வாகுமே. 1861

ஏறுடை யாயிறை வாஎம்பி ரானென்று
நீறிடு வாரடி யார் நிகழ் தேவர்கள்
ஆறணி செஞ்சடை யண்ண லிவரென்று
வேறணி வார்க்கு வினையில்லை தானே. 1862

சீர்நந்தி கொண்டு திருமுக மாய்விட்ட
பேர்நந்தி யென்னும் பிறங்கு சடையனை
நாஞெந்து நொந்து வருமள வுஞ்சொல்லப்
பேர்நந்தி யென்னும் பிதற்றொழி யேனே. 1863

அழிதக வில்லா அரனடி யாரைத்
தொழுதகை ஞாலத்துத் தூங்கிநள் நீங்கும்
பழுது படாவணம் பண்பனை நாடித்
தொழுதெழ வையகத் தோரின்ப மாமே. 1864

பகவற்கே தாகிலும் பண்பில ராகிப்
புகுமத்த ராய்நின்று பூசனை செய்யும்
முகமத்தோ டொத்துநின் றூழிதோ றூழி
அகமத்த ராகிநின் றுய்ந்தொழிந் தாரே. 1865

வித்தக மாகிய வேடத்தர் உண்டவூண்
அத்தன் அயன்மால் அருந்திய வண்ணமாஞ்
சித்தந் தெளிந்தவர் சேடம் பருகிடின்
முத்தியா மென்றுநம் மூலன் மொழிந்ததே. 1866

தாழ்விலர் பின்னும் முயல்வர் அருந்தவம்
ஆழ்வினை யாழ அவர்க்கே அறஞ்செய்யும்
ஆழ்வினை நீக்கி அருவினை தன்னொடும்
போழ்வினை தீர்க்கும்அப் பொன்னுல காமே. 1867

அடியார் பெருமை

திகைக்குரி யானொரு தேவனை நாடும்
வகைக்குரி யானொரு வாதி யிருக்கிற்
பகைக்குரி யாரில்லைப் பார்மழை பெய்யும்
அகக்குறை கேடில்லை யவ்வுல குக்கே. 1868

அவ்வுல கத்தே பிறந்தவ் வுடலொடும்
அவ்வுல கத்தே அருந்தவ நாடுவர்
அவ்வுல கத்தே அரனடி கூடுவர்
அவ்வுல கத்தே அருள்பெறு வாரே. 1869

கொண்ட குறியுங் குலவரை யுச்சியும்
அண்டமும் அண்டத்(து) அமரரும் ஆதியும்
எண்டிசை யோரும்வந் தென்கைத் தலத்தினுள்
உண்டெனில் நாமினி உய்ந்தொழிந் தோமே. 1870

அண்டங்கள் ஏழும் அகண்டமும் ஆவியுங்
கொண்ட சராசர முற்றுங் குணங்களும்
பண்டை மறையும் படைப்பளிப் பாதியுங்
கண்ட சிவனுமென் கண்ணன்றி யில்லையே. 1871

பெண்ணல்ல ஆணல்ல பேடல்ல மூடத்துள்
உள்நின்ற சோதி ஒருவர்க் கறியொணுக்
கண்ணின்றிக் காணுஞ் செவியின்றிக் கேட்டிடும்
அண்ணல் பெருமையை ஆய்ந்தது மூப்பே 1872

இயங்கும் உலகினில் ஈசன் அடியார்
மயங்கா வழிசெல்வர் வானுல காள்வர்
புயங்களு மெண்டிசை போதுபா தாள
மயங்காப் பகிரண்ட மாமுடி தானே. 1873

அகம்படி கின்றநம் ஐயனை யோரும்
அகம்படி கண்டவர் அல்லலிற் சேரார்
அகம்படி யுட்புக் கறிகின்ற நெஞ்சம்
அகம்படி கண்டாம் அழிக்கலும் எட்டே. 1874

கழிவு முதலுங் காதற் றுணையும்
அழிவும தாய்நின்ற ஆதிப் பிரானைப்
பழியும் புகழும் படுபொருள் முற்றும்
ஒழியுமென் னுவி யுழவுகொண் டானே. 1875

என்தாயோ டென்னப்பன் ஏழேழ் பிறவியும்
அன்றே சிவனுக் கெழுதிய ஆவணம்
ஒன்று யுலகம் படைத்தான் எழுதினன்
நின்றான் முகில்வண்ணன் நேரெழுத் தாயே. 1876

துணிந்தா ரகம்படி துன்னி உறையும்
பணிந்தா ரகம்படி பாற்பட் டொழுகும்
அணிந்தா ரகம்படி யாதிப் பிரானைக்
கணிந்தா ரொருவர்க்குக் கைவிட லாமே. 1877

தலைமிசை வானவர் தாழ்சடை நந்தி
மிலைமிசை வைத்தனன் மெய்ப்பணி செய்யப்
புலைமிசை நீங்கிய பொன்னுல காளும்
பல்மிசை செய்யும் பட்சடை யோனே. 1878

அறியாப் பருவத்(து) அரனடி யாரைக்
குறியால் அறிந்தின்பங் கொண்ட தடிமை
குறியார் சடைமுடி கட்டி நடப்பார்
மறியார் புனல்மூழ்க மாதவ மாமே. 1879

அவன்பால் அணுகியே அன்புசெய் வார்கள்
சிவன்பால் அணுகுதல் செய்யவும் வல்லர்
அவன்பால் அணுகியே நாடு மடியார்
இவன்பாற் பெருமை இலயம தாமே. 1880

முன்னிருந் தார்முழு தெண்கணத் தேவர்கள்
எண்ணிறந் தன்பால் வருவர் இருநிலத்
தெண்ணிரு நாலு திசையந் தரமொக்கப்
பன்னிரு காதம் பதஞ்செய்யும் பாரே. 1881

சிவயோகி ஞானி செறிந்தஅத் தேசம்
அவயோகம் இன்றி அறிவோருண் டாகும்
தவயோகங் கைகூடு நல்லியல் காணும்
பவயோகம் இன்றிப் பரலோக மாமே. 1882

மேலுணர் வான்மிகு ஞாலம் படைத்தவன்
மேலுணர் வான்மிகு ஞாலம் கடந்தவன்
மேலுணர் வார்மிகு ஞாலத் தமரர்கள்
மேலுணர் வார்சிவன் மெய்யடி யார்களே. 1883

போசனவிதி

எட்டுத் திசையும் இறைவ னடியவர்க்
கட்ட அடிசில் அமுதென் றெதிர்கொள்வர்
ஒட்டி யொருநிலம் ஆள்பவர் அந்நிலம்
விட்டுக் கிடக்கில் விருப்பறி யாரே. 1884

அச்சிவன் உள்நின்ற அருளை அறிந்தவர்
உச்சியம் போதாக வுள்ளமர் கோவிற்குப்
பிச்சை பிடித்துண்டு பேத மறநினைந்
திச்சைவிட் டேகாந்தத் தேறி யிருப்பரே. 1885

பிட்சாவிதி

விச்சுக் கலமுண்டு வேலிச்செய் ஒன்றுண்டு
உச்சிக்கு முன்னே யுழவு சமைந்தது
அச்சங்கெட் டச்செய் அறுத்துண்ண மாட்டாதார்
இச்சைக்குப் பிச்சை இரக்கின்ற வாறே. 1886

பிச்சைய தேற்றான் பிரமன் தலைதன்னில்
பிச்சைய தேற்றான் பிரியா ளறஞ்செய்யப்
பிச்சைய தேற்றான் பிரமன் சிரங்காட்டிப்
பிச்சைய தேற்றான் பிரமன் பரமாகவே. 1887

பரந்துல கேழும் படைத்த பிரானை
இரந்துணி என்பர்கள் எற்றுக் கிரக்கும்
நிரந்தர மாக நினையும் அடியார்
இரந்துண்டு தன்கழல் எட்டச்செய் தானே. 1888

வரவிருந் தான்வழி நின்றிடும் ஈசன்
தரவிருந் தான்தன்னை நல்லவர்க் கின்பம்
பொரவிருந் தான்புக லேபுக லாக
வரவிருந் தாலறி யானென்ப தாமே. 1889

அங்கார் பசியும் அவாவும் வெகுளியுந்
தங்கார் சிவனடி யார்சரீ ரத்திடைப்
பொங்கார் புவனத்துங் புண்ணிய லோகத்துந்
தங்கார் சிவனைத் தலைப்படு வாரே. 1890

மெய்யக ஞான மிகத்தெளிந் தார்களுங்
கையக நீண்டார் கடைத்தலைக் கேசெல்வர்
ஐயம் புகாமல் இருந்த தவசியார்
வையகம் எல்லாம் வரவிருந் தாரே. 1891

முத்திரைபேதம்

நாலெழு மாறவே நண்ணிய முத்திரை
பாலான மோன மொழியிற் பதிவித்து
மேலான நந்தி திருவடி மீதுய்யக்
கோலா கலங்கெட்டுக் கூடுநன் முத்தியே. 1892

துரியங்கண் மூன்றுஞ் சொருகிட னாகி
அரிய வுரைத்தார மங்கே யடக்கி
மருவிய சாம்பவி கேசரி யுண்மை
பெருகிய ஞானம் பிறழ்முத் திரையே. 1893

சாம்பவி நந்தி தன்னருட் பார்வையாம்
ஆம்பவ மில்லா அருட்பாணி முத்திரை
ஓம்பயில் ஓங்கிய வுண்மைய கேசரி
நாம்பயில் நாதன்மெய்ஞ் ஞானமுத் திரையே. 1894

தானத்தி னுள்ளே சதாசிவ னாயிடும்
ஞானத்தி னுள்ளே நற்சிவ மாதலால்
ஏனைச் சிவமாஞ் சொரூப மறைந்திட்ட
மோனத்து முத்திரை முத்தாந்த முத்தியே. 1895

வாக்கு மனமும் இரண்டு மவுனமாம்
வாக்கு மவுனத்து வந்தாலு மூங்கையாம்
வாக்கு மனமும் மவுனமாஞ் சுத்தரே
ஆக்குமச் சுத்தத்தை யாரறி வார்களே. 1896

யோகத்தின் முத்திரை யோரட்ட சித்தியாம்
ஏகத்த ஞானத்து முத்திரை எண்ணுங்கால்
ஆகத் தகுவேத கேசரி சாம்பவி
யோகத்துக் கேசரி யோகமுத் திரையே. 1897

யோகியெண் சித்தி அருளொலி வாதனை
போகிதன் புத்தி புருடார்த்த நன்னெறி
யாகுநன் சத்தியும் ஆதார சோதனை
ஏகமுங் கண்டொன்றில் எய்தநின் றனே. 1898

துவாதச மார்க்கமென் சோடச மார்க்கமாம்
அவாவறு மீரை வகையங்க மாறுந்
தவாவறு வேதாந்த சித்தாந்தத் தன்மை
நவாவக மோடுன்ன னற்சுத்த சைவமே. 1899

மோனத்து முத்திரை முத்தர்க்கு முத்திரை
ஞானத்து முத்திரை நாதர்க்கு முத்திரை
தேனிக்கு முத்திரை சித்தாந்த முத்திரை
கானிக்கு முத்திரை கண்ட சமயமே. 1900

தூநெறி கண்ட சுவடு நடுவெழும்
பூநெறி கண்டது பொன்னக மாய்நிற்கும்
மேனெறி கண்டது வெண்மதி மேதினி
நீனெறி கண்டுள நின்மல னாமே. 1901

பூரணக்குகைநெறிச் சமாதி

வளர்பிறை யிற்றேவர் தம்பாலின் மன்னி
உளரொளி பானுவின் உள்ளே யொடுங்கித்
தளர்விற் பிதிர்பதந் தங்கிச் சசியுள்
உளதுறும் யோகி யுடல்விட்டாற் றனே. 1902

தானிவை யொக்குஞ் சமாதிகை கூடாது
போன வியோகி புகலிடம் போந்நுபின்
ஆனவை தீர நிரந்தர மாயோகம்
ஆனவை சேர்வார் அருளின்சார் வாகியே. 1903

தானிவ் வகையே புவியோர் நெறிதங்கி
ஆன சிவயோகத் தாமாரு மவ்விந்து
தானதி லந்தச் சிவயோகி யாகுமுன்
ஊனத்தோர் சித்திவந் தோர்காய மாகுமே. 1904

சிவயோகி ஞானி சிதைந்துடல் விட்டால்
தவலோகஞ் சேர்ந்துபின் ருன்வந்து கூடிச்
சிவயோக ஞானத்தாற் சேர்ந்தவர் நிற்பர்
புவலோகம் போற்றுநற் புண்ணியத் தோரே. 1905

ஊனமின் ஞானிநல் யோகி யுடல்விட்டால்
தானற மோனச் சமாதியுள் தங்கியே
தானவ ஞகும் பரகாயஞ் சாராதே
ஊனமின் முத்தராய் மீளார் உணர்வுற்றே. 1906

செத்தார் பெறும்பய ஞவது ஏதெனில்
செத்துநீர் சேர்வது சித்திளேக் கூடிடில்
செத்தா ரிருந்தார் செகத்தில் திரிமலஞ்
செத்தார் சிவமாகி யேசித்தர் தாமே. 1907

உன்னக் கருவிட்(டு) உரவோ னரனருள்
பனனப் பரனே அருட்குலம் பாலிப்பன்
என்னப் புதல்வருக்கும் வேண்டி யிடுஞானி
தன்னிச்சைக் கீச னுருச்செய்யுந் தானே. 1908

எங்குஞ் சிவமா யருளாம் இதயத்துத்
தங்குஞ் சிவஞானிக் கெங்குமாந் தற்பரம்
அங்காங் கெனநின்று சகமுண்ட வான்தோய்தல்
இங்கே யிறந்தெங்கு மாய்நிற்கும் ஈசனே. 1909

சமாதிக்கிரியை

அந்தமின் ஞானிதன் னுகந் தீயினில்
வெந்திடி னுடெலாம் வெப்புத் தீயினில்
நொந்தது நாய்நரி நுகரி னுண்செரு
வந்துநாய் நரிக்குண வாகும்வை யகமே. 1910

எண்ணிலா ஞானி யுடலெரி தாவிடில்
அண்ணல்தங் கோயில் அழலிட்ட தாங்கொக்கும்
மண்ணின் மழைவிழா வையகம் பஞ்சமாம்
எண்ணரு மன்னர் இழப்பார் அரசே. 1911

புண்ணிய மாமவர் தம்மைப் புதைப்பது
நண்ணி யனல்கோக்கில் நாட்டில் அழிவாகும்
மண்ணி லழியில் அலங்கார பங்கமாம்
மண்ணுல கெல்லா மயங்குமனல் மண்டியே. 1912

அந்தமில் ஞானி அருளை அடைந்தக்கால்
அந்த வுடல்தான் குகைசெய் திருத்திடில்
சுந்தர மன்னருந் தொல்புவி யுள்ளோரும்
அந்தமில் இன்ப அருள்பெறு வாரே. 1913

நவமிகு சாணுலே நல்லாழஞ் செய்து
குவைமிகு சூழவைஞ் சாணுகக் கோட்டித்
தவமிகு குகைமுக் கோணமுச் சாணுக்கிப்
பவமறு நற்குகை பத்மா சனமே. 1914

தன்மனை சாலை குளங்கரை யாற்றிடை
நன்மலர்ச் சோலை நகரினற் பூமி
உன்னருங் கானம் உயர்ந்த மலைச்சாரல்
இந்நிலந் தான்குகைக் கெய்தும் இடங்களே. 1915

நற்குகை நால்வட்டம் பஞ்சாங்க பாதமாய்
நிற்கின்ற பாத நவபாத நேர்விழப்
பொற்பம ரோசமும் மூன்றுக்கு மூன்றணி
நிற்பவர் தாஞ்செய்யும் நேர்மைய தாமே. 1916

பஞ்ச லோகங்கள் நவமணி பாரித்து
விஞ்சப் படுத்ததன் மேலா சனமிட்டு
முஞ்சி படுத்துவெண் ணீறிட் டதன்மேலே
பொன்செய்த நற்சுண்ணம் பொதியலு மாமே. 1917

நள்குகை நால்வட்டம் படுத்ததன் மேற்சாரக்
கள்ளவிழ் தாமங் களபங்கத் தூரியுந்
தெள்ளிய சாந்து புழுகுபன் னீர்சேர்த்து
ஒள்ளிய தூபம் உவந்திடு வீரே. 1918

ஓதிடும் வெண்ணீற்ருல் உத்தூளங் குப்பாய
மீதினி லிட்டா சனத்தினின் மேல்வைத்துப்
போதறு சுண்ணமும் நீறும் பொலிவித்து
மீதி லிருத்தி விரித்திடு வீரே. 1919

விரித்தபின் ஞற்சா ரு மேவுதல் செய்து
பொரித்த கறிபோ னகமிள நீருங்
குருத்தலம் வைத்தோர் குழைமுகம் பார்வை
தரித்தபின் மேல்வட்டஞ் சாத்திடு வீரே. 1920

மீது சொரிந்திடும் வெண்ணீறுஞ் சுண்ணமும்
போது பலகொண்டு தர்ப்பைப்புல் வில்வமும்
பாத வுதகத்தான் மஞ்சனஞ் செய்துபார்
மீதுமூன் றுக்குமூன் றணிநிலஞ் செய்யுமே 1921

ஆதன மீதில் அரசு சிவலிங்கம்
போதும் இரண்டினில் ஒன்றைத்தா பித்து
மேதகு சந்நிதி மேவுத் தரம்பூர்வங்
காதலிற் சோடசங் காணுப சாரமே. 1922

விந்துற்பனம்

உதயத்தில் விந்துவில் ஓங்குகுண் டலியும்
உதயக் குடிலில் வயிந்தவம் ஒன்பான்
விதியிற் பிரமாதி கள்மிகு சத்தி
கதியிற் கரணங் கலைவை கரியே. 1923

செய்திடும் விந்துபே தத்திறன் ஐயைந்துஞ்
செய்திடு நாதபே தத்திற னுலாறுஞ்
செய்திடு மற்றவை யீரிரண் டிற்றிறஞ்
செய்திடு மாருறு சேர்தத் துவங்களே. 1924

வந்திடு பேத மெலாம்பர விந்து
தந்திடு மாமாயை வாகேசி தற்பரை
உந்து குடிலையோ டேமுறு குண்டலி
விந்துவில் இந்நான்கு மேவா விளங்குமே. 1925

விளங்கு நிவிர்த்தாதி மேவக ராதி
வளங்கொள் உகார மகாரத் துள்விந்து
களங்கமில் நாதாந்தங் கண்ணினுள் நண்ணி
உளங்கொள் மனுதியுள் அந்தமு மாமே. 1926

அந்தமும் ஆதியு மாகிப் பராபரன்
வந்த வியாபி யெனலாய வந்நெறி
கந்தம தாகிய காரண காரியந்
தந்தைங் கருமமுந் தான்செய்யும் வீயமே. 1927

வீயம தாகிய விந்துவின் சத்தியால்
ஆய வகண்டமும் அண்டமும் பாரிப்பக்
காயஐம் பூதமுங் காரிய மாயையில்
ஆயிட விந்து அகம்புற மாகுமே. 1928

புறமகம் எங்கும் புகுந்தொளிர் விந்து
நிறமது வெண்மை நிகழ்நாதஞ் செம்மை
உறமகிழ் சத்தி சிவபாத மாயுட்
டிறனெடு வீடளிக் குஞ்செயற் கொண்டே. 1929

கொண்டஇவ் விந்து பரமம்போற் கோதற
நின்ற படங்கட மாய்நிலை நிற்றலிற்
கண்டக லாதியின் காரண காரியத்
தண்டம் அனைத்துமாய் மாமாயை யாகுமே. 1930

அதுவித்தி லேநின்றங் கண்ணிக்கு நந்தி
இதுவித்தி லேயுள வாற்றை யுணரார்
மதுவித்தி லேமல ரன்னம தாகிப்
பொதுவித்தி லேநின்ற புண்ணியன் தானே. 1931

வித்தினி லன்றி முளையில்லை அம்முளை
வித்தினி லன்றி வெளிப்படு மாறில்லை
வித்தும் முளையும் உடனன்றி வேறல்ல
அத்தன்மை யாகும் அரனெறி காணுமே. 1932

அருந்திய வன்ன மவைமூன்று கூறும்
பொருந்து முடன்மனம் போமல மென்னத்
திருந்து முடன்மன மாங்கூறு சேர்ந்திட்(டு)
இருந்தன முன்னாள் இரதம தாகுமே. 1933

இரத முதலான ஏழ்தாது மூன்றின்
உரிய தினத்தின் ஒருபுற் பனிபோல்
அரிய துளிவிந்து வாகுமேழ் மூன்றின்
மருவிய விந்து வளருங்கா யத்திலே. 1934

காயத்தி லேமூன்று நாளிற் கலந்திட்டுக்
காயத்துட் டன்மன மாகுங் கலாவிந்து
நேயத்தே நின்றோர்க்கு நீங்கா விடாமையின்
மாயத்தே செல்வோர் மனத்தோ டழியுமே. 1935

அழிகின்ற விந்து அளவை யறியார்
கழிகின்ற தன்மையுட் காக்கலுந் தேரார்
அழிகின்ற காயத் தழிந்தயர் வுற்றோர்
அழிகின்ற தன்மை யறிந்தொழி யாரே. 1936

விந்துச்சயம் - யோகசரவோட்டம்

பார்க்கின்ற மாதரைப் பாரா தகன்றுபோய்
ஓர்க்கின்ற வுள்ளம் உருக அழல்மூட்டிப்
பார்க்கின்ற கண்ணுறை பாழ்பட மூலத்தே
சேர்க்கின்ற யோகி சிவயோகி தானே. 1937

தானே யருளாற் சிவயோகந் தங்காது
தானேயக் காமாதி தங்குவோ னும்முட்குந்
தானே யதிகாரந் தங்கிற் சடங்கெடும்
ஊனே யவற்றுள் ளுயிரோம்பா மாயுமே 1938

மாயாள் வசத்தே சென்றிவர் வேண்டில்
ஓயா இருபக்கத் துள்வளர் பக்கத்துள்
ஏயாவெண் ணாளின்ப மேற்பனி மூன்றிரண்
டாயா அப்புரத்து ளாதிநாள் ஆறுமே. 1939

ஆறைந்து பன்னொன்று மன்றிச் சகமார்க்கம்
வேறன்பு வேண்டுவோர் பூவிற் பின்னந்தோ
டேறும் இருபத் தொருநா ளிடைத்தோங்கும்
ஆறின் மிகுத்தோங்கும் அக்காலஞ் செய்யவே. 1940

செய்யும் அளவிற் றிருநண் முகூர்த்தமே
எய்யுங் கலைகாலம் இந்து பருதிகால்
நையுமிடத் தோடினன் காம நூல்நெறி
செய்க வலமிடந் தீர்ந்து விடுக்கவே. 1941

விடுங்காண் முனேந்திந் திரியங்க ளேப்போல்
நடுங்கா திருப்பானும் ஐயைந்து நண்ணப்
படுங்காதன் மாதின்பாற் பற்றற விட்டுக்
கடுங்காற் கரணங் கருத்துறக் கொண்டே. 1942

கொண்ட குணனே நலனேநற் கோமளம்
பண்டை யுருவே பகர்வாய் பவளமே
மிண்டு தனமே மிடைய விடும்போதிற்
கண்ட கரணமுட் செல்லக்கண் டேவிடே. 1943

விட்டபின் கர்ப்பவுற் பத்தி விதியிலே
தொட்டுறுங் காலங்கள் தோன்றக் கருதியே
கட்டிய வாளுள்சா நாள் குணங் கீழ்மைசீர்ப்
பட்ட நெறியிதென் றெண்ணியும் பார்க்கவே. 1944

பார்த்திட்டு வையத்துப் பரப்பற் றுநுப்பெற்று
வார்ச்செற்ற கொங்கை மடந்தையை நீக்கியே
சேர்த்துற் றிருதிங்கள் சேரா தகலினும்
மூப்புற்றே பின்னுளி லாமெல்லா முள்ளவே. 1945

வித்திடு வோர்க்கன்றி மேலோர் விளைவில்லை
வித்திடு வோர்க்கன்றி மிக்கோ ரறிவில்லை
வித்தினில் வித்தை விதற வுணர்வரேல்
மத்தி லிருந்ததோர் மாங்கனி யாபே. 1946

கருத்தினில் அக்கர மாயுவு மியாவுங்
கருத்துளன் ஈசன் கருவுயி ரோடுங்
கருத்தது வித்தாய்க் காரண காரியங்
கருத்துறு மாறிவை கற்பனை தானே. 1947

ஒழியாத விந்து வுடன்நிற்க நிற்கும்
அழியாப் பிராணன் அதிபலஞ் சத்தி
ஒழியாத புத்தி தபஞ்செப மோனம்
அழியாத சித்தியுண் டாம்விந்து வற்றிலே. 1948

வற்ற அனலைக் கொளுவி மறித்தேற்றித்
துற்ற சுழியனல் சொருகிச் சுடருற்று
முற்று மதியத் தமுதை முறைமுறை
செற்றுண் பவரே சிவயோகி யாரே. 1949

யோகியும் ஞானியும் உத்தம சித்தனும்
போகியும் ஞான புரந்தர னுவோனும்
மோக முறினு முரையமிர் துண்போனும்
ஆகிய விந்து அழியாத அண்ணலே. 1950

அண்ணல் உடலாகி யவ்வனல் விந்துவும்
மண்ணிடை மாய்க்கும் பிராணனும் விந்துவும்
கண்ணுங் கனலிடைக் கட்டிக் கலந்தெரித்
துண்ணில் அமிர்தாகி யோகிக் கறிவாமே. 1951

அறியா தழிகின்ற வாதலால் நாளும்
பொறியால் அழிந்து புலம்புகின் றூர்கள்
அறிவாய் நனவி லதீதம் புரியச்
செறிவா யிருந்து சேரவே மாயுமே. 1952

மாதரை மாய வருங்கூற்ற மென்றுன்னக்
காதல தாகிய காமங் கழிந்திடுஞ்
சாதலு மில்லை சதகோடி யாண்டினுஞ்
சோதியி னுள்ளே துரிசறுங் காலமே. 1953

காலங் கடந்தவன் காண்விந்து செற்றவன்
காலங் கடந்தழிந் தான்விந்து செற்றவன்
காலங்க ளின்விந்து செற்றுற்ற காரிகை
காலின்கண் வந்த கலப்பறி யாரே. 1954

கலக்குநாள் முன்னுள் தன்னிடைக் காதல்
நலத்தக வேண்டில்அந் நாரி யுதரக்
கலத்தின் மலத்தைத்தண் சீதத்தைப் பித்தை
விலக்கு வனசெய்து மேலணை வீரே. 1955

மேலா நிலத்தெழு விந்துவும் நாதமுங்
கோலால் நடத்திக் குறிவறி யேசென்று
பாலாம் அமிர்துண்டு பற்றறப் பற்றினுல்
மாலா னதுமாள மாளுமவ் விந்துவே. 1956

விந்து விளையும் விளைவின் பயன்முற்றும்
அந்த வழிவும் அடக்கத்தில் ஆக்கமும்
நந்திய நாதமும் நாதத்தாற் பேதமுந்
தந்துணர் வோர்க்குச் சயமாகும் விந்துவே. 1957

விந்துவென் வீசத்தை மேவிய மூலத்து
நந்திய அங்கியி னுலே நயந்தெரித்
தந்தமில் பானு அதிகண்ட மேலேற்றிச்
சந்திரன் சார்புறத் தண்ணமு தாமே. 1958

அமுதச் சசிவிந்து வாம்விந்து மாள
அமுதப் புனலோடி அங்கியின் மாள
அமுதச் சிவபோகம் ஆதலாற் சித்தி
அமுதப் பலாவன மாங்குறும் யோகிக்கே. 1959

யோகமவ் விந்து ஒழியா வகைபுணர்ந்
தாகம் இரண்டுங் கலந்தாலு மாங்குருப்
போகஞ் சிவபோகம் போகிநற் போகமா
மோகங் கெடமுயங் கார்முடர் மாதர்க்கே. 1960

மாத ரிடத்தே செலுத்தினும் அவ்விந்து
காதலி னுல்விடார் யோகங் கலந்தவர்
மாதர் உயிராசை கைக்கொண்டே வாடுவர்
காதலர் போன்றங்ஙன் காதலாஞ் சாற்றிலே. 1961

சாற்றிய விந்து சயமாகுஞ் சத்தியால்
ஏற்றிய மூலத் தழலை யெழமூட்டி
நாற்றிசை யோடா நடுநாடி நாதத்தோ
டாற்றி யமுதம் அருந்தவிந் தாமே. 1962

விந்துவும் நாதமும் மேவக் கனல்மூள
வந்த வனன்மயிர்க் கால்தோறும் மன்னிடச்
சிந்தனை மாறச் சிவமக மாகவே
விந்துவு மாளுமெய்க் காயத்தில் வித்திலே. 1963

வித்துக்குற் றுண்பான் விளைவறி யாதவன்
வித்துக்குற் றுண்ணுமல் வித்துச்சுட் டுண்பவன்
வித்துக்குற் றுண்பானில் வேறல னீற்றவன்
வித்துக்குற் றுண்ணுமல் வித்துவித் தானன்றே. 1964

அன்னத்தில் விந்து அடங்கும் படிகண்டு
மன்னப் பிராணனும் விந்து மறித்திட்டு
மின்னொத்த விந்துநா தாந்தத்து விட்டிட
வன்னத் திருவிந்து மாயுங்கா யத்திலே. 1965

அன்னம் பிராணனென் றூர்க்கு மிருவிந்து
தன்னை யறிந்துண்டு சாதிக்க வல்லார்க்குச்
சொன்ன மாமுருத் தோன்றும்எண் சித்தியாம்
அன்னவ ரெல்லாம் அழிவற நின்றதே. 1966

நின்ற சிகாரம் நினைக்கும் பிராணனாய்
ஒன்று மகாரம் ஒருமூன்றோ டொன்றவை
சென்று பராசத்தி விந்து சயந்தன்னை
ஒன்ற வுரைக்க வுபதேசந் தானே. 1967

தானே யுபதேசந் தானல்லா தொன்றில்லை
வானே யுயர்விந்து வந்த பதினான்கு
மானே ரடங்க அதன்பின்பு புத்தியுந்
தானே சிவகதி தன்மையு மாமே. 1968

விந்துவும் நாதமும் விளைய விளைந்தது
வந்தஇப் பல்லுயிர் மன்னுயி ருக்கெலாம்
அந்தமும் ஆதியு மாமந் திரங்களும்
விந்து அடங்க விளையுஞ் சிவோகமே. 1969

வறுக்கின்ற வாறு மனத்துலா வெற்றி
நிறுக்கின்ற வாறுமந் நீள்வரை யொட்டிப்
பொறிக்கின்ற வாறுமப் பொல்லா வினையை
அறுக்கின்ற நாள்வரும் அத்திப் பழமே. 1970

விந்துவும் நாதமும் மேவி யுடன்கூடிச்
சந்திர னோடே தலைப்படு மாயிடில்
அந்தர வானத் தமுதம்வந் தூறிடும்
அங்குதி மந்திரம் ஆகுதி யாகுமே. 1971

மனத்தொடு சத்து மனஞ்செவி யென்ன
இனத்தெழு வார்கள் இசைந்தன நாடி
மனத்தில் எழுகின்ற வாக்கு வசனங்
கனத்த இரதமக் காமத்தை நாடிலே. 1972

சத்தமுஞ் சத்த மனமும் மனக்கருத்
தொத்தறி கின்ற விடமும் அறிகிலர்
மெய்த்தறி கின்ற விடமறி வாளர்க்கு
அத்தன் இருப்பிடம் அவ்விடந் தானே. 1973

உரமடி மேதினி யுந்தியி லப்பாம்
விரவிய தன்முலை மேவிய கீழங்கி
கருமுலை மீமிசை கைக்கீழிற் காலாம்
விரவிய கந்தர மேல்வெளி யாமே. 1974

ஆதித்தநிலை - அண்டாதித்தன்

செஞ்சுட ரோன்முத லாகிய தேவர்கள்
மஞ்சுடை மேரு வலம்வரு காரணம்
எஞ்சுட ரீசன் இறைவன் இணையடி
தஞ்சுட ராக வணங்குந் தவமே. 1975

பகலவன் மாலவன் பல்லுயிர்க் கெல்லாம்
புகலவ னாய்நின்ற புண்ணிய நாதன்
இகலற ஏழுல கும்முற வோங்கும்
பகலவன் பல்லுயிர்க் காதியு மாமே. 1976

ஆதித்தன் அன்பினோ டாயிர நாமமுஞ்
சோதியி னுள்ளே சுடரொளி யாய்நிற்கும்
வேதியர் வேண்டினும் விண்ணவர் சொல்லினும்
ஆதியில் அன்பு பழுக்கின்ற வாறே. 1977

தானே யுலகுக்குத் தத்துவ னாய்நிற்குந்
தானே யுலகுக்குத் தையலு மாய்நிற்குந்
தானே யுலகுக்குச் சம்புவு மாய்நிற்குந்
தானே யுலகுக்குத் தண்சுட ராகுமே. 1978

வலையமுக் கோணம் வட்டம் அறுகோணந்
துலையிரு வட்டந் துய்ய விதமெட்டில்
அலையுற்ற வட்டத்தில் ஈரெட் டிதழா
மலைவற் றுதித்தனன் ஆதித்த னாமே. 1979

ஆதித்த னுள்ளி லானமுக் கோணத்திற்
சோதித் திலங்குநற் சூரிய னலாங்
கேத முறுங்கேணி சூரிய னெட்டிற்
சோதிதன் னீட்டிற் சோடசந் தானே. 1980

ஆதித்த னோடே அவனி யிருண்டது
பேதித்த நாலும் பிதற்றிக் கழிந்தது
சோதிக்குள் நின்று துடியிடை செய்கின்ற
வேதப் பொருளை விளங்குகி லீரே. 1981

பாருக்குக் கீழே பகலோன் வரும்வழி
யாருக்குங் காணவொண் ணாத அரும்பொருள்
நீருக்குந் தீக்கும் நடுவே யுதிப்பவன்
ஆருக்கும் எட்டாத ஆதித்தன் தானே. 1982

மண்ணை யிடந்ததின் கீழோடும் ஆதித்தன்
விண்ணை யிடந்து வெளிசெய்து நின்றிடுங்
கண்ணை யிடந்து களிதந்த வானந்தம்
எண்ணுங் கிழமைக் கிசைந்துநின் றானே. 1983

பாரை யிடந்து பகலோன் வரும்வழி
யாரும் அறியார் அருங்கடை நூலவர்
தீரன் இருந்த திருமலை சூழென்பர்
ஊரை யுணர்ந்தார் உணர்ந்திருந் தாரே. 1984

பிண்டாதித்தன்

நின்றும் இருந்துங் கிடந்தும் நடந்தும்
கன்றிய நந்திக் கருத்துள் இருந்தனன்
கொன்று மலங்கள் குழல்வழி யோடிட
வென்று விளங்கும் விரிசுடர் காணுமே. 1985

ஆதித்தன் ஓடியடங்கும் இடங்கண்டு
சாதிக்க வல்லவர் தம்மை யுணர்ந்தவர்
பேதித் துலகம் பிதற்றும் பிதற்றெல்லாம்
ஆதித்த னோடே யடங்குகின் றாரே. 1986

உருவிப் புறப்பட்(டு) உலகை வலம்வந்து
சொருகிக் கிடக்குந் துறையறி வாரில்லை
சொருகிக் கிடக்குந் துறையறி வாளர்க்(கு)
உருகிக் கிடக்குமென் உள்ளன்பு தானே. 1987

மனவாதித்தன்

எறிகதிர் ஞாயிறு மின்பனி சோரும்
எறிகதிர் சோமன் எதிர்நின் றெறிப்ப
விரிகதி ருள்ளே வியங்குமென் ஆவி
ஒருகதி ராகில் உவாவது வாமே. 1988

சந்திரன் சூரியன் தான்வரிற் பூசனை
முந்திய பானுவில் இந்துவந் தேய்முறை
அந்த இரண்டும் உபய நிலத்திற்
சிந்தை தெளிந்தார் சிவமாயி னாரே. 1989

ஆகுங் கலையோ டருக்கன் அனல்மதி
ஆகுங் கலையிடை நான்கென லாமென்பார்
ஆகும் அருக்கன் அனல்மதி யோடொன்ற
ஆகுமப் பூரணை யாமென் றறியுமே 1990

ஈரண்டத் தப்பால் இயங்கிய வவ்வொளி
ஓரண்டத் தார்க்கும் உணரா வுணர்வது
பேரண்டத் தூடே பிறங்கொளி யாய்நின்ற
தாரண்டத் தக்கா ரறியத்தக் காரே. 1991

ஒன்பதின் மேவி யுலகம் வலம்வரும்
ஒன்பது மீசன் இயலறி வாரில்லை
முன்பதின் மேவி முதல்வன் அருளிலார்
இன்ப மிலாரிருள் சூழநின் றாரே. 1992

ஞானாதித்தன்

விந்து அபரம் பரமிரண் டாய்விரிந்
தந்த அபரம் பரநாத மாகியே
வந்தன தம்மிற் பரங்கலை யாதிவைத்
துந்தும் அருணோ தயமென்ன வுள்ளத்தே. 1993

உள்ள அருணோ தயத்தெழும் ஓசைதான்
தெள்ளும் பரநாதத் தின்செய லென்பதால்
வள்ளல் பரவிந்து வைகரி யாதிவாக்
குள்ளன ஐங்கலைக் கொன்றும் உதயமே. 1994

தேவர் பிரான்திசை பத்துத யஞ்செய்யும்
மூவர் பிரானென முன்னொரு காலத்து
நால்வர் பிரான்நடு வாயுரை யாநிற்கும்
மேவு பிரான்என்பர் விண்ணவர் தாமே. 1995

பொய்யிலன் மெய்யன் புவனா பதியெந்தை
மையிருள் நீக்கு மதியங்கி ஞாயிறு
செய்யிருள் நீக்குந் திருவுடை நந்தியென்
கையிருள் நீங்கக் கலந்தெழுந் தானே. 1996

தனிச்சுட ரெற்றித் தயங்கிருள் நீங்க
அனித்திடு மேலே யருங்கனி யூறல்
கனிச்சுட ராய்நின்ற கயிலையில் ஈசன்
நனிச்சுடர் மேல்கொண்ட வண்ணமு மாமே. 1997

நேரறி வாக நிரம்பிய பேரொளி
போரறி யாது புவனங்கள் போய்வருந்
தேரறி யாத திசையொளி யாயிடும்
ஆரறி வாரிது நாயக மாமே. 1998

மண்டலத் துள்ளே மலர்ந்தெழும் ஆதித்தன்
கண்டிடத் துள்ளே கதிரொளி யாயிடுஞ்
சென்றிடத் தெட்டுத் திசையெங்கும் போய்வரும்
நின்றிடத் தேநிலை நேரறி வார்க்கே. 1999

நாபிக்கண் ணூசி நயன நடுவினுந்
தூபியோ டைந்துஞ் சுடர்விடு சோதியைத்
தேவர்கள் ஈசன் திருமால் பிரமனும்
மூவரு மாக வுணர்ந்திருந் தாரே. 2000

சிவாதித்தன்

அன்றிய பாச இருளுமஞ் ஞானமுஞ்
சென்றிடு ஞானச் சிவப்பிர காசத்தால்
ஒன்று மிருசுட ராம்அரு ளுேதயந்
துன்றிருள் நீங்குதல் போலத் தொலைந்ததே. 2001

கடங்கடந் தோறுங் கதிரவன் தோன்றில்
அடங்கிட மூடில் அவற்றில் அடங்கான்
விடங்கொண்ட கண்டனு மேவிய காயத்
தடங்கிட நின்றதும் அப்பரி சாமே. 2002

தானே விரிசுடர் மூன்றுமொன் ருய்நிற்குந்
தானே யயன்மா லெனநின்று தாபிக்குந்
தானே யுடலுயிர் வேறன்றி நின்றுளன்
தானே வெளியொளி தானிருட் டாமே. 2003

தெய்வச் சுடரங்கி ஞாயிறுந் திங்களும்
வையம் புனல் அனல் மாருதம் வானகஞ்
சைவப் பெரும்பதி தாங்கிய பல்லுயிர்
ஐவர்க் கிடமிடை யாறங்க மாமே. 2004

பசுவிலக்கணம் - பிராணன்

உன்னும் அளவில் உணரும் ஒருவனைப்
பன்னு மறைகள் பயிலும் பரமனை
என்னுள் இருக்கும் இளையா விளக்கினை
அன்மை யனென்(று) அறிந்துகொண் டேனே. 2005

அன்ன மிரண்டுள ஆற்றங் கரையினில்
துன்னி யிரண்டுந் துணைப்பிரி யாதன
தன்னிலை யன்னந் தனியொன்ற தென்றக்கால்
பின்ன மடவன்னம் பேறணு காதே. 2006

புருடன்

வைகரி யாதியு மாயா மலாதியும்
பொய்கரி யான புருடாதி பேதமும்
மெய்கரி ஞானங் கிரியா விசேடத்துச்
செய்கரி யீசன் அனுதியே செய்ததே. 2007

அணுவில் அணுவினை ஆதிப் பிரானை
அணுவில் அணுவினை ஆயிரங் கூறிட்(டு)
அணுவில் அணுவை அணுகவல் லார்கட்(கு)
அணுவில் அணுவை அணுகலு மாமே. 2008

படர்கொண்ட ஆலதின் வித்தது போலச்
சுடர்கொண்(டு) அணுவினைத் தூவழிசெய்ய
இடர்கொண்ட பாச இருளற வோட்டி
நடர்கொண்ட நல்வழி நாடலு மாமே. 2009

அணுவுள் அவனும் அவனுள் அணுவுங்
கணுவற நின்ற கலப்ப துணரார்
இணையிலி யீச னவனெங்கு மாகித்
தணிவற நின்றுன் சராசரந் தானே. 2010

சீவன்

மேவிய சீவன் வடிவது சொல்லிடில்
கோவின் மயிரொன்று நூறுடன் கூறிட்டு
மேவிய கூறது ஆயிர மாயினுல்
ஆவியின் கூறுநா றுயிரத் தொன்றே. 2011

ஏனோர் பெருமைய னாயினும் எம்மிறை
ஊனே சிறுமையின் உட்கலந் தங்குளன்
வானோர் அறியு மளவல்லன் மாதேவன்
தானே யறியுந் தவத்தின் அளவே. 2012

உண்டு தெளிவன் உரைக்க வியோகமே
கொண்டு பயிலுங் குணமில்லை யாயினும்
பண்டு பயிலும் பயில்சீவ ஞர்பின்னைக்
கண்டு சிவனுருக் கொள்வர் கருத்துளே. 2013

மாயா வுபாதி வசத்தாகுஞ் சேதனத்
தாய குருவரு ளாலே யதில்தூண்ட
ஓயும் உபாதியோ டொன்றினென் றுதுயிர்
ஆய துரியம் புகுந்தறி வாகவே. 2014

பசு

கற்ற பசுக்கள் கதறித் திரியினுங்
கொற்ற பசுக்கள் குறிகட்டி மேயினு
முற்ற பசுக்கள் ஒருகுடம் பால்போது
மற்றைப் பசுக்கள் வறள்பசு தானே. 2015

கொல்லையின் மேயும் பசுக்களைச் செய்வதென்
எல்லை கடைப்பித் திறைவ னடிகூட்டி
வல்லசெய் தாற்ற மதித்தபின் அல்லது
கொல்லைசெய் நெஞ்சங் குறிப்பறி யாதே. 2016

போதன்

சீவ னெனச்சிவ னென்னவே றில்லை
சீவ னர்சிவ னரை யறிகிலர்
சீவ னர்சிவ னரை யறிந்தபின்
சீவ னர்சிவ னயிட் டிருப்பரே. 2017

குணவிளக் காகிய கூத்தப் பிரானும்
மனவிளக் காகிய மன்னுயிர்க் கெல்லாம்
பணவிளக் காகிய பல்தலை நாகங்
கணவிளக் காகிய கண்காணி யாகுமே. 2018

அறிவாய் அறியாமை நீங்கி யவனே
பொறிவாய் ஒழிந்தெங்குந் தானான போதன்
அறிவா யவற்றினுட் டானு யறிவன்
செறிவாகி நின்றச் சீவனு மாமே. 2019

ஆருறின் தன்மை அறியா திருந்தேனுக்
காருறின் தன்மை அறிவித்தான் பேர்நந்தி
ஆருறின் தன்மை அருளால் அறிந்தபின்
ஆருறுக் கப்புற மாகிநின் ருனே 2020

சிவமா கியஅருள் நின்றறிந் தோரார்
அவமா மலமைந்து மாவ தறியார்
தவமான செய்து தலைப்பறி கின்ரூர்
நவமான தத்துவ நாடகி லாரே. 2021

நாடோறும் ஈசன் நடத்துந் தொழில்உன்னூர்
நாடோறும் ஈசன் நயந்தூட்டல் நாடிடார்
நாடோறும் ஈசன்நல் லோர்க்கருள் நல்கலால்
நாடோறும் நாடார்கள் நாள்வினை யாளரே. 2022

ஐந்திந்திரிய மடக்கு மருமை

ஆக மதத்தன ஐந்து களிறுள
ஆக மதத்தறி யோடணை கின்றில
பாகனு மெய்த்தவை தாமும் இளைத்தபின்
யோகு திருந்துதல் ஒன்றறி யோமே. 2023

கருத்தினன் னூல்கற்றுக் கால்கொத்திப் பாகன்
திருத்தலும் பாய்மாத் திகைத்தன்றிப் பாயா
எருத்துற வேறி யிருக்கலு மாங்கே
வருத்தினும் அம்மா வழிநட வாதே. 2024

புலமைந்து புள்ளைந்து புட்சென்று மேயும்
நிலமைந்து நீரைந்து நீர்மையும் ஐந்து
குலமொன்று கோல்கொண்டு மேய்ப்பான் ஒருவன்
உலமந்து போம்வழி யொன்பது தானே. 2025

அஞ்சுள சிங்கம் அடவியில் வாழ்வன
அஞ்சும்போய் மேய்ந்துதம் அஞ்சக மேபுகும்
அஞ்சின் உகிரும் எயிறும் அறுத்திட்டால்
எஞ்சாது இறைவனை எய்தலு மாமே. 2026

ஐவர் அமைச்சருள் தொண்ணூற் றறுவர்கள்
ஐவரு மைந்தரு மாளக் கருதுவர்
ஐவரு மைந்து சினத்தொடே நின்றிடில்
ஐவர்க் கிறையிறுத் தாற்றகி லோமே. 2027

சொல்லகில் லேன்சுடர்ச் சோதியை நாடொறுஞ்
சொல்லகில் லேன்திரு மங்கையும் அங்குள
வெல்லகில் லேன்புலன் ஐந்துடன் தன்னையுங்
கொல்லதின் றேடுங் குதிரையொத் தேனே. 2028

எண்ணிலி யில்லி யுடைத்தவ் விருட்டறை
எண்ணிலி யில்லியோ டேகிற் பிழைதரும்
எண்ணிலி யில்லியோ டேகாமை காக்குமேல்
எண்ணிலி யில்லதோர் இன்பம தாமே. 2029

விதியின் பெருவலி வேலைசூழ் வையந்
துதியின் பெருவலி தொல்வான் உலகம்
மதியின் பெருவலி மானுடர் வாழ்க்கை
நிதியின் பெருவலி நீர்வலி தானே. 2030

ஐந்திந்திரியம் அடக்கும் முறைமை

குட்ட மொருமுழ முள்ள தரைமுழம்
வட்டம் அமைந்ததோர் வாவியுள் வாழ்வன
பட்டன மீன்பல பரவன் வலைகொணர்ந்
திட்டனன் யாமினி யேதமி லோமே. 2031

கிடக்கும் உடலிற் கிளரிந் திரியம்
அடக்க லுறுமவன் தானே யமரன்
விடக்கிரண் டின்புற மேவுறு சிந்தை
நடக்கின் நடக்கும் நடக்கு மளவே. 2032

அஞ்சு மடக்கடக் கென்பர் அறிவிலார்
அஞ்சு மடக்கும் அமரரும் அங்கிலை
அஞ்சு மடக்கில் அசேதன மாமென்றிட்(டு)
அஞ்சு மடக்கா அறிவறிந் தேனே. 2033

முழக்கி எழுவன மும்மத வேழம்
அடக்க அறிவென்னுந் தோட்டியை வைத்தேன்
பிழைத்தன வோடிப் பெருங்கேடு மண்டிக்
கொழுத்தன வேழங் குலைக்கின்ற வாறே. 2034

ஐந்தில் ஒடுங்கில் அகலிட மாவது
ஐந்தில் ஒடுங்கில் அருந்தவ மாவது
ஐந்தில் ஒடுங்கில் அரன்பத மாவது
ஐந்தில் ஒடுங்கில் அருளுடை யாரே. 2035

பெருக்கப் பிதற்றிலென் பேய்த்தேர் நினைந்தென்
விரித்த பொருட்கெல்லாம் வித்தாவ துள்ளம்
பெருக்கிற் பெருக்குஞ் சுருக்கிற் சுருக்கும்
அருத்தமும் அத்தனை ஆய்ந்துகொள் வார்க்கே. 2036

இளைக்கின்ற வாற்றிந் தின்னுயிர் வைத்த
கிளைக்கொன்று மீசனைக் கேடில் புகழோன்
தளைக்கொன்ற நாகமஞ் சாடல் ஒடுக்கத்
துளைக்கொண்ட தவ்வழி தூங்கும் படைத்தே. 2037

பாய்ந்தன பூதங்கள் ஐந்தும் படரொளி
சார்ந்திடு ஞானத் தறியினிற் பூட்டிட்டு
வாய்ந்துகொள் ஆனந்த மென்னும் அருள்செய்யில்
வேய்ந்துகொள் மேலை விதியது தானே. 2038

நடக்கின்ற நந்தியை நாடொறு முன்னில்
படர்க்கின்ற சிந்தையைப் பைய வொடுக்கிக்
குறிக்கொண்ட சிந்தை குறிவழி நோக்கில்
வடக்கொடு தெற்கு மனக்கோயி லாமே. 2039

சென்றன நாழிகை நாள்கள் சிலபல
நின்றது நீள்பொருள் நீர்மேல் எழுத்தொத்து
வென்று புலன்கள் விரைந்து விடுமின்கள்
குன்று விழவதில் தாங்கலு மாமே. 2040

போற்றிசைத் துப்புனி தன்திரு மேனியைப்
போற்றிசெய் மீட்டே புலனைந்தும் புத்தியால்
நாற்றிசைக் கும்பின்னை யாருக்கு நாதனை
ஊற்றுகை யுள்ளத் தொருங்கலு மாமே. 2041

தரிக்கின்ற நெஞ்சஞ் சகளத்தி னுள்ளே
அரிக்கின்ற ஐவரை யாரும் உணரார்
சிரிக்கின்ற வாறு சிலபல பேசில்
வரிக்கொண்ட மைசூழ் வரையது வாமே 2042

கைவிட லாவதொன் றில்லை கருத்தினுள்
எய்தி யவனை யிசையினுல் ஏத்துமின்
ஐவ ருடைய அவாவினில் தோன்றிய
பொய்வ ருடைய புலன்களும் ஐந்தே. 2043

அசற்குருநெறி

உணர்வொன் றிலாமூடன் உண்மையோ ராதோன்
கணுவின் றி வேதா கமநெறி காணுன்
பணிவொன் றிலாதோன் பரநிந்தை செய்வோன்
அணுவின் குணத்தோன் அசற்குரு வாமே. 2044

மந்திர தந்திர மாயோக ஞானமும்
பந்தமும் வீடுந் தரிசித்துப் பார்ப்பவர்
சிந்தனை செய்யாத் தெளிவியா தூண்பொருட்(டு)
அந்தகர் ஆவோர் அசற்குரு வாமே. 2045

ஆமா றறியாதோன் மூடன் அதிமூடன்
காமாதி நீங்காக் கலதி கலதிகட்
காமா றசத்தறி விப்போன அறிவிலோன்
கோமா னலனசத் தாகுங் குரவனே. 2046

கற்பாய கற்பங்கள் நீக்காமற் கற்பித்தால்
தற்பாவங் குன்றுந் தனக்கே பகையாகும்
நற்பால் அரசுக்கு நாட்டுக்கும் கேடென்றே
முற்பாலே நந்தி மொழிந்துவைத் தானே. 2047

குருடர்க்குக் கோல்காட்டிச் செல்லுங் குருடர்
முரணும் பழங்குழி வீழ்வர்கள் முன்பின்
குருடரும் வீழ்வர்கள் முன்பின் னறவே
குருடரும் வீழ்வார் குருடரோ டாகியே. 2048

சற்குருநெறி

தாடந் தளிக்குந் தலைவனே சற்குரு
தாடந்து தன்னை யறியத் தரவல்லோன்
தாடந்து தத்துவா தீதத்துச் சார்சீவன்
தாடந்து பாசந் தணிக்குமவன் சத்தே. 2049

தவிரவைத் தான்வினை தன்னடி யார்கோள்
தவிரவைத் தான்சிரத் தோடுதன் பாதந்
தவிரவைத் தான்நமன் தூதுவர் கூட்டந்
தவிரவைத் தான்பிற வித்துயர் தானே. 2050

கறுத்த இரும்பே கனகம தானன்
மறித்திரும் பாகா வகையது போலக்
குறித்தஅப் போதே குருவருள் பெற்றுன்
மறித்துப் பிறவியில் வந்தணு கானே. 2051

பாசத்தை நீக்கிப் பரனோடு தன்னையும்
நேசத்து நாடி மலமற நீக்குவோர்
ஆசற்ற சற்குரு வாவோர் அறிவற்றுப்
பூசற் கிரங்குவோர் போதக் குருவன்றே. 2052

நேயந்தே நிற்கும் நிமலன் மலமற்ற
நேயத்தை நல்கவல் லோனித்தன் சுத்தனே
ஆயத்த வர்தத் துவமுணர்ந் தங்கற்ற
நேயர்க் களிப்பவன் நீடுங் குரவனே. 2053

பரிசன வேதி பரிசித்த தெல்லாம்
வரிசை தரும்பொன் வகையாகு மாபோற்
குருபரி சித்த குவலயம் எல்லாந்
திரிமலந் தீர்ந்து சிவகதி யாமே. 2054

தானே யெனநின்ற சற்குரு சந்நிதி
தானே யெனநின்ற தன்மை வெளிப்படில்
தானே தனைப்பெற வேண்டுஞ் சதுர்பெற
ஊனே யெனநினைந் தோர்ந்துகொள் உன்னிலே.

வரும்வழி போம்வழி மாயா வழியைக்
கருவழி கண்டவர் காணா வழியைப்
பெரும்வழி யாநந்தி பேசும் வழியைக்
குருவழி யேசென்று கூடலு மாமே. 2056

குருவென் பவனே வேதாக மங்கூறும்
பரவின்ப ஞகிச் சிவயோகம் பாவித்(து)
ஒருசிந்தை யின்றி உயர்பாச நீக்கி
வருநல் குரவன்பால் வைக்கலு மாமே. 2057

சத்தும் அசத்துஞ் சதசத்துந் தான்காட்டிச்
சித்தும் அசித்துஞ் சிவபரத் தேசேர்த்துச்
சுத்த மசுத்த மறச்சுக மான்சொல்
அத்தன் அருட்குரு வாமவன் கூறிலே. 2058

உற்றிடும் ஐம்மலம் பாச வுணர்விஞற்
பற்றறு நாதன் அடியிற் பணிதலாற்
சுற்றிய பேதந் துரியமூன் ருல்வாட்டித்
தற்பர மேவுவோர் சாதக ராமே. 2059

எல்லாம் இறைவன் இறைவி யுடனின்பம்
வல்லார் உடலனும் வருங்கால் உயிர்தோன்றிச்
சொல்லா மலமைந் தடங்கியிட் டோங்கியே
செல்லாச் சிவகதி சேர்தல் விளையாட்டே. 2060

ஈனப் பிறவியில் இட்டது மீட்டூட்டித்
தானத்து ளிட்டுத் தனையூட்டித் தாழ்த்தலும்
ஞானத்தின் மீட்டலும் நாட்டலும் வீடுற்று
மோனத்துள் வைத்தலும் முத்தன்றன் செய்கையே.

அத்த னருளின் விளையாட் டிடஞ்சடஞ்
சித்தொ டசித்தறத் தெளிவித்துச் சீவனைச்
சுத்தனு மாக்கித் துடைத்து மலத்தினைச்
சத்துட னங்கரு மத்திடுந் தன்மையே. 2062

ஈசத்து வங்கடந் தில்லையென் றப்புறம்
பாசத்து ளேயென்றும் பாவியும் அண்ணலை
நேசத்து ளேநின்ற நின்மலன் எம்மிறை
தேசத்தை யெல்லாந் தெளியவைத் தானே. 2063

மாணிக்க மாலை மலர்ந்தெழு மண்டலம்
ஆணிப்பொ னின்றங் கமுதம் விளைந்தது
பேணிக்கொண் டுண்டார் பிறப்பற் றிருந்தார்
ஊணுக் கிருந்தார் உணராத மாக்களே. 2064

அசத்தொடு சத்தும் அசத்சத்து நீங்க
இசைத்திடு பாசப்பற் றீங்கறு மாறே
அசைத்திரு மாயை அணுத்தானு மாங்கே
இசைத்தானு மொன்றறி விப்போன் இறையே. 2065

ஏறு நெறியே மலத்தை எரித்தலால்
ஈறில் உரையால் இருளை யறுத்தலான்
மாறிற் பசுபாசம் வாட்டலால் வீடுக
கூறு பரனே குருவாம் இயம்பிலே. 2066

கூடாவொழுக்கம்

கண்காணி யில்லென்று கள்ளம் பலசெய்வார்
கண்காணி யில்லா விடமில்லை காணுங்கால்
கண்காணி யாகக் கலந்தெங்கு நின்றானைக்
கண்காணி கண்டார் களவொழிந் தாரே. 2067

செய்தான் அறியுஞ் செழுங்கடல் வட்டத்துப்
பொய்தான் மிகவும் புலம்பும் மனிதர்கள்
மெய்தான் உரைக்கில்விண் ணோர்தொழச் செய்வன்
மைதாழ்ந் திலங்கு மிடறுடை யோனே. 2068

பத்திவிற் றுண்டு பகலைக் கழிவிடு
மத்தகர்க் கன்றோ மறுபிறப் புள்ளது
வித்துக்குற் றுண்டு விளைபுலம் பாழ்செய்யும்
பித்தர்கட் கென்றும் பிறப்பில்லை தானே. 2069

வடக்கு வடக்கென்பர் வைத்ததொன் றில்லை
நடக்க வுறுவரே ஞானமி லாதார்
வடக்கில் அடங்கிய வையகம் எல்லாம்
அகத்தில் அடங்கும் அறிவுடை யோர்க்கே. 2070

காயக் குழப்பனைக் காயநன் னாடனைக்
காயத்தி னுள்ளே கமழ்கின்ற நந்தியைத்
தேயத்து ளேயெங்குந் தேடித் திரிவர்கள்
காயத்துள் நின்ற கருத்தறி யாரே. 2071

கண்காணி யாகவே கையகத் தேயெழுங்
கண்காணி யாகக் கருத்து ளிருந்திடுங்
கண்காணி யாகக் கலந்து வழிசெய்யுங்
கண்காணி யாகிய காதலன் தானே. 2072

கன்னி யொருசிறை கற்றோர் ஒருசிறை
மன்னிய மாதவஞ் செய்வோர் ஒருசிறை
தன்னியல் புணர்ந்தோர் ஒருசிறை
என்னிது ஈசன் இயல்பறி யாரே. 2073

காணாத கண்ணிற் படலமே கண்ணொளி
காணாத வர்கட்குங் காணாத வவ்வொளி
காணாத வர்கட்குங் கண்ணாம் பெருங்கண்ணைக்
காணாது கண்டார் களவொழிந் தாரே. 2074

பித்தள மருந்தால் தெளிந்து பிரகிருதி
உய்த்தொன்று மாபோல் விழியுந்தன் கண்ணொளி
அத்தன்மை யாதல்போல் நந்தி அருள்தரச்
சித்தந் தெளிந்தேன செயலொழிந் தேனே. 2075

பிரான்மய மாகப் பெயர்ந்தன எட்டும்
பராமய மென்றெண்ணிப் பள்ளி யுணரார்
சுராமய முன்னிய சூழ்வினை யாளர்
நிரர்மய மாக நினைப்பொழிந் தாரே. 2076

ஒன்றிரண் டாகிநின் றொன்றியொன் றாயினோர்க்(கு)
ஒன்றும் இரண்டும் ஒருகாலும் கூடிடா
ஒன்றிரண் டென்றே யுரைதரு வோர்க்கெலாம்
ஒன்றிரண் டாய்நிற்கும் ஒன்றேயொன் றானதே. 2077

உயிரது நின்றால் உணர்வெங்கு நிற்கும்
அயரறி வில்லையா லாருடல் வீழும்
உயிரும் உடலும் ஒருங்கிக் கிடக்கும்
பயிருங் கிடந்துள்ளப் பாங்கறி யாரே. 2078

உயிரது வேறா யுணர்வெங்கு மாகும்
உயிரை யறியில் உணர்வறி வாகும்
உயிரன் றுடலை விழுங்கு முணர்வை
அயரும் பெரும்பொரு ளாங்கறி யாரே. 2079

உலகாணி யொண்சுடர் உத்தம சித்தன்
நிலவாணி ஐந்தினுள் நேர்நற நிற்குஞ்
சிவவாணி யாகிய தேவர் பிரானைத்
தலைவாணி செய்வது தன்னை யறிவதே. 2080

தானந்த மாமென நின்ற தனிச்சுடர்
ஊனந்த மாயுல காய்நின்ற வொண்சுடர்
தேனந்த மாய்நின்ற சிற்றின்ப நீயொழி
கோனந்த மில்லாக் குணத்தரு ளாமே. 2081

உன்முத லாகிய வூனுயிர் உண்டெனுங்
கன்முத லீசன் கருத்தறி வாரில்லை
நன்முத லேறிய நாம மறநின்றால்
தன்முத லாகிய தத்துவ மாமே, 2082

இந்தியம் அந்தக் கரண மிவையுயிர்
வந்தன சூக்க வுடலன்று மானன்று
தந்திடும் மவ்வியத்தத் தால்தற் புருடனு
முந்துள மன்னு மாறாறு முடிவிலே. 2083

கேடுகண்டிரங்கல்

வித்துப் பொதிவார் விதைவிட்டு நாற்றுவார்
அற்றதம் வாணுள் அறிகிலாப் பாவிகள்
உற்ற வினைத்துயர் ஒன்றும் அறிகிலார்
முற்ஞெளி தீமுன் னிநின்ற வாறே. 2084

போது சடக்கெனப் போகின் றதுகண்டும்
வாதுசெய் தென்னே மனிதர் பெறுவது
நீதியு ளேநின்று நின்மலன் தாள்பணிந்
தாதியை அன்பில் அறியகில் லார்களே. 2085

கடன்கொண்டு நெற்குத்துக் கையரை யூட்டி
உடம்பினை யோம்பி உயிராத் திரிவார்
தடங்கொண்ட சாரல் தழல்மு ந டேறி
இடங்கொண் டுடலார் கிடக்கின்ற வாறே. 2086

விரைந்தன்று நால்வர்க்கு மெய்ப்பதி சூழ்ந்து
புரந்தகல் லால்நிழற் புண்ணியன் சொன்ன
பரந்தன்னை யோராப் பழிமொழி யாளர்
உரந்தன்மை யாக வொருங்கிநின் ருர்களே. 2087

நின்ற புகழும் நிறைதவத் துண்மையும்
என்றும்எம் மீசன் அடியவர்க் கேநல்கும்
அன்றி யுலக மதுவிது தேவென்று
குன்றுகை யாலே குறைப்பட்ட வாறே. 2088

இன்பத்து ளேபிறந் தின்பத்து ளேவளர்ந்து
இன்பத்து ளேநினைக் கின்ற திதுமறந்
துன்பத்து ளேசிலர் சோருடு கூறையென்
துன்பத்து ளேநின்று தூங்குகின் ருர்களே. 2089

பெறுதற் கரிய பிறவியைப் பெற்றும்
பெறுதற் கரிய பிரானடி பேணார்
பெறுதற் கரிய பிராணிகள் எல்லாம்
பெறுதற் கரியதோர் பேறிழந் தாரே. 2090

ஆர்வ மனமும் அளவில் இளமையும்
ஈரமும் நல்லவென் றின்புறு காலத்துத்
தீர வருவதோர் காமத் தொழில்நின்று
மாதவன் இன்ப மறந்தொழிந் தார்களே. 2091

இப்பரி சேயிள ஞாயிறு போலுரு
அப்பரி சங்கியின் உள்ளுறை யம்மானை
இப்பரி சேகம லத்துறை யீசனை
மெய்ப்பரி சேவின வாதிருந் தோமே. 2092

கூடகில் லார்குரு வைத்த குறிகண்டு
நாடகில் லார்நயம் பேசித் திரிவர்கள்
பாடகில் லாரவன் செய்த பரிசறிந்
தாடவல் லாரவர் பேறெது வாமே. 2093

நெஞ்சு நிறைந்தங் கிருந்த நெடுஞ்சுடர்
நஞ்செம் பிரானென்று நாதனை நாடொறுந்
துஞ்சு மளவுந் தொழுமின் தொழாவிடில்
அஞ்சற்று விட்டதோர் ஆனையு மாமே. 2094

மிருக மனிதர் மிக்கோர் பறவை
ஒருவர்செய் தன்புவைத் துன்னுத தில்லை
பருகுவ ரோடுவர் பார்ப்பயன் கொள்வர்
திருமரு மாதவஞ் சேர்ந்துணர்ந் தாரே. 2095

நீதியி லோர்பெற்ற பொன்போல் இறைவனைச்
சோதியி லாருந் தொடர்ந்தறி வாரில்லை
ஆதி பயனென் றமரர் பிரானென்று
நாதியே வைத்தது நாடுகின் றேனே. 2096

இருந்தேன் மலரளைந் தின்புற வண்டு
பெருந்தேன் இழைக்கின்ற பெற்றிமை யோரார்
வருந்தேன் நுகராது வாய்புகு தேனை
அருந்தேனை யாரும் அறியகி லாரே. 2097

கருத்தறி யாது கழிந்தன காலம்
அருத்தியுள் ளான் அம ராபதி நாதன்
ஒருத்தனுள் ளானுல கத்துயிர்க் கெல்லாம்
வருத்திநில் லாது வழுக்குகின் றாரே. 2098

குதித்தோடிப் போகின்ற கூற்றமும் சார்வாய்
விதித்தன நாட்களும் வீழ்ந்து கழிந்த
விதிர்த்திருந் தென்செய்தீ ராறுதி ராகிற்
கொதிக்கின்ற கூழில் துடுப்பிட லாமே. 2099

கரையரு காருக் கழனி விளைந்த
திரையரு காமுன்னம் சேர்ந்தின்பம் எய்தும்
வரையரு கூறிய மாதவ நோக்கின்
நரையுரு வாச்செல்லு நாளில வாமே. 2100

வரவறி வானை மயங்கிருண் ஞாலத்
திரவறி வானை யெழுஞ்சுடர்ச் சோதியை
அரவறி வார்முன் னொருதெய்வ மென்று
விரவறி யாமலே மேல்வைத்த வாறே. 2101

இதோபதேசம்

மறந்தொழி மண்மிசை மன்னுப் பிறவி
இறந்தொழி காலத்தும் ஈசனை உள்கும்
பறந்தல மந்து படுதுயர் தீர்ப்பான்
சிறந்த சிவநெறி சிந்தைசெய் யீரே. 2102

செல்லு மளவுஞ் செலுத்துமின் சிந்தையை
வல்ல பரிசால் உரைமின்கள் வாய்மையை
இல்லை யெனினும் பெரிதுளன் எம்மிறை
நல்ல வரனெறி நாடுமி னீரே. 2103

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணுமே
சென்றே புகுங்கதி யில்லைநுஞ் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந் துய்மினே. 2104

போற்றிசெ யந்தண் கயிலைப் பொருப்பனை
நாற்றிசைக் குந்நடு வாய்நின்ற நம்பனைக்
காற்றிசைக் குங்கமழ் ஆக்கையைக் கைக்கொண்டு
கூற்றுதைத் தான்றன்னைக் கூறிநின் றுய்மினே. 2105

இக்காய நீக்கி யினியொரு காயத்திற்
புக்குப் பிறவாமற் போம்வழி நாடுமின்
எக்காலத் திவ்வுடல் வந்தெமக் கானதென்
றக்கால முன்ன அருள்பெற லாமே. 2106

போகின்ற வாறே புகுகின்ற அப்பொருள்
ஆகின்ற போது மரனறி வானுளன்
சாகின்ற போதுந் தலைவனை நாடுமின்
ஆகின்ற அப்பொருள் அக்கரை யாகுமே. 2107

பறக்கின்ற வொன்று பயனுற வேண்டின்
இறக்கின்ற காலத்தும் ஈசனை யுள்குஞ்
சிறப்பொடு சேரும் சிவகதி பின்னைப்
பிறப்பொன் றிலாமையும் பேறல காமே. 2108

கூடியும் நின்றுந் தொழுதெம் மிறைவனைப்
பாடியு ளேநின்று பாதம் பணிமின்கள்
ஆடியு ளேநின் றறிவுசெய் வார்கட்கு
நீடிய வீற்றுப் பசுவது வாமே. 2109

விடுகின்ற சீவனர் மேலெழும் போது
நடுநின்று நாடுமின் நாதன்தன் பாதங்
கெடுகின்ற வல்வினை கேடில் புகழோன்
இடுகின்ருன் உம்மை இமையவ ரோடே. 2110

ஏறுடை யாயிறை வாஎம் பிரானென்று
நீறிடு வாரடி யார்நிகழ் தேவர்கள்
ஆறணி செஞ்சடை யண்ணல் திருவடி
வேறணி வார்க்கு வினையில்லை தானே. 2111

இன்புறு வீர்அறிந் தேஎம் இறைவனை
அன்புறு வீர்தவஞ் செய்யுமெய்ஞ் ஞானத்துப்
பண்புறு வீர்பிற வித்தொழி லேநின்று
துன்புறு பாசத் துழைத்தொழிந் தீரே. 2112

மேற்கொள்ள லாவதோர் மெய்த்தவம் ஒன்றுண்டு
மேற்கொள்ள லாவதோர் மெய்த்தாளும் ஒன்றுண்டு
மேற்கொள்ள லாவதோர் மெய்ந்நெறி ஒன்றுண்டு
மேற்கொள்ள லாம்வண்ணம் வேண்டிநின் ருேர்க்கே.

சார்ந்தவர்க் கின்பங் கொடுக்குந் தழல்வண்ணன்
பேர்ந்தவர்க் கின்னுப் பிறவி கொடுத்திடுங்
கூர்ந்தவர்க் கங்கே குரைகழல் காட்டிடுஞ்
சேர்ந்தவர் தேவரைச் சென்றுணர் வாரே. 2114

முத்தியை ஞானத்தை முத்தமிழ் ஓசையை
எந்தனை காலமும் ஏத்துவர் ஈசனை
நெய்த்தலைப் பால்போல் நிமலனும் அங்குளன்
அத்தகு சோதி யதுவிரும் பீரே. 2115

நியமத்த ஞகிய நின்மலன் வைத்த
உகமெத் தனையென் ருருவருந் தேருர்
பவமத்தி லேவந்து பாய்கின்ற தல்லாற்
சிவமத்தை யொன்றுந் தெளியகில் லரரே. 2116

இங்கித்தை வாழ்வு மெனைத்தோ ரகிதமுந்
துஞ்சொத்த காலத்துத் தூய்மணி வண்ணனை
விஞ்சத் துறையும் விகிர்தர் என்நின்னை
நஞ்சற் றவர்க்கன்றி நாடவொண் ணாதே. 2117

பஞ்சமு மாம்புவி சற்குரு பால்முன்னி
வஞ்சக ரானவர் வைகில் அவர்தம்மை
அஞ்சுவன் நாதன் அருநர கத்திடுஞ்
செஞ்சநிற் போரைத் தெரிசிக்கச் சித்தியே. 2118

சிவனை வழிபட்டார் எண்ணிலாத் தேவர்
அவனை வழிபட்டங்(கு) ஆமாறென் றில்லை
அவனை வழிபட்டங்(கு) ஆமாறு காட்டுங்
குருவை வழிபடிற் கூடலு மாமே. 2119

நரருஞ் சுரரும் பசுபாச நண்ணிக்
கருமங்க ளாலே கழிதலிற் கண்டு
குருவென் பவன்ஞானி கோதில னானாற்
பரமென்றல் அன்றிப் பகர்வொன்று மின்றே. 2120

ஆட்கொண் டவர்தனி நாயகன் அன்புற
மேற்கொண் டவர்வினை போயற நாடொறும்
நீர்க்கின்ற செஞ்சடை நீளன் உருவத்தின்
மேற்கொண்ட வாறலை வீவித்து ளானே. 2121

ஏழாம் தந்திரம் முற்றும்

எட்டாம் தந்திரம்

உடலிற் பஞ்சபேதம்

காயப்பை யொன்று சரக்குப் பலவுள
மாயப்பை யொன்றுண்டு மற்றுமோர் பையுண்டு
காயப்பைக் குள்நின்ற கள்வன் புறப்பட்டால்
மாயப்பை மண்ணா மயங்கிய வாறே. 2122

அத்தன் அமைத்த உடலிரு கூறினிற்
சுத்தம தாகிய சூக்குமஞ் சொல்லுங்காற்
சத்த பரிச ரூப ரசகந்தம்
புத்திமா னங்காரம் புரியட்ட காயமே. 2123

எட்டினில் ஐந்தாகும் இந்திரி யங்களுங்
கட்டிய மூன்று கரணமு மாயிடும்
ஒட்டிய பாசம் உணர்வது வாகவே
கட்டி யவிழ்த்திடுங் கண்ணுதல் காணுமே. 2124

இரதம் உதிரம் இறைச்சிதோல் மேதை
மருவிய வத்தி வழும்பொடு மச்சை
பரவிய சுக்கிலம் பாழாம் உபாதி
உருவ மலாலுடல் ஒன்றென லாமே. 2125

ஆரே அறிவார் அடியின் பெருமையை
யாரே அறிவார் அங்கவர் நின்றது
யாரே அறிவார் அறுபத்தெட் டாக்கையை
யாரே அறிவார் அடிக்காவ லானதே 2126

எண்சா ணளவால் எடுத்த வுடம்புக்குட்
கண்கால் உடலிற் கரக்கின்ற கைகளிற்
புண்கால் அறுபத்தெட் டாக்கை புணர்க்கின்ற
நண்பால் உடம்புதன் னுலுடம் பாகுமே. 2127

உடம்புக்கு நாலுக்கும் உயிராய சீவன்
ஒடுங்கும் பரனோடு ஒழியாப் பிரமங்
கடந்தொறு நின்ற கணக்கது காட்டி
அடங்கியே யற்றது யாரறி வாறே. 2128

ஆறந்த மாகி நடுவுடன் கூடினால்
தேறிய மூவாறுஞ் சிக்கென்(று) இருந்திடுங்
கூறுங் கலைகள் பதினெட்டுங் கூடியே
ஊறும் உடம்பை உயிநடம் பெண்ணுமே. 2129

மெய்யினில் தூல மிகுத்த முகத்தையும்
பொய்யினிற் சூக்கம் பொருந்தும் உடலையுங்
கையினில் துல்லியங் காட்டும் உடலையும்
ஐயன் அடிக்குள் அடக்கும் உடம்பே. 2130

காயுங் கடும்பரி கால்வைத்து வாங்கல்போற்
சேய விடமண்மை செல்லவும் வல்லது
காயத் துகிற்போர்வை ஒன்றுவிட் டாங்கொன்றிட்(டு)
ஏயு மவரென்ன ஏய்ந்திடுங் காயமே. 2131

நாக முடலுரி போலுநல் லண்டச
மாக நனவிற் கனமறந் தல்லது
போகலு மாகும் அரனரு ளாலேசென்(று)
ஏகு மிடஞ்சென்று இருபயன் உண்ணுமே. 2132

உண்டு நரக சுவர்க்கத்தில் உள்ளன
கண்டு விடுஞ்சூக்கங் காரண மாச்செலப்
பண்டு தொடரப் பரகாய யோகிபோற்
பிண்டம் எடுக்கும் பிறப்பிறப் பெய்தியே 2133

தானவ னாகிய தற்பரந் தாங்கினோன்
ஆனவை மாற்றிப் பரமத் தடைந்திடும்
ஏனை யுயிர்வினைக் கெய்து மிடஞ் சென்றும்
ரனும் நிலனும் புகுந்தும் வருந்துமே. 2134

ஞானிக்குக் காயஞ் சிவமே தனுவாகும்
ஞானிக்குக் காயம் உடம்பே யதுவாகும்
மேனிற்கும் யோகிக்கு விந்துவும் நாதமும்
மோனிக்குக் காயமுப் பாழ்கெட்ட முத்தியே. 2135

விஞ்ஞானத் தோர்க்கா ணவமே மிகுதனு
எஞ்ஞானத் தோர்க்குத் தனுமாயை தானென்ப
அஞ்ஞானத் தோர்க்குக் கன்மந் தனுவாகும்
மெஞ்ஞானத் தோர்க்குச் சிவதனு மேவுமே. 2136

மலமென் றுடம்பை மதியாத ஊமர்
தலமென்று வேறு தரித்தமை கண்டீர்
நலமென் றிதனையே நாடி யிருக்கிற்
பலமுள்ள காயத்திற் பற்றுமிவ் வண்டத்தே. 2137

நல்ல வசனத்து வாக்க மனுதிகள்
மெல்ல விளையாடும் விமலன் அகத்திலே
அல்ல செவிசத்த மாதி மனத்தையும்
மெல்லத் தரித்தார் முகத்தார் பசித்தே. 2138

உடல்விடல்

பண்ணுதுங் காமம் பயிலும் வசனமும்
விண்ணும் பிராணன் விளங்கிய சத்தமும்
புண்ணும் உடலிற் பொருந்து மனத்தையும்
அண்ணுந்து பார்க்க அழியும் உடம்பே. 2139

அழிகின்ற வோருடம் பாகுஞ் செவிகண்
கழிகின்ற காலவ் விரதங்கள் தானம்
மொழிகின்ற வாக்கு முடிகின்ற நாடி
ஒழிகின்ற ஊனுக் குறுதுணை யில்லையே. 2140

இலையா மிடையில் எழுகின்ற காமம்
உலைவாய நெஞ்சத்து மூழ்கும் உளத்துத்
தலையாய மின்னுடல் தாங்கித் திரியுஞ்
சிலையாய சித்தஞ் சிவமுன் னிடைக்கே. 2141

அவத்தைபேதம் - கீழாலவத்தை

ஐயைந்து மத்திமை யானது சாக்கிரங்
கைகண்ட பன்னொன்கிற் கண்டங் கனவென்பர்
பொய்கண்டி லாத புருடனித யஞ்சுழுனை
மெய்கண் டவனுந்தி யாகுந் துரியமே. 2142

முப்பதோ டாறின் முதல்நனு ஐந்தாகச்
செப்பதி னன்காய்த் திகழ்ந்திரண் டொன்றாகி
அப்பதி யாகும் நியதி முதலாகச்
செப்புஞ் சிவமீருய்த் தேர்ந்துகொள் ளீரே. 2143

இந்திய மீரைந்(து) ஈரைந்து மாத்திரை
மந்திர மாய்நின்ற மாருதம் ஈரைந்தும்
அந்தக் கரணம் ஒருநான்கும் ஆன்மாவும்
பந்தவச் சக்கரப் பாலது வாகுமே. 2144

பாரது பொன்மை பசுமை யுடையது
நீரது வெண்மை செம்மை நெருப்பது
காரது மாருதங் கறுப்பை யுடையது
வானகந் தூம மறைந்துநின் றூரே 2145

பூதங்கள் ஐந்தும் பொறியவை ஐந்துளும்
ஏதம் படஞ்செய் திருந்த புறநிலை
ஓது மலங்குண மாகுமா தாரமோ
டாதி யவத்தைக் கருவிதொண் ணூற்றுறே. 2146

இடவகை சொல்லிரு பத்தஞ் சானே
படுபர சேனேயும் பாய்பரி ஐந்தும்
உடையவன் மத்திமை யுள்ளுற நால்வர்
அடைய நெடுங்கடை ஐந்தொடு நான்கே. 2147

உடம்பும் உடம்பும் உடம்பைத் தழுவி
உடம்பிடை நின்ற உயிரை அறியார்
உடம்பொடு உயிரிடை நட்பறி யாதார்
மடம்புகு நாய்போல் மயங்குகின் றுரே. 2148

இருக்கின்ற வாறென்(று) அறிகிலர் ஏழைகள்
முருக்கு மசபையை மாற்றி முகந்து
கருக்கொண்டு காமரி சார முகந்தேர்ந்(து)
உருக்கொண்டு தொக்க உடலொழி யாதே. 2149

ஒளித்திட் டிருக்கும் ஒருபதி ஞாலை
அளித்தனன் என்னுள்ளே ஆரியன் வந்து
அலைக்குங் கலைகளி னலறு பத்து
ஒளித்திட்டு வைத்தான் ஒடுங்கிய சித்தே. 2150

மண்ணினில் ஒன்று மலர்நீர மங்காகும்
பொன்னினில் அங்கி புகழ்வளி யாகாயம்
மன்னு மனோபுத்தி யாங்காரம் ஒரொன்ருய்
உன்னி முடிந்தது பூத சமயமே. 2151

முன்னிக் கொருமகன் மூர்த்திக் கிருவர்
வன்னிக்கு மூவர் வதுவைக்கு நால்வர்
கன்னிக்குப் பிள்ளைகள் ஐவர்மு னுளில்லை
கன்னியைக் கன்னியே காதலித் தாரே. 2152

கண்ட கனவைந்துங் கலந்தன தானைந்துஞ்
சென்றுண்ட நான்கும் ஒருங்கே உணர்ந்தபின்
பண்டைய தாகிப் பரந்த வியாக்கிரத்(து)
அண்டமுந் தானய் அமர்ந்துநின் றுனே. 2153

நின்றவ னிற்பப் பதினுலிற் பத்துநீத்(து)
ஒன்றிய அந்தக் கரணங்கள் நான்குடன்
மன்று கலந்த மனைவாழ்க்கை வாதனை
கன்றிய கண்டத்திற் கண்டான் கனவதே. 2154

தான மிழந்து தனிபுக் கிதயத்து
மான மழிந்து மதிகெட்டு மாலாகி
ஆன விரிவறி யாவவ் வியத்ததின்
மேனி யழிந்து சுழுத்திய தாமே. 2155

சுழுனையைச் சேர்ந்துள்ள மூன்றுடை காட்சி
கெழுமிய சித்தம் பிராணன்றன் போதம்
ஒழுகக் கமலத்தின் உள்ளே யிருந்து
விழுமப் பொருளுடன் மேவிநின் ருனே. 2156

தானத் தெழுந்து தருக்குந் துரியத்தின்
வானத் தெழுந்துபோய் வையம் பிறகிட்டுக்
கானத் தெழுந்த கருத்தின் தலையிலே
ஊனத் தவித்தைவிட் டுமனின் ருனே. 2157

ஊமை எழுத்தொடு பேசும் எழுத்துறில்
ஆமை யகத்தினில் அஞ்சும டங்கிடும்
ஓமய முற்றது வுள்ளொளி பெற்றது
நாமய மற்றது நாமறி யோமே. 2153

துரிய மிருப்பதுஞ் சாக்கிரத் துள்ளே
நரிகள் பதினலும் நஞ்சுண்டு செத்தன
பரிய புரவியும் பாரிற் பறந்தன
துரிய மிறந்திடஞ் சொல்லவொண் ணுதே. 2159

மாரு மலமைந்தான் மன்னு மவத்தையின்
வேருய மாயா தனுகர ணுதிக்கிங்
கீருகா தேஎவ் வுயிரும் பிறந்திறந்(து)
ஆருத வல்வினை யாலடி யுண்ணுமே. 2160

உண்ணுந்தன் னூடாடா தூட்டிடு மாயையும்
அண்ணல் அருள்பெற்ற முத்திய தாவது
நண்ண லிலாவுயிர் ஞானத்தி னூற்பிறந்
தெண்ணுறு ஞானத்தின நேர்முத்தி எய்துமே. 2161

அதிமூட நித்திரை யானவ நந்த
அதனு லுணர்வோ னருங்கன்ம முன்னல்
இதமான கேவல மித்திறஞ் சென்று
பரமாகா வையவத் தைப்படு வானே. 2162

ஆசான்முன் னேதுயில் மாண வகரைத்
தேசாய தண்டால் எழுப்பும் செயல்போல்
நேசாய வீசனு நீடாண வத்தரை
ஏசாத மாயாடன் னூலே எழுப்புமே. 2163

மஞ்சொடு மந்தா கினிகுட மாமென
விஞ்சறி வில்லோன் விளம்பு மிகுமதி
எஞ்சலி லொன்றெனு மாறென இவ்வுடல்
அஞ்சுணு மன்னனன் றேபோ மளவே. 2164

படியுடை மன்னவன் பாய்பரி ஏறி
வடிவுடை மாநகர் தான்வ நம் போது
அடியுடை ஐவ நம் அங்குறை வோருந்
துடியில்லம் பற்றித் துயின்றனர் தாமே. 2165

நேரா மலத்தை நீடைந் தவத்தையின்
நேரான வாறுன்னி நீடு நனவினில்
நேரா மலமைந்து நேரே தெரிசித்து
நேராம் பரத்துடன் நிற்பது நித்தமே. 2166

மத்திய சாக்கிராவத்தை

சாக்கிர சாக்கிரந் தன்னில் திரோதாயி
சாக்கிர சொப்பனந் தன்னிடை மாமாயை
சாக்கிரந் தன்னிற் சுழுத்திதற் காமியஞ்
சாக்கிரந் தன்னில் துரியத்து மாயையே. 2167

மாயை எழுப்புங் கலாதியை மற்றதின்
நேய விராகாதி ஏய்ந்த துரியத்துத்
தோயுஞ் சுழுனை கனநன வுந்துன்னி
ஆயின னந்தச் சகலத்து ளானே. 2168

மேவிய அந்தகன் விழிகட் குருடனு
மாவையின் முன்னடிக் காணு மதுகண்டு
மேவுந் தடிகொண்டு சொல்லும் விழிபெற
மூவயி னுன்மா முயலுங் கருமமே. 2169

மத்திம மொத்த சிலந்தி வலயத்துள்
ஒத்தங் கிருந்து உயிருண்ணு மாறுபோல்
அத்தனும் ஐம்பொறி யாடகத் துள்நின்று
சத்த முதல்ஐந்துந் தானுண்ணு மாறே. 2170

வைச்சன வச்சு வகையிரு பத்தஞ்சு
முச்சு முடனணை வானொரு வன்னுளன்
பிச்சன் பெரியன் பிறப்பிலி என்றென்று
நச்சி யவனருள் நானுய்ந்த வாறே. 2171

நாலா றுடன்புருட னற்றத் துவமுடன்
வேறான ஐயைந்து மெய்ப்புருடன்பரங்
கூறு வியோமம் பரமெனக் கொண்டனன்
வேறான நாளேழு வேதாந்த தத்துவமே. 2172

ஏலங்கொண் டாங்கே இடையொடு பிங்கலை
கோலங்கொண் டாங்கே குணத்தி னுடன்புக்கு
மூலங்கொண் டாங்கே முறுக்கிமுக் கோணிலுங்
காலங்கொண் டானடி காணலு மாமே. 2173

நாடிகள் பத்தும் நலந்திகழ் வாயுவும்
ஓடிய காலில் ஒடுங்கி யிருந்திடுங்
கூடிய காமங் குளிக்கும் இரதமும்
நாடிய நல்ல மனமும் உடலிலே. 2174

ஆவன ஆவ அழிவ அழிவன
போவன போவ புகுவ புகுவன
காவலன் பேர்நந்தி காட்டித்துக் கண்டவ
ஏவன செய்யும் இலங்கிழை யோனே. 2175

பத்தொடு பத்துமோர் மூன்றும் பகுதியும்
உய்த்த துரியமும் உள்ளுணர் காலமும்
மெய்த்த வியோமமு மேலைத் துரியமுந்
தத்துவ நாலே மௌனவுன்னத் தக்கதே. 2176

விளங்கிடு முந்நூற்று முப்பதோ டொன்பான்
தளங்கொ ளிரட்டிய தாறு நடந்தால்
வணங்கிடு மைம்மலம் வாயு வெழுந்து
விளங்கிடு மவ்வழி தத்துவ நின்றே 2177

நாலொடு கோடியே நாற்பத்தெண் ணாயிரம்
மேலுமோ ரைந்நூறு வேறு யடங்கிடும்
பாலவை தொண்ணூறோ டாறுட் படுமவை
கோலிய ஐயைந்து ளாகுங் குறிக்கிலே. 2178

ஆகின்ற தொண்ணூறோ டாறும் பொதுஎன்பர்
ஆகிறை வாரு றருஞ்சைவர் தத்துவம்
ஆகின்ற நாலேழ் வேதாந்தி வயிணவர்க்
காகின்ற நாலாறை யைந்துமாயா வாதிக்கே. 2179

தத்துவ மானது தன்வழி நின்றிடில்
வித்தக ளுகி விளங்கி யிருக்கலாம்
பொய்த்தவ மாமவை போயிடு மவ்வழி
தத்துவ மாவ தகார எழுத்தே. 2180

அறிவொன் றிலாதன ஐயேழு மொன்றும்
அறிகின்ற என்னை அறியா திருந்தேன்
அறிகின்ருய் நீயென(று) அருள்செய்தார் நந்தி
அறிகின்ற நானென்(று) அறிந்துகொண் டேனே

சாக்கிர சாக்கிர மாதி தனில்ஐந்தும்
ஆக்கு மலாவத்தை யைந்து நனவாதி
போக்கி யிவற்ருெடும் பொய்யான வாருறு
நீக்கி நெறிநின்ருென் ருகி நிற்குமே. 2182

ஆணவ மாதி மலமைந் தலரோனுக்
காணவ மாதிநான் காமாற் கரனுக்கு
ஆணவ மாதி மூன்றுநீசர்க் கிரண்டென்ப
ஆணவ மொன்றே சதாசிவற் காவதே. 2183

அத்துவாக்கள்

தத்துவம் ஆருறு தன்மனு வேழ்கோடி
மெய்த்தகு வன்னம்ஐம் பானென்று மேதினி
ஒத்திரு நூற்றிரு பான்நான்கெண் பானென்று
வைத்த பதங்கலை யோரைந்தும் வந்ததே. 2184

நாடிய மண்டல மூன்று நலந்தெரிந்
தோடு மவரோ டுள்ளிரு பத்தைஞ்சுங்
கூடுவர் கூடிக் குறிவழி யேசென்று
தேடிய பின்னர்த் திகைத்திருந் தார்களே. 2185

சாக்கிர சாக்கிர மாதித் தலையாக்கி
ஆக்கிய தூல மளவாக்கி யதீதத்துத்
தாக்கிய வன்பான தாண்டவஞ் சார்ந்தது
தேக்குஞ் சிவமாதல் ஐந்துஞ் சிவாயமே. 2186

சுத்த நனவாதி பருவம்

நனவாதி தூலமே சூக்கப் பகுதி
அனதான வைஐந்தும் விந்துவின் சத்தி
தனதா முயிர்விந்து தானின்று போந்து
கனவா நனவிற் கலந்ததிவ் வாறே. 2187

நனவில் அதீதம் பிறந்தார் கிடந்தார்
நனவில் துரியம் நிகழ்ந்தார் தவழ்ந்தார்
நனவிற் சுழுனை நடந்தார் வளர்ந்தார்
நனவிற் கனவோட னென்செய்தி யானதே. 2188

செறியுங் கிரியை சிவதத் துவமாம்
பிறிவிற் சுகயோகம் பேரருள் கல்வி
குறிதற் றிருமேனி குணம்பல வாகும்
அறிவில் சராசரம் அண்டத் தளவே. 2189

ஆதி பரஞ்சிவஞ் சத்தி சதாசிவம்
ஏதமில் ஈசன்நல் வித்தியா தத்துவம்
போதங் கலைகால நியதிமா மாயை
நீதியீ ருக நிறுத்தினன் என்னே. 2190

தேசு திகழ்சிவஞ் சத்தி சதாசிவம்
ஈசன் அனல்வித்தை இராகங் கலைகால
மாசகல் வித்தை நியதி மகாமாயை
ஆசில் புருடாதி ஆன்மாவீ ராறே. 2191

ஆணவ மாயையுங் கன்மமு மாமலங்
காணு முளைக்குத் தவிடுமி யான்மாவுந்
தாணுவை யொவ்வாமற் றண்டுல மாய்நிற்கும்
பேணுவாய் மற்றுநின் பாசம் பிரித்தே. 2192

பசுக்கள் பலவண்ணம் பாலொரு வண்ணம்
பசுக்களை மேய்க்கின்ற ஆயன் ஒருவண்ணம்
பசுக்களை மேய்க்கின்ற ஆயன்கோல் போடிற்
பசுக்கள் தலைவனைப் பற்றி விடாவே. 2193

உடலிந் தியமனம் ஒண்புத்தி சித்தம்
அடலொன் றகந்தை அறியாமை மன்னிக்
கெடுமவ் வுயிர்மயல் மேலுங் கிளைத்தால்
அடைவது தானேழ் நரகத்து ளாயே. 2194

தற்றெரி யாதவ தீதந்தற் காணவஞ்
சொற்றெரி கின்ற துரியஞ்சொற் காமியம்
பெற்ற சுழுத்திப்பின் பேசுறுங் காதலா
மற்றது வுண்டிக் கனநன வாதலே. 2195

நனவிற் கனவில்லை ஐந்து நனவிற்
கனவிலாச் சூக்குமங் காணுஞ் சுழுத்தி
தனலுண் பகுதியே தற்கூட்டு மாயை
நனவிற் றுரிய மதீதந் தலைவந்தே. 2196

ஆரு றிலையைந் தகல நனுநனு
வாரு மவைவிட வாகு நனுக்கனு
வேருன ஐந்தும் விடவே நனுவினில்
ஈருஞ் சுழுனை யிதின்மாயை தானே. 2197

மாயையில் வந்த புருடன் துரியத்தில்
ஆய முறைவிட் டதுவுந்தா னன்ருகிச்
சேய கேவல விந்துடன் சென்றக்கால்
ஆய தனுவின் பயனில்லை யாகுமே. 2198

அதீதத் துரியத் தறிவனும் ஆன்மா
அதீதத் துரிய மதனுற் புரிந்தால்
அதீதத் தெழுந்தறி வாகிய மானன்
முதிய அனலிற் றுரியத்து முற்றுமே. 2199

ஐயைந்து பத்துடன் ஆனது சாக்கிரங்
கைகண்ட ஐயைஞ்சிற் கண்டங் கனுஎன்பர்
பொய்கண்ட மூவர் புருடன் சுழுனையின்
மெய்கண் டவனுந்தி மேவல் இருவரே. 2200

புரியட் டகமே பொருந்தல் நனவு
புரியட் டகந்தன்னின் மூன்று கனவு
புரியட் டகத்தில் இரண்டு சுழுத்தி
புரியட் டகத்தொன்று புக்க துரியமே. 2201

நனவின் நனவு புலனில் வழக்கம்
நனவிற் கனவு நினைத்தல் மறத்தல்
நனவிற் சுழுனையுண் ணுடல் இலாமை
நனவில் துரிய மதீதத்து நந்தியே. 2202

கனவின் நனவுபோற் காண்டல் நனவாங்
கனவினிற் கண்டு மறத்தல் கனவாங்
கனவிற் சுழுத்தியுங் காணுமை காணல்
அனுமாதி செய்த லிலான துரியமே. 2203

சுழுத்தி நனவொன்றுந் தோன்ருமை தோன்றல்
சுழுத்தி கனவதன் உண்மை சுழுத்தியிற்
சுழுத்தி யறிவறி வாலே யழிகை
சுழுத்தித் துரியமாஞ் சொல்லறும் பாழே. 2204

துரிய நனவா மிதமுரை போதந்
துரியக் கனவா மகமுணர் போதந்
துரியச் சுழுத்தி வியோமந் துரியந்
துரியம் பரமெனத் தோன்றிடுந் தானே. 2205

அறிவறி கின்ற அறிவு நனவாம்
அறிவறி யாமை யடையக் கனவாம்
அறிவறி யவ்வறி யாமை சுழுத்தி
அறிவறி வாகு மான துரியமே. 2206

தானெங்கு மாயவ னம்மலந் தான்விட்டு
ஞானந் தனதுரு வாகி நயந்தபின்
தானெங்கு மாய்நெறி நின்றது தான்விட்டு
மேனந்தச் சூக்க மவைவன்ன மேலிட்டே. 2207

ஐயைந்து மாறுமோ ரைந்து நனவினில்
எய்யு நனவு கனவு சுழுத்தியா
மெய்யும்பின் சூக்கமும் மெய்ப்பகுதி மாயை
ஐயமுந் தானவ னத்துரி யத்தனே. 2208

ஈதென் றறிந்திலன் இத்தனை காலமும்
ஈதென றறிந்தபின் ஏதும் அறிந்திலேன்
ஈதென் றறியும் அறிவை அறிந்தபின
ஈதென றறியும் இயல்புடை யோனே. 2209

உயிர்க்குயி ராகி யுருவா யருவாய்
அயற்புணர் வாகி யறிவாய்ச் செறிவாய்
நயப்புறு சத்தியும் நாதன் உலகாதி
இயற்பின்றி யெல்லாம் இருண்மூட மாமே. 2210

சத்தி யிராகத்திற் றூனல் லுயிராகி
ஒத்துறு பாச மலமைந்தோ டாரூறு
தத்துவ பேதஞ் சமைத்துக் கருவியும்
வைத்தனன் ஈசன் மலமறு மாறே. 2211

சாக்கிரா தீதத்தி லாணவந் தன்னுண்மை
சாக்கிரா தீதத் துரியத்திற் றூனுறல்
சாக்கிரா தீதத்தில் ஆணவந் தான்விடாச்
சாக்கிரா தீதம் பரனுண்மை தங்குமே. 2212

மலக்கலப் பாலே மறைந்தது சத்தி
மலக்கலப் பாலே மறைந்தது ஞானம்
மலக்கலப் பாலே மறைந்தனன் தானு
மலக்கலப் பற்ருல் மதியொளி யாமே. 2213

திகைக்கின்ற சிந்தையுள் சிங்கங்கள் மூன்று
நகைக்கின்ற நெஞ்சுள் நரிக்குட்டி நான்கு
வகைக்கின்ற நெஞ்சினுள் ஆனைக்கன் றைந்து
பகைக்கின்ற நெஞ்சுக்குப் பாலிரண் டாமே. 2214

கதறு பதினெட்டுக் கண்களும் போகச்
சிதறி எழுந்திடுஞ் சிந்தையை நீரும்
விதறு படாமுன்னம் மெய்வழி நின்ருல்
அதிர வருவதோர் ஆனையு மாமே. 2215

நனவகத் தேயொரு நாலைந்தும் வீடக்
கனவகத் தேயுட் கரணங்க ளோடு
முனவகத் தேநின் றுதறியுட் புக்கு
நினைவகத் தின்றிச் சுழுத்திநின் ருனே. 2216

நின்றவன் ஆசான் நிகழ்துரி யத்தனய்
ஒன்றி யுலகின் நியமா திகளுற்றுச்
சென்று துரியாதீ தத்தே சிலகாலம்
நின்று பரனய் நின்மல னகுமே. 2217

ஆனவவ் வீசன் அதீதத்தில் வித்தையாய்த்
தானுல குண்டு சதாசிவ மாசத்தி
மேனிகள் ஐந்தும்போய் விட்டுச் சிவமாகி
மோன மடைந்தொளி மூலத்த னமே. 2218

மண்டல மூன்றினுள் மாயநன் னடனைக்
கண்டுகொண் டுள்ளே கருதிக் கழிக்கின்ற
விண்டலர் தாமரை மேலொன்றுங் கீழாகத்
தண்டமுந் தான யகத்தினுள் ளாமே. 2219

போதறி யாது புலம்பின புள்ளின
மாதறி யாவகை நின்று மயங்கின
வேதறி யாவணம் நின்றனன் எம்மிறை
சூதறி வாருச்சி சூடிநின் றாரே. 2220

கருத்தறிந் தொன்பது கண்டமும் ஆங்கே
பொருத்தறிந் தோம்புவ னுபதி நாடித்
திருத்தறிந் தேன்மிகு தேவர் பிரானை
வருத்தறிந் தேன்மன மன்னிநின் றானே. 2221

ஆன விளக்கொளி தூண்டும் அவனென்னத்
தான விளக்கொளி யாமூல சாதனத்
தான விதிமூலத் தானத்தில் அவ்விளக்கு
ஏனை மதிமண் டலங்கொண் டெரியுமே. 2222

உண்ணாடும் ஐவர்க்கு மண்டை யொதுங்கிய
விண்ணாட நின்ற வெளியை வினவுறில்
அண்ணாந்து பார்த்தைவர் கூடிய சந்தியிற்
கண்ணாடி காணுங் கருத்ததென் றானே. 2223

அறியாத வற்றை அறிவான் அறிவான்
அறிவான் அறியாதான் தன்னறி வாகான்
அறியா தவத்தை அறிவானைக் கூட்டி
அறியா தறிவானை யாரறி வாரே. 2224

துரிய தரிசனஞ் சொற்றோம் வியோமம்
அரியன தூடணம் அந்நன வாதி
பெரியன கால பரம்பிற் றுரியம்
அரிய அதீதம் அதீதத்த தாமே. 2225

மாயையிற் சேதனன் மன்னும் பகுதியோன்
மாயையின மற்றது நீவுதன் மாயையாங்
கேவல மாகுஞ் சகலமா யோனியுள்
தோயும் மனிதர் துரியத்துட் சீவனே. 2226

கேவல சகல சுத்தம்

தன்னை யறிசுத்தன் றற்கே வலன்றனும்
பின்ன முறநின்ற பேத சகலனும்
மன்னிய சத்தசத் துச்சத சத்துடன்
துன்னுவர் தத்தந் தொழிற்கள வாகவே. 2227

தானே தனக்குப் பகைவனும் நட்டானுந்
தானே தனக்கு மறுமையும் இம்மையுந்
தானே தான்செய்த வினைப்பயன் துய்ப்பானுந்
தானே தனக்குத் தலைவனு மாமே. 2228

ஆமுயிர் கேவல மாமாயை யின்னடந்
தாமுயிர் மாயை யெறிப்ப அறிவுற்றுக்
காமிய மாயேய முங்கல வாநிற்பத்
தாமுறு பாசஞ் சகலத்த தாமே. 2229

சகல அவத்தையிற் சார்ந்தோர் சகலர்
புகலு மலமூ வகையும் புணர்ந்தோர்
நிகரின் மலரோன்மா னீடுபல் தேவர்கள்
நிகழ்நரர் கீட மந்தமு மாமே. 2230

தாவிய மாயையில் தங்கும் பிரளய
மேவிய மற்ற துடம்பாய்மிக் குள்ளன
ஓவல் இலக்கணர் ஒன்றிய சீகண்டர்
ஆவயி னூற்றெட்டு ருத்திர ராகுமே. 2231

ஆகின்ற கேவலத் தாணவத் தானவர்
ஆகின்ற வித்தே சராமனந் தாதியர்
ஆகின்ற எண்மர் எழுகோடி மந்திரர்
ஆகின்ற ஈசர் அநேகரு மாமே. 2232

ஆமா றிற்சிவ ஞானருள் பெற்றுளோர்
போமலந் தன்னுற் புகழ்விந்து நாதம்விட்
டோமய மாகி யொடுங்கலி னின்மலந்
தோமறு சுத்தா வவத்தைத் தொழிலே. 2233

ஓரினு மூவகை நால்வகை யும்முள
தேரி லிவைகே வலமாயை சேரிச்சை
சாரிய லாயவை தாமே தணப்பவை
வாரிவைத் தீசன் மலமறுத் தானே. 2234

பொய்யான போதாந்த மாறும் விட்டகன்று
எய்யாமை நீங்கவே எய்தவன் தானுகி
மெய்யாய் சராசர மாய்வெளி தன்னுட்புக்கு
எய்தாம லெய்துஞ்சுத் தாவத்தை யென்பவே. 2235

அனுதி பசுவியாத்தி யாகு மிவனை
அனுதியில் வந்த மலம்ஐந்தால் ஆட்டி
அனுதியிற் கேவல மச்சக லத்திட்டு
அனுதி பிறப்பறச் சுத்தத்து ளாகுமே. 2236

அந்தரஞ் சுத்தாவத் தைகேவ லத்தாறு
தந்தோர்தஞ் சுத்தகே வலத்தற்ற தற்பரத்
தின்பால் துரியத் திடையே யறிவுறத்
தன்பால் தனையறி தத்துவந் தானே. 2237

ஐயைந் தொடுங்கும் ஆன்மாவில் ஆன்மாவும்
மெய்கண்டிடுஞ் சுத்த வித்தையில் வீடாகுந்
துய்யவவ் வித்தை முதன்மூன்றுந் தொல்சத்தி
ஐயன் சிவஞ்சத்தி யாந்தோற்ற மவ்வாறே. 2238

ஐயைந்து மான்மாவில் ஆறே டடங்கிடு
மெய்கண்ட மேன்மூன்று மேவுமெய் யோகத்தில்
கைகண்ட சத்தி சிவபாகத் தேகாண
எய்யும் படியடங் கும்நாலேழ் எய்தியே. 2239

ஆணவத் தாரொன் றறியாத கேவலர்
பேணிய மாயைப் பிரளயா கலராகுங்
காண முருவினர் காணுமை காண்பவே
பூணுஞ் சகலமும் பாசமும் புக்கோரே. 2240

ஆணவ மாகும் விஞ்ஞான கலருக்குப்
பேணிய மாயை பிரளயா கலராகும்
ஆணவ மாயையுங் கன்ம மூன்றுமே
காணுஞ் சகலர்க்குக் காட்டு மலங்களே. 2241

கேவலந் தன்னிற் கிளர்ந்தவிஞ் ஞாகலர்
கேவலந் தன்னிற் கிளர்விந்து சத்தியால்
ஆவயிற் கேவலத் தச்சக லத்தையும்
மேவிய மந்திர மாமாயை மெய்ம்மையே. 2242

மாயையின் மன்னும் பிரளயா கலர்வந்து
மாயையுந் தோன்று வகைநிற்க ஆணவ
மாய சகலத்துக் காமிய மாமாயை
ஏயமன் னூற்றெட் டுருத்திரர் என்பவே. 2243

மும்மலங் கூடி முயங்கி மயங்குவோர்
அம்மெய்ச் சகலத்தர் தேவர சுரர்நரர்
மெய்ம்மையில் வேதா விரிமால் கீடாந்தம்
தம்முறை யோனிபுக் கார்க்குஞ் சகலரே. 2244

சுத்த அவத்தையில் தோய்ந்தவர் மும்மலச்
சத்தசத் தோடத் தனித்தனி பாசமும்
மத்த இருள்சிவ னான கதிராலே
தொத்தற விட்டிடச் சுத்தரா வார்களே. 2245

தற்கே வலம்முத்தி தானே தனிமையாய்ப்
பிற்பாற் சகலங் கலாதிப் பிறிவதாஞ்
சொற்பாற் புரிசுத்த கேவலஞ் சாக்கிரந்
தற்பாற் புரிவது தற்சுத்த மாமே. 2246

அறிவின்றிய முத்தன் அராகாதி சேரான்
குறியொன்றி லாநித்தன் கூடான் கலாதி
செறியுஞ் செயலிலான் றினக்கற்ற வில்லோன்
கிறியன் மலவியாபி கேவலத் தானே. 2247

விந்துவும் மாயையும் மேவுங் கிரியையுஞ்
சந்தத ஞான பரையுந் தனுச்சத்தி
விந்துவின் மெய்ஞ்ஞான மேவும் பிரளயர்
வந்த சகலசுத் தான்மாக்கள் வையத்தே. 2248

கேவல மாதியிற் பேதங் கிளக்குறிற்
கேவல மூன்றுங் கிளருஞ் சகலத்துள்
ஆவயின் மூன்று மதிசுத்த மூடவே
ஓவவில் லாவொன்பா னுற்றுணர் வோர்கட்கே .2249

கேவலத்திற் கேவலம் அதீதா தீதங்
கேவலத் திற்சக லங்கள் வயிந்தவங்
கேவலத் திற்சுத்தங் கேடில்விஞ் ஞாகலர்க்
காவயி னுதன் அருண்மூர்த்தி தானே. 2250

சகலத்திற் கேவலஞ் சாக்கிரா தீதஞ்
சகல சகலமே சாக்கிர சாக்கிரஞ்
சகலத்திற் சுத்தமே தற்பரா வத்தை
சகலத்தில் இம்மூன்று தன்மையு மாமே 2251

சுத்தத்திற் சுத்தமே தொல்சிவ மாகுதல்
சுத்தத்திற் கேவலந் தொல்லுப சாந்தமாஞ்
சுத்த சகலந் துரிய விலாசமாஞ்
சுத்தத்தில் இம்மூன்றுஞ் சொல்லலு மாமே. 2252

சாக்கிர சாக்கிரந் தன்னிற் கனவொடுஞ்
சாக்கிரந் தன்னிற் சுழுத்தி துரியமே
சாக்கிரா தீதந் தனிற்சுகா னந்தமே
ஆக்கு மறையாதி ஐம்மல பாசமே. 2253

சாக்கிரா தீதத்திற் ருனறு மாணவஞ்
சாக்கிரா தீதம் பராவத்தை தங்காது
ஆக்கு பரோபாதி யாமுப சாந்தத்தை
நோக்கு மலங்குண நோக்குத லாகுமே. 2254

பெத்தமும் முத்தியும் பேணுந் துரியமுஞ்
சுத்த வதீதமுந் தோன்றுமற் றுனும்
அத்தன் அருளென் றருளால் அறிந்தபின்
சித்தமும் இல்லை செயலில்லை தானே. 2255

எய்திய பெத்தமும் முத்தமும் என்பன
எய்தும் அரனரு ளேவிளை யாட்டோ
டெய்தி டுயிர்சுத்தத் திடுநெறி என்னவே
எய்தும் உயிரிறை பாலறி வாமே. 2256

ஐம்மலத் தாரு மதித்த சகலத்தர்
ஐம்மலத் தாரு மருவினைப் பாசத்தார்
ஐம்மலத் தார்சுவர்க் கந்நெறி யாள்பவர்
ஐம்மலத் தாரர ளுர்க்கறி வோரே. 2257

கருவி லதீதங் கலப்பிக்கு மாயை
அரிய துரிய மதிலுண்ணும் ஆசையும்
உரிய சுழுனை முதலெட்டுஞ் சூக்கத்
தரிய கனத்தூலம் அந்நன வாகுமே. 2258

ஆணவ மாகும் அதீதமேன் மாயையும்
பூணுந் துரியஞ் சுழுத்திபொய்க் காமியம்
பேணுங் கனவும் மாமாயை திரோதாயி
காணு நனவில் மலக்கலப் பாகுமே. 2259

அரன்முத லாக அறிவோன் அதீதத்தன்
அரன்முத லாமாயை தங்கிச் சுழுனை
கருமம் உணர்ந்து மாமாயைக் கைக்கொண்டோர்
அருளு மறைவார் சகலத்துற் றுரே. 2260

உருவுற்றுப் போகமே போக்கியந் துற்று
மருவுற்றுப் பூதம ருதியான் மன்னி
வருமச் செயல்பற்றிச் சத்தாதி வைகிக்
கருவுற் றிடுஞ்சீவன் காணுஞ் சகலத்தே. 2261

இருவினை யொத்திட இன்னருட் சத்தி
மருவிட ஞானத்தில் ஆதன மன்னிக்
குருவினைக் கொண்டருட் சத்திமுன் கூட்டிப்
பெருமல நீங்கிப் பிறவாமை சுத்தமே. 2262

ஆருறு மாறதின் ஐயைந் தவத்தையோ
டீரு மதீதத் துரியத் திவனெய்தப்
பேருன ஐவரும் போம்பிர காசத்து
நீருர் பரஞ்சிவ மாதேய மாகுமே. 2263

தன்னை யறியா துடலைமுன் தானென்றுன்
தன்னைமுன் கண்டான் துரியந் தனைக்கண்டான்
உன்னுந் துரியமும் ஈசனோ டொன்றுக்கால்
பின்னையும் வந்து பிறந்திடுந் தானே. 2264

சாக்கிரந் தன்னில் அதீதந் தலைப்படில்
ஆக்கிய வந்த வயிந்தவ மானந்த
நோக்கும் பிறப்பறு நோன்முத்தி சித்தியாம்
வாக்கும் மனமும் மருவல்செய் யாவே. 2265

அப்பும் அனலும் அகலத்து ளேவரும்
அப்பும் அனலும் அகலத்து ளேவரா
அப்பும் அனலும் அகலத்து ளேதெனில்
அப்பும் அனலுங் கலந்தவவ் வாறே. 2266

அறுநான்க சுத்தம் அதிசுத்தா சுத்தம்
உறுமேழு மாயை உடனைந்து சுத்தம்
பெறுமா றிவைமூன்றுங் கண்டத்தாற் பேதித்
துறுமாயை மாமாயை யான்மாவி னோடே. 2267

மாயையைகைத் தாயாக மாமாயை யீன்றிட
வாய பரசிவன் தந்தையாய் நிற்கவே
ஏயும் உயிர்க்கே வலசகலத் தெய்தி
ஆய்தரு சுத்தமுந் தான்வந் தடையுமே. 2268

பராவத்தை

அஞ்சுங் கடந்த அனாதி பரந்தெய்வ
நெஞ்சம தாய நிமலன் பிறப்பிலி
விஞ்சும் உடலுயிர் வேறு படுத்திட
வஞ்சத் திருந்த வகையறிந் தேனே. 2269

சத்தி பராபரஞ் சாந்தி தனிலான
சத்தி பரானந்தந் தன்னிற் சுடர்விந்து
சத்திய மாயை தனுச்சத்தி ஐந்துடன்
சத்தி பெறுமுயிர் தானங்கத் தாறுமே. 2270

ஆறுறுக் கப்பால் அறிவார் அறிபவர்
ஆறுறுக் கப்பால் அருளார் பெறுபவர்
ஆறுறுக் கப்பால் அறிவாம் அவர்கட்கே
ஆறுறுக் கப்பால் அரனினி தாமே. 2271

அஞ்சொடு நான்குங் கடந்தக மேபுக்குப்
பஞ்சணி காலத்துப் பள்ளி துயில்கின்ற
விஞ்சையர் வேந்தனும் மெல்லிய லாளொடு
நஞ்சற நாடி நயஞ்செய்யு மாறே. 2272

உரிய நனாத்துரி யத்தி லிவனும்
அரிய துரிய நனவாதி மூன்றிற்
பரிய பரதுரி யத்திற் பரனுந்
திரிய வருந்துரி யத்திற் சிவமே. 2273

பரமாம் ஆதீதமே பற்றறப் பற்றல்
பரமாம் ஆதீதம் பயிலப் பயிலப்
பரமாம் அதீதம் பயிலாத் தபோதனர்
பரமாகார் பாசமும் பற்றௌன் றருதே. 2274

ஆயும்பொய்ம் மாயை யகம்புற மாய்நிற்கும்
வாயு மனமுங் கடந்த மயக்கறின்
தூய அறிவு சிவானந்த மாகிப்போய்
வேயும் பொருளாய் விளைந்தது தானே. 2275

துரியப் பரியில் இருந்தஅச் சீவனைப்
பெரிய வியாக்கிரத் துள்ளே புகவிட்டு
நரிகளை யோடத் துரத்திய நாதர்க்
குரிய வினைகள்நின் றேலமிட் டன்றே. 2276

நின்றஇச் சாக்கிர நீள் துரி யத்தினின்
மன்றனு மங்கே மணஞ்செய்ய நின்றிடும்
மன்றன் மணஞ்செய்ய மாயை மறைந்திடும்
அன்றே இவனும் அவன்வடி வாமே. 2277

விரிந்திடிற் சாக்கிர மேவும் விளக்காய்
இருந்த விடத்திடை யீடான மாயை
பொருந்துந் துரியம் புரியிற்ற னுகுந்
தெரிந்த துரியத்துத் தீதக லாதே. 2278

உன்னை யறியா துடலைமுன் நானென்றாய்
உன்னை யறிந்து துரியத் துறநின்றாய்
தன்னை யறிந்தும் பிறவி தணவாதால்
அன்ன வியாத்தன் அமலனென் றறிதியே. 2279

கருவரம் பாகிய காயந் துரியம்
இருவருங் கண்டீர் பிறப்பிறப் புற்றார்
குருவரம் பெற்றவர் கூடிய பின்னை
இருவரு மின்றியொன் றாகிநின் றாரே. 2280

அணுவின் துரியத்தி லான நனவும்
அணுவசை வின்கண் ணன கனவும்
அணுவசை விற்பரா தீதஞ் சுழுத்தி
பணியிற் பரதுரி யம்பர மாமே. 2281

பரதுரி யத்து நனவும் பரந்து
விரிசக முண்ட கனவுமெய்ச் சாந்தி
உருவுறு கின்ற சுழுத்தியும் ஓவத்
தெரியுஞ் சிவதுரி யத்தனு மாமே. 2282

பரமா நனவின்பின் பாற்சக முண்ட
திரமார் கனவுஞ் சிறந்த சுழுத்தி
உரமாம் உபசாந்த முற்றல் துறவே
தரனுஞ் சிவதுரி யத்தனு மாமே. 2283

சீவ துரிய முதலாகச் சீரான
ஆவ சிவதுரி யாந்தம் அவத்தைபத்
தோவும் பராநந்தி யுண்மைக்குள் வைகியே
மேவிய நாலேழ் விடுத்துநின் றனே. 2284

பரஞ்சிவன் மேலாம் பரமம் பரத்திற்
பரம்பரன் மேலாம் பரநன வாக
விரிந்த கனவிடர் வீட்டுஞ் சுழுனை
உரந்தகு மாநந்தி யாமுண்மை தானே. 2285

சார்வாம் பரசிவஞ் சத்தி பரநாதம்
மேலாய விந்து சதாசிவ மிக்கோங்கிப்
பாலாய்ப் பிரமன் அரியம ராபதி
தேவாம் உருத்திரன் ஈசனுங் காணிலே. 2286

கலப்பறி யார்கடல் சூழுல கேழும்
உலப்பறி யாருட லோடுயிர் தன்னை
அலப்பறிந் திங்கர சாளகி லாதார்
குறிப்பது கோல மடலது வாமே. 2287

பின்னை யறியும் பெருந்தவத் துண்மைசெய்
தன்னை யறியில் தயாபரன் எம்மிறை
முன்னை யறிவு முடிகின்ற காலமும்
என்னை யறியலுற்(று) இன்புற்ற வாறே. 2288

பொன்னை மறைத்தது பொன்னணி பூடணம்
பொன்னின் மறைந்தது பொன்னணி பூடணம்
தன்னை மறைத்தது தன்கர ணங்களாம்
தன்னின் மறைந்தது தன்கர ணங்களே. 2289

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தின் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்தின் மறைந்தது பார்முதற் பூதமே. 2290

ஆரு றகன்று நமவிட்(டு) அறிவாகி
வேருன தானே யகாரமாய் மிக்கோங்கி
ஈருர் பறையின் இருளற்ற தற்பரன்
பேருர் சிவாய அடங்கும்பின் முத்தியே. 2291

துரியத்தில் ஓரைந்துஞ் சொல்லக ராதி
விரியப் பரையின் மிகுநாத மந்தம்
புரியப் பரையின் பராவத்தா போதந்
திரியப் பரமந் துரியந் துரியமே. 2292

ஐந்துஞ் சகலத் தருளாற் புரிவுற்றுப்
பந்திடுஞ் சுத்த அவத்தைப் பதைப்பினில்
நந்தி பராவத்தை நாடச் சுடர்முனம்
அந்தி யிருள்போலும் ஐம்மல மாறுமே. 2293

ஐயைந்து மட்டுப் பகுதியும் மாயையும்
பொய்கண்ட மாமாயை தானும் புருடன்கண்
டெய்யும் படியாய் எவற்றுமாய் அன்றுகி
உய்யும் பராவத்தை யுள்ளுறல் சுத்தமே. 2294

நின்ருன் அருளும் பரமுமுன் னேயமும்
ஒன்ருய் மருவும் உருவும் உபாதியும்
சென்ரு னெனேவிடுத் தாங்கிற்செல் லாமையும்
நன்ருன ஞானத்தின் நாதப் பிரானே. 2295

முக்குண நிர்க்குணம்

சாத்திக மெய்து நனவெனச் சாற்றுங்கால்
வாய்த்த இராசத மன்னுங் கனவென்ப
ஓய்த்திடுங் தாமதம் உற்ற சுழுத்தியாம்
மாய்த்திடு நிர்க்குண மாசில் துரியமே. 2296

அண்டாதிபேதம்

பெறுபகி ரண்டம் பேதித்த அண்டம்
எறிகடல் ஏழின் மணலள வாகப்
பொறியொளி பொன்னணி யென்ன விளங்கிச்
செறியும்அண் டாசனத் தேவர் பிரானே. 2297

ஆனந்த தத்துவம் அண்டா சனத்தின்மேல்
மேனிஐந் தாக வியாத்தமுப் பத்தாருய்த்
தானந்த மில்லாத தத்துவ மானவை
ஈனமிலா அண்டத் தெண்மடங் காமே. 2298

பதினெராந்தானமும் அவத்தை எனக்காணல்

அஞ்சில் அமுதுமோ ரேழின்கண் ஆனந்த
முஞ்சிலோங் காரமோ ரொன்பான் பதினென்றில்
வஞ்சக மேநின்று வைத்திடிற் காயமாங்
கிஞ்சுகச் செவ்வாய்க் கிளிமொழி கேளே. 2299

புருட னுடனே பொருந்திய சித்தம்
அருவமொ டாறும் அதீதத் துரியம்
விரியுஞ் சுழுத்தியின் மிக்குள்ள எட்டும்
அரிய பதினொன்று மாமவ் வவத்தையே. 2300

காட்டும் பதினொன்றுங் கைகலந் தாலுடல்
நாட்டி யழுத்திடி னந்தியல் லாலில்லை
ஆட்டஞ்செய் யாத வதுவிதி யேநினை
ஈட்டு மதுதிடம் எண்ணலு மாமே. 2301

கலவு - செலவு

கேவலந் தன்னிற் கலவச் சகலத்தின்
மேவுஞ் செலவு விடவரு நீக்கத்துப்
பாவுந் தனைக்காண்டன் மூன்றும் படர்வற்ற
தீதறு சாக்கிரா தீதத்திற் சுத்தமே. 2302

வெல்லும் அளவில் விடுமின் வெகுளியைச்
செல்லும் அளவுஞ் செலுத்துமின் சிந்தையை
அல்லும் பகலும் அருளுடன் தூங்கினாற்
கல்லும் பிளந்து கடுவெளி யாமே. 2303

நின்மலாவத்தை

ஊமைக் கிணற்றகத் துள்ளே யுறைவதோர்
ஆமையி னுள்ளே யழுவைகள் ஐந்துள
வாய்மையி னுள்ளே வழுவா தொடுங்குமேல்
ஆமையின் மேலுமோ ராயிரத் தாண்டே. 2304

காலங்கி நீர்பூக் கலந்தஆ காயம்
மாலங்கி யீசன் பிரமன் சதாசிவன்
மேலஞ்சும் ஓடிவிரவவல் லார்கட்குக்
காலனும் இல்லை கருத்தில்லை தானே. 2305

ஆன்மாவே மைந்த ஞயினன் என்பது
தான்மா மறையறை தன்மை யறிகிலர்
ஆன்மாவே மைந்தன் அரனுக் கிவனென்ருல்
ஆன்மாவு மில்லையால் ஐயைந்து மில்லையே. 2306

உதய மழுங்கல் ஒடுங்கலிம் மூன்றின்
கதிசாக் கிரங்கன வாதி சுழுத்தி
பதிதரு சேதனன் பற்ருந் துரியத்
ததிசுப ஞயனந் தானந்தி யாகுமே. 2307

எல்லாந்தன் னுட்புக யாவுளுந் தாஞகி
நல்லாந் துரியம் புரிந்தக்கால் நல்லுயிர்
பொல்லாத வாருறுட் போகாது போதமாய்ச்
செல்லாச் சிவகதி சென்றெய்து மன்றே. 2308

காய்ந்த இரும்பு கனலை யகன்ருலும்
வாய்ந்த கனலென வாதனை நின்ருற்போல்
ஏய்ந்த கரணம் இறந்த துரியத்தும்
தோய்ந்த கருமத் துரிசக லாதே. 2309

ஆன மறையாதி யாமுரு நந்திவந்
தேனை யருள்செய் தெரிநனு வத்தையில்
ஆன வகையை விடுமடைத் தாய்விட
ஆன மலாதீதம் அப்பரந் தானே. 2310

சுத்த அதீதஞ் சகலத்தில் தோய்வுறில்
அத்தன் அருள்நீங்கா வாங்கணிற் ருஞகச்
சித்த சுகத்தைத் தீண்டாச் சமாதிசெய்
தத்தனே டொன்றற் கருண்முத லாமே. 2311

வேறுசெய் தானிரு பாதியின் மெய்த்தொகை
வேறுசெய் தானென்னை எங்கணும் விட்டுய்த்தான்
வேறுசெய் யாவருட் கேவலத் தேவிட்டு
வேறுசெய் யாவத்தன் மேவிநின் ருனே. 2312

கறங்கோலை கொள்ளி வட்டங் கடலிற்
றிரைநிறைஞ் சேர்மத்தின் மலத்தினி னின்ற
அறங்காண் சுவர்க்க நரகம் புவிசேர்ந்
திறங்கா வுயிரரு ளாலிவை நீங்குமே. 2313

தானே சிவமான தன்மை தலைப்பட
ஆன மலமு மப்பாச பேதமும்
மான குணமும் பரான்மா வுபாதியும்
பானுவின் முன்மதி போற்பட ராவே. 2314

நெருப்புண்டு நீருண்டு வாயுவும் உண்டங்
கருக்கனுஞ் சோமனும் அங்கே அமரந்
திருத்தக்க மாலுந் திசைமுகன் தானும்
உருத்திர சோதியும் உள்ளத்து ளாரே. 2315

ஆனைகள் ஐந்தும் அடக்கி அறிவென்னும்
ஞானத் திரியைக் கொளுவி அதனுள்புக்
கூனை யிருளற நோக்கும் ஒருவற்கு
வானக மேற வழியெளி தாமே. 2316

ஆடிய காலி னசைகின்ற வாயுவுந்
தாடித் தெழுந்த தமருக ஓசையும்
பாடி யெழுகின்ற வேதாக மங்களும்
நாடியி னுள்ளாக நான்கண்ட வாறே. 2317

முன்னை யறிவினிற் செய்த முதுதவம்
பின்னைப் பிறவியின் பெற்றால் அறியலாந்
தன்னை யறிவ தறிவாமஃ தன்றிப்
பின்னை யறிவது பேயறி வாகுமே. 2318

செயலற் றிருக்கச் சிவானந்த மாகுஞ்
செயலற் றிருப்பார் சிவயோகந் தேடார்
செயலற் றிருப்பார் செகத்தொடுங் கூடார்
செயலற் றிருப்பார்க்கே செய்தியுண் டாகுமே. 2319

தானவ ளுகுஞ் சமாதிகை கூடினல்
ஆன மலமறும் அப்பசுத் தன்மை போம்
ஈனமில் காயம் இருக்கும் இருநிலத்
தூனங்கள் எட்டு மொழிந்தொன்று வோர்கட்கே. 2320

தொலையா அரனடி தோன்றுமச் சத்தி
தொலையா இருளொளி தோற்ற அணுவுந்
தொலையாத் தொழின்ஞானந் தொன்மையில் நண்ணித்
தொலையாத பெத்தமுத் திக்கிடை தோயுமே. 2321

தோன்றிய பெத்தமும் முத்தியுஞ் சூழ்சத்தி
மான்றுந் தெருண்டு முயிர்பெறு மற்றவை
தான்தரு ஞானந்தன் சத்திக்குச் சாதனு
மூன்றலில் லாவுள் ளொளிக்கொளி யாமே. 2322

அறிகின்றி லாதன ஐயேழும் ஒன்றும்
அறிகின்ற என்னை யறியா திருந்தேன்
அறிகின்ருய் நீயென் றருள்செய்தா னந்தி
அறிகின்ற நானென் றறிந்துகொண் டேனே 2323

தானவ ளுகிய ஞானத் தலைவனை
வானவ ராதியை மாமணிச் சோதியை
ஈனமின் ஞானத் தின்னருட் சத்தியை
ஊனமி லாள்தன்னை யூனிடைக் கண்டதே. 2324

ஒளியும் இருளும் பரையும் பரையுள்
அளிய தெனலாகும் ஆன்மாவை யன்றி
அளியும் அருளுந் தெருளுங் கடந்து
தெளிய அருளே சிவானந்த மாகுமே. 2325

ஆனந்தம் மாகும் அரனருட் சத்தியிற்
ருனந்த மாமுயிர் தானே சமாதிசெய்
தூனந்த மாயுணர் வாயுள் ளுணர்வுறிற்
கோனந்த வாய்க்கு மகாவாக்கிய மாமே. 2326

அறிவிக்க வேண்டாம் அறிவற் றயர்வோர்க்கும்
அறிவிக்க வேண்டாம் அறிவிற் செறிவோர்க்கும்
அறிவுற் றறியாமை யெய்திநிற் போர்க்கே
அறிவிக்கத் தம்மறி வாரறி வோரே. 2327

சத்தும் அசத்துஞ் சதசத்துந் தான்கூடிச்
சித்தும் அசித்துஞ் சிவசித்த தாய்நிற்குஞ்
சுத்தம் அசுத்தந் தொடங்காத் துரியத்துச்
சுத்தரா மூன்றுடன் சொல்லற் றவர்களே. 2328

தானே யறியான் அறிவிலோன் தானல்லன்
தானே யறிவான் அறிவு சதசத்தென்று
ஆனல் இரண்டும் அரனரு ளாய்நிற்கத்
தானே யறிந்து சிவத்துடன் தங்குமே. 2329

தத்துவ ஞானந் தலைப்பட் டவர்கட்கே
தத்துவ ஞானந் தலைப்பட லாய்நிற்குந்
தத்துவ ஞானத்துத் தானவ னுகவே
தத்துவ ஞானனந் தந்தான் தொடங்குமே. 2330

தன்னை யறிந்து சிவனுடன் தானுக
மன்னு பதங்குண மாளும் பிறப்பறும்
பின்னது சன்முத்தி சன்மார்க்கப் பேரொளி
நன்னது ஞானத்து முத்திரை நண்ணுமே. 2331

ஞானந்தன் மேனி கிரியை நடுவங்கந்
தானுறும் இச்சை உயிராகத் தற்பரன்
மேனிகொண் டைங்கரு மத்துவித் தாதலான்
மோனிகண் ஞானத்து முத்திரைபெற் றோர்களே. 2332

உயிர்க்கறி வுண்மை யுயிரிச்சை மானம்
உயிர்க்குக் கிரியை யுயிர்மாயை சூக்கம்
உயிர்க்கிவை யூட்டுவோன் ஊட்டு மவனே
உயிர்ச்செய லன்றியவ் வுள்ளத்து ளானே. 2333

தொழிலிச்சை ஞானங்கள் தொல்சிவ சீவர்
கழிவற்ற மாமாயை மாயையி னுகும்
பழியற்ற காரண காரியம் பாழ்விட்
டழிவற்ற சாந்தாதீ தன்சிவ னுமே. 2334

இல்லதும் உள்ளதும் இயாவையுந் தானுகி
இல்லதும் உள்ளது மாயன்றும் அண்ணலைச்
சொல்லது சொல்லிடில் தூராதி தூரமென்
றெல்லை யுணர்ந்தால் உயிர்க்குயி ராகுமே. 2335

உயிரிச்சை யூட்டி யுழிதருஞ் சத்தி
உயிரிச்சை வாட்டி யொழித்திடு ஞானம்
உயிரிச்சை யூட்டி யுடனுற லாலே
உயிரிச்சை வாட்டி யுயர்பதஞ் சேருமே. 2336

சேருஞ் சிவமானுர் ஐம்மலந் தீர்ந்தவர்
ஓரொன் றி லாரைம் மலவிருள் உற்றவர்
பாரின்கண் விண்ணர கம்புகும் பான்மையோர்
ஆருங்கண் டோரார் அவையருள் அன்றே. 2337

எய்தினர் செய்ய மிகுமாய சத்தியின்
எய்தினர் செய்யும் இருஞான சத்தியின்
எய்தினர் செய்யும் இருஞால சந்தியின்
எய்தினர் செய்யும் இறையருள் தானே. 2338

திருந்தனர் விட்டார் திருவி னரகந்
திருந்தனர் விட்டார் திருவார் சுவர்க்கந்
திருந்தனர் விட்டார் செறிமலக் கூட்டந்
திருந்தனர் விட்டார் சிவமா யவமே. 2339

அவமுஞ் சிவமும் அறியார் அறியார்
அவமுஞ் சிவமும் அறிவார் அறிவார்
அவமுஞ் சிவமும் அருளால் அறிந்தால்
அவமுஞ் சிவமும் அவனரு ளாமே. 2340

அருளான சத்தி யனல்வெம்மை போலப்
பொருளவ னாகத்தான் போதம் புணரும்
இருளொளி யாய்மீண்டு மும்மல மாகுந்
திருவரு ளானந்தி செம்பொரு ளாமே. 2341

ஆதித்தன் தோன்ற வரும்பது மாதிகள்
பேதித்த தவ்வினை யாற்செயல் சேதிப்ப
ஆதித்தன் றன்கதி ரால்வை சேட்டிப்பப்
பேதித்துப் பேதியா வாறருட் பேதமே. 2342

பேதம் அபேதம் பிறழ்பேதா பேதமும்
போதம் புணர்போதம் போதமும் நாதமும்
நாத முடனாத நாதாதி நாதமும்
ஆதன் அருளின் அருளிச்சை யாமே. 2343

மேவிய பொய்க்கரி யாட்டும் வினையெனப்
பாவிய பூதங்கொண் டாட்டிப் படைப்பாதி
பூவியல் கூட்டத்தற் போதம் புரிந்தருள்
ஆவியை நாட்டும் அரனரு ளாமே. 2344

ஆரு றகன்று தனையறிந் தானவன்
ஈருகி யாவினு மியாவுந் தனிலெய்த
வேருய் வெளிபுக்கு வீடுற்ரு னம்மருள்
தேருத் தெளிவுற்றுத் தீண்டச் சிவமாமே. 2345

தீண்டற் கரிய திருவடி நேயத்தை
மீண்டுற் றருளால் விதிவழி யேசென்று
தூண்டிச் சிவஞான மாவினைத் தானேறித்
தாண்டிச் சிவனுடன் சாரலு மாமே. 2346

சார்ந்தவர் சாரணர் சித்தர் சமாதியர்
சார்ந்தவர் மெய்ஞ்ஞான தத்துவ சாத்தியர்
சார்ந்தவர் நேயந் தலைப்பட்ட ஆனந்தர்
சார்ந்தவர் சத்த அருட்டன்மை யாரே. 2347

தானென்(று) அவனென்(று) இரண்டென்பர் தத்துவந்
தானென்(று) அவனென்(று) இரண்டற்ற தன்மையைத்
தானென்(று) இரண்டுன்னுர் கேவலத் தானவர்
தானின்றித் தானுகத் தத்துவ சுத்தமே. 2348

தன்னினில் தன்னை யறியுந் தலைமகன்
தன்னினில் தன்னை யறியத் தலைப்படும்
தன்னினில் தன்னைச் சார்கில ஞகில்
தன்னினில் தன்னையுஞ் சார்தற் கரியவே. 2349

அறியகி லேனென்(று) அரற்ருதே நீயு
நெறிவழி யேசென்று நேர்பட்ட பின்னை
இருசுட ராகி இயற்றவல் லானும்
ஒருசுட ராவந்துன் னுள்ளத்துள் ளாமே. 2350

மண்ணென்று தான்பல நற்கல ஞயிடும்
உண்ணின்ற யோனிகட் கெல்லாம் ஒருவனே
கண்ணென்று தான்பல காணுந் தனைக்காண
அண்ணலும் அவ்வண்ண மாகிநின் ருனே. 2351

ஓம்புகின் ருனுல கேழையும் உள்நின்று
கூம்புகின் ருர்குணத் தின்னெடுங் கூறுவர்
தேம்புகின் ருர்சிவஞ் சிந்தைசெய் யாதவர்
கூம்பகில் லார்வந்து கொள்ளலு மாமே. 2352

குறியறி யார்கள் குறிகாண மாட்டார்
குறியறி யார்கடங் கூடல் பெரிது
குறியறி யாவகை கூடுமின் கூடி
அறிவறி யாவிருந் தன்னமு மாமே. 2353

ஊனே வுயிரோ வுறுகின்ற தேதின்பம்
வானோர் தலைவி மயக்கத் துறநிற்கத்
தானே பெரிதறி வோமென்னு மானுடர்
தானேய் பிறப்போ டிறப்பறி யாரே. 2354

அறிவுதயம்

தன்னை யறியத் தனக்கொரு கேடில்லை
தன்னை யறியாமல் தானே கெடுகின்றான்
தன்னை யறியும் அறிவை அறிந்தபின்
தன்னையே யர்ச்சிக்கத் தானிருந் தானே. 2355

அங்கே யடற்பெருந் தேவரெல் லாந்தொழச்
சிங்கா சனத்தே சிவனிருந் தானென்று
சங்கார் வளையுஞ் சிலம்புஞ் சரேலெனப்
பொங்கார் குழலியும் போற்றியென் றாளே. 2356

அறிவு வடிவென் றறியாத என்னை
அறிவு வடிவென் றருள் செய்தான் நந்தி
அறிவு வடிவென் றருளால் அறிந்தே
அறிவு வடிவென் றறிந்திருந் தேனே. 2357

அறிவுக் கழிவில்லை யாக்கமும் இல்லை
அறிவுக் கறிவல்ல தாதாரமு மில்லை
அறிவே யறிவை யறிகின்ற தென்றிட்டு
அறைகின் றனமறை யீறுகள் தாமே. 2358

ஆயு மலரின் அணிமலர் தன்மேலே
பாய இதழ்கள் பதினாறும் அங்குள
தூய அறிவு சிவானந்த மாகியே
போயே அறிவாய்ப் புணர்ந்திருந் தானே. 2359

மன்னிநின் றாரிடை வந்தருண் மாயத்து
முன்னிநின் றானை மொழிந்தேன் முதல்வனும்
பொன்னிநின்வந் தானோர் புகழ்திரு மேனியைப்
பின்னிநின் றேனீ பெரியையென் றானே. 2360

அறிவறி வாக அறிந்தன்பு செய்ம்மின்
அறிவறி வாக அறியுமிவ் வண்ணம்
அறிவறி வாக அணிமாதி சித்தி
அறிவறி வாக அறிந்தனன் நந்தியே. 2361

அறிவறி வென்றங் கரற்றும் உலகம்
அறிவறி யாமை யாரும் அறியார்
அறிவறி யாமை கடந்தறி வானல்
அறிவறி யாமை யழகிய வாறே. 2362

அறிவறி யாமையை நீவி யவனே
பொறிவா யொழிந்தெங்குந் தானன போது
அறிவா யவற்றினுள் தானு யறிவின்
செறிவாகி நின்றவன் சீவனு மாமே. 2363

அறிவுடை யார்நெஞ் சகலிட மாவது
அறிவுடை யார்நெஞ் சருந்தவ மாவது
அறிவுடை யார்நெஞ்சொ டாதிப் பிரானும்
அறிவுடை யார்நெஞ்சத் தங்குநின் ருனே. 2364

மாயனு மாகி மலரோன் இறையுமாய்க்
காயநன் னுட்டுக் கருமுத லானவன்
சேயன் அணியன் தித்திக்குந் தீங்கரும்
பாயமு தாகிநின் றண்ணிக்கின் ருனே. 2365

என்னை யறிந்திலேன் இத்தனை காலமும்
என்னை யறிந்தபின் ஏதும் அறிந்திலேன்
என்னை யறிந்திட் டிருத்தலுங் கைவிடாது
என்னையிட் டென்னை உசாவுகின் ருனே. 2366

மாய விளக்கது நின்று மறைந்திடுந்
தூய விளக்கது நின்று சுடர்விடுங்
காய விளக்கது நின்று கனன்றிடுஞ்
சேய விளக்கினைத் தேடுகின் றேனே. 2367

தேடுகின் றேன்திசை யெட்டோ ரிரண்டையும்
நாடுகின் றேனல மேயுடை யானடி
பாடுகின் றேன்பர மேதுணை யாமெனக்
கூடுகின் றேன்குறை யாமனத் தாலே. 2368

முன்னை முதல்வினை யாட்டத்து முன்வந்தோர்
பின்னைப் பெருமலம் வந்தவர் பேர்த்திட்டுத்
தன்னைத் தெரிந்துதன் பண்டைத் தலைவன்தாள்
மன்னிச் சிவமாக வாரா பிறப்பே. 2369

ஆறந்தம்

வேதத்தின் அந்தமும் மிக்கசித் தாந்தமும்
நாதத்தின் அந்தமும் நல்போத அந்தமும்
ஓதத் தகுமெட் டியோகாந்த அந்தமும்
ஆதிக்க லாந்தமும் ஆறந்த மாமே. 2370

அந்தமோ ராறும் அறிவார் அதிசுத்தர்
அந்தமோ ராறும் அறிவார் அமலத்தர்
அந்தமோ ராறும் அறியார் அவர்தமக்
கந்தமோ டாதி அறியவொண் ணாதே. 2371

தானான வேதாந்தந் தானென்னுஞ் சித்தாந்த
மானாத் துரியத் தணுவன் றனைக்கண்டு
தேனார் பராபரஞ் சேர்சிவ யோகமாய்
ஆனா மலமற் றருஞ்சித்தி யாதலே. 2372

நித்தம் பரனோ டுயிருற்று நீள்மனஞ்
சுத்த முதல்ஐந்துந் தத்துவத் தால்நீங்கிச்
சுத்த மசுத்தந் தொடரா வகைநினைந்
தத்தன் பரன்பால் அடைதல்சித் தாந்தமே. 2373

மேவும் பிரமனே விண்டு உருத்திரன்
மேவுமெய் யீசன் சதாசிவன் மிக்கப்பால்
மேவும் பரவிந்து நாதம் விடாவாறு
ரேவும் பொழுதணு வொன்றுள தாகுமே. 2374

உள்ள வுயிராறு தாகும் உபாதியைத்
தெள்ளி யகன்றுநா தாந்தத்தைச் செற்றுமேல்
உள்ள இருள்நீங்க வோருணர் வாகுமேல்
எள்ளலில் நாதாந்தத் தெய்திடும் போதமே. 2375

தேடும் இயம நியமாதி சென்றகன்
றூடுஞ் சமாதியில் உற்றுப் படர்சிவன்
பாடுறச் சீவன் பரமாகப் பற்றறக்
கூடும் உபசாந்தம் யோகாந்தக் கொள்கையே. 2376

கொள்கையி லான கலாந்தங் குறிக்கொள்ளில்
விள்கையி லான நிவிர்த்தாதி மேதாதிக்
குள்ளன வாம்விந்து வுள்ளே யொடுங்கலுந்
தெள்ளி யதனைத் தெளிதலு மாமே. 2377

தெளியு மிவையன்றித் தேரைங் கலைவே
ளெரியுள் அமைத்துள்ள தோரவல் லார்கட்
களியவ ஞகிய மந்திரந் தந்திரந்
தெளிவுப தேசஞா னத்தொடைந் தாமே. 2378

ஆகு மனாதி கலையா கமவேதம்
ஆகுமத் தந்திர மந்நூல் வழிநிற்றல்
ஆகு மனாதி யுடலல்லா மந்திரம்
ஆகுஞ் சிவபோ தகமுப தேசமே. 2379

தேசார் சிவமாகுந் தன்ஞானத் தின்கலை
ஆசார நேய மறையுங் கலாந்தத்துப்
பேசா வுரையுணர் வற்ற பெருந்தகை
வாசா மகோசர மாநந்தி தானே. 2380

தானவ ளுகுஞ் சமாதி தலைப்படில்
ஆனக லாந்தநா தாந்தயோ காந்தமும்
ஏனைய போதாந்தம் சித்தாந்த மானது
ஞான மெனஞேய ஞாதுரு வாகுமே. 2381

ஆறந்த முஞ்சென் றடங்குமந் நேயத்தே
ஆறந்த ஞேயம் அடங்கிடு ஞாதுரு
கூறிய ஞானக் குறியுடன் வீடவே
தேறிய மோனஞ் சிவானந்த வுண்மையே. 2382

உண்மைக் கலையாறே ரைந்தான் அடங்கிடும்
உண்மைக் கலாந்தம் இரண்டைந்தோ டேழந்தம்
உண்மைக் கலையொன்றில் ஈருய நாதாந்தத்
துண்மைக் கலைசொல்ல வோரந்த மாமே. 2383

ஆவுடை யானை யரன்வந்து கொண்டபின்
தேவுடை யான்எங்கள் சீர்நந்தி தாடந்து
வீவற வேதாந்த சித்தாந்த மேன்மையைக்
கூவி யருளிய கோனைக் கருதுமே. 2384

கருது மவர்தங் கருத்தினுக் கொப்ப
அரனுரை செய்தருள் ஆகமந் தன்னில்
வருசம யப்புற மாயைமா மாயை
உருவிய வேதாந்த சித்தாந்த வுண்மையே. 2385

வேதாந்தஞ் சித்தாந்தம் வேறிலா முத்திரை
போதாந்த ஞானம் யோகாந்தம் பொதுஞேய
நாதாந்தம் ஆனந்தஞ் சீரோ தயமாகும்
மூதாந்த முத்திரை மோனத்து மூழ்கவே. 2386

வேதாந்தந் தன்னில் உபாதிமே லேழ்விட
நாதாந்த பாசம் விடுநல்ல தொம்பதம்
மீதாந்த காரணோ பாதியேழ் மெய்ப்பரன்
போதாந்த தற்பதம் போமசி என்பவே. 2387

அண்டங்கள் ஏழுங் கடந்தகன் றப்பாலும்
உண்டென்ற பேரொளிக் குள்ளா முளவொளி
பண்டுறு நின்ற பராசத்தி யென்னவே
கொண்டவ னன்றிநின் ருனெங்கள் கோவே. 2388

கோவுணர்த் துஞ்சத்தி யாலே குறிவைத்துத்
தேவுணர்த் துங்கரு மஞ்செய்தி செய்யவே
பாவனைத் தும்படைத் தர்ச்சனை பாரிப்ப
ஒவனைத் துண்டொழி யாத ஒருவனே. 2389

ஒருவனை யுன்னார் உயிர்தனை யுன்னார்
இருவினை யுன்னார் இருமாயை யுன்னார்
ஒருவனு மேயுள் ளுணர்த்திநின் றூட்டி
அருவனு மாகிய ஆதரத் தானே. 2390

அரனன்டர் தானம தாகிச் சிவத்து
வருமவை சத்திகள் முன்னு வகுத்திட்
டுரனுறு சந்நிதி சேட்டிப்ப என்றுந்
திரனுறு தோயாச் சிவாநந்தி யாகுமே. 2391

வேதாந்த தொம்பத மேவும் பசுவென்ப
நாதாந்த பாசம் விடநின்ற நன்பதி
போதாந்த தற்பதம் போயிரண் டயிக்கியஞ்
சாதா ரணஞ்சிவ சாயுச்சிய மாமே. 2392

சிவமாதல் வேதாந்த சித்தாந்த மாகும்
அவமவ மாகு மவ்வவ் விரண்டுஞ்
சிவமாஞ் சதாசிவன் செய்தொன்ரு ஞுைல்
நவமான வேதாந்த ஞானசித் தாந்தமே 2393

சித்தாந்தத் தேசீவன் முத்திசித் தித்தலாற்
சித்தாந்தத் தேநிற்போர் முத்திசித் தித்தவர்
சித்தாந்த வேதாந்தஞ் செம்பொரு ளாதலாற்
சித்தாந்த வேதாந்தங் காட்டுஞ் சிவனையே. 239 4

சிவனைப் பரமனுட் சீவனுட் காட்டும்
அவமற்ற வேதாந்த சித்தாந்த மானுன்
நவமுற் றவத்தையில் ஞானஞ் சிவமாந்
தவமிக் குணர்ந்தவர் தத்துவத் தாரே. 2395

தத்துவ மாகுஞ் சகள வகளங்கள்
தத்துவ மாம்விந்து நாதஞ் சதாசிவந்
தத்துவ மாகுஞ் சீவன்றன் தற்பரந்
தத்துவ மாஞ்சிவ சாயுச்சிய மாமே. 2396

வேதமோ டாகமம் மெய்யாம் இறைவன்நூல்
ஓதும் சிறப்பும் பொதுவுமென் றுள்ளன
நாதன் உரையவை நாடில் இரண்டந்தம்
பேதம தென்பர் பெரியோர்க் கபேதமே. 2397

பரானந்தி மன்னுஞ் சிவானந்தம் எல்லாம்
பரானந்த மேன்மூன்றும் பாமுரு னந்தம்
விராமுத்தி ரானந்த மெய்ந்நட னந்தம்
பொரா நின்ற வுள்ளமே பூரிப்பி யாமே. 2398

ஆகுங் கலாந்தம் இரண்டந்த நாதாந்தம்
ஆகும் பொழுதிற் கலையைந்தா மாதலின்
ஆகும் அரனேபஞ் சாந்தக னுமென்ன
ஆகு மறையா கமமொழிந் தானன்றே. 2399

அன்றுகு மென்னுதை வகையந்தந் தன்னை
ஒன்றுன வேதாந்த சித்தாந்த முள்ளிட்டு
நின்று லியோகாந்த நேர்படு நேர்பட்டான்
மன்றுடி பாத மநுவலு மாமே. 2400

அனுதி சீவனைம் மலமற்றப் பாலாய்
அனுதி யடக்கித் தனைக்கண் டரனுய்த்
தனுதி மலங்கெடத் தத்துவா தீதம்
வினுவுநீர் பாலாதல் வேதாந்த வுண்மையே. 2401

உயிரைப் பரனை யுயர்சிவன் தன்னை
அயர்வற் றறிதொந் தத்தசி யதனுற்
செயலற் றறிவாகி யுஞ்சென் றடங்கி
அயர்வற்ற வேதாந்த சித்தாந்த மாமே. 2402

மன்னிய சோகமா மாமறை யாளர்தஞ்
சென்னிய தான சிவோகமாம் ஈதென்ன
அன்னது சித்தாந்த மாமறை யாய்பொருள்
துன்னிய ஆகம நூலெனத் தோன்றுமே. 2403

முதலாகும் வேத முழுதா கமமகப்
பதியான ஈசன் பகர்ந்த திரண்டு
முதிதான வேத முறைமுறை யாலமர்ந்
ததிகாதி வேதாந்த சித்தாந்த மாகவே. 2404

பதிபசுபாசம் வேறின்மை

அறிவறி வென்ற அறிவு மனுதி
அறிவுக் கறிவாம் பதியும் அனுதி
அறிவினைக் கட்டிய பாசம் அனுதி
அறிவு பதியிற் பிறப்பறுந் தானே. 2405

பசுப்பல கோடி பிரமன் முதலாய்ப்
பசுக்களைக் கட்டிய பாசமூன் றுண்டு
பசுத்தன்மை நீக்கியப் பாசம் அறுத்தாற்
பசுக்கள் தலைவனைப் பற்றி விடாவே. 2406

கிடக்கின்ற வாறே கிளர்பயன் மூன்று
நடக்கின்ற ஞானத்தை நாடோறு நோக்கித்
தொடக்கொன்றும் இன்றித் தொழுமின் தொழுதாற்
குடக்குன்றி லிட்ட விளக்கது வாமே. 2407

பாசஞ்செய் தானைப் படர்சடை நந்தியை
நேசஞ்செய் தாங்கே நினைப்பர் நினைத்தலுங்
கூசஞ்செய் துன்னிக் குறிக்கொள்வ தெவ்வண்ணம்
வாசஞ்செய் பாசத்துள் வைக்கின்ற வாறே. 2408

விட்ட விடமேரு வாறுபோல் வேருகி
விட்ட பசுபாச மெய்கண்டோன் மேவுருன்
கட்டிய கேவலங் காணுஞ் சகலத்தைச்
சுட்டு நனவில் அதீதத்துள் தோன்றுமே. 2409

நாடும் பதியுடன் நற்பசு பாசமும்
நீடுமா நித்தன் நிலையறி வாரில்லை
நீடிய நித்தம் பசுபாச நீக்கமும்
நாடிய சைவர்க்கு நந்தி யளித்ததே. 2410

ஆய பதிதான் அருட்சிவ லிங்கமாம்
ஆய பசுவும் அடலே றெனநிற்கும்
ஆய பலிபீட மாகுநற் பாசமாம்
ஆய அரனிலை யாய்ந்துகொள் வார்கட்கே. 2411

பதிபசு பாசம் பயில்வியா நித்தம்
பதிபசு பாசம் பகர்வோர்க் காருக்கிப்
பதிபசு பாசத்தைப் பற்றற நீக்கும்
பதிபசு பாசம் பயில நிலாவே. 2412

பதியும் பசுவொடு பாசமும் மேலைக்
கதியும் பசுபாச நீக்கமுங் காட்டி
மதிதந்த வானந்த மாநந்தி காணுந்
துதிதந்து வைத்தனன் சுத்தசை வத்திலே. 2413

அறிந்தணு மூன்றுமே யாங்கணு மாகும்
அறிந்தணு மூன்றுமே யாங்கணு மாகி
அறிந்த அணுதி வியாத்தனு மாகி
அறிந்த பதிபடைப் பானங் கவற்றையே. 2414

படைப்பாதி யாவது பரஞ்சிவஞ் சத்தி
இடைப்பால் உயிர்கட் கடைத்திவை தூங்கல்
படைப்பாதி சூக்கத்தைத் தற்பரஞ் செய்யப்
படைப்பாதி தூய மலமப் பரத்திலே. 2415

ஆகிய சூக்கத்தை யவ்விந்து நாதமும்
ஆகிய சத்தி சிவபர மேலேந்தால்
ஆகிய சூக்கத்தில் ஐங்கரு மஞ்செய்வோன்
ஆகிய தூயவீ சானனு மாமே. 2416

மேவும் பரசிவ மேற்சத்தி நாதமும்
மேவும் பரவிந்து ஐம்முகன் வேறீசன்
மேவும் உருத்திரன் மால்வேதா மேதினி
ஆகும் படிபடைப் போனர னுமே. 2417

படைப்பு மளிப்பும் பயலிளைப் பாற்றுந்
துடைப்பு மறைப்புமுன் தோன்ற அருளுஞ்
சடத்தை விடுத்த அருளுஞ் சகலத்
தடைத்த அனுதியை ஐந்தென லாமே. 2418

ஆருறு குண்டலி தன்னின் அகத்திட்டு
வேருகு மாயையின் முப்பான் மிகுத்திட்டங்
கீருங் கருவி யிவற்றுல் வகுத்திட்டு
வேறும் பதிபசு பாசம்வீ டாகுமே. 2419

வீட்கும் பதிபசு பாசமும் மீதுற
வாட்கு மிருவினை யாங்கவற் ருலுணர்ந்
தாட்கு நரக சுவர்க்கத்திற் ருனிட்டு
நாட்குற நான்தங்கு நற்பாச நண்ணுமே. 2420

நண்ணிய பாசத்தில் நானெல் ஆணவம்
பண்ணிய மாயையில் ஊட்டற் பரிந்தனன்
கண்ணிய சேதனன் கண்வந்த பேரருள்
அண்ணல் அடிசேர் உபாயம தாகுமே. 2421

ஆகும் உபாயமே யன்றி யழுக்கற்று
மோக மறச்சுத்த ஞதற்கு மூலமே.
ஆகு மறுவை யழுக்கேற்றி யேற்றல்போல்
ஆகுவ தெல்லாம் அருட்பாச மாகுமே. 2422

பாசம் பயிலுயிர் தானே பரமுதல்
பாசம் பயிலுயிர் தானே பசுவென்ப
பாசம் பயிலப் பதிபர மாதலாற்
பாசம் பயிலப் பதிபதி யாகுமே. 2423

அத்தத்தில் உத்தரங் கேட்ட அருந்தவர்
அத்தத்தில் உத்தர மாகும் அருள்மேனி
அத்தத்தி ஞலே யணையப் பிடித்தலும்
அத்தத்தில் தம்மை யடைந்துநின் ருரே. 2424

அடிதலை அறியும் திறங்கூறல்

காலுந் தலையும் அறியார் கலதிகள்
காலந்தச் சத்தி யருளென்பர் காரணம்
பாலொன்று ஞானமே பண்பார் தலையுயிர்
காலந்த ஞானத்தைக் காட்டவீ டாகுமே. 2425

தலையடி யாவ தறியார் காயத்தில்
தலையடி யுச்சியில் உள்ளது மூலந்
தலையடி யான அறிவை யறிந்ததோர்
தலையடி யாகவே தானிருந் தாரே 2426

நின்ருன் நிலமுழு தண்டமும் மேலுற
வன்ருள் அசுரர் அமரரும் உய்ந்திடப்
பின்ருன் உலகம் படைத்தவன் பேர்நந்தி
தன்ரு ளிணையென் தலைமிசை யானதே. 2427

சிந்தையி னுள்ளே எந்தை திருவடி
சிந்தையும் எந்தை திருவடிக் கீழது
எந்தையும் என்னை யறிய கிலாஞகில்
எந்தையை யானும் அறியகி லேனே. 2428

பன்ஞத பாரொளிக் கப்புறத் தப்பால்
என்ஞ யகஞர் இசைந்தங் கிருந்திட
முன்ஞ ஒளியு முரைசெய்யா மந்திரஞ்
சொன்ஞன் கழலிணை சூடிநின் றேனே. 2429

பதியது தோற்றும் பதமது வைமின்
மதியது செய்து மலர்ப்பத மோதும்
நதிபொதி யுஞ்சடை நாரியோர் பாகன்
கதிசெயுங் காலங்கள் கண்டுகொ ளீரே. 2430

தரித்துநின் ருனடி தன்னிட நெஞ்சில்
தரித்துநின் ருனம ராபதி நாதன்
கரித்துநின் ருன்கரு தாதவர் சிந்தை
பரித்துநின் ருனப் பரிபாகத் தானே. 2431

ஒன்றுண்டு தாமரை யொண்மலர் மூன்றுள
தன்ருதை தாளும் இரண்டுள காயத்துள்
நன்ருகக் காய்ச்சிப் பதஞ்செய வல்லார்கட்
கின்றேசென் றீசனை யெய்தலு மாமே 2432

கால்கொண்டென் சென்னியிற் கட்டறக் கட்டற
மால்கொண்ட நெஞ்சின் மயக்கிற் றுயக்கறப்
பால்கொண்ட வென்னைப் பரன்கொள்ள நாடிஞன்
மேல்கொண்டென் செம்மை விளம்பவொண் ணுதே.

பெற்ற புதல்வர்போற் பேணிய நாற்றமுங்
குற்றமுங் கண்டு குணங்குறை செய்யவோர்
பற்றைய வீச னுயிரது பான்மைக்குச்
செற்றமி லாச்செய்கைக் கெய்தின செய்யுமே. 2443

முக்குற்றம்

மூன்றுள குற்ற முழுது நலிவன
மான்றிருள் தூங்கி மயங்கிக் கிடந்தன
மூன்றினை நீங்கினர் நீக்கினர் நீங்காதார்
மூன்றினுட் பட்டு முடிகின்ற வாறே. 2435

காமம் வெகுளி மயக்க மிவைகடிந்
தேமம் பிடித்திருந் தேனுக் கெறிமணி
ஓமெனும் ஓசையி னுள்ளே யுறைவதோர்
தாம மதனைத் தலைப்பட்ட வாறே. 2436

முப்பதம்

தோன்றிய தொம்பதந் தற்பதஞ் சூழ்தர
ஏன்ற அசிபதம் இம்மூன்றே டெய்தினேன்
ஆன்ற பராபர மாகும் பிறப்பற
வேன்றனன் மாளச் சிவமா யிருக்குமே. 2437

போதந் தனையுன்னிப் பூதாதி பேதமும்
ஓதுங் கருவிதொண் ணூறுடன் ஓராறு
பேதமும் நாதாந்தப் பெற்றியிற் கைவிட்டு
வேதஞ்சொல் தொம்பத மாகுதன் மெய்ம்மையே. 2438

தற்பதம் என்றுந் துவம்பதந் தானென்றும்
நிற்ப தசியத்துள் நேரிழை யாள்பதஞ்
சொற்பதத் தாலுந் தொடரவொண ணுச்சிவன்
கற்பனை யின்றிக் கலந்துநின் றானே. 2439

அணுவும் பரமும் அசிபதத் தேய்ந்து
கணுவொன் றிலாத சிவமுங் கலந்தால்
இணையறு பால்தேன் அமுதென இன்பத்
துணையது வாயுரை யற்றிடத் தோன்றுமே. 2440

தொம்பதந் தற்பதந் தோன்றும் அசிபதம்
நம்பிய சீவன் பரஞ்சிவ னுய்நிற்கும்
அம்பத மேலைச் சொரூபமா வாக்கியஞ்
செம்பொருள் ஆண்டருள் சீர்நந்தி தானே. 2441

ஐம்ப தறியா தவரு மவர்சிலர்
உம்பனை நாடி யுரைமுப்ப தத்திடைச்
செம்பர மாகிய வாசி செலுத்திடத்
தம்பர யோகமாய்த் தானவ னுகுமே. 2442

நந்தி யறிவும் நழுவில் அதீதமாம்
இந்தியஞ் சத்தாதி விடவிய னுகும்
நந்திய மூன்றிரண் டொன்று நலமைந்து
நந்தி னனவாதி மூட்டும் அனுதியே. 2443

பரதுரி யத்து நனவு படியுண்ட
விரிவிற் கனவும் இதனுப சாந்தத்
துரிய சுழுனையு மோவுஞ் சிவன்பால்
அரிய துரியம் அசிபத மாமே, 2444

மும்பரம்

தோன்றியென் னுள்ளே சுழன்றெழு கின்றதோர்
மூன்று படிமண் டலத்து முதல்வனை
ஏன்றெய்தி யின்புற் றிருந்தே யிளங்கொடி
நான்று நலஞ்செய் நலந்தரு மாறே. 2445

மன்று நிறைந்தது மாபர மாயது
நின்று நிறைந்தது நேர்தரு நந்தியுங்
கன்று நினைந்தெழு தாயென வந்தபின்
குன்று நிறைந்த குணவிளக் காமே. 2446

ஆருறு தத்துவத் தப்புறத் தப்பரங்
கூரு வுபதேசங் கூறிற் சிவபரம்
வேருய் வெளிப்பட்ட வேதப் பகவனுர்
பேருக ஆனந்தம் பேணும் பெருகவே. 2447

பற்றறப் பற்றிற் பரம்பதி யாவது
பற்றறப் பற்றிற் பரனறி வேபரம்
பற்றறப் பற்றினிற் பற்றவல் லோர்கட்கே
பற்றறப் பற்றிற் பரம்பர மாமே. 2448

பரம்பர மான பதிபாசம் பற்ருப்
பரம்பர மாகும் பரஞ்சிவ மேவப்
பரம்பர மான பரசிவா னந்தம்
பரம்பர மாகப் படைப்ப தறிவே. 2449

நனவிற் கலாதியா நாலொன் றகன்று
தனியுற்ற கேவலந் தன்னில் தாஞகி
நினைவுற் றகன்ற அதீதத்துள் நேயந்
தனையுற் றிடத்தானே தற்பர மாமே. 2450

தற்கண்ட தூயமுந் தன்னில் விலாசமும்
பிற்காணுந் தூடணந் தானும் பிறழ்வுற்றுத்
தற்பரன் கால பரமுங் கலந்தற்ற
நற்பரா தீதமு நாடக ராதியே. 2451

பரலட்சணம்

அதீதத்து ளாகி யகன்றவன் நந்தி
அதீதத்து ளாகி யறிவிலோன் ஆன்மா
மதிபெற் றிருள்விட்ட மன்னுயிர் ஒன்ரும்
பதியிற் பதியும் பரவுயிர் தானே. 2452

ஆதியும் அந்தமும் இல்லா வரும்பதி
சோதிப் பரஞ்சுடர் தோன்றத்தோன் ருமையின்
நீதிய தாய்நிற்கும் நீடிய வப்பர
போதம் உணர்ந்தவர் புண்ணியத் தோரே. 2453

துரியங் கடந்து துரியா தீதத்தே
அரிய வியோகங்கொண் டம்பலத் தாடும்
பெரிய பிரானைப் பிரணவக் கூபத்தே
துரியவல் லார்க்கு துரிசில்லை தானே. 2454

செம்மைமுன் னிற்பச் சுவேதந் திரிவபோல்
அம்மெய்ப் பரத்தோ டணுவனுள் ளாயிடப்
பொய்ம்மைச் சகமுண்ட போத வெறும்பாழிற்
செம்மைச் சிவமேரு சேர்குடி யாகுமே. 2455

வைச்ச கலாதி வருதத்து வங்கெட
வெச்ச இருமாயை வேருக வேரறுத்
துச்ச பரசிவ மாமுண்மை யொன்றவே
அச்சம் அறுத்தென்னை யாண்டனன் நந்தியே. 2456

என்னை யறிய இசைவித்த என்னந்தி
என்னை யறிந்தறி யாத விடத்துய்த்துப்
பின்னை யொளியிற் சொரூபம் புறப்பட்டுத்
தன்னை யளித்தனன் தற்பர மாகவே. 2457

பரந்துஞ் சுருங்கியும் பார்புனல் வாயு
நிரந்த வளியொடு ஞாயிறு திங்கள்
அரந்த அரனெறி யாயது வாகித்
தரந்த விசும்பொன்று தாங்கிநின் றனே. 2458

சத்தின் நிலையினில் தானான சத்தியுந்
தற்பரை யாய்நிற்குந் தானும் பரற்குடல்
உய்த்தகு மிச்சையில் ஞானாதி பேதமாய்
நித்த நடத்து நடிக்குமா நேயத்தே. 2459

மேலொடு கீழ்பக்க மெய்வாய்கண் ணுசிகள்
பாலிய விந்து பரையுட் பரையாகக்
கோலிய நான்கவை ஞானங் கொணர்விந்து
சீலமி லாவணுச் செய்திய தாமே. 2460

வேரு மதன் தன்மை போலுமிக் காயத்தில்
ஆரும் உபாதி யனைத்தாகுந் தத்துவம்
பேரும் பரவொளி தூண்டும் பிரகாசமாய்
ஊரு யுயிர்த்துண் டுறங்கிடு மாயையே. 2461

தற்பர மன்னுந் தனிமுதற் பேரொளி
சிற்பரந் தானே செகமுண்ணும் போதமுந்
தொற்பதந் தீர்பாழிற் சுந்தரச் சோதிபுக்
கப்புற மற்றதிங் கொப்பில்லை தானே. 2462

பண்டை மறைகள் பரவான் உடலென்னுந்
துண்ட மதியோன் துரியாதீ தந்தன்னைக்
கண்டு பரனுமக் காரணோ பாதிக்கே
மிண்டி னவன்சுத்த னுகான் வினவிலே. 2463

வெளிகால் கனலப்பு மேவுமண் ணின்ற
தளியா கியதற் பரங்கா ணவன்றான்
வெளிகால் கனலப்பு மேவுமண் ணின்ற
வெளியாய சத்தி யவன்வடி வாமே. 2464

மேருவி னோடே விரிகதிர் மண்டலம்
ஆர நினையும் அருந்தவ யோகிக்குச்
சீரார் தவஞ்செய்யிற் சிவனருள் தானாகும்
பேரவும் வேண்டாம் பிறிதில்லை தானே. 2465

முத்துரியம்

நனவாதி மூன்றினிற் சீவ துரியந்
தனதாதி மூன்றினிற் பரதுரி யந்தான்
நனவாதி மூன்றி னிற்சிவ துரியமா
மினதாகுந் தொந்தத் தசிபதத் தீடே. 2466

தாஞ நனவில் துரியந்தன் தொம்பதந்
தாஞந் துரிய நனவாதி தான்மூன்றில்
ஆஞப் பரபத மற்ற தருநஞ
வாஞன மேன்மூன்றும் துரியம் அணுகுமே. 2467

அணுவின் துரியத்து நான்கும தாகிப்
பணியும் பரதுரி யம்பயி ஞன்குந்
தணிவிற் பரமாகிச் சார்முத் துரியக்
கணுவிலிந் நான்குங் கலந்தவீ ரைந்தே. 2468

ஈரைந் தவத்தை யிசைமுத் துரியத்துள்
நேரந்த மாக நெறிவழி யேசென்று
பாரந்த மான பராபரத் தயிக்கியத்
தோரந்த மாமிரு பாதியைச் சேர்த்திடே. 2469

தொட்டே யிருமின் துரிய நிலத்தினை
எட்டா தெனினின் றெட்டும் இறைவனைப்
பட்டாங் கறிந்திடிற் பன்ஞ வுதடுகள்
தட்டா தொழிவதோர் தத்துவந் தானே. 2470

அறிவா யசத்தென்னு மாரு றகன்று
செறிவாய மாயை சிதைத்தரு ளாலே
பிறியாத பேரரு ளாயிடும் பெற்றி
நெறியான அன்பர் நிலையறிந் தாரே. 2471

நனவின் நனவாதி நாலாந் துரியந்
தனதுயிர் தொம்பத மாமாறு போல
வினையறு சீவன் நனவாதி யாகத்
தனைய பரதுரி யந்தற் பதமே. 2472

தொம்பதந் தற்பதஞ் சொன்முத் துரியம்போல்
நம்பிய மூன்றுந் துரியத்து நற்றும
அம்புவி யுன்னு அதிசூக்க மப்பாலைச்
செம்பொருள் ஆண்டருள் சீர்நந்தி தானே. 2473

மும்முத்தி

சீவன்றன் முத்தி யதீதம் பரமுத்தி
ஓயுப சாந்தஞ் சிவமுத்தி யானந்த
மூவயின் முச்சொரூப முத்திமுப் பாலதாய்
ஓவுறு தாரத்தில் உள்ளுநா தாந்தமே. 2474

ஆவ தறியார் உயிர்பிறப் பாலுறும்
ஆவ தறியும் உயிரருட் பாலுறும்
ஆவதொன் றில்லை யகம்புறத் தென்றகன்
றேவு சிவனுடன் ஒன்றுதன் முத்தியே. 2475

சிவமாகி மும்மல முக்குணஞ் செற்றுத்
தவமான மும்முத்தி தத்துவத் தயிக்கியத்
துவமா கியநெறி சோகமென் போர்க்குச்
சிவமாம் அமலன் சிறந்தனன் தானே. 2476

சித்தியும் முத்தியுந் திண்சிவ மாகிய
சுத்தியும் முத்தீ தொலைக்குஞ் சுகானந்த
சத்தியும் மேலைச் சமாதியு மாயிடும்
பெத்தம் அறுத்த பெரும்பெரு மானே. 2477

முச்சொரூபம்

ஏறிய வாறே மலம்ஐந் திடைஅடைத்
தாறிய ஞானச் சிவோக மடைந்திட்டு
வேறு மெனமுச் சொரூபத்து வீடுற்றங்
கீறதிற் பண்டைப் பரனுண்மை செய்யுமே. 2478

மூன்றுள மாளிகை மூவர் இருப்பிடம்
மூன்றினின் முப்பத் தாறு முதிப்புள
மூன்றினி னுள்ளே முளைத்தெழுஞ் சோதியைக்
காண்டலுங் காயக் கணக்கற்ற வாறே. 2479

உலகம் புடைபெயர்ந் தூழியும் போன
நிலவு சுடரொளி மூன்றுமொன் றாய
பலவும் பரிசொடு பான்மையுள் ஈசன்
அளவும் பெருமையு மாரறி வாரே. 2480

பெருவாய் முதலெண்ணும் பேதமே பேதித்
தருவா யுருவாய் அருவுரு வாகிக்
குருவாய் வருஞ்சத்தி கோனுயிர்ப் பன்மை
உருவா யுடனிருந் தொன்றாயன் றாமே. 5481

மணியொளி சோபை யிலக்கணம் வாய்த்து
மணியென லாய்நின்ற வாறது போலத்
தணிமுச் சொரூபாதி சத்தியாதி சாரப்
பணிவித்த பேர்நந்தி பாதம்பற் றாயே. 2482

கல்லொளி மாநிறஞ் சோபைக் கதிர்தட்ட
நல்ல மணியொன்றி னாடியொண் முப்பதஞ்
சொல்லறு முப்பாழிற் சொல்லறு பேருரைத்
தல்லறு முத்திராந் தத்தனு பூதியே. 2483

உடந்தசெந் தாமரை யுள்ளுறு சோதி
நடந்தசெந் தாமரை நாதந் தகைந்தால்
அடைந்த பயோதரி யட்டி யடைத்தல்
விடந்தரு வாசலே மேல்திற வீரே. 2484

முக்கரணம்

இடனொரு மூன்றி லியைந்த வொருவன்
கடனுறு மவ்வுரு வேறெனக் காணுந்
திடமது போலச் சிவபர சீவர்
உடனுறை பேதமும் ஒன்றென லாமே. 2485

ஒளியை யொளிசெய்து வோமென் றெழுப்பி
வளியை வளிசெய்து வாய்த்திட வாங்கி
வெளியை வெளிசெய்து மேலெழ வைத்துத்
தெளியத் தெளியுஞ் சிவபதந் தானே. 2486

முக்கர ணங்களின் மூர்ச்சைதீர்த் தாவதக்
கைக்கா ரணமென்னத் தந்தனன் காணந்தி
மிக்க மனோன்மணி வேறே தனித்தேக
ஒக்கும துன்மனி யோதுட் சமாதியே. 2487

முச்சூனிய தொந்தத்தசி

தற்பதந் தொம்பதந் தானும் அசிபதந்
தொற்பத மூன்றுந் துரியத்துத் தோற்றவே
நிற்ப துயிர்பர னிகழ்சிவ மும்மூன்றின்
சொற்பத மாகுந் தொந்தத் தசியே. 2488

தொந்தத் தசிமூன்றில் தொல்கா மியமாதி
தொந்தத் தசிமூன்றில் தொல்தா மதமாதி
வந்த மலங்குண மாளச் சிவந்தோன்றின்
இந்துவின் முன்னிருள் ஏகுதல் ஒக்குமே. 2489

தொந்தத் தசியையவ் வாசியில் தோற்றியே
அந்த முறையீ ரைந்தாக மதித்திட்டு
அந்த மில்லாத அவத்தையவ் வாக்கியத்
துந்து முறையிற் சிவன்முன்வைத் தோதிடே. 2490

வைத்துச் சிவத்தை மதிசொரு பானந்தத்
துய்த்துப் பிரணவ மாம்உப தேசத்தை
மெய்த்த இதயத்து விட்டிடு மெய்யுணர்ந்
தத்தற் கடிமை யடைந்துநின் ருனே. 2491

தொம்பத மாயையுள் தோன்றிடுந் தற்பதம்
அம்பரை தன்னில் உதிக்கும் அசிபதம்
நம்புறு சாந்தியில் நண்ணுமவ் வாக்கியம்
உம்பர் உரைத்தொந்தத் தசிவாசி யாமே. 2492

ஆகிய வச்சோயந் தேவதத் தன்னிடத்
தாகிய வைவிட்டாற் காயம் உபாதானம்
ஏகிய தொந்தத் தசியென்ப மெய்யறி
வாகிய சீவன் பரசிவ ஞமே. 2493

தாமத காமிய மாகித் தகுகுண
மாமல மூன்றும் அகார வுகாரத்தோ(டு)
ஆமறும் அவ்வுமவ் வாயுடன் மூன்றில்
தாமாந் துரியமுந் தொந்தத் தசியதே. 2494

முப்பாழ்

காரிய மேழ்கண் டறுமாயப் பாழ்விடக்
காரண மேழ்கண் டறும் போதப் பாழ்விடக்
காரிய காரண வாதனை கண்டறுஞ்
சீருப சாந்தமுப் பாழ்விடத் தீருமே. 2495

மாயப்பாழ் சீவன் வியோமப்பாழ் மன்பரன்
சேயமுப் பாழெனச் சிவசத்தி யிற்சீவன்
ஆய வியாப்த மெனுமுப்பா ழாம்அந்தத்
தூய சொரூபத்திற் சொல்முடி வாகுமே. 2496

எதிரற நாளும் எருதுவந் தேறும்
பதியெனும் நந்தி பதமது கூடக்
கதியெனப் பாழைக் கடந்தந்தக் கற்பனை
உதறிய பாழில் ஒடுங்குகின் றேனே. 2497

துரியம் அடங்கிய சொல்லறும் பாழை
அரிய பரம்பரம் என்பர்கள் ஆதர்
அரிய பரம்பரம் என்றே துதிக்கும்
அருநிலம் என்பதை யாரறி வாரே. 2498

ஆருறு நீங்க நமவாதி யகன்றிட்டு
வேரு கியபரை யாவென்று மெய்ப்பரன்
ஈருன வாசியிற் கூட்டு மதுவன்றே
தேருச் சிவாய நமவெனத் தேறிலே. 2499

உள்ளம் உருவென்றும் உருவம் உளமென்றும்
உள்ள பரிசறிந் தோரு மவர்கட்குப்
பள்ளமும் இல்லைத் திடரில்லைப் பாழில்லை
உள்ளமும் இல்லை யுருவில்லை தானே. 2500

காரிய காரணவுபாதி

செற்றிடுஞ் சீவ வுபாதித் திறனேழும்
பற்றும் பரோபாதி ஏழும் பகருரை
உற்றிடுங் காரிய கர்ரணத் தோடற
அற்றிட வச்சிவ மாகும் அணுவனே. 2501

ஆருறு காரியோ பாதி யகன்றிட்டு
வேருய் நனவு மிகுத்த கனுநனு
ஆரு றகன்ற சுழுத்தி யதில்எய்தாப்
பேரு நிலத்துயிர் தொம்பதம் பேசிலே. 2502

அகாரம் உயிரே யுகாரம் பரமே
மகாரம் சிவமாய் வருமுப் பதத்துச்
சிகாரம் சிவமே வகாரம் பரமே
யகாரம் உயிரென் றறையலு மாமே. 2503

உயிர்க்குயி ராகி யொழிவற் றழிவற்
றயிர்ப்பது காரணோ பாதி விதிரேகத்
துயிர்ப்புறும் ஈசன் உபமிதத் தாலன்றி
வியர்ப்புறும் ஆணவம் வீடல்செய் யாவே. 2504

காரியம் ஏழிற் கலக்கும் கடும்பசு
காரணம் ஏழிற் கலக்கும் பரசிவன்
காரிய காரணங் கற்பனை சொற்பதப்
பாரறும் பாழில் பராபரத் தானே. 2505

உபசாந்தம்

முத்திக்கு வித்து முதல்வன்தன் ஞானமே
பத்திக்கு வித்துப் பணிந்துற்றுப் பற்றலே
சித்திக்கு வித்துச் சிவபரந் தானுதல்
சத்திக்கு வித்துத் தனதுப சாந்தமே. 2506

காரியம் ஏழுங் கரந்திடு மாயையுள்
காரணம் ஏழுங் கரக்கும் கடுவெளி
காரிய காரண வாதனைப் பற்றறப்
பாரண வும்முப சாந்தப் பரிசிதே. 2507

அன்ன துரியமே யாத்தும சுத்தியும்
முன்னிய சாக்கிரா தீதத் துறுபுரி
மன்னு பரங்காட்சி யாவ துடனுற்றுத்
தன்னின் வியாத்தி தனின்உப சாந்தமே. 2508

ஆரு றமைந்தாண வத்தையுள் நீக்குதற்
பேருன தன்னை யறிதற்பின் றீர்சுத்தி
கூருத சாக்கிரா தீதங் குருபரன்
பேரும் வியாத்தம் பிறமுப சாந்தமே. 2509

வாய்ந்த வுபசாந்த வாதனை யுள்ளப்போய்
ஏய்ந்த சிவமாத லின்சிவா னந்தத்துத்
தோய்ந்தறல் மோனச் சுகானுபவத் தோடே
ஆய்ந்ததில் தீர்க்கை யானதீ ரைந்துமே 2510

பரையின் பரவப ரத்துடன் ஏகமாய்த்
திரையினின் ருகிய தெண்புனல் போலவுற்
றுரையுணர்ந் தாரமு தொக்க வுணர்ந்துளோன்
கரைகண்ட டானுரை யற்ற கணக்கிலே. 2511

புறங்கூருமை

பிறையுட் கிடந்த முயலை எறிவான்
அறைமணி வாட்கொண் டவர்தமைப் போலக்
கறைமணி கண்டனைக் காண்குற மாட்டார்
நிறையறி வோமென்பர் நெஞ்சிலர் தாமே. 2512

கருந்தாட் கருடன் விசும்பூ டிறப்பக்
கருந்தாட் கயத்திற் கரும்பாம்பு நீங்கப்
பெருந்தன்மை பேசுதி நீயொழி நெஞ்சே
அருந்தா அலைகட லாறுசென் ருலே. 2513

கருதலர் மாளக் கருவாயில் நின்ற
பொருதலைச் செய்வது புல்லறி வாண்மை
மருவலர் செய்கின்ற மாதவம் ஒத்தால்
தருவலர் கேட்ட தருவும்ப ராமே. 2514

பிணங்கவும் வேண்டாம் பெருநில முற்றும்
இணங்கியெம் மீசனே யீசனென் றுன்னிற்
கணம்பதி னெட்டுங் கழலடி காண
வணங்கெழு நாடியங் கன்புற லாமே. 2515

என்னிலும் என்னுயி ராய இறைவனைப்
பொன்னிலு மாமணி யாய புனிதனை
மின்னிய வெவ்வுயி ராய விகிர்தனை
உன்னிலும் உன்னும் உறும்வகை யாலே. 2516

நின்றும் இருந்தும் கிடந்தும் நிமலனை
ஒன்றும் பொருள்கள் உரைப்பவ ராகிலும்
வென்றைம் புலனும் விரைந்து பிணக்கறுத்
தொன்று யுணரும் ஒருவனு மாமே. 2517

நுண்ணறி வாயுல காயுல கேழுக்கும்
எண்ணறி வாய்நின்ற எந்தை பிரான்தன்னைப்
பண்ணறி வாளனைப் பாவித்த மாந்தரை
விண்ணறி வாளர் விரும்புகின் றாரே. 2518

விண்ணவ ராலும் அறிவறி யான்றன்னைக்
கண்ணற வுள்ளே கருதிடிற் காலையில்
எண்ணுற வாகமுப் போது மியற்றிநீ
பண்ணிடில் தன்மை பராபர னாமே. 2519

ஒன்று யுலகுடன் ஏழும் பரந்தவன்
பின்று னருள்செய்த பேரரு ளாளவன்
கன்று மனத்தார்தங் கல்வியுள் நல்லவன்
பொன்றுத போது புனைபுக ழானே. 2520

போற்றியென் றேன்எந்தை பொன்னுன சேவடி
ஏற்றியே சென்றும் எறிமணி தானகக்
காற்றின் விளக்கது காய மயக்குறும்
ஆற்றலுங் கேட்டது மன்றுகண் டேனே. 2521

நேடிக்கொண் டென்னுள்ளே நேர்தரு நந்தியை
ஊடுபுக் காரும் உணர்ந்தறி வாரில்லை
கூடுபுக் கேறலுற் றேனவன் கோலங்கண்
மூடிக்கண் டேனுல கேழுங்கண் டேனே 2522

ஆன புகழும் அமைந்ததோர் ஞானமும்
தேனு மிருக்குஞ் சிறுவரை யொன்றுகண்(டு)
ஊனமொன் றின்றி யுணர்வுசெய் வார்கட்கு
வானகஞ் செய்யு மறவனு மாமே, 2523

மாமதி யாமதி யாய்நின்ற மாதவர்
தூய்மதி யாகுஞ் சுடர்பர மானந்தந்
தாமதி யாகச் சகமுணச் சாந்திபுக்
காமல மற்றூர் அமைவுபெற் றூரே. 2524

பதமுத்தி மூன்றும் பழுதென்று கைவிட்(டு)
இதமுற்ற பாச இருளைத் துரந்து
மதமற் றெனதியான் மாற்றிவிட் டாங்கே
திதமுற் றவர்கள் சிவசித்தர் தாமே. 2525

சித்தர் சிவத்தைக் கண்டவர் சீருடன்
சுத்தாசுத் தத்துடன் தோய்ந்துந்தோ யாதவர்
முத்தரம் முத்திக்கு மூலத்தர் மூலத்து
சத்தர் சதாசிவத் தன்மையர் தாமே. 2526

அஷ்டதள கமல முக்குண அவத்தை

உதிக்கின்ற இந்திரன் அங்கி யமனுந்
துதிக்கும் நிருதி வருணன் நல் வாயு
மதிக்குங் குபேரன் வடதிசை யீசன்
நிதித்தெண் டிசையு நிறைந்துநின் றரே. 2527

ஒருங்கிய பூவுமோ ரெட்டித ழாகும்
மருங்கிய மாயா புரியத னுள்ளே
சுருங்கிய தண்டின் சுழுனேயி னூடே
ஒருங்கிய சோதியை யோர்ந்தெழும் உய்ந்தே. 2528

மொட்டலர் தாமரை மூன்றுள மூன்றினும்
விட்டலர் கின்றனன் சோதி விரிசுடர்
எட்டல ருள்ளே இரண்டலர் உள்ளுறிற்
பட்டலர் கின்றதோர் பண்டங் கனுவே. 2529

ஆறே யருவி யகங்குளம் ஒன்றுண்டு
நூறே சிவகதி நுண்ணிது வண்ணமுங்
கூறே குவிமுலைக் கொம்பனே யாளொடும்
வேறே யிருக்கும் விழுப்பொருள் தானே. 2530

திகையெட்டுந் தேரெட்டுந் தேவதை யெட்டும்
வகையெட்டு மாய்நின்ற ஆதிப் பிரானே
வகையெட்டு நான்குமற் றுங்கே நிறைந்து
முகையெட்டும் உள்நின் றுதிக்கின்ற வாறே. 2531

ஏழுஞ் சகள மியல்புங் கடந்தெட்டில்
வாழும் பரமென் றதுகடந் தொன்பதில்
ஊழி பராபரம் ஓங்கிய பத்தினில்
தாழ்வது வான தனித்தன்மை தானே. 2532

பல்லூழி பண்பன் பகலோன் இறையவன்
நல்லூழி ஐந்தினுள் ளேநின்ற வூழிகள்
செல்லூழி யண்டத்துச் சென்றவவ் வூழியுள்
அவ்வூழி யுச்சியு ளொன்றிற் பகவனே. 2533

புரியும் உலகினிற் பூண்ட வெட்டானை
திரியுங் களிற்றொடு தேவர் குழாமும்
எரியும் மழையும் இயங்கும் வெளியும்
பரியுமா காசத்திற் பற்றது தானே 2534

ஊறு மருவி யுயர்வரை யுச்சிமேல்
ஆறின்றிப் பாயும் அருங்குளம் ஒன்றுண்டு
சேறின்றிப் பூத்த செழுங்கொடித் தாமரைப்
பூவின்றிச் சூடான் புரிசடை யோனே. 2535

ஒன்றும் இரண்டும் ஒருங்கிய காலத்து
நின்றும் இருந்தும் நிலம்பல பேசினும்
வென்று மிருந்து விகிர்தனை நாடுவர்
சென்றும் இருந்துந் திருவுடை யோரே. 2536

நவாவத்தை - நவாபிமானி

தொற்பத விசுவன் றைசதன் பிராஞ்ஞன்
நற்பத விராட்டன்பொன் கெர்ப்பனவ் யாகிர்தன்
பிற்பதஞ் சொல்இதையன் பிரசா பத்தியன்
பொற்புவி சாந்தன் பொருதபி மானியே. 2537

நவமா மவத்தை நனவாதி பற்றிற்
பவமா மலங்குணம் பற்றற்றுப் பற்றுத்
தவமான சத்திய ஞானப் பொதுவில்
துவமார் துரியஞ் சொரூபம தாமே. 2538

சிவமான சிந்தையிற் சீவன் சிதைய
பவமான மும்மலம் பாறிப் பறிய
நவமான அந்தத்தின் நற்சிவ போதந்
தவமா மவையாகித் தானல்ல வாமே. 2539

முன்சொன்ன வொன்பானின் முன்னூறு தத்துவம்
தன்சொல்லில் எண்ணத் தகாவொன்பான் வேறுள
பின்சொல்ல லாகுமிவ் வீரொன்பான் பேர்த்திட்டுத்
தன்செய்த வாண்டவன் ருன்சிறந் தானே. 2540

உகந்தன ஒன்பதும் ஐந்தும் உலகம்
பகர்ந்த பிரானென்னும் பண்பினை நாடி
அகந்தெம்பி ரானென்ப னல்லும் பகலும்
இகந்தன வல்வினை யோடறுத் தானே. 2541

நலம்பல காலந் தொகுத்தன நீளங்
குலம்பல வண்ணங் குறிப்பொடுங் கூடும்
பலம்பல பன்னிரு கால் நினையும்
நிலம்பல வாறின னீர்மையன் ருனே. 2542

ஆதி பராபர மாகும் பராபரை
சோதி பரமுயிர் சொல்லுநற் றத்துவம்
ஓதுங் கலைமாயை யோரிரண் டோர்முத்தி
நீதியாம் பேதமொன் பானுடன் ஆதியே. 2543

தேருத சிந்தை தெளியத் தெளிவித்து
வேரு நரக சுவர்க்கமும் மேதினி
ஆருப் பிறப்பும் உயிர்க்கரு ளால்வைத்தான்
வேருத் தெளியார் வினையுயிர் பெற்றதே 2544

ஒன்பான் அவத்தையுள் ஒன்பான் அபிமானி
நன்பாற் பயிலு நவதத் துவமாதி
ஒன்பானில் நிற்பதோர் முத்துரி யத்துறச்
செம்பாற் சிவமாதல் சித்தாந்த சித்தியே. 2545

சூந்நியசூந்நியம்

நாசி நுனியினின் நான்மூ விரலிடை
ஈசன் இருப்பிடம் யாரும் அறிகிலர்
பேசி யிருக்கும் பெருமறை யம்மறை
கூசி யிருக்குங் குணமது வாமே. 2546

கருமங்கள் ஒன்று கருதுங் கருமத்
துரிமையுங் கன்மமும் முன்னும் பிறவிக்
கருவினை யாவது கண்டகன் றன்பிற்
புரிவன கன்மக் கயத்துட் புகுமே. 2547

மாயை மறைக்க மறைந்த மறைப்பொருள்
மாயை மறைய வெளிப்படும் அப்பொருள்
மாயை மறைய மறையவல் லார்கட்குக்
காயமும் இல்லைக் கருத்தில்லை தானே. 2548

மோழை யடைந்து முழைதிறந் துள்புக்குக்
கோழை யடைகின்ற தண்ணற் குறிப்பினில்
ஆழ அடைத்தங் கனலிற் புறஞ்செய்து
தாழ அடைப்பது தன்வலி யாமே. 2549

காயக் குழப்பனைக் காயநன் னாடனைக்
காயத்தி னுள்ளே கமழ்கின்ற நந்தியைத்
தேயத்து ளேயென்றுந் தேடித் திரிபவர்
காயத்துள் நின்ற கருத்தறி யாரே. 2550

ஆகுசம் ஆகுசம் என்பார் அறிவிலார்
ஆகுச மாமிடம் ஆரும் அறிகிலார்
அகுச மாமிடம் ஆரும் அறிந்தபின்
ஆகுச மானிடம் ஆகுச மாமே. 2551

ஆசூச மில்லை அருநிய மத்தருக்
காசூச மில்லை அரனைஅர்ச் சிப்பவர்க்
காசூச மில்லையாம் அங்கி வளர்ப்போருக்
காசூச மில்லை அருமறை ஞானிக்கே. 2552

வழிபட்டு நின்று வணங்கு மவர்க்குச்
சுழிபட்டு நின்றதோர் தூய்மை தொடங்குங்
குழிபட்டு நின்றவர் கூடார் குறிகள்
கழிபட் டவர்க்கன்றிக் காணவொண் ணாதே. 2553

தூய்மணி தூயனல் தூய ஒளிவிடுந்
தூய்மணி தூயனல் தூரறி வாரில்லை
தூய்மணி தூயனல் தூரறி வார்கட்குத்
தூய்மணி தூய்னல் தூயவு மாமே. 2554

தூயது வாளா வைத்தது தூநெறி
தூயது வாளா நாதன் திருநாமந்
தூயது வாளா அட்டமா சித்தியுந்
தூயது வாளாத் தூயடிச் சொல்லே. 2555

பொருளது வாய்நின்ற புண்ணியன் எந்தை
அருளது போற்றும் அடியவ ரன்றிச்
சுருளது வாய்நின்ற துன்பச் சுழியின்
மருளது வாச்சிந்தை மயங்குகின் றாரே. 2556

வினையா மசத்து விளைவ துணரார்
வினைஞானந் தன்னில் வீட்லுந் தேரார்
வினைவிட வீடென்னும் வேதமும் ஓதார்
வினையாளர் மிக்க வினைவறி யாரே. 2557

முத்திநிந்தை

பரகதி யுண்டென இல்லையென் போர்கள்
நரகதி செல்வது ஞாலம் அறியும்
இரகதி செய்திடு வார்கடை தோறுந்
துரகதி யுண்ணத் தொடங்குவர் தாமே. 2558

கூடகில் லார்குரு வைத்த குறிகண்டு
நாடகில் லார்நயம் பேசித் திரிவர்கள்
பாடகில் லாரவன் செய்த பரிசறிந்
தாடவல் லாரவர் பேறிது வாமே. 2559

புறப்பட்டுப் போகும் புகுதுமென் னெஞ்சில்
திறப்பட்ட சிந்தையைத் தெய்வமென் றெண்ணி
அறப்பட்ட மற்றப் பதியென் றழைக்கில்
இறப்பற்றி னேன்இங்கி தென்னென் கின்றனே. 2560

திடரிடை நில்லாத நீர்போல ஆங்கே
உடலிடை நில்லா உறுபொருள் காட்டிக்
கடலிடை நில்லாக் கலஞ்சேரு மாபோல்
அடலெரி வண்ணனும் அங்குநின் றனே. 2561

தாமரை நூல்போல் தடுப்பார் பரத்தொடும்
போம்வழி வேண்டிற் புறமே யுழிதர்வர்
காண்வழி காட்டக்கண் காணுக் கலதிகள்
தீநெறி செல்வான் திரிகின்ற வாறே. 2562

மூடுதல் இன்றி முடியும் மனிதர்கள்
கூடுவர் நந்தி யவனைக் குறித்துடன்
காடும் மலையுங் கழனி கடந்தோறும்
ஊடும் உருவினை யுன்னகி லீரே. 2563

ஆவது தெற்கும் வடக்கும் அமரர்கள்
போவர் குடக்குங் குணக்குங் குறிவழி
நாவினின் மந்திர மொன்று நடுவங்கி
வேவது செய்து விளங்கிடு நீரே. 2564

மயக்குற நோக்கினும் மாதவஞ் செய்வார்
தமக்குறப் பேசின தாரணை கொள்ளார்
சினக்குறப் பேசின தீவினை யாளர்
தமக்குற வல்வினை தாங்கிநின ருரே. 2565

இலக்கணாத்திரயம்

விட்ட விலக்கணை தான்போம் வியோமத்துத்
தொட்டு விடாத துபசாந்தத் தேதொகும்
விட்டு விடாதது மேவுஞ்சத் தாதியிற்
சுட்டு மிலக்கணா டதஞ் சொரூபமே. 2566

வில்லின் விசைநாணிற் கோத்திலக் கெய்தபின்
கொல்லுங் களிறைந்துங் கோலொடு சாய்ந்தன
வில்லு ளிருந்தெறி கூரும் ஒருவற்குக்
கல்கலன் என்னக் கதிரெதி ராமே. 2567

தத்துவமசி வாக்கியம்

சீவ துரியத்துத் தொம்பதஞ் சீவனார்
தாவு பரதுரி யத்தினில் தற்பதம்
மேவு சிவதுரி யத்தசி மெய்ப்பதம்
ஓவி விடுந்தத் துவமசி யுண்மையே. 2568

ஆரு றகன்ற அணுத்தொம் பதஞ்சுத்தம்
ஈருன தற்பரம் எய்துப சாந்தத்துப்
பேரு யியசீவன் நீங்கிப்பிர சாதத்து
வீருன தொந்தத் தசிதத்வ மசியே. 2569

ஆகிய வச்சோயந் தேவதத் தன்னிடத்
தாகிய விட்டு விடாத விலக்கணைத்
தாருப சாந்தமே தொந்தத் தசியென்பு
ஆகிய சீவன் பரன்சிவன் ஆமே. 2570

துவந்தத் தசியே தொந்தத் தசியும்
அவைமன்னு மந்நுவயத் தேக மான
தவமன்னு தத்துவ மசிவே தாந்த
சிவமாகுஞ் அதுஞ்சித் தாந்த வேதமே. 2571

துரியம் அடங்கிய சொல்லறும் பாழை
அரிய பரமென்ப ராகார் இதன்றென்னுர்
உரிய பரம்பரம் ஆமொன் றுதிக்கும்
அருநிலம் என்பதை யாரறி வாரே. 2572

தொம்பதம் தற்பதஞ் சொல்லும் அசிபதம்
நம்பிய முத்துரி யத்துமே ஞடவே
யும்பத முப்பத மாகும் உயிர்பரன்
செம்பொரு ளான சிவமென லாமே. 2573

வைத்த துரிய மதிற்சொரூ பானந்தத்
துய்த்த பிரணவ மாமுப தேசத்தை
மெய்த்த விதயத்து விட்டிடு மெய்யுணர்
வைத்த படியே யடைந்துநின் ருனே. 2574

நனவாதி ஐந்தையும் நாதாதி யில்வைத்துப்
பினமா மலத்தைப் பின்வைத்துப் பின்சுத்தத்
தனதாஞ் சிவக்தி சத்தாதி சாந்தி
மனவா சகங்கெட்ட மன்னனை நாடே. 2575

பூரணி யாதது புறம்பொன்றி லாமையின்
பேரணி யாதது பேச்சொன்றி லாமையின்
ஓரணை யாதது ஒன்றுமி லாமையிற்
காரணம் இன்றியே காட்டுந் தகைமைத்தே. 2576

நீயது வாஞு யெனநின்ற பேருணை
ஆயது நாஞனேன் என்னச் சமைந்தறச்
சேய சிவமாக்குஞ் சீர்நந்தி பேரருள்
ஆயது வாயனந் தானந்தி யாகுமே. 2577

உயிர்பர மாக உயர்பர சீவன்
அரிய சிவமாக அச்சிவம் வேதத்
திரியிலுஞ் சீராம் பராபரன் என்ன
உரிய உரையற்ற வோமய மாமே. 2578

வாய்நாசி யேபுரு மத்தகம் உச்சியில்
ஆய்நாசி யுச்சி முதலவை யாய்நிற்குந்
தாய்நாடி யாதிவாக் காதி கலாதி
சேய்நா டொளியாச் சிவகதி யைந்துமே. 2579

அறிவறி யாமை இரண்டு மகற்றிச்
செறிவறி வாய்எங்கு நின்ற சிவனைப்
பிறிவறி யாது பிரானென்று பேணுங்
குறியறி யாதவர் கொள்ளறி யாரே. 2580

அறிவார் அறிவன அப்பும் அனலும்
அறிவார் அறிவுன அப்புங் கலப்பும்
அறிவான் இருந்தங் கறிவிக்கி னல்லால்
அறிவான் அறிந்த அறிவறி யோமே 2581

அதீதத்துள் ளாகி அகன்றவன் நந்தி
அதீதத்துள் ளாகி அறிவிலோன ஆன்மா
மதிபெற் றிருள்விட்ட மன்னுயி ரொன்றும்
பதியிற் பதியும் பரவுயிர் தானே. 2582

அடிதொழ முன்னின் றமரர்க ளத்தன்
முடிதொழ ஈசனும் முன்னின் றருளிப்
படிதொழ நீபண்டு பாவித்த தெல்லாங்
கடிதொழக் காணென்னுங் கண்ணுத லானே. 2583

நின்மல மேனி நிமலன் பிறப்பிலி
என்னுளம் வந்திவன் என்னடி யானென்று
பொன்வளர் மேனி புகழ்கின்ற வானவன்
நின்மல மாகென்று நீக்கவல் லானே. 2584

துறந்துபுக் கொள்ளொளிச் சோதியைக் கண்டு
பறந்ததென் உள்ளம் பணிந்து கிடந்தே
மறந்தறி யாவென்னை வானவர் கோனும்
இறந்து பிறவாமல் ஈங்குவைத் தானே. 2585

மெய்வாய்கண் மூக்குச் செவியென்னும் மெய்த்தோற்றத்
தவ்வாய அந்தக் கரணம் அகிலமும்
எவ்வா யுயிரும் இறையாட்ட ஆடலாற்
கைவா யிலாநிறை எங்குமெய் கண்டதே, 2586

விசுவக்கிராசம்

அழிகின்ற சாயா புருடனைப் போலக்
கழிகின்ற நீரிற் குமிழியைக் காணில்
எழுகின்ற தீயிற்கர்ப் பூரத்தை யொக்கப்
பொழிகின்ற இவ்வுடற் போமப் பரத்தே. 2587

உடலும் உயிரும் ஒழிவற ஒன்றிற்
படருஞ் சிவசத்தி தாமே பரமாம்
உடலைவிட் டிந்த உயிரெங்கு மாகிக்
கடையுந் தலையுங் கரக்குஞ் சிவத்தே. 2588

செவிமெய்வாய் கண்மூக்குச் சேரிந் திரியம்
அவியின் றியமன மாதிகள் ஐந்தும்
குவிவொன் றிலாமல் விரிந்து குவிந்து
தவிர்வொன் றிலாத சராசரந் தானே. 2589

பரனெங்கு மாரப் பரந்துற்று நிற்நந்
திரனெங்கு மாகிச் செறிவெங்கும் எய்தும்
உரனெங்கு மாயுல குண்டுமிழ் செய்யும்
வரமிங்ஙன் கண்டியான வாழ்ந்துற்ற வாறே. 2590

அளந்து துரியத் தறிவினை வாங்கி
உளங்கொள் பரஞ்சகம் உண்ட தொழித்துக்
கிளர்ந்த பரஞ்சிவஞ் சேரக் கிடைத்தால்
விளங்கிய வெட்ட வெளியனும் ஆமே. 2591

இரும்பிடை நீரென என்னையுள் வாங்கிப்
பரம்பர மான பரமது விட்டே
உரம்பெற முப்பாழ் ஒளியை விழுங்கி
இருந்தனன் நந்தி இதயத்து ளானே. 2592

கரியுண் விளவின் கனிபோல் உயிரும்
உரிய பரமுமுன் னேதுஞ் சிவமும்
அரிய துரியமேல் அகிலமும் எல்லாந்
திரிய விழுங்குஞ் சிவபெரு மானே. 2593

அந்தமும் ஆதியும் ஆகும் பராபரன்
தந்தம் பரம்பரன் தன்னிற் பரமுடன்
நந்தமை யுண்டுமெய்ஞ் ஞானநே யாந்தத்தே
நந்தி யிருந்தனன் நாமறி யோமே. 2594

வாய்மை

அற்ற துரைக்கில் அருளுப தேசங்கள்
குற்ற மறுத்தபொன் போலுங் கனலிடை
அற்றற வைத்திறை மாற்றற ஆற்றிடில்
செற்றம் அறுத்த செழுஞ்சுட ராகுமே. 2595

எல்லாம் அறியும் அறிவு தனைவிட்டு
எல்லாம் அறிந்தும் இலாபமங் கில்லை
எல்லாம் அறிந்த அறிவினை நானென்னில்
எல்லாம் அறிந்த இறையென லாமே. 2596

தலைநின்ற தாழ்வரை மீது தவஞ்செய்து
முலைநின்ற மாதறி மூர்த்தியை யானும்
புலைநின்ற பொல்லாப் பிறவி கடந்து
கலைநின்ற கள்வனைக் கண்டுகொண் டேனே. 2597

தானே யுலகில் தலைவ னெனத்தகுந்
தானே யுலகுக்கோர் தத்துவ மாய்நிற்கும்
வானே மழைபொழி மாமறை கூர்ந்திடும்
ஊனே யுருகிய வுள்ளமொன் றுமே. 2598

அருள்பெற்ற காரணம் என்கொல் அமரில்
இருளற்ற சிந்தை இறைவனை நாடி
மருளுற்ற சிந்தையை மாற்றி அருமைப்
பொருளுற்ற சேவடி போற்றுவர் தாமே. 2599

மெய்கலந் தாரொடு மெய்கலந் தான்தன்னைப்
பொய்கலந் தார்முன் புகுதா ஒருவனை
உய்கலந் தூழித் தலைவனு மாய்நிற்கும்
மெய்கலந் தின்பம் விளைந்திடும் மெய்யர்க்கே. 2600

மெய்கலந் தாரொடு மெய்கலந் தான்மிகப்
பொய்கலந் தாருட் புகுதாப் புனிதனை
கைகலந் தாவி எழும்பொழு தண்ணலைக்
கைகலந் தார்க்கே கருத்துற லாமே. 2601

எய்திய காலத் திருபொழு துஞ்சிவன்
மெய்செயின் மேலைவிதியது வாய்நிற்கும்
பொய்யும் புலனும் புகலொன்று நீத்திடில்
ஐயனும் அவ்வழி யாகிநின் றானே. 2602

எய்துவ தெய்தா தொழிவ திதுஅருள்
உய்ய அருள்செய்தான் உத்தமன் சீர்நந்தி
பொய்செய் புலனெறி ஒன்பதும் தாட்கொளின்
மெய்யென் புரவியை மேற்கொள்ள லாமே. 2603

கைகலந் தானைக் கருத்தினுள் நந்தியை
மெய்கலந் தான்றன்னை வேத முதல்வனைப்
பொய்கலந் தார்முன் புகுதாப் புனிதனைப்
பொய்யொழிந் தார்க்கே புகலிட மாமே. 2604

மெய்த்தாள் அகம்படி மேவிய நந்தியைக்
கைத்தாள் கொண்டா நந் திறந்தறி வாரில்லைப்
பொய்த்தாள் இடும்பையைப் பொய்யற நீவிட்டங்
கத்தாள் திறக்கில் அரும்பேற தாமே. 2605

உய்யும் வகையால் உணர்வினல் ஏத்துமின்
மெய்யன் அரனெறி மேலுண்டு திண்ணெனப்
பொய்யொன்று மின்றிப் புறம்பொலி வார்நடு
ஐயனும் அங்கே அமர்ந்துநின் ருனே. 2606

வம்பு பழுத்த மலர்ப்பழம் ஒன்றுண்டு
தம்பால் பறவை புகுந்துணத் தாஞெட்டா(து)
அம்புகொண் டெய்திட் டகலத் துரத்திடின்
செம்பொற் சிவகதி சென்றெய்த லாமே. 2607

மயக்கிய ஐம்புலப் பாசம் அறுத்துத்
துயக்கறுத் தானைத் தொடர்மின் தொடர்ந்தால்
தியக்கஞ் செய்யாதே சிவனெம் பெருமான்
உயப்போ எனமனம் ஒன்றுவித் தானே. 2608

மனமது தானே நினையவல் லாருக்
கினமெனக் கூறு மிருங்காய மேவற்
றனிவினி ஞதன்பால் தக்கன செய்யில்
புனிதன் செயலாகும் போதப் புவிக்கே. 2609

ஞானி செயல்

முன்னை வினைவரின் முன்னுண்டே நீங்குவர்
பின்னை வினைக்கஞ்சார் பேர்ந்தறப் பார்ப்பர்கள்
தன்னை யறிந்திடுந் தத்துவ ஞானிகள்
நன்மையில் ஐம்புலன் நாடலி னாலே. 2610

தன்னை அறிந்திடும் தத்துவ ஞானிகள்
முன்னை வினையின் முடிச்சை அவிழ்ப்பர்கள்
பின்னை வினையைப் பிடித்துப் பிசைவர்கள்
சென்னியில் வைத்த சிவனரு ளாலே. 2611

மனவாக்குக் காயத்தால் வல்வினை மூளும்
மனவாக்கு நேர்நிற்கில் வல்வினை மன்னா
மனவாக்கு கெட்டவர் வாதனை தன்னால்
தனைமாற்றி யாற்றத் தகுஞானி தானே. 2612

அவா வறுத்தல்

வாசியும் ஊசியும் பேசி வகையினால்
பேசி யிருந்து பிதற்றிப் பயனில்லை
ஆசையும் அன்பும் அறுமின் அறுத்தபின்
ஈசன் இருந்த இடம்எளி தாமே. 2613

மாடத்து ளானலன் மண்டபத் துளானலன்
கூடத்து ளானலன் கோயிலு ளானலன்
வேடத்து ளானலன் வேட்கைவிட் டார்நெஞ்சில்
மூடத்து ளேநின்று முத்திதந் தானே. 2614

ஆசை யறுமின்கள் ஆசை யறுமின்கள்
ஈசனோ டாயினும் ஆசை யறுமின்கள்
ஆசை படப்பட ஆய்வருந் துன்பங்கள்
ஆசை விடவிட ஆனந்த மாமே. 2615

அடுவன பூதங்கள் ஐந்தும் உடனே
படுவழி செய்கின்ற பற்றற வீசி
விடுவது வேட்கையை மெய்ந்நின்ற ஞானந்
தொடுவது தம்மைத் தொடர்தலு மாமே. 2616

உவாக்கடல் ஒக்கின்ற ஊழியும் போன
துவாக்கட லுட்பட்டுத் துஞ்சினர் வானோர்
அவாக்கட லுட்பட் டழுந்தினர் மண்ணோர்
தவாக்கடல் ஈசன் தரித்துநின் றானே. 2617

நின்ற வினையும் பிணியும் நெடுஞ்செயல்
துன்தொழி லற்றுச் சுத்தம தாகலும்
பின்றைங் கருமமும் பேர்த்தருள் நேர்பெற்றுத்
துன்ற அழுத்தலும் ஞானிகள் தூய்மையே. 2618

உண்மை யுணர்ந்துற ஒண்சித்தி முத்தியாம்
பெண்மயற் கெட்டறப் பேறட்ட சித்தியாந்
திண்மையின் ஞானி சிவகாயங் கைவிட்டால்
வண்மை அருள்தான் அடைந்தன்பில் ஆறுமே. 2619

அவனிவன் ஈசனென் றன்புற நாடிச்
சிவனிவன் ஈசனென் றுண்மையை யோரார்
பவனிவன் பல்வகை யாமிப் பிறவி
புவனிவன் போவது பொய்கண்ட போதே. 2620

கொதிக்கின்ற வாறுங் குளிர்கின்ற வாறும்
பதிக்கின்ற வாறிந்தப் பாரக முற்றும்
விதிக்கின்ற ஐவரை வேண்டா துலகம்
நொதிக்கின்ற காயத்து நூலொன்று மாமே. 2621

உய்ந்தனம் என்பீர் உறுபொருள் காண்கிலீர்
கந்த மலரிற் கலக்கின்ற நந்தியைச்
சிந்தையில் வைத்துத் தெளிவுறச் சேர்த்திட்டால்
முந்தைப் பிறவிக்கு மூலவித் தாமே. 2622

பத்தியுடைமை

முத்திசெய் ஞானமுங் கேள்வியு மாய்நிற்கும்
அத்தனை மாயா அமரர் பிரான்தன்னைச்
சுத்தனைத் தூய்நெறி யாய்நின்ற சோதியைப்
பத்தன் பரசும் பசுபதி தானென்றே. 2623

அடியார் அடியார் அடியார் அடிமைக்கு
அடியனுய் நல்கிட் டடிமையும் பூண்டேன்
அடியார் அருளால் அவனடி கூட
அடியா னிவனென் றடிமைகொண் டானே. 2624

நீரிற் குளிரும் நெருப்பினிற் சுட்டிடும்
ஆரிக் கடனந்தி யாமா ரறிபவர்
பாரிற் பயனுரைப் பார்க்கிலும் நேரியர்
ஊரில் உமாபதி யாகிநின் ருனே. 2625

ஒத்துல கேழும் அறியா ஒருவனென்
றத்தன் இருந்திடம் ஆரறி வார்சொல்லப்
பத்தர்தம் பத்தியிற் பாற்படின் அல்லது
முத்தினை யார்சொல்ல முந்துகின் ருரே. 2626

ஆன்கன்று தேடி அழைக்கு மதுபோல்
நான்கன்ருய் நாடி யழைத்தேனென் நாதனை
வான்கன்றுக் கப்பாலாய் நின்ற மறைப்பொருள்
ஊன்கன்ரு னுடிவந் துள்புகுந் தானே. 2627

பெத்தத்துந் தன்பணி இல்லை பிறத்தலான்
முத்தத்துந் தன்பணி இல்லை முறைமையால்
அத்தற் கிரண்டும் அருளால் அளித்தலாற்
பத்திப்பட் டோர்க்குப் பணியொன்றும் இல்லையே. 2628

பறவையிற் கற்பமும் பாம்புமெய் யாகக்
குறவஞ் சிலம்பக் குளிர்வரை யேறி
நறவார் மலர்கொண்டு நந்தியை யல்லால்
இறைவனென் றென்மனம் ஏத்தகி லாவே. 2629

உறுதுணை நந்தியை உம்பர் பிரானைப்
பெறுதுணை செய்து பிறப்பறுத் துய்மின்
செறுதுணை செய்து சிவனடி சிந்தித்
துறுதுணை யாயங்கி யாகிநின் றானே. 2630

வானவர் தம்மை வலிசெய் திருக்கின்ற
தானவர் முப்புரஞ் செற்ற தலைவனைக்
கானவன் என்றுங் கருவரை யானென்றும்
ஊனத னுள்நினைந் தொன்றுபட் டாரே. 2631

நிலைபெறு கேடென்று முன்னே படைத்த
தலைவனை நாடித் தயங்குமென் உள்ளம்
மலையுளும் வானகத் துள்ளும் புறத்தும்
உலையுளும் உள்ளத்தும் மூழ்கிநின் றேனே. 2632

முத்தியுடைமை

முத்தியில் அத்தன் முழுத்த அருள்பெற்றுத்
தத்துவ சுத்தி தலைப்பட்டுத் தன்பணி
மெய்த்தவஞ் செய்கை வினைவிட்ட மெய்யுண்மைப்
பத்தியி லுற்றோர் பரானந்த போதரே. 2633

வளங்கனி தேடிய வன்றுட் பறவை
உளங்கனி தேடி யுழிதரும் போது
களங்கனி யங்கியிற் கைவிளக் கேற்றி
நலங்கொண்ட நால்வரும் நாடுகின் றாரே. 2634

சோதனை

பெம்மான் பெருநந்தி பேச்சற்ற பேரின்பத்
தம்மா னடிதந் தருட்கடல் ஆடினேம்
எம்மாய மும்விடுத் தெம்மைக் கரந்திட்டுச்
சும்மா திருந்திடஞ் சோதனை யாகுமே. 2635

அறிவுடை யானரு மாமறை யுள்ளே
செறிவுடை யான்மிகு தேவர்குந் தேவன்
பொறியுடை யான்புலன் ஐந்துங் கடந்த
குறியுடை யானொடுங் கூடுவன் நானே. 2636

அறிவறி வென்றங் கரற்றும் உலகம்
அறிவறி யாமையை யாரும் அறியார்
அறிவறி யாமை கடந்தறி வானால்
அறிவறி யாமை யழகிய வாறே. 2637

குறியாக் குறியினிற் கூடாத கூட்டத்
தறியா அறிவில் அவிழ்ந்தேக சித்தமாய்
நெறியாம் பராநந்தி நீட்டருள் ஒன்றுஞ்
செறியாச் செறிவே சிவமென லாமே. 2638

காலினில் ஊறுங் கரும்பினிற் கட்டியும்
பாலினுள் நெய்யும் பழத்துள் இரதமும்
பூவினுள் நாற்றமும் போன்றுளன் எம்மிறை
காவலன் எங்குங் கலந்துநின் றானே. 2639

விருப்பொடு கூடி விகிர்தனை நாடிப்
பொருப்பகஞ் சேர்தரு பொற்கொடி போல
இருப்பர் மனத்திடை எங்கள் பிரானார்
திருப்புரு வாகித் திகழ்ந்துநின் றாரே. 2640

நந்தி பெருமான் நடுவுள் வியோமத்து
வந்தென் அகம்படி கோயில்கொண் டான்கொள்ள
எந்தைவந் தானென் றெழுந்தேன் எழுதலுஞ்
சிந்தையி னுள்ளே சிவனிருந் தானே. 2641

தன்மைவல் லோனைத் தவத்துள் நலத்தினை
நன்மைவல் லோனை நடுவுறை நந்தியைப்
புன்மைபொய் யாதே புனிதனை நாடுமின்
பன்மையில் உம்மைப் பரிசுசெய் வானே. 2642

தொடர்ந்துநின் றானென்னைச் சோதிக்கும் போது
தொடர்ந்துநின் றானல்ல நாதனும் அங்கே
படர்ந்துநின் றாதிப் பராபரன் எந்தை
கடந்துநின் றவ்வழி காட்டுகின் றானே. 2643

அவ்வழி காட்டும் அமரர்க் கரும்பொருள்
இவ்வழி தந்தைதாய் கேளியான் ஒக்கும்
செவ்வழி சேர்சிவ லோகத் திருந்திடும்
இவ்வழி நந்தி இயல்பது தானே. 2644

எறிவது ஞானத் துறைவாள் உருவி
அறிவது ஞேயவ் வாண்டகை யானைச்
செறிவது தேவர்க்குந் தேவர் பிரானைப்
பறிவது பல்கணப் பற்றுவி டாரே. 2645

ஆதிப் பிரான்தந்த வாளங்கைக் கொண்டபின்
வேதித்து என்னை விலக்கவல் லாரில்லை
சோதிப்பன் அங்கே சுவடு படாவண்ணம்
ஆதிக்கட் டெய்வ மவனிவ னாமே 2646

அந்தக் கருவை அருவை வினைசெய்தற்
பந்தம் பணியுச்சம் பல்பிறப்பும் வாட்டிச்
சிந்தை திருத்தலுஞ் சேர்ந்தாரச் சோதனை
சந்திக்கத் தற்பர மாகுஞ் சதுரர்க்கே. 2647

உரையற்ற தொன்றை யுரைத்தான் எனக்குக்
கரையற் றெழுந்த கலைவேட் டறுத்துத்
திரையொத்த என்னுடல் நீங்கா திருத்திப்
புரையற்ற என்னுட் புகுந்தற் பரனே. 2648

எட்டாம் தந்திரம் முற்றும்

ஒன்பதாம் தந்திரம்

குருமட தரிசனம்

புலியும் அவியும் பரந்து புகையும்
ஒலியும்எம் ஈசன் றனக்கென்றே உள்கிக்
குவியுங் குருமடங் கண்டவர் தாம்போய்த்
தளிரும் மலரடி சார்ந்துநின் றாரே. 2649

இவனில்ல மல்லது அவனுக்கங் கில்லை
அவனுக்கும் வேறில்லம் உண்டா அறியில்
அவனுக் கிவனில்லம் என்றென் றறிந்தும்
அவனைப் புறம்பென் றரற்றுகின் றாரே. 2650

நாடும் பெருந்துறை நான்கண்டு கொண்டபின்
கூடும் சிவனது கொய்மலர்ச் சேவடி
தேட வரியன் சிறப்பிலி எம்மிறை
ஓடும் உலகுயி ராகிநின் றானே. 2651

இயம்புவன் ஆசனத் தோடு மலையும்
இயம்புவன் சித்தக் குகையும் மடமும்
இயம்புவன் ஆதாரத் தோடு வனமும்
இயம்புவன் ஈரா றிருநிலத் தோர்க்கே. 2652

முகம்பீட மாமடம் முன்னிய தேயம்
அகம்பர வர்க்கமே ஆசில்செய் காட்சி
அகம்பர மாதனம் எண்ணெண் கிரியை
சிதம்பரம் தற்குகை ஆதாரந் தானே. 2653

அகமுக மாம்பீடம் ஆதாரம் ஆகும்
சகமுக மாஞ்சத்தி ஆதனம் ஆகும்
செகமுக மாந்தெய்வ மேசிவ மாகும்
அகமுகம் ஆய்ந்த அறிவுடை யோர்க்கே. 2654

மாயை யிரண்டும் மறைக்க மறைவுறும்
காயமோ ரைந்துங் கழியத்தா ளுகியே
தூய பரஞ்சுடர் தோன்றச் சொருபத்துள்
ஆய்பவர் ஞானுதி மோனத்தர் ஆமே. 2655

ஞானகுரு தரிசனம்

ஆறிரெடு முப்பதும் அங்கே அடங்கிடின்
கூறக் குருபரன் கும்பிடு தந்திடும்
வேறே சிவபதம் மேலாய் அளித்திடும்
பேருக ஆனந்தம் பேணும் பெருகவே. 2656

துரியங்கள் மூன்றும் கடந்தெளிர் சோதி
அரிய பரசிவம் யாவையும் ஆகி
விரிவு குவிவற விட்ட நிலத்தே
பெரிய குருபதம் பேசவொண் ணுதே. 2657

ஆயன நந்தி அடிக்கென் தலைபெற் றேன்
வாயன நந்தியை வாழ்த்தவென் வாய்பெற்றேன்
காயன நந்தியைக் காணவென் கண்பெற்றேன்
சேயன நந்திக்கென் சிந்தைபெற் றேனே. 2658

கருடன் உருவம் கருதும் அளவில்
பருவிடம் தீர்ந்து பயங்கெடு மாபோல்
குருவின் உருவங் குறித்தவப் போதே.
திரிமலந் தீர்ந்து சிவனவன் ஆமே. 2659

அண்ணல் இருப்பிட மாரும் அறிகிலர்
அண்ணல் இருப்பிட மாய்ந்துகொள் வார்களுக்(கு)
அண்ணல் அழிவின்றி உள்ளே அமர்ந்திடும்
அண்ணலைக் காணின் அவனிவ னுமே. 2660

தோன்ற அறிதலும் தோன்றல் தோன்ருமையும்
மான்ற அறிவும் மறிநன வாதிகள்
மூன்றவை நீங்கும் துரியங்கள் மூன்றற
ஊன்றிய நந்தி உயர்மோனத் தானே. 2661

சந்திர பூமிக் குடன்புரு வத்திடைக்
கந்த மலரில் இரண்டிதழ்க் கன்னியும்
பந்த மிலாத பளிங்கின் உருவினள்
பந்தம் அறுத்த பரங்குரு பற்றே. 2662

மனம்புகுந் தானுல கேழும் மகிழ
நிலம்புகுந் தானெடு வானிலம் தாங்கிச்
சினம்புகுந் தான்றிசை எட்டும் நடுங்க
வனம்புகுந் தானூர் வடக்கென்ப தாமே. 2663

தானன வண்ணமும் கோசமும் சார்தரும்
தானும் பறவை வனமெனத் தக்கன
தானன சோடச மார்க்கந்தான் நின்றிடில்
தானும் தசாங்கமும் வேறுள்ள தானே. 2664

மருவிப் பிரிவறியா எங்கள் மாநந்தி
உருவ நினைக்கநின் றுள்ளே உருக்கும்
கருவிற் கரந்துள்ளங் காணவல் லார்க்கிங்(கு)
அருவினை கண்சோரும் அழிவார் அகத்தே. 2665

தலைப்படலாம் எங்கள் தத்துவன் தன்னைப்
பலப்படு பாசம் அறுத்தறுத் திட்டு
நிலைப்பெற நாடி நினைப்பற உள்கில்
தலைப்பட லாகுந் தருமமுந் தானே. 2666

நினைக்கின் நினைக்கும் நினைப்பவர் தம்மைச்
சுனைக்குள் விளைமலர் சோதியி னானைத்
தினைப்பிளந் தன்ன சிறுமைய ரேனும்
கனத்த மனத்தடைந் தாலுயர்ந் தாரே. 2667

தலைப்படுங் காலத்துத் தத்துவன் தன்னை
விலக்குறின் மேலை விதியென்று கொள்க
அலைத்துல காய்நின்ற ஆதிப் பிரானை
நினைப்புறு வார்பத்தி நேடிக்கொள் வாரே. 2668

நகழ்வொழிந் தாரவர் நாதனை யுள்கி
நிகழ்வொழிந் தாரெம் பிரானொடுங் கூடித்
திகழ்வொழிந் தார்தங்கள் சிந்தையி னுள்ளே
புகழ்வழி காட்டிப் புகுந்துநின் றானே. 2669

வந்த மரகத மாணிக்க ரேகைபோற்
சந்திடு மாமொழிச் சற்குரு சன்மார்க்கம்
இந்த இரேகை இலாடத்தின் மூலத்தே
சுந்தரச் சோதியுட் சோதியு மாமே. 2670

உண்ணும் வாயும் உடலும் உயிருமாய்க்
கண்ணு மாயோகக் கடவுள் இருப்பது
மண்ணு நீரனல் காலொடு வானுமாய்
விண்ணு மின்றி வெளியானோர் மேனியே. 2671

பரசு பதியென்று பார்முழு தெல்லாம்
பரிசிவன் ஆணை நடக்கும் பாதியால்
பெரிய பதிசெய்து பின்னும் அடியார்க்(கு)
உரிய பதியும்பா ராக்கிநின் றானே. 2672

அம்பர நாதன் அகலிடம் பூம்பொழில்
தம்பர மல்லது தாமறி யோமென்பர்
உம்பருள் வானவர் தானவர் கண்டிலர்
எம்பெரு மானருள் பெற்றிருந் தாரே. 2673

கோவணங் கும்படி கோவண மாகிப்பின்
நாவணங் கும்படி நந்தி யருள்செய்தான்
தேவணங் கோமினிச் சித்தந் தெளிந்தனம்
போய்வணங் கும்பொரு ளாயிருந் தோமே. 2674

பிரணவசமாதி

தூலப் பிரணவம் சொரூபானந்தப் பேருரை
பாலித்த சூக்குமம் மேலைச் சொரூபப்பெண்
ஆலித்த முத்திரை யாங்கதிற் சூக்குமம்
மேலைப் பிரணவம் வேதாந்த வீதியே. 2675

ஓமெனும் ஓங்காரத் துள்ளே ஒருமொழி
ஓமெனும் ஓங்காரத் துள்ளே உருவரு
ஓமெனும் ஓங்காரத் துள்ளே பலபேதம்
ஓம்எனும் ஓங்காரம் ஒண்முத்தி சித்தியே. 2676

ஓங்காரத் துள்ளே உதித்த ஐம்பூதமும்
ஓங்காரத் துள்ளே உதித்த சராசரம்
ஓங்காரா தீதத் துயிர்மூன்றும் உற்றன
ஓங்கார சீவன் பரசிவ ரூபமே 2677

வருக்கம் சுகமாம் பிரமமு மாகும்
அருக்கஞ் சராசர மாகும் உலகில்
தருக்கிய வாதார மெல்லாந்தன் மேனி
சுருக்கமில் ஞானம் தொகுத்துணர்ந் தோரே. 2678

மலையும் மனோபவம் மருள்வன ஆவன
நிலையில் தரிசனம் தீப நெறியாந்
தலமுங் குலமுந் தவஞ்சித்த மாகும்
நலமுஞ்சன் மார்க்கத் துபதேசந் தானே. 2679

சோடச மார்க்கமுஞ் செல்லும்சன் மார்க்கிகட்
காடிய வீராறின் அந்தமும் ஈரேழிற்
கூடிய அந்தமுங் கோதண்ட முங்கடந்
தேறியே ஞானஞே யாந்தத் திருக்கவே. 2680

ஒளி

ஒளியை யறியில் உருவம் ஒளியும்
ஒளியும் உருவம் அறியில் உருவாம்
ஒளியின் உருவம் அறியில் ஒளியே
ஒளியும் உருக உடனிருந் தானே. 2681

புகலெளி தாகும் புவனங்கள் எட்டும்
அகலொளி தாயிரு ளாசற வீசும்
பகலொளி செய்தது மத்தா மரையிலே
இகலொளி செய்தெம் பிரானிருந் தானே. 2682

விளங்கொளி அங்கி விரிகதிர் சோமன்
துளங்கொளி பெற்றன சோதி யருள
வளங்கொளி பெற்றதே பேரொளி வேறு
களங்கொளி செய்து கலந்துநின் றானே. 2683

இளங்கொளி யீசன் பிறப்பொன்று மில்லி
துளங்கொளி ஞாயிறுந் திங்களுங் கண்கள்
வளங்கொளி அங்கி மற்றைக்கண் நெற்றி
விளங்கொளி செய்கின்ற மெய்காயம் ஆமே. 2684

மேலொளி கீழதன் மேவிய மாருதம்
பாரொளி யங்கி பரந்தொளி ஆகாசம்
நீரொளி செய்து நெடுவிசும் பொன்றினும்
மேலொளி ஐந்தும் ஒருங்கொளி யாமே. 2685

மின்னிய தூவொளி மேதக்க செவ்வொளி
பன்னிய ஞானம் பரந்த பரத்தொளி
துன்னிய வாறொளி தூய்மொழி நாடொறும்
உன்னிய வாறொளி ஒத்தது தானே. 2686

விளங்கொளி மின்னொளி யாகிக் கரந்து
துளங்கொளி ஈசனைச் சொல்லுமெப் போதும்
உளங்கொளி யூனிடை நின்றுயிர்க் கின்ற
வளங்கொளி எங்கும் மருவிநின் றானே. 2687

விளங்கொளி அவ்வொளி அவ்விருள் மன்னும்
துளங்கொளி யான்தொழு வார்க்கும் ஒளியான்
அளங்கொளி ஆரமு தாகநஞ் சாரும்
களங்கொளி ஈசன் கருத்தது தானே. 2688

இலங்கிய தெவ்வொளி யவ்வொளி ஈசன்
துலங்கொளி போல்வது தூங்கருட் சத்தி
விளங்கொளி மூன்றே விரிசுடர் தோன்றி
உளங்கொளி யுள்ளே யொருங்குகின் றானே. 2689

உளங்கொளி யாவதென் உண்ணின்ற சீவன்
வளங்கொளி யாநின்ற மாமணிச் சோதி
விளங்கொளி யாய்மின்னி விண்ணில் ஒடுங்கி
வளங்கொளி யாயத்து ளாகிநின் றானே. 2690

விளங்கொளி யாய்நின்ற விகிர்தன் இருந்த
துளங்கொளி பாசத்துள் தூங்கிருள் சோர
களங்கிருள் நட்டமே கண்ணுத லாட
விளங்கொளி யுன்மனத் தொன்றிநின் றானே. 2691

போது கருங்குழற் போனவர் தூதிடை
ஆதி பரத்தை அமரர் பிரானொடும்
சோதியும் அண்டத்தப் பாலுற்ற தூவொளி
நீதியி னல்லிருள் நீக்கிய வாறே. 2692

உண்டில்லை யென்னும் உலகத் தியற்கை
பண்டில்லை யென்னும் பரங்கதி யுண்டுகொல்
கண்டில்லை மானுடர் கண்ட கருத்துறில்
விண்டில்லை யுள்ளே விளங்கொளி யாமே. 2693

சுடருற ஓங்கிய ஒள்ளொளி யாங்கே
படருறு காட்சிப் பகலவன் ஈசன்
அடருறு மாயையின் ஆரிருள் வீசில்
உடலுறு ஞானத் துறவியன் ஆமே. 2694

ஒளிபவ ளத்திரு மேனிவெண் ணீற்றன்
அளிபவ ளச்செம்பொன் ஆதிப் பிரானும்
களிபவ ளத்தினள் காரிருள் நீங்கி
ஒளிபவ ளத்தென்னே டீசன்நின் றானே. 2695

ஈசன்நின் றானிமை யோர்கள்நின் றார்நின்ற
தேசமொன் றின்றித் திகைத்திழைக் கின்றனர்
பாசமொன் றாலப் பழவினைப் பற்றற
வாசமொன் றாமலர் போன்றது தானே. 2696

தானே யிருக்கும் அவற்றிற் றலைவனும்
தானே யிருக்கு மவனென நண்ணிடும்
வானா யிருக்குமாம் மாயிரு ஞாலத்துப்
பானா யிருக்கப் பரவலு மாமே. 2697

தூலபஞ்சாக்கரம்

ஐம்ப தெழுத்தே அனைத்துவே தங்களும்
ஐம்ப தெழுத்தே அனைத்தா கமங்களும்
ஐம்ப தெழுத்தின் அடைவை அறிந்தபின்
ஐம்ப தெழுத்தே அஞ்செழுத் தாமே. 2698

அகார முதலாக ஐம்பத்தொன் றாகி
உகார முதலாக ஓங்கி யுதித்து
மகார இறுதியாய் மாய்ந்து மாய்ந்தேறி
நகார முதலாகும் நந்திதன் நாமமே. 2699

அகராதி ஈரெண் கலந்த பரையும்
உகராதி தன்சத்தி உள்ளொளி ஈசன்
சிகராதி தான்சிவ வேதமே கோணம்
நகராதி தான்மூல மந்திர நண்ணுமே 2700

வாயொடு கண்டம் இதய மருவுந்தி
ஆய இலிங்கம் அவற்றின்மே லேயவ்வாய்த்
தூயதோர் துண்டம் இருமத் தகஞ்செல்லல்
ஆயதீ ருமைந்தோ டாமெழுத் தஞ்சுமே. 2701

கிரணங்கள் ஏழும் கிளர்ந்தெரி பொங்கிக்
கரணங்கள் விட்டுயிர் தானெழும் போதும்
மரணங்கை வைத்துயிர் மாற்றிடும் போதும்
அரணங்கை கூட்டுவ தஞ்செழுத் தாமே. 2702

ஞாயிறு திங்கள் நவின்றெழு காலத்தில்
ஆயுறு மந்திரம் ஆரும் அறிகிலர்
சேயுறு கண்ணி திருவெழுத் தஞ்சையும்
வாயுற வோதி வழுத்தலும் ஆமே. 2703

தெள்ளமு தூறச் சிவாய நமவென்
றுள்ளமு தூற ஒருகால் உரைத்திடும்
வெள்ளமு தூறல் விரும்பி யுண்ணுதவர்
துள்ளிய நீர்போற் சுழல்கின்ற வாறே. 2704

குருவழி யாய குணங்களி னின்று
கருவழி யாய கணக்கை அறுக்க
வரும்வழி மாள மறுக்கவல் லார்கட்
கருள்வழி காட்டுவ தஞ்செழுத் தாமே. 2705

வெறிக்க வினைத்துயர் வந்திடும் போது
செறிக்கின்ற நந்தி திருவெழுத் தோதும்
குறிப்பது வுன்னிற் குரைகழல் கூட்டும்
குறிப்பறி வான்றவம் கோனுரு வாமே. 2706

நெஞ்சு நினைந்துதம் வாயாற் பிரானென்று
துஞ்சும் பொழுதுன் துணைத்தாள் சரண்என்று
மஞ்சு தவழும் வடவரை மீதுறை
அஞ்சில் இறைவன் அருள்பெற லாமே 2707

பிரான்வைத்த ஐந்தின் பெருமை உணரா
திராமாற்றஞ் செய்வார்கொல் ஏழை மனிதர்
பராமுற்றும் கீழொடு பல்வகை யாலும்
அராமுற்றுஞ் சூழ்ந்த அகலிடந் தானே. 2708

சூக்கும பஞ்சாக்கரம்

எளிய வாதுசெய் வாரெங்கள் ஈசனை
ஒளியை யுன்னி யுருகு மனத்தராய்த்
தெளிய ஓதிச் சிவாய நமவென்னும்
குளிகை யிட்டுப்பொன் ஆக்குவன் கூட்டையே. 2709

சிவன்சத்தி சீவன் செறுமல மாயை
அவஞ்சேர்த்த பாச மலமைந் தகலச்
சிவன்சத்தி தன்னுடன் சீவனுர் சேர
அவஞ்சேர்த்த பாசம் அணுககி லாவே. 2710

சிவனரு ளாய சிவன்திரு நாமம்
சிவனருள் ஆன்மாத் திரோத மலமாயை
சிவமுத லாகச் சிறந்து நிரோதம்
பவம தகன்று பரசிவன் ஆமே. 2711

ஓதிய நம்மலம் எல்லாம் ஒழித்திட்டவ்
வாதி தனைவிட் டிறையருட் சத்தியால்
தீதில் சிவஞான யோகமே சித்திக்கும்
ஓதுஞ் சிவாய மலமற்ற உண்மையே. 2712

நமாதி நனுதி திரோதாயி யாகித்
தமாதி யதாய்நிற்கத் தானந்தத் துற்றுச்
சமாதித் துரியந் தமதாக மாகவே
நமாதி சமாதி சிவவாதல் எண்ணவே. 2713

அருள்தரு மாயமும் அத்தனும் தம்மில்
ஒருவனை ஈன்றவள் உள்ளுறு மாயை
திரிமலம் நீங்கிச் சிவாயவென் றோதும்
அருவினை தீர்ப்பதும் அவ்வெழுத் தாமே. 2714

சிவசிவ என்றே தெளிகிலர் ஊமர்
சிவசிவ வாயுவுந் தேர்ந்துள் அடங்கச்
சிவசிவ வாய தெளிவினுள் ளார்கள்
சிவசிவ வாகும் திருவரு ளாமே. 2715

சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரும் ஆவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே. 2716

நமவென்னும் நாமத்தை நாவில் ஒடுக்கிச்
சிவவென்னும் நாமத்தைச் சிந்தையுள் ஏற்றப்
பவமது தீரும் பரிசும தற்றல்
அவமதி தீரும் அறும்பிறப் பன்றே. 2717

அதிசூக்கும பஞ்சாக்கரம்

சிவாய நமஎனச் சித்தம் ஒருக்கி
அவாயம் அறவே அடிமைய தாக்கிச்
சிவாய சிவசிவ என்றென்றே சிந்தை
அவாயங் கெடநிற்க ஆனந்தம் ஆமே. 2718

செஞ்சுடர் மண்டலத் தூடுசென் றப்புற
மஞ்சண வும்முறை ஏறி வழிக்கொண்டு
துஞ்சு மவன்சொன்ன காலத் திறைவனை
நெஞ்சென நீங்கா நிலைபெறல் ஆகுமே. 2719

அங்கமும் ஆகம வேதம தோதினும்
எங்கள் பிரான்எழுத் தொன்றில் இருப்பது
சங்கைகெட் டவ்வெழுத் தொன்றையுஞ் சாதித்தால்
அங்கரை சேர்ந்த அருங்கலம் ஆமே. 2720

பழுத்தன ஐந்தும் பழமறை யுள்ளே
விழித்தங் குறங்கும் விளைவறி வாரில்லை
எழுத்தறி வோமென் றுரைப்பர்கள் ஏதர்
எழுத்தை அழுத்தும் எழுத்தறி யாரே. 2721

திருக்கூத்துத் தரிசனம்

எங்குந் திருமேனி எங்குஞ் சிவசத்தி
எங்குஞ் சிதம்பரம் எங்குந் திருநட்டம்
எங்குஞ் சிவமா யிருத்தலால் எங்கெங்கும்
எங்குஞ் சிவனரு டன்விளை யாட்டே. 2722

சிற்பரஞ் சோதி சிவானந்தக் கூத்தனைச்
சொற்பத மாம்அந்தச் சுந்தரக் கூத்தனைப்
பொற்பதிக் கூத்தனைப் பொற்றில்லைக் கூத்தனை
அற்புதக் கூத்தனை ஆரறி வாரே. 2723

சிவானந்தக் கூத்து

தானந்தம் இல்லாச் சதானந்த சத்திமேல்
தேனுந்தும் ஆனந்த மாநடங் கண்டீர்
ஞானங் கடந்து நடஞ்செய்யும் நம்பிக்கங்
கானந்தக் கூத்தாட ஆடரங் கானதே. 2724

ஆனந்தம் ஆடரங் கானந்தம் பாடல்கள்
ஆனந்தம் பல்லியம் ஆனந்தம் வாச்சியம்
ஆனந்த மாக அகில சராசரம்
ஆனந்தம் ஆனந்தக் கூத்துகந் தானுக்கே. 2725

ஒளியாம் பரமும் உளதாம் பரமும்
அளியார் சிவகாமி யாகுஞ் சமயக்
களியார் பரமும் கருத்துறை யந்தத்
தெளிவாஞ் சிவானந்த நட்டத்தின் சித்தியே. 2726

ஆன நடமைந் தகள சகளத்தர்
ஆன நடமாடி ஐங்கருமத் தாகம்
ஆன தொழிலருளா லைந்தொழிற் செய்தே
தேன்மொழி பாகன் திருநட மாடுமே. 2727

பூதாண்ட பேதாண்ட போகாண்ட யோகாண்ட
மூதாண்ட முத்தாண்ட மோகாண்ட தேகாண்ட
தாகாண்ட மைங்கரு மத்தாண்ட தற்பரத்
தேகாந்த மாம்பிர மாண்டத்த என்பவே. 2728

வேதங்கள் ஆட மிகு ஆகமமாடக்
கீதங்கள் ஆடக் கிளரண்டம் ஏழாடப்
பூதங்க ளாடப் புவன முழுதாட
நாதங்கொண் டாடினன் ஞானானந்தக் கூத்தே. 2729

பூதங்கள் ஐந்திற் பொறியிற் புலனைந்தில்
வேதங்கள் ஐந்தில் மிகுமா கமந்தன்னில்
ஓதுங் கலைகாலம் ஊழியுடன் அண்டம்
போதங்கள் ஐந்தில் புணர்ந்தாடும் சித்தனே. 2730

தேவர் சுரர்நரர் சித்தர்வித் தியாதரர்
மூவர்கள் ஆதியின் முப்பத்து மூவர்கள்
தாபதர் சித்தர் சமயஞ் சராசரம்
யாவையும் ஆடிடும் எம்மிறை யாடவே. 2731

சுந்தரக் கூத்து

அண்டங்கள் ஏழினுக் கப்புறத் தப்பால்
உண்டென்ற சத்தி சதாசிவத் துச்சிமேல்
கண்டங் கரியான் கருணை திருவுருக்
கொண்டங் குமைகாணக் கூத்துகந் தானே. 2732

கொடுகொட்டி பாண்டரங் கோடு சங்காரம்
நடமெட்டோ டைந்தாறு நாடியின் நாடுந்
திடமுற் றெழுந்தேவ தாருவாந் தில்லை
வடமுற்ற மாவன மன்னவன் தானே. 2733

பரமாண்டத் தூடே பராசத்தி பாதம்
பரமாண்டத் தூடே படரொளி ஈசன்
பரமாண்டத் தூடே படர்தரு நாதம்
பரமாண்டத் தூடே பரனடம் ஆடுமே. 2734

அங்குச மென்ன எழுமார்க்கம் போதத்தில்
தங்கிய தொந்தி எனுந்தாள ஒத்தினில்
சங்கரன் மூலநா டிக்குள் தரித்தாடல்
பொங்கிய காலம் புகும்போகல் இல்லையே. 2735

ஆனத்தி யாடிப் பின்னவக் கூத்தாடிக்
கானத்தி யாடிக் கருத்தில் தரித்தாடி
மூனச் சுழுனையுள் ஆடி முடிவில்லா
ஞானத்துள் ஆடி முடித்தானென் நாதனே. 2736

சத்திகள் ஐந்தும் சிவபேதந் தானைந்தும்
முத்திகள் எட்டும் முதலாம் பதமெட்டும்
சித்திகள் எட்டும் சிவபதம் தானெட்டும்
சுத்திகள் எட்டீசன் தொல்நட்டம் ஆடுமே. 2737

மேகங்கள் ஏழும் விரிகடல் தீவேழும்
தேகங்கள் ஏழும் சிவபாற் கரன்ஏழும்
தாகங்கள் ஏழும் சாந்திகள் ஏழும்
ஆகின்ற நந்தி யடிக்கீழ் அடங்குமே. 2738

பொற்பதிக் கூத்து

தெற்கு வடக்குக் கிழக்குமேற் குச்சியில்
அற்புத மானதோர் அஞ்சு முகத்திலும்
ஒப்பில்பே ரின்பத் துபய உபயத்துள்
தற்பரன் நின்று தனிநடஞ் செய்யுமே. 2739

அடியார் அரனடி யானந்தங் கண்டோர்
அடியா ரானவர் அத்தருள் உற்றோர்
அடியார் பவரே அடியவ ராமால்
அடியார்பொன் னம்பலத் தாடல்கண் டாரே. 2740

அடங்காத என்னை அடக்கி அடிவைத்(து)
இடங்காண் பரானந்தத் தேயென்னை விட்டு
நடந்தான் செயுந்நந்தி நன்ஞானக் கூத்தன்
படந்தான்செய் துள்ளுட் படிந்திருந் தானே. 2741

உம்பரிற் கூத்தனை உத்தமக் கூத்தனைச்
செம்பொற் றிருமன்றுட் சேவகக் கூத்தனைச்
சம்பந்தக் கூத்தனைத் தற்பரக் கூத்தனை
இன்புற நாடியென் அன்பில்வைத் தேனே. 2742

மாணிக்கக் கூத்தனை வண்தில்லைக் கூத்தனைப்
பூணுற்ற மன்றுட் புரிசடைக் கூத்தனைச்
சேணுற்ற சோதிச் சிவானந்தக் கூத்தனை
ஆணிப்பொற் கூத்தனை ஆருரைப் பாரே. 2743

விம்மும் வெருவும் விழுமெழும் மெய்சோரும்
தம்மையுந் தாமறி யார்கள் சதுர்கெடும்
செம்மை சிறந்த திருவம் பலக்கூத்துள்
அம்மலர்ப் பொற்பாதத் தன்புவைப் பார்கட்கே. 2744

தேட்டறும் சிந்தை திகைப்பறும் பிண்டத்துள்
வாட்டறும் கால்புந்தி யாகி வரும்புலன்
ஓட்டறும் ஆசை யறும்உளத் தானந்த
நாட்ட முறுக்குறு நாடகங் காணவே. 2745

காளியோ டாடிக் கனகா சலத்தாடிக்
கூளியோ டாடிக் குவலயத் தேயாடி
நீடிய நீர்தீகால் நீள்வா னிடையாடி
நாளுற அம்பலத் தேயாடும் நாதனே. 2746

மேரு நடுநாடி மிக்கிடை பிங்கலை
கூருமிவ் வானின் இலங்கைக் குறியுறும்
சாருந் திலைவனத் தண்மா மலயத்தூ
டேறுஞ் சுழுனை இவைசிவ பூமியே. 2747

பூதல மேருப் புறத்தான தெக்கணம்
ஓதும் இடைபிங் கலைஒண் சுழுனையாம்
பாதி மதியோன் பயில்திரு அம்பலம்
ஏதமில் பூதாண்டத் தெல்லையின் ஈறே. 2748

பொற்றில்லைக் கூத்து

அண்டங்கள் ஓரேழும் அம்பொற் பதியாகப்
பண்டையா காசங்கள் ஐந்தும் பதியாகத்
தெண்டினிற் சத்தி திருவம் பலமாகக்
கொண்டு பரஞ்சோதி கூத்துகந் தானே. 2749

குரானந்த ரேகையாய்க் கூர்த்த குணமாம்
சிரானந்தம் பூரித்துத் தென்றிசை சேர்ந்து
புரானந்த போகனும் பூவையுந் தானும்
நிரானந்த மாகி நிருத்தஞ்செய் தானே. 2750

ஆதி பரனுட அங்கைக் கனலாட
ஓதுஞ் சடையாட உன்மத்த முற்றுடப்
பாதி மதியாடப் பாரண்ட மீதாட
நாதமோ டாடினன் நாதாந்த நட்டமே. 2751

கும்பிட அம்பலத் தாடிய கோனடம்
அம்பர னுடும் அகிலாண்ட நட்டமாம்
செம்பொரு ளாகுஞ் சிவலோகஞ் சேர்ந்துற்றால்
உம்பர மோனஞா னந்தத்தில் உண்மையே. 2752

மேதினி மூவேழ் மிகுமண்டம் ஓரேழு
சாதக மாகுஞ் சமயங்கள் நூற்றெட்டு
நாதமோ டந்த நடானந்த நாற்பதப்
பாதியோ டாடிப் பரனிரு பாதமே. 2753

இடைபிங் கலையிம வானோ டிலங்கை
நடுநின்ற மேரு நடுவாஞ் சுழுனை
கடவுந் திலைவனங் கைகண்ட மூலம்
படர்வொன்றி யென்ற பரமாம் பரமே. 2754

ஈருன கன்னி குமரியே காவிரி
வேரு நவதீர்த்த மிக்குள்ள வெற்பேழும்
பேருன வேதா கமமே பிறத்தலான்
மாருத தென்றிசை வையகஞ் சுத்தமே. 2755

நாதத் தினிலாடி நாற்பத்தே யாடி
வேதத்தி லாடித் தழலந்த மீதாடிப்
போதத்தி லாடிப் புவன முழுதாடும்
தீதற்ற தேவாதி தேவர் பிரானே. 2756

தேவரோ டாடித் திருவம் பலத்தாடி
மூவரோ டாடி முனிசனத் தோடாடிப்
பாவினு ளாடி பராசத் தியிலாடிக்
கோவினுள் ஆடிடும் கூத்தப் பிரானே. 2757

ஆறு முகத்தில் அதிபதி நானென்றும்
கூறு சமயக் குருபரன் நானென்றும்
தேறினர் தெற்குத் திருவம் பலத்துளே
வேறின்றி அண்ணல் விளங்கிநின் றானே. 2758

அம்பலம் ஆடரங் காக அதன்மீதே
எம்பரன் ஆடும் இருதாளின் ஈரொளி
உம்பர மாமைந்து நாதத்து ரேகையுள்
தம்பர மாய்நின்று தான்வந் தருளுமே. 2759

ஆடிய காலும் அதிற்சிலம் பொலியும்
பாடிய பாட்டும் பல்வான நட்டமும்
கூடிய கோலங் குருபரன் கொண்டாடத்
தேடியு ளேகண்டு தீர்ந்தற்ற வாறே. 2760

இருதயந் தன்னில் எழுந்த பிராணன்
கரசர ணாதி கலக்கும் படியே
அரதன மன்றினில் மாணிக்கக் கூத்தன்
குரவனாய் எங்கும் கூத்துகந் தானே. 2761

அற்புதக் கூத்து

குருவுரு வன்றிக் குனிக்கும் உருவம்
அருவுரு வாவதும் அந்த அருவே
திரிபுரை யாகித் திகழ்தரு வாளும்
உருவரு வாகும் உமையவள் தானே. 2762

திருவழி யாவது சிற்றம் பலத்தே
குருவடி வுள்ளாக் குனிக்கும் உருவே
உருவரு வாவதும் முற்றுணர்ந் தோர்க்கு
அருள்வழி யாவதும் அவ்வழி தானே. 2763

நீடுஞ் சிரசிடைப் பன்னிரண் டங்குலம்
ஓடும் உயிரெழுந் தோங்கி உதித்திட
நாடுமின் நாதாந்த நம்பெரு மானுகந் (து)
ஆடு மிடந்திரு வம்பலந் தானே. 2764

வளிமேக மின்வில்லு வானக வோசை
தெளிய விசும்பில் திகழ்தரு மாறுபோல்
களியொளி யாறுங் கலந்துடன் வேருய்
ஒளியுரு வாகி ஒளித்துநின் ருனே. 2765

தீமுத லைந்தும் திசையெட்டும் கீழ்மேலும்
ஆயும் அறிவினும் அப்புறம் ஆனந்தம்
மாயைமா மாயை கடந்துநின் ருர்காண
நாயகன் நின்று நடஞ்செயு மாறே. 2766

கூத்தன் கலந்திடும் கோல்வளை யாளொடும்
கூத்தன் கலந்திடும் கோதிலா ஆனந்தம்
கூத்தன் கலந்திடும் கோதிலா ஞானத்துக்
கூத்தனுங் கூத்தியுங் கூத்ததின் மேலே. 2767

இடங்கொண்ட சத்தியும் எந்தை பிரானும்
நடங்கொண்டு நின்றமை நானும் அறிந்தேன்
படங்கொண்டு நின்றவிப் பல்லுயிர் எல்லாம்
அடங்கலுந் தாமாய்நின் ருடுகின் ருரே. 2768

சத்தி வடிவு சகல ஆனந்தமும்
ஒத்த ஆனந்தம் உமையவள் மேனியாம்
சத்தி வடிவு சகளத் தெழுந்திரண்(டு)
ஒத்த ஆனந்தம் ஒருநட மாமே. 2769

நெற்றிக்கு நேரே புருவத் திடைவெளி
உற்றுற்றுப் பார்க்க ஒளிவிடு மந்திரம்
பற்றுக்குப் பற்ருய்ப் பரமன் இருந்திடம்
சிற்றம் பலமென்று சேர்ந்துகொண் டேனே. 2770

அண்டங்கள் தத்துவ மாகிச் சதாசிவம்
தண்டினிற் சாத்தவி சாம்பவி யாதனம்
தெண்டினில் ஏழுஞ் சிவாசன மாகவே
கொண்டு பரஞ்சோதி கூத்துகந் தானே 2771

மன்று நிறைந்த விளக்கொளி மாமலர்
நன்றிது தானிதழ் நாலொடு நூற்வை
சென்றது தானெரு பத்திரு நூறுள
நின்றது தானெடு மண்டல மாமே. 2772

அண்டம் எழுகோடி பிண்டம் எழுகோடி
தெண்டிரை சூழ்ந்த திசைகள் எழுகோடி
எண்டிசை சூழ்ந்த இலிங்கம் எழுகோடி
அண்ட னடஞ்செயும் ஆலயந் தானே. 2773

ஆகாச மாமுடல் அங்கார் முயலகன்
ஏகாச மாந்திசை எட்டுந் திருக்கைகள்
மோகாய முக்கண்கள் மூன்ருெளி தாஞக
மாகாய மன்றுள் நடஞ்செய்கின் ருனே. 2774

அம்பல மான தகில சராசரம்
அம்பல மாவது ஆதிப் பிரானடி
அம்பல மாவ தப்புத்தீ மண்டலம்
அம்பல மாவ தஞ்செழுத் தாமே. 2775

கூடிய திண்முழ வங்குழ லோமென்ன
ஆடிய மானுடர் ஆதிப் பிரானென்ன
நாடிய நற்கண மாரம்பல் பூதங்கள்
பாடிய வாருெரு பாண்டரங் காமே. 2776

அண்டத்தில் தேவர்கள் அப்பாலைத் தேவர்கள்
தெண்டிரை சூழ்புவிக் குள்ளுள்ள தேவர்கள்
புண்டரி கப்பதப் பொன்னம் பலக்கூத்துக்
கண்டு சேவித்துக் கதிபெறு வார்களே. 2777

புளிக்கண் டவர்க்குப் புனலூறு மாபோல்
களிக்குந் திருக்கூத்துக் கண்டவர்க் கெல்லாம்
துளிக்கும் அருட்கண்ணீர் சோர்நெஞ் சுருக்கும்
ஒளிக்குளா னந்தத் தமுதூறும் உள்ளத்தே. 2778

திண்டாடி வீழ்கை சிவானந்த மாவது
உண்டார்க் குணர்வுண்டால் உன்மத்தஞ் சித்திக்கும்
கொண்டாடு மன்றுட் குளிக்குந் திருக்கூத்துக்
கண்டார் வருங்குணங் கேட்டார்க்கும் ஒக்குமே. 2779

அங்கி தமருகம் அக்குமா லைப்பாசம்
அங்குசஞ் சூலங் கபால முடன்ஞானம்
தங்கு பயந்தரு நீல மும்முடன்
மங்கையோர் பாகமாய் மாநட மாடுமே. 2780

ஆடல் பதினொ ருறுப்பும் அடைவாகக்
கூடிய பாதஞ் சிலம்புகை கொள்துடி
நீடிய நாதம் பராற்பர நேயத்தே
ஆடிய நந்தி புறமகத் தானே. 2781

ஒன்பது மாட ஒருபதி னுருட
அன்புறு மார்க்கங்கள் ஆறும் உட்டுறை
இன்புறும் ஏழினும் ஏழைம்பத் தாருட
அன்பதும் ஆடினுன் ஆனந்தக் கூத்தே. 2782

ஏழினில் ஏழாய் இகந்தெழுத் தேழதாய்
ஏழினில் ஒன்ருய் இழிந்தமைந் தொன்ருய்
ஏழினிற் சன்மார்க்கம் எங்கள் பரஞ்சோதி
ஏழிசை நாடகத் தேஇசைந் தானே. 2783

மூன்றினில் அஞ்சாகி முந்நூற் றறுபதாய்
மூன்றினில் ஆருய் முதற்பன்னீர் மூலமாய்
மூன்றினில் அக்க முடிவாகி முந்தியே
மூன்றினும் ஆடினுன் மோகாந்தக் கூத்தே. 2784

தாமுடி வானவர் தம்முடி மேலுறை
மாமணி ஈசன் மலரடித் தாளிணை
வாமணி யன்புடை யார்மனத் துள்ளெழும்
கார்மணி ஞாலங் கடந்துநின் ருனே. 2785

புரிந்தவன் ஆடிற் புவனங்க ளாடும்
தெரிந்தவன் ஆடும் அளவெங்கள் சிந்தை
புரிந்தவ ஞடிற்பல் பூதங்கள் ஆடும்
எரிந்தவ ஞடல்கண் டின்புற்ற வாறே. 2786

ஆதி நடஞ்செய்தான் என்பர்கள் ஆதர்கள்
ஆதி நடஞ்செய்தல் யாரும் அறிகிலர்
ஆதி நடமாட லாரும் அறிந்தபின்
ஆதி நடமாட லாமருட் சத்தியே. 2787

ஒன்பதோ டொன்பதாம் உற்ற இருபதத்
தன்புறு கோணம் அசிபதத் தாடிடத்
துன்புறு சத்தியுள் தோன்றிநின் ருடவே
அன்புறு மெந்தைநின் ருடலுற் ருனே. 2788

தத்துவம் ஆடச் சதாசிவம் தாஞடச்
சித்தமும் ஆடச் சிவசத்தி தாஞட
வைத்த சராசரம் ஆட மறையாட
அத்தனும் ஆடினுன் ஆனந்தக் கூத்தே 2789

இருவருங் காண எழில்அம் பலத்தே
உருவோ டருவோ டுருபர ரூபமாய்த்
திருவருட் சத்திக்குள் சித்தனு னந்தன்
அருணுரு வாகநின் ருடலுற் ருனே. 2790

சிவமாடச் சத்தியும் ஆடச் சகத்தில்
அவமாட ஆடாத அம்பரம் ஆட
நவமான தத்துவ நாதாந்த மாடச்
சிவமாடும் வேதாந்த சித்தாந்தத் துள்ளே. 2791

நாதத்தின் அந்தமும் நற்போத அந்தமும்
வேதத்தின் அந்தமும் மெய்ச்சிவா னந்தமும்
தாதற்ற நல்ல சதாசிவா னந்தத்து
நாதப் பிரமம் சிவநடம் ஆமே. 2792

சிவமாதி ஐவர்திண் டாட்டமுந் தீரத்
தவமார் பசுபாசம் ஆங்கே தனித்துத்
தவமாம் பரனெங்குந் தானாக ஆடுந்
தவமாஞ் சிவானந்தத் தோர்ஞானக் கூத்தே. 2793

கூடிநின் றொருடு காலத்துத் தேவர்கள்
வீடநின் றுன்விகிர் தாவென்னும் நாமத்தைக்
தேடநின் றுன்திக ழுஞ்சுடர் மூன்றொளி
ஆடநின் றுனென்னை ஆட்கொண்ட வாறே. 2794

நாதத் துவங்கடந் தாதி மறைநம்பி
பூதத் துவத்தே பொலிந்தின்பம் எய்தினர்
நேதத் துவமும் அவற்றொடு நேதியும்
பேதப் படாவண்ணம் பின்னிநின் றானே. 2795

ஆனந்த மானந்த மென்பர் அறிவிலர்
ஆனந்த மாநடம் ஆரும் அறிகிலர்
ஆனந்த மாநடம் ஆரும் அறிந்தபின்
தானந்த மற்றிடம் ஆனந்த மாமே. 2796

திருந்துநற் சீயென் றுதறிய கையும்
அருந்தவர் வாவென் றணைத்த மணிக்கையும்
பொருந்தில் இமைப்பிலி யவ்வென்ற பொற்கையும்
திருந்தத்தீ யாகும் திருநிலை மவ்வே. 2797

மருவுந் துடியுடன் மன்னிய வீச்சும்
அருவிய அப்பும் அனலுடன் கையும்
கருவின் மிதித்த கமலப் பதமும்
உருவில் சிவாய நம்வென ஓதே. 2598

அரன்துடி தோற்றம் அமைத்தல் திதியாம்
அரனங்கி தன்னில் அறையில் சங்காரம்
அரனுற் றணைப்பில் லணையுந் திரோதாயி
அரனடி யென்று மனுக்கிரகம் என்னே. 2799

தீத்திரட் சோதி திகழொளி உள்ளொளி
கூத்தனைக் கண்டவக் கோமளக் கண்ணினள்
மூர்த்திகள் மூவர் முதல்வ னிடைசெல்லப்
பார்த்தனள் வேதங்கள் பாடினள் தானே. 2800

நந்தியை எந்தையை ஞானத் தலைவனை
மந்திரம் ஒன்றுள் மருவி யதுகடந்
தந்தர வானத்தின் அப்புறத் தப்பர
சுந்தரக் கூத்தனை என்சொல்லு மாறே. 2801

சீய குருநந்தி திருவம்ப லத்திலே
ஆயுறு மேனியை யாரு மறிகிலர்
தீயுறு செம்மை வெளுப்பொடு மத்தன்மை
யாயுறு மேனி யணிபுக லாமே. 2802

தானான சத்தியுந் தற்பரை யாய்நிற்குந்
தானும் பரற்கும் உயிர்க்குந் தகுமிச்சை
ஞானாதி பேத நடத்து நடித்தருள்
ஆனந் லரனடி நேயத்த தாமே. 2803

ஆகாசப்பேறு

உள்ளத்துள் ஓமென ஈசன் ஒருவனை
உள்ளத்து ளேஅங்கி யாய ஒருவனை
உள்ளத்து ளேநீதி யாய ஓருவனை
உள்ளத்து ளேயுடல் ஆகாச மாமே. 2804

பெருநில மாயண்ட மாயண்டத் தப்பால்
குருநில மாய்நின்ற கொள்கையன் ஈசன்
பெருநில மாய்நின்று தாங்கிய தாளோன்
அருநிலை யாய்நின்ற ஆதிப் பிரானே. 2805

அண்ட ஒளியும் அகண்ட ஒளியுடன்
பிண்ட ஒளியாற் பிதற்றும் பெருமையை
உண்ட வெளிக்குள் ஒளிக்குள் ஒளித்தது
கொண்ட குறியைக் குலைத்தது தானே. 2806

பயனுறு கன்னியர் போகத்தி னுள்ளே
பயனுறும் ஆதிப் பரஞ்சுடர்ச் சோதி
அயனெடு மாலறி யாவகை நின்றிட்(டு)
உயர்நெறி யாயொளி ஒன்றது வாமே. 2807

அறிவுக் கறிவாம் அகண்ட ஒளியும்
பிறியா வலத்தினிற் பேரொளி மூன்றும்
அறியா தடங்கிடில் அத்தன் அடிக்குள்
பிறியா திருக்கிற் பெருங்காலம் ஆமே. 2808

ஆகாச வண்ணன் அமரர் குலக்கொழுந்(து)
ஏகாச மாசுண மிட்டங் கிருந்தவன்
ஆகாச வண்ணம் அமர்ந்துநின் றப்புறம்
ஆகாச மாயங்கி வண்ணனும் ஆமே. 2809

உயிர்க்கின்ற வாறும் உலகமும் ஒக்க
உயிர்க்கின்ற உள்ளொளி சேர்கின்ற போது
குயிற்கொண்ட பேதை குலாவி யுலாவி
வெயிற்கொண்டென் உள்ளம் வெளியது வாமே. 2810

நணுகில் அகல்கிலன் நாதன் உலகத்
தணுகில் அகன்ற பெரும்பதி நந்தி
நணுகிய மின்னொளி சோதி வெளியைப்
பணியின் அமுதம் பருகலும் ஆமே. 2811

புறத்துளா காசம் புவனம் உலகம்
அகத்துளா காசமெம் மாதி யறிவு
சிவத்துளா காசஞ் செழுஞ்சுடர்ச் சோதி
சகத்துளா காசம் தானஞ் சமாதியே. 2812

ஞானோதயம்

மனசந் தியிற்கண்ட மன்னன வாகுங்
கனவுற ஆனந்தங் காண்டல் அதனை
வினவுற ஆனந்த மீதொழி வென்ப
இனமுற்று னந்தியா னந்தம் இரண்டே. 2813

கரியட்ட கையன் கபாலங்கை யேந்தி
எரியும் இளம்பிறை சூடுமெம் மானை
அரியன் பெரியனென் றுட்பட்ட தல்லால்
கரியன்கொல் சேயன்கொல் காண்கின் றிலேனே. 2814

மிக்கார் அமுதுண்ண நஞ்சுண்ட மேலவன்
தக்கார் உரைத்த தவநெறியே சென்று
புக்கால் அருளும் பொன்னுரை ஞானத்தை
நக்கார் கழல்வழி நாடுமின் நீவிரே. 2815

விளக்கைப் பிளந்து விளக்கினை ஏற்றி
விளக்கினுக் குள்ளே விளக்கினைத் தூண்டி
விளக்கில் விளக்கை விளக்க வல்லார்க்கு
விளக்குடை யான்கழல் மேவலு மாமே. 2816

தத்துவம் எங்குண்டு தத்துவன் அங்குண்டு
தத்துவம் எங்கில்லை தத்துவன் அங்கில்லை
தத்துவ ஞானத்தின் தன்மை யறிந்தபின்
தத்துவன் அங்கே தலைப்படுந் தானே. 2817

விசும்பொன்று தாங்கிய மெய்ஞ்ஞானத் துள்ளே
அசும்பினின் றூறிய தாரமு தாகும்
பசும்பொன் திகழும் படர்சடை மீதே
குசும்ப மலர்க்கந்தம் கூடிநின் றானே. 2818

முத்தின் வயிரத்தின் முந்நீர்ப் பவளத்தின்
கொத்தும் பசும்பொன்னின் தூவொளி மாணிக்கம்
ஒத்துயர் அண்டத் துள்ளமர் சோதியை
எத்தன்மை வேறென்று கூறுசெய் வீரே. 2819

நானென்றுந் தானென்றும் நாடினேன் நாடலும்
நானென்று தானென் றிரண்டில்லை என்பது
நானென்ற ஞான முதல்வனே நல்கினன்
நானென்று நானும் நினைப்பொழிந் தேனே. 2820

ஞானத்தின் நன்னெறி நாதாந்த நன்னெறி
ஞானத்தின் நன்னெறி நானென் றறிவோர்தல்
ஞானத்தின் நல்யோக நன்னிலை யேநிற்றல்
ஞானத்தின் நன்மோன நாதாந்த வேதமே. 2821

உய்யவல் லார்கட் குயிர்சிவ ஞானமே
உய்யவல் லார்கட் குயிர்சிவ தெய்வமே
உய்யவல் லார்கட் கொடுக்கம் பிரணவம்
உய்யவல் லாரறி வுள்ளறி வாமே. 2822

காணவல் லார்க்கவன் கண்ணின் மணியொக்கும்
காணவல் லார்க்குக் கடலின் அமுதொக்கும்
பேணவல் லார்க்குப் பிழைப்பிலன் பேர்நந்தி
ஆணவல் லார்க்கே அவன்றுணை யாமே. 2823

ஓமெனும் ஓரெழுத் துள்நின்ற ஓசைபோல்
மேனின்ற தேவர் விரும்பும் விழுப்பொருள்
சேய்நின்ற செஞ்சுடர் எம்பெரு மானடி
ஆய்நின்ற தேவர் அகம்படி யாமே. 2824

சத்திய ஞானனந்தம்

எப்பாழும் பாழும் யாவுமாய் அன்றாகி
முப்பாழும் கீழுள முப்பாழு முன்னியே
இப்பாழும் இன்னவா றென்ப திலாவின்பத்
தற்பரஞா னனந்தந் தானது வாகுமே. 2825

தொம்பதந் தற்பதஞ் சொன்ன துரியம்போல்
நம்பிய மூன்றாந் துரியத்து நன்றாகும்
அம்புவி யுண்ணு அதிசூக்க மப்பாலைச்
செம்பொரு ளாண்டருள் சீர்நந்தி தானே. 2826

மன்னும்சத் தியாதி மணியொளி மாசோபை
அன்னதோ டொப்பம் இடலொன்றா மாறது
இன்னிய உற்பலம் ஒண்சீர் நிறமணம்
பன்னிய சோபை பகராறு மானதே. 2827

சத்தி சிவன்பர ஞானமும் சாற்றுங்கால்
உய்த்த அனந்தம் சிவமுயர் ஆனந்தம்
வைத்த சொரூபத்த சத்தி வருகுரு
உய்த்த உடலிவை யுற்பலம் போலுமே. 2828

உருவுற் பலநிறம் ஒண்மணஞ் சோபை
தரநிற்ப போலுயிர் தற்பரந் தன்னின்
மருவச் சிவமென்ற மாமுப் பதத்தின்
சொருபத்தன் சத்தியா தோன்றநின் றனே. 2829

நினையும் அளவின் நெகிழ வணங்கிப்
புனையில் அவனைப் பொதியலு மாகும்
எனையுமெங் கோனந்தி தன்னருள் கூட்டி
நினையும் அளவில் நினைப்பித் தனனே. 2830

பாலொடு தேனும் பழத்துள் இரதமும்
வாலிய பேரமு தாகு மதுரமும்
போலுந் துரியம் பொடிபட வுள்புக
சீல மயிர்க்கால் தொறுந்தேக் கிடுமே. 2831

அமரத் துவங்கடந் தண்டங் கடந்து
தமரத்து நின்ற தனிமையன் ஈசன்
பவளத்து முத்தும் பனிமொழி மாதர்
துவளற்ற சோதி தொடர்ந்துநின் றனே. 2832

மத்திமம் ஆறுறு மாற்றி மலநீக்கிச்
சுத்தம தாகுந் துரியத் துரிசற்றுப்
பெந்த மறச்சிவ மாகிப் பிறழ்வுற்றுச்
சத்தியஞா னனந்தஞ் சார்ந்தனன் ஞானியே. 2833

சிவமாய் அவமான மும்மலந் தீர
பவமான முப்பாழைப் பற்றறப் பற்றத்
தவமான சத்திய ஞானனந் தத்தே
துவமார் துரியஞ் சொருபம தாமே. 2834

சொரூப உதயம்

பரம குரவன் பரமெங்கு மாகித்
திரமுற எங்கணுஞ் சேர்ந்தொழி வற்று
நிரவு சொரூபத்துள் நீடுஞ் சொரூபம்
அரிய துரியத் தணைந்துநின் றனே. 2835

குலைக்கின்ற நீரிற் குவலய நீரும்
அலைக்கின்ற காற்றும் அனலொடா காசம்
நிலத்திடை வானிடை நீண்டகன் றனை
வரைத்து வலஞ்செயு மாறறி யேனே. 2836

அங்குநின் றனயன் மால்முதல் தேவர்கள்
எங்குநின் றாரும் இறைவனென் றேத்துவர்
தங்கிநின் றன்றனி நாயகன் எம்மிறை
பொங்கிநின் றன்புவ னபதி தானே. 2837

சமையச் சுவடும் தனையறி யாமற்
கமையற்ற காமாதி காரணம் எட்டும்
திமிரச் செயலும் தெளிவுட னின்றோர்
அமரர்க் கதிபதி யாகிநிற் பாரே. 2338

மூவகைத் தெய்வத் தொருவன் முதலுரு
வாயது வேரு மதுபோல் அணுப்பரன்
சேய சிவமுத் துரியத்துச் சீர்பெற
ஏயும் நெறியென் றிறைநூ லியம்புமே 2839

உருவன்றி யேநின் றுருவம் புணர்க்கும்
கருவன்றி யேநின்று தான்கரு வாகும்
மருவன்றி யேநின்ற மாயப் பிரானைக்
குருவன்றி யாவர்க்குங் கூடவொண் ணதே, 2840

உருவ நினைப்பவர்க் குள்ளுறுஞ் சோதி
உருவ நினைப்பவர் ஊழியுங் காண்பர்
உருவ நினைப்பவர் உம்பரும் ஆவர்
உருவ நினைப்பார் உலகத்தில் யாரே. 2841

பரஞ்சோதி யாகும் பதியினைப் பற்றுப்
பரஞ்சோதி என்னுட் படிந்ததற் பின்னைப்
பரஞ்சோதி யுண்ணுன் படியப் படியப்
பரஞ்சோதி தன்னைப் பறையக்கண் டேனே. 2842

சொரூபம் உருவம் குணந்தொல் விழுங்கி
அரியன உற்பலம் ஆமாறு போல
மருவிய சத்தியாதி நான்கு மதித்த
சொரூபக் குரவன் சுகோதயத் தானே. 2843

உரையற்ற ஆனந்த மோன சொருபத்தன்
கரையற்ற சத்தியாதி காணில் அகார
மருவுற் றுகார மகாரம தாக
உரையற்ற தாரத்தில் உள்ளொளி யாமே. 2844

தலைநின்ற தாழ்வரை மீது தவஞ்செய்து
முலைநின்ற மாதறி மூர்த்தியை யானும்
புலைநின்ற பொல்லாப் பிறவி கடந்து
கலைநின்ற கள்வனிற் கண்டுகொண் டேனே 2845

ஆமா றறிந்தேன் அகத்தின் அரும்பொருள்
போமா றறிந்தேன் புகுமாறும் ஈதென்றே
ஏமாப்ப தில்லை இனியோ ரிடமில்லை
நாமா முதல்வனும் நானென லாமே. 2846

ஊழ்

செற்றிலென் சீவிலென் செஞ்சாந் தணியிலென்
மத்தகத் தேயுளி நாட்டி மறிக்கிலென்
வித்தகன் நந்தி விதிவழி யல்லது
தத்துவ ஞானிகள் தன்மைகுன் ருரே. 2847

தான்முன்னஞ் செய்த விதிவழி தானல்லால்
வான்முன்னஞ் செய்தங்கு வைத்ததோர் மாட்டில்லே
கோன்முன்னம் சென்னி குறிவழி யேசென்று
நான்முன்னஞ் செய்ததே நன்னில மானதே. 2848

ஆறிட்ட நுண்மணல் ஆறே சுமவாதே
கூறிட்டுக் கொண்டு சுமந்தறி வாரில்லே
நீறிட்ட மேனி நிமிர்சடை நந்தியைப்
பேறிட்டென் னுள்ளம் பிரியகி லாவே. 2849

வானின் றிடிக்கிலென் மாகடல் பொங்கிலென்
கானின்ற செந்தீக் கலந்துடன் வேகிலென்
தானென்றி மாருதஞ் சண்டம் அடிக்கிலென்
நானென்றி நாதனே நாடுவேன் நானே. 2850

ஆனே துரக்கிலென் அம்பூ டறுக்கிலென்
கானத் துழுவை கலந்து வளேக்கிலென்
ஏனைப் பதியினில் எம்பெரு மான்வைத்த
ஞானத் துழவினே நானுழு வேனே. 2851

கூடு கெடின்மற் ருேர் கூடுசெய் வானுளன்
நாடு கெடினும் நமர்கெடு வாரில்லே
வீடு கெடின்மற் ருேர் வீடுபுக் காலொக்கும்
பாடது நந்தி பரிசறி வார்க்கே. 2852

சிவதரிசனம்

சிந்தைய தென்னச் சிவனென்ன வேறில்லை
சிந்தையி னுள்ளே சிவனும் வெளிப்படும்
சிந்தை தெளியத் தெளியவல் லார்கட்குச்
சிந்தையி னுள்ளே சிவனிருந் தானே. 2853

வாக்கு மனமு மறைந்த மறைப்பொருள்
நோக்குமின் நோக்கப் படும்பொருள் நுண்ணிது
போக்கொன்றும் இல்லை வரவில்லை கேடில்லை
ஆக்கமும் அத்தனை ஆய்ந்துகொள் வார்க்கே. 2854

பரனைப் பராபர னாகியப் பாற்சென் (று)
உரனய் வழக்கற்ற வொண்சுடர் தானய்த்
தரனய்த் தனதென வாறறி வொண்ணு
அரனு யுலகில் அருள்புரிந் தானே. 2855

சிவசொரூப தரிசனம்

ஓதும் மயிர்க்கால் தொறும்அமு தூறிய
பேதம் அபேதம் பிறழாத ஆனந்தம்
ஆதி சொரூபங்கள் மூன்றகன் றப்பாலை
வேதகம் ஓதும் சொரூபிதன் மேன்மையே. 2856

உணர்வும் அவனே உயிரும் அவனே
புணரும் அவனே புலனு மவனே
இணரும் அவன்தன்னை எண்ணலு மாகான்
துணரின் மலர்க்கந்தம் துன்னிநின் ருனே. 2857

துன்னிநின் ருன்தன்னை உன்னிமுன் னுவிரு
முன்னி யவர்தங் குறையை முடித்திடும்
மன்னிய கேள்வி மறையவன் மாதவன்
சென்னியுள் நின்றதோர் தேற்றத்த னுமே. 2858

மின்னுற்ற சிந்தை விழித்தேன் விழித்தலும்
தன்னுற்ற சோதித் தலைவன் இணையிலி
பொன்னுற்ற மேனிப் புரிசடை நந்தியை
என்னுற் றறிவனுன் என்விழித் தானே. 2859

சத்திய ஞானத் தனிப்பொருள் ஆனந்தன்
சித்தத்தி னில்லாச் சிவானந்தப் பேரொளி
சுத்தப் பிரம துரியந் துரியத்துள்
உய்த்த துரியத் துறும்பே ரொளியே. 2860

பரனல்ல நீடும் பராபர னல்ல
உரனல்ல மீதுணர் ஒண்சுட ரல்ல
தரனல்ல தானவை யாயல்ல வாகும்
அரனல்ல ஆனந்தத் தப்புறத் தானே. 2861

முத்தியுஞ் சித்தியும் முற்றிய ஞானத்தோன்
பத்தியுள் நின்று பரந்தன்னுள் நின்றுமா
சத்தியுள் நின்ருேர்க்குத் தத்துவங் கூடலாற்
சுத்தி யகன்ருேர் சுகானந்த போதரே. 2862

துரிய அதீதஞ் சொல்லறும் பாழாம்
அரிய துரியம் அதீதம் புரியில்
விரியுங் குவியும் விள்ளா மிளிர்ந்தென்
உருவந் திரியும் உரைப்பதெவ் வாறே. 2863

முத்திபேதம், கரும நிருவாணம்

ஓதிய முத்தி யடைவே உயிர்பர
பேதமி லச்சிவம் எய்துந் துரியமோ(டு)
ஆதி சொரூபம் சொரூபத்த தாகவே
ஏதமி லாநிரு வாணம் பிறந்ததே. 2864

பற்றற் றவர்பற்றி நின்ற பரம்பொருள்
கற்றற் றவர்கற்றுக் கருதிய கண்ணுதல்
சுற்றற் றவர்சுற்றி நின்றஎன் சோதியைப்
பெற்றுற் றவர்கள் பிதற்றொழிந் தாரே. 2865

சூனிய சம்பாஷணை

காயம் பலகை கவறைந்து கண்மூன்று
ஆயம் பொருவதோர் ஐம்பத்தோ ரக்கரம்
ஏய பெருமா னிருந்து பொருகின்ற
மாயக் கவற்றின் மறைப்பறி யேனே. 2866

தூறு படர்ந்து கிடந்தது தூநெறி
மாறிக் கிடக்கும் வகையறி வாரில்லை
மாறிக் கிடக்கும் வகையறி வாளர்க்கு
ஊறிக் கிடந்ததென் உள்ளன்பு தானே. 2867

ஆறு தெருவில் அகப்பட்ட சந்தியில்
சாறு படுவன நான்கு பனையுள
ஏறற் கரியதோர் ஏணியிட் டப்பனை
ஏறலுற் றேன்கடல் ஏழுங்கண் டேனே. 2868

வழுதலை வித்திடப் பாகல் முளைத்தது
புழுதியைத் தோண்டினேன் பூசனி பூத்தது
தொழுதுகொண் டோடினர் தோட்டக் குடிகள்
முழுதும் பழுத்தது வாழைக் கனியே. 2869

ஐயென்னும் வித்தினில் ஆனை விளைப்பதோர்
செய்யுண்டு செய்யின் தெளிவறி வாரில்லை
மையணி கண்டன் மனம்பெறின் அந்நிலம்
பொய்யொன்று மின்றிப் புகளளி தாமே. 2870

பள்ளச்செய் யொன்றுண்டு பாடச்லெசய் இரண்டுள்
கள்ளச்செய் யங்கே கலந்து கிடந்தது
உள்ளச்செய் யங்கே யுழவுசெய் வார்கட்கு
வெள்ளச்செய் யாகி விளைந்தது தானே. 2871

மூவணை யேறு முழுவது முக்காணி
தாமணி கோலத் தறியுறப் பாய்ந்திடும்
நாவணை கோலி நடுவிற் செறுவுழார்
காலணை கோலிக் களருழு வாரே. 2872

ஏற்றம் இரண்டுள ஏழு துரவுள
மூத்தான் இறைக்க இளையான் படுத்தநீர்
பாத்தியிற் பாயாது பாழ்ப்பாய்ந்து போயிடில்
கூத்தி வளர்த்ததோர் கோழிப்புள் ளாமே. 2873

பட்டிப் பசுக்கள் இருபத்து நாலுள
குட்டிப் பசுக்களோ ரேழுள ஐந்துள
குட்டிப் பசுக்கள் குடப்பால் சொரியினும்
பட்டிப் பசுவே பனவற்கு வாய்த்ததே 2874

ஈற்றுப் பசுக்கள் இருபத்து நாலுள
ஊற்றுப் பசுக்கள் ஒருகுடம் பால்போதும்
காற்றுப் பசுக்கள் கறந்துண்ணுங் காலத்து
மாற்றுப் பசுக்கள் வரவறி யோமே. 2875

தட்டான் அகத்தில் தலையான மச்சின்மேல்
மொட்டா யெழுந்தது செம்பால் மலர்ந்தது
வட்டம் படவேண்டி வாய்மை மடித்திட்டுத்
தட்டான் அதனைத் தகைந்துகொண் டானே. 2876

அரிக்கின்ற நாற்றங்கால் அல்லற் கழனி
திரிக்கின்ற வொட்டஞ் சிக்கெனக் கட்டி
வரிக்கின்ற நல்லான் கறவையைப் பூட்டில்
விரிக்கின்ற வெள்ளரி வித்துவித் தாமே. 2877

இடாக்கெண்டு தூவி எருவிட்டு வித்திக்
கிடாக்கொண்டு பூட்டிக் கிளறி முளையை
மிடாக்கொண்டு சோறட்டு மெள்ள விழுங்கார்
கிடாக்கொண்டு செந்நெல அறுக்கின்ற வாறே. 2878

விளைந்து கிடந்தது மேலைக்கு வித்தது
விளைந்து கிடந்தது மேலைக்குக் காதம்
விளைந்து விளைந்து விளைந்துகொள் வார்க்கு
விளைந்து கிடந்தது மேவுமுக் காதமே. 2879

களருழு வார்கள் கருத்தை யறியோம்
களருழு வார்கள் கருதலு மில்லை
களருழு வார்கள் களரின் முளைத்த
வளரிள வஞ்சியின் மாய்தலு மாமே. 2880

கூப்பிடு கொள்ளாக் குறுநரிக் கொட்டகத்(து)
ஆப்பிடு பாசத்தை யங்கியுள் வைத்திட்டு
நாட்பட நின்று நலம்புகுந் தாயிழை
ஏற்பட இல்லந் தினிதிருந் தானே. 2881

மலைமேல் மழைபெய்ய மான்கன்று துள்ளக்
குலைமேல் இருந்த கொழுங்கனி வீழ
உலைமேல் இருந்த உறுப்பெனக் கொல்லன்
முலைமேல் அமிர்தம் பொழியவைத் தானே. 2882

பார்ப்பான் அகத்திலே பாற்பசு ஐந்துண்டு
மேய்ப்பாரும் இன்றி வெறித்துத் திரிவன
மேய்ப்பாரும் உண்டாய் வெறியும் அடங்கினல்
பார்ப்பான் பசுஐந்தும் பாலாச் சொரியுமே. 2883

ஆமாக்கள் ஐந்தும் அரியேறு முப்பதும்
தேமா இரண்டொடு திப்பிலி யொன்பதும்
தாமாக் குரங்கொளிற் றம்மனத் துள்ளன
மூவாக் கடாவிடின் மூட்டுகின் றாரே. 2884

எழுதாத புத்தகத் தேட்டின் பொருளைத்
தெருளாத கன்னி தெளிந்திருந் தோத
மலராத பூவின் மணத்தின் மதுவைப்
பிறவாத வண்டு மணமுண்ட வாறே. 2885

போகின்ற பொய்யும் புகுகின்ற பொய்வித்தும்
கூகின்ற நாவலின் கூழைத் தருங்கனி
ஆகின்ற பைங்கூழ் அவையுண்ணும் ஐவரும்
வேகின்ற கூறை விருத்திபெற் றாரே. 2886

மூங்கில் முளையில் எழுந்ததோர் வேம்புண்டு
வேம்பினிற் சார்ந்து கிடந்த பனையிலோர்
பாம்புண்டு பாம்பைத் துரத்தித்தின் பாரின்றி
வேம்பு கிடந்து வெடிக்கின்ற வறே. 2887

பத்துப் பரும்புலி யானை பதினைந்து
வித்தகர் ஐவர் விநோதகர் ஈரெண்மர்
அத்தகு மூவர் அறுவர் மருத்துவர்
அத்தலை ஐவர் அமர்ந்துநின் றாரே. 2888

இரண்டு கடாவுண்டு இவ்வூரி னுள்ளே
இரண்டு கடாவுக்கும் ஒன்றே தொழும்பன்
இரண்டு கடாவும் இருத்திப் பிடிக்கின்
இரண்டு கடாவும் ஒருகடா வாமே. 2889

ஒத்த மனக்கொல்லை யுள்ளே சமன்கட்டிப்
பத்தி வலையிற் பருத்தி நிறுத்தலால்
முத்தக் கயிருக மூவர்கள் ஊரினுள்
நித்தம் பொருது நிரம்பநின் றாரே. 2890

கூகையும் பாம்பும் கிளியொடு பூனையும்
நாகையும் பூழும் நடுவில் உறைவன்
நாகையைக் கூகை நணுக லுறுதலுங்
கூகையைக் கண்டெலி கூப்பிடு மாறே. 2891

குலேக்கின்ற நன்னகை யாங்கொங் குழக்கின்
நிலேக்கின்ற வெள்ளெவி மூன்று கொணர்ந்தான்
உலேக்குப் புறமெனில் ஓடு மிருக்கும்
புலேக்குப் பிறந்தவை போகின்ற வாறே. 2892

காடுபுக் காரினிக் காணூர் கடுவெளி
கூடுபுக் கானது ஐந்து குதிரையும்
ஓடுபுக் கானது ஆறுள ஒட்டகம்
மூடு புகாவிடின் மூவணே யாமே. 2893

கூறையுஞ் சோறும் குழாயகத் தெண்ணெயும்
காறையும் நாணும் வளேயலுங் கண்டவர்
பாறையி லுற்ற பறக்கின்ற சீலேபோல்
ஆறைக் குழியில் அழுந்துகின் றூரே. 2894

துருத்தியுள் ளக்கரை தோன்று மலேமேல்
விருத்திகண் காணிக்கப் போவார்முப் போதும்
வருத்தியுள் நின்ற மலேயைத் தவிர்ப்பாள்
ஒருத்தியுள் ளாளவர் ஊரறி யோமே, 2895

பருந்துங் கிளியும் படுபறை கொட்டத்
திருந்திய மாதர் திருமணப் பட்டார்
பெருந்தவப் பூதம் பெறலுரு வாகும்
இருந்திய பேற்றினில் இன்புறு வாரே. 2896

கூடும் பறவை இரைகொத்தி மற்றதன்
ஊடுபுக் குண்டி யறுக்குறில் என்னைக்கும்
சூடெறி நெய்யுண்டு மைகான் றிடுகின்ற
பாடறி வார்க்குப் பயனெளி தாமே. 2897

இலேயில்லே பூவுண் டினவண்டிங் கில்லே
தலேயில்லே வேருண்டு தாளில்லே பூவின்
குலேயில்லே கொய்யும் மலருண்டு சூடும்
தலேயில்லே தாழ்ந்த கிளேபுல ராதே. 2898

அக்கரை நின்றதோர் ஆல மரங்கண்டு
நக்கரை வாழ்த்தி நடுவே பயன்கொள்வர்
மிக்கவ ரஞ்சு துயரமுங் கண்டுபோய்த்
தக்கவர் தாழ்ந்து கிடக்கின்ற வாறே. 2899

கூப்பிடு மாற்றிலே வன்கா டிருங்காதம்
காப்பிடு கள்ளர் கலந்துநின் ருருளர்
காப்பிடு கள்ளரை வெள்ளர் தொடர்ந்திட்டுக்
கூப்பிடு மீண்டதோர் கூரைகொண் டாரே. 2900

கொட்டியும் ஆம்பலும் பூத்த குளத்திடை
எட்டியும் வேம்பும் இனியதோர் வாழையும்
கட்டியுந் தேனுங் கலந்துண்ண மாட்டதார்
எட்டிப் பழத்துக் கிளைக்கின்ற வாறே. 2901

பெடைவண்டும் ஆண்வண்டும் பீடிகை வண்ணக்
குடைகொண்ட பாசத்துக் கோலமு ண்டானுங்
கடைவண்டு தானுண்ணுங் கண்கலந் திட்ட
பெடைவண்டு தான்பெற்ற தின்பமு மாமே: 2902

கொல்லையில் மேயும் பசுக்களைக் செய்தவன்
எல்லை கடப்பித் திறையடிக் கூட்டியே
வல்லசெய் தாற்றன் மதித்தபி னல்லது
கொல்லைசெய் நெஞ்சங் குறியறி யாதே. 2903

தட்டத்து நீரிலே தாமரை பூத்தது
குட்டத்து நீரிற் குவளை எழுந்தது
விட்டத்தி னுள்ளே விளங்கவல் லார்கட்குக்
குட்டத்தி லிட்டதோர் கொம்மட்டி யாமே. 2904

ஆறு பறவைகள் ஐந்தகத் துள்ளன
நூறு பறவை நுனிக்கொம்பின் மேலன
ஏறும் பெரும்பதி ஏழுங் கடந்தபின்
மாறுத லின்ற மனைபுக லாமே. 2905

கொட்டனஞ் செய்து குளிக்கின்ற கூவலுள்
வட்டனப் பூமி மருவிவந் தூறிடுங்
கட்டனஞ் செய்து கயிற்றுல் தொழுமியுள்
ஒட்டனஞ் செய்தொளி யாவர்க்கு மாமே. 2906

ஏழு வளைகடல் எட்டுக் குலவரை
ஆழும் விசும்பினில் அங்கி மழைவளி
தாழும் மிருநிலந் தன்மை யதுகண்டு
வாழ நினைக்கில தாலய மாமே. 2907

ஆலிங் கனஞ்செய் தகஞ்சுடர் சூலத்துச்
சாலிங் கமைத்துத் தலைமை தவிர்த்தனர்
கோலிங் கமைத்தபின் கூபப் பறவைகள்
மாலிங்கன் வைத்தது முன்பின் வழியே. 2908

கொட்டுக்குந் தாலி இரண்டே இரண்டுக்குங்
கொட்டுக்குந் தாலிக்கும் பாரை வலிதென்பர்
கொட்டுக்குந் தாலிக்கும் பாரைக்கும் மூன்றுக்கும்
இட்டம் வலிதென்பர் ஈசன் அருளே. 2909

கயலொன்று கண்டவர் கண்டே இருப்பர்
முயலொன்று கண்டவர் மூவரும் உய்வர்
பறையொன்று பூசல் பிடிப்பா னொருவன்
மறையொன்று கண்ட துருவம்பொன் னுமே. 2910

கோரை எழுந்து கிடந்த குளத்தினில்
ஆரை படர்ந்து தொடர்ந்து கிடந்தது
நாரை படுகின்றுற் போலல்ல நாதனுர்
பாரை கிடக்கப் படிகின்ற வாறே. 2911

கொல்லைமுக் காதமுங் காடரைக் காதமும்
எல்லை மயங்கிக் கிடந்த இருநெறி
எல்லை மயங்கா தியங்கவல் லார்கட்கு
ஒல்லை கடந்துசென் றூர்புக லாமே. 2912

உழவொன்று வித்து ஒருங்கின காலத்(து)
எழுமழை பெய்யா திருநிலச் செவ்வி
தழுவி வினைசென்று தான்பய வாது
வழுவாது போவன் வளர்சடை யோனே. 2913

பதுங்கிலும் பாய்புலி பன்னிரு காதம்
ஒதுங்கிய தண்கடல் ஓதம் உலவ
மதுங்கிய வார்களி யாரமு தூறப்
பொதுங்கிய ஐவரைப் போய்வளைத் தானே. 2914

தோணியொன் றேறித் தொடர்ந்து கடல்புக்கு
வாணிபஞ் செய்து வழங்கி வளர்மகன்
நீலிக் கிறையுமே நெஞ்சின் நிலைதளர்ந்(து)
ஆலிப் பழம்போல் அளிக்கின்ற அப்பே. 2915

முக்காத ஆற்றிலே மூன்றுள வாழைகள்
செக்குப் பழுத்த திரிமலங் காய்த்தன
பக்கனர் மிக்கார் படங்கினர் கன்னியர்
நக்கு மலருண்டு நடுவுநின் றூரே. 2916

அடியும் முடியும் அமைந்ததோர் ஆத்தி
முடியும் நுனியின்கண் முத்தலை மூங்கில்
கொடியும் படையுங் கோட்சரன் ஐயைந்தும்
மடியும் வலம்புரி வாய்த்ததவ் வாறே. 2917

பன்றியும் பாம்பும் பசுமுசு வானரந்
தென்றிக் கிடந்த சிறுநரிக் கூட்டத்துக்
குன்றுமை கூடித் தராசின் நிறுத்தபின்
குன்றி நிறையைக் குறைக்கின்ற வாறே. 2918

மொட்டித் தெழுந்ததோர் மொட்டுண்டு மொட்டினைக்
கட்டுவிட் டோடின் மலர்தலுங் காணலாம்
பற்றுவிட் டம்மனை பாழ்பட நோக்கிஞற்
கட்டுவிட் டார்க்கன்றிக் காணவொண் ணுதே. 2919

நீரின்றிப் பாயும் நிலத்தினிற் பச்சையாம்
யாவரும் என்றும் அறியவல் லாரில்லை
கூரு மழைபொழி யாது பொழிபுனல்
தேரினிந் நீர்மை திடரினில் லாதே. 2920

கூகை குருந்தம தேறிக் குணம்பயில்
மோகம் உலகுக் குணர்கின்ற காலத்து
நாகமும் ஒன்று நடுவுரை செய்திடும்
பாகனு மாகின்ற பண்பனு மாமே. 2921

வாழையுஞ் சூரையும் வந்திடங் கொண்டன
வாழைக்குச் சூரை வலிது வலிதென்பர்
வாழையுஞ் சூரையும் வன்துண்டஞ் செய்திட்டு
வாழை யிடங்கொண்டு வாழ்கின்ற வாறே. 2922

நிலத்தைப் பிளந்து நெடுங்கடல் ஓட்டிப்
புனத்துக் குறவன் புணர்ந்த கொழுமீன்
விலக்குமின் யாவர்க்கும் வேண்டிற் குறையா
தருத்தமு மின்றி யடுவது மாமே. 2923

தளிர்க்கும் ஒருபிள்ளை தட்டா னகத்தில்
விளிப்பதோர் சங்குண்டு வேந்தனை நாடிக்
களிக்குங் குசவர்க்குங் காவிதி யார்க்கும்
அளிக்கும் பதத்தொன் ஞய்ந்துகொள் வார்க்கே 2924

குடைவிட்டுப் போந்தது கோயில் எருமை
படைகண்டு மீண்டது பாதி வழியில்
உடையவன் மந்திரி யுள்ளலும் ஊரார்
அடையார் நெடுங்கடை ஐந்தொடு நான்கே. 2925

போகின்ற எட்டும் புகுகின்ற பத்தெட்டும்
ஆகிப் படைத்தன ஒன்பது வாய்தலும்
நாகமும் எட்டொடு நாலு புரவியும்
பாகன் விடாவிடிற் பன்றியு மாமே. 2926

பாசி படர்ந்து கிடந்த குளத்திடைக்
கூசி யிருக்குங் குருகிரை தேர்ந்துண்ணுந்
தூசி மறவன் துணைவழி எய்திடப்
பாசங் கிடந்து பதைக்கின்ற வாறே. 2927

கும்ப மலைமேல் எழுந்ததோர் கொம்புண்டு
கொம்புக்கும் அப்பால் அடிப்பதோர் காற்றுண்டு
வம்பாய் மலர்ந்ததோர் பூவுண்டப் பூவுக்குள்
வண்டாய்க் கிடந்து மணங்கொள்வன் ஈசனே. 2928

வீணையுந் தண்டும் விரவி யிசைமுரல்
தாணுவும் மேவித் தகுதலைப் பெய்தது
வாணிபஞ் சிக்கென் றதுவடை யாமுன்னங்
காணியும் அங்கே கலக்கின்ற வாறே. 2929

கொங்குபுக் காரொடு வாணிபஞ் செய்தது
அங்குபுக் காலன்றி ஆய்ந்தறி வாரில்லை
திங்கள்புக் கால்இரு ளாவ தறிந்திலர்
தங்குபுக் கார்சிலர் தாபதர் தாமே. 2930

போதும் புலர்ந்தது பொன்னிறங் கொண்டது
தாதவிழ் புன்னை தயங்கு மிருகரை
ஏதில் ஈசன் இயங்கு நெறியிது
மாத ரிருந்ததோர் மண்டலந் தானே. 2931

கோமுற் றமருங் குடிகளுந் தம்மிலே
காமுற்ற கத்தி இடுவர் கடைதொறும்
மீவற்ற வெல்லை விடாது வழிகாட்டி
ஆமுற்ற தட்டினல் ஐந்துண்ண லாமே. 2932

தோட்டத்தில் மாம்பழந் தோண்டி விழுந்தக்கால்
நாட்டின் புறத்தில் நரியழைத் தென்செயும்
மூட்டிக் கொடுத்து முதல்வனை முன்னிட்டுக்
காட்டிக் கொடுத்தவர் கைவிட்ட வாறே. 293

புலர்ந்தது போதென்று புட்கள் சிலம்பப்
புலர்ந்தது போதென்று பூங்கொடி புல்லிப்
புலம்பி னவளோடும் போகம் நுகரும்
புலம்பனுக் கென்றும் புலர்ந்திலை போதே. 2934

தோணியோன் றுண்டு துறையில் விடுவது
வாணி மிதித்துநின் றைவர்கோ லூன்றலும்
வாணிபஞ் செய்வார் வழியிடை யாற்றிடை
ஆணி கலங்கில் அதுவது வாமே. 2935

மோன சமாதி

நின்றார் இருந்தார் கிடந்தார் எனவில்லை
சென்றார் தருஞ்சித்த மோன சமாதியாம்
மன்றேயு மங்கே மறைப்பொரு ளொன்றுண்டு
சென்றாங் கணைந்தவர் சேர்கின்ற வாறே. 2936

காட்டுங் குறியுங் கடந்தவர் காரணம்
ஏட்டின் புறத்தில் எழுதிவைத் தென்பயன்
கூட்டுங் குருநந்தி கூட்டிடி னல்லது
ஆட்டின் கழுத்தில் அதர்கிடந் தற்றே. 2937

உணர்வுடை யார்கட் குலகமுந் தோன்றும்
உணர்வுடை யார்கட் குறுதுய ரில்லை
உணர்வுடை யார்கள் உணர்ந்தஅக் காலம்
உணர்வுடை யார்கள் உணர்ந்துகண் டாரே. 2938

மறப்பது வாய்நின்ற மாயநன் னுடன்
பிறப்பினை நீங்கிய பேரரு ளாளன்
சிறப்புடை யான்திரு மங்கையுந் தானும்
உறக்கமில் போகத் துறங்கிடுந் தானே. 2939

துரியங்கள் மூன்றும் கடந்தொளிர் சோதி
அரிய துரிய மதில்மீது மூன்ருய்
விரிவு குவிவு விழுங்கி உமிழ்ந்தே
உரையில் அநுபூ திகத்தினுள் ளானே. 2940

உருவிலி ஊனிலி ஊனமொன் றில்லி
திருவிலி தீதிலி தேவர்க்குந் தேவன்
பொருவிலி பூதப் படையுடை யாளி
மருவிலி வந்தென் மனம்புகுந் தானே. 2941

கண்டறி யாரிந்தக் காயத்தில் நந்தியை
எண்டிசை யோரும் இறைவனென் றேத்துவர்
அண்டங் கடந்த அளவிலா ஆனந்தத்
தொண்டர் முகந்த துறையறி யோமே. 2942

தற்பரம் அல்ல சதாசிவன் தானல்லன்
நிட்கள மல்ல சகள நிலையல்ல
அற்புத மாகி யநுபோகக் காமம்போல்
கற்பனை யின்றிக் கலந்துநின் ருனே. 2943

முகத்திற் கண்கொண்டு காண்கின்ற மூடர்காள்
அகத்திற் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்
மகட்குத் தாய்தன் மணாளனே டாடிய
சுகத்தைச் சொல்லென்ருற் சொல்லுமா றெங்ஙனே 2944

அப்பினில் உப்பென அத்தன் அணைந்திட்டுச்
செப்பு பராபரஞ் சேர்பர மும்விட்டுக்
கப்புறு சொற்பத மாளக் கலந்தமை
எப்படி யப்படி என்னுமவ் வாறே. 2945

கண்டார்க் கழகிதாங் காஞ்சிரத் தின்பழம்
தின்ருர்க் கறியலாம் அப்பழத் தின்சுவை
பெண்டா னிரம்பி மடவிய ளானற்
கொண்டான் அறிவன் குணம்பல தானே. 2946

நந்தி இருந்தான் நடுவுத் தெருவிலே
சந்தி சமாதிகள் தாமே யொழிந்தன
உந்தியி னுள்ளே யுதித்தெழுஞ் சோதியைப்
புந்தியி ஞலே புணர்ந்துகொண் டேனே. 2947

விதறு படாவண்ணம் வேறிருந் தாய்ந்து
பதறு படாதே பழமறை பார்த்துக்
கதறிய பாழைக் கடந்தந்தக் கற்பனை
உதறிய பாழில் ஒடுங்குகின் றேனே. 2648

வாடா மலர்புனை சேவடி வானவர்
கூடார் அரனெறி நாடொறு மின்புறச்
சேடார் கமலச் செழுஞ்சுட ருட்சென்று
நாடார் அமுதுற நாடார் அமுதமே. 2949

அதுக்கென் றிருவர் அமர்ந்தசொற் கேட்டும்
பொதுக்கெனக் காமம் புலப்படு மாபோல்
சதுக்கென்று வேறே சமைந்தாரைக் காண
மதுக்கொன்றைத் தாரான் வளந்தரு மன்றே. 2950

தானும் அழிந்து தனமும் அழிந்துநீடு
ஊனும் அழிந்து உயிரும் அழிந்துடன்
வானும் அழிந்து மனமும் அழிந்துபின்
நானும் அழிந்தமை நானறி யேனே. 2951

இருளும் வெளியும் இரண்டையு மாற்றிப்
பொருளிற் பொருளாய்ப் பொருந்த வுள்ளாகி
அருளால் அழிந்திடும் அத்தன் அடிக்கே
உருளாத கன்மன முற்றுநின் ருனே. 2952

ஒன்றிநின் றுள்ளே யுணர்ந்தேன் பராபரம்
ஒன்றிநின் றுள்ளே யுணர்ந்தேன் சிவகதி
ஒன்றிநின் றுள்ளே யுணர்ந்தேன் உணர்வினை
ஒன்றிநின் றேபல வூழிகண் டேனே. 2953

வரைவுரை மாட்சி

தான்வரை வற்றபின் ஆரை வரைவது
தான்அவன் ஆனபின் ஆரை நினைவது
காமனை வென்றகண் ஆரை உகப்பது
தூமொழி வாசகஞ் சொல்லுமின் நீரே. 2954

உரையற்ற தொன்றை உரைசெய்யும் ஊமர்காள்
கரையற்ற தொன்றைக் கரைகாண லாகுமோ
திரையற்ற நீர்போல் சிந்தை தெளிவார்க்குப்
புரையற் றிருந்தான் புரிசடை யோனே. 2955

மனமாயை மாயைஇம் மாயை மயக்க
மனமாயை தான்மாயு மற்றென்றும் இல்லை
பிணமாய்வ தில்லை பிதற்றவும் வேண்டா
தனையாய்ந் திருப்பது தத்துவந் தானே 2956

அணைந்தோர்தன்மை

மலமில்லை மாசில்லை மானபி மானங்
குலமில்லை கொள்ளுங் குணங்களும் இல்லை
நலமில்லை நந்தி ஞானத்தி னாலே
பலமன்னி அன்பிற் பதித்துவைப் போர்க்கே. 2957

ஒழிந்தேன் பிறவி உறவென்னும் பாசங்
கழிந்தேன் கடவுளும் நானும்ஒன் றானேன்
அழிந்தாங் கினிவரு மார்க்கமும் வேண்டேன்
செழுஞ்சார் புடைய சிவனைக்கண் டேனே. 2958

ஆலைக் கரும்பும் அமுதும் அக்காரமுஞ்
சோலைத் தண்ணீரும் உடைத்தெங்கள் நாட்டிடைப்
பீலிக்கண் ணன்ன வடிவுசெய் வாளொரு
கோலப்பெண் ணுட்குக் குறைவொன்றும் இல்லையே.

ஆராலும் என்னை அமட்டவொண் ணாதினிச்
சீரார் பிரான்வந்தென் சிந்தை புகுந்தனன்
சீரடி யங்கே திரிவதல் லால்இனி
யார்பாடுஞ் சாரா அறிவறிந் தேனே. 2960

பிரிந்தேன் பிரமன் பிணித்ததோர் பாசம்
தெரிந்தேன் சிவகதி செல்லு நிலையை
அரிந்தேன் வினையை அயில்மன வாளால்
முரிந்தேன் புரத்தினை முந்துகின் றேனே. 2961

ஒன்றுகண் டீர்உல குக்கொரு தெய்வமும்
ஒன்றுகண் டீர்உல குக்குயி ராவதும்
நன்றுகண் டீர்இனி நமச்சிவா யப்பழம்
தின்றுகண் டேற்கிது தித்தித்த வாறே. 2962

சந்திரன் பாம்பொடுஞ் சூடும் சடாதரன்
வந்தென்னை யாண்ட மணிவிளக் கானவன்
அந்தமும் ஆதியும் இல்லா அரும்பொருள்
சிந்தையின் மேவித் தியக்கறுத் தானே. 2963

பண்டெங்கள் ஈசன் நெடுமால் பிரமனைக்
கண்டங் கிருக்குங் கருத்தறி வாரில்லை
விண்டங்கே தோன்றி வெறுமன மாயிடில்
துண்டங் கிருந்ததோர் தூறது வாமே. 2964

அன்னையும் அத்தனும் அன்புற்ற தல்லது
அன்னையும் அத்தனும் ஆரறி வாரென்னை
அன்னையும் அத்தனும் யானும் உடனிருந்து
அன்னையும் அத்தனை யான்புரந் தேனே. 2965

கொண்ட சுழியுங் குலவரை யுச்சியும்
அண்டரும் அண்டத் தலைவரும் ஆதியும்
எண்டிசை யோரும்வந் தென்கைத் தலத்துளே
உண்டனர் நானினி உய்ந்தொழிந் தேனே. 2966

தானே திசையொடு தேவரு மாய்நிற்கும்
தானே வடவரை யாதியு மாய்நிற்கும்
தானே யுடலுயிர் தத்துவ மாய்நிற்குந்
தானே யுலகில் தலைவனும் ஆமே. 2967

நமன்வரின் ஞானவாள் கொண்டே எறிவன்
சிவன்வரின் நானுடன் போவது திண்ணம்
பவம்வரும் வல்வினை பண்டே அறுத்தேன்
தவம்வருஞ் சிந்தைக்குத் தான்எதிர் ஆமே. 2968

சித்தஞ் சிவமாய் மலமூன்றுஞ் செற்றவர்
சுத்தச் சிவமாவர் தோயார் மலபந்தங்
கத்துஞ் சிலுகுங் கலகமுங் கைகாணார்
சத்தம் பரவிந்து தானுமென் றெண்ணியே. 2969

நினைப்பும் மறப்பும் இலாதவர் நெஞ்சம்
வினைப்பற் றறுக்கும் விமலன் இருக்கும்
வினைப்பற் றறுக்கும் விமலனைத் தேடி
நினைக்கப் பெறிலவன் நீளியன் ஆமே. 2970

சிவபெரு மானென்று நானழைத் தேத்தத்
தவபெரு மானென்று தான்வந்து நின்றான்
அவபெரு மானென்னை யாளுடை நாதன்
பவபெரு மானைப் பணிந்துநின் றேனே. 2971

பணிந்துநின் றேன்பர மாதி பதியைத்
துணிந்துநின் றேன்இனி மற்றொன்றும் வேண்டேன்
அணிந்துநின் றேனுடல் ஆதிப் பிரானைத்
தணிந்துநின் றேன்சிவன் தன்மைகண் டேனே. 2972

என்னெஞ்சம் ஈசன் இணையடி தாஞ்சேர்ந்து
முன்னஞ்செய் தேத்த முழுதும் பிறப்பறும்
தன்னெஞ்சம் இல்லாத் தலைவன் தலைவிதி
பின்னஞ்செய் தென்னைப் பிணக்கறுத் தானே. 2973

பிணக்கறுத் தான்பிணி மூப்பறுத் தெண்ணும்
கணக்கறுத் தாண்டனன் காணந்தி என்னைப்
பிணக்கறுத் தென்னுடன் முன்வந்த துன்பம்
வணக்கலுற் றேன்சிவம் வந்தது தானே. 2974

சிவன்வந்து தேவர் குழாமுடன் கூடப்
பவம்வந் திடநின்ற பாசம் அறுத்திட்
டவனெந்தை யாண்டருள் ஆதிப் பெருமான்
அவன்வந்தென் னுள்ளே அகப்பட்ட வாறே. 2975

கரும்புந் தேனுங் கலந்ததோர் காயத்தில்
அரும்புங் கந்தமு மாகிய ஆனந்தம்
விரும்பியே உள்ளம் வெளியுறக் கண்டபின்
கரும்புங் கைத்தது தேனும் புளித்ததே. 2976

உள்ள சரியாதி ஒட்டியே மீட்டென்பால்
வள்ளல் அருத்தியே வைத்த வளம்பாடிச்
செய்வன எல்லாஞ் சிவமாகக் காண்டலான்
கைவள மின்றிக் கருக்கடந் தேனே. 2977

மீண்டார் கமலத்துள் அங்கி மிகச்சென்று
தூண்டா விளக்கின் றகளிநெய் சோர்தலும்
பூண்டாள் ஒருத்தி புவனசூ டாமணி
மாண்டா ஞெருவன்கை வந்தது தானே. 2978

ஆறே யருவி யகங்குளம் ஒன்றுண்டு
நூறே சிவகதி நுண்ணிது வண்ணமுங்
கூறே குவிமுலைக் கொம்பனை யாளொடும்
வேறே யிருக்கும் விழுப்பொருள் தானே. 2979

அன்புள் உருகி அழுவன் அரற்றுவன்
என்பும் உருக இராப்பகல் ஏத்துவன்
என்பொன் மணியை இறைவனை யீசனைத்
தின்பன் கடிப்பன் திருத்துவன் தானே. 2980

மனம்வி ரிந்து குவிந்தது மாதவம்
மனம்வி ரிந்து குவிந்தது வாயுவும்
மனம்வி ரிந்து குவிந்தது மன்னுயிர்
மனம்வி ரிந்துரை மாண்டது முத்தியே. 2981

தோத்திரம்

மாயனை நாடி மனநெடுந் தேரேறிப்
போயின நாடறி யாதே புலம்புவர்
தேயமும் நாடுந் திரிந்தெங்கள் செல்வனைக்
காயமின் னுட்டிடைக் கண்டுகொண் டேனே. 2982

மன்னு மலைபோல் மதவா ரணத்தின்மேல்
இன்னிசை பாட இருந்தவ ராரெனில்
முன்னியல் கால முதல்வனார் நாமத்தைப்
பன்னினர் என்றே பாடறி வீரே. 2983

முத்தினின் முத்தை முகிழிள ஞாயிற்றை
எத்தனை வானோரும் ஏத்தும் இறைவனை
அத்தனைக் காணு தரற்றுகின் றேனையோர்
பித்தன் இவனென்று பேசுகின் றாரே. 2984

புகுந்துநின் றானெங்கள் புண்ணிய மூர்த்தி
புகுந்துநின் றானெங்கள் போதறி வாளன்
புகுந்துநின் றானடி யார்தங்கள் நெஞ்சம்
புகுந்துநின் றானையே போற்றுகின் றேனே. 2985

பூதக்கண் ணாடியிற் புகுந்திலன் போதுளன்
வேதக்கண் ணாடியில் வேறே வெளிப்படும்
நீதிக்கண் ணாடி நினைவார் மனத்துளன்
கீதக்கண் ணாடியிற் கேட்டுநின் றேனே. 2986

நாமமோ ராயிரம் ஓதுமின் நாதனை
ஏமமோ ராயிரத் துள்ளே இசைவீர்கள்
ஓமமோ ராயிரம் ஓதவல் லாரவர்
காமமோ ராயிரங் கண்டொழிந் தாரே 2987

போற்றுகின்றேன்புகழ்ந் தும்புகழ் ஞானத்தைத்
தேற்றுகின் றேன்சிந்தை நாயகன் சேவடி
சாற்றுகின் றேன் அறை யோசிவ யோகத்தைப்
போற்றுகின் றேன்எம் பிரானென்று நானே. 2988

நாணு விதஞ்செய்து நாடுமின் நந்தியை
ஊணுர் கமலத்தி னூடுசென் றப்புறம்
வானோர் உலகம் வழிப்பட மீண்டபின்
தேனுர வுண்டு தெவிட்டலு மாமே. 2989

வந்துநின் றானடி யார்கட் கரும்பொருள்
இந்திர னாதி இமையவர் வேண்டினுஞ்
சுந்தர மாதர் துழனியொன் றல்லது
அந்தர வானத்தின் அப்புற மாமே. 2990

மண்ணிற் கலங்கிய நீர்போல் மனிதர்கள்
எண்ணிற் கலங்கி இறைவன் இவனென்னார்
உண்ணிற் குளத்தின் முகந்தொரு பால்வைத்துத்
தெண்ணிற் படுத்த சிவனவ னாமே. 2991

மெய்த்தவத் தானை விரும்பும் ஒருவர்க்குக்
கைத்தலஞ் சேர்தரு நெல்லிக் கனியொக்குஞ்
சுத்தனைத் தூய்நெறி யாய்நின்ற தேவர்கள்
அத்தனை நாடி அமைந்தொழிந் தேனே. 2992

அமைந்தொழிந் தேன்அள வில்புகழ் ஞானம்
சமைந்தொழிந் தேன்தடு மாற்றமொன் றில்லை
புகைந்தெழும் பூதலம் புண்ணிய னண்ணி
வகைந்து கொடுக்கின்ற வள்ளலு மாமே. 2993

வள்ளற் றலைவனை வானநன் ஞடனை
வெள்ளப் புனற்சடை வேத முதல்வனைக்
கள்ளப் பெருமக்கள் காண்பர்கொ லோவென்று
உள்ளத்தி னுள்ளே யொளித்திருந் தாளுமே. 2994

ஆளும் மலர்ப்பதந் தந்த கடவுளை
நாளும் வழிபட்டு நன்மையுள் நின்றவர்
கோளும் வினையும் அறுக்குங் குரிசிலின்
வாளு மனத்தொடும் வைத்தொழிந் தேனே. 2995

விரும்பில் அவனடி வீர சுவர்க்கம்
பொருந்தில் அவனடி புண்ணிய லோகந்
திருந்தில் அவனடி தீர்த்தமு மாகும்
வருந்தி யவனடி வாழ்த்தவல் லார்க்கே. 2996

வானக மூடறுத் தானிவ் வுலகினில்
தானக மில்லாத் தனியாகும் போதகன்
கானக வாழைக் கனிநுகர்ந் துள்ளுறும்
பானகச் சோதியைப் பற்றிநின் றேனே. 2997

விதியது மேலை யமரர் உறையும்
பதியது பாய்புனற் கங்கையும் உண்டு
துதியது தொல்வினைப் பற்றறு விக்கும்
பதியது வவ்விட்ட தந்தமு மாமே. 2998

மேலது வானவர் கீழது மாதவர்
தானிடர் மானுடர் கீழது மாதனம்
கானது கூவிள மாலை கமழ்சடை
ஆனது செய்யுமெம் ஆருயிர் தானே. 2999

சூழுங் கருங்கடல் நஞ்சுண்ட கண்டனை
ஏழும் இரண்டிலும் ஈசன் பிறப்பிலி
யாழுஞ் சுனையும் அடவியும் அங்குளன்
வாழும் எழுத்தைந்து மன்னனு மாமே. 3000

உலகம் தொத்துமண் ணொத்துயர் காற்றை
அலர்கதிர் அங்கியொத் தாதிப் பிரானும்
நிலவிய மாமுகில் நீரொத்து மீண்டச்
செலவொத் தமர்திகைத் தேவர்பி ரானே. 3001

பரிசறிந் தங்குளன் அங்கி அருக்கன்
பரிசறிந் தங்குளன் மாருதத் தீசன்
பரிசறிந் தங்குளன் மாமதி ஞானப்
பரிசறிந் தன்னிலம் பாரிக்கு மாறே. 3002

அந்தங் கடந்தும் அதுவது வாய்நிற்கும்
பந்த வுலகினிற் கீழோர் பெரும்பொருள்
தந்த வுலகெங்குந் தானே பராபரன்
வந்து படைக்கின்ற மாண்பது வாமே. 3003

முத்தண்ட வீரண்ட மேமுடி யாயினும்
அத்தன் உருவம் உலகே ழெனப்படும்
அத்தனின் பாதாளம் அளவுள்ள சேவடி
மத்தர் அதனை மகிழ்ந்துண ராரே. 3004

ஆதிப் பிரானம் பிரானவ் வகலிடச்
சோதிப் பிரான்சுடர் மூன்றொளி யாய்நிற்கும்
ஆதிப் பிரான் அண்டத் தப்புறங் கீழவன்
ஆதிப் பிரானடு வாகிநின் றானே 3005

அண்டங் கடந்துயர்ந் தோங்கும் பெருமையன்
பிண்டங் கடந்த பிறவிச் சிறுமையன்
தொண்டர் நடந்த கனைகழல் காண்டொறுந்
தொண்டர்கள் தூய்நெறி தூங்கிநின் றாரே. 3006

உலவுசெய் நோக்கம் பெருங்கடல் சூழ
நிலமுழு தெல்லாம் நிறைந்தனன் ஈசன்
பலமுழு தெல்லாம் படைத்தனன் முன்னே
புலமுழு பொன்னிற மாகிநின் ருனே. 3007

பராபர ஞகிப்பல் லூழிகள் தோறும்
பராபர ஞயிவ் வகலிடந் தாங்கித்
தராபர ஞய்நின்ற தன்மை யுணரார்
நிராபர ஞகி நிறைந்துநின் ருனே. 3008

போற்றும் பெருந்தெய்வந் தானே பிறரில்லை
ஊற்றமும் ஓசையும் ஓசை யொடுக்கமும்
வேற்றுடல் தானென் றதுபெருந் தெய்வமாம்
காற்றது ஈசன் கலந்துநின் ருனே. 3009

திகையனைத் துஞ்சிவ னேயவ ஞகின்
மிகையனைத் துஞ்சொல்ல வேண்டா மனிதரே
புகையனைத் தும்புறம் அங்கியிற் கூடு
முகையனைத் தும்எங்கள் ஆதிப் பிரானே. 3010

அகன்ருன் அகலிடம் ஏழுமொன் ருகி
இவன்ரு னெனநின் றெளியனு மல்லன்
சிவன்ருன் பலபல சீவனு மாகி
நவின்ருன் உலகுறு நம்பனு மாமே. 3011

கலையொரு மூன்றுங் கடந்தப்பால் நின்ற
தலைவனை நாடுமின் தத்துவ நாதன்
விலையில்லை விண்ணவ ரோடும் உரைப்பன்
நரையில்லை யுள்ளுறு முள்ளவன் தானே. 3012

படிகால் பிரமன்செய் பாசம் அறுத்து
நெடியான் குறுமைசெய் நேசம் அறுத்துச்
செடியார் தவத்தினிற் செய்தொழில் நீக்கி
அடியேனை உய்யவைத் தன்புகொண் டானே: 3013

ஈசெனன் றெட்டுத் திசையும் இயங்கின
ஓசையி னின்றெழு சத்தம் உலப்பிலி
தேசமொன் ருங்கே செழுங்கண்டம் ஒன்பதும்
வாச மலர்போல் மருவிநின் ருனே. 3014

இல்லனும் அல்லன் உளனல்லன் எம்மிறை
கல்லது நெஞ்சம் பிளந்திடுங் காட்சியன்
தொல்லையன் தூயன் துளக்கிலன் தூய்மணி
சொல்லருஞ் சோதி தொடர்ந்துநின் ருனே. 3015

உள்ளத் தொடுங்கும் புறத்துளும் நானெனுங்
கள்ளத் தலைவன் கமழ்சடை நந்தியும்
வள்ளற் பெருமை வழக்கஞ்செய் வார்கள்தம்
அள்ளற் கடலை அறுத்துநின் ருனே. 3016

மாறெதிர் வானவர் தானவர் நாடொறுங்
கூறுதல் செய்து குரைகழல் நாடுவர்
ஊறுவர் உள்ளத் தகத்தும் புறத்துளும்
வேறுசெய் தாங்கே விளக்கொளி யாமே. 3017

விண்ணிலும் வந்த வெளியிலன் மேனியன்
கண்ணிலும் வந்த புலனல்லன் காட்சியன்
பண்ணினில் வந்த பயனல்லன் பான்மையன்
எண்ணிலா னந்தமும் எங்கள் பிரானே. 3018

உத்தமன் எங்கும் உகக்கும் பெருங்கடல்
நித்திலச் சோதியன் நீலக் கருமையன்
எத்தனை காலமும் எண்ணுவர் ஈசனைச்
சித்தர் அமரர்கள் தேர்ந்தறி யாரே 3019

நிறம்பல எவ்வண்ணம் அவ்வண்ணம் ஈசன்
அறம்பல எவ்வண்ணம் அவ்வண்ணம் இன்பம்
மறம்பல எவ்வண்ணம் அவ்வண்ணம் பாவம்
புறம்பல காணினும் போற்றகி லாரே. 3020

இங்குநின் றனங்கு நின்றனன் எங்குளன்
பொங்கிநின் றன்புவ னுபதி புண்ணியன்
கங்குல்நின் றன்கதிர் மாமதி ஞாயிறு
எங்குநின் றன்மழை போலிறை தானே. 3021

உணர்வது வாயுமே யுத்தம மாயும்
உணர்வது நுண்ணறி வெம்பெரு மானைப்
புணர்வது வாயும் புல்லிய தாயும்
உணர்வுடல் அண்டமு மாகிநின் றுனே. 3022

தன்வலி யாலுல கேழுந் தரித்தவன்
தன்வலி யாலே அணுவினுந் தானொய்யன்
தன்வலி யான்மலை எட்டினுந் தான்சாரான்
தன்வலி யாலே தடங்கட லாமே. 3023

ஏனோர் பெருமைய னாகிலும் எம்மிறை
ஊனே சிறுமையுள் உட்கலந் தங்குளன்
வானோர் அறியும் அளவல்லன் மாதேவன்
தானே யறியுந் தவத்தின் அளவே. 3024

பிண்டாலம் வித்தில் எழுந்த பெருமுளை
குண்டாலங் காய்த்துக் குதிரை பழுத்தது
உண்டனர் உண்டார் உணர்விலா மூடர்கள்
பிண்டத்துட் பட்டுப் பிணங்குகின் றார்களே. 3025

சருவவியாபி

ஏயுஞ் சிவபோகம் ஈதன்றி யோரொளி
ஆயும் அறிவையும் ஆயா உபாதியால்
ஏய பரிய புரியும் தனதெய்துஞ்
சாயுந் தனது வியாபகந் தானே. 3026

நானறிந் தப்பொருள் நாட இடமில்லை
வானறிந் தங்கே வழியுற விம்மிடும்
ஊனறிந் துள்ளே உயிர்க்கின்ற ஒண்சுடர்
தானறிந் தெங்குந் தலைப்பட லாமே. 3027

கடலிடை வாழ்கின்ற கௌவை யுலகத்(து)
உடலிடை வாழ்வுகொண் டுள்ளொளி நாடி
உடலிடை வைகின்ற உள்ளுறு தேனைக்
கடலின் மலிதிரைக் காணலு மாமே. 3028

பெருஞ்சுடர் மூன்றினும் உள்ளொளி யாகித்
தெரிந்துட லாய்நிற்குந் தேவர் பிரானும்
இருஞ்சுடர் விட்டிட் டிகலிட மெல்லாம்
பரிந்துடன் போகின்ற பல்கோரை யாமே. 3029

உறுதியி னுள்வந்த உள்வினைப் பட்டும்
சிறுதியின் வீழ்ந்தார் இரணம தாகுஞ்
இறுதியின் உள்ளொளி திப்பிய மூர்த்தி
பெறுதியின் மேலோர் பெருஞ்சுட ராமே. 3030

பற்றி னுள்ளே பரமாய பரஞ்சுடர்
முற்றினும் முற்றி முளைக்கின்ற மூன்றொளி
நெற்றியி னுள்ளே நினைவாய் நிலைதரும்
மற்றவ னாய்நின்ற மாதவன் தானே. 3031

தேவனு மாகுந் திசைதிசை பத்துளும்
ஏவனு மாம்விரி நீருல கேழையும்
ஆவனு மாமமர்ந் தெங்கு முலகினும்
நாவனு மாகி நவிற்றுகின் றானே. 3032

நோக்குங் கருடன் நொடியே மூலகையும்
காக்கு மவனித் தலைவனு மங்குள
நீக்கும் வினையென் நிமலன் பிறப்பிலி
போக்கும் வரவும் புணரவல் லானே. 3033

செழுஞ்சடை யன்செம் பொனேயொக்கும் மேனி
ஒழிந்தன வாயும் ஒருங்குடன் கூடுங்
கழிந்திலன் எங்கும் பிறப்பிலன் ஈசன்
ஒழிந்தில கேழுல கொத்துநின் ருனே. 3034

உணர்வும் அவனே உயிரும் அவனே
புணர்வும் அவனே புலனும் அவனே
இணரு மவன்றன்னை எண்ணலு மாகான்
துணரின் மலர்க்கந்தந் துன்னிநின் ருனே. 3035

புலமையின் நாற்றமில் புண்ணியன் எந்தை
நலமையின் ஞான வழக்கமும் ஆகும்
விலமையில் வைத்துள வேதியர் கூறும்
பலமையில் எங்கும் பரந்துநின் ருனே, 3036

விண்ணவ ஞயுல கேழுக்கு மேலுளன்
மண்ணவ ஞய்வலஞ் சூழ்கடல் ஏழுக்கும்
தண்ணவ ஞயது தன்மையின் நிற்பதோர்
கண்ணவ ஞகிக் கலந்துநின் ருனே. 3037

நின்றனன் மாலொடு நான்முகன் தாஞகி
நின்றனன் தான்நிலங் கீழொடு மேலென
நின்றனன் தான்நெடு மால்வரை ஏழ்கடல்
நின்றனன் தானே வளங்கனி யாயே. 3038

புவஞ பதிமிகு புண்ணியன் எந்தை
அவனே உலகில் அடர்பெரும் பாகன்
அவனே அரும்பல சீவனும் ஆகும்
அவனே இறையென மாலுற்ற வாறே. 3039

உண்ணின் ருெளிரும் உலவாப் பிராணனும்
விண்ணின் றியங்கும் விரிகதிர்ச் செல்வனும்
மண்ணின் றியங்கும் வாயுவு மாய்நிற்குங்
கண்ணின் றிலங்குங் கருத்தவன் தானே. 3040

எண்ணும் எழுத்தும் இனஞ்செயல் அவ்வழிப்
பண்ணுந் திறனும் படைத்த பரமனைக்
கண்ணிற் கவருங் கருத்தில் அதுஇது
உண்ணின் றுருக்கியோர் ஆயமு மாமே. 3041

இருக்கின்ற எண்டிசை அண்டம்பா தாளம்
உருக்கொடு தன்னடு வோங்கவிவ் வண்ணம்
கருக்கொண்டே எங்குங் கலந்திருந் தானே
திருக்கொன்றை வைத்த செஞ்சடை யானே. 3042

பலவுடன் சென்றஅப் பார்முழு தீசன்
செலவறி வாரில்லை சேயன் அணியன்
அலைவிலன் சங்கரன் ஆதிஎம் மாதி
பலவில தாய்நிற்கும் பான்மைவல் லானே. 3043

அதுவறி வானவன் ஆதிப் புராணன்
எதுவறி யாவகை நின்றவன் ஈசன்
பொதுவது வான புவனங்கள் எட்டும்
இதுவறி வான்நந்தி எங்கள் பிரானே. 3044

நீரும் நிலனும் விசும்பங்கி மாருதம்
தூரும் உடம்புறும் சோதியு மாய்உளன்
பேரும் பராபரன் பிஞ்ஞகன் எம்மிறை
ஊரும் சகலன் உலப்பிலி தானே. 3045

மூலன் உரைசெய்த மூவா யிரந்தமிழ்
மூலன் உரைசெய்த முந்நூறு மந்திரம்
மூலன் உரைசெய்த முப்ப துபதேசம்
மூலன் உரைசெய்த மூன்றும் ஒன்றுமே. 3046

வாழ்த்து

வாழ்கவே வாழ்களன் நந்தி திருவடி
வாழ்கவே வாழ்க மலமறுத் தான்பதம்
வாழ்கவே வாழ்கமெய்ஞ் ஞானத் தவன்தாள்
வாழ்கவே வாழ்க மலமிலான் பாதமே. 3047

ஒன்பதாம் தந்திரம் முற்றும்

திருமந்திரம் மூலம் முற்றிற்று

பிற நூல்களிலும் உரைகளிலும் காணப்படும் திருமந்திரச் செய்யுள்கள்

பள்ள முதுநீர் பழகிய மீனினம்
வெள்ளம் புதியவை காண விருப்புறும்
கள்ளவர் கோதையர் காமனோ டாடினும்
உள்ளம் பிரியா ஒருவனைக் காணுமே.

பாசம தாகும் பழமலம் பற்றற
நேசம தாய்நின்ற வாரூறு நீங்கிடக்
காசமி லாத குணங்கே வலசுத்த
மாசற நிற்ற லதுசுத்த சைவமே.

மனவு நனவு கனவது புந்தி
நினைவி லகந்தை சுழுனையுள் நிற்றல்
அதனை யறிசித்தந் துரியமிம் மூன்றின்
நினைவறல் பற்றது நேயத் தளவே.

திருமந் திரமே சிதம்பரந் தானுந்
திருமந் திரமே சிறந்த உபாங்கந்
திருமந் திரமே திருக்கூத்தின் செய்கை
திருமந் திரமே திருமேனி தானே.

திருமேனி தானே திருவரு ளாகுந்
திருமேனி தானே திருஞான மாகுந்
திருமேனி தானே சிவநேய மாகுந்
திருமேனி தானே தெளிந்தார்க்குச் சித்தியே.

அத்தாளத் தாள மதிலசை விற்கா
லொத்தாட வோவாதி யாவேத மூடுற
வைத்தாடி கூடல் தினமான மாகவே
சித்தான நந்திதென் னம்பலத் தாடுமே.

ஆகஞ் (ஆகுஞ்) சிவானந்த வைவொளி
லேக வொளியா மிதய கமலத்தே
தாகமுஞ் சோகமுஞ் சார்கலை யுன்னி
லாக மனங்கசிந் தானந்த மாகுமே.

மேலைத் திருவம் பலத்தா மிகுகலை
கோலிப் பரானந்த நாதாந்தக் கூத்ததிற்
சீலித்த சித்தர் சிவயோக சித்தராய்
மாவற்ற வர்சுத்த சைவத்து வாழ்வரே.

சித்தஞ் சிவமாஞ் சிவஞானி சேர்விடஞ்
சுத்தச் சிவாலயந் தொல்பாவ நாசமாம்
மத்த மழையக மானந்த மேலிடு
முத்தம் பெருகு முழுப்பொரு ளாகுமே.

சாயுச் சியஞ்சாக் கிராதீதஞ் சாருதல்
சாயுச் சியமுப சாந்தத்திற் றங்குதல்
சாயுச் சியஞ்சிவ மாதல் முடிவில்லாச்
சாயுச் சியமனந் தானந்தச் சத்தியே.

(1513 உடன் ஒப்பிடுக)

பாசம் பயிலுயிர் தானே பரமுதல்
பாசம் பயிலுயிர் தானே பசுவென்ப
பாசம் பயிலப் பசுபதி யாதலாற்
பாசம் பயிலாப் பசுபதி யாமே.

(2423 உடன் ஒப்பிடுக)

ஆணவ மூலத் தகார முதித்திடப்
பேணி யுகாரங் கலாதி பிறிவிக்கத்
தாணு மகாரஞ் சதாசிவ மாகவே
யாணவ பாச மடர்தல்செய் யாவே.

நெற்றி நடுவுள் நினைவெழு கண்டமு
முற்ற விதயமு மோதிய நாபிக்கீழ்ப்
பெற்ற துரியமும் பேசிய மூலத்தே
யுற்ற வதீத மொடுங்கு முடனே.

திருமந் திரமே சிவகதிக்கு வித்தாந்
திருமந் திரமே சிவமா மருமந்த
புந்திக்கு ளேநினைந்து போற்றுமடி யார்தமக்குச்
சந்திக்குந் தற்பரமே தான்.

ஒன்றுகண் டேனிவ் வுலகுக் கொருகனி
நன்றுகண் டாயது நமச்சிவா யக்கனி
மென்றுகண் டாலது மெத்தென் றிருக்குந்
தின்றுகண் டாலது தித்திக்குந் தானே.

அண்ணன் முதலா அறுபதி னாயிரம்
எண்ணிலி கோடி தொகுத்தஇவ் வாகமம்
அண்ணல் அறைந்த வறிவறி யாவிடின்
எண்ணிலி கோடியு நீர்மே லெழுத்தே.

ஆறு சமய முதலாஞ் சமயங்கள்
ஊற தெனவும் உணர்க உணர்பவர்
வேற தறவுணர் வார்மெய்க் குருநந்தி
யாறி யமைபவர்க் கண்ணிக்குந் தானே.

உடலாங் குகையில் உணர்வாகும் பீடத்
தடலார் சமாதி இதயத்த தாக
நடமா டியகுகை நாடிய யோகி
மிடையாகா வண்ணமே சாதிக்கு மெல்லவே.

நிற்ற லிருத்தல் கிடத்தல் நடையோடல்
பெற்றவக் காலுந் திருவருள் பேராமற்
சற்றியன் ஞானந்தந் தானந்தந் தங்கவே
உற்ற பிறப்பற் றுளிர்ஞான நிட்டையே.

நாயோட்டு மந்திரம் நான்மறை வேத
நாயோட்டு மந்திரம் நாத னிருப்பிடம்
நாயோட்டு மந்திரம் நாதாந்த சோதி
நாயோட்டு மந்திரம் நாமறி யோமே.

இணங்க வேண்டா இனியுல கோருடன்
நுணங்கு கல்வியும் நூல்களும் என்செயும்
வணங்க வேண்டா வடிவை யறிந்தபின்
பிணங்க வேண்டா பிதற்றை யொழியுமே.

எவ்விடத் துந்தம் பணியின்மை கண்டுளோர்
எவ்விடத் தும்பணி யீசன் பணியென்றே
அவ்விடத் தைங்கரு மத்தால் அறிதலால்
உவ்விடத் தோருக்கோர் உபாய மில்லையே.

ஒத்த சமயங்கள் ஓராறு வைத்திடும்
அத்த னொருவனும் என்ப தறிந்திலர்
அத்தன் ஒருவனும் என்ப தறிந்திடின்
முத்தி விளக்கு முதல்வனு மாமே.

தானே கடல்மலை யாதியு மாய்நிற்கும்
தானே திசையொடு தேவரு மாய்நிற்கும்
தானே உடலுயிர் தத்துவ மாய்நிற்கும்
தானே உலகில் தலைவனு மாமே.

முன்னைப் பிறவியிற் செய்த முதுதவம்
பின்னைப் பிறவியிற் பெற்றால் அறியலாந்
தன்னை யறிவ தறிவாம் மஃதன்றிப்
பின்னை யறிவது பேயறி வாமே.

முதலொன்று மானை முதுகுடன் வாலுந்
திதமுறு கொம்பு செவிதுதிக் கைகான்
மதியுடன் அந்தகர் வகைவகை பார்த்தே
யதுகூற லொக்கும் ஆறு சமயமே.

ஆகாச மாலை யமகார முகமுமா
யேகார மாந்திசை யெட்டுந் திருக்கைகண்
மோகாய முக்கண்கள் முன்றொளி தானுகி
மாதார மன்றினுள் மாதுட னாடுமே.

பத்தி விதையிற் பயிரொன்று நாணத்தைச்
சித்தி தருவை ராக்கத்தாற் செய்தறுத்
துய்த்த சமாதி சிவானந்த முண்டிடச்
சித்திதிகழ் முத்தியா னந்தஞ் சித்தியே.

உண்ண லுறங்க லுலாவ லுயிர்போத
நண்ணல் நரக சுவற்கத்து நாட்டிடப்
பண்ண வவன்பணி மாலிவன் பாலிடை
திண்ணிதிற் செய்கை சிவன்பணி யாமே.

ஓடும் இருக்குங் கிடக்கும் உடனெழுந்
தாடும் பறக்கும் மகண்டமும் பேசிடும்
பாடும் புறத்தெழும் பல்லுயி ரானந்தம்
கூடும் பொழுதிற் குறிப்பிவை தானே.

மாமலர் நாலையும் வட்டத்தின் மேலிடு
மாமலர் நாலிலும் வவ்வாதி சவ்விடு
மாமலர் நாலிலே வட்டத்தி னுள்ளே
ஓமென விநாயகன் உலாவிநின் றானே.

ஒருவீடு வாசற் கிருவீடு மேலே
கருவீடு வாசற் கிருவிரல் கீழே
உருவீடு சோதியு மங்கே யுதித்தன
திருவுடை யாரிது தேர்ந்தறி வாரே.

இட்டா னறிந்திலன் ஏத்தானுங் கண்டிலன்
தட்டா னறிந்தான் ஒருவர்க் குரைத்திலன்
மெட்டாய் வளர்ந்து அதன்மேல் விநாயகன்
அட்டாங்க யோகத் தமர்ந்திருந் தானே.

கண்டன வைந்துங் கலந்தவோ ரைந்தும்
உண்டன நான்கும் ஓங்கிய துணர்ந்தபின்
பண்டையி னுதி பரந்தது சாக்கிரம்
அண்டமுந் தானு யமர்ந்தது காணே.

ஆன மனமும் அறிகின்ற புத்தியும்
ஊனே யிழந்துநின் றுள்ளே உயிர்ப்பெய்தி
தான மிழந்து தயங்கிய வாறுபோல்
ஊனே யிழந்த சுழுத்திய தாமே.

தானத் தெழுந்து திரியுந் துரியதானம்
வானத் தெழுந்துபோய் வையம் பிறக்கிட்டுக்
கானத் தெழுந்து கருத்தின் தலையிலே
ஊனைத் தவிர்ந்து ஒளித்திருந் தானே.

திருமூல தேவனையே சிந்தைசெய் வார்க்குக்
கருமூல மில்லையே காண்.

உ

பாட்டு முதற்குறிப்பகராதி

[எண் பக்க எண்]

இரட்டித்த திருமந்திரச் செய்யுட்கள்

[எண் பாட்டு எண்]

தானே இருநில	10	1165
எழுந்து நீர்	72	553
சிவமுதல்	106	990
ஓலக்கஞ் சூழ்ந்த	108	540
ஒன்றிய ஈரெண்	185	863
ஒன்று மிரண்டு	236	2536
இராப்பகல்	331	1856
உண்ணீர் அமுதம்	336	882
நின்றது தானய்	403	458
தேடுந்திசை	406	414
தானே திசை	412	2967
மண்ணொன்று	440	2351
அகன்ருனகலிட	448	3011
போகின்ற வெட்டு	457	2926
ஏனோர் பெருமை	490, 2012	3024
சத்தி சிவன் விளை	492	1771
ஆவனவாவ	504	2175
குறிப்பினினுள்	587	1794
அறிவாயசத்	617	2471
அண்ணலிருப்பிடம்	766	2660
போற்றுகின்றேன்	884	2988
விந்துவு நாதமும்	961	1917